# எழுநா

ஏப்ரல்
2025

இதழ் 33



# எழுநா

இதழ் 32

**அட்டைப்படம்**
தொழிலின் நிமித்தம் புலம்பெயரும் பெண்களின் நிலையோடு தொடர்புபடுத்தக்கூடிய ஓவியம்.

*Artist: Komla Letsu Philip*
*Source: www.artsy.net*


## ஆசிரியர் குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**விஜயதர்சினி தினேஸ்**
முகாமைத்துவம்/ கற்கைவட்டம்/ நிகழ்வுகள்/ விநியோகம்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
சஞ்சிகை/நகல் திருத்தம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம்/ பரவலாக்கம்

**தனுஜன் சுந்தரலிங்கம்**
ஆவணப்படத் திரையொளி ஆக்கம்

**புவஸ்ரினா மெய்யழகன்**
ஆவணப்பட எழுத்துருவாக்கம்

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
நூல்/ மெய்ப்புப்பார்ப்பு

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புபார்ப்பு

**பவித்ரா இரமணீகரசர்மா**
குரல் வடிவம்

**மதுஹரி சத்தியலோகநாதன்**
குரல் வடிவம்

## வளவாளர்கள்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு

**தங்கராஜா பிரபாகரன்**
மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**சிவகுமார் சிவகஜன்**
கற்கை வட்டம்

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள்

## நிதிப்பங்களிப்பாளர்கள்

**கணேசலிங்கம் குகரூபன்**
சஞ்சிகை

**கருணானந்தன் சஞ்யே**
கற்கை வட்டம்

**கனக சுகுமார்**
நூல் தயாரிப்பு / உசாத்துணை சேவை

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு

**தமிழ் ஊடகத் திரட்டு**
ஆவணப்படம்

**வரதராஜன் ஞாபகார்த்த கல்வி அறக்கட்டளை**
கற்கை வட்டம்

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு**
கனடா

## துறை சார் ஆலோசகர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

## கூட்டுறவு புத்தக மன்ற உறுப்பினர்கள்

**இ. பத்மநாப ஐயர்**

**கணேசானந்தன் சசீவன்**

**தில்லைநாதன் கோபிநாத்**

**கதிர் சயந்தன்**



## தொடர்பிற்கு

**மின்னஞ்சல்:**
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

**முகவரி:**
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி


## FOLLOW

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/

# உள்ளே...


இளந்தாரி வழிபாடு - தி. செல்வமனோகரன் 03

இலங்கையில் 1970களுக்குப் பின்பாகத் தோற்றம் பெற்ற புதியவர்க்கம் — பகுதி 1,2 - ஆங்கில மூலம்: நவரட்ன பண்டார, தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 10

ஒல்லாந்தரின் முதற்கட்ட முயற்சி - சச்சிதானந்தன் சுகிர்தராஜா 18

யாழ்ப்பாணத்தின் நிலவியல், நில அமைப்பியல், ஆதிக் குடியிருப்புகள் - சிவ தியாகராஜா 27

தொழிலாளர் சட்ட புஸ்தகம் : தோட்டத் தொழிலாளருக்கான கைநூல் - எம். எம். ஜெயசீலன் 39

உச்சநிலைப் பேரரசுகளை உலுப்பிய உலகப் போர் - கார்த்திகேசு இந்திரபாலா 46

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண நடைமுறைகள் — பகுதி 2 - எம். ஐ. எம். சாக்கீர் 52

1883 ஈஸ்டர் ஞாயிறு, கொட்டாஞ்சேனைக் கலவரம்: நவீன இலங்கையின் முதலாவது மதக் கலவரத்தின் பின்னணி - பி. ஏ. காதர் 59

கூத்துகளின் கருத்தியலும் சமூக அமைப்பும் - சின்னையா மௌனகுரு 71

இலங்கையில் ஜனாதிபதிமுறையை ஆதரித்து முன்வைக்கப்படும் போலியானதும், நகைப்புக்கிடமானதுமான வாதங்கள் — பகுதி 1,2 - ஆங்கில மூலம்: அசங்க வெலிக்கல, தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 76

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் — சங்கானை - இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 91

முடிவுரை : இனி சில விதிகள் செய்வோம் - நடேசன் இரவீந்திரன் 96

கடலின் அக்கரை போனோரே: கேளாத குரல்களின் வலி - மீநிலங்கோ தெய்வேந்திரன் 102

சிவில் சமூகமும் சிவில் சமூக அமைப்புகளும் - ஆங்கில மூலம்: பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, தமிழில்: கந்தையா சண்முகலிங்கம் 111

அறிமுகம்: சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் - நடேசன் இரவீந்திரன் 117

சங்கரி சந்திரனின் 'சூரியக்கடவுளின் பாடல்' (Song of the Sun God) - இளங்கோ 125

2000 ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்கள் வாழ்ந்த ஆண்டியாகல மலைக் கல்வெட்டு - என். கே. எஸ். திருச்செல்வம் 130

நாக குலத்தவர் பற்றிக் கூறும் ஹிபவுவ கல்வெட்டு - என். கே. எஸ். திருச்செல்வம் 134

மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்: ஆலையடிவேம்பின் சமூக, பொருளாதார, கலாசார அடித்தளம் - வை. ஜெயமுருகன் 137

மலையகத்தில் முத்துமாரியம்மன் எனும் பெண்தெய்வ வழிபாடு : நாவலப்பிட்டி பிரதேசத்தை முன்வைத்து - அருணாசலம் லெட்சுமணன் 145

வணிக வாழ்க்கையின் வெற்றியில் பெண்களின் பங்களிப்பு - கணபதிப்பிள்ளை ரூபன் 156

வன வளப் பாதுகாப்பும் பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் வாழ்வாதாரத்திற்கான நில உரிமைகளும்: கிழக்கிலங்கையின் வாகரைப் பிரதேசத்தை முன்வைத்து - வை. ஜெயமுருகன் 160

வடக்கு — கிழக்கு மாகாணங்களின் வலுச்சக்தி மூலங்களுக்கான வாய்ப்புகளும் வளங்களும் - அமரசிங்கம் கேதீஸ்வரன் 168

வணிக முகாமைத்துவம், தகவல்தொழில்நுட்பம் ஆகிய பட்டப்படிப்புகளை வடக்கில் அறிமுகம் செய்யும் வடக்குப் பல்கலைக்கழகம் - ஆங்கில மூலம்: ஜெகன் அருளையா, தமிழில்: த. சிவதாசன் 173

# இளந்தாரி வழிபாடு

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் ‘மேனிலையாக்கம்’ எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே ‘ஈழத்து நாட்டார் தெய்வங்கள்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.


## தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். ‘சொற்களால் அமையுலகு’ என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.




## அறிமுகம்

எந்த உயிரியின் பரிணாமத்திலும் வளர்ச்சியிலும் இளமைப் பருவம் முக்கியமானதாகும். மனிதரில் இளைஞர்களை வாலிபர், இளைஞர் - இளந்தாரி என்று சுட்டுதல் வழக்கம். போர், காதல், உழைப்பு என எல்லாத்தளங்களிலும் இளமை தவிர்க்க முடியாத பிரதானமான அம்சமாகத் திகழ்கிறது. வாழ்வில் துடுக்குத்தனமும் அளவற்ற செயற்பாடுகளும் உடைய அப்பருவம் ஒவ்வொரு மனிதராலும் மறக்க முடியாத ஒன்றாகும். போரிலும் வீரத்திலும் ஆற்றலிலும் இளந்தாரிப் பருவம் தவிர்க்க முடியாத பருவமாகின்றது. மண், பொன், காதல் என்பவற்றுக்காகத் தன்னை அழித்துக் கொள்கின்ற - தியாகித்துக் கொள்கின்ற பருவமும் இதுதான். அதீத கோபம் இதன் தவிர்க்க முடியாத குணமாகின்றது. ஆதலால் விபரீத முடிவுகளையும் இது எடுத்துவிடுகிறது. நாட்டுப்புறவியல் ஆய்வில் ஈழத்துப்புலத்தின் தனித்துவமான தெய்வங்களுள் ஒன்றாக இளந்தாரி காணப்படுகின்றார்.

### இளந்தாரி எனும் தெய்வம்

இளந்தாரி எனும் சொல்லை வாலிபனைக் குறிக்கும் சொல்லாகவே அகராதிகள் சுட்டுகின்றன. ஆனால் பஞ்சவன்னத் தூது 'குலதேவன், ஊரை என்றும் காக்கும் தெய்வம், செஞ்சடா முடித்தேவன், மாதர் போற்றும் அண்ணல், கரந்தை சூடி அருள்புரிதூயன், கறையர் கண்டன், அருள் பெற்ற தெய்வம், கந்தமாமலரப் பொற்பதன், நற்றவர் போற்றும் மெய்த்தெய்வம், எத்திசையும் புகழ் - கருணை சேரும் கைலாயன்' எனப் பலவாறு சுட்டுகிறது.

### இளந்தாரி வழிபாடு இடம்பெறும் இடங்கள்

பொதுவில் இணுவிலில் மட்டுமே இளந்தாரி வழிபாடு காணப்படுவதாக நூல்களிலும் சமூக வலைத்தளங்களிலும் எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இளந்தாரி வழிபாட்டுக்கான பெருங்கோயில் இணுவைப் பேரூரிலேயே இருப்பதாக தமிழ்வேள் க.இ.க. கந்தசாமி குறிப்பிடுவது உண்மைதான். ஆயினும் இளந்தாரி வழிபாடு வன்னியில் - பூநகரியில் இருந்து மன்னார் செல்லும் வழியில் உள்ளமைந்திருக்கும் ஊர்களான கிராஞ்சி, வேரவில், கல்லாவில் போன்றவற்றிலும் காணப்படுகின்றது. சாமுவல் லிவிங்ஸ்ரன் (*Samuel Livingston*) தனது '*The Sinhalese of Ceylon and The Aryan Theory*' எனும் நூலில் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள 'கலாவெவ' குளம் உள்ளிட்ட குளங்களுக்குக் காவல் தெய்வமாக '*Kadavara, Ilandari deviyo*' என்பன காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இங்கு குறிப்பிடப்படும் இளந்தாரி தெய்யோ என்பது குளத்தோடு தொடர்புபட்டதாகவும், அவ்வழிபாடு அனுராதபுரத்தில் நிகழ்ந்ததாகவும் காணப்படுகின்றது (P.34). தவிர, இங்கு இடம்பெறும் காடவர - காட்டுவைரவராகச் சுட்டப்படுகின்றார். வரணியில் உள்ள குருநாத சுவாமி கோயிலில் 'இளந்தாரி' வைரவர் எனும் தெய்வம் பரிவாரமாக இருப்பதை அந்த ஆலயத்தின் பூசாரியும் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளருமான சி.கா. கமலநாதன் எமக்கு உறுதிப்படுத்தினார். அது காவல் தெய்வமாகவே கருதப்படுகிறது.

அதுபோல புங்குடுதீவில் இளந்தாரி நாச்சியார் கோயில் என்கின்ற மடத்துவெளி பாலசுப்பிரமணியர் கோயில் இன்றும் சிறப்புடன் திகழ்கிறது. நானூறு வருடப்பழமை கொண்ட இக்கோயில் இளந்தாரி நாச்சியார் கோயில் என அழைக்கப்பட்டமைக்கான தெளிவான காரணமெதனையும் அறிய முடியவில்லை.

மட்டக்களப்புத் தேசத்தில் வழக்கத்தில் உள்ள வதனமார் வழிபாட்டோடு இணைந்த இலக்கியங்களில் ஒன்றாகவும், வழிபாட்டில் பாடப்படுவதாகவும் உள்ள 'வதனமார் குழுமாடு கட்டு அகவலில்' பத்துப்பாலர் பிறந்த பாடலின் பின் "பிறந்து வளர்ந்தாரோ பெரிய இளந்தாரி பத்து வயதும் பதினாறுஞ் சென்ற பின்பு" என வரும் வரிகள் மங்கலனாரை பெரிய இளந்தாரியாகச் சுட்டி வழிபடுதலைக் குறிக்கின்றது. குழு மாடுகளைப் பிடித்து பட்டியில் உள்ள ஏனைய மாடுகளோடு இணைத்து விடுதல் வழக்கம். இது ஒரு வீர விளையாட்டாகவும் கருதப்படுகின்றது. குழுமாட்டினைப் பிடிக்கச் செல்லும் வதனமாரை 'இளந்தாரிமார் கூட்டம்' எனச் சொல்வதாக ஈழத்துப் பூராடனார் (2000) குறிப்பிடுதல் கவனத்திற்குரிய ஒன்றாகும்.

ஆக இளந்தாரி எனும் வழக்காறு இளைஞர்களைக் குறிக்கின்றது எனப் பொதுவில் குறிப்பிடப்படினும் இது இளந்தாரியான தெய்வத்தைக் குறிக்க நாட்டாரியலில் பயன்படுத்தப்படுகின்றமையையும், இளந்தாரி தெய்வம் ஈழத்துக்கே உரிய தெய்வமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இணுவில் இளந்தாரி கோவில் பற்றிய ஆய்வை நண்பர்களான கோ. விஜிகரன், கு. டனிஸ்ரன் ஆகியோருடனும், கிராஞ்சி, வேரவில் பிராந்திய

இளந்தாரி கோவில்கள் பற்றிய கள ஆய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் சி. செரஞ்சன், ஆய்வு ஆர்வலர் கோ. விஜிகரன் ஆகியோரின் துணையோடும் மேற்கொண்டோம்.

**இளந்தாரி பற்றிய கதைகள்**

1. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இணுவைப் பேரூரின் அரசனாக விளங்கியவர் காலிங்கராயன் என்பவர். காலிங்கராயனின் பின் ஆட்சிக்கு வந்த அவனுடைய மகனே கைலாயநாதன் என்கின்ற இளந்தாரி ஆவான். உடலுறுதி உள்ள துடிப்பான இளைஞர்களை இளந்தாரி என்று அழைப்பர். இவனது வீரம், கொடை, விருந்தோம்பல், ஆட்சித் திறன், இறைவழிபாடு ஆகிய சிறந்த பண்புகளையும் வரலாற்றுச் சிறப்புகளையும் கைலாயநாதன் பஞ்சவன்னத் தூது நூலாலும் செவிவழிச் செய்திகளாலும் அறிய முடிகிறது. இளந்தாரி, தனது உலகு நீத்தலை மக்களுக்கு முன்பே குறிப்பாக உணர்த்தியிருந்தார் எனவும், ஒருநாள் ஒரு புளியமரத்தின் வழியே உருக்கரந்து விண்ணுலகு சென்றார் எனவும் கூறப்படுகிறது. அதனை அறிந்த மக்கள் அங்கு அவரைத் துதித்தனர் என்றும், இளந்தாரி அம்மக்கள் முன் தோன்றி அருளினார் என்றும் இணுவில் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய ‘கைலாயநாதன் பஞ்சவன்னத் தூது’ நூலில் கூறப்படுகிறது.

2. சாதாரண சனங்களை நேர்கண்டபோதும், இணுவில் இளந்தாரி கோயில் பூசாரியாக இருந்த ஆறுமுகராசாவின் மனைவி சின்னாச்சி (வயது 94) என்பவரை நேர்காணல் செய்த போதும் கூறப்பட்ட கதை வேறாக இருந்தது. இணுவில் கிழக்கில் கிணறு வெட்டுவதற்காக ஒரு குடும்பம் ஏழாலையிலிருந்து துலா கொண்டுவந்து வேலை செய்தார்கள். தாய் - தந்தையர், இரு இளந்தாரி மகன்கள் என அந்தக் குடும்பம் காணப்பட்டது. ஒருநாள் வீட்டில் நின்ற கன்று தாய்ப் பசுவில் பாலைக் குடித்துவிட்டது. தாயார் குளிப்பதற்கு இவர்கள் கிணற்றிலிருந்து நீரும் அள்ளிக் கொடுக்கவில்லை. இதனால் இரு இளந்தாரி மகன்மாரையும் தந்தையார் கடிந்து கொண்டார். இதனால் இவ்விரு இளந்தாரிகளும் கோபித்துக்கொண்டு புளியமரத்தில் ஏறிக் காணாமல்போன அற்புதம் நிகழ்ந்தது. இவர்களுக்கு உதவியாளராக இருந்தவர் “நான் என்ன செய்ய” என அவர்களிடம் கேட்க “நீ பனையில் ஏறு” என்று அந்த இருவரும் கூற, அவரும் சற்றுத் தூரத்தில் இருந்த பனை மரத்தில் ஏறிக் காணாமல் போனார். மக்கள் யாவரும் திகைத்து வணங்கி நிற்க “எமக்கு காய்மடை,



**இணுவில் இளந்தாரி கோயில்**

பூமடை வைத்து வழிபடுங்கள் நல்லன நிகழும்” என புளிய மரத்தடியில் அசரீரி கேட்டது. அன்றிலிருந்து இவ்வழிபாடு நிகழ்ந்து வருகின்றது.

இங்கு இளந்தாரிகள் இருவரும் வேளாளர் சமூகத்தவராகவும் பனையில் ஏறியவர் பள்ளர் சமூகத்தவராகவும் இருந்தனர். தாமேறிய மரத்தில் அவரை ஏற்றாதது அக்காலச்சமூகத்தில் இருந்த அடுக்கமைவின் இறுக்கத்தை தெற்றெனப் புலப்படுத்துகிறது. இளந்தாரிகளை வேளாளரும், பனையில் ஏறியவரை அவரது சமூகத்தவரும் ஆதரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று பனைமரம் இல்லை. அதில் வளர்ந்த ஆலமரமே உண்டு. அவர் அண்ணமாராக பொல்லு வைத்து வழிபடப்படுகின்றார். இளந்தாரி கோயிலில் புளியமரம் பரந்து நிற்கிறது. அதன் அடியில் பாதம் வழிபடப்பட்டதாகக் கூறப்படினும் இன்று அது இல்லை. நடுகல் வழிபாடு தொடர்ந்து காணப்படுகின்றது. வேல், சூலம் என்பனவும் உள்ளன (நேர்காணல் - பரமானந்தராசா வாகீசன்).

கிராஞ்சி, வேரவில், அனுராதபுரம் கிழக்குப்

பிராந்தியங்களில் இவ்வாறான கதைகள் எதனையும் அறிய முடியவில்லை.

## இணுவில் இளந்தாரி கோயில்

இணுவில் பகுதியை ஆட்சி செய்த அரச வம்சத்தவராகவும், அருளாளராகவும் தனது உயிர் நீத்தலை முன்பே அறிந்திருந்த தீர்க்கதரிசியாகவும் கருதப்படுகின்ற கைலாயநாதன் வாழ்ந்த அரண்மனையாகவும், வேளாள இளந்தாரிகளின் வீடாகவும் கருதப்படும் வளவில் சிறுகோயில் அமைத்து வழிபடப்பட்டு வந்துள்ளது. அவர்கள் தம் உருவை மறைத்த (உருக்கரந்த) தினம் பெருவிழாவாகக் கொண்டாட்டப்பட்டு வந்துள்ளது. (கந்தசுவாமி,க.இ.க.(பதி), (1998), பஞ்ச பஞ்சவன்னத் தூது, பக், 62 - 74)

காலப்போக்கில் இளந்தாரிகள் மறைந்த புளிய மரத்தடியில் இவ்வழிபாடு நிகழ்த்தப்பட, இவர்களது உதவியாளரது வழிபாடு பனை மரத்தடியில் நிகழ்த்தப்பட்டது. இப்புளியமரத்தடி வழிபாடு வைத்திலிங்கம் அவர்களால் கொட்டிலமைத்து தொடக்கிவைக்கப்பட்டது. அவரது மகன் நாகலிங்கம், பின்னர் ஆறுமுகராசா, பரமானந்தபிள்ளை இன்று கானமூர்த்தி மற்றும் சகோதரர்கள் என ஆண்வழிப் பூசாரிகளை கொண்ட வழிபாட்டு முறையாக நிகழ்ந்து வருகிறது. சிறுகொட்டிலாக ஆரம்பித்து 1968 இன் பின்னர், 2024இல் பிராமணர்களால் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டதாயினும், இப்பூசாரிகளே நாளாந்தப் பூசை தொட்டு வருடாந்த மடை வரை யாவற்றையும் செய்து வருகின்றனர்.

இந்த ஆலயத்தின் சிறப்பு, நடுகல் வழிபாடு காணப்படுதலாகும். கருவறையில் புளியமரத்தின் ஒரு பகுதி, நடுகல், வேல், சூலம் போன்றன காணப்படுகின்றன. அருகில் பனைமரத்தடியில் உள்ள அண்ணமார் கோயில் கிருஷ்ணன் கோயிலாக்கப்பட்டுள்ளது. இக்கோயிலிலும் கிருஷ்ணன் சிலை வைக்கப்பட்டிருந்தாலும், இது ஆகமமயப்படவில்லை; கிருஷ்ணர் மூலமூர்த்தியாக்கப்படவுமில்லை.

## கிராஞ்சி குறிப்பன் இளந்தாரி கோயில்

கிராஞ்சி, பிருந்தாவனம் பகுதியில் இரண்டு இளந்தாரி கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கிராஞ்சி பிருந்தாவன சந்தியில் புளிய மரத்தடியின் கீழ் அமைந்துள்ளது. குறிப்பன் இளந்தாரி கோயில் நீண்ட காலமாக அமைந்திருக்கும் கோயிலாயினும் வீரன், கந்தையா, செல்வரத்தினம் , இளையராசா எனும் நான்கு தலைமுறைப் பூசாரிகளையே அறியமுடிகிறது. இதில் கந்தையா என்பாரின் மனைவி பூரணம், யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் (தகவல் ஜீவமலர் விக்னேஸ்வரன், செல்வரத்தினம் பூசாரியின் மகள்). இன்றும் ஓலைக் கொட்டிலாலான சிறு கோயிலாகவே அமைந்துள்ளது. முன்புறம் நான்கு தூண்கள் கூரையின்றிக் காணப்படுகின்றன. விழாக்காலத்தில் பந்தலிடப்படும். மூலத்தில் சூலம் மூன்று வெவ்வேறு அளவுகளில் நாட்டப்பட்டிருந்தது. மையத்தில் இருந்த சூலம் உயரமாகவும், திருசூல இடைவெளியில் கண்ணாடி வைக்கப்பட்டும் இருந்தது. சூலத்தின் இடைப்பகுதியில் இரு கொம்புகள் அல்லது கொழுக்கிகள், ஒன்று மேல் நோக்கியும் மற்றையது கீழ்நோக்கியும், இருபுறமாகவும் காணப்படுகின்றன. இந்த ஆலயத்துக்கு எதிர்ப்பக்கத்தில் புதிய இளந்தாரி ஆலயம் அமைக்கப்பட்டிருப்பினும், ஒரு வருடமே பூசை நடாத்தப்பட்டது. இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இளந்தாரி கோயிலுக்கு மடைப்பண்டம் வைக்கப்படுகின்ற கிராஞ்சி பட்டிமோட்டை நாகபூசணியம்மன் ஆலயம், இவ்வாலயத்திலிருந்து 100M அளவு தூரத்தில் உள்ளது. அவ்வாலய முன்றலில் உள்ள ஆலமரத்தின் கீழ் குறிப்பன் கோயில் உள்ளது. அங்குள்ள குறிப்பன் தெய்வத்துக்கான சூலம் இளந்தாரி சூலத்துடன் ஒத்திருப்பதும், இவை பட்டிமாட்டுடன் இணைந்த வழிபாடாக சிறுகுடி வேளாள சமூகமான பள்ளர் சமூகத்துடன் இணைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிராஞ்சி இளந்தாரி ஆலயத்தை ஒத்த மரபுகளே வேரவில், கல்லாவில் ஆலயங்களிலும் காணப்படுகின்றன.

## வழிபாட்டு மரபுகள்

இணுவில் ஆலயத்தில் நாளாந்தம் விளக்கு வைத்து சிறு படையல் இட்டு வழிபடும் முறை காணப்படுகிறது. கிராஞ்சி கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் விளக்கு வைக்கப்படுகிறது. இதைவிட தைப்பொங்கல், சித்திர வருடப்பிறப்பு மற்றும் வருடாந்த மடை உள்ளிட்ட விசேட தினங்களில் விசேட பூஜை உண்டு. இணுவில் இளந்தாரி ஆலயத்தில் மரத்தில் ஏறி உரு மறைப்புச் செய்த நாளினை மையமாகக்கொண்டு வருடாந்த மடை



**கிராஞ்சி இளந்தாரி கோயில்**

நடைபெறுகிறது. வருடாந்தப் பொங்கலுக்குரிய நாளை மூ. சிவலிங்கம் சித்திரை வருடப் பிறப்புக்கு முன்பு வரும் செவ்வாய்க்கிழமை எனவும், கந்தசாமி வருடப் பிறப்புக்கு பின்பு வரும் செவ்வாய்க்கிழமை எனவும் தத்தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இதில் வருடப்பிறப்புக்கு முதல் வருகின்ற செவ்வாய்க்கிழமையில் முதலாம் மடை என்கின்ற முதலியார் மடை நடைபெறும். இதுவே பெருவழிபாடாக, பெருவிழாவாகக் கொண்டாடப்படும். வருடப் பிறப்புக்கு பின்பு வரும் செவ்வாய்க்கிழமை எட்டாம் மடையாக அமையும். இது பெரிய அளவில் நிகழ்த்தப்படாமல் சிறப்பு வழிபாடாக நடைபெறும் என ஆலயத்தின் பரிபாலகர்கள் விளக்கம்  தருகின்றனர்.

முதல் மடை நிகழும் நாளை ஒரு மாதத்திற்கு முன்பே பூசாரி ஊரவர்க்கு அறிவிப்பார். அடியவர்கள் கூடி வீடுகள் தோறும் சென்று காணிக்கை பெற்று வருவர். பணம், அரிசி, மரக்கறிகள், தேங்காய், பழம், இளநீர் உள்ளிட்டவை காணிக்கையாகக் கிடைக்கப்பெறும். ஆலயமுன்றலில் மண்பானையில் வளந்து வைக்கப்பட்டு பொங்கல் இடம்பெறும். இதன்போது வாத்தியங்கள் இசைக்கப்பட்டு பூசை நடைபெறும். பூசாரி உருவேறி தெய்வமாடுவார். ஒரு கையில் பிரம்பும் மறுகையில் தீபமும் ஏந்தி வருவார்; கையில் கற்பூரமேற்றி அதனை அடுப்பில் இட்டு பொங்கலை ஆரம்பித்து வைப்பார். அதன்பின் வளந்துப் பானைக்கு அருகே சோறு, கறிகளுக்கான அடுப்புகளும் மூட்டப்பட்டு படையலுணவு ஆக்கப்படும். பலகாரங்களும் படைக்கப்படும். மக்களும் நேர்த்திக்கடனுக்கான பொங்கலைப் பொங்குவர். வளந்து கட்டலின் பின் சின்னத்தம்பிப்புலவரின் பஞ்சவன்னத் தூது ஏடு படிக்கப்படும். இன்று பஞ்சவன்னத் தூது ஏடு நூலுருப் பெற்று இரண்டாம் பதிப்பும் வெளிவந்துள்ளது.

இதன்பின் இளந்தாரி வழிபட்ட சிவகாமியம்மன், காளியாச்சி, வைரவர் தெய்வங்களுக்கு படையல்கள் எடுத்துச் செல்லப்படும். அந்தப் பயணத்தில் சங்கு, பறை, முழவு, சேமக்கலம் முதலிய வாத்தியங்கள் இசைக்கப்படும். இளந்தாரி திருவீதியுலாப் பாடல், திருமுறைகள் என்பன பாடப்படும். அந்த ஆலயங்களில் படையல் முடிந்தபின் இளந்தாரியின் ஏவலின்வழி பனைமரத்தில் ஏறிக் காணாமல்போன உதவியாளரின் ஆலயத்திற்குச் (அண்ணமார்) சென்று படையல் படைத்து வழிபாடு இயற்றப்படும். அதன்பின்பே இளந்தாரி கோயிலுக்கு வந்து படையல் வைக்கப்படும். சோறு கறியோடு பழம், வெற்றிலை, பாக்கு, பலகார வகைகள் படைக்கப்பட்டு பூசை இடம்பெறும். பூசாரி தெய்வமேறி, கலையாடி, குறி சொல்லி, விபூதி இடுவர். இறுதியில் கும்ப நீரினை இளந்தாரியின் காலடி இருந்ததாக நம்பப்படும் புளிய மரத்தடியில் ஊற்றி வழிபடுவர். இது காலடி நீர் வார்த்தலாக - காலடி வழிபாடாகச் சொல்லப்படுகின்றது.

இவற்றைவிட தீமிதித்தல் முக்கிய வழிபாட்டு முறையாக இன்றுவரை காணப்படுகிறது. கடும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தெய்வத்தை வழிபட்டு நோய் நீக்கம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேபோல கிராஞ்சி கோயிலிலும் தனித்துவமான வழிபாட்டு மரபு காணப்படுகிறது. காட்டுப் பிள்ளையார், அம்மன், குறிப்பன், இளந்தாரி எனும் தெய்வங்களுக்கான வளந்துகள் குறிப்பன் கோயிலில் வைத்தெடுக்கப்பட்டு முதலில்

பிள்ளையாருக்கும் பின்பு அம்மனுக்கும் பொங்கலிடப்படும். பின்பு குறிப்பன் முன்றலில் குறிப்பனுக்கும் இளந்தாரிக்கும் பொங்கலிடப்படும். பொங்கலுக்கு முதல் நாள் வெற்றிலை மடை வைக்கப்படும். இளந்தாரிக்கான படையல், குறிப்பன் முன்றலில் இருந்தே எடுத்துச் செல்லப்படும். அதில் பொங்கல் இடம்பெறுவதில்லை. இணுவில் இளந்தாரி கூறியது போல காய்மடை, பூமடையே வைக்கப்படுகிறது. பழங்கள் சிறப்பாகப் படைக்கப்படுகின்றன. இங்கும் பறை, சங்கு, சேமக்கலம் முதலான இசைக்கருவிகளின் இசையோடு பூசை நடாத்தப்படுகிறது. அதன்போது பூசாரி தெய்வமேறிக் கலையாடுவார். குறிசொல்லி விபூதியிடுவார். இந்தக் கோயிலின் பூசாரியாக இருந்த செல்வரத்தினம் உருவேறி, கும்பம் ஏந்திச் சென்றபோது (2006) பகைவர் மந்திரத்தால் கட்டியதால் கும்பத்தை இறக்க முடியாத சூழல் ஏற்பட்டதாகவும், பின்பு அவரது தம்பியே கும்பம் இறக்கியதாகவும் கூறப்படுகிறது.

இணுவில் இளந்தாரி கோயில் போலவே இங்கும் வருடப்பிறப்பை ஒட்டி மடை வைக்கப்படுகிறது. மடையில் 'நிறைமணி'யாக மோதகம், பழம், பஞ்சாமிர்தம் என்பன வைக்கப்படும். சித்திரை வருடப்பிறப்புக் கழிய வரும் திங்களில், விளக்கு வைப்பர். செவ்வாய் தினத்தில் பொங்கல் வைப்பர். மூன்றாம் நாளே எட்டாம் மடை வைக்கப்படுகிறது. இணுவிலில் எட்டாம் நாளே எட்டாம் மடை வைக்கப்படுகிறது. இளந்தாரி கோயிலில் நீத்துக்காய், இளநீர் என்பன வெட்டிக் கழிப்புச்செய்யும் முறையுண்டு. ஏனைய நாட்களில் நீத்துக்காய் வெட்டும் மரபு இல்லை. தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் நீத்துக்காய் வெட்டப்படாது குத்தி உடைக்கப்படும். இம்மரபு இணுவிலில் இல்லை. கிராஞ்சியில் கழிப்புக் கழித்தல் பிரதான சடங்காக, சாதாரண நாட்களிலும் நடைபெற்று வருகிறது. ஆரம்பத்தில் பலியிடல் காணப்பட்டாலும், இப்போது பலியிடப்படுவது இல்லை.

வழிவெட்டல் சடங்கு நிகழ்த்தும் காலத்தில் தூளி குடித்தல், தூளி பிடித்தல் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பிரம்பு, பொல்லு, பாவாடை, கெண்டையம் அணிந்து வரும் பூசாரி தெய்வமேறிய நிலையில் ஒன்பதுமுறை மடையை வலம்வந்து இறுதியில் மடைகளை அள்ளி ஒன்றாக முகர்ந்து பார்த்து, பின் அள்ளி எறிந்தபடி ஓடுதல் தூளி குடித்தல் எனப்படுகிறது. அதேபோல எல்லாப் பரிகலங்களையும் அழைத்து, பச்சரிசி எறிந்த பின், நீரைத் தெளித்துத் தெளித்து, எல்லாத் தெய்வங்களும் ஒன்றாக நின்றாடுதல் தூளி பிடித்தல் எனப்படுகிறது. வழிவெட்டல் சடங்குகளில் இன்றும் பெண்கள், சிறுவர்கள் என்போருக்கு அனுமதி இல்லை.

எல்லா இளந்தாரி ஆலயங்களிலும் இரண்டாம் மடையாக ஆனித்திங்களில் விழா நடைபெற்று வருகின்றது. பட்டிமோட்டை அம்மனிற்கு, இளந்தாரி உருவேறிய பூசாரியே கொடித்தடி தேடி வெட்டி எடுத்து வருவார். பின்பு இளந்தாரி கோயிலில் வைத்து வேப்பமிலை, அம்மன்கொடி, மாலை என்பன கட்டி பறை மேளத்தோடு எடுத்துச் செல்லப்படும் வழக்கம் கிராஞ்சியில் இன்றும் காணப்படுகிறது.

## சிங்கள இளந்தாரி

கிராஞ்சியில் உள்ள கரும்புக்காரன் கோயிலில் பொங்கல் விழாக்காலத்தில் உருவேறி நின்றாடும் தெய்வங்களில் ஒன்றாக சிங்கள இளந்தாரித் தெய்வம் காணப்படுகின்றார். இவர் ஏனைய தெய்வங்களோடு தெய்வமாடுவதோடு பூசையில் பயன்படுத்தப்படும் மாட்டை இனங்காட்டும் தெய்வமாகவும் விளங்குகிறார். இந்த சிங்கள இளந்தாரி வெள்ளை, சிவப்பு இணைந்த ஆடைகளோடே தெய்வமாடுவார். இவர் தெய்வமாடும் போது பேசுகின்ற பாஷை யாருக்குமே புரிவதில்லை என்பதனால் அவர் சிங்கள இளந்தாரி எனப்படுகின்றார் (தகவல் பா. செல்வம், கிராஞ்சி, வயது 66). சிங்கள மக்கள், பிறருக்கு விளங்காமல் கதைப்பதை தமிழைப் போல் இருக்கிறது எனக் கூறுவதாக பேராசிரியர் கணநாத் ஒபயசேகர குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்தில் 'தானறியாச் (தானடாச்) சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்' என்ற பழமொழி நின்று நிலவுகிறது.

## சில அவதானிப்புகள்

- இளந்தாரி பற்றிய இருகதை மரபுகள் காணப்படுகின்றன. அரச பரம்பரையோடு இணைந்த கதையை இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத் தூதிலேயே காணமுடிகிறது. சாதாரண சனங்களின் கதை நிலவுடமைச் சமூக மனிதர்களின் கதையாக, இரு இளைஞர்களினதும் அவர்களது உதவியாளரதும் கதையாகவே நின்று நிலவுகிறது.
- இளந்தாரி, இணுவிலில் வேளாளரின் தெய்வமாகக் காணப்படினும் ஏனைய இடங்களில் சிறுகுடி வேளாளரின்

தெய்வமாகவே விளங்குகிறது.

- இளந்தாரி ஆலயங்கள் யாவற்றிலும் பூசாரிகளே இன்றும் பூசை செய்கின்றனர். இணுவில் அண்ணமார் கோயில் மேனிலையாக்கமுற்ற போதும் இளந்தாரி வழிபாடு நாட்டாரியல் மரபோடு தான் விளங்குகிறது.
- இளந்தாரி என்ற சொல் பல தெய்வங்களோடு இணைந்த சொல்லாகக் காணப்படினும் தனித்தெய்வமாக வணங்கப்படுவதற்கு இக்கோயில்கள் சான்றாகின்றன.
- கறிசோறு மடை, பழமடை, வெற்றிலை மடை என்பனவே முதன்மை பெறுகின்றன. பொங்கல் இடம்பெறுவதில்லை.
- பூசாரி, கலையாடி குறிசொல்லும் மரபு இக்கோயில்களில் காணப்பட்டபோதும் இன்று இணுவிலில் அது இல்லாமல் போய்விட்டது.
- இணுவில் இளந்தாரி மடை இன்று சிவகாமி அம்மன், காளி, வைரவர், அண்ணமாருக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. இதன் பின்னணியில் சூழல், நேரம், சமூக மாற்றம் எனப் பல காரணிகள் காணப்படுகின்றன.
- கிராஞ்சி, கல்லாவில், வேரவில் இளந்தாரி கோயில்கள் மந்திரம், சடங்கு என்பனவற்றோடும் கழிப்புக்கழித்தல் மற்றும் தீய கட்டுக்களுடனும் பின்னிப்பிணைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாம் சென்றபோது, கிராஞ்சி இளந்தாரி கோயிலில் கழிப்புக்கழிக்க பயன்பட்ட தேசிக்காய், இளநீர் உள்ளிட்ட பொருட்கள் ஆலய முன்றலில் எங்கும் பரவிக் கிடந்தன.
- சிங்கள இளந்தாரி எனும் சொல்லாடல் இனத்துவ, மொழி சார் பண்பாடு பற்றிய மனப்பாங்கின் சொல்லாடலாக விளங்குகிறது.



**கிராஞ்சி இளந்தாரி கோயிலில் இருந்து கொடித்தடி எடுத்துச் செல்லப்படும் பட்டியன்மோட்டை நாகபூஷணி அம்மன் கோயில்**

## முடிவுரை

ஈழத்துப் புலத்துக்கேயான தனித்துவமான நாட்டார் தெய்வமாக இளந்தாரி விளங்குகின்றது. இளந்தாரி பற்றிய கதைகள் சமூக அடுக்கமைவினதும் மனப்பாங்கினதும் வெளிப்பாடாக அமைந்துள்ளன. இத்தெய்வத்தை கயிலைநாதன் எனும் ஓர் இளந்தாரியாக பஞ்சவன்னத் தூது கூற, மக்கள் வாய்மொழிக் கதைகளோ அண்ணன், தம்பி ஆகிய இருவரே இளந்தாரிமார் என உரைப்பதும் (கோயிலின் பின்புறத்தில் மரத்தின் கீழ் இருவருடைய சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன). பனையில் ஏறியவரை மெய்ப்பாதுகாவலர் எனத் தூதிலக்கியம் கூற, மக்களின் வாய்மொழிக் கதைகளோ சிறுகுடி வேளாளர் என உரைப்பதும் மேற்சொன்ன கூற்றைத் தெளிவுபடுத்துகிறது. சமூக மேனிலையாக்கம் மற்றும் சாதிய நீக்கத்தின் வழி அண்ணமார் வேணுகோபாலனாக மாற்றப்பட்டார். இளந்தாரி இன்றும் நாட்டார் தெய்வமாகவே நின்றுநிலவுகிறார். பூசாரி உருவேறி ஆடும்போது பிரம்பேந்தி வருவது விவசாய - கால்நடைத் தெய்வ வழிபாட்டு மரபுடன் இது இணைவதைத் தெளிவுபடுத்துகிறது. முன்பு பலியிடல் காணப்பட்டபோதும் இன்று எவ்வாலயத்திலும் அது நிகழ்வதில்லை. தீமிதித்தல் உள்ளிட்ட நேர்த்திக்கடன் தீர்த்தல் மரபுகள் பல காணப்படுகின்றன. கிராஞ்சி, வேரவில், கல்லாவில் போன்ற இடங்களில் துதிப்பாடல்கள் இல்லையாயினும்; மந்திரக்கட்டு, சடங்காசாரங்கள் நின்றுநிலவும் இடங்களாக அவை காணப்படுகின்றன. இளந்தாரி வலிமையின் - வீரத்தின் அடையாளம். ஆதலால் அது நடுகல்லின் வழியும் சூலத்தின் வழியும் நின்று நிலவுகின்றது.

# இலங்கையில் 1970களுக்குப் பின்பாகத் தோற்றம் பெற்ற புதியவர்க்கம்

‘இலங்கையின் அரசியல் 1981 – 1900: பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1981 முதல் 1900 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Dis ciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம்: நவரட்ண பண்டார*




**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

1

அரசியல் பேராசிரியர் நவரட்ண பண்டார 2014ஆம் ஆண்டில் *The New Class in Sri Lanka* (இலங்கையில் ஒரு புதிய வர்க்கம்) என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"அரசியல்வாதிகள் இன்று ஒரு புதிய வர்க்கமாக எழுச்சி பெற்றுள்ளார்கள். இந்தப் புதிய வர்க்கம் நான்கு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாக பலமான ஒரு சமூக வர்க்கமாக உருவாக்கம் பெற்று இலங்கைச் சமூகத்தின் பிற எல்லாச் சமூக வர்க்கங்களையும் விட முதன்மை இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. இந்த வர்க்கத்தின் முக்கியமான குண இயல்பு ஒன்றைக் கவனித்தல் வேண்டும். இவ்வகுப்பினர் தமது கூட்டு அரசியல் அதிகாரத்தை உபயோகித்து பெரும் சொத்துகளைத் தமது உடைமை ஆக்கிக் கொள்கின்றனர். தேசிய செல்வத்தின் (*National Wealth*) குறிப்பிட்டளவு பெரும்பகுதியை இவ்வகுப்பினர் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

பேராசிரியரின் மேற்படி கூற்று இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட ஒரு முக்கியமான மாற்றத்தை, நாம் கவனிக்கத் தவறும் அல்லது மேலோட்டமாகப் புரிந்து கொண்டுள்ள ஒன்றைத் தெளிவாக எடுத்துக் கூறுவதாக இருக்கிறது. புதிதாகச் சுதந்திரம் பெற்ற இலங்கையில் சுதந்திரத்தின் பின் இரண்டு தசாப்தங்கள் கழிந்தபின், 1970க்குப் பிந்தைய நான்கு தசாப்தகாலத்தில், ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த ஆளும் வர்க்கம் (*Ruling Class*) புதியதொரு வர்க்கமாக (*New Class*) தோற்றம் பெற்றதை பேராசிரியர் எமது கவனத்திற்குக் கொண்டு வருகிறார். '*The New class in Sri Lanka*' எனும் கட்டுரை 2014 டிசம்பர் 25 ஆம் திகதி '*The Colombo Telegraph*' இணைய இதழில் வெளியாகியிருந்தது. இத்தமிழ்க் கட்டுரை பேராசிரியரின் ஆங்கிலக் கட்டுரையை அறிமுகம் செய்வதாகவும் மூலக்கட்டுரையின் கருத்துகளைத் தழுவியும், சுருக்கியும், தொகுத்தும் தருவதாகவும் அமைகிறது.

யூகோசிலாவியாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் புரட்சியின் பின்னர் மார்ஷல் டிட்டோ தலைமையிலான ஆட்சியில் மிலோவன் டிலாஸ் (*Milovan Djilas*) செல்வாக்குமிக்க ஒருவராக விளங்கினார். இவர் பின்னர் கருத்து முரண்பாடு கொண்டு அவ் அரசிலிருந்து வெளியேறினார். அவ்வாறு வெளியேறிய மிலோவன் டிலாஸ் '*The New Class*' (புதிய வர்க்கம்) என்ற ஒரு நூலை எழுதினார். இப்பிரபலமான நூல், அங்கே ஆளும் வர்க்கம் (*Ruling Class*) ஒரு புதிய வர்க்கமாக (*New Class*) உருவாகியுள்ளது என்ற வாதத்தை முன்வைத்தது. அதாவது ஆட்சியதிகாரத்தில் இருந்த வர்க்கங்கள் புரட்சியால் ஒழிக்கப்படுதல் (*Extinction of Ruling Classes*) என்ற கருத்தை மறுத்துரைக்கும் வாதங்களை மிலோவன் டிலாஸ் முன்வைத்தார். கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்த டிலாஸ் அவர்களுக்கு புரட்சியின்பின் யூகோசிலாவியாவில் நடந்தவை என்ன என்பது தெளிவாகத் தெரிந்திருந்தது. அவர் புதிய வர்க்கத்தை பின்வருமாறு வரையறை செய்தார்.

"கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், நாட்டின் அரசு முறையின் மீது கூட்டு அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டு அதிகாரத்தை உபயோகித்து உற்பத்திச் சாதனங்களுடன் ஒரு விசேடமான பிரத்தியேக உறவை வளர்த்துக் கொண்டனர். அதன்மூலமாக அவர்கள் நாட்டின் ஆளும் குழுவாக தம்மை ஆக்கிக் கொண்டனர்."

டிலாஸ் அவர்களின் வாதம், கட்சி உறுப்பினர்கள் தமது கூட்டு அரசியல் அதிகாரத்தை (*Collective Political Power*) உபயோகித்து நாட்டின் உற்பத்திச் செயல்முறையூடாகக் கிடைக்கும் செல்வத்தின் பெரும்பங்கை தமது சொத்தாக (*Property*) மாற்றிக் கொண்டனர் என்பதாக அமைந்தது. டிலாஸ், இந்த வர்க்கம் பிற்போக்கான ஒன்று என்பதையும் அதனை ஒரு புரட்சியின் மூலம்தான் தூக்கிவீசி அப்புறப்படுத்த முடியும் எனவும் கருதினார். டிலாஸ் கருதிய இந்தப் புரட்சி 1990களில் கிழக்கு ஐரோப்பாவின் கம்யூனிஸ்ட் அரசுகளைத் துடைத்தழிப்பதற்கு காரணமாயிற்று.

## இலங்கையில் புதிய வர்க்கத்தின் தோற்றம்

தேர்தல்களில் போட்டியிட்டு பதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல், நியமனங்கள் மூலம் ஆட்சி அதிகாரமுடைய இடங்களில் அமர்ந்து கொள்ளல் அல்லது ஆளும் கட்சித் தலைவர்களுடன் தனிப்பட்ட உறவுகளை வளர்த்துக் கொண்டு அதன்மூலம் பதவிகளைப் பெறுதல் ஆகிய பலவழிகளில் அதிகாரப் பலத்தைத் தரும் ஆசனங்களில் (*Seats of power*) பலர் அமர்ந்து கொள்கிறார்கள். இவ்வாறு பதவிகளில் அமர்ந்து கொண்டதும் அவர்கள் பின்வரும் வழிகளில் சொத்துகளைச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

1. ஒவ்வொரு பதவிக்கும் சம்பளத்திற்கு மேலான சிறப்புச் சலுகைகள் கிடைக்கின்றன. ஆங்கிலத்தில் '*Institutional Perks*' என இதனைக்

குறிப்பிடுவர்.

2. அரசாங்க ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் ‘கொமிசன்’.

3. வரவு - செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்படும் பணத்தைத் தவறாகக் கையாளுதல்.

4. பலவித நிதிக் கொடுப்பனவுகளையும் பேரங்களையும் உட்படுத்திய ஊழல் நடைமுறைகளில் ஈடுபடுதல்.

5. ஒப்பந்தங்களுக்கான கேள்வி மனுக்கோரல் மூலம் ஒப்பந்த வேலைகளைப் பெறும் தொழில் முயற்சியாளர்களிடமிருந்து முகவர்கள் ஊடாக லஞ்சம் பெறுதல்.

6. கட்சித் தாவல்கள் மூலம் புதிய கட்சிக் கூட்டுகளை அமைத்தல்.

மேற்கண்டவாறாக அரசியல் அதிகாரத்தின் ஊடாகச் சொத்துக் குவித்து, பலமும் செல்வாக்கும் மிக்கவர்களாக நாடு பூராகவும் ஒரு புதிய வர்க்கம் உருவாகியிருப்பதை நவரட்ண பண்டார சுட்டிக்காட்டுகிறார். பதவிக்கு வந்தவுடன் ஆளும் குழுவின் உறுப்பினர்களாகிவிடும் இத்தனிநபர்கள், தாம் சார்ந்த குழுவின் கூட்டு அரசியல் அதிகாரத்தை (Collective Political Power) தனிப்பட்ட நலன்களுக்கு உபயோகித்துக் கொள்கிறார்கள்.

அரசு அதிகாரம் இரண்டு இடங்களில் உறைகிறது. ஒன்று, அதிகாரிகளது அதிகாரக் கட்டமைப்பு (Bureaucracy), மற்றது இராணுவமும் பொலிசும். இவ்விரண்டையும் உள்ளடக்கிய அரசயந்திரத்தை (State Apparatus) அரசியல் அமைப்பும் தேர்தல் முறையும் என்ற சட்டபூர்வமான செயல்முறைமைகளின் ஊடாகவே தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொள்ளும் தந்திரத்தில் கைதேர்ந்தவர்களாக இப்புதிய வர்க்கத்தின் உறுப்பினர்கள் விளங்குகின்றனர். இதனைவிட சிவில் சமூக அமைப்புகளையும், ஊடகங்களையும் (Civil Society and Media) கூடத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும் நவரட்ண பண்டார குறிப்பிடுகிறார். அரச அதிகாரக் கட்டமைப்பே இப்புதிய வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்திருப்பதற்கு உதவுவதையும் காணமுடிகிறது. இதனால் இலங்கையில் தேர்தல்கள், உயரடுக்குக் குழுமங்களிற்கிடையிலான (Between Elite Groups) வன்முறை சார்ந்த போட்டியாகவே அமைந்து விடுகிறது; ஜனநாயகம் என்பது இதனால் கேலிக் கூத்தாகிவிட்டது. இந்நிலையில் தெளிவான புரிதலை உடைய ஒரு மனிதர் தேர்தலை




Image Source - www.ebay.co.uk

வெறுப்புடன் நோக்குவதில் ஆச்சிரியம் இல்லை.

## வரலாற்றுப் பின்புலம்

இலங்கையில் இப்புதிய வர்க்கம் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை இலங்கைக்கு ‘நவீனத்துவத்தின் வரவு’ (Arrival of Modernity) என்ற வரலாற்றுப் பின்புலத்திலேயே புரிந்து கொள்ள முடியும் என நவரட்ண பண்டார குறிப்பிடுகிறார். இலங்கை மக்கள் ‘நவீனத்துவம்’ சார்ந்த சமூக சக்திகளை பிரித்தானிய ஆட்சியின்கீழ் முதன்முதலாக எதிர்கொண்டார்கள். அவ்வேளை இச்சிறிய தீவை உலகு தழுவிய முதலாளித்துவத்துடன் (Global Capitalism) இணைக்கும் வேலை, காலனிய ஆட்சியின்கீழ் தொடக்கிவைக்கப்பட்டது. நவீனத்துவத்தின் விழுமியங்களை இலங்கைச் சமூகம் உள்வாங்கித் தழுவிக் கொண்டது. அவ்வாறு தழுவிக்கொண்ட போது உயர் குழாம், வெகுஜனத்திரள் என்னும் இரு பிரிவுகளான சமூகப் பிளவு (Elite - Mass Dichotomy) தோன்றியது.

காலனித்துவ முதலாளித்துவம் உருவாக்கிய முதலாவது சமூக வர்க்கமாக உள்ளூர் முயற்சியாளர் வர்க்கம் (Local Entrepreneur Class) அமைந்தது. இவ்வர்க்கம் படிப்படியாக வளர்ந்து

எண்ணிக்கையில் பெருகியதோடு, நிலமானிய சமூகத்தில் உயரடுக்கில் இருந்த முதலியார் வகுப்பை ஒதுக்கிவிட்டு, அதன் இடத்தைப் பிடித்ததோடு காலனிய ஆட்சியாளரோடு ஒத்துழைக்கத் தொடங்கியது. குறிப்பாக இலங்கையின் கரையோரப் பகுதியை போத்துக்கீசர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த **1505-1656** காலத்தில் அப்பகுதியில் முதலியார்கள் வகுப்பு செல்வாக்குப் பெற்றிருந்தது. அம்முதலியார் வகுப்பின் இடத்தை தொழில்முயற்சியாளர் வகுப்பு கைப்பற்றியது. நிலமானிய முதலியார் வகுப்பின் இடத்தைப் பிடித்துக்கொண்ட தொழில்முயற்சியாளர்கள், சமூகத்தில் மத்தியதர வர்க்கம் (Middle Class) ஆக மேற்கிளம்பினர். இச்சுதேச மத்தியதர வர்க்கம் கல்வியின் ஊடாகவும், தாம் ஈடுபட்டிருந்த தொழில்முயற்சி நடவடிக்கைகள் ஊடாகவும் தாராண்மை விழுமியங்களை (Liberal Values) உள்வாங்கிக் கொண்டது. இம்மத்தியதர வர்க்கம் சில அடிப்படையான சுதந்திரங்கள் மூலம் தன் இருப்பை உறுதிசெய்தது. ஓரிடத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் சுதந்திரமாக போய்வரும் உரிமை (Freedom of Movement), ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் (Freedom of Association), பேச்சுச் சுதந்திரம் (Freedom of Speech), கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் (Freedom of Expression) என்பன போன்ற சுதந்திரங்கள் இல்லாமல் தொழில்முயற்சியாளர்களான மத்தியதர வகுப்பு ஒரு வர்க்கமாக, சமூக இருப்பையும் இயக்கத்தையும் கொண்டிருத்தல் சாத்தியமில்லை. காலனிய முதலாளித்துவம் எழுச்சிபெற்ற போது அதன் உடன் நிகழ்வாக தோன்றியவையே மேற்குறித்த உரிமைகளும் விழுமியங்களும் ஆகும். ஐரோப்பாவில் கைத்தொழில் முதலாளித்துவம் (Industrial Capitalism) தோன்றியபோதும், மேற்குறித்த பண்புகளை உடைய மத்தியதர வகுப்பு தோற்றம் பெற்றதென்பதைக் குறிப்பிடலாம். தடையற்ற முதலாளித்துவம் (Laissez faire capitalism) இயங்குவதற்கு தனிநபர்களின் சாதனைகளை ஊக்குவிக்கும் தாராண்மை விழுமியங்கள் (Achievement oriented liberal values) ஆதாரமாக அமைகின்றன. மத்தியதர வர்க்கம் இத்தகையதொரு பின்புலத்திலேயே செயற்பட முடியும்.

**20**ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சுதேசிய மத்தியதர வர்க்கம் முதலாவது தலைமுறை அரசியல் வர்க்கம் (First Generation of the Political Class) என்னும் புதிய சமூக வர்க்கத்தை தன் மத்தியில் இருந்து உருவாக்கியது. இவ்வர்க்கத்தை 'அரசியல் வர்க்கம்' (Political Class) என நாம் அடையாளப்படுத்தலாம். இந்த அரசியல் வர்க்கம் பற்றியே நாம் அடுத்து நோக்கவுள்ளோம்.

## முழுநேர அரசியல்வாதிகள்

**20**ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் அரசியல் யாப்பு மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்களின்படி இலங்கைக்கு முழுநேரமும் அரசியலில் ஈடுபடும் அரசியல்வாதிகள் தேவைப்பட்டனர். இலங்கையின் மத்தியதர வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாய், சட்டசபையில் தொழில்முயற்சியாளர்களதும் இலங்கையின் செல்வந்த வகுப்பினதும் (Wealthy Class) நலன்கள் குறித்து எடுத்துக்கூறி வாதாடவல்ல முழுநேர அரசியல்வாதிகள் தேவைப்பட்டனர். இவ்வரசியல்வாதிகள் சுதேச முயற்சியாளர்களுக்கும் சொத்துடமையாளர்களுக்கும் அரசாங்க அதிகாரத்தில் பங்கினைப் பெற்றுக்கொடுப்பதற்கான அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை (Constitutional Reforms) காலனிய அரசிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு உழைத்தல் என்னும் வகிபாகத்தை ஏற்றனர். **1911**க்கும் **1931**க்கும் இடைப்பட்ட காலத்தில் காலனிய அரசினால் கொண்டுவரப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் வாக்குரிமையைப் படிப்படியாக விஸ்தரித்தது. பிரதேச அடிப்படையிலான தேர்தல்தொகுதிகள் (Territorial Electorates) மூலம்

காலனித்துவ முதலாளித்துவம் உருவாக்கிய முதலாவது சமூக வர்க்கமாக உள்ளூர் முயற்சியாளர் வர்க்கம் (Local Entrepre neur Class) அமைந்தது. இவ்வர்க்கம் படிப்படியாக வளர்ந்து எண்ணிக்கையில் பெருகியதோடு, நிலமானிய சமூகத்தில் உயரடுக்கில் இருந்த முதலியார் வகுப்பை ஒதுக்கிவிட்டு, அதன் இடத்தைப் பிடித்ததோடு காலனிய ஆட்சியாளரோடு ஒத்துழைக்கத் தொடங்கியது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சட்டவாக்க சபையில் அதிகரிக்கப்பட்டது. இச்சட்ட சபைகளின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், அரசியல் என்ற விளையாட்டில் (The Game of Politics) கைதேர்ந்த, முதிர்ச்சிபெற்ற அரசியல்வாதிகளாக உருவாகினர். குறிப்பாக 1931இல் சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இவ்வாறான முழுநேர அரசியல்வாதிகள் தோன்றினர்.

1931 அரசியல் யாப்பு உருவாக்கிய அரசியல்வாதிகள் தமக்கென ஒரு வெகுஜனத்திரளின் ஆதரவுத்தளத்தை (Mass Support Base) உருவாக்கிக் கொண்டனர். அவர்களுக்கு 1931இன் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் அரசாங்க நிர்வாகத்தில் (Execu tive Government) பங்கேற்பதற்குரிய வாய்ப்பை வழங்கியது.

## முதலாவது தலைமுறை

1912இன் பின்னர் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் சட்ட ஆக்கச் சபைகளிலும் (Legislative Councils) சட்ட நிருவாகச் சபைகளிலும் (Executive Councils) மத்தியதர வகுப்புப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தன. இதன்பயனாக முழுநேர அரசியல்வாதிகளான தலைவர்கள் இலங்கையில் தோற்றம் பெற்றனர். இவ்வரசியல்வாதிகளை நவரட்ண பண்டார அவர்கள் முதல்தலைமுறை அரசியல் வர்க்கத்தின் (First Generation Political Class) உறுப்பினர்கள் எனக் குறிப்பிடுகிறார். நாட்டின் பிற சமூகப்பிரிவினர்களின் நலன்களுக்காக வாதாடுவதும் அந்நலன்களைப் பாதுகாப்பதும் அவர்களின் கடமைப்பொறுப்பாகக் கருதப்பட்டது. அவ்வரசியல்வாதிகளுக்கு சட்டங்களை ஆக்குவதில் (Law Making) பங்களிப்புச் செய்ய முடிந்தது; அத்தோடு அரசாங்க நிர்வாக அலுவல்களில் (Execu tive Affairs) ஒரு பகுதியை தாமே கையாள்வதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும் வாய்ப்புக் கிட்டியது. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதால், நாம் முன்னரே குறிப்பிட்டபடி முழுநேர அரசியல்வாதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது; அரசியல் வர்க்கத்தின் (Political Class) வகிபாகமும் மாற்றமுற்றது. 1930களில் இவ்வரசியல்வாதிகள் இலங்கையின் பல்வேறுபட்ட சமூகப் பண்பாட்டு பிரிவினர்களின் (Different Social and Cultural Segments) பிரதிநிதிகளாகச் செயற்படும் தேவை ஏற்பட்டது. 1931 அரசியல் சீர்திருத்தம் இவ்வரசியல்வாதிகளுக்கு முன்னரைவிட வேறுபட்ட வகிபாகத்தை வழங்கியது.

மத்தியதர வர்க்கத்தின் உயரடுக்கினரின் பொருளாதார, சமூக, அரசியல் நலன்கள் என்ற குறுகிய எல்லைக்குள் நின்று செயற்படமுடியாத கட்டாயம் இவ்வரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் சாதாரண வெகுஜனங்களின் (Ordinary Masses) நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் இவ்வரசியல்வாதிகள் சாதாரண மக்களுடன் முழுமையாகத் தம்மை இணைத்துக் கொண்டவர்களாகவோ அம்மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தேவையான புதிய தாராண்மை விழுமியங்களில் (New Liberal Values) ஊறியவர்களாகவோ இருக்கவில்லை. இப்பின்னணியிலேயே அரசியல் வர்க்கத்தின் தேர்தல் அரசியலுக்கும் அரசியல் செயற்பாடுகளுக்கும் சாதனமாக அமையக்கூடிய அரசியல் கட்சிகள் (Political Parties) தோற்றம் பெற்றன.

முதல்தலைமுறை அரசியல்வாதிகளைக் 'கனவான்கள்' (Gentlemen) என்று குறிப்பிடலாம். அவர்கள் தம்மைத் தெரிவுசெய்த மக்களிற்கு (தொகுதியின் வாக்காளர்களுக்கு) விசுவாசமாக இருந்தார்கள்; சட்டம், ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு ஒழுகினார்கள்; அரசியல் அதிகாரம் தொடர்பாக அவர்களிடம் தாராண்மைவாத நோக்கு இருந்தது. மக்களிற்கு உரிமையான பொதுச் சொத்துகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக தாம் இருக்கிறோம் என்ற உணர்வு அவர்களிடம் இருந்தது. எந்தநேரமும் அதிகாரத்தைத் துறந்து விலகிச்செல்லவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். இந்த நற்குணங்கள் அவர்களிடம் இருந்தபோதும் அவர்கள் அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது சாதி, இனக்குழுமம், சமயம் (Caste, Ethnicity and Religion) போன்ற குறுகிய சார்புகளைக் கொண்டவர்களாகச் செயற்பட்டனர். இரண்டாவது 'ஸ்டேட் கவுன்சில்' காலத்தின் (1936-1947) அரசியல்வாதிகள் சிலரின் ஊழல் நடவடிக்கைகளை ஸ்டேட் கவுன்சிலால் நியமிக்கப்பட்ட முதலாவது 'லஞ்ச விசாரணை ஆணைக்குழு' வெளிக்கொணர்ந்தது.

## இரண்டாவது தலைமுறை

இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலத்தில் (PostIndependence Period) இலங்கையின்

அரசியல் வர்க்கம் அடிப்படையான மாற்றங்களுக்கு உட்பட்டது. 1950களில் படிப்படியாக இலங்கையின் வாழ்வியலில் அரசியல் (Politics) முதன்மையான இடத்தைப் பெறலாயிற்று. பொருளாதாரச் செயல்முறைகளை (Economic Process) விட அரசியல் முக்கியத்துவம் பெற்றது. இதனைவிட பண்பாடு, சமயம் என்பனவும் முக்கியம் பெற்றன.

1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது தேர்தல் வெற்றியின் பயனாக இலங்கையின் அரசியல் வர்க்கத்திற்குள் கீழ்மட்டங்களைச் சேர்ந்தவர்களும், உயர்குழுமப் பின்னணி இல்லாதவர்களும் இணைந்து கொண்டனர். பண்டாரநாயக்க 1956இல் 'தேசிய உடையை உடுத்தி சோஷலிசத்தைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்தார்' (Brought Socialism dressed with national clothes). 'சங்க, வெத, குரு, கொவி, கம்கறு பலவேகய' (பௌத்த சங்கத்தினரான பிக்குகள், ஆயுர்வேத வைத்தியர்கள், கிராமத்துச் சிங்கள ஆசிரியர்கள், விவசாயிகள், நகரத்தொழிலாளிகள்) ஆகிய ஐந்து பிரிவினர்கள் பண்டாரநாயக்க அவர்களால் அரசியலில் முன்னரங்குக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இச்சமூகக் குழுக்கள் ஆங்கிலமயப்பட்ட உயர்குழாத்தை அரசியலில் இருந்து ஓரங்கட்டின. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இலங்கை அரசியலில் செல்வாக்கு பெற்றிருந்த ஆங்கிலமயப்பட்ட உயர்குழாத்தின் (Anglicized Elites) இடத்தை பஞ்சமகா பலவேகய கைப்பற்றிக் கொண்டது. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் வெற்றி புதிய வகையினரான அரசியல்வாதிகளைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்தது. அப்புதிய வகைப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற விவாதங்களின்போது சுதேச மொழிகளை உபயோகிக்க வேண்டும் என விரும்பினர். 1956 இன் பின்னர் சர்வதேச உறவுகள், பொருளாதார வளர்ச்சி, கல்வி, உத்தியோக மொழி, பண்பாடும் சமயமும் என்பன தொடர்பாக கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டதால், வாக்காளர்கள் அடுத்துவந்த பாராளுமன்றத் தேர்தல்களில் சுதேசமொழிகளில் மட்டும் வாதங்களை நடத்தக்கூடியவர்களை கூடிய எண்ணிக்கையில் பாராளுமன்றத்திற்குத் தெரிந்து அனுப்பினர். முன்னர் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் வர்க்க அடிப்படையில் வலதுசாரி, இடதுசாரி என்று பிரிந்து நின்றமைக்கு மாறாக இனத்துவக்குழுமம், சமயம் (Ethnic and Religion) என்ற அடிப்படையில் புதிய பிரிவுகளைத் தமக்குள் உருவாக்கினர்.

1972இன் குடியரசு அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தபோது அரசு முறையில் பல மாற்றங்கள் வெளிப்படையாகத் தென்பட்டன. இவ்வரசியல் யாப்பு அரசு அதிகாரங்களை ஓரிடத்தில் குவித்தல் (Concentration of Power) என்பதைச் செயற்படுத்தியது. இது அதிகாரப் பகுப்பு (Separation of Powers) என்பதற்கு எதிரான கொள்கையாகும். மத்தியில் ஓரிடத்தில் அதிகாரங்களைக் குவித்தல் என்னும் இக்கொள்கை 'பிரதமர் சர்வாதிகார ஆட்சிக்கு' (Prime ministerial Autocracy) வழிவகுத்தது. 'இலங்கையைக் குடியரசு ஆக்குவோம்; சோஷலிசத்தை நாட்டில் மலரச் செய்வோம்' என்ற கனவு சமூகத்தில் பரவலாகப் பரவியிருந்ததும், சிங்களப் பெரும்பான்மையினம் இனத்துவ தேசியவாதக் கருத்தியலுக்கு (Ethno Nationalist Ideology) ஆட்பட்டிருந்தமையும், அரசியல் யாப்பின் ஊடாக அரசு அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படுதல் என்னும் செயற்பாட்டை இலகுவாக்கின.

அதிகாரக் குவிப்பின் பயனாக நாட்டின் நீதித்துறை, பொதுத்துறை நிர்வாகக் கட்டமைப்பு என்ற இரண்டு நிறுவனங்களும் பலவீனமாக்கப்பட்டன. 1972 அரசியல் யாப்பு நீதித்துறையைப் பலவீனமாக்கியது; அதன் சுதந்திரத்தை மட்டுப்படுத்தியது. இலங்கையின் பழமையான அலுவலர் ஆட்சிக் கட்டமைப்பு (Old Bureaucracy), உருக்குச் சட்டகம் போன்று உறுதியுடையதாய் இருந்தது. அந்தக் கட்டமைப்புச் சிதைக்கப்பட்டு அதனிடத்தில் புதிய அலுவலர்களைக்கொண்ட பொதுச்சேவை அலுவலர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இதனால் ஆட்சி அதிகாரத்தை உடையவர்களான அரசியல்வாதிகளுக்குக் கீழ்ப்படிந்து பணியாற்றும் அதிகாரிகள் குழு உருவாக்கம் பெற்றது. அரசியல் - நிர்வாகம் என்ற இரண்டின் கலப்பு (Political Administrative Intermix) 1972க்குப் பிற்பட்ட காலத்தின் அரசியல் முறையின் (Political System) விசேட இயல்பாகக் காணப்பட்டது.

## மூன்றாவது தலைமுறை

மூன்றாவது தலைமுறை அரசியல் வர்க்கம் 1977இல் ஜே.ஆர். ஜயவர்த்தன நிறைவேற்று ஜனாதிபதியாக ஆட்சியில் அமர்ந்த காலத்தில் இருந்து உருவானது. இந்த வர்க்கம் உருவான காலத்தில் புதியதொரு தேர்தல்முறை (New Electoral System) நடைமுறைக்கு வந்தது. அத்தோடு அதிகாரங்கள் குறைக்கப்பட்ட பலவீனமான பாராளுமன்றம் உருவானது. நீதித்துறையும் பலவீனமுடையதாக ஆக்கப்பட்டது. ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக்காலத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையும் (A New Economic Policy) நடைமுறைப்படுத்தப்பட்டது. தடையற்ற சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமுறையின் கீழ் வெளிநாட்டு முதலாளிகளும், உள்ளூர் முதலாளிகளும் நாட்டில் முதலிடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். ஜே.ஆர். ஜயவர்த்தன நிறைவேற்று ஜனாதிபதிமுறையைக் கொண்டுவர வேண்டுமென்று கனவு கண்டவர். வாக்காளர்களதும், தேர்தல் அரசியலினதும் அழுத்தங்களில் இருந்து விடுபட்டு சுயாதீனமாக இயங்கக்கூடிய ஜனாதிபதியாக ஆட்சிபுரிய வேண்டும் என்ற அவரது கனவு நனவாகியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக யு.என்.பி அரசியல்வாதிகளை கோட், சூட், டை, அணிவதற்குப் பதிலாக 'தேசிய உடையை' அணிந்துகொண்டு பாராளுமன்றத்திற்கு வரச்செய்தார் ஜே.ஆர். ஜயவர்த்தன. பாராளுமன்றத்திற்கு வந்த இந்த அரசியல்வாதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜே.ஆர். ஜயவர்த்தன புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்தபோது பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அவருக்குக் கையளித்து அவரின் காலடியில் விழத் தயாராயினர்.

யு.என்.பி அரசாங்கத்தின் இறுதிப்பகுதியில் ஜே. ஆர். ஜயவர்த்தன 'முதலாவது அபிவிருத்தி; அதற்குப் பிறகு ஜனநாயகம்' (Development First; Democracy Later) என்ற மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்தார். தனது கட்சி அரசியல்வாதிகளுக்குத் தாராளமாக உழைக்கக்கூடிய முயற்சிகள் சார்ந்த அரசியல் அதிகாரப் பதவிகளை வழங்கினார். இதன் பயனாக பாராளுமன்ற உறுப்பினர்களான அரசியல்வாதிகள் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளையும் (Development Budgets) தேர்தல் தொகுதிகள் மட்டத்தில் செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களையும் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்தவர்களாய் மாறினர். இந்த அரசியல்வாதிகள் தேர்தல்கள் நடைபெற்றபோது தேர்தல் மோசடிகளைச் செய்தனர். அரசியல் வன்முறை சர்வசாதாரணமாயிற்று. அரசியல் ஆளுமைகளை (Political Personalities) மையப்படுத்திய அரசியல் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. அரச யந்திரத்தில் அரசியல்வாதிகளையும், அதிகாரிகள் வகுப்பையும் இணைத்த கூட்டைச் (Politico - Bureaucratic Alliance with in the Government Apparatus) சேர்ந்தவர்கள் அரச வளங்களை (State Resources) கையாளும் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் போட்டியிட ஆரம்பித்தனர்.

2

### இன்றைய நிலை

இன்று நிர்வாகிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள் என்று பல்வேறு துறைசார் நிபுணர்கள் (Professionals) அரச பதவிகளில் இருந்துகொண்டு தத்தம் துறைசார்ந்த விடயங்களில் சுதந்திரமான முடிவுகளை எடுக்க முடியாதவர்களாய் உள்ளனர். அவர்கள் அரசியல் வர்க்கத்தின் முதன்மையை (Primacy of the Political Class) ஏற்றுக் கொண்டால் தான் பதவியில் தொடர முடியும் என்ற கட்டாய நிலை உருவாகியுள்ளது. 1978இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஏற்படுத்தப்பட்டதனால், அரசியல் அதிகாரம் மத்தியில் குவிக்கப்படுதல் (Centralisation of Political Power) நிறைவேறியது. ஜனாதிபதிமுறையின் கீழ் அரசியல் அதிகாரம் மத்தியில் குவிக்கப்படும் போக்கு அதிகரித்துச் செல்கிறது.

இலங்கையின் அரசியல் வர்க்கத்தின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதற்குத் துணையாக இரண்டு கருத்துகள் துணை செய்கின்றன.

அ) 'பயங்கரவாதத்தை ஒழிப்போம்' என்ற கருத்து: இந்தக் கருத்தை மக்கள் முன்னால் முன்வைக்கும் அரசியல்வாதிகளான உயர்குழுவும், அதிகார வகுப்பு உயர்குழுவும் (Political and Bureaucratic Elites) மக்களிடம் வரிப்பணத்தைப் பெற்றுப் பயங்கரவாத ஒழிப்பிற்குச் செலவிட சம்மதத்தைப் பெறுகிறார்கள். மக்களின் இரத்தத்தையும்

**யு.என்.பி அரசாங்கத்தின் இறுதிப்பகுதியில் ஜே.ஆர். ஜயவர்த்தன ‘முதலாவது அபிவிருத்தி; அதற்குப் பிறகு ஜனநாயகம்’ (Development First; Democracy Later) என்ற மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்தார். தனது கட்சி அரசியல்வாதிகளுக்குத் தாராளமாக உழைக்கக்கூடிய முயற்சிகள் சார்ந்த அரசியல் அதிகாரப் பதவிகளை வழங்கினார். இதன் பயனாக பாராளுமன்ற உறுப்பினர்களான அரசியல்வாதிகள் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளையும் (Development Budgets) தேர்தல் தொகுதிகள் மட்டத்தில் செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களையும் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்தவர்களாய் மாறினர். இந்த அரசியல்வாதிகள் தேர்தல்கள் நடைபெற்றபோது தேர்தல் மோசடிகளைச் செய்தனர். அரசியல் வன்முறை சர்வசாதாரணமாயிற்று.**

(உயிரையும்) விலையாகத் தரும்படியும், தமது செயற்பாடுகளுக்கு அமோக ஆதரவை வழங்கும்படியும் கேட்கிறார்கள். சாதாரண மக்களின் ஆதரவையும் இலகுவாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆ) ஜனாதிபதிமுறைச் சர்வாதிகாரத்தை மேன்மைப்படுத்துதல்: ஜனாதிபதி என்ற தனிநபரின் சர்வாதிகாரத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்துவதன் மூலம் அரசியல் வர்க்கம் பலப்படுத்தப்படுகிறது. ஜனாதிபதி தாய்நாட்டின் பாதுகாவலர் (Protector of the Motherland) என்ற உயர் பீடத்தில் ஏற்றி வைக்கப்படுகிறார். அவரே சமூகநீதி (Social Justice), நாட்டின் உறுதிநிலை (Stability), இலங்கை என்ற புவிப்பரப்பின் ஒருமைப்பாடு (Territorial Integrity) என்பவற்றையும் காக்கக்கூடியவர் என்ற கருத்தும் பரப்பப்படுகிறது.

நாட்டின் ஆளுகையை (Governance), அரசியல் உயர்குழாம் உறுதியோடு கொண்டியக்குவதற்கு ஊடகங்களும், சிவில் சமூக அமைப்புகளும் துணைபுரிகின்றன. ஊடகங்களிலும், சிவில் அமைப்புகளிலும் முக்கிய பதவிப் பொறுப்புகளை வகிப்போரில் பலர் அரசியல் வர்க்கத்தின் முகவர்களாகச் செயற்படுகின்றனர். ஊடகங்களினதும், சிவில் அமைப்புகளினதும் பிரசாரங்களும் செயற்பாடுகளும் அரசியல் வர்க்கத்திற்குச் சார்பானவையாக அமைகின்றன.

### பண்பாட்டு வேறுபாடு

முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளின் ‘புதிய அரசியல் வர்க்கம்’ போன்றதொரு புதிய அரசியல் வர்க்கம், இலங்கையில் உருவாகியுள்ளது என்பதைக் குறிப்பிட்டோம். ஆயினும் இவையிரண்டுக்கும் இடையே முக்கியமான வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாட்டை ‘பண்பாட்டு வேறுபாடு’ (Culture Difference) என நவரட்ண பண்டார குறிப்பிடுகிறார்.

மனப்பாங்கு (Attitudes), சிந்தனை (Thinking), தாம் சமூகத்தில் என்ன வகிபாகத்தை ஏற்றுள்ளோம் (The Role They Play in Society) என்னும் உணர்வு என்பனவற்றில் இலங்கையின் புதிய அரசியல் வர்க்கம், முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளின் அரசியல் வர்க்கங்களில் இருந்து தெளிவான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. இலங்கையின் அரசியல் வர்க்கம் ‘லும்பன் மாதிரி’ (Lumpen Model) என்னும் வகையைச் சேர்ந்த மனிதர்களை உறுப்பினராகக் கொண்டது. கார்ல் மார்க்ஸ் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் லும்பன் வகுப்பினரின் குண இயல்பை விளக்கும் போது ‘சுயமரியாதை இல்லாதவர்கள், அவர்களுக்குச் சுயமரியாதை என்றால் என்ன என்றே தெரியாது’ (A kind of people who do not know what self respect is) என்று குறிப்பிட்டார். நாகரிகமுள்ள எந்த மனிதரும் தனது சுயமரியாதையை இழப்பதற்கு முன்வரமாட்டார். ஆனால் லும்பன்கள் என்ற வகைத் தனிநபர்கள் அரசியல் அதிகாரத்தின் மேல்நிலையில் இருப்பவர்களிடமிருந்து அற்பச் சலுகைகளைப் பெறுவதற்காகத் தமது சுயமரியாதையை இழந்து இழிவான எந்தச் செயலையும் செய்வதற்குத் தயாராக இருப்பார்கள். இலங்கையின் புதிய அரசியல் வர்க்கத்தின் பண்பாட்டை லும்பன் மாதிரியில் அமைந்த பண்பாடு என நவரட்ண பண்டார கூறுகிறார்.

பண்பாட்டு அடிப்படையில் மூன்றாவது தலைமுறை அரசியல் வர்க்கம் முதலாவது தலைமுறையின் கனவான்கள் பண்பாட்டில் (*Gentlemen Culture*) இருந்து வேறுபட்ட பண்பாட்டை உடையது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் 1956 வரை செல்வாக்குப் பெற்றிருந்த அரசியல் வர்க்கம் 'கனவான்கள் பண்பாட்டைப்' பேணியது என்பதை முன்னர் விளக்கிக் கூறினோம். 1956இல் 'தேசிய உடைப் புரட்சியை' (*National Dress Revolution*) நிகழ்த்திய இரண்டாம் தலைமுறை அரசியல் வர்க்கமும் 1970ஆம் ஆண்டுவரை ஏறக்குறைய முன்னைய தலைமுறையின் 'கனவான்கள் பண்பாட்டைக்' கடைப்பிடித்து வந்தது. ஆனால் 1970இன் பின்னர் அரசியல் வர்க்கத்தின் நடத்தையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டு வந்தது. 1978 அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்ததன் பின்னர், அரசியல் வர்க்கத்தின் பண்பாட்டில் சடுதியான மாற்றம் ஏற்பட்டது. குறிப்பாக 1978 அரசியல் யாப்பு நடைமுறைக்குக் கொண்டுவந்த தேர்தல்முறை (*Electoral System*), மூன்றாம் தலைமுறை அரசியல் வர்க்கத்தை உள்ளே நுழையவிட்டது. அரசியல் வர்க்கத்தின் பண்பாட்டில் 'லும்பன்' பண்பாடு மேலோங்கியது. இதன்விளைவாக பண்பட்ட மனிதர்களும், சுயமரியாதையை இழக்க விரும்பாத தன்மானம் உடையோருமான பலர் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டனர். புதிய அரசியல் வர்க்கத்தின் நடத்தையினால் விரக்தியடைந்தோர் பொதுவெளியில் (*Public Sphere*) இருந்து ஒதுங்கிக்கொண்டதோடு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து வாய் திறக்காமல் மௌனம் காத்தனர்.

மிலோவன் டிலாஸ் 'புதிய வர்க்கம் கோட்பாட்டை' (*New Class Theory*) விளக்கியபோது அவ்வர்க்கத்தின் அரசியல் பண்பாட்டைப் (*Political Culture*) பற்றி விளக்கம் எதனையும் கூறவில்லை. இதற்குக் காரணம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஒருபோதும் 'லும்பன் மாதிரி' (*Lumpen Model*) பண்பாட்டின் இயல்புகளைக் கொண்டவர்களாய் இருந்ததில்லை. இலங்கையில் தோற்றம் பெற்ற



நவரட்ண பண்டார
Image Source - tamilnation.org

புதிய வர்க்கத்தின் பண்பாட்டை தீர்க்கதரிசனத்தோடு சேர்.ஜோன். கொத்தலாவல கூறினார். 1956 பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கவின் தேசிய உடையணிந்த படையணியால் அவர் தோற்கடிக்கப்பட்ட போது, அவர் "*BANDO!!! You let loose the dogs*" (பண்டோ! உம்ப பல்லோ லி ஹ¬வா) என்றார்.

## முடிவுரை

"மிலோவன் டிலாஸ் கம்யூனிஸ்ட் புதிய வர்க்கத்தை ஒழிப்பதற்கு ஒரு புரட்சி வேண்டும் என்று குறிப்பிட்டார். இலங்கையின் புதிய வர்க்கத்தை ஒழிப்பதற்கும் ஒரு புரட்சி தேவை என்பது எனது கருத்தாகும். ஆனால் இந்தப் புரட்சி வன்முறையானதாக அமையக்கூடாது. 1990களில் செக்கோசிலாவாக்கியாவில் இடம்பெற்றது போன்ற அமைதி வழியிலான மாற்றத்தை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும்."

நவரட்ண பண்டார அவர்களின் இக்கூற்று ஆங்கிலத்தில் பின்வருமாறு அமைந்துள்ளது.

*"Our country needs a revolution against this new class - not a violent one; but using velvet glove instead; one like what happened in the former Czechoslovakia in the 1990s"*

# ஒல்லாந்தரின் முதற்கட்ட முயற்சி

யாழ்ப்பாணக் கிறிஸ்தவத் திருமறைகள்' எனும் இத்தொடர் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு கிறிஸ்தவ வேதங்கள் பற்றியது. கிறிஸ்தவ தமிழ் வேதாகமங்கள் தென்இந்தியாவில் மொழிபெயர்க்கப்பட்டவை என்பதே பொதுவான கருத்து. ஆனால் யாழ்ப்பாணத்திலும் இதற்கான பிரயத்தனங்கள் நடந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை டச்சு மற்றும் பிரிட்டிஷ் காலனிய ஆதிக்கத்தின் உச்சத்தில் வெளிவந்தவை. இத்தொடரில் இந்த வேதாகமங்களுக்குப் பின்னால் இருந்த ஆளுமைகள், அவர்களின் இறையியல் கோட்பாடுகள், மொழிநயம், மொழிபெயர்ப்பு நடைமுறைகள், உபயோகித்த யாழ்ப்பாணச் சொற்கள் போன்றனவற்றோடு இவை உருவாகிய அரசியல், சமூக, சமய காலகட்டங்கள் போன்றன பற்றியும் ஆய்வு செய்யப்படும். அத்துடன் இவை எவ்வாறு அதிகாரபூர்வமான வேதாகம சங்கத்தின் பிரதான பதிப்புகளிலிருந்து வேறுபட்டன என்பதும் விவரிக்கப்படும். குறிப்பாக, வேதாகம உருவாக்கத்தில் தமிழர்களின் கவிதை மரபின் பங்களிப்புப் பற்றியும் அவர்களை ஈர்க்கவும், திருப்தியளிக்கவும் இந்தியப் புராண வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பிலும் இத்தொடர் ஆராயும்.


## சச்சிதானந்தன் சுகிர்தராஜா

ஈழத்தின் மட்டக்களப்பில் பிறந்த சச்சிதானந்தன் சுகிர்தராஜா அவர்கள், தற்போது ஐக்கிய இராச்சியத்தின் பெர்மிங்ஹம்மில் வாழ்ந்து வருகிறார். பெர்மிங்ஹம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இச்சர்வகலாசாலையிலேயே இவருக்குத் தனியார் இருக்கை வழங்கப்பட்டு விளக்கவியல் பேராசிரியாகப் பணிபுரிந்தார். இவருடைய பின்காலனித்துவ எழுத்துகள் இவரைக் கல்வி உலகில் பிரபலமாக்கிற்று. இவருடைய படைப்புகள் பிரபல பல்கலைக்கழகப் பிரசுரங்களான ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ், ஹார்வார்ட் ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. இவை ஜேர்மன், ஸ்பானிஷ், கொரியன், மலேசியன், சீன மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

எழுத்தாளர் அசோகமித்திரன் கணையாழியில் ஆசிரியராக இருந்தபோது, இவருடைய தமிழ் எழுத்துகள் வெளிவரத்தொடங்கின. காலச்சுவடு பதிப்பகத்தால் இவரின் 'அசாதாரண மனிதன்' எனும் ஒரு கதைத்தொகுப்பும், 'பண்பாட்டுப் பொற்கனிகள், கலாசார அவதானிப்புகள், நூல்கள் நூலகங்கள் நூலகர்கள்' ஆகிய மூன்று கட்டுரைத்தொகுப்புகளும் வெளியிடப்பட்டன. 'யூதர்கள் சைவர்களான கதை, ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடமைவாதிகள், நான் தடுப்பூசி குத்தப்போனேன்' ஆகிய நூல்கள் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டன.




பருத்தித்துறை சந்தைச் சதுக்கத்தின் நடுவில் ஒரு பெரிய புளிய மரம் இருந்தது. அதன் கீழ் 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், படுவெய்யிலில், யாழ்ப்பாணக் காலநிலைக்குப் பொருத்தமில்லாத உடைகள் அணிந்து ஓர் அந்நிய நாட்டு வெள்ளைப் பாதிரியார் தமிழர்களுக்குக் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்க, சலிப்பூட்டும் பிரசங்கங்களைச் செய்துகொண்டிருக்கிறார். அவர் யாருமல்லர், இந்தக் கட்டுரையின் முக்கிய நாயகர், ஒல்லாந்தரான பிலிப்பஸ் பல்டேயஸ் (*Philippus Baldaeus*). பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரில் படித்த எனக்கு இப்படி ஒரு புளிய மரம் இருந்ததாகத் தெரியவில்லை. 1963இல் ஏற்பட்ட புயலின் போது இந்த மரம் வேரோடு சாய்ந்துவிட்டது என்று கேள்விப்பட்டேன்.

## இலங்கை பற்றி காலனியவாதிகளின் கருத்துக்கோணங்கள்

காலனியகாலத்தில் இலங்கை பற்றி வெளிவந்த முக்கியமான மூன்று நூல்களில் முதன்மையானது, பிலிப்பஸ் பல்டேயஸ் (1632-1671) எழுதிய நூலாகும். அந்தக் காலத்து இலக்கிய வழமைக்கு ஏற்ப, இதன் தலைப்பு ஒரே மூச்சில் வாசிக்கக்கூடியது அல்ல: 'மலபார் மற்றும் கோரமண்டலின் மிகவும் கொண்டாடப்படும் கிழக்கிந்தியக் கடற்கரைகளின் உண்மையான மற்றும் துல்லியமான விளக்கம். அத்துடன் புகழ்பெற்ற இலங்கைத் தீவும் அந்த மக்களின் பிறமத நம்பிக்கைளும்' (*A True And Exact Description Of The Most Celebrated East India Coasts Of Malabar And Coromandel. As Also The Great Island Of Ceylon And The Religion Of The Heathens*). இந்தநூல் வெளிவந்த ஆண்டு 1672; 829 பக்கங்களைக் கொண்ட இந்தப் படைப்பில் 162 பக்கங்கள், இலங்கைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தார்கள், அவர்களின் வாழ்க்கை, மத ஆச்சாரங்கள் பற்றிய பல்டேயஸின் தனிப்பட்ட அவதானிப்புகளைக்கொண்ட நூல் இது. இதில் தமிழ் இலக்கண அறிமுகம், பரமண்டல ஜெபம், விசுவாசப் பிரமாணம் ஆகியன தமிழில் தரப்பட்ட ஒரு பிற்சேர்ப்பும் உண்டு. யாழ்ப்பாணத்தார் தம் வரலாற்றை எழுத இன்னும் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை 1736இல் எழுதினார். இதில் முரண்நகை என்னவென்றால், இவரை எழுதத்தூண்டியது ஒரு டச்சு ஆளுநரான ஜான் மக்காரா (*Jan Maccara*).




**பல்தேயஸ் பாதிரியாரின் நூலின் தலைப்புப் பக்கம்**

**Image Source - www.rarebooksocietyofindia.org**

பல்டேயஸ் திராவிடத்தின் செழுமையையும் அதன் நெகிழ்வுத்தன்மையையும் பாராட்டியும், பழித்தும் பதிவு செய்தார். இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, திராவிட ஆராய்ச்சிக்குப் பெரிய அந்தஸ்தைக்கொடுத்த ஆங்கில ஆதரவாளர்களான ஆர். கால்டுவெல் (*Robert Caldwell*) மற்றும் ஜி.யு போப் (*G.U. Pope*) ஆகியோரின் வருகைக்கு முன்னேற்பாடாகவிருந்தவர் பல்டேயஸ். இவர் ஓர் எழுத்தாளர் மட்டுமல்ல ஒரு திறமையான நிலப்பட வரைவியலாளரும் கூட. இவர் வரைந்த வண்ணார்பண்னை, உடுவில், சாவகச்சேரி, மட்டக்களப்புத் தேவாலயங்கள், தமிழர்களின் உருவத் தோற்றம் ஆகியன இந்த நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பல்டேயஸின் புத்தகத்தில், ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றம், இந்தியாவில் இந்து மற்றும் பௌத்தத்தின் தொடக்கம் ஆகியன பற்றிய நீண்ட

விவரிப்பைக் காணலாம். இந்திய இதிகாசங்களான கிருஷ்ண புராணங்கள், இராமாயணம், மகாபாரதம் மற்றும் ஈழத்தமிழர்களின் சாதி அமைப்புகள் பற்றி ஐரோப்பிய வாசகர்களுக்கு முதலில் சொன்னவர் இவரே. ஜேர்மன் தத்துவவாதிகளும் அனைத்துக் கீழைத்தேயவாதிகளும், கிழக்கு மதங்களையும் ஒரு தத்துவமாகப் பகுப்பாய்வு செய்யும் முறைமையை பல்டேயஸ் தான் தொடக்கிவைத்தார்.

இலங்கை பற்றிய காலனிய நூற்களில் பிரபலமான இரண்டாவது நூல் ராபர்ட் நாக்ஸின், *An Historical Relation Of The Island Ceylon Together With Somewhat Concerning Several Remarkable Passages Of My Life That Hath Happened Since My Deliverance Out Of Captivity* (1681) எனும் நூல். இவர் 1660ஆம் ஆண்டு கண்டி அரசனான இரண்டாம் இராஜசிங்கனால் கைதாகி 19 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். சமூகம், குடும்பம், தொழில்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் மதம் போன்றவற்றைப் பற்றிய விரிவான விளக்கத்தை வழமைபோல் மேற்கத்தையப் பார்வையில் விசனமாகவும் வியந்தவண்ணமும் எழுதினார். அவர் வன்னியின் சில பகுதிகளில் சுற்றித் திரிந்தார். ஆனால் அவருக்கு யாழ்ப்பாணம் பற்றி அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. இந்தநூல் முக்கியமாக சிங்கள மக்களைப் பற்றி விவரிக்கிறது. டேனியல் டெஃபோவின் (Daniel Defoe) மிகவும் பாராட்டப்பட்ட நாவலான ராபின்சன் குரூஸோவுக்கு (Robinson Crusoe), நாக்ஸின் கடலோடி வாழ்வு முன்மாதிரியாக இருந்தது என்று கூறப்படுகிறது

மூன்றாவது புத்தகம் *'Ceilao'* என்று அழைக்கப்படும் கேப்டன் ரிபெய்ரோவின், *Historical Tragedy Of The Island Of Ceylon* எனும் நூல். இது போர்த்துக்கீசியர்களின் கீழ் உள்ள கடல் பகுதிகளில் பணியாற்றிய ஒரு சிப்பாயைப் பற்றியது. அவர் இலங்கையில் போர்த்துக்கீசிய காவல் படையுடன் 18 ஆண்டுகளைக் கழித்தார். அவரது புத்தகம் கீழ்நாட்டுச் சிங்களவர்களை விவரிக்கிறது. இவரின் இலங்கை பற்றிய கருத்து 'கடவுள் உலகில் படைத்தவைகளில் மிகச் சிறந்த பூமி இது' என்பதாகவே இருந்தது.

இந்த மூன்று நூல்களில் ரிபெய்ரோவின் புத்தகம் சற்று வித்தியாசமானது. நூலில் மூன்றாம் பகுதியில் அவர் போர்த்துக்கீசிய ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தார். அவர்களின் மூர்க்கக் குணம், சுரண்டும் தன்மைகள், பேராசைகளைப் பகிரங்கமாக்கினார். காலனிய ஆட்சியாளர்களான போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களில் யார் மிகவும் கேவலமானவர்கள் என்று ஒப்பிடுவது அவ்வளவு இலகுவல்ல. சிங்களப் பழமொழி ஒன்று நினைவுக்கு வருகிறது: 'இஞ்சிக்கும் மிளகிற்கும் என்ன வித்தியாசம்?'

## கிறிஸ்தவ வேதமும் மொழிபெயர்ப்பும்

கிறிஸ்தவத்திருமறை ஒரு மொழிபெயர்ப்பு நூல். இதில் இரண்டு பாகங்கள் உண்டு. ஒன்று பழைய ஏற்பாடு. இதன் பெரும்பான்மையான பகுதிகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டவை. டானியேல் (2:4b-7:28) மற்றும் எஸ்ரா (4:8-6:18; 7:12-26) ஆகிய நூல்களின் சில பகுதிகள் அரமேயத்தில் (Aramaic) எழுதப்பட்டவை. இந்த மொழியில்தான் இயேசு பேசினார். மத்திய கிழக்கில் உள்ள சமூகங்கள், குறிப்பாக அசீரியர்கள், கால்தேயர்கள், சிரியர்கள் மற்றும் சில யூதக் குழுக்களால் புதிய கிளைமொழியாக இந்தப் பாஷை இன்றும் பேசப்பட்டு வருகிறது. பழைய ஏற்பாடு யூதர்களின் வரலாறு, அவர்களின் சமயச் சடங்குகள், அவர்களை ஆண்ட இராசாக்கள், அவர்கள் அண்டை நாடுகளுடன் போட்ட சண்டைகள், தீர்க்கதரிசிகளின் உரைகள், அவர்களுடைய ஞான இலக்கியங்கள், நீதிக் கதைகள், கடவுள் கொடுத்ததாகக் கருதும் கட்டளைகள் போன்றவற்றை உள்ளடக்கியது.

இரண்டாவது பாகம் புதிய ஏற்பாடு. ஆரம்பக் கிறிஸ்தவச் சமயத்தின் காலத்தில் கிழக்குப் பெருங்கடல் பகுதியின் பொதுவான மொழியாக இருந்த, மக்கள் சந்தையில் பேசிய 'கோயினே' கிரேக்கத்தில் இது எழுதப்பட்டது. இதில் இயேசுவின் பிறப்பு, போதனைகள், அவர் செய்த அற்புதங்கள், பாடுகள், உயிர்த்தெழுதல் மற்றும் இயேசுவின் திருத்தூதர்களான பவுல், யோவான், பேதுரு ஆகியோர் ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு பக்தியை வளர்க்க எழுதிய நிருபங்களும் அடங்கும். இலியட் (Iliad) மற்றும் ஒடிசி (Odyssey) போன்ற பெரும் காவியங்களைப் போல, மரபார்ந்த கிரேக்கத்தில் இவை எழுதப்படவில்லை. கத்தோலிக்க வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் 46 புத்தகங்கள் உள்ளன; புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளன. இரண்டும் சேர்த்து மொத்தமாக 73 புத்தகங்கள் உள்ளன. எதிரியக்கச் சபையின் (Protestant Churches) வேதாகமத்தில் 66 புத்தகங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உள்ளன.

கிறிஸ்தவத் திருமறையை முதலில் தமிழ்ப்படுத்தியவர் யார் என்று கேட்டால், இந்தியக் கிறிஸ்தவர்களின் வழமையான பதில், தரங்கம்பாடியில் ஊழியம்செய்த டேனிஷ் நாட்டவரான லூதரன் திருச்சபையைச் சேர்ந்த பார்தோலொமியஸ் சீகன்பால்க் (Bartholomäus Ziegenbalg 1683 - 1719) என்பதாகவே அமையும். இவரின் மொழிபெயர்ப்புகளுக்கு முன்னர், இரண்டு தேர்ந்தெடுக்கப்பெற்ற வேதப்பகுதிகளின் தமிழில் மாற்றம் செய்யப்பட்ட பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. ஒன்று, போர்த்துக்கீசிய இயேசு சபைக் குருவான ஹென்றிக்கே ஹென்றிக்கேஸ் (1520-1600) அவர்களின் தமிழாக்கம். இது மேலெழுந்தவாறு மூல உள்ளடக்கத்தை தன் சொந்தச் சொற்களில் சுருக்கமாக எழுதிய ஒரு பொழிப்புரை.

மற்றையது யாழ்ப்பாணத்தில் ஊழியம் செய்த டச்சுக்காரரான பிலிப்பஸ் பல்டேயஸின் தமிழ் முயற்சிகள். இவர் முழுத் திருமறையையும் மொழிபெயர்க்கவில்லை; முதலாம் நற்செய்தியான மத்தேயுவை மட்டும்தான் தமிழ்ப்படுத்தினார். ஆனால் தரங்கம்பாடியில் அல்ல; யாழ்ப்பாணத்தில். வெளிநாட்டுக்காரர்கள் மட்டுமல்ல; ஓர் ஈழத் தமிழரும் கிறிஸ்தவ வேதாகமத்தை மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டுள்ளார். அவர் அனைவரும் பொதுவாக நினைப்பது போல ஆறுமுக நாவலர் அல்லர்; டச்சுப் பெயர் கொண்ட சுதேசித் தமிழர் பில்ப் டி மெல்ஹோ (Philip De Melhor 1723-1790). இவரைப் பற்றியும் இவரின் மொழியாக்கம் பற்றியும் இந்தத் தொடரில் பின்னர் கூறப்படும். இந்திய மொழிகளில் தமிழில்தான் முதன்முதலில் கிறிஸ்தவ வேதம் மொழிபெயர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்த அம்சம்.

## யாழ்ப்பாணச் சமயநிலை

கொழும்பை ஒல்லாந்தர் கைப்பற்றிய பின்னர் 1656இல் இலங்கைக்கு வந்த மத பரப்பாளரில் ஒருவர் பிலிப்பஸ் பல்டேயஸ். இவர் டச்சு சீர்திருத்த சபையைச் சேர்ந்தவர். வெளிநாட்டு மத பரப்பாளர்கள் பெரும்பாலானோர் அவர்கள் சென்ற நாடுகளில், அனைத்தையும் புதியதாக ஆரம்பிக்கவேண்டிய நிலையில் இருந்தார்கள். அந்தநிலை பல்டேயஸுக்கு ஏற்படவில்லை. ஏற்கனவே கத்தோலிக்கர்களினால் நிறுவப்பட்ட கிறிஸ்தவச் சமூகங்களும் தேவாலய அமைப்புகளும் தயாராக இருந்தன. இவருக்கு இரண்டு வேலைகள் காத்திருந்தன. ஒன்று, ஏற்கனவே ரோமன் கத்தோலிக்கராக மாறியிருந்த யாழ்ப்பாணத்தவரை டச்சு சீர்திருத்த சபைக்கு மாற்றுவது. ஒருவிதத்தில் இது சுலபமான காரியமாகவிருந்தது. இந்தக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பற்றிய இழிவான பார்வை இவரிடமிருந்தது. மனப்பூர்வமாக இவர்களை வெறுத்தார். அவர்களை இவர் பாபாண்ட சார்வாளர்கள் (Popepists) என்ற பட்டப்பெயர்கொண்டு அழைத்தார். இரண்டாவது, மூதாதையர்களின் வழிபாட்டில் ஊறிப்போயிருந்த இந்துக்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்குவது.

இவரது மதமாற்ற நடவடிக்கைகளால் தோல்வியடைந்த போர்த்துக்கீசியர்கள் யாழ்ப்பாணத்தில் 159 கிராமங்களில் முப்பத்தியிரண்டு ரோமன் கத்தோலிக்க ஆலயங்களையும் குருமார் குடியிருப்புகளையும் விட்டுச்சென்றனர். அவற்றில் ஒரு ஜேசுசபை மறைப்பள்ளியும், ஒரு டொமினிக்கன் மடாலயமும் உள்ளடங்கியிருந்தன; ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 20 அல்லது 25 மதகுருக்கள் தங்கியிருந்தனர். 1663ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத்தின் தேவாலயப்பதிவேடு ஒன்று, 62,558 கிறிஸ்தவர்கள் (ஆண்களும் பெண்களும்) இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. அடிமை நிலைக்கு உட்பட்டவர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த சுமார் 2,587 பேர் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

பல்டேயஸ் யாழ்ப்பாணப்பட்டணத்தில் 35 கிறிஸ்தவ ஆலயங்கள் இருந்ததாகச் சொல்கிறார். இவரின் காலத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு மாகாணங்களாக யாழ்ப்பாணம் பிரிக்கப்பட்டிருந்தது.

போர்த்துக்கீசிய மத பரப்பாளர்கள் தீவிரமான மதமாற்றப் பணியில் ஈடுபட்டிருந்தனர். மதம் மாறியவர்களில் பலர் பெயர் அளவில்தான் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் பத்துக் கட்டளைகளையும் ஏனைய கிறிஸ்தவக் கொள்கைகளையும் அறிந்திருந்தாலும் அவர்கள் தங்களது பாரம்பரியச் சடங்குகளை விடாமல் கடைப்பிடித்தது தனக்குக் கவலையையும் எரிச்சலையும் கொடுத்தது என்று பல்டேயஸ் எழுதியிருக்கிறார்.

சுமார் 12,387 உள்ளூர் முன்னாள் கத்தோலிக்கர்களை கல்வினிசத்திற்கு பல்டேயஸ் மதம் மாற்றினார். கல்வினிசம் என்பது ஜான் கால்வின் (John Calvin) (1509-1564) அவர்களின் போதனைகளை அடிப்படையாகக்கொண்ட

எதிரியக்கச் சீர்திருத்தச்சபையின் இறையியலின் ஒரு முக்கிய கிளையாகும். இது கடவுளின் இறையாண்மை, மனிதரின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதி மற்றும் மனிதகுலத்தின் முழுமையான உள்ளார்ந்த இழிவுநிலை ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

## யாழ்ப்பாணத்தவரின் காத்திரமான கேள்விகள்

பல்டேயஸின் இந்நூலில் இடம்பெறும் ஈழத்தமிழர்கள் அவரைவிடப் புத்திசாலிகளாகத் தெரிகின்றனர். உலகின் உருவாக்கம் மற்றும் முடிவு, ஆன்மாவின் அழியாத தன்மை, மோட்சம், நரகம் போன்றவை பற்றிப் பல பாரதூரமான இறையியல் கேள்விகளை அவர்கள் கேட்கின்றனர்.

இவர்கள் கேட்ட இரண்டு கேள்விகள் இவரைத் திணறவைத்தது. ஒன்று, இயேசுவின் திருமுழுக்குப் பற்றியது. 'இயேசுவிற்கு யோவான் திருநீராட்டுச் செய்தபோது என்ன வார்த்தைகளை உபயோகித்தார்? தந்தை, குமாரன் (இயேசு), தூய ஆவியானவர் ஆகியோரின் பெயராலா? அப்படியானால் இயேசுவிற்கு எப்படி அவருடைய பெயரால் திருமுழுக்குக் கொடுக்கலாம்?' இது உள்ளூர் கிறிஸ்தவரான மைக்கேல் பான்செக்காவை குழப்பியது. பல்டேயஸ் அதற்குச்சொன்ன பதில் பான்செக்காவை மேலும் சங்கடப்படுத்தியது. பல்டேயஸ் கொடுத்த விளக்கம் சிக்கலானது. தெய்வீகமும் மனிதமும் இணைந்த இயல்புகளைக் கொண்ட இயேசு, தனக்காக மட்டுமல்லாமல், கடவுள், குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் முழுமையான பெயரில் தூயநீராட்டம் செய்யப்பட்டார். இதன் மூலம் திரித்துவத்தின் ஒருமையான சாரத்தை வெளிப்படுத்தினார் என்று பல்டேயஸ் விளங்கவைக்க முயன்றார். பான்செக்காவுக்கு இந்த வறண்ட தெய்வீகக் கருத்துகள் மற்றும் அருவமான இறையியல் விளக்கங்கள் திருப்தி அளிக்கவில்லை. இந்த யாழ்ப்பாணத்துத் தமிழர் தன்னுடன் நீண்ட இறையியல் விவாதம் நடத்தியதாகப் பல்டேயஸ் அவரது நூலில் பதிவு செய்திருக்கிறார்.

இரண்டாவது, ஆன்மா இடம்பெயர்தல் (Transmigration Of Souls) பற்றித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் எழுப்பிய கேள்வி. 'ஒரு குழந்தை கண்பார்வையற்று, வாய்பேசாது அல்லது ஏதேனும் ஒருவகையில் அங்கவீனமாகப் பிறக்காது; ஏனெனில் ஒரு குழந்தையால் எந்தப் பாவங்களையும் செய்யமுடியாது. ஆயினும், முற்பிறப்பில் 'பெரிய பாவங்கள்' செய்த ஒரு ஆத்மா, தற்போது அந்தக் குழந்தையின் உடலில் பிறந்திருக்க வாய்ப்பிருக்கிறதல்லவா? அதை நாம் ஏன் நம்பாதிருக்க வேண்டும்?' என்று யாழ்ப்பாணத் தமிழர்கள் அவரிடம் கேட்டனர். தமிழர்களின் இந்தக் கேள்வி, பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒருவரைப் பார்த்தபோது சீடர்கள் இயேசுவிடம் - இது அவரது சொந்தப் பாவத்தினாலா, அல்லது அவரது பெற்றோரின் பாவத்தினாலா? என்று கேட்டதை நினைவூட்டுகிறது. இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ள யோவான் நற்செய்தியை (9.13) அக்காலத்து யாழ்ப்பாணத்தார்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இந்தச் சம்பவத்தைக் கொண்ட நற்செய்தி அக்காலத்தில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கவில்லை.

ஆன்மா இடப்பெயர்ச்சி பெறுதல் என்ற எண்ணம் பற்றி ஈழத்தமிழர்கள் பல்டேயஸிடம் கேட்ட கேள்வி, மூதாதையர் மதமான இந்துசமயத்தின் முன்வினைப்பயன் (கர்மா) என்ற கருத்தில் அவர்கள் கொண்ட நம்பிக்கையைக் காட்டுகிறது. முந்தைய வாழ்க்கைகளில் மேற்கொள்ளப்பட்ட செயல்கள், ஒருவரது தற்போதைய வாழ்க்கையைப் பாதிக்கும் என்ற கருத்தை எபிரேய வேதாகமத்தின் சில பகுதிகள் பிரதிபலிக்கின்றன. ஒரு குழந்தையின் தற்போதைய உடல் அங்கவீனம், அதன் சொந்தப் பாவங்களுக்கான தண்டனை அல்ல; மாறாக, அதே ஆன்மா முன்னொரு உடலில் செய்த பாவங்களுக்கான விளைவாக இருக்குமென, மறுபிறவி அல்லது ஆத்மாவின் பரிமாற்றம் பற்றிய நம்பிக்கைகள் குறிப்பிடுகின்றன.

யாழ்ப்பாணத்தாரின் இந்தக் கேள்விகளுக்கான பல்டேயஸின் பதில்களில் யூத, கிரேக்க ஞானிகளின் மேற்கோள்களும், கேள்விகளுக்குச் சம்மந்தமில்லாத வேத வசனங்களும் நிரம்பிருந்தன. 'தமிழர்கள் பொதுவாக மிகவும் புத்திசாலித்தனமானவர்கள்' மற்றும் 'பல தீவிரமான கேள்விகளைக்' கேட்கிறவர்கள் என அவரே கூறியிருக்கிறார்.

பல்டேயஸின் மங்கலான பதில்கள் தர்க்கரீதியானவையாக இருக்கவில்லை. விசித்திரமாக, யாழ்ப்பாணத் தமிழர்கள் கிறிஸ்தவத்தின் கோட்பாட்டு அம்சங்களை விட அதன் வரலாற்றுப் பகுதிகளிலேயே கவனம் செலுத்துவதாக அவர் வருந்தினார். ஆனால் உண்மையில், யாழ்ப்பாணத்தார் கேட்ட கேள்விகள், கோட்பாடுகள் இவரைக் குழப்பியது. படைப்பு, உலகத்தின் முடிவு, ஆத்மாவின் நிலைவாழ்வு, நரகம் பற்றிய அவர்களது கேள்விகள் அவரது இறையியல் அறிவைச் சோதித்தன.

## ஒல்லாந்தரின் தமிழும், வேதநூல்களின் மொழிபெயர்ப்பும்

பல்டேயஸின் கிறிஸ்தவத்திருமறை மொழியாக்கம் இரண்டு முன்புரிதல்களால் தீர்மானிக்கப்பட்டவை. ஒன்று, இவர் எதிரியக்கச் சபையின் பிரசங்கி. கிறிஸ்தவ மதத்தைத் தவிர வேறு மதத்தின்மீது அவருக்கு அனுதாபமோ புரிதலோ இருக்கவில்லை. உள்இயல்பாக அவர் கத்தோலிக்க மதத்தை வெறுத்தார். இரண்டாவது, இவர் டச்சு தேசியவாதத்தின் வெளிப்பாடாக இருந்த டச்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் வேலையாள். தன்னுடைய நூலின் முன்னுரையில் இவர் இலங்கைக்கு வந்தது பற்றி தெளிவாகவே எழுதியுள்ளார்: 'புறஜாதிகளின் இரட்சிப்புக்காகவும், நமது ஸ்தாபனத்தின் முன்னேற்றத்திற்காகவும்...'

தமிழ் எழுத்துகளை ஐரோப்பாவில் முதல்முறையாக அறிமுகப்படுத்தியதும் வெளியிட்டதும் பல்டேயஸ் செய்த பெரிய பணி. தனது நினைவுக்குறிப்பில், பல்டேயஸ் தனது தமிழ் ஆய்வினை விரிவாக விளக்கினார். அவர் தமிழின் அடிப்படை இலக்கணத்தை நுணுக்கமாகக் கோடிட்டுக் காட்டினார். அதில் வாய்மொழி இணைப்புகள், பெயர்ச்சொற்கள், பெயர்ச்சொற்களின் வேற்றுமை வடிவங்களின் பயன்பாடு, ஒருமை மற்றும் பன்மை வடிவங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் மற்றும் ரோமானிய ஒலிபெயர்ப்புகளுடன் கூடிய முழுமையான தமிழ் எழுத்துகள் ஆகியவை அடங்கின. தமிழ் எப்படியான மொழி என்று காட்டுவதற்காக பரமண்டல ஜெபம், விசுவாசப் பிரமாணம் ஆகியவற்றைத் தமிழில் எழுதி, அதை ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்து, வரிகளின் நடுவே லத்தீனிலும் கருத்தைச் சொன்னார். உதாரணமாக:

'வானஙகளிலருக எஙகள பிதவே உனனுடைய நாமம எலலாரும தூதி. உனனுடைய இராசசியம வா. வானததில செயயுமாபொல பூமிலும எலலாருஞ செயய.'

இது இயேசு கற்பித்த பரமண்டலப் பிரார்த்தனையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஒன்று வெளிப்படையாக உள்ளது. பல்டேயஸ் தனது மொழிபெயர்ப்புகளில் புள்ளியைப் (*Pulli*) பயன்படுத்தவில்லை. உச்சரிப்பைத் தெளிவுபடுத்துவதற்காக இந்த எழுத்துப்பாணியை 18ஆம் நூற்றாண்டில் கையாண்டவர் வீரமாமுனிவர்.

இவரின் தமிழ்மொழிபெயர்ப்புகள் அவரால் மட்டுமே செய்யப்பட்டவை அல்ல. தமிழுக்கு கிறிஸ்தவப் போதனைகளை மொழிபெயர்க்கும் முயற்சியில், யாழ் வாசியான பிரான்சின் என்பவரது உதவி இவருக்குக் கிடைத்து. இவர் தமிழ் மற்றும் போர்த்துக்கீசிய மொழிகளில் தேர்ந்த புலமைபெற்றவர். பல்டேயஸ் இவரின் ஒத்துழைப்பில், கிறிஸ்தவப் போதனைகளின் அடிப்படைக் கருத்துகளைத் தமிழில் வெளியிட்டார். பிரான்சின் அவர்களது உதவியுடன் தான் பல்டேயஸ் மத்தேயு நற்செய்தியை தமிழில் மொழிபெயர்த்தார். இந்தத் தமிழ்ப்பதிப்பு போர்த்துக்கீசிய மொழியில் இருந்து உருவாக்கப்பட்டது. மூலமொழியான கிரேக்கத்திலிருந்து மொழிபெயர்க்கப்படவில்லை. இவை ஓலைச் சுவடிகளில் மட்டுமே பதியப்பட்டன. 1735ஆம் ஆண்டில்தான் இலங்கையில் அச்சுப்பொறி அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்டேயஸுக்கு இன்னுமொரு தமிழ்ப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ எழுத்து உதவியிருக்கலாம். இன்று கோபன்ஹேகன் ராயல் நூலகத்தில் இருக்கும் ஹென்றிக்கே ஹென்றிக்கேஸ் என்ற போர்த்துக்கீசிய இயேசு சபைக் குரு எழுதிய 'அடியார் வரலாறின்' (*Flos Sanctorum*) பிரதி பல்டேயஸ் வசம் இருந்ததாகத் தெரிகிறது. அப்படியானால் பல்டேயஸின் மொழிபெயர்ப்பு வேலைகளுக்கு இந்தப் பிரதியும் உதவியிருக்கலாம். 'அடியார் வரலாறு' 1586 இல் கொச்சினில் வெளியானது. ஹென்றிக்கேஸ் தூத்துக்குடி மாவட்டத்திலிருக்கும் புன்னக்காயலில் பரதவர்கள் சமூகத்தினர்களிடையே தேவ ஊழியம் செய்தவர்.

பல்டேயஸ் தனது நினைவுக் குறிப்புகளில், யாழ்ப்பாணத்தில் உள்ள தேவாலயங்களில் பத்துக்கட்டளைகள் பெரிய தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டு, ஒரு பலகையில் தொங்கவிடப்பட்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார். அதன் இருபுறமும் கர்த்தருடைய பிரார்த்தனைகளோடு விசுவாச அறிக்கைகளும் இடம்பெற்றிருந்தன. பல்டேயஸ் தாவீதின் சங்கீதங்களை தமிழில் மொழிபெயர்த்து, உள்ளூர் திருச்சபைகளில், சபையோர் எல்லோரும் சேர்ந்துபாடும் கூட்டுப்பாடலை அறிமுகப்படுத்த முனைந்தார். மேலும், அவர் பல பிரசங்கங்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். இது இலங்கையில் டச்சுக் காலனித்துவக் காலத்தில் தமிழில் கிறிஸ்தவப் போதனைகளைப் பரப்பிய ஆரம்ப முயற்சிகளை வெளிப்படுத்துகிறது.

பல்டேயஸின் நூலில் இவரின் பல தமிழ் மொழிபெயர்ப்புகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இந்தக் கட்டுரையின் நோக்கத்திற்காக, பொருத்தமானவை மட்டுமே இங்கே குறிப்பிடப்படுகின்றன. தமிழ்க் கவிதை மரபில் மொழிபெயர்க்கப்பட்ட தாவீதின் சில சங்கீதங்கள், கிறிஸ்துவின் பிறப்பு, இயேசுவின் விருத்தசேதனம், அவரது துன்பங்கள், மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் விண்ணேற்பு, இறுதித் தீர்ப்பின் நாள், லூக்கா 10ஆம் அதிகாரத்தில் பதியப்பட்ட அடுத்திருப்பவர்களுக்கு உதவுவதின் முக்கியத்துவம் குறித்த உரை, மத்தேயு 12:38இல் கூறப்பட்டுள்ளதன்படி - பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் ஓர் அடையாளத்தைக் காண்பிக்கும்படி இயேசுவிடம் கேட்ட கேள்விகள் போன்றவை தமிழில் தரப்பட்டுள்ளன. இவற்றுடன் கிழக்கில் உதித்த ஞானிகளின் வரலாறு போன்றவையும் அடங்கும்.

அவர், இந்த வேதாகமப் பகுதிகள் மட்டுமல்லாமல், பல்வேறு தேவாலய நிகழ்வுகள், பிரார்த்தனைகளில் பயன்படுத்துவதற்காகவும் தமிழ்ப் படைப்புகளை உருவாக்கினார். அவற்றில் காலை மற்றும் மாலை வழிபாடுகள், உணவுக்கு முன்னும் பின்னும் செய்யும் ஜெபங்கள், மழைக்கான அல்லது ஒரு வளமான பருவத்திற்கான மன்றாட்டுகள், எதிரிகளுக்கு எதிரான வெற்றிகளை நினைவுகூரும் நன்றி செலுத்தல்கள், இராணுவத்தின் பாதுகாப்பிற்கான பிரார்த்தனைகள் மற்றும் தண்டனைக்கு முன் குற்றவாளிகளுக்கான மன்றாட்டுகள் ஆகியவை அடங்கும். திருப்பலியில் பங்கேற்பவர்களுக்கான வழிகாட்டுதல்கள், நோயாளிகளுக்கான ஆறுதல்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கான ஞானஸ்நான சூத்திரங்கள் மற்றும் திருமணத்திற்கான பிரார்த்தனைகள் போன்றன இவரால் தமிழ்ப்படுத்தப்பட்டன என்று இவரது நூல் வழியாக அறிகிறோம். ஆனால் இவற்றில் ஒன்றுகூட தற்போதுவரை கிடைக்கவில்லை.

பல்டேயஸின் தமிழ் மொழிபெயர்ப்புகளின் தரத்தை மதிப்பிடுவது எளிதான பணியல்ல. அவரது, மத்தேயு நற்செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதி நம்மிடத்தில் இல்லை. நாம் வாசிக்கக்கூடியவை அவர் டச்சு வாசகர்களுக்கு தமிழை அறிமுகப்படுத்துவதற்காக அவரது நூலில் சேர்த்துள்ள மொழிபெயர்ப்புகளான 'கர்த்தருடைய ஜெபம்' மற்றும் 'அப்போஸ்தலருடைய விசுவாச அறிக்கை' போன்றவையே. அவரது சமகாலத்தில் தமிழ்த்திருமறை மொழிபெயர்ப்புகளின் வசனநடை எடுத்துக்காட்டுகள் அதிகளவில் உருவாகாமை இவரது மொழிபெயர்ப்புகளை ஒப்பிடுவதற்கான மற்றொரு தடையாகும். ஆயினும், பல்டேயஸின் தமிழ் மொழிபெயர்ப்புகளுடன் நேரடியாக ஒப்பிடக்கூடிய அவரது சமகால உரைநடை எழுத்துகள் சில இருந்தன. நான் ஏற்கனவே அறிமுகப்படுத்திய ஹென்றிக்கேஸின் பிரதியான அடிகளார் வரலாறு, மற்றும் அவரின் தம்பிரான் வணக்கம் (1578), கிறிஸ்தியானி வணக்கம் (1579) போன்றவையே அவை. இவை பல்டேயஸின் மொழியாக்கம் போலவே ஆரம்பநிலை, குறைபாடான, பதனிடப்படாத பதிப்புக்களாக இருந்தன. தற்கால மொழிபெயர்ப்புகளுடன், முற்கால வசன அமைப்புகள், சொற்றொடர் இலக்கணங்களை ஒப்பிட்டு, மேல்நோக்காக மதிப்பீடு செய்து, அதன் காலத்துக்குப் புறம்பான பிற்காலப்பண்புகளால் எடை போடுவது, காலக்குழறுபடியாகவே அமையும்.

பல்டேயஸ் இலங்கையைவிட்டுப் புறப்படும் நேரத்தில் தனது மொழிபெயர்ப்பு முற்றிலும் பூர்த்தியாகவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். அவரது தமிழ் முழுமையாகத் துலக்கப்படாவிட்டாலும், தொடக்ககாலத்தில் தமிழில் உரைநடை எழுதப்பட்டதற்கான முயற்சிகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் என்பதுதான் தனிக்கவனிப்பிற்குரியது. அது மொழியை பொதுமக்களுடன் இணைத்ததற்கான ஆரம்ப முயற்சிகளில் ஒன்று. அதற்கு முன்பு, தமிழ் இலக்கியம் பெரும்பாலும் கவிதை நடையிலேயே இருந்தது. மேலும் அது தமிழ் உயர்வர்க்கத்திற்கே பிரதானமாகப் பயனளித்தது.

பல்டேயஸின் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கு நேரடி ஒப்பீட்டாகக் கொள்ளக்கூடிய உரைநடை எழுத்துகள் சமகாலத்தில் இல்லை எனலாம். பிற மொழிபெயர்ப்பாளர்கள் பெற்றிருந்த சில சலுகைகள், அனுகூலங்கள்கூட இவருக்கு இருக்கவில்லை. ஆங்கிலத் திருமறையான 'கிங் ஜேம்ஸ்' பதிப்பில் பணியாற்றியவர்கள் அல்லது பிலிப் டி மெலோ, சீகன்பால்க் போன்ற தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள், பல மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு ஆலோசிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

நேரடி உரை எழுதுவதற்கு முக்கியத்துவம் அளித்த வீரமாமுனிவர் (Costanzo Giuseppe Beschi - 1680-1747) கூட பல்டேயஸின் காலகட்டத்தின் பின்னரே அவரது பணியை ஆரம்பித்தார். இந்தச் சூழ்நிலையில்தான் பல்டேயஸின் பங்கையும்

மதிக்க வேண்டும். அது ‘ஓர் இந்திய மொழியில் ஐரோப்பியரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட முதல் படைப்பு எனப் போற்றப்படுவதற்குப் பதிலாக, பிற்காலத்தில் தமிழில் உரைநடை எழுதப்படுவதற்கு முன்னோடியாக அமைந்த முதல் முயற்சியாகக்’ கொள்ளப்பட வேண்டும். ஆறுமுக நாவலரின் தமிழ் உரைநடை உருவாக இன்னும் இருநூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.

## சில அவதானிப்புகள்

ஒல்லாந்தர்கள் 1637ஆம் ஆண்டில்தான் முதல்முதலாக முழுமையான வேதாகமத்தைத் தங்கள் மொழியில் பெற்றனர். ச்டேடன்வெர்டாலிங் (*Statenvertaling*) என்ற இந்த டச்சு அரசின் மொழியாக்கம் இன்று ஆங்கில ‘ஜேம்ஸ் இராசாவின் பதிப்பு’ (*King James Version*) மற்றும் கிறிஸ்தவத் தமிழர்கள் பாவிக்கும் ‘பவர் பதிப்பு’ (*Bower Version*) ஆகியவற்றிற்கு ஒப்ப தெய்வீக ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

பல்டேயஸிற்கும் டச்சுக் கம்பெனி அதிகாரிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அவரது மொழிபெயர்ப்பு வேலைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டியாயிற்று. மதக் கல்வி மற்றும் உள்ளூரவர்களை மதமாற்றம் செய்யும் பணிக்காக கூடுதல் நிதி தேவை என அவர் கேட்டுக்கொண்டார். டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி இதற்குத் தயங்கியது. பதிலாக, பள்ளி விதிகளை அமலாக்கம் செய்யும்போது விதிக்கப்படும் அபராதங்களிலிருந்து இந்தச் செலவுகள் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தது. பள்ளிகளின் கண்காணிப்பை மதபோதகர்களுக்கு மாற்றாக பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கே வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆட்சியாளர்களுக்கும் இவருக்கும் இடையிலான உறவு மேலும் விரிசலடையத் தொடங்கியது.

ஆளுநர், அவரை நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம்சாட்ட முயல்வதாக அவர் உணர்ந்தார். அரசாணைகளை தேவாலயங்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்பதால், தனது மொழிபெயர்ப்புப் பணிகளைத் தொடர்வதை பயனற்றதாகக் கருதி, 1666ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேற முடிவு செய்தார்.

அரசியல்வாதிகளின் வாழ்க்கை தோல்வியில்தான் முடியும் எனக் கூறப்படுவது, காலனியகால கிறிஸ்தவ மத பரப்பாளர்களுக்கும் பொருந்தும். இந்து அல்லது பௌத்தம் போன்று ஆழமாகக் கால்பதித்த மதங்களும், கன்பூசியசம் போன்ற தத்துவங்களும் நிலைத்திருந்த நாடுகளில், கிறிஸ்தவ மதப்பரப்பல் முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியிலேயே முடிந்தன. கூலியாட்கள் அதிகமாக இருந்தாலும், அறுவடை குறைந்ததாய் இருந்தது. இவரால் மதம் மாறியவர்கள் இறுதியில் அவர்களது பாரம்பரியச் சமயத்திற்கோ அல்லது இடையில் சேர்ந்த கத்தோலிக்கத்திற்கோ திரும்பிச் சென்றனர்.

பல்டேயஸ் இரண்டு காரணங்களுக்காக நினைவில் வைக்கப்பட வேண்டியவர். முதன்முதலில், கிறிஸ்தவத் திருமறையை, குறிப்பாக மத்தேயு நற்செய்தியை, தமிழ் மொழியில் மொழிபெயர்த்த நபராக அவர் கருதப்படுகிறார். அதன்மூலம், கத்தோலிக்கர்களை எதிரியக்கத் திருச்சபைக்கு மாற்றியதில் அவர் எடுத்துக்கொண்ட பங்கும் குறிப்பிடத்தக்கது. அச்சுவேலியில் வாழ்ந்த 46 வயதுடைய பெயரிடப்படாத தமிழ்ப் பிராமணர், பல்டேயஸ் மதம் மாற்றியவர்களில் ஒருவர். இவர் ‘நமது இரட்சகரின் வாழ்க்கையும் பாடுகளும்’ என்ற ஒரு நூலை எழுதியதாகக் கூறப்படுகிறது. பல்டேயஸ் இதைப் பெருமையுடன் நினைவுகூர்ந்ததோடு, அந்தநூல் உன்னதக் கவிதை முறையில் எழுதப்பட்டுள்ளதாகவும் பாராட்டினார். இந்த 17ஆம் நூற்றாண்டு நூல், ‘வரலாற்று இயேசுவைப்’ பற்றிய முதல் நூல்களில் ஒன்றாக இருக்கக்கூடும். மேற்கில் ‘வரலாற்று இயேசுவைப்’ பற்றிய தீவிரமான தேடல், 1770களில் சாமுவேல் ரைமாரஸ் (*Samuel Reimarus*) எழுதிய ‘*Apology Or Defense For The Rational Worshippers Of God, On The Intention Of Jesus And His Disciples*’ என்ற நூலின் வெளியீட்டுடன் தொடங்கியது. ஆனால், யாழ்ப்பாணத் தமிழர் எழுதிய அந்த வரலாற்றுச் சுவடிகள் தற்போதுவரை கிடைக்கவில்லை.

பல்டேயஸின் இப்புத்தகம், ‘இந்தப் பாவித் தமிழ் மக்கள் முற்றிலும் இருளில் சிக்கியுள்ள பிற சமயவாசிகள்; ஆனால் இந்தப் பரிதாபகர்கள் கடவுளின் கருணையினால் உரிய நேரத்தில் நற்செய்தியின் உண்மையான அறிவுக்குக் கொண்டுவரப்படுவார்கள்’ என்ற, எல்லாக் காலனிய மத பரப்பாளர்களுக்குமுரிய பொதுவான பரவச நம்பிக்கையுடன் முடிகிறது. ஆனால், இந்த மதத்தில் ஈழத்தமிழர்களில் பெரும்பங்கினர் நாட்டம் காட்டவில்லை.

# யாழ்ப்பாணத்தின் நிலவியல், நில அமைப்பியல், ஆதிக் குடியிருப்புகள்

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் ‘பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்’ எனும் இக்கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பவற்றின் பரந்த காட்சிப் பதிவாக விளங்கும்.


சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார்.




பண்டைய யாழ்ப்பாணம் நாகநாடு (மணிமேகலை), நாகதீவு (வல்லிபுரப் பொற்சாசனம்), நாகதீப (மகாவம்சம்), நாகதீபோய் (தொலமி) ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. பண்டைய யாழ்ப்பாணத்தில் நாகர்கள் வாழ்ந்தமையால் இப்பெயர்கள் யாவும் ‘நாக’ என ஆரம்பிக்கின்றன. அன்றைய நாகநாடு யாழ்ப்பாணக் குடாநாடு, அதற்கு மேற்கேயுள்ள சிறுதீவுகள், வடக்கிலுள்ள இலங்கையின் தாய் நிலத்தின் மூன்றில் ஒரு பகுதி ஆகிய நிலங்களைக் கொண்டிருந்தது.

மகாவில்லாச்சியின் (மதவாச்சி) மேற்குக் கரையிலிருந்த அரிப்பிலிருந்து மகாவில்லாச்சியூடாக நாகபொக்கணைவரையும் ஒரு கோடு வரைந்து, அக்கோட்டை திரிகூடத்திற்குத் (திருகோணமலை) தெற்கே மகாவலி கங்கையின் தெற்குக்கிளை கடலில் சங்கமிக்கும் துறைவரை வரைந்தால் அக்கோட்டிற்கு வடக்கேயுள்ள பகுதி அனைத்தும் நாகதீப நாட்டின் நிலப்பகுதி ஆகும் (Parker, H. 1909: 14; Geiger, W. 1960: 108). இந்நிலப்பகுதி சூளவம்சம் போன்ற நூல்களில் உத்தரதேச (வடநாடு) எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில காலங்களில் நாகதீபத்தின் எல்லைக் கோட்டிற்கு வெளியே மேற்குக் கடற்கரையிலிருந்த குதிரைமலை, சிலாபம் ஆகிய பகுதிகள் வடஇலங்கை நாகர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கின்றன.

இடைக்காலத்தில் இன்றைய யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் தாய் நிலத்திலிருந்து கடலால் பிரிந்த வேறான தீவாக இருந்து வந்தது. காலப்போக்கில் அதனிடையே மிகச் சமீபமாக இருந்த சுண்டிக்குளத்தில் படிந்த மணற்செறிவினால் இரு தீவுகளும் ஒன்றாகி பெரிய இலங்கைத் தீவாக உருவெடுத்தன.

யாழ்ப்பாணக் குடாநாடு இன்றைய இலங்கைத் தீவின் வடக்கில் அமைந்துள்ளது. இது தீர்க்கரேகையின் (Longitude) 79°5480°2’e கோட்டில், அட்சரேகை (Latitude) 9°309°50n கோட்டில் 1062 சதுர கி.மீ. பரப்பைக் கொண்டு அமைந்திருக்கிறது. இக்குடாநாடு அதன் அகன்ற பகுதியில் 65 கி.மீ. நீளமும், 23 முதல் 6.5 கி.மீ. அகலமும் கொண்டது. இக்குடாவின் வடக்கிலும் தெற்கிலும் பாக்கு நீரிணையும், கிழக்கே வங்காள விரிகுடாவின் தென்கடலும், தெற்கே




**நாகநாட்டின் தென் எல்லையைக் காட்டும் நிலப்படம்**

Image Source - Map after Parker, H. 1909: p. 14: Geiger, W. 1960: p. 108

யாழ்ப்பாணக் கடல்நீரேரியும் (Jaffna Lagoon) உள்ளன. இக்குடாநாட்டின் மேற்கே பாக்கு நீரிணையில் சிறிய தீவுகளான காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு, நெடுந்தீவு ஆகியன அமைந்திருக்கின்றன.

தொல்லியல் ஆய்வுகள் தரும் தகவல்களின்படி நாகநாட்டின் உத்தரதேசப் பகுதி தென் ஆசியாவிற்கு நவீன மனித இனங்கள் வர ஆரம்பித்த காலத்திலிருந்தே அவர்களின் குடியேற்றங்களைக் கொண்டிருக்கிறது. பண்டைய யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொ.யு.மு.1 1300 ஆண்டுக் காலத்திலிருந்து பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களின் குடியேற்றங்கள் காணப்படுகின்றன. இக்குடிமக்கள் விட்டுச்சென்ற பாவனைப் பொருட்களின் தொல்லியல் எச்சங்களும், அவற்றின் காலக்கணிப்புகளும் இப்பிரதேசங்களில்

அவர்களின் பரந்த குடியேற்றங்களுக்குச் சான்றாக அமைகின்றன.

பாக்கு நீரிணைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் நடுவே தென்கிழக்காசிய வர்த்தகக் கடற்பாதையான தீர்க்கரேகை பத்தாவது பாகைக்கு அருகே நாகநாடு அமைந்துள்ளபடியினால் அதன் மூன்று திசைகளிலுமிருந்த துறைகளின் வழியாக இந்தியாவிலிருந்தும், மற்றைய நாடுகளிலிருந்தும் வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் அன்றைய நாகநாட்டை அடைந்த வண்ணம் இருந்தன. இந்தியாவிலிருந்து வந்த பெருங்கற் பண்பாடும், இந்து - பௌத்த மதங்களும் நாகநாட்டின் துறைகளின் ஊடாகவே முதலில் இலங்கையை வந்தடைந்தன.




**பனிப்படிவு யுகக் காலத்தில் காணப்பட்ட உலகம்:**
**பனிப்படிவு யுகத்தின்போது பூமியின் மத்திய பகுதியிலிருந்த நிலங்களில் மட்டுமே மனிதர்கள் வசிக்கக்கூடியதாக இருந்தது. வடக்குப் பகுதியிலிருந்த நிலங்களும், தென் பகுதியிலிருந்த அன்டாட்டிக்கா கண்டமும், கடல்களும், பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தன. பனிப்பாளங்கள் 2 கிலோமீட்டர் உயரத்திற்குப் படிந்திருந்தன. பிரித்தானியா முழுவதும் பனிப்பாளங்களின் கீழே அமிழ்ந்திருந்தது. கடல் மட்டம் 135 மீட்டருக்குக் கீழே இருந்தமையால் கண்டங்களின் கரைகள் இன்றிருப்பதைவிட 200-300 கி.மீட்டர் வரை பரந்திருந்தன. இலங்கை தென்னிந்தியாவின் நிலப்பகுதியாக இருந்தது. கிழக்காசிய நாடுகள் நிலத்தொடர்பால் ஒன்றாகிவிட்டிருந்தன.**

## பனிப்படிவு யுகங்கள் (Ice Ages)

நமது பூமியில் ஏற்படும் தட்பவெப்ப மாற்றங்களால் பூமி உருவான காலத்திலிருந்து இதுவரை நான்கு பனிக் கல்பகாலங்கள் (Ice Epochs) நடைபெற்றிருக்கின்றன. இறுதியான பிளிஸ்ரொசீன் (Pleistocene Ice Epoch) கல்பத்தில் மட்டும் 17 பனிப்படிவு யுகங்களும் (பனியுகங்களும்) 17 பனியிடைக் காலங்களும் இடம்பெற்றன. கடந்த 12,000 ஆண்டுகளாக நாம் 17ஆவது பனியிடைக்காலத்தில் (Interglacial Period) வாழ்ந்துகொண்டிருக்கிறோம் (Peter Clark 2002).

பனிப்படிவு யுகங்களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமியின் மேற்பாகம் குளிர்ந்துபோய் வட, தென் பூகோளப் பகுதிகளில் பல உயரத்திற்கு பனி உறைந்து பனிமலைகளாக இருந்தன. பூமியின் மத்திய பகுதியை அண்டிய நாடுகளைத்தவிர மற்றைய கண்டங்களில் ஆறுகள் உறைந்து நிலங்களில் பனிக்கட்டி பாளம்பாளமாகப் படர்ந்திருந்தது. கடல்நீர் ஆவியாக மேலே போய் பின்னர் மழையாக வந்தபோது, பெரும்பாலான நிலங்களில் பனிக்கட்டிகளாக உறைந்து போனதனால், கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 130 மீட்டர் முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்தது.

இற்றைக்கு முன் (இ.மு.) 115,000 ஆண்டு முதல் இ.மு. 12,000 ஆண்டுவரை நீடித்த கடைசிப் பனியுக காலத்தில் கடல் மட்டம் இன்றிருப்பதை விட 130 முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்த காலப்பகுதியில் இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்ட நிலப்பகுதியாக இருந்தது. இந்நிலத்தின் நீள - அகலப் பரிமாணங்களும் இன்றிருப்பதைவிடப் பெரியதாகவே இருந்தன. இந்நிலம் 'இந்தியஇலங்கை' என்ற ஒரே நிலமாகும் (Peter Clark 2002, Rohling 1998).

இற்றைக்கு 19,000 ஆண்களுக்கு முன்னர் கடைசிப் பனியுகம் உச்சநிலையை அடைந்திருந்த சமயம் கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 135 மீட்டர் தாழ்வாக இருந்த காலப்பகுதியில் உலகம் முழுவதிலும் நாடுகளெல்லாம் இன்றிருப்பதைக் காட்டிலும் மிகவும் பெரியனவாக இருந்தன. இந்தியக் கடலோரம் இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றிவர பல கி.மீ. தொலைவிற்கு அகன்றிருந்தது.

இ.மு. 12,000 ஆண்டு முதலாக கடைசிப் பனியுகம் முடிவிற்கு வந்த காலத்திலிருந்து உலகைச் சூழ்ந்திருந்த பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் சிறிது சிறிதாக மேலெழுந்த போது இந்தியஇலங்கையின் கரையோர நிலப்பகுதிகள் சிறிது சிறிதாக கடலினுள் அமிழ்ந்து போயின. இ.மு. 7,000 காலப்பகுதியில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை, இந்தியாவிலிருந்து தனித்தீவாகப் பிரிந்து போயிற்று. அதுவரை காலமும் இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இருந்த நிலத் தொடர்பால் மக்களின் நடமாட்டம்

தொடர்ந்து நடைபெற்றிருக்கும். அடுத்த ஆயிரம் ஆண்டுகாலப் பகுதியில் - பனிப்படலங்கள் உருகி ஆறுகள் வழியாகப் பெருகி வரும் நீரினாலும், மழையினாலும் ஏற்படும் கடல் பெருக்கமும், கடல்நீர் ஆவியாகப்போவதால் ஏற்படும் கடல்மட்டக் குறுக்கமும் சமநிலை அடைந்த நேரத்தில் - கடல் மட்டம் சீர்நிலை அடைந்தது.

## யாழ்ப்பாணத்தின் அமைவிடம் (Jaffna Topography)

பனியுக காலத்தில், இன்றைய கடல் மட்டம் இப்போது இருப்பதைவிட 135-130 மீட்டர் தாழ்வாக இருந்த காலத்தில் அன்றைய யாழ்ப்பாண நிலம் இந்தியத் துணைக்கண்டத்துடனும், இலங்கையின் பெருநிலப்பரப்புடனும் இணைந்திருந்தது மட்டுமல்லாது, இன்று அதன் மேற்கே காணப்படும் தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய பெருநிலமாகவும் இருந்திருக்கிறது. பனியுகம் முடிந்து கடல் மட்டம் மேலெழுந்தபோது பள்ளமாக இருந்த நிலப்பகுதிகள் அனைத்தும் கடலினுள் அமிழ்ந்துபோக எஞ்சிய நிலப்பகுதிகள் அனைத்தும் இன்று அக்கடலினுள் துருத்திக்கொண்டிருக்கும் தீவுகளாக உள்ளன. அந்தவகையில் இன்றைய யாழ்ப்பாணக் குடாநாட்டை மூன்று தீவுகள் இணைந்த ஒரு நாடாகக் கொள்ளலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடிவமைப்பைத் தீர்மானிப்பது அதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கும் கடற் கால்வாயாகும். பனியுகத்தின் இறுதியில் கடல் மட்டம் உலகெங்கும் மேலெழுந்த சமயம் பள்ளமாக இருந்த நிலப்பகுதியில் கடல்நீர் புகுந்ததால், இன்று கால்வாயாகக் காட்சியளிக்கிறது. வடக்கே தொண்டைமானாறில் கடலிலிருந்து உட்புகும் இக்கால்வாயின் முக்கிய பகுதி குடாநாட்டை இரு பாதியாகப் பிளந்து தெற்கே அரியாலையில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் (Jaffna Lagoon) சங்கமிக்கிறது. இக்கால்வாயின் மிக ஒடுக்கமான பகுதிகள் தொண்டைமானாறுக் கடலுடன் சேரும் இடத்திலும் நாவற்குழியிலும் காணப்படுகின்றன. நாவற்குழியிலுள்ள தொடர்வண்டி, வீதிப் பாலங்கள் இக்கால்வாயின் மேலாகச் செல்கின்றன. தொண்டைமானாற்றிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் கிளைக் கால்வாய், யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பகுதியை இரு கூறாகப் பிரித்துக்கொண்டு கிழக்கே வங்காளக் கடலின் தென்பகுதியில் இணைகிறது.

கீரிமலையிலிருந்து தெல்லிப்பழைவரை கடல் மட்டத்திலிருந்து 10-12 மீட்டர் உயரமாக உள்ள யாழ்ப்பாண நிலப்பரப்பு மிகுதிக் குடாநாட்டில் தட்டையாக உள்ளது. குடாநாட்டின் வடகிழக்கிலும், தெற்கிலும் உள்ள மணற்கும்பிகள் கடல் மட்டத்திலிருந்து 15 மீட்டர் உயரம் வரை காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்தரை சிவப்பு, மண்ணிறச்சிவப்பு, மண்ணிறக் களிமண், மணற்படிவு ஆகிய தோற்றங்களைக் கொண்டிருக்கிறது. மேற்தரை அமைப்பைக்கொண்டு குடாநாட்டை இரு விவசாயபொருளியல் பகுதிகளாகப் பிரிக்கலாம் (AgroEcological Zones). குடாநாட்டின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் காணப்படும் சிவந்த செம்பாட்டு மண் இரும்புத்தாதைக் கொண்டு நெல், தாவரப் பயிர்கள், புகையிலை, பழ மரங்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கு உகந்த பிராந்தியமாக அமைந்திருக்கிறது. தெற்கே கொடிகாமத்திற்கும் ஆனையிறவுக்குமிடையே உள்ள தட்டையான மணல் நிலம் ஏதும் விளைவிக்க முடியாத தரிசு நிலமாக உள்ளது. இந்த இரு பிராந்தியங்களின் தரைகளிலும் பனையும் தென்னையும் வளர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஆறுகள் ஏதுமில்லை. ஆதலால் வீட்டுப் பாவனைக்கும் விவசாயத்திற்கும் உகந்த மேலக நீர்நிலைகள் அருகியே உள்ளன. ஆனாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குளங்களும், கந்தரோடையிலும் நந்தாவிலிலும் உள்ள இரு பெருங் குளங்களும், பல்லாயிரம் கிணறுகளும் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்கின்றன. மேல்நிலத்தின் கீழே உள்ள சுண்ணாம்புக் கற்பாறையில் தோண்டப்படும் கிணறுகள் வடிகட்டிய தெளிந்த தண்ணீரை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

## கந்தரோடையும் சூழல் மையங்களும்

இன்றைய கந்தரோடை, புராதன வட இலங்கைத் துறைமுகங்களான சம்புத்துறையிலிருந்து (Jambukola) 5 கி.மீ. தூரத்திலும், காங்கேசன்துறையிலிருந்து (பண்டைய காயாத்துறை) 6 கி.மீ. தூரத்திலும் உள்ள ஆரவாரமற்ற ஓர் எளிய கிராமம். கடல் மட்டத்திலிருந்து 2.6 மீட்டர் உயரத்தில் அமைந்த இக்கிராமம் இலக்கியச் சான்றுகளால் பண்டைய நாகநாட்டின் தலைநகரமாக அறியப்பட்டு தொல்லியல் ஆய்வுகளால் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலை இப்பிராந்தியத்தின் தலைநகரை கதிரமலை என்ற

பெயரால் குறிப்பிடுகிறது. இன்றைய சுன்னாகம் சந்தைக்கும் கந்தரோடைக்கும் இடையிலுள்ள மேட்டு நிலம் ‘கதிரமலை’ என்ற பெயரால் இன்றைக்கும் அழைக்கப்படுகிறது. சுன்னாகம் தொடர்வண்டி நிலையத்திற்கு (புகையிரத) அருகாமையிலிருக்கும் சிவன்கோயில் ‘கதிரமலைச் சிவன்கோயில்’ என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசத்தை சிங்களமொழியில் குறிப்பிடும் ‘கதுறுகொட’ என்ற சொற்பதம் ‘கதிரமலை’ என்ற சொல்லின் நேரடியான சிங்கள மொழிபெயர்ப்பாகும். ‘கந்தரோடை’ என்ற சொற்பதம் எப்போது, எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. ‘கந்தரின் ஓடை’ என்ற கருத்து சரியானதாகத் தெரியவில்லை. ‘கந்தக் கோட்டை’ என்ற பெயர் காலப்போக்கில் மருவி ‘கந்தரோடை’ ஆனது என்கிறார் வரலாற்றாசிரியர் சி.எஸ். நவரத்தினம். எப்படியிருந்தாலும் இந்த ஆதிநகரை ‘கந்தரோடை’ என்றே குறிப்பிடுவோம்.

கந்தரோடைக் கிராமம், கந்தரோடைக் குளம் என அழைக்கப்படும் ஏரியைக் கொண்ட பரந்த நெல்வயல்களின் அருகேயுள்ள உயரமான மேட்டு நிலத்தில் அமைந்திருக்கிறது. அக்கிராமத்தினூடே செல்லும் வழுக்கை ஆறு என்ற பெயர் கொண்ட கால்வாய் அருகிலுள்ள உடுவில் கிராமத்தின் வழியாகச் சென்று, பின்னர் மேற்கு நோக்கித் திரும்பி ஆனைக்கோட்டை வழியாக மேற்கே நாவாந்துறை அருகே யாழ்ப்பாணக் கடலை அடைகிறது. மக்களின் மரபு ஞாபகங்களின்படி அக்காலத்தில் இந்த வழுக்கை ஆறு ஊடாக, நாவாந்துறையிலிருந்து சிறிய படகுகள், கடல் மூலமாக வரும் பொருட்களை கந்தரோடைக்கும், அப்பாலும் எடுத்துச்சென்றன. இன்று இந்த ‘ஆறு’ மழைநீரை யாழ்ப்பாணத்தின் மேற்குக் கடல்வரை எடுத்துச் செல்லும் கால்வாயாகச் செயற்படுகிறது.

இற்றைக்கு *3500* ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் கந்தரோடை திராவிடரின் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய நடுவமாகவும், தென்னாசியக் கடல் வர்த்தக வலைப்பின்னலில் முக்கிய பங்கெடுத்துக்கொண்ட பெரும்பத மையமாகவும் விளங்கியிருக்கிறது. அது மட்டுமல்லாது அன்றைய தென்னிந்திய நாடுகளான ஆந்திரப் பிரதேசம், தமிழகம், கேரளநாடு ஆகியவற்றுடன் இணைந்து இந்துமத - பௌத்தமத நடவடிக்கைகளின் மையமாகவும்



இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றைய காலநிலவரை அதனுள் காட்டப்பட்டிருக்கிறது. குமரிமுனையின் கீழ் நீண்டுகொண்டிருப்பது அன்றைய குமரிநாடு.
நன்றி: டர்ஹாம் பல்கலைக்கழக புவியியல் துறை.

பரிணமித்திருக்கிறது. கந்தரோடையைத் தவிர ஆனைக்கோட்டை, சிங்கைப் பட்டினம், கீரிமலை, யம்புகோளப் பட்டினம், வல்லிபுரம், நாகர்கோயில் ஆகியன பொதுயுகத்திற்கு முற்பட்ட காலத்தைய நகரங்களாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிங்கைத்துறை (பொங்கொலி நீர்ச் சிங்கை நகர்), யம்புத்துறை, காயாத்துறை (இன்றைய காங்கேசன் துறை, அன்று புத்தகாயாவிற்குச் செல்லும் பௌத்த யாத்திரிகர்கள் கப்பலெடுத்துச் சென்ற துறையாதலால் பெற்ற பெயர்), நாவாந்துறை ஆகியன தென்னாசிய இந்துமாகடல் வர்த்தகத்தில் பங்கெடுத்த பெருந்துறைகளாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள தீவுகளான காரைநகர், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்பன பெருங்கற் பண்பாட்டைப் பேணிய பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்கள். யாழ்ப்பாணக் குடாவிலிருந்து இத்தீவுகளைப் பிரித்த யாழ்ப்பாணக் கடல்நீரேரி இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் பரிமாறலுக்கும், அக்கால மக்களின் பொருளாதாரப் படிநிலை வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்கியிருக்கிறது.

குடாநாட்டுக்கு வெளியே உள்ள இலங்கையின் பெருநிலப்பகுதியின் மூன்றில் ஒரு பங்கு நாகநாட்டின் (*Ngadipa*) ஆட்சிப் பரப்பின் கீழ் இருந்தது (*Geiger, W. 1960: 108*). சில காலங்களில்

மேற்குக் கடற்கரையிலிருந்த குதிரைமலையும், சிலாபமும் நாகநாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. அப்பரப்பிலிருந்த பூநகர் (இன்றைய பூநகரி), மாந்தை, திரிகூடம் (திருகோணமலை) என்பன அக்காலத் துறைமுக நகரங்களாகும். பெருங்கற் பண்பாட்டைப் பேணிய இப்பட்டினங்களில் மாந்தையும், திரிகூடமும் வரலாற்றுப் பெருமைமிக்க மிகப்பழமையான நகரங்கள். பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் மாந்தை பெரியதொரு வர்த்தகச் சந்தையைக் கொண்டிருந்தது. அத்துறையினூடாக இடம்பெயர்ந்த மக்களின் பெரியதொரு குடியிருப்பு பொம்பரிப்பில் உருவானது.

நாகநாட்டின் நிலப்பரப்பு அதன் கடற்கரை நகரங்களில் மூன்று புராதன சிவதலங்களைக் கொண்டிருந்தது. வடக்கே கீரிமலையிலிருந்த திருத்தாம்பலேஸ்வரம் (நகுலேஸ்வரம்), கிழக்கே திரிகூட மலைக்குன்றிலிருந்த திருக்கோணேஸ்வரம், மேற்கே மாந்தையிலிருந்த (மாதோட்டம்) திருக்கேதீஸ்வரம் என்பவையே அவையாகும்.

## நில அமைப்பியல்

யாழ்ப்பாணக் குடாநாடும், இலங்கையின் பெருநிலப்பரப்பின் வட பகுதியும் மூன்று வகையான கற்பாறை அமைப்புகளின் மேல் அமர்ந்திருக்கின்றன. அவையாவன: 1. தொல்லூழிக்கு முற்பட்ட அடித்தளப் பாறை (PrePalaeozoic Basement Rocks), 2. மன்னார் மணற்பாறை (The Mannar Sandstone), 3. யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை (The Jaffna Limestone). இப்பாறை அமைப்புகளை மேல்நில மண்படுகை மூடியிருக்கிறது. வெவ்வேறு கனதிகளில் உள்ள இந்த மண் அடுக்கு இடத்திற்கு இடம் களிமண்ணாகவோ, இரும்பு கலந்த வண்டல் கலந்த கருமண்ணாகவோ அல்லது வெறும் மண்ணிறமான மண்ணாகவோ செம்மண்ணாகவோ, காட்சி தருகிறது.

தொல்லூழிக்கு முற்பட்ட அடித்தளப் பாறை (PrePalaeozoic Basement Rock) என்பது மிகக் கனதியான, பளிங்கு இயல்புடைய, தீச்சார்ந்த, இயன்மாறுபாடு கொண்ட (Massive, Crystalline, Igneous And Metamorphic) பாறைத்தளம் என வருணிக்கப்படுகிறது. நிலத்திற்குக் கீழே 240 மீட்டர் ஆழத்தில் இந்த அடித்தளப்பாறை காணப்படுகிறது. இதற்கு மேலாக குவாட்சைட் கற்கள் கொண்ட அடுக்கு, அல்லது மன்னார் மணற்பாறை அடுக்கு, அல்லது யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை அடுக்கு என்பனவும், அதற்கு மேலாக மண் அடுக்குகளும் காணப்படுகின்றன.

இற்றைக்கு 35 மில்லியன் (350 லட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்ட மீயோசீன் யுகத்தில் (Miocene Age) புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடுவரை தென்னிந்தியப் பகுதியோடு இணைந்த நிலம் ஆதிப் பனியுகங்களின் இடைக்காலத்தில் கடலினுள் அமிழ்ந்து கிடந்ததனால் வளிமண்டலத்திலிருந்த கரியமிலவாயு கடல்நீரில் கலந்து சுண்ணாம்புக்காபனேற்றாக மாற்றமடைந்தது. கடலில் வாழ்ந்த உயிரினங்கள் இதை உட்கொண்டு இறந்த பின்னர், அவை அடியில் சுண்ணாம்புக் கல்லாகப் படிந்தன. காலப்போக்கில் அதன் மேல் படிப்படியாகப் படிந்த கற்களின் பளுவினால் அது இறுக்கமடைந்து, பின்னர் பூமியின் நடுப்பகுதி வெப்பத்தினால் இப்பகுதி மேலெழுந்து கெட்டியான பூமியின் மேற்பகுதியை அடைந்திருக்கிறது (Mathanakaran, R. 1987: 189).

மன்னார் மணற்பாறை (The Mannar Sandstone) சாம்பல் நிறமாகவும், மேற்பகுதி பருவெட்டான, முரட்டுத்தனமான குருணிகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. பளையில் மேற்கொள்ளப்பட்ட துளைக்கருவி ஆய்வு இப்பாறையின் ஆழத்தை 130 மீட்டர் வரையும் எடுத்துச் சென்றது. பளையில் உள்ள பாறைக்கல்லின் இடையிடையே களிமண்ணும், வண்டல் சேற்றுப் படிவும் காணப்பட்டன. மன்னாரில் எண்ணெய் தேடலுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த மணற்பாறையினிடையே கடல் களிக்கல் தகடுகளும் (Marine Shales), மணலும், களிமண் கற்களும் (Claystones) காணப்பட்டன (Mathanakaran, R. 1987: 190).

யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை (The Jaffna Limestone) வெளிறிய மஞ்சள் நிறமாகவோ, அல்லது மெல்லிய மண்ணிறமாகவோ, அல்லது வெண்ணிறமான பளிங்கு இயல்புடைய படிகக் கல்லாகவோ காட்சிதரும். இக்கல்லின் இறுக்கமான பகுதி பளிங்கிலாலான மியோசீன் யுகத்திற்குரிய (Miocene Epoch: 235.3 Million Years Ago) மூன்றாம் ஊழிப் பாறையாகும் (Cooray, 1950: 135). இப்பாறை ஏறக்குறைய 90 மீட்டர் கனதி கொண்டது. இப்பாறைக்கு மேலாக பிளிஸ்ரொஸீன் காலத்தைய மண் அடுக்கு காணப்படும். சில இடங்களில் பிளிஸ்ரொஸீன் காலத்தைய மணல் அல்லது பவளப்பாறையினால் (Coral Reef) மூடப்பட்டிருக்கும். இம்மண் அடுக்கு

அல்லது மணல் அடுக்கு ஒரு மீட்டரிலிருந்து பதினைந்து மீட்டர்வரை ஆழம் கொண்டதாக உள்ளது (Ground Water Survey In Jaffna 1968; Rajes waran, S.T.B. 2008).

இச்சுண்ணாம்புக் கற்பாறையில் பல ஊழிக்காலங்களாக ஏற்பட்ட மேலும் கீழுமான நில அசைவுகளால் சில இடங்களில் மடிப்புகள் (Anticlines And Synclines) ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் வெட்டப்படும் சுண்ணாம்புக்கற்களில் இம்மடிப்புகள் விழுந்திருப்பதைக் காணலாம். இச்சுண்ணாம்புக் கற்பாறை வெளியில் தெரியும் இடங்களில் கீரிமலை, கீரிமலையை அண்டிய காங்கேசன்துறை என்பன முக்கியமான இடங்கள். கீரிமலையில் காணப்படும் சுண்ணாம்புக்கற்பாறை 30 அடி உயரம் உள்ளது. கீரிமலையிலிருந்து கிழக்கே காங்சேகன்துறை வரையிலான கடற்கரை இப்பாறை நிலமாகும். ஆங்காங்கே கடல் அரிப்பினால் ஏற்பட்ட சுவடுகள் இப்பாறைகளில் காணப்படுகின்றன (Mathanakaran, R. 1987: 191).

யாழ்ப்பாணத்தில் காணப்படும் மணற்பரப்பு நான்கு தெளிவான நிலப்பரப்புகளைக் கொண்டிருக்கிறது. இம்மணற்பரப்புகள் வடமேற்கிலுள்ள சுண்ணாம்புப்பாறை நிலத்தை அடுத்து வடக்குமேற்காகவும், தெற்குமேற்காகவும் பரந்திருக்கின்றன. இம்மணற்பரப்பிற்கு அடியிலே சுண்ணாம்புப்பாறை அடுக்குக் காணப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக கடல் நீரோட்டமும் அலைகளும் கொண்டுவரும் மணற் திட்டுகளை வடகிழக்கு வாடையும், தென்மேற்குச் சோழகக் காற்றுகளும் பல மைல் தொலைவிற்குப் பரந்திருக்க வைத்திருக்கிறது. இம்மணற்பரப்புகள் பெரும்பாலும் விளைவற்ற, தாவரவளர்ச்சி ஏதுமற்ற, நிலையற்ற நிலங்களாக இருப்பதனால் நகர்ந்து செல்லும் மணற்கும்பிகளாகக் காணப்படுகின்றன. மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை குடாநாட்டின் கிழக்குக் கரையிலிருந்து அடிக்கும் வடகிழக்குப் பருவக்காற்று, கடல் அலைகளைக் கொண்டு, நீரடி மணலை (Spits) கடலின் அடியே நகரச் செய்கிறது. இலங்கையின் பெருந்தீவிற்கு வடக்கே யாழ்ப்பாணத் தடாகக் கடலினால் (Jaffna Lagoon) தனித்தீவாக பிரிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத் தீவகத்தை, சுண்டிக்குளத்தில் படிந்த மணல் அடுக்கு இலங்கைப் பெருந்தீவினோடு இணைத்து வைத்தது (Jeyasingham, W.L.1951; Mathanakaran, R.1987).

## யாழ்ப்பாணத்தின் பருவநிலை (The Jaffna Climate)

### மாரி - கோடைப் பருவநிலை

பூமியின் பூமத்திய ரேகையின் வடக்கே அட்சரேகை பத்தாம் பாகைக்குள் யாழ்ப்பாணக்குடாநாடு அமைந்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திற்கு அருகே பாக்குத் தொடுவாயினாலும், வங்காள விரிகுடாவினாலும் இக்குடாநாடு அதனின்று பிரிக்கப்பட்டிருக்கிறது. 1,230 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட இக்குடாநாடு இந்தியக் கரையிலிருந்து 3240 கி.மீ. (2025 மைல்) தொலைவில் அமைந்துள்ளது. இக்குடாநாட்டின் மிக உயர்ந்த பகுதி கடல்




பனியுகத்தின் இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்த கடல் கால்வாய்

மட்டத்திலிருந்து 15.2 மீட்டர் (50அடி) உயரமாகவே இருந்தது. இதன் அமைவிடமும், அங்கு நிலவும் 'பூமத்தியரேகைவளிமண்டல' நிலைகளுமே அதன் தட்பவெப்ப நிலையைத் தீர்மானிக்கின்றன. இப்பருவம் 'வெப்பமண்டல மழைக்காலப்' பருவநிலை (Tropical Monsoon) என அழைக்கப்படுகிறது (Mathanakaran, R. 1987: 193).

யாழ்ப்பாணப் பருவநிலை மாரி, கோடை என வகுக்கப்பட்டிருக்கிறது. ஐப்பசி முதல் மார்கழி மாதம் வரை நிகழும் வடகிழக்குப் பருவமழைக்காலம் ஆண்டின் 90 சதவிகிதமான மழையைக் கொண்டுவருகிறது. இதுவே மாரிகாலம் என அழைக்கப்படுகிறது.

சித்திரைவைகாசி மாதங்களில் வீசும் தென்மேற்குப் பருவமழைக்காலம் மிகுதி 10 சதவிகித மழையைக் கொண்டுவருகிறது. இது மென்மழைக்காலம் என்றும் அழைக்கப்படும். வடகிழக்குப் பருவமழைக் காலத்திற்கும், தென்மேற்குப் பருவமழைக் காலத்திற்கும் இடையே ஆனி முதல் புரட்டாசி மாதம் வரையும் உள்ள காலப்பகுதி உலர்ந்த கோடைப் பருவமாகும்.

யாழ்ப்பாணத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி பாரிய வேறுபாட்டைக் கொண்டிருக்கிறது. ஆண்டிற்குச் சராசரி 1300 மி.மீ. மழைவீழ்ச்சியைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு 1988 - 2004ஆம் ஆண்டுகளுக்கிடையே 1903 மி.மீட்டருக்கும் 847.8 மி.மீட்டருக்கும் இடைப்பட்ட மழைவீழ்ச்சியைக் காட்டுகிறது. 1944ஆம் ஆண்டில் கார்த்திகை (நவம்பர்) மாதத்தில் மட்டும் 1118 மி.மீ. மழையைக் கண்ட யாழ்ப்பாணம், 1974 முழு ஆண்டிலும் 635 மி.மீ. மழையை மட்டுமே கண்டிருக்கிறது (Jaffna District Statistical Handbook 2003).

## வெப்பநிலை

பூமியின் அட்சரேகை (Latitude) 9°309°50n இல் யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்திருப்பதனால் வருடம் முழுவதும் கதிரவனின் ஒளிக்கதிர்கள் அங்கே படிந்திருக்கும். ஆனால் மழைக்காலங்களில் கவியும் மேகத்திரள்கள் கதிரவன் ஒளியை நிலத்திற்கு வரவிடாமல் தடுக்கும். வடகிழக்கிலிருந்து வீசும் வாடைக்காற்று குளிரைக் கொண்டுவரும். இக்காற்றினால் ஏற்படும் நீர் உறைவும் (Condensation) வெப்பநிலையை வெகுவாகக் குறைக்கும். யாழ்ப்பாணத்தின் சராசரி வெப்பம் 26.2 சென்ரிகிரேட் பாகையாகும். சித்திரை மாதம் முதல் ஆவணி மாதம் வரை வெப்பம் 28 சென்ரிகிரேட் பாகை முதல் 30 சென்ரிகிரேட் பாகை வரை உயர்வாக இருக்கும் (Jaffna District Statistical Handbook 2003).

## நாகநாட்டின் ஆதிக்குடியிருப்புகள்

## உத்தரதேசக் குடியிருப்புகள்

இந்தியத் துணைக்கண்டத்தில் இற்றைக்கு ஒன்றரை மில்லியன் (15 லட்சம்) ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆதிகால மனித இனங்கள் வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்களாக அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் அறிவியல் ரீதியான காலக்கணிப்புகள் காணப்படுகின்றன. அக்காலகட்டத்தின் 99 சதவிகிதமான காலத்தில்



**இலங்கையின் வடபகுதியிலும், வடமேற்கிலும் கரையோரமாகப் பரந்திருக்கும் இரணைமடு அடுக்கமைவு**

**இது தென்னிந்திய தென்கிழக்கு கடற்கரை ஓரமாகப் பரந்திருக்கும் தேரி மேடுகளின் நிலநீட்சியாகும்**

Image Source - S.U. Deraniyagala.

இலங்கை, இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தமையால் தென்னிந்தியாவரை வந்த மனித இனங்கள் இலங்கைக்கு நடந்து வந்திருப்பார்கள். இற்றைக்கு 65,00060,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் நவீன மனிதர்களான ஹோமோ சேப்பியன்ஸ் இனங்கள் தென்னிந்தியாவையும் இலங்கையையும் வந்தடைந்து விட்டன என்பதை இன்றைய மரபணுவியல் ஆய்வுகள் அறியத் தருகின்றன (Thiagarajah, S. 2015). இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட காலக்கணிப்பு ஆய்வுகளில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லாயுதங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

வட இலங்கையின் (உத்தர தேசத்தின்) கிழக்கே முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து வடக்குக் கரைநிலம் வழியாக மேற்குக் கரையில் புத்தளம் வரையிலை சரளைக் கற்களும் மணலும் கலந்து

பரந்திருக்கும் சிவந்த நிறமான ‘தேரி மணல் மேடு’ இரணைமடு அடுக்கமைவு (Iranamadu Formation) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இரும்புத்தாது கொண்ட இந்நிலம் மணலுடன் கலந்து நீண்டகால தட்பவெப்ப நிலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு செந்நிறம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த இரணைமடு அடுக்கமைவின் இரு இடங்களில் கண்டெடுத்த கல்லாயுதங்களில் மேற்கொள்ளப்பட்ட வெப்பேற்றுஒளிஉமிழும் காலக் கணிப்புகள் (Thermoluminescence Dating) இற்றைக்கு முன் (இ.மு.) 125,000 ஆண்டுகளையும் (Abeyaratne, M. 1996), இ.மு. 80,000 ஆண்டுகளையும் (Deraniyagala, S., 1992: 686-688) காட்டியிருக்கின்றன.

வட இலங்கையின் இரணைமடு அடுக்கமைவில் கண்டெடுத்த காலத்திற்குரிய கற்கருவிகள் தென் இலங்கையில் பந்துல என்ற இடத்திலும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கற்கருவிகளைத்தவிர அக்காலகட்டத்தைய மனிதர்களின் எலும்புகளோ, மற்றைய பாவனைப் பொருட்கள் எதுவுமோ கண்டுபிடிக்கப்படவில்லை. காலயுகத்தின் அழிவுகளாலும், வெப்பமண்டலச் சிதைவுகளாலும் இம்மனிதர்கள் விட்டுச்சென்ற தடயங்கள் என்றைக்கோ அழிந்துபோய்விட்டன. தென்னாசியாவிற்கு ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதர்கள் ஆபிரிக்காவிலிருந்து வந்தடைந்த காலம் இ.மு. 65,00060,000 எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்கருவிகள் நவீன மனிதர்களுக்கு முன்பு இங்கே வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் எனப்படும் ஆதி மனிதர்கள் உபயோகித்த கற்கருவிகளாகவே இருக்கும். தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட இந்த ஆதிமனிதர்களின் கல்லாயுதங்கள் 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆதிமனிதர்கள் மிருகங்களை வேட்டையாடியும், கிழங்குகள், பழங்கள், விதைகள் ஆகிய உணவுப் பொருட்களைச் சேகரித்து உணவாகவும் கொண்டு, பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலும், ஆற்றங்கரைகளிலும் வாழ்க்கை நடத்தினார்கள். வட இலங்கையின் வறண்ட பிராந்தியத்தில் 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சதுர கி.மீ. பரப்பில் 1.5 முதல் 0.8 மனிதர்களே வாழ்ந்திருப்பார்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்னிலங்கையில் ஈரப்பிரதேசத்தில் மிக அடர்த்தி குறைவாக ஒரு சதுர கி.மீட்டருக்கு 0.1 அல்லது அதற்கும் குறைவான ஆதிமனிதர்களே வாழ்ந்திருப்பர் (S.U. Deraniyagala 1996).

இலங்கையின் இடைக்கற்கால மக்கள், இ.மு. 60,000 ஆண்டுகளில் தென் ஆசியாவை வந்தடைந்த நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களாவர். கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து வெளிவந்து அவுஸ்திரேலியாவை அடைந்த அவர்களது முதலாவது இடப்பெயர்வு கடற்கரையோரமாக நடைபெற்றதனால் அவர்களது நகர்வு இலங்கையின் கரையோரப் பகுதியூடாகவே நடைபெற்றிருக்கும். அக்காலகட்டத்தில் இலங்கை இந்தியாவோடு இணைந்து ஒரே நிலமாக இருந்தது என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இம்மனிதர்களின் வாழ்வியல் பற்றி விவரமாக இனிவரும் ஓர் இயலில் கூறப்படும்.

1970ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளகத்தின் அகழாய்வுக் குழு கந்தரோடையில் முதல் தடவையாக ஓர் அறிவியல் ரீதியிலான அகழாய்வை மேற்கொண்டது. இக்குழுவுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் விமலா பேக்ளி அம்மையார் இங்கே ஆதியில் வாழ்ந்த மக்கள் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய மக்கள் எனத் தெரிவித்தார் (Begley, V. 1973).

இக்கால கதிரியக்கத் தேதிக்கணிப்புகளின்படி (Radiocarbon And Thermoluminescence Dating) பெருங்கற் பண்பாடு, தென்னிந்தியாவில் பொ.யு. மு. 1500ஆம் ஆண்டளவில் தோற்றம்பெற்று திராவிட மொழிகளைப் பேசும் கர்நாடகம், ஆந்திரம், தமிழகம், மலையாள நாடுகளிலெல்லாம் பரவி, அப்பால் இலங்கைத்தீவு எங்கும் பரவியது (Moorthy, U.S. 1994; Possehl, G.L. 1994).

பெருங்கற் பண்பாடானது முக்கியமாக இறந்த மக்களை அடக்கம் செய்யும் பெருங்கற்களைக் கொண்ட கல்லறைகளை உள்ளடக்கியது. இறந்தவர்களை அடக்கம் செய்த பின்னர் பெரிய கற்பாறைகளை கற்பலகைகளாக வெட்டியோ அல்லது அடக்கத்தைச் சுற்றிவர நட்டுவைத்தோ, மேலாக மற்றொரு கற்பலகையால் மூடிவிடுவார்கள். இந்த அடிப்படை முறையிலிருந்து பலவகையான மாறுபாடுகளும் காணப்படும். இம்மாதிரி பெருங்கற்களைக் கொண்ட சமாதிகளும், வழிபாட்டு நடுகற்களும்

பண்டைய உலகின் பல பகுதிகளில் காணப்படுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களே இந்த அடக்கமுறைகளைக் கடைப்பிடித்தவராவர்.

பெருங்கற் பண்பாடு என்பது மேற்கூறப்பட்ட பெருங்கற்களைக்கொண்ட கல்லறைகளோடு இரும்பின் தொழில்நுட்பம், குளம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன விவசாயம், உழுவதற்கான ஏர், நெற்பயிர்ச்செய்கை, மட்பாண்டம் வனையும் சில், கறுப்புசிவப்பு மட்பாண்டம், அம்மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துகள் ஆகிய பண்புகளை உள்ளடக்கியதாகும்.

தென்னிந்தியாவின் நகரமயமாக்கம், குறுநில மன்னர்களினதும் அரசுகளினதும் எழுச்சி, சங்கத்தமிழ் இலக்கியங்களை உருவாக்குவதற்கேற்ற மொழியின் படிநிலை வளர்ச்சி ஆகிய அனைத்தும் பெருங்கற் பண்பாட்டின் உச்சநிலைச் சாதனைகளாகும் (Ragupathy, P. 1987:180).

பண்டையத் தமிழகத்திலும் இலங்கையிலும் காணப்படும் தாழிப் புதையல்களில் - இறந்தவர்களின் சடலங்களை நான்கடி உயரமான பெரிய பானைகளில் இட்டுப் புதைக்கும் பண்பு - பெருங்கற்கள் இடம்பெறாது போயினும், அதனோடு மேற்குறிப்பிட்ட அனைத்து அம்சங்களும் காணப்படுவதால், அவையும் ‘பெருங்கற் பண்பாடு’ என்ற குடையின் கீழே அமைகின்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் இப்புதையல்களோடு வைக்கப்படும் கல்லறைப் பொருட்கள், கறுப்புசிவப்பு மட்பாண்டங்களினுள் வைக்கப்பட்டு, தாழிகளோடு பெருங்கற்குழிகளில் புதைக்கப்பட்டன.

தென்னாசியச் சூழமைவில், கறுப்புசிவப்பு மட்பாண்டம், புதிய கற்கால, ஆதி இரும்புக்காலங்களில் திராவிட மக்களுக்குரிய தனித்துவமான முத்திரைப் பாண்டமாக விளங்கியது (இந்தத் தொடரில் இடம்பெறும் திராவிட மக்கள் என்ற பதம் திராவிட மொழிகளைப் பேசும் மக்ளைக் குறிக்குமே ஒழிய, அவர்கள் ஓர் இனம் என்ற கருத்தாக்கம் ஆதாரமற்றது). இந்த வகையான மட்பாண்ட உபயோகம் பொ.யு.மு 5000 ஆண்டளவில் சிந்துவெளிக் குடியிருப்புகளில் ஆரம்பமாகி, இந்தியாவெங்கும் வாழ்ந்த தொல்திராவிட மக்களிடையே பரவி, தென்னகமெங்கும் இலங்கையெங்கும் பரவி, ஏறக்குறைய பொ.யு.மு. 200ஆம் ஆண்டளவில் (இரண்டாம் நூற்றாண்டில்) முடிவுக்கு வந்திருக்கிறது. ஒருசில மையங்களில் அதற்குப் பின்னரும் இம்மட்பாண்டம் உபயோகத்தில் இருந்திருக்கிறது.

பொ.யு.மு. 1800 ஆம் ஆண்டிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்திற்கு வந்த இந்தியஆரிய மக்கள் முதலில் பொ.யு.மு. 1500-800 ஆண்டுக்காலத்தில் ‘சாயம் பூசப்பட்ட சாம்பல்நிற’ மட்பாண்டங்களையும் (Painted Grey Ware: Pgw), தொடர்ந்து பொ.யு.மு. 700-200 ஆம் ஆண்டுகளில் ‘வடஇந்திய மெருகுக் கறுப்பு’ மட்பாண்டங்களையும் (Northern Black Polished Ware: Nbpw) உபயோகித்து வந்தார்கள். வட இந்தியாவில் இடம்பெறும் அகழாய்வுகளில், பொது ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில், மேல் தட்டுகளில் ‘வடஇந்திய மெருகுக் கறுப்பு மட்பாண்டங்களையும்’, அதன் கீழே ‘சாயம் பூசப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டங்களையும்’, கீழே அடித்தளத்தில் ‘கறுப்புசிவப்பு மட்பாண்டங்களையும்’ காணமுடிவதை தாப்பர் போன்ற ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் (Thapar, B.K. Et Al. 1967).

சிந்துவெளி அகழ்வுகளில் முதன்முதலாகக் கண்டெடுக்கப்பட்ட இந்த மட்பாண்டங்களுக்கு ‘கறுப்புசிவப்பு மட்பாண்டம்’ என்ற பெயரைக் கொடுத்தவர் பிரித்தானிய தொல்லியலாய்வாளரான ஸேர். மோட்டிமர் வீலர் ஆவார். “இந்த மட்பாண்டம் தனித்துவமான உருவத்தையும் கட்டுமானப் பொருளையும் கொண்டு, மெல்லச் சுற்றும் சில்லில் வனையப்பட்டு, மெருகேற்றப்பட்டு, மட்பாண்டத்தைத் தலைகீழாகப் புரட்டி சூளையில் சுடவைத்த படியினால், அதன் உட்பக்கம் கறுப்பாகவும், வெளிப்பக்கம் பெரும்பாலும் கறுப்பும் சிவப்புமாகவும், கறுப்பு அதன் மேற்பக்கத்தில் (கழுத்துப்பக்கம்) வரையறுக்கப்பட்டும் காணப்படுகிறது.”

*“The Pottery Is Distinctive In Shape And Fabric, It Is Turned On A Slow Wheel, Polished And Is Characteristically Black Inside And Black And More Often Black And Red Outside, With Black Confined To The Upper Part Of The Vessel, Resulted From Inverted Firing” (Wheeler, R.E.M. 1947).*

1916ஆம் ஆண்டில் J.P. லூயிஸ¬ம் (வட மாகாண அரசாங்க அதிபராக இருந்த ஆய்வாளர்), 1917




**இரணைமடு அடுக்கமைவில் அகழ்ந்தெடுத்த பழைய கற்காலக் கருவிகளும் பாவனைப் பொருட்களும்**

Image Source - S.U. Deraniyagala.

*1919 ஆம் ஆண்டுகளில் போல் பீரிஸும், இலங்கையின் வடமாகாணத்தில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளில், யாழ்ப்பாணத்தில் வரலாற்றிற்கு முற்பட்ட முக்கியமான இரு குடியேற்ற மையங்களாக கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இரு இடங்களும் காணப்பட்டன எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1970ஆம் ஆண்டில் அமெரிக்க பென்ஸில்வேனிய பல்கலைக்கழக தொல்லியலகத்தின் ஆதரவில் நடைபெற்ற அறிவியல் ரீதியான அகழாய்வில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிம திகதிக் கணிப்பில் (Radiocarbon Dating) கந்தரோடை மையத்தின் பெருங்கற்காலக் குடியேற்றங்களின் ஆரம்பகாலம் பொயு.மு. 1290±60 ஆம் ஆண்டுக்காலம் எனத் தெரியவந்தது.*

*1980-1983ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் இரகுபதி (பிந்நாள் பேராசிரியர்) யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொண்ட 41 தொல்லியல் மையங்களின் ஆய்வில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய மையங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய இடங்கள் என்பதையும், வல்லிபுரம், வேலணை, மண்ணித்தலை ஆகிய இடங்கள் ஆரம்ப வரலாற்றுக்கால மையங்கள் என்பதையும் இனங்கண்டு கொண்டார் (Ragupa thy, P. 1987)*

*1993இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த பரமு புஷ்பரட்ணம் (பிந்நாள் பேராசிரியர்) பூநகரியில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் மூலம் ஆரம்ப வரலாற்றுக்காலத்தில் அது பல நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பட்டினமாக விளங்கியது என்பதை எடுத்துக்காட்டினார்.*

*கந்தரோடைக்கும், வல்லிபுரத்திற்கும் அடுத்தபடியாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள, கோட்டகமவில் கண்டெடுத்த கல்வெட்டுப் பேசும் 'பொங்கொலிநீர்ச் சிங்கைநகர்' முக்கியமானதொரு பட்டினமாகக் கருதப்பட்டது. பல ஆண்டுகளாக குடாநாட்டின் வடக்கிலும், அல்லது பூநகரியிலும் சிங்கைநகர் இருந்திருக்கலாம் என்ற கருத்துகளுக்கு 201-112ஆம், 201-718 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணக் கோட்டையில் நடைபெற்ற அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள் முற்றுப்புள்ளி வைத்தன.*

*பொது யுகத்திற்கு முற்பட்ட இரண்டாயிரத்தாண்டின் பிற்பாதியில் அறிமுகமான பெருங்கற் பண்பாட்டைப் பேணிய ஆதி மையங்கள், யாழ்ப்பாணக் கடல்நீரேரிக்குச் சமீபமாக உள்ள பிராந்தியங்கள் என்பதை நோக்குமிடத்து, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இப்பண்பாட்டின் சமுத்திரவழி வருகையைக் கிரகித்துக்கொள்ள முடிகிறது.*

*இனித் தொடரும் இயல்களில், பெருங்கற் பண்பாட்டோடு கறுப்பு - சிவப்பு மட்பாண்டத்தை உபயோகித்த ஆதிக்குடிகள் வாழ்ந்த பண்டைய யாழ்ப்பாணத்தின் தலைநகரான கந்தரோடையினதும், அதைத் தொடர்ந்த துணைக்குடியிருப்பு மையங்களான (Satellite Settlements) ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, வல்லிபுரம், நாகர்கோயில், பூநகரி, காரைநகர், சாட்டி, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய மையங்களினதும் தொல்லியல் விரிவாக எடுத்துரைக்கப்படும்.*

### அடிக்குறிப்பு

*1. முந்தைய ஆங்கிலேய வரலாற்றாசிரியர்கள் கிறிஸ்தாப்த காலத்தை மையமாகக் கொண்டு 'கிறிஸ்துவுக்கு முன்' (கி. மு.), 'கிறிஸ்துவிற்குப் பின்' (கி.பி.) என வரலாற்றை அமைத்தார்கள். வரலாற்று எழுத்தில்*

நடுநிலை பேண வேண்டிய தேவையை உணர்ந்த இன்றைய தொல்லியலாளர்கள் கிறிஸ்தாப்த காலத்திற்குப் ‘பொது யுகம்’ (Common Era) என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். இன்று நாம் பொது யுகத்தின் தொடரில் வாழ்கிறோம். இன்றைய காலண்டர் பொது யுகத்தின் ஆண்டுகளைக் காட்டும் நாட்காட்டியாகும். இதன்படி இக்கால எழுத்துகளில் வரலாற்று ஆண்டுகள் ‘பொது யுகத்திற்கு முன்’ (கி.மு.=பொ.யு.மு.) என்றும் அல்லது ‘பொது யுக’ ஆண்டுகள் (கி.பி.= பொ.யு.) என்றும் குறிப்பிடப்படுகின்றன.

## உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


1. *Abeyaratne, M.* **(1996):** *MultiDating Studies Of Archaeological Sites, Unpublished Ph D. Dissertation, Australian National University, Canberra.*
2. *Begley, Vimala* **(1967):** *Archaeological Exploration In Northern Ceylon, Expedition, Summer* **1967, (9) 4,** *Bulletin Of The University Museum, University Of Pennsylvania, Philadelphia.*
3. *Begley, Vimala* **(1973):** *“ProtoHistoric Material From Sri Lanka And Indian Contacts” In (Eds.) K.A.R. Kennedy & G.L.Possehl: Ecological Back grounds Of South Asian Prehistory, Occasional Papers And Thesis, Cornell University.*
4. *Cooray, P.G.* **(1967):** *An Introduction To The Geology Of Ceylon, National Museum Publication, Colombo.*
5. *Deraniyagala, S.U.* **(1992):** *Prehistory Of Sri Lanka: An Ecological Perspective, Sri Lanka Department Of Archaeological Survey, Colombo.*

*Deraniyagala, S.U.* **(1996):** *Pre And Protohistoric Settlement In Sri Lanka; Xiii Th Congress Proceed ings Of The International Union Of Prehistoric And Protohistoric Sciences, Forli, Italy.,* **814** *Sept.* **1996.** *Vol* **5,** *Section* **16,** *Pp* **277-285.**

6. *Geiger, Wilhelm* **(1960):** *Culture Of Ceylon In Medieval Times, (Ed.) Heinz Bechert, Harrassowitz Publishing House, Germany.*
7. *Jaffna* **(1968):** *Groundwater Survey In Jaffna* **1968,** *Municipal Council, Jaffna.*
8. *Jaffna* **(1984):** *Jaffna Market Town Water Supply Project* **1984,** *Municipal Council, Jaffna.*
9. *Jaffna* **(2003):** *Jaffna District Statistical Handbook* **2003,** *Jaffna*
10. *Mathanakaran, R. Dr.* **(1987):** *Jaffna: Its Geo graphical Background In P. Ragupthy: Early Settlements In Jaffna, Madras.*
11. *Moorti, U.S.* **(1994):** *Megalithic Culture Of South India, Ganga Kaveri Publishing House, Varanasi.*
12. *Parker, H.* **(1909):** *Ancient Ceylon, Luzac & Co., London.*
13. *Pieris, Paul E.* **(1917):** *Nagadipa And The Bud dhist Remains In Jaffna, Part I, Journal Of The Royal Asiatic Society (C.B), Vol. Xvii, No.***70,** *Colombo.*
14. *Possehl, G.L.* **(1994):** *Radiometric Dates For South Asian Archaeology, University Museum, University Of Pennsylvania, Philadelphia.*
15. *Pushparatnam, P.* **(1993):** *Poonakari: An Archaeo logical Survey, (In Tamil), Tirunelvely, Jaffna.*
16. *Ragupathy, P.* **(1987):** *Early Settlements In Jaffna, Thillimalar Ragupathy, Madras.*
17. *Rajeswaran, S.T.B.***(2008):** *Jaffna Urban Gover nance Support Project, Jaffna.*
18. *Tharpar, B.K. Et Al.* **(1967):** *‘prakash* **1955:** *A Chalcolithic Site In The Tapti Valley’ Ancient India* **2021 (1967).**
19. *Thiagarajah, Siva* **(2011):** *Peoples And Cultures Of Early Sri Lanka, Tic, Kingston UponThames, Uk.*
20. *Thiagarajah, Siva* **(2015):** *Genetic Origins Of The Tamils, Kumaran Book House, Colombo.*
21. *Wheeler, R.E.M., Ghosh, A., Deva, K.* **(1946):** *Arikamedu: An IndoRoman Trading Station On The East Coast Of India, Ancient India* **2: 171-24. (1946).**
22. *Wheeler, R.E.M.* **(1947):** *Brahmagiri And Chandra valli: Megalithic And Other Cultures In Mysore State, Ancient India* **4: 180-310 (1947-48).**

# தொழிலாளர் சட்ட புஸ்தகம் : தோட்டத் தொழிலாளருக்கான கைநூல்

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.


## எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.




“நீங்கள் வேண்டுவது மனிதருக்குள்ள உரிமைதான், மிருகங்களைப்போல் நடத்தப்பெறாமல் மனிதர்களைப்போல் தலைநிமிர்ந்து நடக்க உங்களுக்கு உரிமை வேண்டும். அந்த உரிமையில்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? நீங்கள் இன்றே யோசியுங்கள். இப்புஸ்தகத்தில் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கவனித்து வாசியுங்கள். வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசிக்கத் தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். எல்லோரும் ஒன்றுகூடுங்கள். ஒற்றுமைப்படுங்கள். சங்கங்கூட்டுங்கள். அவ்விதம் நீங்கள் ஒற்றுமைப்பட்டுவிட்டதாகக் கண்டாலும் கேட்டாலும் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். பாரதமாதா சந்தோஷப்படுவாள். சுதந்திர வீரர்கள் கூத்தாடுவார்கள். உங்களை அடிமைகளாக வைத்து உங்களது ரத்தத்தை உறிஞ்சும் இனத்தவர்களுக்கு வருத்தந்தான். அவர்கள் ஒரு சிறுபான்மையோர். அவர்களைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். ஆறரை லட்சம் பெயர்களைக் கவனிப்பதா? அல்லது நாலு, ஐந்து ஆயிரம் பேர்களைக் கவனிப்பதா? இன்றே கூடுங்கள்”.

தொழிலாளர் சட்ட புஸ்தகத்தின் இறுதியில் இடம்பெறும், ‘சகோதிரர்களுக்கு ஒரு வார்த்தை’ என்ற பகுதியில், தோட்டத் தொழிலாளரின் யதார்த்த வாழ்க்கை நிலைமையையும் அம்மக்களின் விமோசனத்துக்கான மார்க்கத்தையும் மேற்கண்டவாறு உணர்ச்சிபொங்க எடுத்துரைத்துள்ளார், நடேசய்யர். தொழிலாளர் சட்ட புஸ்தகத்தின் சமூக முக்கியத்துவத்தையும் அந்நூல்வழி நடேசய்யர் ஏற்படுத்த விரும்பிய மாற்றங்களையும் அக்குறிப்புகள் நேரடியாக வெளிப்படுத்தியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவர்களை அணிதிரட்டி, அரசியல் மயப்படுத்துவதும் நடேசய்யரின் அரசியல் இயக்கத்தின் அடிப்படைத் தேவைகளாக விளங்கியுள்ளன. அவற்றை நிறைவுசெய்யும் பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்ட வகையில் நடேசய்யர் முன்னெடுத்து வந்துள்ளார். அதன் ஓர் அங்கமாகத் தொழிலாளர் சட்டங்களை மக்கள்மயப்படுத்தல் விளங்கியுள்ளது.

பத்திரிகை எழுத்துகளிலும் துண்டுப்பிரசுரங்களிலும் சட்டமன்ற விவாதங்களிலும் தொழிலாளர் பற்றிய சட்டங்களின் போதாமைகளை எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் ஏட்டளவில் மட்டும் இடம்பெறுவதைக் கண்டித்து வந்துள்ளார். சட்டங்கள் பற்றிய தெளிவின்மையால் தொழிலாளர்கள் தம் உரிமைகளை அறிந்துகொள்ளாதிருப்பதையும் சட்டங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டியவற்றுக்குப் பணத்தையும் காலத்தையும் விரயமாக்குவதையும் அவதானித்துள்ள அவர், தொழிலாளர்களிடத்தில் ‘தொழிலாளர் சட்டங்கள்’ தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அம்முயற்சியின் ஒரு வெளிப்பாடாகவே, ‘தொழிலாளர் சட்ட புஸ்தகம்’ அமைந்துள்ளது. நூலின் முகவுரையில் அவர் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்துகள், அதனை வெளிப்படுத்தி நிற்கின்றன:

“தங்களுக்கு எவ்விதமான சுதந்திரங்கள் உண்டு என்பதை இவர்கள் அறிய முடியாதிருக்கிறார்கள். ஏதாவது கஷ்டம் வந்தால் எழுத்துக் கூலிக்காரர்களிடமும் சில ஏமாற்றுக்காரர்களிடமும் அகப்பட்டுக்கொண்டு உள்ளவற்றையும் தொலைத்து அவதிக்குள்ளாகிறார்கள். தொழிலாளர்களின் இவ்விதநிலைமையைத் தொலைக்கவே இச்சிறு புஸ்தகத்தை அச்சிடத்துணிந்தேன்... தொழிலாளர்களைச் சட்ட நிபுணர்களாக்க இப்புஸ்தகம் எழுதப்படவில்லை. அயோக்கியர்களிடம் அகப்பட்டுக் கொண்டு அவதிப்படாதிருக்க வேண்டியே இது எழுதப்பெற்றது என்பதை மறக்கவேண்டாம்.”

நடேசய்யரின் ‘இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்’ (1928), ‘இந்தியா - இலங்கை ஒப்பந்தம்’ (1941) ஆகிய நூல்களும் மேற்படி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. கல்விநிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மிகப்பெருந்தேவையை மேற்படி நூல்கள் நிறைவுசெய்துள்ளன எனலாம். அதற்குச் சான்றாக, ‘இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்’ என்ற நூலினை வாசித்தறிந்த தொழிலாளர்கள் மூன்று தோட்டங்களில் துரைமார்கள் மிரளும் அளவிற்குக் குழப்பம் விளைவித்துள்ளமையைக் (சாரல்நாடன், 1988: 138) குறிப்பிடலாம். அதனால் தோட்ட நிர்வாகத்தினரும் பெரிய கங்காணிமார்களும் அந்நூலை அழித்தொழிக்கும் செயற்பாட்டைத்

தந்திரமாக முன்னெடுத்துள்ளனர். அதனை "1928 ம் வருசம் நான் ஒரு புஸ்தகம் வெளியிட்டிருந்தேன். அப்புஸ்தகங்கள் தொழிலாளர்களிடம் சேராமல் பல பெரிய கங்காணிகளும் முயற்சி எடுத்தனர்" (1939: i) எனக் குறிப்பிட்டுள்ளார், நடேசய்யர். இந்நிலையாலே அந்நூலின் விரிவாக்கமாகத் தோட்டத் தொழிலாளர் தொடர்பான புதிய சட்டங்களையும் உள்ளடக்கி, 'தொழிலாளர் சட்ட புஸ்தகம்' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

தொழிலாளர் சட்ட புஸ்தகம், கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்திருந்த இந்தியன் பிரஸில் 1939ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டு, 25 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தமிழில் தொழிலாளர் சட்ட புஸ்தகம் என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தாலும் ஆங்கிலத்தில் 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' (Rights and Responsibilities of Indian Labourers) என்ற உபதலைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நூலினைப் பொன்னுலகம் புத்தக நிலையம் 2022ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது.

இந்தியக் கிராமத்திலிருந்து, தோட்டத்துக்குப் பிரயாணம், தோட்டத்தில் வேலை, தொழிலாளர் சங்கங்கள், வைத்திய வசதி - வைத்திய வரி, தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டம், வாக்குரிமைச் சுதந்திரம், முறையிடல், தடை உத்திரவு எனும் ஒன்பது அதிகாரங்களைக் கொண்டுள்ள இந்நூலில், 'சகோதிரர்களுக்கு ஒரு வார்த்தை' என்ற பகுதி இறுதியில் இடம்பெற்றுள்ளது. அப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிற்படுத்தப்பட்ட வாழ்க்கை நிலைமையும் அதிலிருந்து மீட்சிபெறுவதற்கான சில ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' (1928) வெளிவந்து, பத்தாண்டு இடைவெளியில் அந்நூலின் விரிவாக்கமாகத் 'தொழிலாளர் சட்ட புஸ்தகம்' வெளிவந்திருந்தாலும் இருநூல்களினதும் அடிப்படைக் கருத்தோட்டங்கள் வேறுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அப்பத்தாண்டு கால இடைவெளியில் அரசியல், சமூக, பொருளாதார அசைவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்விலும் பெருந்தாக்கங்களைச்




தொழிலாளர் சட்டப் புத்தகம்

செலுத்தியுள்ளன. அரசியல் யாப்புச் சீர்திருத்தம், சர்வசன வாக்குரிமை முதலியன தொடர்பான வாதங்களில் மேலோங்கிய இலங்கைவாழ் இந்தியர்மீதான எதிர்ப்பு, 1931இல் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை, 1930களின் முற்பகுதியில் மேலோங்கிய உலகப் பொருளாதாரப் பெருமந்தம், உள்ளூராட்சி சபைத் (கிராம சபை) தேர்தலிலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வெளியொதுக்கப்பட்டமை, பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே லங்கா சமசமாஜ கட்சி முன்னெடுத்த செயற்பாடுகள், இந்தியர்கள் கூலித்தொழிலாளர்களாக வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடைசெய்த இந்தியச் சட்டம், இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையே இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்கள் தொடர்பில் இடம்பெற்ற கொள்கைநிலைப்பட்ட வாதங்கள் முதலானவை பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்வைப் பாதித்ததோடு புதிய சவால்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தின. அதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பு, எதிர்காலம் முதலானவை பெரிதும்

மாற்றமுற்றன. அம்மாற்றங்களுள் முதன்மையானவொன்றாக இலங்கைப் பிரஜையாக வாழ்தல் - உணர்தல் என்ற நிலைமாற்றம் அமைகிறது. அதன் பிரதிபலிப்புகளைத் 'தொழிலாளர் சட்ட புஸ்தகத்தில்' காணமுடிகின்றது.

இலங்கையில் பெருந்தொகையான இந்தியர் நீண்டகாலமாக நிரந்தரமாக வசித்துவந்தபோதிலும் அவர்களிடையே தாம் இலங்கையர், இலங்கைப் பிரஜை என்ற உணர்வு அதிக அழுத்தம் பெறவில்லை; "திலகர் (1919), சரோஜினி நாயுடு (1922), மௌலானா சௌகத் அலி (1924), மகாத்மா காந்தி (1927), கமலாதேவி சட்டோபத்யாயா (1931), ஜவஹர்லால் நேரு (1931) முதலான இந்தியத் தலைவர்களின் இலங்கை வருகை" (Nadesan, 1993: 66) இந்தியத் தேசிய உணர்வை மேலும் எழுச்சி பெறச் செய்துள்ளது; 1921ஆம் ஆண்டு வரை இலங்கைவாழ் இந்தியருக்கென அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை; 1924ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தின்படி இந்தியாவில் பிறந்து வளர்ந்த இந்தியருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டதால் இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்துவந்த இந்தியருக்கு வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பன மறுக்கப்பட்டன. இந்நிலையால் இலங்கைப் பிரஜையாக உணர வேண்டிய, வாழ வேண்டிய தேவையும் சூழலும் அக்காலத்தில் நிலவவில்லை. அதனால் நடேசய்யர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்கள் எவ்வாறெல்லாம் திரும்பலாம் என்பது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டி வந்துள்ளார். எடுத்துக்காட்டாக, இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் என்ற நூலில் ஊருக்குத் திரும்புதல் எனும் தனி இயலை நடேசய்யர் வைத்துள்ளதைக் குறிப்பிடலாம். அந்த இயலில் தொழிலாளர்கள் இந்தியா திரும்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள், நாடு திரும்புவதற்குத் தொழிலாளர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் முதலியன விளக்கப்பட்டுள்ளன. குடியகல்வு நிதியுதவியுடன் எவ்வாறு நாடு திரும்பலாம் என்பது விவரமாக விளக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் தேசபக்தன் பத்திரிகையிலும் இடம்பெற்றுள்ளன.

இலங்கைவாழ் இந்தியர் இலங்கையில் தம் இருப்பை உறுதிசெய்வதற்கு அவர்களை வலுமிக்க



Image Source - thuppahis.com

அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்த நடேசய்யர், 1930களின் தொடக்கம் முதல் இந்தியத் தொழிலாளர்கள் தம்மை இலங்கைப் பிரஜைகளாக, இலங்கை வாசியாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு வலியுறுத்தி வந்துள்ளதுடன் அதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளார். அவரின் 'தொழிலாளர் சட்ட புஸ்தகம்' (1939), 'இலங்கை - இந்திய ஒப்பந்தம்' (1941) முதலான நூல்களும் சுதந்திரனில் அவர் எழுதிய அரசியல் தொடர்களும் அதற்குச் சான்றாக விளங்குகின்றன.

தொழிலாளர் சட்ட புஸ்தகத்தில் இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் நூலில் இடம்பெற்றுள்ள 'ஊருக்குத் திரும்புதல்' என்ற இயல் - என்ற செய்தி இடம்பெறவில்லை. மாறாக, இலங்கைப் பிரஜையாதல், இலங்கையின் நிரந்தர வாசியாதல் என்பனவே இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, டொனமூர் சீர்திருத்தத்தில் வாக்குரிமை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வழிமுறைகளைத் தொழிலாளர் சட்ட புஸ்தகத்தில் தெளிவாக விளக்கியுள்ள நடேசய்யர், அவ்வழிமுறைகளைப் பின்பற்றித் தொழிலாளர்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளார். 'நாம் இலங்கையில் நிரந்தரமாக வசிக்கிறோம், இந்தியாவுக்குப் போகமாட்டோம்' என்று இந்தியத் தொழிலாளர்களை உறுதியாகக்கூறும்படி குறிப்பிட்டுள்ள அவர், அத்தொழிலாளர்கள் விரும்பினாலும் இந்தியாவுக்குச் செல்வதற்கோ

அங்கு சென்று வளமாக வாழ்வதற்கோ முடியாதுள்ள சூழலையும் சுட்டிக்காட்டி, இலங்கையின் நிரந்தரவாசியாகப் பதிவுசெய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியுள்ளார். உதாரணமாக, வாக்குரிமை பெறுவதற்கான வழிமுறைகளுள் ஒன்றான, 'இலங்கையின் நிரந்தரவாசி என்ற சான்றிதழைப் பெறுதல்' தொடர்பாகத் தொழிலாளர் சட்ட புஸ்தகத்தில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

" 'நான் இலங்கைவாசி இந்தியா சம்பந்தம் எனக்கு வேண்டாம்' என்று எழுதிக்கொடுத்து ஒரு சர்ட்டிபிகேட் பெறவேண்டும். இந்தமாதிரி சர்ட்டிபிகேட் பெற்றால் மிகவும் நல்லது. நீ இலங்கையன் ஆவாய். மற்ற இலங்கையர்களுக்குள்ள எல்லா உரிமையும் உனக்கு உண்டாகும். கிராமங்களில் சிங்களக் கிராம வாசிகள்போல் காணிகள் கவர்மெண்டாரிடம் இனாமாகப் பெற உரிமையுண்டு, 'அன்னியன் நீ, இந்த நாட்டைவிட்டுப் போகவேண்டும்' என்று ஒருவரும் சொல்லமுடியாது. கூடுமானால் எல்லா இந்தியத் தொழிலாளர்களும் இந்தவிதமான சர்டிபிகேட் பெறுவது உத்தமம். பெரும்பான்மையான தொழிலாளர்களை இவ்விதம் பதிவு செய்யவேண்டிய ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள் பயமில்லாமல் இதனைச் செய்யலாம்" (1939: 49).

இப்பதிவு இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுதல் என்பதற்கு மாறாக இலங்கையில் நிரந்தரமாக வசித்தல் என்ற நிலைமாற்றத்துக்குச் சிறந்த சான்றாக அமைகிறது. இந்நிலையால் 'ஊருக்குத் திரும்புதல்' என்பது 1930களில் அவசியமற்றதாகியுள்ளது.

சர்வசன வாக்குரிமை வழங்கிய காலத்திற்குப் பின்னர், இலங்கையர்களாகப் பதிவுசெய்துகொள்ளும் இந்தியர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளமை அதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. "1931ஆம் ஆண்டு வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டபோது ஒரு இலட்சம் இந்தியவம்சாவளி மக்கள், வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்துள்ளனர். தொடர்ந்து 1936ஆம் ஆண்டில் வாக்காளர் பதிவு இடம்பெற்றபோது இந்திய வம்சாவளியினரின் வாக்காளர் தொகை ஒரு இலட்சத்து 45 ஆயிரமாகவும், 1938இல் இத்தொகை ஒரு இலட்சத்து 70 ஆயிரமாகவும், 1939இல் இந்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 25 ஆயிரமாகவும் உயர்ந்துள்ளது" (தேவராஜ், 2008: 14). இந்த எண்ணிக்கை அதிகரிப்பில் நடேசய்யரின் பங்களிப்பும் கணிசமாக இருந்துள்ளது எனலாம். அவர் 1939ஆம் ஆண்டு மூன்று இலட்சம்பேர் வாக்காளர்களாகப் பதிவுசெய்ய வேண்டும் என எதிர்பார்த்துள்ளார் என்பதைத் தொழிலாளர் சட்ட புஸ்தகத்தின் மூலம் அறியமுடிகிறது.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வெவ்வேறு தளங்களில் வெளிப்படுத்திவந்துள்ள அவர், அவ்வாறு பதிவு செய்ய முனைபவர்களைத் தடுக்கும் வகையில் அச்சமூட்டப் பயன்படுத்துகின்ற கருத்தாக்கங்களின் போலிமையையும் அம்பலப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக, அவ்வாறு அச்சமூட்டப் பயன்படுத்துகின்ற அம்சங்களை, "நீங்கள் இந்தியா கவர்மெண்ட் ஏஜண்டிடம் போகமுடியாது, உங்களுக்கு வேலைகிடைக்காவிட்டால் இந்தியாவிற்கு அனுப்பமாட்டோம், குறைந்த திட்டச்சம்பளம் கிடைக்காது, ஆஸ்பத்திரி வசதி இருக்காது, ரயிலில் இந்தியா போக அரைச்சார்ஜ் இருக்காது, கடனுக்காக வாரண்டில் உன்னைப் பிடிப்பார்கள்" என நிரல்படுத்தி, இவை எவையும் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்பவர்களை எவ்விதத்தும் பாதிக்காது என்பதைத் தனித்தனி தலைப்பின்கீழ் தெளிவுபடுத்தி, மக்களை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யத் தூண்டியுள்ளமையைக் குறிப்பிடலாம் (1939: 50-53).

இலங்கைவாழ் இந்தியரின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றமையால், சிங்களப் பேரினவாத சக்திகள், அந்த எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. "1940 ஆண்டு இந்தியவம்சாவளி மக்களை வாக்காளர் பட்டியலில் பதிவதற்கு ஆவணங்கள் மாத்திரம் போதுமானதல்ல என்றும் அதற்கு மேலாக அவர்களை நேரடியாக அழைத்து விசாரணை செய்ததன் பின்னரே வாக்காளர்களாகப் பதிவு செய்யவேண்டும் என்றும் புதிய நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வாக்காளர் பதிவுக்கான நேரடி விசாரணைக்குச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி பலர் அறிந்திராததுடன், இந்த நேரடி விசாரணைக்கான அறிவிப்புகள் முறையாக இந்தியவம்சாவளி தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் 1941ஆம் ஆண்டு இடம்பெற்ற வாக்காளர்

பதிவின்போது இம்மக்களின் வாக்காளர் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 25 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து 68 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது" (தேவராஜ், 2008: 15).

மேற்படி தகவல்கள், இலங்கைவாழ் இந்தியர் இலங்கையராக வாழ விரும்பியதையும் அதனை ஏற்க மறுத்த சிங்கள ஆதிக்கச் சக்திகள், பெரும்பான்மை பலத்தினாலான சட்ட அங்கீகாரத்துடன் அம்மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதையும் காட்டுகின்றன. இதன் தொடர் வளர்ச்சியாகவே நாடு சுதந்திரமடைந்ததும் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் (1948) அமைகிறது.

இலங்கைவாழ் இந்தியருக்கு எதிராகச் சிங்கள ஆதிக்கச் சக்திகள் 1920களிலிருந்து முன்னெடுத்துவந்துள்ள செயற்பாடுகள், நாடு சுதந்திரமடையுமுன்னே இலங்கைவாழ் இந்தியர் தம் இருப்பை வலுவாக உறுதிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. நடேசய்யர் அதனை நன்குணர்ந்து செயற்பட்டுள்ளார் என்பதற்குத் தொழிலாளர் சட்ட புஸ்தகம், இந்தியா - இலங்கை ஒப்பந்தம் முதலான நூல்களும் சுதந்திரனில் அவர் எழுதிய தொடர்களும் சான்றாக அமைகின்றன.

பெருந்தோட்டத் தொழிலுக்காக இலங்கை வந்த பெருந்தொகையான மக்கள் இலங்கையின் நிலையான சமூகமாக உருவாக்கம் பெற்றபின்னர், இந்திய அடையாளத்துடன் முழு உரிமை பெற்ற இலங்கைப் பிரஜையாக வாழ முடியாதிருத்தல், இலங்கையின் ஆதிக்க அரசியல் சக்திகள் இந்திய அடையாளத்தைக் கொண்டு அம்மக்களின் இருப்பைச் சிதைத்து வருதல், 'இந்தியர்' என்ற அடையாளத்தைக் கொண்டு பிழைப்பு நடத்துகின்ற சிறுதொகை இந்தியர் இலங்கையில் நிரந்தரக் குடிகளாக உள்ள பெருந்தொகை இந்தியத் தொழிலாளர்களுக்குத் துரோகம் இழைத்து வருதல் முதலானவற்றால், இந்திய அடையாளம் அச்சுறுத்தலுக்கு உரியதாக மாறிவந்தபோது, அம்மாற்றத்தைத் தூரநோக்கோடு அணுகியுள்ள நடேசய்யர், இலங்கையில் நிலையான சமூகமாக உருப்பெற்றுள்ள இந்தியருக்கு - இந்திய வம்சாவளியினருக்கு இந்தியர் என்ற அடையாளம் அவசியமற்றது என்பதைக் கணித்துள்ளார். சுதந்திரனில் அவர் எழுதிய தொடர்கள் அதற்குச் சான்றாக உள்ளன. எடுத்துக்காட்டாக, பின்வரும் கருத்துகளைச் சுட்டிக்காட்டலாம்:

"இலங்கையில் இந்தியரென்று யாரைச் சொல்லலாம்? இலங்கையில் ஒரு காலும் இந்தியாவில் ஒரு காலும் வைத்துக்கொண்டிருக்கும் இந்திய வியாபாரிகளைத்தான் குறிக்கும். இந்தியன் என்பதையும் விடப் பிரியமில்லை. இலங்கை என்பதையும் விடப் பிரியமில்லை. ஆனால், தோட்டத் தொழிலாளியோவெனில், இலங்கையில் இரண்டு மூன்று தலைமுறைகளாக வந்து குடியேறியவர்கள். இந்தியாவில் இவர்களுக்குச் சொந்தம் கிடையாது. இவர்கள் எந்த இடத்திலிருந்து வந்தார்கள் என்பது அவர்களில் அநேகருக்குத் தெரியாது. இவர்களை இந்தியர்களென்று சொல்லுவது பொருந்தாது. இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

இந்தியத் தமிழர்களில் இலங்கையில் நிரந்தரமாய்க் குடியேற எண்ணி இலங்கையர்களுடைய உரிமைகள்போல் எல்லா உரிமைகளையும் பெற வேண்டுபவர்கள் தங்களை இந்தியர் என்று சொல்லிக்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். 'இந்தியன் நான்', இலங்கையனுக்குள்ள உரிமையை கொடுக்கவேண்டுமென்று கேட்பதைப் பண்டித் நேருவும் ஒப்புக்கொள்ளமாட்டார். தாங்கள் இந்தியராகவே இருக்க வேண்டுமென்று எண்ணும் சில சூழ்ச்சிக்காரர்கள் கையில் தோட்டத் தொழிலாளர்கள் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்கள். தங்களுடைய சுயநலங்கருதி தொழிலாளர்களைத் தங்கள் கைஆயுதமாக உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த முறை நிற்க வேண்டும்" (சுதந்திரன் - 10.06.1947).

நடேசய்யரின் மேற்படி கண்டடைவு ஆழமான சமூக, அரசியல் பார்வையினாலும் மக்கள்நல அரசியல் நிலைப்பாட்டினாலும் எட்டப்பட்டதாகும். அக்காலத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்ற அரசியல் அமைப்பாக விளங்கிய இலங்கை - இந்தியக் காங்கிரஸ், சமகால அரசியல், சமூக அசைவைக் கருத்திற்கொள்ளாது தான்சார்ந்த சிறுதொகையினருக்காக இந்திய அடையாளத்தை வலியுறுத்தி, பெருந்தொகை மக்களின் இருப்பைச் சிதைவுக்குள்ளாக்கிய வேளையில் நடேசய்யர் அந்நிலைப்பாட்டுக்கு மாறாக இலங்கைத் தமிழர் என்ற அடையாளத்தை முன்வைத்துள்ளார்.

இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் நூல் வெளிவந்தபோது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்கள் எவையும் உருவாக்கம் பெறவில்லை. நடேசய்யரும் A.E. குணசிங்கவுடன் முரண்பட்டு நகரத்

தொழிலாளர் சங்கத்திலிருந்து வெளியேறியிருந்தார். அந்நூலின் முன்னுரை முதல் முடிவு வரை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கெனத் தொழிற்சங்கம் உருவாக்கப்படுவதன் அவசியமும் தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் ஒன்றிணைய வேண்டியதன் தேவையும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதன்பின்னர் நடேசய்யரே அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் (1931) என்ற தோட்டத் தொழிலாளருக்கான சங்கத்தை உருவாக்குகிறார். அச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்களின்பின் வெளிவந்துள்ள தொழிலாளர் சட்ட புஸ்தகத்திலும், தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டியதன் தேவையை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளதோடு, சிறுசிறு தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும், அவை யாவும் பெருந்தொழிற்சங்கத்தின்கீழ் ஒன்றிணைய வேண்டியதன் தேவையையும் சுட்டிக்காட்டி, தொழிற்சங்கம் ஒன்றை எவ்வாறு உருவாக்குவது, அதற்கான சட்டவிதிகள் முதலானவற்றை விரிவாக விளக்கியுள்ளார். நடேசய்யரின் தொழிற்சங்க அனுபவமும் அவருடைய தொழிற்சங்கச் செயற்பாடுகளுக்கு எதிராகத் தோட்டநிர்வாகத்தினர் மேற்கொண்ட கெடுபிடிகளும் தொழிற்சங்கங்களை அமைக்கும் முறை, தொழிற்சங்கம் தொடர்பான சட்டவிதிகள், அமைப்பாக ஒன்றிணைந்து செயற்பட முனைபவர்களுக்குத் தோட்டநிர்வாகம் கொடுக்கும் நெருக்கடிகள் முதலானவற்றைத் தெளிவுபடுத்துவதற்குக் காரணமாக அமைந்தன எனலாம்.

இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர் தொடர்பான சட்டங்களை, சட்ட நூல்களை அடிப்படையாகக் கொண்டு மட்டும் வியாக்கியானம் செய்யாமல், தேசிய - சர்வதேசிய அரசியல் அசைவுகளையும், இலங்கை - இந்திய அரசியல் நிலைப்பாடுகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் இலங்கைவாழ் இந்தியரின் வாழ்க்கை நகர்வுகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அடிப்படையாகக் கொண்டு விளக்கியுள்ளார். அதனாலேயே இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் என்ற நூலினதும் தொழிலாளர் சட்ட புஸ்தகத்தினதும் அடிப்படைக் கருத்தாக்கங்கள் வேறுபட்டுள்ளன. அவை 1920களிலும் 1930களிலும் இலங்கைவாழ் இந்தியரின் சமூக, அரசியல் அசைவில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகளாகும். அவர்கள் இலங்கையின் நிரந்தரவாசிகளாக நீண்டகாலமாக வாழ்ந்துவந்தாலும் தம்மை இலங்கையராக, இலங்கைப் பிரஜையாக உணரத்தொடங்கிய காலமாக அந்த இடைப்பட்ட காலம் அமைகிறது. இந்திய வம்சாவளித்தமிழர் என்ற அடையாளத்துக்கு மாறாக, மலையகத் தமிழர் என்ற தனித்த அடையாள உருவாக்கத்துக்கும், அதன் வளர்ச்சியாக மலையகத் தமிழர் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற எழுச்சிக்கும் மேற்படி இடைப்பட்ட கால அரசியல், சமூக மாற்றங்கள் தொடக்கமாக அமைந்தன எனலாம்.

தொழிலாளர் சட்ட புஸ்தகத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள், செய்திகள் முதலானவற்றின் அடிப்படையான கருத்தாக்கங்களின் வெளிப்பாடுகள், நடேசய்யர் மற்றும் மீனாட்சியம்மாளின் இலக்கிய ஆக்கங்களின் கருப்பொருட்களாக இடம்பெற்றுள்ளன. நடேசய்யரின் 'இலங்கைத் தோட்ட இந்திய தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' நாடகத்திலும், 'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' என்ற நூலிலும் இடம்பெறும் மீனாட்சியம்மாளின் பாடல்கள் முதலானவற்றில் அவ்வெளிப்பாட்டைக் காணமுடிகின்றது. நடேசய்யர் மற்றும் மீனாட்சியம்மாளின் இலக்கிய ஆக்கங்கள் வெறும் கற்பனைப் புனைவுகள் அல்ல; அவை சமூக நடைமுறையின் யதார்த்த வெளிப்பாடுகள் என்பதற்கு இந்த ஒப்புமை சான்றாக அமைகிறது.

நடேசய்யர் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை, அவர்களது உரிமைநிலைப்பாட்டை மேம்படுத்த மேற்கொண்ட உத்திகளுள் ஒன்றாக அமையும் தொழிலாளர் சட்ட புஸ்தகம், அம்மக்களுக்குப் பெரும் வெளிச்சத்தை வழங்கியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வெறுமனே சட்டங்களை விளக்கும் சட்டக் கைநூலாக இல்லாமல், அத்தொழிலாளர்களின் வரலாற்றுப் பின்னணி, வாழ்க்கை நிலைமை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் முதலானவற்றின் பின்னணியில் சட்டங்களையும் அச்சட்டங்களின் பயன்பாட்டையும் உதாரணங்களுடன் விளக்கும் முயற்சியை நடேசய்யர் மேற்கொண்டுள்ளார். அதனால் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான சட்டப்புத்தகமாக மட்டுமன்றி அவர்களது விடுதலைக்கான வழிகாட்டியாகவும் இந்நூல் விளங்கியிருக்கிறது.

# உச்சநிலைப் பேரரசுகளை உலுப்பிய உலகப் போர்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.




## கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

யாழ்ப்பாணத்துக்கும் மலாயா - சிங்கப்பூருக்கும் இடையில் வளர்ந்துவந்த நெருங்கிய தொடர்புகள் 1930களில் இடம்பெற்ற இரு பெரும் நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்டன. ஒன்று, 1933 இல் தொடங்கிய பெருமந்தம் (Great Depression); மற்றது 1939இல் தொடங்கிய இரண்டாவது உலகப் போர். மலாயாவுக்குப் புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத்தவரின் எண்ணிக்கை படிப்படியாகக் கூடி, 1930களில் உச்சத்தை அடைந்தது. புலம்பெயர்வு தொடர்ந்து வளர முடியாத வகையில் பெருமந்தமும் உலகப் போரும் தடைபோட்டன.

தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தவர் சிலர் ஆங்கிலேய நிர்வாகிகளால் மலாயாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டமை ஒரு தற்செயல் நிகழ்வு போல் தோன்றினாலும், மலாயாப் புலம்பெயர்வு ஒழுங்கான முறையில் நடைபெற்ற ஒன்றாகவே வெளிப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த பலர் மலாயா அரசாங்கங்கள் கேட்டதற்கு இணங்கி 'கடனாக' (On Loan) அனுப்பப்பட்டனர். அவ்வாறு 1874இல் மூன்று தமிழ் நில அளவையாளரும் (Surveyors) இரண்டு தமிழ் மொழிபெயர்ப்பாளரும் அனுப்பிவைக்கப்பட்டனர். பின்னர், 1880இல் இருந்து பலமுறை மலாய் அரசுகளின் ஆளுநராக இருந்த பிரித்தானியர் இலங்கை ஆளுநருக்கு எழுதி, பலவகைப்பட்ட அலுவலர்களையும் கட்டட வேலை செய்வோரையும் 'கடனாக' அனுப்பிவைக்கும்படி கேட்டிருந்தனர். ஒரு ஆளுநர் 1892இல் தேவைப்பட்ட அலுவலர்களையும் தொழிலாளர்களையும் பட்டியல் இட்டு (நில அளவையாளர், வைத்தியர்கள், பொதுவேலை மேற்பார்வையாளர் போன்ற அலுவலர்களும் கட்டட வேலைத் திறன்களை உடைய 100 தொழிலாளர்களும்), இவர்களைக் 'கடனாக' அனுப்பிவைக்கும்படி இலங்கை ஆளுநருக்கு வேண்டுகோள் விடுத்தார். இதற்கு அமைய அனுப்பப்பட்ட யாழ்ப்பாணத்தவர் மலாயாவில் வேலைவாய்ப்புகளைக் கண்டு, தம் உறவினர் பலரை மலாயாவுக்கு அழைத்திருப்பர் என்று எண்ண இடமுண்டு.

இலங்கை அரசாங்கத்தின் வெளியீடாகிய 'Ceylon Government Gazette' இலும் கொழும்பில் வெளியான ஆங்கிலச் செய்தித்தாள்களிலும் மலாயாவில் இருந்த தொழில் வாய்ப்புகள் பற்றி விளம்பரங்கள் போடப்பட்டன. இவற்றைப் படித்து விண்ணப்பம் செய்தும் பல யாழ்ப்பாணத்தவர் மலாயாவுக்குச் சென்றனர். சில தொழில்களுக்குத் தெரிவானவர்களுக்குப் பயணச் செலவும், வேலைக்குச் சென்ற இடத்தில் இலவச வதிவிடமும் கொடுக்கப்பட்டன.

மேற்குலகில், குறிப்பாக அமெரிக்காவில், தொழிற்சாலைகள் தகரமும் ரப்பரும் கூடுதலாகத் தேவைப்படும் நிலையை உருவாக்கின. இவ்விரு மூலப்பொருட்களையும் உலகச் சந்தைக்குப் பெரும் அளவில் வழங்கும் நாடாக மலாயா எழுச்சிபெற்றது. மலாயாவில் ரப்பர் பெருந்தோட்டங்கள் பெருகின. இவற்றை நல்ல முறையில் நிர்வகிக்கத் தேவைப்பட்ட இடைநிலை அலுவலர்களும், தொழிலாளர் உடல்நலனைக் கவனிக்கத் திறக்கப்பட்ட பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ உதவியாளரும் (Dressers), பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றனர்.

பெருந்தோட்டங்களைத் துறைமுகங்களுடன் இணைப்பதற்கும் போக்குவரத்து வசதிகளை அமைப்பதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவற்றிலும் யாழ்ப்பாணத்தவர் பெரும்பங்கில் ஈடுபட்டனர். சிறப்பாக, தொடர்வண்டிப் பாதைகளுக்கு (Railway) பொறுப்பாக இருந்த திணைக்களங்களில் பல்வேறு நிலைகளில் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பதவிபெற்றனர்.

சிலவேளைகளில் இந்த இளைஞர்களை மலாயாவுக்கு அழைப்பதற்கு காலனிய அதிகாரிகள் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வேண்டுகோள் அனுப்பினர் என்றும் அறியமுடிகின்றது. மலாயாவின் பெரும்பாகமாகிய 'Federated Malay States' இன் 'General Manager Railways' (தொடர்வண்டிப்பாதைத் திணைக்களத்தின் அதிபர்), 1917இல் யாழ்ப்பாணத்து சாந்த யோவான் கல்லூரியின் (St. John's College, Jaffna) அதிபருக்குக் கடிதம் எழுதி, 'Elementary School Leaving Certificate' பெற்ற பத்துத் திறமைசாலிப் பையன்களை (Ten Bright Boys) தனக்கு

அனுப்பிவைக்கும்படி கேட்டிருந்தார் என அறிகின்றோம்.

நான் சிறுவனாய் இருந்த காலத்தில் என் தந்தையார் அடிக்கடி சொல்லுவார், "அஞ்சாம் வகுப்பு முடிச்சுப்போட்டு மலாயாவுக்குப் போனால் உத்தியோகம் எடுக்கலாம்" என்று. அவர் கூறியது அக்காலத்து 'Elementary School Leaving Certificate' என்ற தொடக்கப் பள்ளி முடிவில் கிடைத்த சான்றிதழையே என்று பின்னர் தான் எனக்குப் புரிந்தது.

இவ்வாறாக இருபதாம் நூற்றாண்டின் முதற்காலில் பல்வேறு தொழில் வாய்ப்புகளால் ஈர்க்கப்பட்டு, பல வழிகளில் ஆயிரக்கணக்கான யாழ்ப்பாண இளைஞர்கள் மலாயாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் தொடர்வண்டித் திணைக்களத்தில் வேலை செய்தனர். "யாழ்ப்பாணத்தவர் Ticket இல்லாமல் Train இல் பயணஞ்செய்யலாம்" என்று மலாயாவில் இருந்து திரும்பிவந்தவர்கள் பலமுறை சொல்வதைக் கேட்டிருக்கிறேன். எல்லா நிலைய அதிபர்களும் (Station Masters) யாழ்ப்பாணத்தவர்களே என்று அவர்கள் கூறுவார்கள்.

மலாயாவில் யாழ்ப்பாணத்தவர் பெற்றிருந்த செல்வாக்கை மிகைப்படுத்திக் கூறுகின்றார்களோ என நான் எண்ணியதுண்டு. ஆனால், அண்மைக் காலத்தில் பல ஆய்வாளர்கள் எழுதியவற்றைப் பார்க்கும்போது மலாயாவில் 1900க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் நிர்வாகத்தில் யாழ்ப்பாணத்தவர் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றிருந்தனர் என்பது வெளிப்படுகின்றது. பல்கலைக்கழக ஆய்வுரையாக எழுதப்பட்ட ஒரு நூலில் காணப்படும் பின்வரும் மதிப்பீடு இதனைச் சுருக்கமாக ஒலிபெருக்கிக் காட்டுகின்றது:

*"Jaffna Tamils dominated the clerical, medical, technical, administrative, and supervisory departments, basically holding a monopoly on government employment from 1885 to 1930." (Kristina R. Hodelin, Navigating Empire and Social Mobility of Jaffna Tamils in Malaysia, 1800 - 1948, 2021 Dissertation, Radboud University, p.17).*

மலாயா முழுவதிலும் 1931இல் நடத்தப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 18,000க்கு மேற்பட்ட இலங்கையர் காணப்பட்டனர். அவர்களுள் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்தவர்.

இவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சென்றவர்கள் அடங்குவர். பெரும்பாலும் குடும்பத்தோடல்லாது தனியாகச் சென்றவர்கள். பணம் சம்பாதிக்கும் ஒரே நோக்குடன் சென்றவர்கள். குடிபெயர்ந்து சென்றவர்கள் அல்லர். வேலை முடித்து ஓய்வூதியம் பெற்றதும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் செல்வதைவிட வேறு எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை. போகும்போது காற்சட்டை 'சேட்டு' அணிந்து சென்றவர்கள். திரும்பிவந்ததும் வேட்டி - சால்வை உடுத்தவர்கள். யாழ்ப்பாணத்தில் 'சிங்கப்பூர் பெஞ்சன்காறர்' என்ற ஒரு புதிய சமூகக் குழுவைத் தோற்றுவித்தவர்கள்.



**S.J.V. செல்வநாயகம்**
**Image Source - utsc.utoronto.ca**

இரண்டாவது பிரிவில் பெரும்பாலும் 20ஆம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் சென்றவர்கள் அடங்குவர். இவர்களுள் மூத்தோருடன் சென்ற பிள்ளைகள் இருந்தனர். இப்பிள்ளைகள் மலாயாவில் தங்கள் படிப்பை முடித்தவர்கள் அல்லது முழுமையாக மலாயாவிலே படித்தவர்கள்; மலாயாவில் வளர்ந்தவர்கள். இவர்களுக்கு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் செல்லும் நோக்கமே இருந்திருக்காது.



ஈப்போ நகரம் (அண்ணளவாக) 19 ஆம் நூற்றாண்டு
Image Source - Ho, 2014, p. 580

இவர்களை அழைத்துவந்த மூத்தோர் ‘அரைகுறைக் குடியமர்வில்’ ஈடுபட்டவர்கள் எனலாம். திரும்பிச் செல்ல நேரிட்டால் அதற்குத் தயாராக இருந்தவர்கள். அவர்களுக்கு மலாயாவில் பிறந்த பிள்ளைகள் இருந்தனர்; சொத்துகளும் இருந்தன. மலாயாவிலேயே தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கும் தயாராக இருந்தனர்.

சிறு பிள்ளைகளாகப் புலம்பெயர்ந்து வந்தோரும், மலாயாவில் பிறந்தோரும், நகர வாழ்க்கையை விரும்பியோரும் மூன்றாவது பிரிவில் அடங்குவர். இவர்களுக்கு மலாயா தாய்நாடாகியது. தாம் வாழ்ந்த நகரங்களின் சமூகச் செயற்பாடுகளில் பங்குபற்றிய இப்பிரிவினர் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகப் பேசினர்.

## என் பெருங்குடும்பம்

மலாயாவுக்கு 20ஆம் நூற்றாண்டின் முதற்காலில் சென்ற என் மாமனார்களை மேலே காட்டிய மூன்று பிரிவுகளின்படி பிரிக்கலாம்.

முதலாவதாகச் சென்ற வேலுப்பிள்ளை மாமா (என் அம்மாவின் மூத்த தமையன்), 1930களில் வேலைமுடித்து ஓய்வூதியம் பெற்று ஊருக்குத் திரும்பிவிட்டார். ஊரில் பெரிய கல்வீட்டைக் (எங்கள் ஊரின் முதலாவது கல்வீடு) கட்டி, மேசை - கதிரை - கட்டில் போன்ற நவீன தளபாடங்களை அவ்வீட்டில் வைத்து, வசதியான ஓய்வு வாழ்க்கையை நடத்தினார். நிச்சயமாக இவருடைய தந்தையாரின் வாழ்க்கைத் தரத்தைவிட இவருடைய வாழ்க்கைத் தரம் பெரிதும் உயர்வடைந்து காணப்பட்டது. இவர் மலாயாவில் குடியமர ஒருபோதும் எண்ணியிருக்கமாட்டார் என்பது என் கருத்து.

செல்லத்துரை மாமா (அம்மாவின் இரண்டாவது அண்ணன்), ஒரு காலை யாழ்ப்பாணத்திலும் மற்றக் காலை மலாயாவிலும் வைத்திருந்தார் என்று எண்ணுகின்றேன். இவருக்கு ஆறு மகன்மாரும், ஒரு மகளும் இருந்தனர். இவருடைய செயல்களைப் பார்க்கும்போது, மலாயாவுக்கு வேலைசெய்யச் சென்ற பல யாழ்ப்பாணத்தவருக்கு இருந்த தடுமாற்றங்கள் இவரிடம் காணப்பட்டன என நினைக்கின்றேன். இதனைச் சிறிது விரிவாக விளக்கலாம்.

இவருடைய முதல் பிள்ளை சிவகுருநாதன். தன் பிள்ளைக்கு நல்ல கல்வியைக் கொடுக்க மாமா விரும்பினார். நல்ல ஆங்கிலப் பாடசாலைகள் இருந்த கொழும்புக்குத் தன் பிள்ளையை அனுப்புவதா அல்லது மலாயாவிலேயே படிக்க வைப்பதா என்ற தடுமாற்றம் அவருக்கு இருந்திருக்கலாம். பிள்ளையைச் சிறுவனாக இருக்கும்போதே கொழும்புக்குப் படிக்க அனுப்பிவைத்தார்.

இது தொடர்பாக வேறு சில யாழ்ப்பாணத்தவர் செயல்களையும் இங்கு எடுத்துக் காட்டுவது

பொருத்தம் என நினைக்கின்றேன். மிகவும் சிறந்த எடுத்துக்காட்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் S.J.V. செல்வநாயகம் தொடர்பானது. இவர் மலாயாவின் ஈப்போ (Ipoh) நகரில் 1898இல் பிறந்தவர். சிறுவனாக இருக்கும்போதே இவருடைய படிப்பிற்காகத் தந்தையார் இவரைத் தாயாருடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தார். வரலாற்றில் நடைபெற்ற பல நிகழ்வுகளையிட்டு "இப்படி நடந்திருக்காவிட்டால்..." (ஆங்கிலத்தில் 'What if moments') என்று பலர் சிந்திப்பர். இது அப்படியான ஒரு நிகழ்வு. இச்சிறுவன் இலங்கைக்கு அனுப்பப்படாது, பிறந்த நாட்டிலேயே வாழ்ந்திருந்தால்!

இவர் மட்டுமல்ல, இவருக்கு அரசியல் வாழ்க்கையில் உறுதுணையாக இருந்த மு. திருச்செல்வம் (நீலன் திருச்செல்வத்தின் தந்தை) இலங்கையில் பிறந்தவர் என்றாலும், மலாயாவில் தந்தையுடன் இருந்தபோது, படிப்பிற்காகத் தாயாருடன் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். பின்னர், தமிழ் அறிஞர் க. கைலாசபதியும் இவ்வாறே சிறுவனாக இருக்கும்போது படிப்பிற்காகத் தாயாருடன் இலங்கைக்கு அனுப்பப்பட்டவர்.

செல்லத்துரை மாமாவின் இரண்டாவது மகன் திருச்செல்வம் சிறுவயதில் இருந்தே படிப்பில் திறமைசாலியாக இருந்தார் என்று சொல்லுவார்கள். இவர் இளவயதில் படிப்பை முடித்து, மலாயாவின் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து வேலைசெய்யத் தொடங்கிவிட்டார். 'இவரைத் தனியே மலாயாவில் விட்டுவிட்டு, யாழ்ப்பாணம் செல்வதா இல்லையா' என்ற தடுமாற்றம் செல்லத்துரை மாமாவுக்கு இருந்திருக்கும்.

இரண்டாம் உலகப் போரின் பின் மலாயாவில் பல அரசியல் குழப்பங்கள் தோன்றின. இவை எந்தளவுக்கு யாழ்ப்பாணத்தவரை வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின் தம் குடும்பங்களுடன் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல வைத்ததோ தெரியவில்லை. உலகப் போரின் பின் பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன. செல்லத்துரை மாமாவின் குடும்பமும் வந்தது. ஆனால் இலங்கையிலும் நெருக்கடி தோன்ற, இக்குடும்பம் திரும்பிச் சென்றது.

சதாசிவம் மாமா (அம்மாவுக்கு நேரே மூத்த தமையன்) யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிப்போகும் எண்ணமே இல்லாது மலாயா நாட்டைத் தன் நாடாகக் கருதியிருப்பார் என்று நான் நினைக்கின்றேன். அவர் சிறு வயதில் சகோதரர்களுடன் சென்றவர். கல்வியை முழுமையாக (அல்லது பெரும்பாகத்தை) மலாயாவில் பெற்றவர். ஆங்கில ஆசிரியராகப் பதவி பெற்று மலாக்கா நகரில் முதலில் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் கடமையாற்றியவர்.

இவர் மலாயாவில் பெற்றோர் இல்லாது வளர்ந்தவர். யாழ்ப்பாணச் சமூகக் கட்டுப்பாடுகளாலோ பண்பாட்டு வழக்கங்களாலோ அடக்கப்படாது ஒரு சுதந்திர ஆளுமையாக வளர்ந்தவர் என்று நான் நினைக்கின்றேன். இதனால் அவர் தன் வாழ்க்கையில் ஒரு வேறான சுதந்திரப் போக்கைக் கடைப்பிடிக்க முடிந்தது. யாழ்ப்பாணத்தவர்



மலாயாவில் ஜப்பானியர்
Image Source - The National Archives of Malaysia 1999/0000423g1

அல்லாத ஒரு பெண்ணை, கேரளத்து மங்கையை, மணம் முடித்தார். மனைவி கிறிஸ்தவர் என்றபடியால் மாமாவும் கிறிஸ்தவராக மாறினாரோ தெரியவில்லை. இந்தக் காலகட்டத்தில் இவரைப்போலப் பல யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மலாயாவில் இருந்திருப்பர்.

சதாசிவம் மாமாவுக்கு இளையவர்களாக (அம்மாவின் தம்பிமார்) அங்கு வாழ்ந்த எனது மூன்று மாமன்மாரும், சிறுவர்களாக யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று மலாயாவிலேயே கல்வி கற்றவர்கள். அவர்களுக்கு மலாயாவே சொந்த நாடாகியது.

மலாயாவில் புலம்பெயர் சமூகம்

யாழ்ப்பாணத்தவர் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகியதுபோல், தமிழ்நாட்டார், வேறு இந்தியர், சீனர் ஆகியோருடைய மக்கள்தொகையும் 20ஆம்

நூற்றாண்டின் முதற்காலில் விரைவாகக் கூடிச்சென்றது. மலாய் மக்கள் தங்கள் பெரும்பான்மை நிலையை இழந்தனர். மலாயாவில் 1931இல் நடத்தப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இது வெளிப்பட்டது. மலாய் மக்கள் தொகை இரண்டு மில்லியனுக்குச் சிறிது குறைந்து காணப்பட, மலாய் அல்லாதோர் இரண்டரை மில்லியனுக்குக் கிட்டியதாக இருந்தனர்.

புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 1930களில் மேலும் கூடுவதைத் தணிக்கும் வகையில் ஓர் உலகளாவிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு எல்லா நாடுகளையும் அச்சுறுத்தியது. அதுதான் வரலாறு முன்பின் காணாத பெருமந்தம் (Great Depression).

அமெரிக்காவில் 1929இன் இறுதியில் திடீரென ஏற்பட்ட பங்குச் சந்தைச் சரிவு இதனைத் தொடக்கிவைத்தது என நம்பப்படுகிறது. அக்காலத்தில் மலாயா அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, பிற மேல் நாடுகளுக்கும் பெருமளவு ரப்பர், தகரம் ஆகிய மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்தது. பங்குச் சந்தைச் சரிவு உடனடியாக மலாயாவில் பொருளாதார வீழ்ச்சியை விளைவித்தது.

தொடர்ந்தும் முன்போல மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் பெருந்தொகையான பெருந்தோட்டத் தொழிலாளரும் தகர, சுரங்கத் தொழிலாளர்களும் வேலையிழந்தனர். நாட்டில் அவர்களை வைத்துப் பராமரிக்க முடியாத அரசாங்கம் தொழிலாளர்களைப் பெரும் எண்ணிக்கையில் அவரவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பியது. வருமானம் குறைந்த நிலையில் நிர்வாகத்தில் இருந்த பலரும் வேலை இழந்தனர்.

பெருமந்தத்தால் என் பெருங்குடும்பத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர் என் தந்தையார் கந்தையா கார்த்திகேசு. தொடர்வண்டித் திணைக்களத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த தந்தையார் தன் வேலையை இழந்து, ஓய்வூதியம் பெற்றுச் செல்லவேண்டியதாயிற்று.

என் தந்தை முதலில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் தன் படிப்பைத் தொடங்கி, பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சென்றார். அங்கு உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆட்டம் ஆகியவற்றில் அவருக்கு இருந்த ஆர்வத்தை மேலும் வளர்த்து, கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் கிரிக்கெட் அணியின் தலைவராகவும் சிறப்புப் பெற்றார். பின்னர் அவருடைய மாமனார் கொழும்புக்கு அவரைக் கூட்டிச்சென்று, 'St. Joseph's College' இல் சிறிது காலம் படிக்கவைத்தார். அங்கு இருந்து அவர் மலாயாவுக்குச் சென்றார்.

கோலாலம்பூரில் வேலைசெய்த காலத்தில் கிரிக்கெட் விளையாடுவதற்கும் வாய்ப்புகள் கிடைத்தன. பல இலங்கையர், சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, விளையாட்டுக் கழகங்களைக்கூடத் தொடங்கியிருந்தனர். கோலாலம்பூரில் 1909இல் 'Tamil Union' என்ற விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணத்தவர்களால் அமைக்கப்பட்டிருந்தது. இதில் என் தந்தையார் சேர்ந்து விளையாடி இருக்கலாம்.

பெருமந்தம் மலாயாவைக் கூடுதலாகத் தாக்கிய காலம் 1930-32 ஆகும். அதன் பின்னர் பொருளியல் நிலை மெதுவாகச் சீரடையத் தொடங்கியபோதும், பெருமந்தத்தின் விளைவாக மலாய்த் தலைவர்களிடம் தோன்றிய விழிப்புணர்ச்சி, வெளிநாட்டார் வருகைக்குச் சாதகமாக இருக்கவில்லை.

இந்நிலையில், ஐரோப்பாவில் இடம்பெற்றுக் கொண்டிருந்த ஜேர்மனியின் மீளெழுச்சி பிரித்தானியப் பேரரசுக்கு இதுவரை கண்டிராத சவாலாகத் தோன்றியது. அதேகாலத்தில் ஐரோப்பியப் பேரரசுகளுடன் வைத்திருந்த நட்பைக் கைவிட்டு ஜப்பான் ஆசியாவில் அவ்வல்லரசுகளுக்கு அழிவை உண்டுபண்ணும் பகையரசாக எழுச்சிபெற்றது.

இவற்றின் விளைவாக 1939இல் இரண்டாம் உலகப் போர் மூண்டது. அவ்வேளையில் ஆசியாவில் பிரித்தானியர், பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர் ஆகியோர் வைத்திருந்த பேரரசுகள் உச்சநிலையில் இருந்தன. அடுத்த மூன்று ஆண்டுகளுள் அந்த நிலை தலைகீழாகியது. பிரெஞ்சுக்காரர் ஆண்ட இந்தோசீனா 1940இல் ஜப்பானியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. ஒல்லாந்தருடைய பேரரசு (இன்றைய இந்தோனேசியா) 1942இல் ஜப்பானியர் கைவசமாகியது. சிங்கப்பூர் 1942இல் கைப்பற்றப்பட்டதும், விரைவில் பிரித்தானியருடைய மலாயா ஜப்பானியர் ஆட்சிக்கு உட்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கும் மலாயாவுக்கும் இடையில் நெருக்கமாக வளர்ந்து வந்த தொடர்பு இத்திடீர் நிகழ்வுகளால் துண்டிக்கப்பட்டது. மீண்டும் அத்தொடர்பு புத்துயிர் பெற வாய்ப்பில்லாது போனது.

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண நடைமுறைகள்

## பகுதி 2

கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரகூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக்கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்' என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.




### எம். ஐ. எம். சாக்கீர்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார்.

வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் 'சம்மாந்துறை பெயர் வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

## திருமண அழைப்பு

ஆரம்பகாலங்களில் திருமண அழைப்பானது வாய்வழியாகவே சொல்லப்பட்டு வந்தது. இதனை விசேளம் சொல்லுதல் என்று அழைப்பர். நெருங்கிய சொந்தக்காரர்களுக்கு வட்டா வைத்து அழைக்கும் வழக்கமும் இருந்துள்ளது. குடும்பத்தினர்களுக்கு மணமகன், மணமகள் நேரடியாக அழைப்பு விடுப்பதும் உண்டு.

## வட்டா வைத்து அழைத்தல்

வெண்கல வட்டா ஒன்றில் ஏழு வெற்றிலை, ஏழு பாக்கு வைத்து வட்டாவின் காலில் கட்டப்பட்ட வெள்ளைத்துணியால் அதை மூடிக்கொண்டு எடுத்துச் செல்வார்கள். பள்ளி மரைக்காயர்மார், லெப்பை, முஅத்தின், நெருங்கிய உறவுக்காரர்கள், நண்பர்களுக்கும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் வட்டாவை உள்ளே கொண்டு சென்று வெற்றிலை, பாக்கை எடுத்துக்கொண்டு அழைப்பை ஏற்றதாகச்சொல்லி வட்டாவை திரும்பக் கொடுப்பார்கள்.

அதற்காக செம்புக்கடகங்களும் பயன்படும். இவ்வாறு செல்வதை வட்டாக்கொண்டு போதல் என்றும் சொல்வதுண்டு. இதுபற்றி தனது நூலில் குறிப்பிடும் சமீம் அவர்கள் 'மட்டக்களப்பு பகுதியில் வேற்று மனிதர் வீட்டில் ஆண்கள் இல்லாத சமயம் வீட்டிற்குள் யாரும் நுழைவதில்லை. வட்டா கொண்டு போகிறவர்கள் மாத்திரம் வீட்டில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். பெண்கள் மறைவாக நின்று வட்டாவை வாங்குவார்கள். இருவீட்டார் அழைப்பாக இருந்தால் இரண்டு வட்டாக்கள் கொடுக்கப்படும்' என்கிறார் (சமீம், 1997).

முக்கியமான பிரமுகர்களுக்கு அழைப்புக்கொடுக்க ஊரதிகாரியை அழைத்து பெயர்ப்பட்டியலும், வெண்கல வட்டாவும், இரு உமல்களில் கொட்டைப்பாக்கும், வெற்றிலையும் வைத்துக் கொடுத்துவிடுவார்கள் (கபூர் எஸ்.எச்.எல்.ஏ, 2015).

'வாய்விசேளம்' சொல்வதற்காக, ஊர்வாசிகள் பற்றி நன்கு பரிச்சயமுடைய வயதான பெண்மணிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு காசும், வெற்றிலை - பாக்கு, சுண்ணாம்பு என்பவையும் வாங்கிக்கொடுத்து அனுப்புவார்கள். அவர்கள் கால்நடையாகவே ஊர்முழுக்க சொந்தக்காரர்களுக்கு செய்தி சொல்லி வருவார்கள். வரும்போது அவர்களிடமிருந்து தகவல்களையும் கொண்டுவருவார்கள்.

சிலவீடுகளில் பெண்களால் பெண்களுக்கு தகவல் சொல்லப்பட்டால் மாத்திரமே (பொம்பளை விசேளம்) பெண்கள் சபைக்கு வருவார்கள். இதனால் நெருங்கிய உறவினர் வீடுகளுக்கு குடும்பப் பெண்களும் அழைப்பு விடுக்கச் செல்வார்கள்.

கிழக்கிலங்கையில் அச்சுக்கூடங்கள் அறிமுகமாகிய 18ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே அச்சிடப்பட்ட அழைப்பிதழ்கள் விநியோகிக்கப்படத் தொடங்கின. தூர இடங்களிலுள்ளவர்களுக்கு அழைப்பை தபாலில் கடிதத்துடன் அனுப்புவதும் உண்டு. கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 1934ஆம் ஆண்டு ஜூலை பொத்துவிலில் நடைபெற்ற திருமண அழைப்பிதழொன்று ஆவணப்படுத்தப்பட்டுள்ளது (சுவடிக்கூடம்). அதற்குப் பின்னர் அழைப்பிதழ்களில் ஏற்பட்ட மாற்றங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. அழைப்பிதழ்கள் ஆரம்பத்தில் தமிழ்மொழியில் மாத்திரம் காணப்பட்டுள்ளன.
2. அழைப்பிதழின் தலைப்புகள் விவாகோற்சவ விஞ்ஞாபனம், திருமண அழைப்பு, கலியாண அழைப்பு என்று மாற்றமடைந்து தற்போது நிக்காஹ் அழைப்பிதழ் என்று பயன்பட்டு வருகின்றது.
3. 1950களின் பின்னர் ஆங்கிலத்திலும், தமிழிலும் இருமொழி அழைப்பிதழ்கள் அச்சாகின. தற்காலத்தில் ஆங்கிலத்தில் மாத்திரம் அச்சாகும் போக்கும் வளர்ந்து வருகின்றது. அதேவேளை மணமக்களை வாழ்த்தும் பிரார்த்தனை, பிஸ்மில்லாஹ் ஆகிய அரபு எழுத்தணிகளும் இடம்பெறுகின்றன.

## திருமண வீட்டின் ஆயத்தங்கள்

வீடுகளை மெழுகிச் சுத்தம்செய்து சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்து அலங்கரிப்பார்கள். புதிய கிடுகுகளைக்கொண்டு தட்டுவேலிகளை அமைப்பார்கள். இது கலியாண வேலி எனப்படும். வாசல்களில் வண்டிலில் ஏற்றி வந்த கடற்கரை மணலைப் பரவுவார்கள்.

நெல் அவித்துக் காயவைத்து உரலிலே குற்றுவார்கள். இதற்காக அயலிலுள்ள பெண்களை உதவிக்கு அழைப்பார்கள். அரசிமா இடிப்பார்கள். வளந்து வைத்து புதிய களிமண் பாத்திரங்களை குறிவைத்துச் சூழையிடுவார்கள். மான் - மரை, காட்டுமாட்டிறைச்சிகளைப் பெற்றுக் காயவைப்பார்கள். பால், தயிர், தேன்,

வாழைக்குலைகள், தேங்காய் வாங்கி வைப்பார்கள். பாக்குச் சீவுதல், பலகாரங்கள் சுடுதல் என்பனவும் நடைபெறும்.

### பந்தக்கால் நாட்டுதல்

திருமணத்திற்கு முதல்நாள் வளவில் பந்தல் போடப்படும். அப்பந்தலுக்காகச் சேலைகள் பயன்படும். மாப்பிள்ளை நுழையும் வாயிலுக்கருகில் நடப்படும் முதற் கணு, பந்தக்கால் (பந்தற்கால்) எனப்படும். இதனைக் குடிமரைக்காயரைக் கொண்டே நடுவார்கள் (இஸ்மாலெவ்வை ஏ.ஸி, 2019). இக்காலைச்சுற்றி சேலைகளால் அலங்கரிக்கப்படும். ஒவ்வொரு கணுக்களைச் சுற்றியும் சேலைகள் கட்டப்படும். இவை மாப்பிள்ளைக் கால் என்றும் அழைக்கப்படும் (லறீப் சுலைமான், 2015).

குழல் போன்ற பெரிய ஒலிபெருக்கிகள் வாடகைக்குப் பெறப்பட்டு நீண்ட தென்னைமரங்களில் பொருத்தப்பட்டு, இஸ்லாமியக் கீதங்களும், மெல்லிசைப்பாடல்களும் ஒலிபரப்பப்படும். இதனை 'கோணகிறாப்', 'பூனைக்கிறாப்' என்றும் அழைப்பர் (லறீப் சுலைமான், 2015).

அடுக்குப்பண்ணுதலும் இடம்பெறுவதாக நிந்தவூர் வழக்காறுகள் குறிப்பிடுகின்றன (கபூர் எஸ்.எச்.எல்.ஏ, 2015). கிடுகுகளைக் கொண்டு தற்காலிக மண்டபம் ஒன்று அமைத்தல், சோடிப்பதற்கு பல வண்ணப்பட்டுத்தாள்களில் குருத்து வெட்டுதல், எறிவெடி போன்றவை ஏற்பாடு செய்தல், மூப்பனார் (நட்டுமுட்டுக்காரர், நாதஸ்வரக் கலைஞர்கள்) ஏற்பாடு செய்தல் என்பனவும் இடம்பெறும். மேலும் தென்னம்பாளைகள் கொண்ட நிறைகுடம், குருத்தோலை அலங்காரங்கள், மாவிலை அலங்காரம் போன்றவற்றைக் கொண்டும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

பந்தலின்கீழ் பன்பாய்கள் விரிக்கப்பட்டு அவற்றின்மீது வெள்ளைச்சீலைகள் விரிக்கப்பட்டிருக்கும். வெள்ளை விரித்தலைச் செய்ய குடும்ப வண்ணான்மார்களே அழைக்கப்படுவார்கள். இவர்களே வாசலில் மாரப்பும் கட்டிவைப்பார்கள்.

### மாப்பிள்ளைக் குளிப்பு

திருமணநாள் அன்று திருமணப்பதிவு இடம்பெறும். இதற்கு முன்னதாக அன்றைய நாள் அதிகாலை மாப்பிள்ளையின் வீட்டில் மாப்பிள்ளையைக் குளிப்பாட்டுதல் இடம்பெறும். இதற்காக மணப்பெண்ணின் சகோதரர்கள் மாப்பிள்ளையின் வீட்டிற்குச் செல்வார்கள். வெள்ளைச்சீலை விரிக்கப்பட்டு அதன்மீது மாப்பிள்ளையை நிற்கச்செய்து மைத்துனர்கள் உட்பட சூழ நிற்பவர்கள் நீரூற்ற வேண்டும் (லறீப் சுலைமான், 2015) என்று இறக்காமத்தில் ஒரு நடைமுறையிருந்துள்ளது.

அதேவேளை, நள்ளிரவில் மைத்துனர்கள் துவாய், சாரன், சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களுடன் வந்து மாப்பிள்ளையைக் குளிப்பாட்டிவிடும் வழக்கம் நிந்தவூரில் இருந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர் (கபூர் எஸ்.எச்.எல்.ஏ, 2015).


விவாகோற்சவ விஞ்ஞாபனம்.
(6-7-34)
28 6 34

**பொத்துவிலில் நடைபெற்ற திருமணத்தின் அழைப்பிதழ் - 1934**

Image Source - சுவடிக்கூடம்

மாப்பிள்ளையைக் குளிப்பாட்டி முடித்ததும் அவரை வெள்ளைச்சீலையால் போர்த்தி மஞ்சள் நீரில் இரு திரியிட்டு ஆரத்தி எடுப்பார்கள். அதனைத் தொடர்ந்து அரிசிமாவில் மலர்கள் செய்து குண்டுமணிகள் பதித்து அதில் திரியிட்டு அதனையும் ஊதி அணைக்கச் செய்வார்கள். இதன் பின்னர் மாப்பிள்ளை அலங்காரம் இடம்பெறும்.

### மாப்பிள்ளைச் சோறு

திருமண தினத்தன்று மாப்பிள்ளை வீட்டில் மௌலூது, தலைப்பாத்திஹா என்பன ஓதி விருந்தொன்று நடைபெறும். இதற்காக மணப்பெண்ணின் வீட்டிலிருந்தே சோறு, கறிகள் கொண்டு செல்லப்படும்.

## மாப்பிள்ளை அலங்காரம்

மாப்பிள்ளைக்கு வெள்ளைச் சட்டை, வெள்ளைச்சாரன், பட்டுச்சால்வை, தோற்செருப்பு, இடுப்புப்பட்டி, துருக்கித்தொப்பி என்பவற்றுடன் கறுப்புக் கோட், வெள்ளி மோதிரம் என்பனவும் அணிவிக்கப்படும். பின்னர் மைத்துனரால் அழைத்துவரப்பட்டு, வெள்ளைத்துணி விரிப்பில் காவின் கலரியில் இருத்தப்படுவார்.

## காவின் எழுதுதல்

முஸ்லிம்கள் திருமணப்பதிவை காவின் என்று அழைப்பார்கள். இது كاوين என்ற அரபு வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இது மலாய் மற்றும் அரபு மொழியினூடாக இலங்கை முஸ்லிம்களின் வழக்கில் இடம்பெறுகின்றது. இதனை கடுத்தம் என்றும் அழைப்பார்கள். பொதுவாக காவின் எழுதுவது மணமகனின் வீட்டிலேயே நடைபெறும். இதேநேரத்தில் மாப்பிள்ளை அழைப்பிற்காக பெண்வீட்டார் மாப்பிள்ளையின் இல்லத்தை நோக்கிச் செல்வார்கள். இதன்போது காவின் வட்டாவும், மாப்பிள்ளைக்கான கூறையும் எடுத்துச் செல்லப்படும்.

இவர்கள் அனைவரும் உபசரிக்கப்பட்டு பாய்களில் அமர்த்தப்படுவார்கள். காவின் பதிவு வாசலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலின் கீழே நடைபெறும். மாப்பிள்ளை மாப்பிள்ளைத் தோழர்களினாலும், மைத்துனராலும் அழைக்கப்பட்டு காவின் கலரியில் அமர்த்தப்படுவார். தற்காலத்தில் திருமணப்பதிவுகள் பள்ளிவாசலில் நடைபெறுகின்றன. திருமணப்பதிவாளர், லெப்பை, மணப்பெண்ணின் தகப்பனார், மணமகன், சாட்சிகள், மணமகனின் தகப்பன் ஆகியோர் மத்தியில் அமர்ந்திருப்பர். இவர்களைச்சூழ உற்றார், உறவினர்கள், ஊரவர்கள் அமர்ந்திருப்பர்.

காவின் பதிவின் போது ‘இன்ன பெயருடைய என்னுடைய மகளை இன்னாருடைய மகனான இன்னாருக்குத் திருமணம் செய்துவைக்க ஒப்புக்கொள்கிறேன்’ என்று மணமகளின் தந்தை கூற, ‘இன்னாருடைய மகள் இன்னாரை இவ்வளவு மஹரினைக் கொடுத்து ஹலால் மனைவியாக ஏற்றுக்கொள்கின்றேன்’ என்று மணமகன் கூறி, கையொப்பமிட்டு திருமண ஒப்பந்தம் நிறைவேற்றப்படும். திருமணப்பதிவில் மணமகனும், பெண்சார்பாக அவரது பாதுகாவலரான ‘வொலி’யும் கையொப்பமிட்டு திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றுவார்கள். பொதுவாக திருமண ஒப்பந்தங்கள் சுபஹ் தொழுகையின் பின்னர் இடம்பெறும். ஆயினும் மதிய விருந்தின் பின்னர் நடைபெறும் திருமணங்கள் ளுஹர் தொழுகையின் பின்னரும், மாலை சிற்றுண்டியுடன் நடைபெறும் திருமணங்கள் அஸர் தொழுகையின் பின்னரும் இடம்பெறும். இங்கு நிக்காஹ் பிரசங்கமும் இடம்பெறுவதுண்டு.

காவின் பதிவுகள் நடைபெற்றதன் பின்னர் பிரார்த்தனை இடம்பெறும். அதன்பின்னர் மணமகளின் தந்தை அல்லது மூத்த சகோதரனால் மாப்பிள்ளைக்கு மோதிரம் அணிவிக்கப்படும். அல்லது பெறுமதியான அன்பளிப்பொன்று வைக்கப்படும். அதனை ‘வொலி சொல்லி பரிசு வைத்தல்’ என்பார்கள். அதன் பின்னர் மாப்பிள்ளைக்கு, வந்திருக்கும் ஆண்கள் கைலாகு கொடுத்து முஸாபஹா செய்து அன்பளிப்புகளை வழங்கி, வாழ்த்துத் தெரிவிப்பார்கள். அன்பளிப்புகளாக தங்க நகைகள், சாரன், சால்வை, பணமுடிச்சு என்பன வழங்கப்படும். பின்னர் விருந்து அல்லது சிற்றுண்டி உபசாரம் செய்யப்படும்.



**துருக்கித் தொப்பி**

இவ்வேளையில் மைத்துனரும், மாப்பிள்ளைத் தோழர்களும் மாப்பிள்ளைக்கு கூறை அணிவிப்பார்கள். அவர்கள் கொண்டுவந்த புதிய சாரன், சட்டை, துருக்கித்தொப்பி என்பவற்றை அணிவித்து மாப்பிள்ளையை அலங்கரித்து அழைத்துச்செல்லத் தயாராக்குவார்கள். பின்னர் தாய், சகோதரிகள், பெண் உறவினர்களிடமிருந்து மணமகன் விடைபெற்றுவருவார்.

## மாப்பிள்ளை அழைப்பு

*மாப்பிள்ளை அழைத்து வருதல் என்பது மிக முக்கியமான அம்சமாகப் பார்க்கப்படுகின்றது. இங்கு மாப்பிள்ளை உயர்ந்த கௌரவத்துடன் கவனிக்கப்படுவார். இரவாகிலும், பகலாகிலும், மழை இருந்தாலும், இல்லாவிட்டாலும் மாப்பிள்ளைக்குக் குடை பிடிக்கப்படும். பெரிய கறுப்புக்குடையின் மீது வெள்ளைத்துணியைப் போர்த்தி அக்குடையின்கீழ் மாப்பிள்ளை அழைத்துவரப்படுவார். மைத்துனர் ஒரு கையில் மாப்பிள்ளையின் பெட்டியும், மறுகையில் குடையுமாக மாப்பிள்ளையை அழைத்துவருவார். இவ்வூர்வலத்தில் மாப்பிள்ளைக்கு முன்னால் சீனடி, சிலம்படி வித்தைகளும், தீப்பந்தம், வாள்வீச்சு, பைத் பாடல்களும் இடம்பெறும். பெண்கள் குரவை ஓசை எழுப்பிக்கொண்டு வருவார்கள். மாப்பிள்ளை நடக்கும் பாதையெங்கும் வண்ணான் ஒருவரால் வெள்ளை விரிக்கப்படும். ஆண்கள் பரிவாரமாக மாப்பிள்ளையை அழைத்துவர பின்னால் மாப்பிள்ளையின் மூத்த சகோதரி பெண்ணின் கூறைப்பெட்டி, தாலிப்பெட்டியுடன் மற்றப் பெண்களையும் அழைத்துக்கொண்டு பின்தொடர்வார்.*

'யாநபி ஸலாம் அலைக்கும்
யா ரஸுல் ஸலாம் அலைக்கும்
யா ஹபீபி யா முஹையத்
யா முஹஜ்ஜத் ஸலாம் அலைக்கும்'

*என்று முன்செல்பவர் 'பைத்' பாட,*

'லா இலாஹா இல்லல்லாஹு
லா இலாஹா இல்லல்லாஹு'

*என்று பின்னே செல்பவர்கள் பாடி வருவார்கள்.*

*சில இடங்களில் மணமங்கலமாலைப் பாடல்களும் பாடப்படும். அத்தோடு கேரளத்தில் பிறந்து காத்தான்குடியில் வாழ்ந்த செய்குனா செய்யது முஹம்மது என்பவர் இயற்றிய மகுஷுக்கு மாலைப் பாடல்களும் பொல்லடி அண்ணாவியார்களால் பாடப்படும். அதன் சில வரிகள்:*

'முன்னே ஸலாம் சொல்லிவாடி என் அன்னமே
முறுஷிதைக் கண்டுதேடி
முன்னே ஸலாம் சொல்லிவாடி முறுஷிதைக் கண்டுதேடி
வானமறை வேதரடி வாக்கியம் பெறலாங்கோடி (முன்)
வாசனைவீசு மலராம் மிகுந்தமலை
யாளமவர்ஶூர் பிறந்தவர்
தேசமெங்கும் தீனறிவித்துத் திருத்தவந்த
செய்யது முகம்மதென்பவர்
பாசபலஞானவழி நால்விதமுமேயறிந்த
நேசநேசரானவெங்கள் வாகசருக்கெங்கள் சலாம் (முன்)

## கூறைப்பெட்டி மாற்றுதல்

*கூறை என்பது பெறுமதிமிக்க வேலைப்பாடுகளையுடைய மணமகளின் புடவையாகும். அதனுடன் அஞ்சணம் (சுர்மா), ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள் என்பனவும் எடுத்துச் செல்லப்படும். மாப்பிள்ளையின் வசதிக்கேற்ப கூறையுடன் ஐந்து அல்லது ஏழு புடவைகள் வைக்கப்பட்டிருக்கும். அவை அனைத்தும் வைக்கப்பட்ட மரத்தினாலான தைலாப்பெட்டியே கூறைப்பெட்டி எனப்படும்.*

*மணமகனின் சகோதரியிடம் கூறைப்பெட்டியைப் பெற, மணமகளின் வீட்டுப் பெண்கள் முன்னே நடந்து செல்வார்கள். இதன்போது சீதனப்பேச்சுகளில் தீர்மானிக்கப்பட்ட 'பெட்டிக்காசு' கொடுக்கப்படும். அதன்பின்னரே கூறைப்பெட்டியைக் கையளிப்பார்கள்.*

## வண்ணான் மறித்தல், அண்ணாவியார் கட்டியம் கூறுதல்

*நடந்துவந்த மாப்பிள்ளை, மணமகள் இல்லத்து வாசலை அடைந்ததும் வெள்ளை விரித்த வண்ணான் ஒருவர் மறித்து நிற்பார். மாப்பிள்ளை அவருக்கு அன்பளிப்பு ஏதேனும் வழங்க அவர் வழிவிடுவார். அதன்பின்னர் பைத் பாடியவரும், பொல்லடி அண்ணாவியாரும் மறித்து நிற்பார்கள். இவர்களில் ஒருவர் மாப்பிள்ளை வாழ்த்துப் பாடுவார்கள். இதைக் கட்டியம் என்பர். கட்டியம் கூறுபவருக்கும் மாப்பிள்ளை அன்பளிப்புக்கொடுத்த பின்னர்தான் மாப்பிள்ளையை முன்செல்ல விடுவார்கள்.*

கண்டி நகர், காலி, மாத்தறை
காவல் கண்டீர் நாகபட்டினம்
தொண்டியூர் திருஏரியா
திருகோணமலைச் சேரியும்
வண்டுலாவிய கிண்ணியா
வதுவிநாடறிய சதுரகிரிமலை
எங்கும் எங்குமே அவர் புகழ்
எங்கும் எங்குமே துதிக்க
சீர்புகழ் செழித்த மன்னவர்.
தென்பகுதிக் கிழக்கு

சிங்க மகராசா வன்னுமை
பார்புகழ் மீராலெவ்வைப்போடி வன்னுமை
நாலு திக்கும் பிரபல்யமாகினார்
சீர்புகழ் செழித்த மன்னவர்.
அறுபது பயினர் எல்லாம்
ஒருமாதம் உடைத்த கல்லை
ஒரு பத்து மணிக்குள்ளே வன்னுமை
உரிய இடத்துக்கு எடுத்தார்
அறுபத்து மூன்று வண்டில்
நூற்று இருபத்து ஆறு மாடும்
அறுபத்து மூன்று வண்டில்கள் கரகரவென்று ஓட
அங்குள்ள மாடுகள் இங்கிரதம்பாட
வழிதப்பி பயினர்கள்
திசைதப்பி ஓட
மன்னர் மீராலெவ்வை
வன்னுமை ராசனென்று
உவந்து கைகொடுத்து,
பின் புகழ்ந்து தழுவிக்கொண்டார்.

*(மீராலெவ்வை வன்னுமைக்கான கட்டியம் - அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்)*

## மாப்பிள்ளை ஆரத்தி

*மாப்பிள்ளை வீட்டுவாசலிற்குள் நுழைந்ததும் பெண்கள் மஞ்சள் ஆரத்தி, சுண்ணாம்பு ஆரத்தி, பால் ஆரத்தி ஆகியவற்றை மூன்றுமறை மாப்பிள்ளைக்குச் சுற்றி ஊதி அணைக்க வைத்துவிட்டு, அதனை தெருக்கோடியில் ஊற்றிவிட்டு, கண்ணுறு கழிப்பார்கள். இதன்போது பொரி வெடியான ஆரத்திக் குச்சும் காட்டப்படும்.*

*அதன்பின்னர் மைத்துனர் திண்ணையில் கால்வைக்கும் மாப்பிள்ளையின் காலுக்கு பாலாடை (வெண்ணிறச் சீலை) விரிப்பார். மாப்பிள்ளை கால்வைக்க வருகையில் அதனை எடுப்பார். இவ்வாறு மச்சான் - மச்சினன் 'எத்தங்காட்டிய' பின்னர் மாப்பிள்ளையை வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட இருக்கையில் அமரவைப்பார்கள். பின்னர் மைத்துனர் மாப்பிள்ளையின் கால்களை தண்ணீராலும் பாலாலும் கழுவுவார். அன்றைய காலங்களில் புழுதி வீதிகளில் நடந்துவந்த கால்களைச் சுத்தப்படுத்தி மாப்பிள்ளையைக் கௌரவிக்க இவ்வாறு செய்வார்கள். அதன்பின்னர் மாப்பிள்ளை மைத்துனருக்கு வெள்ளி மோதிரம் போன்ற அன்பளிப்பொன்றை வழங்குவார். தற்காலங்களில் கால்கழுவுவதற்குப் பதிலாக மாப்பிள்ளைக்கு மைத்துனர்கள் வாசனைத்திரவியம் அடித்து விடுவார்கள்.*

முஸ்லிம்கள் திருமணப்பதிவை காவின் என்று அழைப்பார்கள். இது மலாய் மற்றும் அரபு மொழியினூடாக இலங்கை முஸ்லிம்களின் வழக்கில் இடம்பெறுகின்றது. இதனை கடுத்தம் என்றும் அழைப்பார்கள். பொதுவாக காவின் எழுதுவது மணமகனின் வீட்டிலேயே நடைபெறும். இதேநேரத்தில் மாப்பிள்ளை அழைப்பிற்காக பெண்வீட்டார் மாப்பிள்ளையின் இல்லத்தை நோக்கிச் செல்வார்கள். இதன்போது காவின் வட்டாவும், மாப்பிள்ளைக்கான கூறையும் எடுத்துச் செல்லப்படும்.

## தாலி கட்டுதல்

*மணமகள் - மணமகள் ஆகிய இருவரும் சேவரக்கால் எனப்படும் செம்பாலான உரலைப் போன்ற இருக்கையில் அமரச்செய்யப்படுவார்கள். அவர்களுக்கு அருகில் தென்னம்பாளையினாலான நிறைகும்பம் வைக்கப்பட்டிருக்கும். மணமகளின் தகப்பனார் பெண்ணின் முந்நெற்றி முடியைப் பிடித்து மணமகனின் கையில் கொடுத்து பெண்ணை ஒப்படைப்பார். இதன் பின்னர் மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாலி கட்டுவார்.*

*தாலி கட்டுதல் என்பது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமணத்தில் தவிர்க்கமுடியாத அம்சமாகும். திருமணமாலை அணிவிக்கிற வழக்கம், அல்லது திருமணத்தை நிச்சயப்படுத்த மணமகன் மணமகளுக்கு ஆபரணமொன்றை அணிவிக்கிற வழக்கம் பல்வேறு சமூகங்களிலும் நிலவிவந்துள்ளது. தமிழர்கள் அழைப்பதைப் போன்றே முஸ்லிம்களும் திருமணத்தின்போது அணியும் கழுத்துப்பட்டியை தாலி என்றே அழைக்கின்றனர். இது கேரளத்தில் 'மின்னு' என்றழைக்கப்படுகின்றது. ஆரம்பகாலத் தாலிகள், பிறை மற்றும் பிறைக்கொடி என்ற சங்கிலியைக் கொண்ட பொன்னாலான ஆபரணமாகும்.*

பிற்காலத்தில் பிறைக்கொடி என்பது மருவி வெவ்வேறு வடிவமைப்புகளில் தாலிகள் செய்யப்படுகின்றன. தாலிகளின் அமைப்பில் கொடி, பூ அலங்காரங்கள், கற்கள் போன்றவை பதிக்கப்பட்டிருக்கும்.



Image Source - www.manudam.com

தாலியை மாப்பிள்ளையின் சகோதரி எடுத்துக்கொடுக்க மாப்பிள்ளை மணப்பெண்ணுக்கு அணிவிப்பார். அதன்பின்னர் இருவருக்கும் ஒரே குவளையில் குளிர்பானமும் தண்ணீரும் மைத்துனிகளால் பருகக் கொடுக்கப்படும். பின்னர் மாப்பிள்ளையின் சகோதரிகளுக்கு மணப்பெண் வீட்டாரினால் நகைகள் அன்பளிப்புச் செய்யப்படும்.

இதன்பின்னர் மாப்பிள்ளை வீட்டாருக்கு விருந்துபசாரம் நடைபெறும். இதனைக் 'காவின் சோறு', 'மறவணச்சோறு', 'மணவறைச்சோறு' என்றழைப்பார்கள். இதன்பின்னர் மணமக்களை மணவறைக்கு அனுப்பிவிட்டு அனைவரும் கலைந்து செல்வார்கள். மாப்பிள்ளை வெளியில் வந்து அனைவரையும் வழியனுப்பிவிட்டு சாப்பிட உட்காருவார். இதன்போது மைத்துனரும் கூட இருந்து சாப்பிடவேண்டும்.

## மணவறை

மணமக்களுக்காக ஒன்றன்மேல் ஒன்றாக ஏழு பாய்கள் அடுக்கப்பட்டு அதன்மீது வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு உறங்குவதற்கான கட்டில் தயார் செய்யப்பட்டிருக்கும். ஏழு நாட்களுக்கு மணமகனும் மணமகளும் வீட்டைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஏதேனும் காரியங்களிற்காக வெளியே செல்வதாக இருந்தாலும் சிறு ஆணி அல்லது பாக்கு வெட்டியைக் கொண்டுசெல்லப் பணிக்கப்படுவார்கள். தீயசக்திகளின் பார்வைபடாமல் இருக்க இவ்வாறு செய்வதாக ஐதீகமுண்டு. இந்தக் காலப்பகுதியில் மணமக்களுக்கு ஏழு நாட்டுக் கோழிகள் அறுத்து தினமும் உணவு பரிமாறப்படும். விரால், கொக்கு, காட்டுமாட்டிறைச்சி, மானிறைச்சி என்பனவும் சமைத்துக் கொடுக்கப்படும்.

## பச்சப்படி

திருமணத்திற்கு அடுத்தநாள் மணமகளின் இல்லத்திற்கு பச்சப்படி எனப்படும் உணவு சமைத்துக் கொண்டுசெல்லப்படும். அதற்காக மாப்பிள்ளை வீட்டாரிடம் 'தண்ணில வெந்தது வேணுமா, எண்ணைல வெந்தது வேணுமா' என்று செய்தி அனுப்புவார்கள். 'தண்ணில வெந்தது' என்றால் - இடியப்பம், லவரி, கொழுக்கட்டை போன்ற ஆவியில் வெந்த உணவுகளும்; 'எண்ணைல வெந்தது' என்றால் - எண்ணையில் பொரித்த பலகாரங்களும் கொடுத்தனுப்பப்படும்.

## மாப்பிள்ளை தாய்வீடு செல்லுதல்

அன்றுமாலை மாப்பிள்ளை மைத்துனருடன் தாய்வீட்டிற்கு பழங்கள் கொண்டுசென்று தாய், தந்தையரைப் பார்த்து வருவார். ஏழு நாட்களுக்கு மாப்பிள்ளை வெளியில் செல்வதாயின் மைத்துனர் கூடவே செல்ல வேண்டும்.

## மாப்பிள்ளைச் சோறு - வலீமா

திருமணமுடித்து ஏழு நாட்களுக்குள் மாப்பிள்ளை தன் தோழர்களுக்கும் ஏற்றவர்களுக்கும் விருந்தளிப்பார். இதனை மாப்பிள்ளைச் சோறு என்பார்கள். தற்காலத்தில் இது வலீமா என்ற பெயரில் தடல்புடலாக, பெருவிருந்தாக அரங்கேற்றப்படுகின்றது. இது மாப்பிள்ளை தனது மணவாழ்வுச் சடங்குகளைப் பூரணப்படுத்திவிட்டதை அறிவிக்கும் ஒரு நிகழ்வாகக் கணிக்கப்படுகின்றது. ஏழாம் நாள் இரவு பத்துமணியளவில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் நீராட்டுவார்கள். இது தண்ணிவார்த்தல் எனப்படுகின்றது. இதன்பின்னர் கால்மாறிச் செல்லுதல் இடம்பெறும்.

# 1883 ஈஸ்டர் ஞாயிறு, கொட்டாஞ்சேனைக் கலவரம்: நவீன இலங்கையின் முதலாவது மதக் கலவரத்தின் பின்னணி

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத்தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் ‘இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை’ என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.


பி. ஏ. காதர்

பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக ‘சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்’, ‘சுயம் நிர்ணயம் உரிமை’ மற்றும் ‘மேதின வரலாறும் படிப்பினைகளும்’ போன்ற நூல்கள் அமைகின்றன.




16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளின்போது, 'கிறிஸ்தவ இராச்சியங்களாகத்' திகழ்ந்த ஐரோப்பாவிலே மதச் சீர்திருத்தத்துக்கான சக்திகளுக்கும் மதச் சீர்திருத்தத்திற்கு எதிரான சக்திகளுக்கும் இடையிலான உள்நாட்டுக் கலவரங்கள் நடைபெற்றன. அதனூடாகவே அங்கு தேசியவாதம் தலைதூக்கி தேசிய அரசுகள் உருவாகின. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் கிறிஸ்தவ மதத் திணிப்புக்கு எதிராக எழுந்த சுதேச மதங்களின் எழுச்சிகளின் ஊடாகவே காலனித்துவ தேசியவாதம் உருவாகியது.

ஐரோப்பிய - மைய காலனித்துவக் கொள்கைகளும் ஆக்கிரமிப்புகளும் கிறிஸ்தவ மதத்தின் போர்வையிலே தான் மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பியக் காலனித்துவவாதிகள் இலங்கையில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னரே, இலங்கையில் பௌத்த மதம், இந்து (சைவ) மதம், இஸ்லாமிய மதம் உட்பட வேறு சில பிராந்திய மதங்களும் இருந்தன. ஆயினும் பௌத்த, இந்து மதங்களின் துணையோடுதான் நிலப்பிரபுத்துவக்கால யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இலங்கையைப் பொறுத்தளவில் இஸ்லாமிய மதமானது அரசு அதிகாரத்திற்குப் போட்டியிடும் மதமாகவோ ஆக்கிரமிப்புக்கான மதமாகவோ பயன்படவில்லை; சில பிராந்தியச் சிற்றரசுகளை அது அவ்வப்போது சிறிது காலம் ஆட்சி செய்திருந்தாலும் கூட. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையோடு கிறிஸ்தவ மதம் இலங்கைக்குள் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் கருவியாக பிரவேசித்த போது அதனை ஓர் அந்நிய - ஆக்கிரமிப்பு மதமாகக் கருதி இலங்கையின் உள்ளூர் மதச் சக்திகள் அனைத்தும் அதற்கு எதிராக ஒன்றுசேரக் கூடிய ஒரு தளம் அமைந்தது. அத்துடன் நவீனமடைந்துவிட்ட கிறிஸ்தவ மதத்திற்கு ஈடு கொடுக்கக்கூடிய விதத்தில் இம்மதங்கள் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதுவே மத மறுமலர்ச்சி இயக்கங்களின் பின்னணியாகும். இலங்கையில் உள்ளூர் மதச் சக்திகள் அனைத்தும் காலனித்துவ ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்றுசேரும் போக்கு உருவாகவில்லை. முதலில் அவை தனித்தனியாக, ஆனால் ஒன்றோடொன்று முரண்படாத விதத்தில் ஒன்றை ஒன்று வளப்படுத்திக்கொண்டு பயணித்தன. பின்னர் தனித்தனியாகப் பிரிந்தன. நாளடைவில், பிரித்தானியர் அறிமுகப்படுத்திய ஆட்சிமுறையின் பலவீனத்தைப் பயன்படுத்தி தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டு, அதிகாரத்தையும் சலுகைகளையும் தம்வசமாக்கிக்கொள்ள, காலனித்துவக் காலத்தில் உருவான புதிய சிங்கள - பௌத்த மேட்டுக்குடியினர் ஆட்சி அதிகாரத்தை தமது ஏகபோகமாக்கிக்கொண்டனர். இதற்குப் பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரமும் காரணமானது. இப்போக்கின் தொடக்கப் புள்ளியாக 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உருவான பௌத்த, இந்து, இஸ்லாமிய மத மறுமலர்ச்சி இயக்கங்களின் தோற்றத்தைக் கொள்ளலாம். இவற்றுள் பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கமே முன்னணி வகித்தது. எனினும் பௌத்த மத மறுமலர்ச்சி ஒரேவிதமாக வளர்ந்து வரவில்லை. அதன் வெவ்வேறு கட்ட வளர்ச்சிக்கும் தன்மைக்கும் ஏற்ப அதனை மூன்று கட்டங்களாக வகுக்கலாம்.

### பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தின் முதலாவது காலகட்டம்: 1833 - 1883

பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தினதும் இந்து மதச் சீர்திருத்த இயக்கத்தினதும் தொடக்க காலத்தை திட்டவட்டமாக வரையறுப்பது கடினம். போர்த்துக்கேயர் ஆட்சியின்போது, 44 வருடங்களில் களனி - களுகங்கைப் பிரதேசத்தில் மாத்திரம் 6 பாரிய கிளர்ச்சிகளும் 4 சிறிய கிளர்ச்சிகளும் வெடித்துள்ளன. ரோமன் கத்தோலிக்கத் தேவாலயங்கள், பௌத்தர்களினதும் இந்துக்களினதும் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தன. போர்த்துக்கேயர் பௌத்த, இந்து வழிபாட்டுத் தலங்களை அழித்து, கோவில் நிலங்களை தேவாலயங்களுக்கு மாற்றினர். போர்த்துக்கேயர்கள் காலத்தில் ஏனைய மதங்கள் தடைசெய்யப்படவில்லை. இருப்பினும், கத்தோலிக்க மதத்துக்கு மாறியவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் வரி விலக்குகள் போன்றன கிளர்ச்சியாளர்களின் ஆத்திரத்துக்கு காரணமாகின. இத்தகைய கிளர்ச்சிகளில் 'எதிரில்லே ரால (Edirille Rala)' போன்ற ரோமன் கத்தோலிக்கர்கள்கூடப் பங்கு கொண்டுள்ளனர்.

டச்சுக்காரர்களின் ஆட்சியின் ஆரம்பகாலத்தில், பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் மாத்திரமல்ல ரோமன் கத்தோலிக்கர்கள்கூட பொது இடங்களில் மத வழிபாடுகளை நடத்துவது தடுக்கப்பட்டது. புரட்டஸ்தாந்தியருக்கு வழங்கப்பட்ட சிவில் உரிமைகளை மற்றவர்களுக்குத்தர மறுத்தனர். ஆயினும்

ஐரோப்பாவில் ஏற்பட்ட மதம் தொடர்பான அணுகுமுறை மாற்றத்தால் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தத் தொடங்கினர்.

இக்காலப்பகுதியிலேயே ஐரோப்பியர் ஆட்சிசெய்த கரையோரப்பகுதிகளில் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் முயற்சியை, கண்டி இராச்சியத்தை மையமாகக்கொண்ட பௌத்த மதப்பீடங்கள் மேற்கொண்டன. இந்நடவடிக்கைகள் வலிவிட்ட சரணங்கர (Weliwita Saranankara 1698 - 1778) தேரரால் தொடங்கப்பட்டது. அவரது மாணவர்கள் மூலம் கரையோர மாகாணங்களுக்கு இது பரவியது. இது கண்டி இராச்சியம் வீழ்ச்சியுற்ற பின்னரும் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல, (Hikkaduwe Sri Sumangala) இரத்மலானை தர்மலோக (Ratmalana Dharmaloka) அவரது மாணவர் ஸ்ரீ தர்மராம (Sri Dharmarama) மற்றும் பண்டிட் படுவந்துடாவே தேவரக்ஷிதா (Batut Vantul Dave Devarakshita) ஆகியோர் இவ்வியக்கத்தின் முன்னோடிகளாவர்.

கண்டி இராச்சியத்தின் பௌத்த அதி உயர் பீடமான சியாம் நிகாய பிக்குகளை கொயிகம சாதியிலிருந்து மாத்திரமே நியமிப்பது வழமையாக இருந்தது. இதனால் அதிருப்தியுற்ற புதிதாக வளர்ச்சிபெற்றுவந்த தனவந்த சாதிக்குழுக்கள் பர்மாவிலிருந்து பௌத்த துறவிகளை வரவழைத்து கொயிகம அல்லாத கரையோரச் சிங்கள, பௌத்த உயரடுக்கு உறுப்பினர்களுக்கான அமரபுர நிக்காயாவை (Amarapura Nikaya) 1803 இல் நிறுவினர். அதேபோன்று ராமண்ணா நிக்காயா (Ramanna Nikaya) 1864 இல் நிறுவப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் பௌத்த துறவுச் சீர்திருத்தத்தின் ஒரு முக்கியமான நிகழ்வு, இரத்மலானையில் பரம தம்ம செட்டிய பிரிவேன (Parama Dhamma Chetiya Pirivena) 1845 இல் நிறுவப்பட்டமையாகும். இப்பௌத்த உயர்கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1873இல் மாளிகாகந்தவில் வித்யோதய பிரிவேனவையும் (Vidyodaya Pirivena), 1875இல் பேலியகொடையில் வித்யாலங்கார பிரிவேனவையும் (Vidyalankara Pirivena) நிறுவினர்.

கண்டி இராச்சியம் 1815இல் பிரித்தானியரின் சூழ்ச்சியால் வீழ்ந்து கண்டியப் பிரதானிகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மீறப்பட்ட பின்னர், குறிப்பாக 1818 வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் பின்னர், அங்கு ஏற்பட்ட அதிருப்திகள் 1840களில் வெளிப்படத் தொடங்கின. 1848இல் இடம்பெற்ற மாத்தளைக் கிளர்ச்சியில் இவ் அதிருப்திகள் வெளிப்பட்டன. ஆயினும் பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகப்பட்ட பின்னர், நாடு நவீன காலத்துக்குள் பிரவேசிக்கத் தொடங்கி, அதற்கேற்ப நவீன அரசியலமைப்பை 1833இல் அறிமுகப்படுத்திய பின்னர் உருவான பௌத்த மத எழுச்சியை, புதிய வகையிலான மதச் சீர்திருத்த இயக்கங்களின் தொடக்கமாகக் கருதலாம்.

இவ் அரசியலமைப்பு அதுவரை பல்வேறு விதமான அதிகார, நிர்வாகப் பரவலாக்கல் முறைகளைக் கொண்டிருந்த இலங்கையின் ஆட்சியை ஒரே மத்தியப்படுத்தப்பட்ட அரசிடம் கையளித்தது. இவ்வதிகாரம் கொழும்பில் மையங்கொண்டு, கொழும்பை பிரித்தானியாவில் இருந்து கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. கோல்புரூக்கின் சிபாரிசின்படி, கல்வியின் உள்ளடக்கம் சாராம்சத்தில் மேற்கத்திய, கிறிஸ்தவ, ஆங்கிலமயமானதாக இருக்க வேண்டும். அத்துடன் பாடசாலைகள் அனைத்தும் கிறிஸ்தவ மதகுருமார்களின் கைகளில் விடப்படவேண்டும் என்பதாகவே இருந்தது. இதனால் ஆங்கிலமொழிக்கும், ஆங்கிலக்கல்விக்கும், ஆங்கிலம் கற்றவர்களுக்கும், ஆங்கில நிர்வாகத்தில் இணைந்து நிர்வாகம் புரியும் சுதேச அதிகாரிகளுக்கும் இருந்த அந்தஸ்து, சுதேசமொழிகளில் கற்றவர்களுக்கும், அதுவரை அதிகாரக் கட்டமைப்பின் உச்சத்தில் இருந்த நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கும், அவற்றைத் தாங்கிநின்ற மதகுருமாருக்கும் இல்லாமல் போய்விட்டது. அத்துடன் ஆங்கிலக்கல்வி என்பது கிறிஸ்தவ மதத்துடன் கலந்து வழங்கப்பட்டதனால் ஆங்கிலக்கல்வி கற்றவர்கள், ஆங்கிலக் கலாசாரத்தைப் பின்பற்றும் ஒரு புதிய அணியாக உருவாகினர். பெரும்பாலும் சிங்களவர்கள், தம்மைக் கிறிஸ்தவர்கள் என அடையாளப்படுத்திக்கொள்வதில் பெருமை கொண்டதால் சுதேச கலாசாரம் சவாலுக்குள்ளானது.

இதன் தொடர்ச்சியாக, 1865ஆம் ஆண்டின் கல்விக்குழுவிற்குச் சாட்சியமளிக்க, ஸ்ரீ சுமங்கல அல்லது வஸ்கடுவே சுபூதி போன்ற ஓர் உயர்மட்டப் பௌத்தத்துறவிகூட அழைக்கப்படவில்லை. அத்துடன், விகாரைக்கும் கோவிலுக்கும் சொந்தமான நிலங்களைக் குத்தகை

எடுத்தோர் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானமும், ராஜகாரியமுறை நீக்கப்பட்டதும் இவர்களது நிலைமையை ஆட்டங்கொள்ள வைத்தது.

இதற்குமேல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப்போல, 1860களில் மிஷனரிகள் ஜுபிலிக் கொண்டாட்டங்களை விமரிசையாகக் கொண்டாடியமை, பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்களிற்கு விசனத்தை அளித்தது. அத்துடன் சி.எம்.எஸ். (Church Mission Society) மற்றும் வெஸ்லியன்கள், பௌத்தத்தைத் தாக்கும் ஏராளமான துண்டுப்பிரசுரங்களை சிங்களத்தில் அச்சிட்டு வெளியிட்டனர். இதற்கு எதிர்வினையாக சியாம் மன்னரின் உதவியுடன் காலியில் அச்சகம் ஒன்றை நிறுவி பதிலடி கொடுக்க பௌத்தர்கள் துணிந்தார். அவர்கள் பௌத்தப் பத்திரிகையான லக்மினி பஹானையை 1862இல் வெளியிடத் தொடங்கினர். இது நிதி நெருக்கடியின் காரணமாக 1867இல் நிறுத்தப்பட்டது. இருப்பினும், செப்டம்பர் 1867இல், இரண்டாவது செய்தித்தாள், 'சத்திய மார்கய' வெளிவந்தது. 1860 ஆகும் போது சுதேசமொழியில் கல்விகற்ற கணிசமான தொகையினர் உருவாகியிருந்தனர். இக்காலப் பகுதியிலே சுதேச பாடசாலைகளும் பரவலாக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதுவரை ஓலைச்சுவடிகளில் கைகளால் எழுதியும் வாசித்தும் வந்தவர்களுக்கு, அச்சு இயந்திரத்தின் மூலம் தாள்களில் அச்சடித்து ஆயிரக்கணக்கில் பிரசுரங்களை வெளியிடுவது பெரும் ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தின. ஒவ்வொரு சமூகத்தின் வளர்ச்சியிலும் கடதாசியினதும் (Paper) அச்சகத்தினதும் கண்டுபிடிப்பு ஒரு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தின என்பதை இங்கே மீண்டும் புரிந்து கொள்ளலாம். அச்சு ஊடகங்களின் அறிமுகம் மக்களுக்கு வியப்பையும் வாசிக்கும் ஆர்வத்தையும் தூண்டின. அச்சிடப்பட்ட நூல்களும் பத்திரிகைகளும் வெளிவர ஆரம்பித்தபோது அதன் தாக்கம் சமூகத்தில் பெரிதாக இருந்தது. இது பிரித்தானியர் காலத்திற்கு முன்னர் காணப்படாத ஒரு நிலைமையாகும்.

இலங்கையின் முதலாவது அச்சகம் ஒன்று, ஒல்லாந்தர் காலத்தில், 1734ஆம் ஆண்டுக்கும் 1736ஆம் ஆண்டுக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்டபோது, அது கத்தோலிக்க மதப் போதனைகளை முன்னெடுக்கின்ற சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புப் பிரசுரங்களையும் நூல்களையுமே பிரதானமாக வெளியிட்டன.

அப்போது இலங்கையில் இன்னும் ஆங்கிலமொழி பரவலாக அறியப்பட்டிருக்கவில்லை. ஆங்கிலேயரின் ஆட்சியின்போதுதான் அச்சுப் பிரதிகளினதும் அச்சு ஊடகங்களினதும் பயன்பாடும் செல்வாக்கும் அதிகரித்தன. 1860ஆம் ஆண்டில் முதலாவது சிங்களப் பத்திரிகை வெளிவந்தபோது, இலங்கையில் பல ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்தன. ராபர்ட் வில்மட் ஹோர்டன் (Robert Wilmot Horton) ஆளுநராக இருந்தபோது முதன்முதலில் 'கொழும்பு ஜர்னல்' (The Colombo Journal - 1832) தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 'ஒப்சேவர் அண்ட் கொமர்சியல் அட்வர்ரைசர்' (Observer and Commercial Advertiser - 1834), 'சிலோன் க்ரோனிக்கிள்' (The Ceylon Chronicle - 1837) ஆகியன தொடங்கப்பட்டன. 'சிலோன் ஹெரால்ட்' (Ceylon Herald) செப்டம்பர் 1838இல் வெளியிடப்பட்டது.

பௌத்த மறுமலர்ச்சி என்பதை மேலோட்டமாக, மிஷனரிகளின் தாக்குதலுக்கான பௌத்தர்களின் எதிர்வினை என்று கூறலாம். கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு எதிரான செயற்பாடுகள் ஆங்காங்கே பதிவாகியிருந்தாலும், உண்மையில் 1860களில்தான் பௌத்தர்கள் தங்களைத் தாங்களே ஒருங்கிணைத்துக்கொண்டு கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு எதிராக கூட்டுச் செயற்பாட்டில் இறங்கினர். மிஷன் அமைப்புகள் பயன்படுத்திய அதே ஆயுதங்களான பொது விவாதங்கள், அச்சகம், பாடசாலைகள், கல்வி ஆகியவற்றை அவர்களும் கையில் எடுத்தனர்.

1860ஆம் ஆண்டின் பின்னர் சிங்களப் பத்திரிகைகளும் நூல்களும் படிப்படியாக வெளியாகி மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கின. வானொலியும், தொலைக்காட்சியும், சினிமாவும் இல்லாத அக்காலத்தில் அவை வாசிப்போருக்கு உற்சாகமளிக்கும் பொழுதுபோக்காகவும் திகழ்ந்தன. எழுத, வாசிக்கத் தெரியாதோர்கூட வாசிக்கக்கூடியவர்களைக்கொண்டு அவற்றை வாசிக்கவைத்து சூழநின்று ஆர்வத்தோடு கேட்பதும் விவாதிப்பதும் அன்றாட நிகழ்வாக மாறின. இவை அனைத்துமே மதச் சார்பானவையாகவும் கிறிஸ்தவ மத எதிர்ப்புணர்வு கொண்டவையாகவும் இருந்தன. அக்காலத்தில் எழுத்துப்புலமை உள்ள ஒருசிலரே இருந்ததாலும், அவர்கள் திறமைசாலிகளாக இருந்ததாலும், அவர்கள் பேசிய மதவாதம், தேசியவாதத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்புவாதத்தையும் கொண்டிருந்ததாலும், அவர்கள் மிகவும் பிரபல்யம் பெற்றனர்.

## விவாதங்கள்

கிறிஸ்தவ மிஷனரிகள் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் புத்தகங்கள் மூலம் தமது மதத்தைப் பரப்பத்தொடங்கி பௌத்த மதத்தையும் இந்து மதத்தையும் மூடநம்பிக்கை மலிந்த, சிலைகளையும் மரங்களையும் கற்களையும் வழிபடுகின்ற, பேய் - பிசாசு நம்பிக்கைகள் நிரம்பிய, சோதிடம் - ஐதீகங்கள் ஆகியவற்றுக்கு அடிமையாகியுள்ள மதங்கள் எனவும், அதனை வழிபடுவோர் முட்டாள்கள் எனவும் பிரசாரம் செய்தன. நாளடைவில் இவ்விவாதங்கள் பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கேள்வி எழுப்புவனவாக அமைந்தன. இவ்வாறு 1849இல் வெஸ்லியன் மிஷனரியின் போதகர் டி.ஜே. கோகர்லி (Rev. D.J. Gogerly), 'கிறிஸ்தவப் பிரக்ஞை' '(Christian Pragnapthi') என்ற பிரசுரத்தை வெளியிட்டபோது, வண. மிகட்டுவத்தே குணானந்த தேரர் (Ven. Migettuwatte Gunananda Thera) 1862இல் 'துர்லப்தி வினோதிமி' (Durlabdi Vinodimi) என்ற பிரசுரம் மூலம் அதற்குப் பதிலளித்தார். அதற்கு மேலாக, ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர் (Rev. Migettuwatte Gunanan da Thera) 1862-63 காலகட்டத்தில் 'கிறிஸ்தவ வாத மர்தனய' (Christian Vada Mardanaya) மற்றும் 'சம்யக் தர்சனய' (Samyak Darshanaya) ஆகிய பதிலுரைகளை எழுதி பல சஞ்சிகைகள் ஊடாகவும் ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் மூலமும் மறுப்புரை வழங்கினார்.

இவ்வாறான ஐந்து விவாதங்கள் நடைபெற்றன. 1865இல் இவற்றுள் முதல் இரண்டும் எழுத்து வடிவில் முறையே பத்தேகமயிலும் (Baddegama) வரகொடயிலும் (Varagoda) இடம்பெற்றன. அதன்பின்னர் நடைபெற்ற மூன்று பிரபல விவாதங்கள் நேரடியாகவும் பகிரங்கமாகவும் நடைபெற்றன. இவற்றுள் முதலாவது விவாதம் உடன்விட்டவிலும் (Udanvita - 1866), இரண்டாவது விவாதம் கம்பளையிலும் (Gampola - 1871), மூன்றாவது விவாதம் பாணந்துறையிலும் (Panadura - 1873) நடைபெற்றன. இவற்றுள் பாணந்துறை விவாதம், அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது; நாடு முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, அடுத்த தலைமுறைகளுக்கும் அது பரவியது.

பாணந்துறை விவாதம் இடம்பெற்றதற்கான பின்புலக் காரணம் இதுதான்: 'வெஸ்லி செப்பலைச்' சேர்ந்த வண. டேனியல் கோகர்லி (Rev. Daniel Gogerly) தொடர்ச்சியாக பௌத்த மதத்தை மட்டம்தட்டும் பிரசுரங்களை வெளியிட்டுவந்த அதேசமயம், வண. டேவிட் டி சில்வா (Rev. David de Silva) பௌத்தத்தைக் கண்டிக்கும் தொடர் சொற்பொழிவுகளை பாணந்துறை மெதடிஸ்ட் தேவாலயத்தில் வழங்கி வந்தார். இதற்கெதிராக வண. மிகெட்டுவத்த குணானந்த தேரர், தம்மோடு நேரடியாக வாதிட முன்வருமாறு அவர்களுக்கு அழைப்புவிடுத்தார். இதற்கமையவே இவ்விவாதம் நடைபெற்றது.



ஹிக்கடுவ சுமங்கல தேரரும்
ஹென்றி ஸ்டீல் ஒல்கோட்டும்
Image Source - sinhalasangha.wordpress.com

1873 ஆகஸ்ட் 26 முதல் 28 வரை, மூன்று நாட்கள், இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விவாதம், சிங்களம், ஆங்கிலம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசவல்ல வெஸ்லியன் செப்பலைச் சேர்ந்த வண. டேவிட் டி சில்வாவுக்கும் (Rev. David de Silva), வாதத்திறமை மிக்க வண. மிகெட்டுவத்த குணானந்த தேரருக்கும் (Ven. Migettuwatte Gunananda Thera) இடையில் நடைபெற்றது. கிறிஸ்தவ மதகுருவான டேவிட் டி சில்வாவின் அணியில் உயர்தர கல்விமான்களும் அறிஞர்களும் இணைந்திருந்தனர். வண. குணானந்த தேரருக்குப் பின்னால் பிரபல பௌத்த மதகுருமார்கள் அணிதிரண்டிருந்தனர். இருதரப்பையும்

ஒப்பிடுகையில் வண. குணானந்த தேரரின் வெற்றி சாத்தியமற்றதாகவே தோன்றியது.

இந்த விவாதம் கடவுள், ஆன்மா மற்றும் உயிர்த்தெழுதல், கர்மா, மறுபிறப்பு, நிர்வாணம் போன்ற தலைப்புகளைச் சுற்றிச் சுழன்றது. இந்த விவாதத்தைக் காண்பதற்கு சுமார் 6000 பேர் நாடு முழுவதும் இருந்து திரண்டனர். அதோடு சர்வதேச பிரதிநிதிகள் சிலரும் வருகை தந்திருந்தனர். சிங்களத்தில் நடைபெற்ற இந்த வாதம் வண. குணானந்த தேரருக்கு சாதகமாக அமைந்தது. வண. டேவிட் டி சில்வா பாளி மொழியில் தமக்கிருந்த புலமையை சிறப்பாக வெளிக்காட்டினார். ஆனால் அவரது உரை, மக்களைக் கவர்வதாக இருக்கவில்லை. வண. குணானந்த தேரரது நையாண்டியும் நகைச்சுவையும் பொருளாழமும் மிக்க வாதம், பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. எழுப்பப்பட்ட சகல கேள்விகளுக்கும் விடையளித்துவிட்டு பைபிளின் பழைய 10 கட்டளைகளுக்கும் புதிய 10 கட்டளைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றியும் மிகச் சாமர்த்தியமாக வாதிட்டு தனது நிலைப்பாட்டை அவர் நிலை நிறுத்தினார். விவாத முடிவில் பௌத்த பார்வையாளர்கள் 'சாது.. சாது' என உற்சாகக் குரல் எழுப்பி, நாம் வெற்றிபெற்று விட்டோம் என்ற பெருமையோடு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

சிங்கள பௌத்தர்களின் அடையாளத்தையும் பெருமையையும் மீட்டெடுத்த முக்கிய தருணமாக இது கருதப்பட்டது. இவ்விவாதத்தின் வெற்றி அடுத்த தலைமுறை பௌத்த ஆர்வலர்களிடமும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக, பாணந்துறை விவாதத்தை தனது ஒன்பதாவது வயதில் பார்க்க வந்த அநகாரிக தர்மபால இதனால் ஈர்க்கப்பட்ட ஒருவர். விவாதத்தின் போது அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்த கலாநிதி ஜே.எம். பீப்பிள்ஸ் (Dr. J. M. Peebles) நாடு திரும்பி, 'த சிலோன் டைம்ஸ்' (The Ceylon Times) இதழின் ஆசிரியர் ஜான் கேப்பரிடமிருந்து (John Capper) வாங்கிய உரையின் அடிப்படையில், 1875இல் 'பௌத்தமும் கிறிஸ்தவமும் நேருக்கு நேர்' என்ற தலைப்பில் ஒரு கையெழுத்துப் பிரதியை வெளியிட்டார். இது ஆகஸ்ட் 1873இல் பான்துராவில் நடைபெற்ற பௌத்த சர்ச்சையின் முழுவிவரம் என்று தலைப்பிடப்பட்டது (A Full account of the Buddhist controversy held at Pantura in 1873). இதுவே ஹென்றி ஸ்டீல் ஒல்கோட்டை (Henry Steel Olcott) இத்தீவின் மீது கவனம் செலுத்தத் தூண்டியது.

இக்காலப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது கட்ட பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தின் சிறப்பம்சங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். ஒன்று, பௌத்தத்தின் பெருமையை இது முன்னெடுத்தாலும் ஏனைய சுதேச மதங்களுக்கு எதிராக திசைமாறிச் செல்லவில்லை. அதற்கு மாறாக, ஏனைய சுதேச மதங்களான இந்து மதத்துக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் தன்னம்பிக்கை ஊட்டுவதாகவே அதன் செயற்பாடுகள் அமைந்தன. இரண்டு, அதன் இலக்கு பெரும்பாலும் மிஷினரிகளாக இருந்தாலும், அது காலனித்துவத்துக்கும் எதிரான சில அம்சங்களைக் கொண்டிருந்தது. மூன்று, இக்காலகட்டத்தில் பேசப்பட்ட பௌத்தம், அரசியல் பௌத்தமாக இருக்கவில்லை. நான்கு, மகாவம்ச சித்தாந்தமும் துட்டகெமுனு மனோபாவமும் இக்காலப்பகுதியில் காணப்படவில்லை. அதற்குக் காரணம் மகாவம்சம் இக்காலப்பகுதியில் இன்னும் பெரிதாக அறியப்படவில்லை.

### இந்து (சைவ) மத மறுமலர்ச்சி

சிங்களவர்களிடையே பௌத்த மறுமலர்ச்சி உருவான அதேவேளையில், தமிழர்கள் மத்தியிலும் இதேபோன்ற போக்குகள் உருவாகின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்து மதத்தின் மீட்சியானது, புத்த மதத்திற்கு முன்பே, ஒரு முழுத்தலைமுறைக்கு முன்னதாகத் தொடங்கியது. ஒருவகையில் இந்து மதம் மிஷனரிகளின் அத்துமீறலை எதிர்ப்பதில் மிகவும் சாதகமான நிலையில் இருந்தது. ஏனெனில் இந்தியாவில் இந்து மதத்தின் மகத்தான வளங்களைப் பெறுவது சாத்தியமானது. ஆயினும் சிங்களவர் மத்தியில் ஏற்பட்ட அளவுக்கு மக்கள் தழுவி, இது இயக்கமாகப் பரிணமிக்கவில்லை. அதற்கு ஒரு காரணம், காலனித்துவ விரோதப்போக்கு வலுப்பெறாமல், அரசுடன் சமரசமாகச் செல்லும்போக்கு மேலோங்கி இருந்தமையும், அரசின் ஆதரவோடு சாதிக் கட்டமைப்பையும் வெள்ளாள மேட்டுக்குடிகளின் மேலாதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்வது அதன் பிரதான நோக்கமாக இருந்தமையுமாகும். இருப்பினும் சிங்களமொழி வளர்ச்சிக்கு பௌத்த மறுமலர்ச்சி பெரும் பங்களிப்புச் செய்ததைப்போலவே, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு இந்து (சைவ) மத மறுமலர்ச்சி கணிசமான பங்களிப்பினைச் செய்தது.

தமிழ்ப் பகுதியில், குறிப்பாக யாழ் குடாநாட்டில், நிலைகொண்டிருந்த அமெரிக்க மிஷனரிகள்



ஆறுமுக நாவலர்
Image Source - tamil.wiki/wiki

தென்பகுதியில் இயங்கிய மிஷனரிகளைப்போல கடுமையான இந்து எதிர்ப்புவாதத்தைக் கடைப்பிடிக்காததும் இதன் சமரசப் போக்கிற்கு ஒரு காரணம். இதற்கு நல்ல உதாரணம், இந்துமத மறுமலர்ச்சிக்குத் தலைமைதாங்கிய ஆறுமுக நாவலர்தான் பைபிளைத் தமிழில் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்தார். அதேசமயம், இதே ஆறுமுக நாவலர்தான் சாதிக் கட்டமைப்பில் அடிமட்டத்தில் இருந்த ஒரு மாணவனை, தான் கல்வி புகட்டிய பாடசாலையில் சேர்த்ததற்காக ஆட்சேபனை தெரிவித்துப் பதவி விலகினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கரையோரப் பகுதியிலும் இருந்த ஏறக்குறைய அனைத்து இந்துக்கோயில்களும் போர்த்துக்கேயர்களாலும் டச்சுக்காரர்களாலும் அழிக்கப்பட, எஞ்சியிருந்தவை சிதைந்துபோன நிலையில் இருந்தன. இலங்கையின் இந்துக்கோயில்கள், இந்தியாவில் உள்ளதைப் போலல்லாமல், சாதாரணமான அளவில்தான் இருந்தன. அதற்கான காரணம், அவற்றைப் பராமரிப்பதற்கான போதிய வளங்களை அவை கொண்டிருக்கவில்லை என்பதாகும்.

அழிக்கப்பட்ட கோயில்களை புனருத்தானம் செய்வதும், அழிவுறும் சைவ ஆவணங்களை மீட்டுப் பராமரிப்பதும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றானது.

இலங்கையில் இந்து மறுமலர்ச்சியின் முதற்கட்டத்திற்கு தலைமை தாங்கியவர் சைவ அறிஞரான ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணத்தில் உள்ள செயின்ட் போல்ஸ் வெஸ்லியன் மிஷன் பள்ளியில் கல்வி பயின்ற இவர், நவீன கல்விமுறையின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தார். காலனித்துவ ஆட்சியின்கீழ் புதிதாக உருவாகிவரும் அரசுத்துறை உத்தியோகங்களில் கிடைக்கக்கூடிய வாய்ப்பைப்பற்றி அவர் முன்னுணர்ந்து, தமிழ் மக்களின் கல்வியில் அக்கறைகாட்டத் தொடங்கினார. இதற்காக இந்துப் பாடசாலைகளை அமைப்பதிலும் ஆர்வம் காட்டினார். ஆயினும் அக்கல்வியை உயர் சாதியினருக்கும் ஆண்களுக்கும் மாத்திரமே உரியதாக அவர் கருதினார். அவரது சாதி அடிப்படையிலான சித்தாந்தம் உயர் சாதியைத் தவிர ஏனையோருக்கு பாடசாலைகளில் அனுமதி வழங்குவதை எதிர்த்தது. மறுபுறத்தில் கிறிஸ்தவப் போதனையால் சைவ மதத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை தடுப்பதற்கு அவர் சைவ வளர்ச்சியில் கூடியகவனம் செலுத்தினார். இவர் சைவ மத மீட்சியில் காட்டிய அக்கறை மறைமுகமாக தமிழ் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைந்தது

அதேசமயம் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் அவர் வலியுறுத்தினார். குடாநாட்டில் நன்கு வேரூன்றிய மிஷன் பள்ளிகளை எதிர்கொள்ள வண்ணார்பண்ணையில் ஒரு போட்டி ஆங்கிலப்பள்ளி திறக்கப்பட்டது. அங்கு சைவக்கல்வியை முற்றிலும் சைவச் சூழலில் கற்பிக்கக்கூடிய பாடப்புத்தகங்கள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகளை நிறுவுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. 1872ஆம் ஆண்டில் அவர் சைவப்பிரகாச வித்யாசாலையை நிறுவினார். அங்கு இந்துக் குழந்தைகளுக்குத் தேவையான மதப் பின்னணியுடன், ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. 1883இல், சைவ சமயப் பரப்புரைக்கான சங்கமான சிவ பரிபாலன சபை நிறுவப்பட்டது. பின்னர், ஒரு செல்வாக்குமிக்க நாளிதழான ‘ஹிந்து ஆர்கன்’ வெளியானது. மேலும் பல செய்தித்தாள்களும் வெளியிடப்பட்டன. மாநாடுகள் மற்றும் பொது விரிவுரைகள் நடத்தப்பட்டன. பாடப்புத்தகங்கள்

அச்சிடப்பட்டன. தென்பகுதியிலே மதம்மாறி ஆங்கிலம் கற்று ஆங்கிலப் பாணியில் வாழ்க்கை நடத்திய மேட்டுக்குடி ஒன்று உருவாகியதைப்போல, தமிழ் மக்கள் மத்தியிலே தமது கலாசாரத்தை மறந்த, ஆங்கிலப் பாணியிலான மேட்டுக்குடி ஒன்று உருவாகாமைக்கு, இக்காலத்தில் இடம்பெற்ற இந்து (சைவ) மறுமலர்ச்சியின் தாக்கம் ஒரு பிரதான காரணமாகும்

## இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்

இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் நிலைமை ஏனைய பௌத்த, இந்து மதங்களைப் பின்பற்றுவோரின் நிலைமையைவிட வேறுபட்டதாக இருந்தது. இவர்கள் நாட்டில் ஒரு பகுதியில் மாத்திரம் செறிந்து வாழவில்லை. சில பகுதிகளில் அடர்த்தியாக வாழ்ந்தாலும், பல பகுதிகளில் பரந்தே வாழ்ந்தார்கள். எண்ணிக்கையில், ஒப்பீட்டளவிலே, சிறுபான்மையாக இருந்தனர். அத்தோடு போர்த்துக்கேயர் காலத்தில் அவர்கள் அடர்த்தியாக வாழ்ந்த கொழும்புப் பிரதேசத்தில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு விரட்டியடிக்கப்பட்டார்கள். எனவே, ஏனைய மக்களைப் போலல்லாது இம்மக்களை மதம் சார்ந்த கலாசாரமே மேலோட்டமாக ஒன்றிணைந்தது. இவர்கள் இந்துக்களைப் போலவே தமிழ்மொழியைப் பேசினாலும், திருமண உறவுமுறையாலோ வைபவங்கள் ஊடாகவோ அவர்களுடன் இரண்டறக் கலக்கவில்லை. அதற்கு இருதரப்பினரும் பின்பற்றுகின்ற மதத்தின் அடிப்படைச் சித்தாந்த வேறுபாடும் ஒரு முக்கிய காரணமாகும். உதாரணமாக, ஆப்ரஹாம் மதத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம்கள் மாட்டிறைச்சியை விரும்பிச் சாப்பிடுவார்கள். அதேசமயம் இந்துக்கள், பசுவைக் கடவுளாகப் போற்றுவார்கள். இந்த முரண்பாட்டுடன், இந்து மதத்தில் வேரூன்றியுள்ள சாதியவாதமும் இவர்களுக்கிடையிலான இணைவுக்கு ஒரு பெரும் தடையாக இருந்து வந்துள்ளது.

இவர்களது தாய்மொழியாக தமிழ் இருந்ததுடன், இவர்களுக்குத் தாய்மொழி மீது பற்றும் இருந்தது. அதனால் நீண்டகாலம்வரை தமிழ் மக்களுடன் இவர்களுக்கு நெருங்கிய உறவு இருந்தது. அதேசமயம் சிங்கள மக்களுடனும் நெருங்கிய உறவைப் பேணி வந்தார்கள். இவர்களில் ஒரு சிறுபகுதியினர் சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்டிருந்தனர். இந்தியத் துணைக்கண்டத்தில் மொகலாயர் ஆட்சிசெய்தபோதும், அரேபியர்கள் கடல் வணிகத்தில் கோலோச்சியபோதும் வர்த்தகத்தில் வளர்ச்சிபெற்ற ஓர் அணியொன்று இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் உருவாகி செல்வாக்குடன் திகழ்ந்தது. மன்னர் காலத்திலும் இவர்களுக்கு அங்கீகாரம் இருந்ததால் இவ்வர்த்தக அணியினருக்கு முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பெரும் மரியாதை இருந்தது.

போர்த்துக்கேயர் காலத்தில் இவர்களது கட்டுப்பாட்டில் இருந்த கறுவா வியாபாரம் பறிபோனது. கொழும்புக் கோட்டைப்பகுதியில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். எனினும் கண்டி அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. ஒல்லாந்தர் காலத்தில் இவர்கள் மீதான வர்த்தகத்தடை மெல்ல மெல்லத் தளர்ந்தாலும் ஆங்கிலேயர் காலத்தில் அவர்கள் மீண்டும் தங்களுடைய வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். இவ்வாறு செல்வாக்குப்பெற்ற இஸ்லாமிய வர்த்தகர்கள் கொழும்பையும் கண்டியையும் மையமாக்கிக் கொண்டனர். பிரித்தானியரின் ஆட்சியில் ஒரு சமயத்தில் கொழும்பு, கண்டி ஆகிய இரண்டு நகரங்களின் பிரதான கட்டடங்கள் அநேகமாக அனைத்துமே இஸ்லாமிய வர்த்தகர்களின் கட்டுப்பாட்டில்தான் இருந்தன. பின்னர் இஸ்லாமியர் என்ற அணி குஜராத்தி, மேமன், மலையாளி , பாகிஸ்தானி, மலேயர் எனப்பல புதிய வரவுகளையும் இணைத்துக்கொண்ட சொற்பதமானது.

பிரித்தானியர் காலத்தில், முஸ்லிம்கள் மத்தியில், இயந்திரக் கைத்தொழில் மையத் தொழிலதிபர்கள் அற்ற வணிக அணியே பெரிதும் வளர்ந்து வந்தது. அதனால் அதனுடைய கண்ணோட்டமும் மிகக்குறுகியதாகவே இருந்தது. அவர்கள் ஆரம்பத்தில் கிறிஸ்தவப் பாடசாலைகளையும் மேற்கத்தியக் கலாசாரத்தையும் இஸ்லாமிய மதத்துக்கு எதிரானதாகக் கருதினர். இதனால் கிறிஸ்தவ மதமாற்றம் ஏனைய இரு பிரதான மதத்தினரையும்விட, இவர்கள் மத்தியில் குறைவாக, அறவே இல்லை என்ற அளவுக்கு இறுக்கமாக இருந்தது. நவீன விஞ்ஞானக் கல்வியையோ, ஆங்கிலக்கல்வியையோ கற்றால் மதநம்பிக்கை இல்லாமற்போகும் என அஞ்சினார்கள். முஸ்லிம்கள் மத்தியில் படித்த அணி ஒன்று அல்லது புதிய படித்த பணக்கார வர்க்கம் ஒன்று உருவானால், சமூகத்தில் தங்களுடைய செல்வாக்கு இல்லாமல் போய்விடுமோ என்று இவர்கள் மத்தியிலிருந்த செல்வாக்குமிக்க பழமைவாத அணியினர்

அஞ்சினர்; பெண்கள் கல்வி கற்றால் தமது ஆணாதிக்கம் பறிபோகும் என உணர்ந்தனர். இதுவே இப்பீதியின் பின்னால் இருந்த மற்றுமொரு காரணம்.

ஆயினும் வரலாற்றுப் போக்கிற்கு எதிராக நீண்டகாலம் தாக்குப்பிடிக்க முடியாது என்பதற்கிணங்க, முஸ்லிம்கள் கல்வி, அரசியல் மற்றும் சமூக அமைப்பு ஆகியவற்றில் மிகவும் பின்தங்கியிருந்தபோது, பௌத்த - இந்து மத மறுமலர்ச்சி இயக்கங்கள் வீசிய புயல், இஸ்லாமியச் சமூகத்தையும் தாக்கத்தொடங்கியது. அப்போது அரச பதவிகளில் முஸ்லிம்கள் உயரிடத்தை வகிக்காதபோதும், ஆங்கிலம் கற்ற சில சட்டத்தரணிகளும் மருத்துவர்களும் கட்டடக்கலை நிபுணர்களும் அவர்களிடையே உருவாகியிருந்தனர். இவர்கள் பௌத்த - இந்து மறுமலர்ச்சி இயக்கங்களைப் போலவே, தமது இஸ்லாமிய மதத்தைக் கற்றவண்ணம், தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொண்டு, நவீன ஆங்கிலக்கல்வியைக் கற்கமுடியும் என்பதைப் புரிந்துகொண்டு அதற்கான முயற்சிகளை எடுக்கத் தொடங்கினர். இதனால் இஸ்லாமிய மத மறுமலர்ச்சி தாமதமாக உருவானது. இதற்கு கண்டியைச் சேர்ந்த எம்.சி. சித்திலெப்பை (1838 1898) என்ற சட்டத்தரணி தலைமை கொடுத்தார்.

முஸ்லிம் இன அடையாளத்தை வலுப்படுத்தவும், முஸ்லிம்களின் சமூக மற்றும் அரசியல் முன்னேற்றத்துக்காகவும், முஸ்லிம் கல்வி இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க விரும்பிய இவர், 'முஸ்லிம் நேசன்' என்ற தமது அரபு - தமிழ் வார இதழை வெளியிட்டு, அதன்மூலம் அந்நோக்கத்தை அடையமுயன்றார். இலங்கை முஸ்லிம்களுக்குத் தமிழ் தாய்மொழியாக இருக்கும் அதேசமயம் அரபு, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் போதிய அறிவு இருக்கவேண்டும் என சித்திலெப்பை வலியுறுத்தினார். 1882ஆம் ஆண்டு, அவர் கொழும்பு மருதானையில் 'மத்ரஸதுல் ஸாஹிரா' எனும் முதலாவது முஸ்லிம் மத்ரஸாவை (இஸ்லாமிய மதப் பாடசாலை) அறிமுகப்படுத்தினார். பின்னர் 1892இல், இது சாஹிரா கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரியாக மாறியது. இம்மாற்றத்துக்கு ஒராபி பாஷாவின் தாக்கம் பெரிதும் காரணமாக அமைந்தது.

1883இல் பிரித்தானியக் காலனித்துவ அரசு ஒராபி பாஷாவை (Orabi Pasha) எகிப்தில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தியபோது, அவர் தன்னுடன் முஸ்லிம் அடையாளத்தைப் பற்றிய புதிய அறிவை இலங்கைக்குக் கொண்டுவந்தார். அவர் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இத்தீவில் இருந்தார். இவரது வருகையும் அவரது வழிகாட்டலும் இலங்கை முஸ்லிம் மத்தியதர வர்க்கத்துக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. அவர், மதநம்பிக்கையையும் அடையாளத்தையும் இழக்காமல் மேற்கத்திய கல்வியின் மூலம் பயன்பெறுவதற்கு, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவித்தார். அதேசமயம் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு ஊக்கமளித்தார். அதற்குத் தாய்மொழியுடன் அரபுமொழியும் கற்பிக்கப்படுத்தல் வேண்டும் என அறிவுறுத்தினார்.

ஒராபி பாஷாவின் வருகை சித்திலெப்பையின் பணிக்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்தது. இவ்வாறு இஸ்லாமிய மத மறுமலர்ச்சிக்கு வெளிச்சக்தியின் ஆதரவும் தேவைப்பட்டது. இதற்குமாறாக, பௌத்த மத மறுமலர்ச்சி ஒல்கோட் வரும்வரை நீண்டகாலம் சுயமாகவே உருவானது. இந்து மத மறுமலர்ச்சி தொடர்ச்சியாகவே சுயத்தன்மை கொண்டதாக இருந்தது; இந்தியாவின் தாக்கத்தால் பயன்பெற்றாலுங்கூட.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இலங்கையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களில் சிங்களவரும் தமிழர்களும் பயன்பெறக்கூடிய விதத்தில் தம்மைத் தகவமைத்துக்கொண்டாலும், இலங்கை முஸ்லிம் மக்கள் அதிலிருந்து வெகுவாக அந்நியப்பட்டிருந்தார்கள். கிறிஸ்தவ மதமாற்றம், மேற்கத்தியக் கலாசாரம் ஆகியவற்றிலிருந்து தமது தனித்துவ அடையாளத்தைப் பாதுகாத்து, தமது மத நம்பிக்கையைப் பேணிக்கொண்டு, ஒரு புதிய கல்விப் பாரம்பரியத்தை ஏற்படுத்தி, மேற்கத்தியக் கல்விமுறை - ஆங்கிலமொழி மீதான அணுகுமுறையை மாற்றி, கல்வியின் மதிப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தும் சவால் மிகுந்த பணியை இஸ்லாமிய மத மறுமலர்ச்சி இயக்கம் மேற்கொண்டது.

எனினும் இவ்வியக்கம் காலனித்துவத்துக்கு எதிரான ஒன்றாக இருக்கவில்லை. அவ்வகையில் இந்து மத மறுமலர்ச்சியைவிடவும் பின்தங்கியே இருந்தது. இலங்கை இந்துக்கள் மத்தியில் பிடிவாதமாகவும், பௌத்தர்கள் மத்தியில் இறுக்கமாகவும் காணப்பட்ட சாதிக் கட்டமைப்பில், மேலாதிக்கத்துக்கான போட்டி இக்காலப்பகுதியில் துலக்கமாகக் காணப்பட்டது. இப்போட்டி பௌத்த - இந்து மத மறுமலர்ச்சி

இயக்கங்களில் பிரதிபலித்தது. எனினும் முஸ்லிம்கள் மத்தியில் சாதிமுறை இல்லாததால் இஸ்லாமிய மத மறுமலர்ச்சி இயக்கம் மேற்தட்டு வர்க்க நலனைப் பாதுகாக்கும் விதத்தில் அமைந்தது.

## 1883 ஈஸ்டர் ஞாயிறு, கொட்டாஞ்சேனைக் கலவரம்

பாணந்துறை விவாதத்தின் பின்னர் பௌத்தர்களில் ஒரு சாரார், குறிப்பாகத் தேசிய உணர்வுபெற்ற இளைஞர்கள் தமது கோபத்திற்கான வடிகாலைத் தேடிக்கொண்டிருந்தனர். காலனித்துவத்துக்கு எதிராக சரியான முறையில் அணிதிரட்டக்கூடிய ஓர் அரசியல் கட்சியோ விடுதலை இயக்கமோ அப்போது உருவாகியிராததால், அவர்களது ஆத்திரம் கிறிஸ்தவ மத நிறுவனங்கள்மீது திரும்பியது எனும் செய்தியைத்தான் 1883இல் கொட்டாஞ்சேனையில் வெடித்த கலவரம் உணர்த்துகிறது. தற்போதுள்ள கொச்சிக்கடை புனித அந்தோணியார் தேவாலயத்திற்கு எதிரில் இக்கலவரம் நடைபெற்றது.

கொட்டாஞ்சேனை நீண்ட காலமாக ரோமன் கத்தோலிக்கத்தின் கோட்டையாகக் கருதப்பட்டது. ஆனால் பாணந்துறை விவாதத்தின் பின்னர் பௌத்தர்களின் கதாநாயகனாக மாறிவிட்ட வண. மிகெட்டுவத்த குணானந்த தேரர் அங்குள்ள விகாரையின் பொறுப்பை வகித்ததால், அப்பகுதியில் பௌத்த நடவடிக்கைகள் அதிகரித்தன. சில சமயங்களில் பதற்றமும் ஏற்பட்டது.

1840களின் முற்பகுதியில் கிறிஸ்தவ மிஷனரிகள் மீதான தாக்குதல்கள் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. எவ்வாறாயினும், மார்ச் 25, 1883 ஈஸ்டர் ஞாயிறு அன்று, கொட்டாஞ்சேனையில் நடைபெற்ற கலவரம்தான் பிரித்தானியர் ஆட்சியில் நடைபெற்ற முதலாவது பாரிய மதக்கலவரமாகும். இக்கலவரம் 1983இல் கரிய ஜூலை இனஒழிப்பு வன்முறை நடைபெறுவதற்குச் சரியாக 100 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று நடந்த கலவரத்தில் இரண்டு பேர், ஒரு பௌத்தர் மற்றும் ஒரு ரோமன் கத்தோலிக்கர், கொல்லப்பட்டனர். பன்னிரண்டு காவல்துறை அதிகாரிகள் உட்பட முப்பது பேர் காயமடைந்தனர்.



1883 கொட்டாஞ்சேனைக் கலவரத்தை விளக்கும் படம்
Image Source - thuppahis.com

கொச்சிக்கடை புனித அந்தோணியார் தேவாலயம் ஒரு புதிய பேராலயமாகக் கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் இருந்தது. அதற்குச் சற்றுத் தொலைவில்தான் வண. மிகெட்டுவத்த குணானந்த தேரரின் பொறுப்பில் இருந்த விகாரையும் அமைந்திருந்தது. அங்கும் சில கட்டடச் சீர்திருத்தப்பணிகள் பூர்த்தியாகி இருந்தன. ஆகவே 1883 மார்ச் மாதம் விசேட வழிபாட்டுக்கான ஊர்வலம் ஒன்றினை நடத்தத்திட்டமிட்டு அனுமதிகோரி அவ்விகாரை நிர்வாகம் விண்ணப்பித்தது. அதேசமயம் கொச்சிக்கடை புனித அந்தோணியார் தேவாலயம் மார்ச் 18ஆம் திகதி (Palm Sunday) குருத்தோலை ஞாயிறு தினத்தில் பிரார்த்தனை ஊர்வலம் ஒன்றை நடத்த அனுமதிகோரி விண்ணப்பித்தது. இது தற்செயலாக நடந்த விடயம் என்றாலும், பொலிசாரின் கவனயீனம் காரணமாக, இரு தரப்புக்கும் முதலில் அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் பௌத்த விகாரைக்கு வழங்கப்பட்ட அனுமதி மறுக்கப்பட்டது. ஆயினும், 25 ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று ஊர்வலத்தை நடத்துவதற்கு பௌத்தர்களுக்கு கத்தோலிக்க பிஷப்பின் சம்மதத்துடன் அனுமதி வழங்கப்பட்டபோதும், புனித அந்தோணியார் தேவாலயத்திற்கு முன்பாக ஈஸ்டர் தினத்தன்று, பௌத்தர்கள் தாரைதப்பட்டையுடன் பிரார்த்தனை ஊர்வலம் செல்வதை அப்பகுதிக் கத்தோலிக்கர்கள் விரும்பவில்லை.

இதற்குத் தூபம் போடுவதைப்போல, கத்தோலிக்க மதத்தை இழிவுபடுத்தும் சித்திரங்களை ஏந்திய வண்ணம் பௌத்த ஊர்வலம் செல்லப்போகிறது

என்ற வதந்தி வேகமாகப் பரவத்தொடங்கியது. இப்படியான ஆத்திரமூட்டும் செயல்கள் எதுவும் இடம்பெறமாட்டாது என்பதை சோதனைசெய்து உறுதிசெய்த பின்னரே பொலிசார் ஊர்வலத்தைச் செல்ல அனுமதித்தனர். ஆயினும் ஆத்திரம் கொண்ட கத்தோலிக்கர்கள் கையில் பொல்லுகளை ஏந்தியவண்ணம் பெருமளவில் தேவாலயத்தில் திரண்டனர். ஊர்வலம் சென்ற பௌத்தர்கள் மீது தாக்குதலைத் தொடர்ந்தனர். இருதரப்புக்கும் இடையே பலத்த கைகலப்பு ஏற்பட்டு மோதல் வெடித்தது. பொலிசாரினால் நிலைமையைச் சாளிக்க முடியவில்லை. இராணுவம் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் மறுநாள் 26ஆம் திகதிவரை கொழும்பின் பல பகுதிகளில் இது தொடர்பான சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணமே இருந்தது.

இக்கலவரங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட பல கத்தோலிக்கர்கள் மீதான வழக்குகளை போதிய சாட்சியம் கிடையாது எனக் காரணம்காட்டி அரசாங்கம் கைவிட்டது. இதனால் பௌத்தர்கள் அதிருப்தியடைந்தனர். நிலைமையைச் சமாளிப்பதற்கு ஆளுநர் லாங்டன் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தார். அதன் அறிக்கை பௌத்தர்களுக்கு திருப்திகரமாக அமையவில்லை. உண்மையில், கத்தோலிக்கர்கள் பௌத்தர்களைத் தாக்கியதாக ஒத்துக்கொண்ட ஆணையம், வண. குணானந்த தேரரின் அனல் பறக்கும் பேச்சுகளாலேயே அவர்கள் தூண்டப்பட்டதாக, பௌத்தர்கள் மேல் குற்றம் சுமத்தியது. இதன் மற்றொரு விளைவு யாதெனில், அனைத்து மத ஊர்வலங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்தமையாகும். பெரஹெர மற்றும் இசையுடன்கூடிய புண்ணியக் காரியங்கள் போன்ற மத நடைமுறைகள் இன்றியமையாத அம்சமாக இருந்த பௌத்தர்களுக்கு இது மிகவும் பாதகமாக அமைந்தது.

பௌத்த மக்களும் பிக்குகளும் இம்முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் (Henry Steel Olcott) அவர்களைக் கோரினர். அதனையடுத்து கொட்டாஞ்சேனை கலவரச் சர்ச்சையில், ஒல்கோட் ஈடுபாடுகாட்டத் தொடங்கினார். 1884ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைக் கையாள்வதற்காக, பௌத்தப் பாதுகாப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அத்துடன் லண்டன் காலனித்துவ அலுவலகத்திற்குச்சென்று இது தொடர்பாக பௌத்தர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஒல்கோட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1883 மதக்கலவரம் புத்தமத மறுமலர்ச்சி இயக்கத்தின் முதலாவது கட்டத்தின் முடிவைக் குறித்தது. அதன் பின்னர் ஒல்கோட் தலைமை தாங்கிய இரண்டாவது காலகட்டம் தொடங்கியது.

### உசாத்துணைப் பட்டியல்


1. *Administration Reports* (1895).
2. *Ali, Ameer (1995). "Islamic Revivalism in Harmony and Conflict: The Experience in Sri Lanka and Malaysia," Far Eastern Survey 24, no. 3.*
3. *Azeez, A.M.A. (1943). The West Reappraised. Report of the Select Committee on Education – Section 28. Colombo.*
4. *Azeez, A.M.A. (1952). "The Muslim's Attitude Towards Modern Education During the 19th Century." Times of Ceylon (Special Hajj Day Supplement), Colombo.*
5. *Azeez, A.M.A. (1966). "Some Aspects of the Muslim Society of Ceylon with Special Reference to the Eighteen Eighties." Paper submitted to the First International Conference of Tamil Studies, Kuala Lumpur.*
6. *Bond, G.D. (1992). The Buddhist Revival in Sri Lanka. New Delhi: Motilal Banarsidass Publishers.*
7. *De Silva, K.M. (1965). Social Policy and Missionary Organizations in Ceylon 1840-1855. London: Longmans & Greens Company.*
8. *De Silva, K.M. (1973). The Government and Religion; Problems and Politics: 1832 to 1910. Ceylon from the Beginning of the Nineteenth Century to 1948, Colombo.*
9. *De Silva, K.M., ed. (1973). The Government and Religion: Problems and Policies, 1832 to 1910. University of Ceylon, History of Ceylon, Vol. 3. Colombo.*
10. *De Silva, K.M.D. (1973). History of Ceylon, Vol. III. University of Ceylon, Peradeniya, Sri Lanka.*
11. *Denham, E.B. (1912). Ceylon at the 1911 Census. Colombo: Government Printer.*
12. *Francis, Dayanandan (1989). The Relevance of*

*Hindu Ethos for Christian Presence: A Tamil Perspec tive.*

13. *Gombrich, Richard R. (1997). How Buddhism Began: The Conditioned Genesis of the Early Teachings. New Delhi: Munshiram Manoharlal Publishers.*

14. *Guruge, A.W.P., ed. (1965). Return to Righteous ness: A Collection of Speeches, Essays, and Letters of Anagarika Dharmapala. Colombo: Ministry of Education & Cultural Affairs.*

15. *Iqbal, A. (1971). Marumalarchchi Thandhai: Siddi Lebbai Vaalkai Varalaru (Father of Renaissance: Biography of Siddi Lebbe). Vinmathy Publication.*

16. *Jaladeen, M.S.M. (2016). "Revivalist Movements in Sri Lanka – A Comparative Study of Hindu and Islamic Revivalist Movements." Journal of Emerging Trends in Educational Research and Policy Studies (JETERAPS).*

17. *Kamaldeen, S.M. (1979). Berbaryn, A Collection of Essays. Colombo.*

18. *Karunaratna, Charles W. (1999). Buddhist Christian Relationship in British Ceylon: The British Period 1796-1948. Ilford: George Barmukacha.*

19. *Karunaratne, Saddamangala. (1980). Olcott's Contribution to the Buddhist Renaissance. Colombo: Ministry of Cultural Affairs.*

20. *Malalagoda, K. (1976). Buddhism in Sinhalese Society: 1750-1900. Berkeley.*

21. *Malalgoda, Kitsiri. (1976). Buddhism in Sinhalese Society, 1750-1900: A Study of Religious Revival and Change. Berkeley: University of California Press.*

22. *Mendis, G.C. (1948). Ceylon Under the British. Colombo: Colombo Apothecaries Company.*

23. *Mendis, G.C. (1952). Ceylon Under the British. Colombo.*

24. *Mendis, G.C. (1987). Ceylon Under the British. Delhi: Mittal Publications.*

25. *Peebles, Patrick. (1995). Social Change in Nineteenth Century Ceylon. New Delhi: Navrang Publishers.*

26. *Peebles, Patrick. (1995). Social Change in Nineteenth Century Ceylon. Lake House.*

27. *Report of the Director of Public Instruction for 1895.*

28. *Samaraweera, Vijaya. (1986). "Aspects of the Muslim Revivalist Movement in the Nineteenth Century," in Muslims of Sri Lanka: Avenues to Antiquity, edited by M.A.M. Shukri. Beruwela: Jamiah Naleemia Institute.*

29. *Shukri, M.A.M. (1986). Muslims of Sri Lanka – A Cultural Perspective. Jamiah Naleemiah Institute, Sri Lanka.*

30. *Somaratna, G.P.V. (1991). "Kotahena Riot and Migettuwatte Gunananda Thera" in Gunananda Samaru Kalapaya. T. Kariyawasam & P. Abayasunda ra, eds. Colombo: SocioCultural Unity Ministry.*

31. *Tambiah, Stanley Jeyaraja. (1992). Buddhism Betrayed? Religion, Politics, and Violence in Sri Lanka.*

32. *Bartholomeusz, Tessa (n.d.). "Catholics, Buddhists, and the Church of England: The 1883 Sri Lankan Riots." Christian Studies. University of Hawai'i Press.*

33. *Dep, A.C. The History of Ceylon Police, Vol. II.*

34. *Vasundhara Mohan, R. (2004). Identity Crisis of Sri Lankan Muslims. Colombo.*

35. *Samaraweera, Vijaya. (1976). "Orabi Pasha in Ceylon, 1881-1901." Islamic Culture L: 4.*

36. *Samaraweera, Vijaya. (1979). "The Muslim Revival ist Movement in Sri Lanka, 1880-1915," ed. Michael Roberts. Colombo.*

37. *Samaraweera, Vijaya. (1986). "Aspects of the Muslim Revivalist Movement in Late Nineteenth Century Sri Lanka." Muslims of Sri Lanka. op. cit.*

38. *Vimalananda, Tennakoon. (1963). Buddhism in Ceylon under the Christian Powers. Colombo: M.D. Gunasena & Co.*

39. *Weera Sooriya. (1971). Ceylon and Her People, Vol. 4. Colombo: Lake House Publishers.*

40. *Wickremeratne, L.A. (1973). Education and Social Change, 1832 to 1900. In History of Ceylon, Vol. 3, ed. K.M. De Silva. Colombo: University of Ceylon.*

41. *Wilson, D.K. (1975). The Christian Church in Sri Lanka: Her Problems and Her Influence. Colombo: The Study Centre for Religion and Society.*

42. *Yalman, N. (1967). Under the Bo Tree: Studies in Caste, Kinship and Marriage in the Interior of Ceylon. Berkeley: University of California Press.*

43. *Young, Richard Fox & Somaratna, G.P.V. (1996). The Vain Debates: BuddhistChristian Controversies of Nineteenth Century Ceylon. Vienna: De Nobili Research Library.*

# கூத்துகளின் கருத்தியலும் சமூக அமைப்பும்

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக ‘ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.




### சின்னையா மௌனகுரு

சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். ‘இராவணேசன்’, ‘சங்காரம்’ முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின.

இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

## அறிமுகம்

இத்தொடரின் முந்தைய அத்தியாயத்தில், சமூக அமைப்பின் மேற்கட்டுமானம் மற்றும் கீழ்க்கட்டுமானம் பற்றிய சிறிய அறிமுகம் வழங்கப்பட்டிருந்தது. அதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள, கூத்தும் கூத்தின் கருத்தியலும், அவை நிலைத்திருப்பதற்கான காரணங்களும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை அவற்றை விவரமாக வழங்குகிறது. முதலில், இரண்டு விடயங்களைக் குறிப்பிடப்பட வேண்டும்: ஒன்று கருத்தியல், இன்னொன்று அக்கருத்தியலை உருவாக்கும் சமூக அமைப்பு. கருத்தியல் என்பது சிந்தனை—அகம் சார்ந்தது. சமூக அமைப்பு என்பது பௌதிகம்—புறம் சார்ந்தது. இந்தப் புறமே அகத்தைத் தீர்மானிக்கிறது.

## கருத்தியல்

"சமூகத்தின் மேலாதிக்கம் பெற்ற குழுக்கள் தம் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தவும், தம் நலன்களைப் பேணவும் சில கருத்துகளையும் நம்பிக்கைகளையும் உருவாக்கிக் கொள்கின்றன." என்பதையே சமூகவியலாளர்கள் கருத்தியல் எனக் கூறுவர்; இதனை ஆங்கிலத்தில் Ideology என்பர்.

கருத்தியல் அதிகாரத்துடன் தொடர்புடையதாகும். அதிகாரம் அற்ற குழுக்களை வசப்படுத்தி வைக்கவும், சமூக சமத்துவமின்மையை நியாயப்படுத்தவும் அது பயன்படுகிறது. இக்கருத்தியல் பல நிறுவனங்கள் மூலம் மக்கள் மனதில் பதிக்கப்படுகிறது. அது பனிமூட்டம் போல மக்களின் மனதில் பதிந்து, அவர்களை அறியாமலேயே ஒடுக்குதலுக்கான சம்மதத்தையும் உருவாக்குகிறது. மேலும், ஒடுக்குதலின் வேதனையையும் துன்பத்தையும் தணித்து, ஆறுதலையும் தருகிறது.

கருத்தியல் என்ற சொல்லை அறிவியல் துறைக்கு முதன்முதலாகப் பயன்படுத்தியவர் டிறசி எனும் பிரான்ஸ் தேச அறிஞர். கருத்தியலை அவர் 'கருத்துகளின் விஞ்ஞானம்' என்று வரையறுத்தார். பின்னாளில், கருத்தியல் என்பது விஞ்ஞானம் அல்ல, அது மனிதர்கள் கட்டமைத்துக்கொள்ளும் பொய் உணர்வு என சிலர் தெரிவித்தனர். கார்ல் மார்க்சும் எங்கல்சும், கருத்தியல் என்பது வெறும் பொய் உணர்வு மாத்திரமல்ல, மேலாதிக்கம் பெற்ற குழுக்களின் போலி நியாயம் மற்றும் வாதாட்டம் எனக் கூறினர். பிற்கால மாக்சியர், கருத்தியலை 'கருத்தியல் பற்றிய விமர்சன நோக்கு' என்றனர். கருத்தியல் குறித்து விரிவாக ஆராய்ந்த அன்டோனியோ கிராம்சி, அதன் வலிமையையும், பண்பாட்டின் தாக்கத்தையும் வலியுறுத்தினார். மேலும், சமூகத்தின் அடிக்கட்டுமானத்துடனும் கருத்தியல் தொடர்புடையது என்று கண்டறிந்தார். கருத்தியலைப் புரிந்துகொண்டால்தான் கூத்துகளின் கருத்தியலையும், அது எந்தக் குழுவுக்குச் சாதகமாகச் செயற்படுகிறது என்பதையும் அறிந்துகொள்ள முடியும்.

கூத்தின் கருத்தியல் யாது, அது எவ்வாறு ஆளும் குழுவுக்குச் சாதகமாகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு துன்பம் போக்கும் போதைமருந்தாகவும் பயன்படுகிறது, எந்தக்குழு தம் கருத்தியலைப் பரப்ப முன்னிற்கிறது என்பவற்றை ஆராய்வதும் கூத்தாய்வின் ஒரு பகுதியே.

சமூகம் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்துள்ளது. முற்காலத்தில் அரசர், சமயத் தலைவர்கள், வணிகர், கைவினையாளர், உழைப்போர், படைவீரர் எனப் பல சமூகக் குழுக்களைத் தமிழ்ச் சமூகம் கொண்டிருந்தது. தற்காலத்தில் பெரு வணிகர், சிறு வணிகர், புத்திஜீவிகள், உழைப்பாளர், மாணவர், விளிம்பு நிலைமாந்தர் எனச் சில சமூகக் குழுக்களைத் தமிழ்ச் சமூகம் கொண்டுள்ளது. வரலாற்றுப் போக்கில் இக்குழுக்களின் பெயர்களும் தன்மைகளும் மாறிக்கொண்டே செல்லும். தமிழ்ச் சமூகத்திலும் இது நடந்தது. சமூகத்தில் பல குழுக்கள் இருப்பினும், சில குழுக்கள் மேலாதிக்கம் பெற்றனவாக இருக்கும் என்பதை நாம் தமிழர் வரலாற்றில் காணலாம்.

சமூகத்தில் சில குழுக்கள் ஆளும் குழுக்களாகவும், சில குழுக்கள் ஆளப்படும் குழுக்களாகவும் இருக்கும். ஆளப்படும் குழுக்களில் சாதாரண மக்கள் அடங்குவர். உதாரணமாக, சோழர் காலத்தில் ஆளும் குழுக்களில் நிலவுடமையாளர்கள், அரசர்கள், பிராமணர்கள் ஆகியோர் இடம்பெற்றனர். இவர்களின் கருத்துகளான பெருந்தெய்வ வணக்கம், பேரிலக்கியங்கள், 'அரசன் தெய்வத்தின் பிரதிநிதி' என்பன கருத்தியலாகக் கட்டமைக்கப்பட்டன. அரசன் கட்டிய பெருங்கட்டடங்கள் அவனை மேலும் தெய்வ நிலைக்கு உயர்த்தின. இந்த மேலாதிக்கக் குழுவின் பண்பாடே முழுத்தமிழரின் பண்பாடாகக் கட்டமைக்கப்பட்டது.

மேலாதிக்கம் பெற்ற குழு தனது அரச அமைப்பினாலும், உருவாக்கிய சட்டங்களாலும், படையினாலும், தாம் வளர்த்த மதக் கருத்துகளாலும் பிறகுழுக்கள் மீது அதிகாரம் செலுத்தியது. படைகள் பௌதீகமாகச் செய்யும் இந்த அதிகாரச் செயல்களை, கருத்தியல் உளரீதியாகச் செயற்படுத்துகிறது. அரசு உருவாக்கும் சட்டங்கள், அதன் படைகள், அரசு சார்ந்த மதம் என்பனவான அதிகாரத்தை மக்கள்மீது

சுமத்தும் பௌதீக அடக்குமுறைகளுக்கு மாற்றாக, அபௌதீகமான கருத்தியல் தனது வேலையைச் செய்கிறது. படை மற்றும் சட்டங்களை விட, இக்கருத்தியல் சக்தி வாய்ந்தது, ஏனெனில் அது ஊனோடும் உதிரத்தோடும் கலந்து நிற்கிறது.

## கருத்தியலைப் புரிந்துகொள்ளல்

கருத்தியலைப் புரிந்து கொள்ள, அது எந்தக் குழுவுக்குச் சாதகமாக அமைந்துள்ளது என்பதை அறிவதும், அக்கருத்தியலை உருவாக்கும் சமூகத்தைப் புரிந்துகொள்வதும் மிக அவசியம். கலைக்கும் சமூகத்திற்குமான தொடர்பு என்ன, உறவு என்ன என்பது ஒரு பெரிய வினா. கலை பற்றிப் பேசுவோரில் மிக அதிகமானோர், கலையின் நுட்பங்கள், ஆக்கமுறைமை, அதன் அழகு போன்றவற்றைப் பற்றியே அதிகம் பேசுவர். ஆனால் இந்தக் கலைக்கும், அதனை உருவாக்கும் சமூகத்திற்குமான தொடர்பை, உறவைப் பேசுவோர் குறைவு. அத்தகைய ஆய்வுகளும் தமிழில் குறைவாகவே உள்ளன. ஓவியத்தின் சமூகவியல், சிற்பத்தின் சமூகவியல், கட்டடத்தின் சமூகவியல், இசையின் சமூகவியல், நடனத்தின் சமூகவியல், நாடகத்தின் சமூகவியல் போன்ற நூல்கள் தமிழில் உள்ளனவா?

அண்மையில் நான் ஒரு பெரும் சங்கீதவித்துவானைச் சந்தித்தேன். அவர் கர்னாடக இசையில் பாடுவதில் மகாவிண்ணன். அவர் ஒரு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமாவார். அவரிடம் நான், “உங்கள் துறையில் நீங்கள் ஆராய்ந்து கண்டு பிடித்தவை என்ன?” என்று கேட்டேன். அவர் கூறிய பதில் என்னை வியப்பிலாழ்த்தியது: “கலைஞனாக இருந்தால் மட்டுமே போதும், ஆராய்ச்சி தேவையில்லை.”

அவர் சொன்னதில் ஒரு பக்கம் உண்மையுண்டு. கலைஞனாக இருப்பது என்பது முக்கியம்தான். ஆனால் அவர் தன் கலையை சமூகவியல், வரலாறு, கருத்தியல் நோக்கில் ஆராய்ந்தால், அதனை அவர் விமர்சன ரீதியில் அணுகுவார் அல்லவா? அக்கலையின் குறைநிறைகளைக் காண்பார், அல்லவா? மேலும் புதியவை படைக்க முனைவார், அல்லவா? இல்லையெனில், படித்ததைத்தானே மீளமீளச் செய்து கொண்டிருப்பார். மீளச்செய்தல், பிரதி பண்ணுதல் என்பன கலை ஆகாது. கலை என்பது படைப்புச் சார்ந்தது, அல்லவா? படைப்பின் சமூகவியல் தெரிந்தால், அவர் அது குறித்து ஒரு நூலும் எழுதுவார், அல்லவா? அவரது துறை பற்றி அவருக்குப் புதிய வெளிச்சங்கள் கிடைக்கும், அல்லவா? பல்கலைக்கழக மாணவர்கள் அவரிடம் பாட்டு மாத்திரம் கற்கவில்லையே, பல்கலைக்கழகக் கல்வியையும் ஆராய்ச்சித் திறனையும் அல்லவா கற்கிறார்கள்? சமூகத்தோடு கலையை இணைத்து ஆய்வு நூல் எழுதுவோர்க்கு, கலை மாத்திரம் தெரிந்திருந்தால் போதாது. சமூக அமைப்புப் பற்றிய அறிவும் இருக்க வேண்டும். நாம் இங்கு, சமூக அமைப்பு என்றால் என்ன என்பதனை அறிவோம்.

## சமூக அமைப்பு

கலையின் உருவாக்கத்திலும் அதன் கருத்தையும் வடிவையும் நிர்ணயிப்பதிலும் சமூக அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தச் சமூக அமைப்பு காலம்தோறும் மாறுகிறது. அதற்கான காரணங்களுக்குள் புகுவதற்கான சமயம் இதுவல்ல. ஆனால் அடிக்கட்டுமானம் மற்றும் மேற்கட்டுமானம் என்ற வகையில் சமூகத்தைப் புரிந்து கொள்ளல், சமூக அமைப்பிற்கும் கலைக்குமான உறவைப் புரிந்து கொள்ள உதவும்.

இந்த அடிக்கட்டுமானம் மற்றும் மேற்கட்டுமானத்தை முதலில் புரிந்துகொள்வோம். ஒரு கட்டடத்தை எடுத்துகொள்வோம். அடிக்கட்டுமானம் அதன் அடித்தளமாகும். மேற்கட்டுமானம் என்பது அந்த அடித்தளத்தின் மேல் எழுப்பப்படும் கட்டடம் ஆகும். மேல் எழுப்பப்படும் கட்டடம் சிறிய மாற்றங்களைப் பெறலாம், ஆனால் அது அடித்தளத்தை மீறிப் போகமுடியாது.

## சமூகத்தின் அடிக்கட்டுமானம் என்றால் என்ன?

பிரதானமாக ஒரு சமூகத்தை இயக்குவது அக்காலத்தில் நிலவும் பொருளியலே. அக்காலப் பொருளியல் என்ன என்பதைக் கொண்டு அச்சமூகத்தை விளக்கிவிடலாம். இதனை வைத்தே அடிக்கட்டுமானம் நிர்ணயிக்கப்படும். உற்பத்தி, அந்த உற்பத்திக்கும் அடையப்படுவோருக்குமான உறவு, அந்த உற்பத்தியில் பாவிக்கப்படும் கருவிகள் என்பனவே அடிக்கட்டுமானம் ஆகும். இவைதாம் ஒரு சமூகத்தின் பிரதான பொருளியலை வரையறுக்கும். இந்தப் பொருளியலை அடிப்படையாக வைத்து சமூக அமைப்புப் பெயரிடப்படும். இதன் படி:

1. புராதன பொதுவுடமை அமைப்பு
2. ஆண்டான் - அடிமை அமைப்பு
3. நிலமானிய அமைப்பு
4. முதலாளித்துவ அமைப்பு

என பல சமூக அமைப்புகளை மனிதகுலம் கண்டுள்ளது என்பர் சமூக விஞ்ஞானிகள்.

வேட்டையாடி மந்தை மேய்த்த காலத்தை புராதன அமைப்புக்காலம் என்பர். வணிகம் தோன்றி வியாபாரம் வளர்ந்து எஜமானரும் அடிமைகளும்,

அதனை நிர்வகிக்க அரசர்களும் படைகளும் எழுந்த காலத்தை ஆண்டான் - அடிமை பொருளாதார அமைப்புக்காலம் என்று கூறுவர். நிலம் பிரதானமாகி, அதனை மையமாகக் கொண்டு நீர்ப்பாசனம் உருவாகி, நெல் உற்பத்தி முக்கியமாகி, உழுவோர் உழுவித்து உண்போர் உருவான காலத்தை நிலப்பிரபுத்துவப் பொருளாதார அமைப்புக்காலம் என்று கூறுவர். வணிக வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும், அதனால் தொழில் உற்பத்தியும் ஏற்பட்டு, முதலீடு பெருகி பணப் புழக்கம் வந்து, வங்கிகள் பெருகி, முதலாளி தொழிலாளி என்ற வர்க்கப்பிரிவு தோன்றிய காலத்தை முதலாளித்துவப் பொருளாதார அமைப்புக்காலம் என்று கூறுவர்.

வேறுவேறு தொழில்கள் காணப்படினும், அவ்வக் காலத்திற்குரிய பிரதான உற்பத்தி முறைதான் அக்கால அடிக்கட்டுமானம் எனக் கருதப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே, சமூக விஞ்ஞானிகள் சமூகத்தை புராதன பொதுவுடமை அமைப்பு, ஆண்டான் - அடிமை அமைப்பு, நிலப்பிரபுத்துவ அமைப்பு, முதலாளித்துவ அமைப்பு என வகைப்படுத்தினர்.

நாம் இப்போது வாழும் காலம், நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் கலந்த ஓர் அமைப்பைக் கொண்டுள்ளது. இக்கருத்து இந்தியா மற்றும் இலங்கைக்குப் பொருந்தும். மேற்கு நாடுகள் முழுக்க முழுக்க முதலாளித்துவ உற்பத்தி முறைக்குள் வந்துவிட்டன. ஆனால் நாம் இன்னும் முற்றாக அந்நிலைக்கு வரவில்லை. "ஆண்டான் - அடிமைமுறை மேற்கு நாடுகளுக்குப் பொருந்தும்; ஆசியாவுக்கு அது பொருந்தாது" என்ற வாதங்களும் உண்டு. முக்கியமாக "இந்தியா தனக்கென ஓர் ஆசிய உற்பத்திமுறை ஒன்றைக் கொண்டுள்ளது" என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. ஆனால், அவ்வாறாக வாதிப்போரும் "சமூக அமைப்பின் அத்திவாரம், அவ்வக்காலப் பொருளியல் அமைப்பே" என்பதனை ஒப்புக்கொள்வர். மேற்சொன்ன கோட்பாட்டினடியாக கூத்தை விளங்கிக்கொள்ள முயல்வோம்.

### அடிக்கட்டுமானமும் மேற்கட்டுமானமும்

அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் எனும் கருத்தியலையும் அதன் நுட்பமான உறவுகளையும் மேலும் புரிந்து கொள்வோம். அடிக்கட்டுமானம் பொருளியலாயின், மேற்கட்டுமானம் அரசு, சட்டம், மதம், இலக்கியம், கலைகள், பண்பாடு ஆகியன என சமூக விஞ்ஞானிகள் வரையறுத்தனர். இந்த அடிக்கட்டுமானத்தை மேற்கட்டுமானம் பிரதிபலிக்கும். அடிக்கட்டுமானம் நிலையானது அல்ல; அது மாறும் தன்மையுடையது. அப்படி மாறுகையில், மேற்கட்டுமானத்திலும் மாற்றங்கள் ஏற்படும் என்றனர். அடிக்கட்டுமானப் பிரதிபலிப்பு, மேற்கட்டுமானமான அரசு, சட்டம் போன்றவற்றில் நேரடியாகவும், கலை, இலக்கியம் போன்றவற்றில் மறைமுகமாகவும் வெளிப்படும் என்றனர். கலை, இலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் நுணுக்க ஆய்வுகள் இந்த அடிக்கட்டுமானங்களை காண உதவுவன.

அடிக்கட்டுமானம் மாறிய பின்னரும் சில மேற்கட்டுமானங்கள் மாறாதிருந்ததை சமூக விஞ்ஞானிகள் கண்டனர்; அது பண்பாட்டின் வலிமை என உணர்ந்தனர். அடிக்கட்டுமானம் பௌதிகமானது; மேற்கட்டுமானமான கலைகள், மனதையும் சிந்தனைகளையும் சார்ந்தவை. எனவே, அடிக்கட்டுமானம் மாறினாலும், மேற்கட்டுமானத்தின் சில கூறுகள் மாறாது. எனினும், அவை மெல்லமெல்ல மாற்றம் அடையும் என்ற முடிவுக்கு சமூக விஞ்ஞானிகள் வந்தனர்.

அடிக்கட்டுமானம் மற்றும் மேற்கட்டுமானம் ஆகியவற்றிற்கிடையேயான உறவும், அவை ஒன்றை ஒன்று பாதித்தபடி இயங்குவதும் காணக்கூடியவை. இந்த உறவு இயங்கியல் ரீதியானது; ஒன்றை ஒன்று பாதிக்கும் இயல்பினையுடையது. கலைகள் சமூக அமைப்பின் உற்பத்தியாயினும், அவையே சமூகத்தை மாற்றும் இயல்பையும் கொண்டுள்ளன. சமூகத்திலிருந்து கலைகள் உருவாகின்றன; அவை சமூகத்தை உருவாக்குகின்றன என்று அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர். இதைப்பற்றிய பல ஆய்வுகளும் விவாதங்களும் இன்றும் எழுந்த வண்ணமுள்ளன.

இனி, கூத்து எழுந்த சமூக அமைப்பையும், அதன் பிரதான பொருளியல் அமைப்பு என்ன என்பதையும் பார்ப்போம்.

## கூத்து ஓர் இலக்கிய வடிவம்

தமிழ் இலக்கிய வரலாற்றில், பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் எனும் இரண்டு முக்கிய பிரிவுகளைக் காணலாம். ஆரம்பத்தில் சிற்றிலக்கியங்கள் சிலவே இருந்தன; நாயக்கர் காலப்பகுதியில், குறிப்பாக 13ஆம் நூற்றாண்டில் இருந்து 18ஆம் நூற்றாண்டு வரையில், சிற்றிலக்கியங்கள் பெருகின. இதுவே சிற்றிலக்கியக்காலம் எனக் கூறப்படுகிறது. இக்காலத்தில் கலம்பகம், உலா, தூது, பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்களுடன் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற சிற்றிலக்கியங்களும் தோன்றின. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆரம்ப காலத்திலிருந்தே கூத்து ஆடப்பட்டிருக்கின்றமைக்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன. காலம்தோறும் கூத்தின் தன்மை

மாறிவந்திருக்கிறது. கூத்துக்கான பிரதிகள் பிரமாணமாகப் பார்க்கப்படுவது நாயக்கர் காலத்தில்தான். பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியவை தமிழ்க் கூத்துப் பிரதிகளுக்கான மூலங்களாக தோன்றுகின்றன.

பள்ளுக்கென ஒரு தனித்துவமான கதை அமைப்பு உள்ளது. இதில் ஒரு பள்ளனுக்கு இரண்டு மனைவிமார்—இளைய பள்ளி, மூத்த பள்ளி. பள்ளனுக்கு இளைய பள்ளி மீதுதான் அதிகமான காதல். இதை காணமுடியாமல், மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுகிறாள். பண்ணைக்காரன் பள்ளனை தொழுவத்தில் மாட்டிவிடுகிறான். பின்னர் இரு பள்ளிமாரும் சமாதானமாகி ஆண்டையை வேண்ட, அவர் பள்ளனை விடுவிக்கிறான். பின்னர் பள்ளன் மீண்டும் வந்து பள்ளிமாருடன் இணைந்து வயல் செய்கின்றான். அதன் விளைச்சலை ஆண்டைக்கு அளிக்கின்றான்.

"இந்தப் பள்ளு நாடகத்தில், சாதாரண உழைப்பாளர்கள் பாத்திரமாக வருகிறார்களே, இது ஒரு மக்கள் இலக்கியம் அல்லவோ?" எனக் கருத்து முன்வைக்கப்பட்டாலும், இதன் முக்கிய அம்சம் ஆண்டைக்கு நெல் மூட்டைகளை வழங்குவதுதான். இது அந்தச் சமூக அமைப்பைப் பிரதிபலிக்கிறது. அங்கு பண்ணைக்காரன் அதிகாரம் கொண்ட பெரியவனாகவும், பள்ளன் கூலியாகவும் வருகிறான்.

நாயக்கர் காலச் சமூக அமைப்பு நிலமானிய அமைப்பாக இருந்தது. இதில் நிலமும், விவசாயமும் முக்கியமானவை; அத்தோடு, நிலப்பிரபுவும், நெல் விளைவிக்கும் விவசாயியும் முக்கியமானவர்கள். இவர்கள் இடையே உள்ள உற்பத்தி உறவின் முடிவு, விவசாயி கடவுளைப் பாடியபடி உழைத்து, இறுதியில் அரசனுக்கு நெல்லை வழங்குவதாக அமைகிறது.

இக்காலத்தில் எழுந்த குறவஞ்சியும் இதேபோன்றே அமைந்துள்ளது. இதிலே குறவன், குறத்தி எனும் விளிம்புநிலைப் பாத்திரங்கள் காணப்பட்டாலும், கதையின் பிரதான பாத்திரங்கள் ஊர்க் கடவுளும், அரச நாட்டியப் பெண்ணான வசந்தவல்லியும் தான்.

நொண்டி நாடகமும் இதேபோலவே அமைந்துள்ளது. அங்கு நொண்டி பாத்திரமாக இருந்தாலும், கதையின் முக்கிய இடத்தை கடவுள் மற்றும் நொண்டியைத் தண்டிக்கும் அரசன் ஆகியோரே வகிக்கின்றனர்.

தமிழர் வரலாற்றில் நாயக்கர் காலம் தெலுங்கு மன்னர்கள் ஆட்சி செய்த காலம் என்பதால், தெலுங்கு நாட்டுக் கலைகளின் தாக்கம் தமிழ்நாட்டிலும் ஏற்பட்டது. குறவஞ்சி, பாகவத மேளம், கர்நாடக யக்சகான, கேரள கதகளி போன்றவை தெலுங்கு நாட்டில் இருந்து தமிழ்நாட்டின் அரசவைகளில் அறிமுகமாகி, பின்னர் மக்கள் முன்சென்றன. இவை அரசரால் போசிக்கப்பட்டன. காரணம் அது கூறும் கருத்தியல் ஆகும்; அதாவது புராண, இதிகாசக் கருத்தியல். இதில் அரசரும் கடவுளும் பிரபுக்களுமே இலக்கியத்தின் நாயகர்களாக மாறியுள்ளனர். அவர்களின் செயல்களே இவற்றின் கருப்பொருள்களாகவும் அமைகின்றன.

இவ்வண்ணம் எழுந்த ஓர் இலக்கிய வடிவமே கூத்து வடிவம் எனலாம். பள்ளு, குறவஞ்சி என்பன தத்தமெக்கென ஒரு நாடக அமைப்பைக் கொண்டிருந்தது போல், இக்காலத்தில் எழுந்த கூத்து இலக்கியமும் தனக்கென ஒரு நாடக அமைப்பை, எடுத்துரைப்பு முறையைக் கொண்டிருந்தது. ஆனால் பள்ளு, குறவஞ்சியோடு ஒப்பிடும்போது கூத்துகள் அமைப்பில் ஒன்றாயினும், எடுத்துரைப்பு முறையில் ஒன்றாயினும், கதைகளில் வேறுபட்டன.

தமிழ்நாட்டில் ஏற்கனவே இருந்த கூத்து மரபு, மேற்சொன்ன கூத்து வடிவங்களுடன் இணைந்து, இன்னொரு கூத்து வடிவத்தைப் பெற்றது. இந்தக் கலப்பில் உருவானது தெருக்கூத்து. அந்தத் தெருக்கூத்துகளுக்கெல்லாம் கருப்பொருளாக அமைந்தவை புராண, இதிகாசக் கதைகளே; அதன் நாயகர்கள் நிலமானிய அமைப்பின் பெரும் பிரதிநிதிகளான அரசரும் பிரபுக்களும் வணிகருமே. கூத்து மரபு தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் 'தெற்கத்தி மரபு' எனவும், வடக்குப் பகுதியில் 'வடக்கத்தி மரபு' எனவும் இரு வகையாக அழைக்கப்படுகிறது. அதே உருவோடும் கருவோடும் ஈழம் வந்த அம்மரபு, ஏற்கனவே இங்கிருந்த கூத்து மரபுகளுடன் கலந்து, ஈழத்தின் வடமோடி, தென்மோடிக் கூத்துகளாக மாறியது.

இவை ஒருகாலத்தில் யாழ்ப்பாணம் - வடமராட்சி, தென்மராட்சி, தீவகப்பகுதிகள் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், சிலாபம் கிழக்குமாகாணம் - திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, மட்டக்களப்பின் மேற்குப் பிரதேசமான படுவான்கரை, தென் பிரதேசமான பாண்டிருப்பு, அக்கரைப்பற்று, திருக்கோவில், கோளாவில், பாணமை ஆகிய இடங்களில் பரவிச் செல்வாக்கோடு இருந்தன. இதுமட்டுமல்ல, தமிழர் வாழ்ந்த மலையகத்திலும் இதன் தாக்கம் இருந்தது.

ஈழம் வந்து நிலைத்த, அக்கூத்துகளின் அடிக்கட்டுமானத்தையும், கருத்தியலையும் அடுத்துப்பார்ப்போம்.

# இலங்கையில் ஜனாதிபதிமுறையை ஆதரித்து முன்வைக்கப்படும் போலியானதும், நகைப்புக்கிடமானதுமான வாதங்கள்

இலங்கையின் சட்டத்துறை அறிஞர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் இலங்கையின் அரசியல் யாப்புகள் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் (Core Issues) பற்றிய உயராய்வுகள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளனர். 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த மூன்று அரசியல் யாப்புகள் பற்றியும், இம்மூன்று அரசியல் யாப்புகளுக்கும் கொண்டுவரப்பட்ட யாப்புத் திருத்தங்கள் பற்றியும், நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றியும் இவ் உயராய்வுகளில் விரிவாக அலசப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் உள்ளடங்கிய பெறுமதிமிக்க கருத்துகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே 'அரசியல் யாப்புச் சிந்தனைகள்' என்னும் இத்தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: அசங்க வெலிக்கல*


**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

கோத்தபாயராஜபக்ச 2019இல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் ஜனாதிபதிமுறையைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரது ஆட்சிக் காலத்தில் 20ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இத்திருத்தம் சர்வாதிகாரத்தை நோக்கி இலங்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான பிரதான நகர்வாக அமைந்தது. இத்திருத்தம் கொண்டுவரப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை ஜனாதிபதி முறைக்கு (*Presidentialism*) ஆதரவாக முன்வைக்கப்பட்ட வாதங்களை மறுத்து பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பட்டன. அசங்க வெலிக்கல (*Asanga Welikala*) என்னும் சட்ட அறிஞர் 2020ஆம் ஆண்டு எழுதிய கட்டுரையொன்று '*Nonsense Upon Stilts? Revisiting Justifications Of Presidentialism In Sri Lanka*' என்னும் தலைப்பில் அமைந்தது. அக்கட்டுரையின் கருத்துகளைத் தழுவி இத்தமிழ்க்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அசங்க வெலிக்கல அவர்களின் ஆங்கிலக் கட்டுரையின் தலைப்பில் '*Nonsense Upon Stilts?*' என்னும் மரபுத்தொடர் (*Idiomatic Phrase*) காணப்படுகிறது. இதன்பொருள் 'அர்த்தமற்ற, அபத்தமான வாதங்கள்; நகைப்பிற்கிடமான கூற்றுகள்; அபத்தமான கருத்துகள்' என்பதாகும். ஜனாதிபதிமுறைக்கு ஆதரவாகப் பேசியவர்களின் வாதங்கள், நகைப்பிற்கிடமான அபத்தமான வாதங்கள் என சட்ட அறிஞர் அசங்கவெலிக்கல அவர்களின் கட்டுரை எடுத்துக் காட்டியது. 18.11.2020 திகதியில் '*Ground Views*' இணைய இதழில் வெளிவந்த இக்கட்டுரையினை இன்றைய பொருத்தம் கருதி தமிழில் அறிமுகம் செய்கிறோம்.

சர்வாதிகார ஜனாதிபதிமுறை என்னும் ஆபத்தான பாதையில் இலங்கையை நகர்த்திச் செல்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே அரசியல் யாப்புக்கான 20ஆவது திருத்தம் அமைந்தது. இத்திருத்தம் ஜனநாயகத்திற்கு ஓர் இருண்ட யுகமாக அமையலாம்; அல்லது இத்திருத்தம் குறுகிய காலத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு, மறைந்தும் போகலாம். காலம்தான் இதற்கான பதிலைக்கூற வேண்டும். இப்போது எம் முன்னால் உள்ள பணி சர்வாதிகார ஜனாதிபதிமுறைக்கு ஆதரவாக முன்வைக்கப்படும் போலி வாதங்களைத் தோலுரித்துக்காட்டி, உண்மையை மக்களுக்குப் புரிய வைப்பதாகும்

## 1

என அசங்க வெலிக்கல இக்கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஓர் அரசாங்க முறை (*A System Of Government*) என்ற முறையில் ஜனாதிபதிமுறை இலங்கைக்குப் பொருத்தமற்றது என்பதை அவரது கட்டுரையைத் தழுவி எழுதப்பட்ட இத்தமிழ்க்கட்டுரை எடுத்துக் கூறுகிறது. ஒரு சமூகம் தனக்குப் பொருத்தமான அரசாங்க அமைப்பு முறையினை எவ்வாறு தெரிவு செய்கிறது? இத்தெரிவை அச்சமூகத்தின் உயர் அடுக்கினைச் சேர்ந்த உயர்குழாம் வகுப்பே (*Elite Class*) செய்கிறதெனலாம். இலங்கையிலும் அரசியல் யாப்புத் திருத்தம், புதிய யாப்பினை வரைதல் என்பன இலங்கையின் உயர்குழாம் வகுப்பினராலேயே செய்யப்பட்டு வருவதைக் காணலாம்.

அரசியல் யாப்புத்திருத்தம், புதிய யாப்பை வரைதல் என்ற செயல்முறையில் கருத்துகள், செயற்பாடுகள், சுயநலன்கள் (*Ideas, Functions and Self Interest*) என்ற மூன்று விடயங்கள் சம்பந்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இம்மூன்று விடயங்களையும் இலங்கையின் ஜனாதிபதிமுறையை நீடிப்பதற்குச் சார்பாக முன்வைக்கப்படும் வாதங்களின்படி பின்வருமாறு வகுத்துரைக்கலாம்:

1. அரசியல் யாப்புகளை வரைதல் தொடர்பான கருத்துகள், கொள்கைகள், சிந்தனைகள் என்பனவற்றின் அடிப்படையிலான வாதங்கள் முதலாவது வகையின. இவற்றை ஆங்கிலத்தில் '*Ideational Arguments*' என்பர். தமிழில் கருத்துகள்சார் வாதங்கள் எனக் குறிப்பிடுவோம்.
2. இரண்டாவது வகையான வாதம் செயற்பாட்டியல் வாதம் (*Functionalist Argument*) எனப்படும். உதாரணமாக, பொருளாதார வளர்ச்சிக்கு உரிய சிறந்த கருவி ஜனாதிபதி அரசாங்கமுறை; இம்முறைதான் நாட்டில் அரசியல் உறுதிநிலையை ஏற்படுத்தும் என்பது போன்ற வாதங்கள்.
3. மூன்றாவதாக, அரசியல் யாப்பை வரைபவர்களின் சுயநலன்கள் (*Self Interest of Constitution Makers*) அரசியல் யாப்புகளின் உருவாக்கச் செயன்முறையில் முக்கியமான பங்கைப் பெறுகின்றன. இலங்கையின் உயர்குழாம் வகுப்பைச் சேர்ந்த தனிநபர்களும், குடும்பங்களும், நிர்வாகிகளும், சட்ட வல்லுநர்களும், பிறரும் தத்தம் சுயநல நோக்கங்களுக்காகச் சர்வாதிகார ஜனாதிபதிமுறை நீடிக்கப்பட வேண்டும் என்ற வாதங்களை முன்வைக்கின்றார்கள்.

இக்காரணங்களால் கருத்துகள், செயற்பாடுகள், சுயநலன் என்ற மூன்றினதும் கலவையான நோக்குமுறையில் அமைந்த வாதங்கள் ஜனாதிபதி முறைக்குச் சார்பாக முன்வைக்கப்படுவதை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமானது.

### அ) கருத்துச்சார்ந்த வாதம் (Ideational Argument):

இலங்கைக்கு ஜனாதிபதிமுறை வேண்டும் என்று வாதிடுவோர் 'சிங்கள - பௌத்த அரசு' என்னும் கற்பிதமான, பொற்காலமான கடந்தகாலத்தைப் பற்றிப் பேசுகின்றனர். கடந்த காலத்தில் இங்கு நிலைபெற்றிருந்த அந்த அரசை ஜனாதிபதிமுறை (Presidentialism) என்னும் வடிவில் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என இவர்கள் வாதிடுகின்றனர். இவர்களது வாதங்கள் இலங்கையின் சிங்கள - பௌத்த கடந்த காலம் பற்றிய மனோரதியமான நோக்கில் (A Romantic View of Utopian Sinhala Buddhist Past) இருந்து தோற்றம் பெற்றவை என அசங்க வெலிக்கல அவர்கள் கூறுகின்றார். நவீன ஜனாதிபதிமுறை என்ற வடிவில் இக்கருத்துடையோர் பண்டையகால முடியாட்சியை மறுஉற்பத்தி செய்வதை (Modern Reproduction of Ancient Monarchy) விரும்புகின்றனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். நாட்டின் ஐக்கியத்திற்கு ஆபத்து வந்துள்ளது என்றும், சிங்கள - பௌத்தம் இந்நாட்டில் வளர்வதைப் பாதுகாக்கும் அரணாக ஜனாதிபதிமுறை விளங்குகிறது எனவும் இவர்கள் வாதிடுகின்றனர்.

### ஆ) செயற்பாட்டியல் வாதம்:

இரண்டாவதான செயற்பாட்டியல் வாதம் (Function alist Argument), பொருளாதார அபிவிருத்தி வாதம் (Economic Developmentalism) என்னும் சிந்தனையில் ஆதாரம் கொண்டுள்ளது. இச்சிந்தனைப்படி மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரக்கட்டமைப்பு (Centralization of Authority) உறுதியான தொலைநோக்குடைய தலைமைத்துவத்திற்கு வழிவகுக்கும் எனக் கருதப்படுகிறது. தனிநபர் ஒருவரின் தலைமைத்துவம் (Single Ruler Leadership) நாட்டிற்கு அவசியமானது. ஊழலற்ற அரசாங்கத்தை அமைக்கவும், பாராளுமன்றக் கட்சி அரசியலின் திசையறியாப் போக்குகளைக் கட்டுப்படுத்தவும், ஜனாதிபதிமுறை தேவையானது போன்ற வாதங்கள் இக்கருத்துடையோரால் முன்வைக்கப்படுகின்றன.

### இ) குழுக்கள் சார்ந்த சுயநலன்கள் (Partisan Self Interest):

அரசியல் யாப்புகளை வரைதலில் இது மிக முக்கியமான பங்கை வகிக்கிறது; இந்த விடயம்



அசங்க வெலிக்கல
Image Source - www.bsg.ox.ac.uk

பெரும்பாலும் வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை என அசங்க வெலிக்கல அவர்கள் கூறுகின்றார். தமது திறமைகளில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்களான ராஜபக்ச குடும்ப அரசியல் தலைவர்களுக்கு, தேர்தல் போட்டி என்னும் விளையாட்டில் ஈடுபடவும், வெற்றிபெற்று தம் ஆட்சியைப் பலப்படுத்தவும், மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் ஓர் அரசியல் யாப்புமுறை மிகவும் வாய்ப்பானதொன்றாகத் தெரிகிறது. குறுங்காலத்தில் (Short Run) இது அவர்களுக்குச் சாதகமாக அமைந்து விடுகிறது. அதனால் அவர்கள் அதன் கவர்ச்சி மாயையில் சிக்குண்டுள்ளனர்.

ஆயினும் நீண்டகாலத்தில் இந்த சர்வாதிகாரமுறை அவர்களுக்கு எதிராகவே மாறி அவர்களை ஆட்சியைவிட்டு விரட்டிவிடும் என்பதை அவர்கள் உணரத்தவறிவிட்டனர். எதிரணியில் நிற்கும் தலைவர்கள், சர்வாதிகார ஜனாதிபதி என்ற பதவியையும், அச்சர்வாதிகார முறையையும் தட்டிப்பறித்து, ராஜபக்சக்களை விரட்டிவிட்டு ஆட்சியில் அமரும் கனவுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிரணிப்படையினர் இந்த இலக்கை எதிர்காலத்தில் அடைவார்களா, இல்லையா என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது. ஆயினும் ஆளும் தரப்புக்கும், எதிர்த்தரப்புக்கும் ஜனாதிபதிமுறை கவர்ச்சிகரமானதொன்றாகவே இருக்கிறது. ஆகையால் இருதரப்பாரும்

இம்முறையைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள். அவர்களின் குழுக்கள் சார்ந்த சுயநலன்கள் இந்த முறையின் நீடிப்புக்குப் பலம் சேர்ப்பதாக அமையும்.

மேலே குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளில் அமையும் வாதங்களின் கலவையான கருத்துகள் ஜனாதிபதிமுறை பற்றிய சொல்லாடலில் இடம்பெறுவதை நாம் காண்கின்றோம். இவற்றைப் பகுத்தாராய்ந்து, அடையாளம் கண்டு விமர்சனத்திற்கு உட்படுத்தவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. இவ்வாறான விமர்சனம் இல்லாதவிடத்து நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலத்தில், ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்களால் ஜனாதிபதிமுறைக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட பழைய வாதங்களையே கிளிப்பிள்ளைபோல் ஒப்புவிக்கும் நிலை தொடரும். ஆகையால் ஜனாதிபதிமுறை பற்றிய அபத்தமான போலி வாதங்களை முறியடிக்கும் தேவை இன்று எழுந்துள்ளது. எமது விவாதத்தை ஜனாதிபதிமுறை என்றால் என்ன? பாதி ஜனாதிபதிமுறை என்றால் என்ன? அவற்றை எவ்வாறு வரைவிலக்கணம் செய்யலாம்? என்னும் வினாக்களுடன் ஆரம்பிப்போம்.

### ஜனாதிபதிமுறை என்றால் என்ன? பாதிஜனாதிபதிமுறை என்றால் என்ன?

ஜனாதிபதிமுறை (*Presidentialism*), பாதி ஜனாதிபதிமுறை (*Semi Presidentialism*) என்பன பற்றிய தெளிவான புரிதல் மிகவும் அவசியமானது. ஜனாதிபதிமுறையில் அரசாங்கத்தின் நிர்வாகத்துறை (*Executive*), சட்ட ஆக்கத்துறை (*Legislature*) என்ற இரண்டிற்கான தேர்தலும் வெவ்வேறாக நடத்தப்படும். அவை இரண்டும் தனித்தனியாக இயங்கும். ஜனாதிபதி சட்டமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவரல்லர். விதிவிலக்காக, குற்றச்சாட்டு நடைமுறை (*Impeachment*) மேற்கொள்ளப்படும்போது மட்டும் ஜனாதிபதி சட்டமன்றத்திற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டியவராக இருப்பார். ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவார். அவர் குறிப்பிட்ட கால எல்லைவரை (*Fixed Term*) பதவியில் இருக்கலாம். ஜனாதிபதியின் உதவியாளர்கள் போன்ற அமைச்சர்கள் ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்கள். அமைச்சர்கள் ஜனாதிபதிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களாய் இருப்பர். ஐக்கிய அமெரிக்கா, ஜனநாயக ஜனாதிபதிமுறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பாதிஜனாதிபதிமுறையில் (*SemiPresidentialism*) மக்களால் நேரடியாகத் தேர்தல்மூலம் தெரிவு செய்யப்பட்டவரான ஜனாதிபதி சட்டசபையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களான பிரதமருடனும், அமைச்சர்களுடனும் இணைந்து நிருவாக அதிகாரத்தை (*Executive Power*) பிரயோகிப்பார். பிரான்ஸ் நாட்டின் அரசியலமைப்பு, ஜனநாயக பாதி ஜனாதிபதிமுறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பாதிஜனாதிபதிமுறையில் இரண்டு உபபிரிவுகள் உள்ளன. பிரதமர்ஜனாதிபதிமுறை (*PremierPresidential*) எனவும் ஜனாதிபதிபாராளுமன்றமுறை (*PresidentParliamentary*) எனவும் இப்பிரிவுகள் அழைக்கப்படும். பிரதமர்ஜனாதிபதிமுறையில், பிரதமரும் அமைச்சர்களும் நேரடியாகச் சட்டசபைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களாய் இருப்பர்.

இரண்டாவதான ஜனாதிபதி பாராளுமன்றமுறையில், பிரதமரும் அமைச்சர்களும் கூட்டாக ஜனாதிபதிக்கும், சட்டசபைக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பர். 19ஆவது திருத்தத்தின் பின்னர் இலங்கை, பிரதமர்-ஜனாதிபதிமுறைக்கு மாற்றம் பெற்றுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. 19ஆவது திருத்தத்திற்கு முன்னரும் 20ஆவது திருத்தத்திற்குப் பின்னரும் இலங்கை ஜனாதிபதிபாராளுமன்றமுறையை உடையதாக இருந்தது.

ஜனாதிபதிமுறை, பாதிஜனாதிபதிமுறை என்ற இரண்டும் ஜனநாயக யாப்புமுறைகள் (*Democratic Constitutional Systems*) ஆகும். ஐக்கிய அமெரிக்காவும், பிரான்சும் இவ்விரு முறைகளுக்கும் உதாரணங்களாகும். இவ்விரு நாடுகளும் ஜனநாயக நாடுகள் ஆகும். ஜனாதிபதிமுறை, பாதிஜனாதிபதிமுறை என்பன அரசாங்கமுறையாக உள்ள சர்வாதிகார நாடுகளும் பல உலகில் உள்ளன. பாராளுமன்றமுறை சர்வாதிகாரமாக மாறுவதற்கு உள்ள வாய்ப்பைவிட ஜனாதிபதிமுறை, பாதி ஜனாதிபதிமுறை என்பன சர்வாதிகாரமாக மாறுவதற்குக் கூடியளவு சாத்தியம் உள்ளது. பலமுடைய நிருவாக ஜனாதிபதி (*Strong Executive President*), ஜனாதிபதி நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்து எடுக்கப்படுபவராக இருத்தல் என்ற இரண்டும் சேரும் போது, அது சர்வாதிகாரமாக (*Authoritarianism*) மாறுவதற்கான கூடிய வாய்ப்பு உள்ளது.

**சர்வாதிகார ஜனாதிபதிமுறை என்னும் ஆபத்தான பாதையில் இலங்கையை நகர்த்திச் செல்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே அரசியல் யாப்புக்கான 20ஆவது திருத்தம் அமைந்தது. இத்திருத்தம் ஜனநாயகத்திற்கு ஓர் இருண்ட யுகமாக அமையலாம்; அல்லது இத்திருத்தம் குறுகிய காலத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு, மறைந்தும் போகலாம். காலம்தான் இதற்கான பதிலைக்கூற வேண்டும். இப்போது எம் முன்னால் உள்ள பணி சர்வாதிகார ஜனாதிபதிமுறைக்கு ஆதரவாக முன்வைக்கப்படும் போலி வாதங்களைத் தோலுரித்துக்காட்டி, உண்மையை மக்களுக்குப் புரிய வைப்பதாகும் என அசங்க வெலிக்கல இக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.**

*ஜனாதிபதிமுறையைத் தேர்வு செய்வதற்கான காரணங்கள் யாவை?*

உலகின் பலநாடுகள் ஜனாதிபதிமுறையைத் தேர்வு செய்து கொண்டுள்ளன. இவ்வாறு தேர்வு செய்வதற்கான காரணங்கள் யாவை? ஜனாதிபதிமுறையின் சாதகமான அம்சங்கள் எவை? ஜனாதிபதிமுறைக்குச் சாதகமாக பின்வரும் நான்கு காரணிகள் முன்வைக்கப்படுகின்றன:

**1. நேரடியான தேர்தல் (Direct Election)**

சில விதிவிலக்குகள் தவிர எல்லா ஜனாதிபதிமுறை நாடுகளிலும் ஜனாதிபதி முழுநாட்டு மக்களாலும் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார். பாராளுமன்றமுறையின்படி பிரதமர் நாட்டு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுபவர் அல்லர்; அவர் பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர் ஆவார். நாட்டு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு சட்டமுறையான வலு (Legitimacy) கூடியதாக உள்ளது.

**2. அதிகாரப் பிரிப்பு (Separation of Powers)**

நிருவாகத்துறையும், சட்ட ஆக்கத்துறையும் வெவ்வேறான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுவதோடு, ஒன்றில் இருந்து மற்றது தனித்து இயங்குவது, ஜனாதிபதிமுறையின் சிறப்பியல்பு. இம்முறையில் அதிகாரப்பகிர்வு நடைமுறையில் இருப்பதால் கட்டுப்படுத்தல்களும் சமப்படுத்தல்களும் (Checks and Balances) செயற்படும் வாய்ப்பு கூடிய அளவில் உள்ளது.

**3. செயற்திறன் (Effectiveness)**

ஜனாதிபதி, நிர்வாக அதிகாரங்களையுடைய பலம் பொருந்திய பிரதமநிர்வாகி (Chief Executive) என்ற நிலையில் உள்ளார். அவர் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவராய் இருத்தல், அவருக்குச் சட்டமுறை வலுவை வழங்குகிறது. அவரால் செயற்திறனுடன் கருமங்களை ஆற்றமுடிகிறது.

**4. உறுதிநிலை (Stability)**

குறிப்பிட்ட காலம்வரை (Fixed Term) ஜனாதிபதி பதவியில் இருப்பார். அவர் தெளிவாக முன்பே திட்டமிடப்பட்டதும், மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றதுமான வேலைத்திட்டத்தைத் தனது பதவிக்காலத்தில் செயற்படுத்தக்கூடியவராக இருப்பார். பிரதமரை பாராளுமன்றம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் நீக்குவது போல், ஜனாதிபதியைப் பதவி நீக்க முடியாது.

மேற்கூறிய சாதகமான காரணிகளை மறுத்துரைத்து, ஜனாதிபதிமுறையின் பாதகமான அம்சங்களை எடுத்துக்காட்டும் எதிர்வாதங்கள் பின்வருமாறு:

**1. நேரடியான தேர்தல்**

நேரடியான தேர்தல், தனிநபர் முதன்மை வாதத்தையும் (Personalism), மக்கள் வாதத்தையும் (Populism) ஊக்குவிக்கிறது. தனிநபர் முதன்மைவாதம் ஒரு கலாசாரமாக வளர்க்கப்படும் போது, அரசியல் தலைமைத்துவம், கவர்ச்சி ஆளுமைமிக்க ஒரு தலைவருக்கு உரியதாக்கப்படுகிறது. இக்காரணத்தால் அரசியல்

நிறுவனங்கள் (Political Institutions) முக்கியம் இல்லை; தனிநபர் ஒருவர்தான் முக்கியம் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. தனிநபர் முதன்மைவாதம் நிறுவனங்கள் மீதும், அதிகாரப் பிரயோகம் மீதான ஜனநாயகக் கட்டுப்பாடுகள் மீதும், மக்களிற்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி அவற்றை வலுவிழக்கச் செய்கிறது. தனிநபர் முதன்மைவாதத்தின் தீவிரவளர்ச்சி நிலையாக அமையும் மக்கள்வாதம் என்னும் 'பொப்யுலிசம்' தனிநபர் முதன்மைவாதத்தின் இன்னொரு வடிவமாகும்.

மக்கள்வாத அரசியலைக் கையில் எடுக்கும் 'தலைவர்' மக்களின் குறைகளை (Grievances) எடுத்துக்காட்டி, அவை பற்றி மேடைகளில் முழங்குவார்; பலியாடுகளாக சில நபர்களையும் சமூகக் குழுக்களையும் சுட்டிக்காட்டுவார். அவர் சிக்கலான பிரச்சினைகளுக்கு மிகவும் எளிதான தீர்வுகளைக் (Simple Solutions to Complex Problems) கூறுவார்.

அரசியல் யாப்பு விதிக்கும் ஜனநாயகக் கட்டுப்பாடுகளை மக்களது இறைமைக்கு (Popular Sovereignty) எதிரானது என்று கூறுவார். பெரும்பான்மையின் உறுதியான விருப்பம் (Majoritarian Will) என்பதே முக்கியம் என்று வாதிடுவார். தலைவரின் சர்வாதிகாரச் செயற்திட்டங்களுக்கு (Authoritarian Projects) பெரும்பான்மைவாதம் சட்ட வலிதுடைமையை (Legitimacy) வழங்குகிறது. இக்காரணங்களால் நேரடியான தேர்தல் சர்வாதிகாரத்திற்கு வழியமைப்பதாக அமைகிறது.

### 2. அதிகாரப்பிரிப்பு

ஜனாதிபதிமுறையில் நிறுவனங்கள், செயற்பாடுகள் (Institutional and Functional) என்ற இரு நிலைகளிலும் அதிகாரப்பிரிப்பு முழுமையானதாக அமைவதைக் காணலாம். இத்தகைய அதிகாரப்பிரிப்பு கட்டுப்படுத்தல்களையும் சமன்படுத்தல்களையும் (Checks and Balances) செயற்பட வைப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தினதும், ஜனநாயகத்தினதும் செயற்பாடுகளை முடக்குவதாக (Breakdown of Government and Democracy) அமைந்துவிடுகிறது. நிருவாகத்துறைக்கும் சட்ட ஆக்கத்துறைக்கும் (பாராளுமன்றத்துக்கும்) இடையே பகை உணர்வு மிகும்போது ஒரு பகுதி பணிந்து விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு உருவாகுவதில்லை; அதிகாரப் போட்டி தொடரும். இதனால் அரசாங்க நடவடிக்கைகள் முடக்கப்படும். இந்நிலையில் ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர் சட்ட ஆக்கத்துறையைப் பலாத்கார வழிகளில் அடக்குவதற்கு முயற்சிப்பார். ஊழல் நடவடிக்கைகள் மூலம் சட்ட ஆக்கத்துறையினரை தம்மோடு ஒத்துப்போகச் செய்வதற்கும் இவர் முயற்சிப்பார். பலாத்காரத்தால் செய்யமுடியாததை முறையற்ற ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் சாதிக்க முடிகிறது.

### 3. செயற்திறன்

பிரதான நிறைவேற்று அதிகாரமுடையவராய் அரசாங்கத்தை வினைத்திறனுடன் ஒரு தலைவர் நடத்திச்செல்வதற்கு ஜனாதிபதிமுறை (Presidentialism) என்ற அரசாங்கமுறைதான் அவசியம் என்பது தவறானதொரு கருத்தாகும். ஒரு தலைவரின் செயற்திறனைப் பலகாரணிகள் தீர்மானிக்கின்றன. இவற்றுள் ஒரு தலைவரின் தனிப்பட்ட திறமைகள் முக்கியமானவை. உலகின் பல நாடுகளில் செயற்திறன்மிக்க பிரதமர்கள் இருந்துள்ளார்கள். ஐக்கிய இராச்சியத்தின் வின்ஸ்டன் சேர்ச்சில், கிளமன்ட் அட்லி, மார்கிரட் தட்சர், ரொனி பிளயர் என்போரும், இந்தியாவின் ஜவஹர்லால் நேருவும், சிங்கப்பூரின் லீ குவான் யு வும், மலேசியாவின் மஹதிர் மொகம்மதுவும், கனடாவின் பியர் ரூடோவும் சாதனையாளர்களான பிரதமர்கள் ஆவர். வரலாற்றின் திசைவழியை மாற்றும் வகையில் செயற்பட்ட இத்தகைய தலைவர்களுக்கு ஜனாதிபதியின் அதிகாரங்கள் தேவைப்படவில்லை.

### 4. உறுதிநிலை

ஜனாதிபதி குறிப்பிட்ட காலத்தவணைக்குப் பதவி வகிக்கலாம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை அவரைப் பதவியில் இருந்து அகற்றமுடியாது. குற்றம் சாட்டுதல் (Impeachment) செயல்முறையும் நடைமுறையில் மிகவும் கடினமானது. இதனால் திறமையற்றவரும், சர்வாதிகாரியும், ஊழல்வாதியுமான ஒருவர் ஜனாதிபதிப் பதவியில் ஆழ வேர்பதித்து நிலைத்துவிட முடியும். பாராளுமன்றமுறையில் அத்தகைய ஒரு பிரதமரை நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பாராளுமன்றத்தினால் பதவியில் இருந்து நீக்க முடியும்; அவரது பதவிக்காலம் விரைவாகவே முடித்து வைக்கப்படும்.

## இலங்கை மக்கள் ஜனாதிபதிமுறை தொடர்ந்திருப்பதை விரும்புகிறார்களா?

*1978 அரசியல் யாப்புக் கொண்டுவரப்பட்டு 42 ஆண்டுகள் கடந்தபின் இன்று (2020இல்) ஜனாதிபதிமுறை தொடர்ந்து இருந்துவிட்டுப் போகட்டும், அதனைத் திருத்த வேண்டாம் என்ற அபிப்பிராயம் உடையவர்கள் பலர் இருப்பது உண்மையே. ஜனாதிபதிமுறைக்குப் பரவலான ஆதரவு உள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆயினும் ஜனாதிபதிமுறைக்கு எதிரான மூன்று வாதங்கள் பரிசீலனைக்கு உரியனவாகும்.*

### 1. மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி

*1978இல் ஜனாதிபதிமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின் இன்றுவரை (2020) 7 ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றன. அத்தேர்தல்கள் பலவற்றில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள் தேர்தல் சமயத்தில் ஜனாதிபதிமுறையை ஒழிப்போம் என்று வாக்குறுதியளித்தனர். 1989, 1994, 1999, 2005, 2010, 2015, 2019 ஆகிய ஆண்டுகளில் இத்தேர்தல்கள் நடைபெற்றன. இவற்றுள் முதல் நான்கு தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர்கள் ஜனாதிபதிமுறையை ஒழித்தல் அல்லது திருத்துதல் பற்றிய உறுதிமொழியை வழங்கினர். இத்தேர்தல்களில் முதல் மூன்று தேர்தல்களிலும் பிரதான எதிர்ப்போட்டியாளர்களும், தாம் பதவிக்கு வந்தால் ஜனாதிபதிமுறையை ஒழிப்போம் அல்லது திருத்துவோம் என வாக்குறுதி வழங்கினர். ஆகவே ஜனாதிபதிமுறை நடைமுறைக்கு வந்தது முதல், 1999 வரையான 20 ஆண்டுக்காலத்தில், ஜனாதிபதிமுறையை ஒழிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் நாட்டு மக்களிடம் இருந்து வந்திருப்பதைக் காணலாம்.*

### 2. 2015இல் கொடுக்கப்பட்ட தெளிவான மக்களாணை

*2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, மக்கள் முன் வைக்கப்பட்ட பிரதான விடயம் ஜனாதிபதிமுறையின் எதிர்காலம் பற்றியதாகும். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய கூட்டணி, அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான (Constitution al Reform) தெளிவான மக்களாணையைப் பெற்றது. அவ்வாணையின்படி அவ்வரசாங்கம் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. இத்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் இத்திருத்தத்திற்கு பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 215 பேர் ஆதரவாக வாக்களித்தனர். அப்பாராளுமன்றத்தில் ஆளும் கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாதபோதும் எதிர்த்தரப்பினரதும் ஆதரவோடுதான் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

2

*பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதம், மக்களாணைக்கு அவர்கள் மதிப்பளித்தார்கள் என்பதன் அடையாளம் ஆகும். 19ஆவது திருத்தத்திற்கு மக்களின் ஆணை கிடைத்தமையானது ஜனாதிபதிமுறைக்கும், சர்வாதிகாரத்திற்கும், ஊழலுக்கும் இடையிலான தொடர்பை மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.*

### 3. மக்களுக்குக் கல்வியறிவூட்டத் தவறிய சூழல்

*ஜனாதிபதிமுறையின் தீங்கான அம்சங்களைப் பற்றிய அறிவு மக்களிடம் இருந்துள்ளது. அரசியல்வாதிகள் ஜனாதிபதிமுறை பற்றியும் அதன் சாதக, பாதகங்கள் பற்றியும் திட்டமிடப்பட்ட முறையில் கல்வியறிவூட்டல் செயற்திட்டங்களை ஒருபோதும் நடத்தியதில்லை. அவ்வாறிருந்தும் ஜனாதிபதிமுறையின் பாதகமான அம்சங்கள் பற்றி மக்கள் தெரிந்து வைத்திருந்தனர். ஜனாதிபதிமுறைக்கு மாறான பாராளுமன்றமுறையின் சாதகமான அம்சங்கள் குறித்தும் மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் வகையில் பிரசாரம் செய்யப்படவில்லை.*

*1970களில் ஜனாதிபதிமுறையின் தீங்குகள் பற்றி கலாநிதி என்.எம் பெரேராவும், கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவும் பத்திரிகைகளில் உயர்தரமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதினர். ஜனாதிபதிமுறையின் தீங்குகள் பற்றி, அதுபோன்ற பிரசாரம் முன்னெடுக்கப்படும் தேவை இன்று உள்ளது. ஜனாதிபதிமுறையின் பாதகமான அம்சங்கள் குறித்து மக்களுக்குக் கல்வி அறிவூட்டினால் மக்கள் ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கான ஆதரவை நிச்சயம் வழங்குவார்கள்.*

## நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதிமுறை அவசியமானதா?

இலங்கைப் புவிப்பரப்பின் ஒற்றுமையைப் பேணுவதற்கு ஜனாதிபதிமுறை அவசியம் என்று கூறுவது அபத்தமான கருத்தாகும். இவ்வாறு கூறுவதற்கு ஆதாரங்கள் எவையும் இல்லை. இதை நியாயப்படுத்துவதற்கான அனுபவச் சான்றுகளும் இல்லை. அண்மையிலுள்ள இந்தியா ஒரு பெரியதேசம்; அங்கு பல்வேறு இனங்களைச்

சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவில் பாராளுமன்றமுறைதான் இருந்து வருகிறது. ஜனாதிபதிமுறை இல்லாததால் அந்த நாடு சிதைந்து அழிந்துவிடவில்லை. பன்மைப் பண்பாடுகளைக் கொண்ட இந்தியா போன்ற சமூகங்களில் பாராளுமன்றமுறை மூலம் ஜனநாயக ஆளுகையையும், பல்வேறு மக்கள் சமூகங்களை உள்ளீர்த்துக் கொள்வதான ஒருமைப்பாட்டையும் (Inclusiveness) ஏற்படுத்த முடிந்துள்ளது. பாராளுமன்றமுறையோடு ஒப்பிடும்போது, ஜனாதிபதிமுறை மூலம் ஏற்படுத்த விரும்பும் ஒற்றுமை, சர்வாதிகாரத்திற்கு வழியமைப்பதைக் காணமுடிகிறது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைப் பதவியில் இருத்தும் போது, 'அதிகாரக் கட்டுப்பாடு மூலம் ஐக்கியம்' என்ற கருத்து அழுத்தம் பெறுகிறது. இக்கருத்து இறுதியில் சர்வாதிகாரமும் இராணுவ மயமாக்கலும் தோன்றுவதற்குக் காரணமாகிறது.

இலங்கையில் இன்று வரை தொடரும் வன்முறை மோதல்களுக்குப் பல காரணங்கள் உள்ளன. ஆயினும் இலங்கையில் ஜனாதிபதிமுறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னரே வன்முறை மோதல்கள் தூண்டப்பெற்று வேகம் பெற்றன என்பதை மறுக்க முடியாது. ஜனநாயக அரசியலில் (Democratic Politics) விட்டுக் கொடுப்புகளுக்கும், சமரசங்களுக்கும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் ஜனாதிபதிமுறை அதிகாரத்தை மத்தியப்படுத்தும் (Centralization of Power) முறையாகையால், அது கட்சிகளுக்கிடையிலும், குழுக்களுக்கிடையிலும் வன்முறை மோதல்களுக்குத் தூண்டுதல் அளிக்கிறது; வெற்றி அல்லது தோல்வி என்றவாறான அரசியல் போட்டி ஊக்குவிக்கப்படுகிறது. ஜனாதிபதிமுறையில் 'வெற்றியாளர் முழுவதையும் பெற்றுக் கொள்கிறார்; தோற்பவர்கள் யாவற்றையும் இழந்து நிற்கிறார்கள்' (Winner takes all) என்ற நிலை ஏற்படுகிறது. இக்காரணத்தால் பிளவுண்ட சமூகங்களிற்கும், முரண்பாடுகளால் சிதைவுறும் நிலையில் உள்ள நாடுகளுக்கும், ஜனாதிபதிமுறை ஏற்றதல்ல என்பதையே வரலாற்று அனுபவம் உணர்த்துகிறது. மூன்றாம் உலகின் பின்தங்கிய பொருளாதார நாடுகளின் ¬¬விளிம்புநிலைச் சமூகங்களும், இனத்துவச் சிறுபான்மைக் குழுமங்களும், பொருளாதார - சமூக நிலையில் பின்னடைவுக்குட்பட்ட குழுக்களும், விடுதலையை அடைவதற்கும், சமூகநீதியைப் பெறுவதற்கும், ஜனநாயக அரசியல் வழிமுறைகளைக் கையாள்வதற்குப் பதிலாக வன்முறை அரசியல் வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் ஜனாதிபதிமுறை தூண்டுதல் அளிப்பதாக உள்ளது. இக்காரணங்களால் சில சமூகங்களுக்கு ஜனாதிபதிமுறை பொருத்தமற்றது என வாதிடப்படுகிறது. அம்முறை, நாடுகளின் ஐக்கியத்திற்குத் தீங்கானது. இலங்கையிலும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதிமுறை தடையாக அமைந்துள்ளது.

### உறுதியான அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதிமுறை அவசியமானதா?

ஜனாதிபதி குறிப்பிட்ட காலத்தவணை (Fixed Term) வரை பதவியில் இருக்க முடியும், அவர் நாட்டு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார் என்ற இரு காரணங்களும் ஜனாதிபதிமுறையில் உறுதியான அரசாங்கத்தை அமைக்க முடியும் என்பதற்குச் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. மேலோட்டமான பார்வையில் ஜனாதிபதிமுறை உறுதிநிலையை ஏற்படுத்துவது போல் தோற்றமளிக்கிறது. பாராளுமன்றமுறையை எடுத்து நோக்கினால் பிரதம நிர்வாகியான பிரதமர், சட்ட ஆக்கத்துறையான பாராளுமன்றத்தினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் எந்நேரமும் பதவியில் இருந்து அகற்றப்படும் ஆபத்து உள்ளது என்பதும் உண்மையே. இவ்வாறான மேலோட்டமான ஒப்பீடுகள் மூலம் பாராளுமன்றமுறை, அரசியல் உறுதிநிலையைப் பேணுவதற்கு சாதகமற்றது என முடிவு செய்தல் தவறு. பாராளுமன்றமுறை நிர்வாகத்துறை (Parliamentary Executive) உறுதியுடையதாக நிலைத்திருப்பதற்கு, அம்முறையினுள் அரசியல் யாப்பு வழிமுறைகள் பல உள்ளடக்கப்படுவதுண்டு. 'உறுதிநிலையை ஏற்படுத்துதல்' என்ற நோக்கத்துடன் பாராளுமன்றமுறையைக் கைவிட்டு ஜனாதிபதிமுறையைத் தழுவுதல் புத்தியுள்ள செயலன்று. பாராளுமன்ற முறையை உறுதியுடையதாகப் பலப்படுத்துவதற்கு பின்வரும் அரசியல் யாப்புச் சட்ட வழிமுறைகள் உலக நாடுகளில் பின்பற்றப்பட்டுள்ளன:

1. குறிப்பிட்ட காலத்தவணை முடியும்வரை கலைக்கப்பட முடியாததாகப் பாராளுமன்றத்தை ஆக்குதல் (Fixed Term Parliament) என்பது ஓர் உபாயமாகும். உதாரணமாக 5 ஆண்டுகள் பதவிக்காலத்தையுடைய பாராளுமன்றத்தை 4 ஆண்டுகளும் 6 மாதங்களும் முடிவடைவதற்கு முன் கலைக்க முடியாது என்ற அரசியல் யாப்பு விதியை உட்படுத்தல் முடியும். அரசாங்கத்தின் உறுதிநிலையை (Stability) இது

போன்ற வழிகளில் பேண முடியும் எனக் கருதப்படுகிறது.

2. இரட்டைக் கலைப்பு (Double Dissolution) என்னும் நடைமுறையைப் புகுத்துதல். உதாரணமாக பாராளுமன்றம் (சட்ட ஆக்கச் சபை) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அரசாங்கத்தைக் கலைக்கும்போது, அத்தீர்மானத்தின் மூலம், பாராளுமன்றத்தையும் கலைத்து பொதுத்தேர்தலுக்கு வழிவிடல் 'இரட்டைக்கலைப்பு' ஆகும். அரசாங்கத்தைத் தோற்கடித்துப் பதவியிழக்கச் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது பதவியையும் இழக்கும் ஆபத்து இருப்பதால் அரசியல் உறுதிநிலையைப் பேண முன்வரலாம்.

3. பொதுத்தேர்தல் முடிவுற்றவுடனேயே பிரதமரும் தெரிவு செய்யப்படுதல் என்ற ஏற்பாட்டைச் செய்தல். இதன்மூலம் மறைமுகமாக பிரதம நிர்வாகியான பிரதமரும் நேரடியாக வாக்காளர்களால் தெரிவு செய்யப்படுகிறார் எனப் பொருள் கொள்ளப்படுவதால், பிரதமரின் பதவிக்குப் பலம் சேர்க்கப்படுகிறது (Providing an indirect mandate that reinforces the legitimacy of the chief executive).

4. சாதாரணப் பெரும்பான்மையால் அரசாங்கத்தைப் பதவியில் இருந்து நீக்க முடியாது; அதிபெரும்பான்மையால் (Super Majority) மட்டுமே நீக்க முடியும் என்ற ஏற்பாட்டைச் செய்தல்.

5. கலப்புத் தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தல். உதாரணமாக 250 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் 100 உறுப்பினர்கள் தனி அங்கத்தவர்கள் தொகுதி முறையூடாகவும் (First PastPost System), மீதி 150 பேர் விகிதாசாரத் தேர்தல் முறையூடாகவும் (Proportional Representa tion) தெரிவு செய்யப்படுதல் என்னும் கலப்புமுறையை நடைமுறைப்படுத்தல். ஆங்கிலத்தில் Mixed Member Proportional (MPP) System என இது அழைக்கப்படும். இக்கலப்புமுறையில் தொங்கு பாராளுமன்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

6. ஒரு கட்சியில் இருந்து பதவி விலகி வேறு ஒரு கட்சியுடன் இணைதலைத் தடை செய்யும் சட்டங்களை இயற்றுதல். ஆங்கிலத்தில் 'Anti Defection Laws' என இது அழைக்கப்படும். கட்சித்தாவலைத் தடுத்தலும், கூட்டுகளை அமைத்தலும் (Coalition Formation) இத்தகைய சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படும். தேர்தலின்போது வாக்காளர் கொடுத்த ஆணையை மீறாமல் இருத்தலையும், ஊழல் நடவடிக்கைகளைத் தடுப்பதையும் இத்தகைய சட்டங்கள் உறுதி செய்யலாம்.

7. அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைப்பை வரையறை செய்யும் சட்டங்களை இயற்றுதல், தனிநபர்களான அரசியல்வாதிகளை முதன்மைப்படுத்தும் தனிநபர்வாதம் (Personal ism), கட்சிகள் பிளவுபட்டுப் பலவாகச் சிதறுதல் என்பன நாட்டில் பலமான இருகட்சிமுறை (Two Party System) தோன்றுவதற்குத் தடையாக அமைவன. சட்டங்கள் மூலம் இவற்றை ஒழுங்கமைத்து இரு கட்சிமுறையைப் பலப்படுத்தலாம். இன அடையாளங்களின் அடிப்படையிலான கட்சிகள் பல காணப்படும் நிலையில், பொதுத்தேர்தல் முடிவில் தொங்கு பாராளுமன்றம் என்ற பிரச்சினை ஏற்படுவதுண்டு. சில நாடுகளில் இன அடையாளங்களின் அடிப்படையிலான கட்சிகள் உருவாக்கப்படுவதைச் சட்டரீதியாகத் தடுக்கும் நடவடிக்கைகூட மேற்கொள்ளப்படுவதுண்டு.

அசங்க வெலிக்கல அவர்கள் 'வளர்ச்சியுறும் ஜனநாயக நாடுகள்' (Developing Democracies) என்ற தொடர் மூலம் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் புதிய தேசங்களின் ஜனநாயகமுறைமைகளின் விசேட பிரச்சினைகளை எமது கவனத்திற்குக் கொண்டுவருகிறார். நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதிமுறையை இந்நாடுகளில் நடைமுறைப்படுத்தும்போது அரசியல் 'உறுதிநிலை' (Stability) கருத்தில் கொள்ளப்படுகிறது. நடைமுறையில் 'உறுதிநிலை' என்பது அதிகாரங்களை ஓரிடத்தில் மிகையாகக் குவிப்பதற்கு (Over Centralization of Power) வழிவகுக்கிறது. ஜனாதிபதிமுறையில், அதிகாரங்களை மிகையாக ஓரிடத்தில் குவித்தல் இடம்பெறும். பல்வேறு இன, மொழி, சமய, பண்பாட்டு வேறுபாடுகளைக்கொண்ட சமூகங்களில் உள்ளீர்ப்பதற்கான அரசியல் முறையினை (Inclusive Political System) ஏற்படுத்துதல் வேண்டும். ஜனாதிபதிமுறை சிறுபான்மை இனத்துவக் குழுமங்களை உள்ளீர்ப்பதற்கான அரசியல் முறையன்று. இத்தகைய

அரசியல்முறையில் எதிர்க்கட்சிகளுக்கும், எதிரணி அரசியல் இயக்கங்களுக்கும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள அரசாங்கத்தை ஆதரிப்பதால் நன்மை எதுவும் கிடைப்பதில்லை.

ஜனாதிபதிமுறை உள்ள நாடுகள் சிலவற்றில் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துள்ள ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் அரசியல் யாப்பை தமது அரசியல் தேவைகளுக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தும் போக்கைக் காணமுடிகிறது. பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சி அதிகாரம் மாறுகின்ற ஒவ்வொரு தடவையும், அரசியல் யாப்பில் ஒட்டு வேலைகளும் திருத்தங்களும் செய்யப்படுகின்றன. அரசியல் யாப்பையே முழுமையாக இரத்துச் செய்துவிட்டு ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை அகற்றி விடுவதும் இடம்பெறுவதுண்டு.

### நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நிருவாக ஜனாதிபதிமுறை அவசியமானதா?

ஒரு நாட்டின் அரசாங்கமுறைக்கும் (System of Government) பொருளாதார வளர்ச்சிக்கும் தொடர்பு இருப்பதாகக் கூற முடியாது. உலகின் பொருளாதார வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகளில் பல, பாராளுமன்றமுறையைக் கொண்டனவாக உள்ளன. ‘G7’ என்ற குழுவில் உள்ளனவான ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இத்தாலி, யப்பான், கனடா என்பன பாராளுமன்ற ஜனநாயகமுறை நாடுகளாகும். இக்குழுவில் உள்ளவற்றுள் ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் என்ற இரண்டு நாடுகள் மட்டுமே ஜனாதிபதிமுறை நாடுகளாகும். இரண்டாம் உலக யுத்தத்தின்போது பேரழிவுக்கு உள்ளான ஜேர்மனி, யப்பான், இத்தாலி என்பன போருக்குப் பிந்திய காலத்தில் பாராளுமன்றமுறையைத் தொடர்ந்ததோடு பொருளாதார வளர்ச்சியில் பெருவெற்றியைப் பெற்றன.

தனிநபர் வருமானம் (Per Capita Income) என்ற அளவுகோலின்படி, செல்வந்த நாடுகளாக விளங்கும் ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் உலகின் மிகவும் பழமையான பாராளுமன்றமுறை நாடுகளாக விளங்குவதைக் காணலாம். பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளான சிங்கப்பூரும் மலேசியாவும் பின்காலனித்துவக் கட்டத்தில் பாராளுமன்றமுறையில் தொடர்ந்திருந்தபோது, பொருளாதார வளர்ச்சியில் சாதனை படைத்தன. இவ்வாறே பாராளுமன்றமுறை நாடான இந்தியாவும் கடந்த சில பத்தாண்டுகளில் பொருளாதாரத்துறையில் பெரும் முன்னேற்றத்தை அடைந்த பொதுநலவமைப்பு நாடாக விளங்குகிறது.

இலங்கை, சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் பொருளாதார வளர்ச்சியில் தொடர்ச்சியாகப் பின்தங்கியே இருந்து வந்தது. 1960களில் ஜே.ஆர். ஜயவர்த்தன, இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணம், இலங்கையின் பாராளுமன்ற முறைதான் என்று கூறியதோடு பிறரின் ஆதரவையும் பெற முனைந்தார். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுச் செயற்பட்டனவென்றும், அரசாங்கங்கள் அடிக்கடி மாறினவென்றும், இக்காரணங்களால் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டதென்றும் அவர் வாதிட்டார். அவர் இலங்கைக்கு பிரான்ஸ் தேசத்தின் பாதி ஜனாதிபதிமுறை (Semi Presidentialism) பொருத்தமானதென்றும், அம்முறையில் ஜனாதிபதிமுறை, பாராளுமன்றமுறை என்ற இரண்டினதும் சாதகமான கூறுகள் உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுபவர். அவரது பதவிக்காலம் இத்தனை ஆண்டுகள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது (Fixed Term). ஆகையால் அவர் தமது பதவிக்காலத்தில் உறுதியோடு செயற்படலாம்; பாராளுமன்ற உறுப்பினர்களின் தயவில் அவர் ஆட்சியில் தொடரும் தேவை இல்லை. அவரால் நீண்டகாலம் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை முன்வைத்துத் திட்டமிட்டபடி செயற்பட முடியும்; நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமான தீர்மானங்களைத் துணிந்து எடுக்க முடியும் என்று வாதிடப்பட்டது. ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படாதவராகச் சுயாதீனமான நிருவாகத்தைக் கொண்டிருக்கும்போது, பிரதமரும் மந்திரிசபையும் பாராளுமன்ற மரபுகளைப் பேணி வருவர். இக்காரணத்தால் ஜனாதிபதிமுறை, பாராளுமன்றமுறை இரண்டினதும் சாதகமான கூறுகளைப் பாதி ஜனாதிபதிமுறையூடாக ஒன்றிணைக்க முடியும் என வாதிடப்பட்டது. கவர்ச்சிகரமாகத் தோன்றிய இந்த வாதங்களின் உண்மைத்தன்மை, இலங்கையில் ஜனாதிபதிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டபோது வெளிப்படலாயிற்று.

ஜனாதிபதிமுறை இலங்கையில் நடைமுறைக்கு வந்த பின்னரும் குறுகியகால நலன்களுக்கான தேர்தல் அரசியல் பண்பாடும், அப்பண்பாட்டு நடைமுறைகளும் தொடர்ந்தன. நீண்டகால நலன்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் பருநிலைப் பொருளாதார (Macro Economic) நடவடிக்கைகளை தவறான முறையில் நிர்வகித்தலிலும் மாற்றம் ஏற்படவில்லை. பருநிலைப் பொருளாதாரத் திட்டமிடுதலிலோ அல்லது அக்கொள்கையை நிறைவேற்றுதலிலோ ஜனாதிபதிமுறையின் கீழ் முன்னேற்றம் ஏற்பட்டதெனக் கூற முடியாது. வருமானத் திரட்டுதலில் பொறுப்பற்ற செயற்பாடுகள், செலவுகளைச் செய்வதில் வீண்விரயம் என்பன மோசமடைந்தன. நிர்வாகத்துறையின் தாமதமும், திட்டமிட்டமுறையிலான ஊழல் நடவடிக்கைகளும் தொடர்ந்தன.

ஜனாதிபதிமுறையின்கீழ் முரண்பாடுகள் மோசமடைவதும், ஜனநாயக விரோத நடைமுறைகள் தொடர்வதும் தற்செயலான நிகழ்வுகள் அல்ல. இலங்கையைப் போன்ற பண்பாட்டுச் சூழல் நிலவும் நாடுகளில், ஜனாதிபதிமுறையின் கீழ் இவை தொடர்வதனை நிறுவனம்சார் முறையில் விளக்க முடியும். ஜனாதிபதிமுறை என்ற நிறுவனம் ஜனாதிபதியின் தற்துணிவு அதிகாரம் (Presidential Discretion) என்பதைக் கட்டுப்பாடற்ற முறையில் உபயோகிக்க இடமளிக்கிறது.

இவ்வதிகாரம் ஆட்சியில் உள்ள அரசின் தேவைகளுக்கு முதன்மையளிக்கிறது. மக்களின் தேவைகளில் கவனம் செலுத்தப்படுவதில்லை. சிறந்த பொருளாதார ஆளுகை (Good Economic Governance), அதிகாரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் முறையில் அமைதல் வேண்டும். முடிவு எடுத்தலில் (Decision Making) கட்டமைக்கப்பட்ட செயற்பாடாக அது அமைதல் வேண்டும். வரம்பற்ற முறையிலான தற்துணிவு அதிகாரப் பிரயோகம், சிறந்த பொருளாதார நிர்வாகத்திற்கு உதவுவதில்லை. இலங்கையின் ஜனாதிபதிமுறையின் கீழான முகாமைத்துவம், நாடு பொருளாதாரரீதியில் பின்னடைவை எய்துவதற்குக் காரணமாக இருந்தமையை அனுபவம் உணர்த்தியுள்ளது. பொருளாதார நிறுவனங்களைச் சீர்திருத்தி, பொருளாதார அடைவுகளை மேம்படுத்த வேண்டும். ஜனாதிபதிப் பதவியில் உள்ளவர்களிடம் அதிகாரத்தைக் குவித்தலும், வலுவாக்கம் செய்தலும் (Empowering Presidentialism) பொருளாதார வளர்ச்சிக்கு உதவப் போவதில்லை.

### சுத்தமான ஆளுகைக்கு (Clean Governance) ஜனாதிபதிமுறை அவசியமானதா?

'சுத்தமான ஆளுகை' என்ற தொடரில் அமைந்துள்ள 'Clean' என்ற சொல் ஊழல், மோசடி அற்ற நிர்வாகம் என்ற கருத்தை உடையது. ஜனாதிபதிமுறை ஊழலையும் மோசடிகளையும் ஒழிப்பதற்கான தீர்வாக அமைய மாட்டாது. தேர்தல் முறையும், நாட்டின் அரசியல் பண்பாடும் ஊழல் அரசியலுக்கான பிரதான காரணங்களாகும். ஜனாதிபதிமுறை நிர்வாகத்துறையைக் கட்டுப்படுத்துவதற்கான மாதிரி (Constraining Model) அன்று; அது நிருவாக ஜனாதிபதியைப் பலப்படுத்தும் அரசு மாதிரி; இதனால் ஒரு நிறுவனம் என்ற முறையில் அது சர்வாதிகாரம், ஊழல் என்பனவற்றிற்கு இரையாகக் கூடிய ஒன்று. ஜனாதிபதிகள் பொறுப்புக்கூறலுக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பதில்லை. நாட்டு மக்களின் தேவைகளை அலட்சியம் செய்யும் போக்கும் அவர்களிடம் வெளிப்படும்.

வளர்ச்சியடைந்து வரும் ஜனநாயக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, ஜனாதிபதிமுறையுடன் விகிதாசாரத் தேர்தல்முறையும் இணையும்போது ஊழல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதெனக் கண்டறியப்பட்டுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையில் பல நன்மைகள் உள்ளன. கொள்கையளவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை சிறுபான்மையினர், விளிம்பு நிலையினர் ஆகியவர்களையும் அரவணைத்து உள்ளீர்ப்பதற்கு (Inclusiveness) ஏற்றதொரு தேர்தல்முறையாகும். பன்மைத்துவச் சமூகங்களில் இணக்கத்தை வளர்ப்பதற்கு அது உதவக்கூடியது. ஆயினும் அத்தேர்தல் முறையில் இரண்டு பாதகமான அம்சங்கள் உள்ளன. முதலாவதாக, அது கட்சி அரசியல் முறையைப் பிளவுபடுத்துகிறது; அம்முறையின் கீழ் கட்சிகள் உடைந்து பல கட்சிகள் தோன்றும் சாத்தியம் கூடிய அளவில் உள்ளது.

இரண்டாவதாக, இலங்கை போன்ற பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் அரசியல் இனத்துவமயப்படுதலை (Ethnicisation of Politics) ஜனாதிபதிமுறை தூண்டுகிறது; இனத்துவ அடிப்படையிலான கட்சிகள் தோன்றுவதற்கு அது தூண்டுதல் வழங்குகிறது. இந்நிலையில் ஊழல் நடவடிக்கைகள் அதிகரிக்கும். சட்டத்தின் ஆட்சி,

பலம் குன்றும். தமது ஆதரவுக் குழுக்களுக்கு நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் (*Patronage Distribution*) அரசியல்வாதிகளின் கடமை என்று கருதப்படும் மனப்பாங்கு மக்களிடம் வளரும்போது, ஊழலுக்கு எதிரான உணர்வும் மழுங்கடிக்கப்படும்.

பாராளுமன்ற அரசியல் ஊழல் மலிந்ததாயும், பல கட்சிகளாகப் பிளவுண்டு பலமற்றதாயும் அமையும் சூழ்நிலையில், ஜனாதிபதி ஓர் இரட்சகராக நாட்டைப் படுகுழியில் இருந்து மீட்பவராக இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. பாராளுமன்றம் பலவீனமடைந்தால் ஏற்படும் சாதக நிலையை ஜனாதிபதி தனக்குச் சாதகமாகவே பயன்படுத்தப் பார்ப்பார். இதற்காக ஜனாதிபதிமுறை அவருக்கு வழங்கியுள்ள அனைத்து வளங்களையும் (*Resources*) அவர் உபயோகித்து, அரசியலில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிப்பார்; மேலாதிக்க மனோபாவம் ஜனாதிபதியிடம் வளருமேயன்றிக் குறைவதில்லை. பாராளுமன்றத்தின் பலவீனத்தை அதிகரிக்கச் செய்வதால் அவருக்கு நன்மையே கிடைக்கும்.

பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதை விடுத்து அவர் பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாது; அது திருத்தவே முடியாத ஒரு நிறுவனம் என்ற விம்பத்தைக் கட்டமைக்கத் தூண்டப்படுவார். அப்பொழுது நாட்டில் குழப்பநிலை நீடிக்கும். நாட்டின் அரசியல் பண்பாட்டில் விரும்பத்தகாத பண்புக்கூறுகள் பூதாகரமாக மேற்கிளம்பியுள்ள சூழலில், பொதுமக்கள் நாட்டை மீட்டெடுப்பதற்கு ஒரு மீட்பர் தேவை எனச் சிந்திப்பார்கள். அவ்வாறான ஒரு நிலை நாட்டில் உருவாகிவிட்டதென்றால், அந்நாடு மக்கள்வாத ஜனாதிபதிச் சர்வாதிகாரம் (*Populist Presidential Authoritarianism*) என்ற பொறிக்குள் வீழும் அபாயமான வேளை நெருங்கிவிட்டதென உறுதியாகக் கூறலாம்.

**ஜனாதிபதிமுறை இலங்கையின் பண்டைய சிங்கள - பௌத்த முடியாட்சியின் மீள் உருவாக்கம் செய்யப்பட்ட ஆட்சிமுறையே அன்றி வேறல்ல என்ற கருத்தை ஜே.ஆர். ஜயவர்த்தன சிங்கள - பௌத்தர்களிடையே பரப்பினார். இக்கருத்தின் மூலம் ஒரு தூரநோக்கு இலட்சியம் (Vision) முன்வைக்கப்பட்டது. அவர் குடியரசின் (Republic) தலைவராகவே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.**

### இனத்துவ அரசியலின் தீயவிளைவுகளைத் தவிர்ப்பதற்கும், நாட்டில் நல்லாளுகையை உறுதி செய்வதற்கும் ஜனாதிபதிமுறை அவசியமானது எனக் கூற முடியுமா?

பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் சிறுபான்மையினரை அந்நியப்படுத்தாது அரவணைத்துச் செல்லுதல் வேண்டும். இதற்கான வழிமுறைகளாக விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை (*Proportional Representation*), அதிகாரப் பரவலாக்கம் (*Devolution*) ஆகிய நிறுவன ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன. இவ்விரு ஏற்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைக் காணமுடிகிறது. ஆட்சியில் உள்ள அரசாங்கத்திற்குச் சார்பாகச் சிறுபான்மை இனங்களின் அரசியல் தலைவர்களைக் கவர்ந்திழுத்து, அவர்களின் ஊடாக சிறுபான்மை இனத்தவர்களின் மொத்த வாக்குகளை (*Block Votes*) ஆட்சியில் உள்ள அரசாங்கம் அபகரிப்பது ஒரு தந்திரமாகும். இதற்காக சிறுபான்மை இனங்களின் தலைவர்களுக்குப் பல சலுகைகளை அரசாங்கம் தாராளமாக அள்ளி வழங்கும். இவ்வாறான சலுகைகள் மட்டுமல்லாது அமைச்சுப் பதவிகளை வழங்குதல், இலஞ்சம் வழங்குதல், அபிவிருத்தி நிதி என்ற போர்வையில் அரச நிதியை வழங்குதல், போஷகர் அரசியல் (*Patronage Politics*) செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல் போன்றன சிறுபான்மை இனங்களின் தலைவர்களை விலைக்கு வாங்குவதற்கு ஒப்பான துஷ்பிரயோகமாகும். சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு (*Minority Protection*) தொடர்பான அரசியல் நிறுவன ஏற்பாடுகள், ஜனநாயக அரசியலுக்கு (*Democratic Politics*) பாதகமான முறையில், ஜனாதிபதிமுறையில் பிரயோகிக்கப்படுதற்குப் பல உதாரணங்களைக் காட்டமுடியும். இத்தகைய துஷ்பிரயோக நடவடிக்கைகள் சிறுபான்மையினருக்கு எதிரான கருத்தாடல்களை (*AntiMinority Discourses*) முன்னெடுப்பதற்கு உதவுகின்றன. மக்கள் மத்தியில் சந்தேக உணர்வை வளர்ப்பதற்கும், பிளவுகளைத் தூண்டி விடுவதற்கும் இவை காரணமாக அமைகின்றன. பாராளுமன்ற அரசியலை (*Legisla tive Politics*) செயலற்றதாக்குதல், நிர்வாகத்துறை

மேலாதிக்கத்திற்கு (*Executive Dominance*) உதவும் என்பதை நடைமுறை அனுபவம் உணர்த்துகிறது. தமக்குப் போட்டியான நிறுவனமான (*Rival Institution*) பாராளுமன்றத்தைப் பலவீனப்படுத்துவதற்கு ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர்கள் தூண்டப்படுகின்றார்கள். பிளவுண்டதும், ஊழல்மிக்கதுமான இனத்துவக் கட்சி முறைமை (*Fragmented and Corrupt System of Ethnic Parties*), நிருவாகத்துறையின் மேலாதிக்கத்திற்கு உதவுவதாகவே அமைவதால், ஜனாதிபதிமுறை இனத்துவ அரசியலின் தீய விளைவுகளை நீக்கி நல்லாளுகைக்கு வழிவகுக்கும் எனக் கூறுவது ஏற்புடையதன்று.

### சிங்கள - பௌத்தப் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் ஜனாதிபதிமுறை அவசியமானதா?

ஜனாதிபதிமுறை இலங்கையின் பண்டைய சிங்கள - பௌத்த முடியாட்சியின் மீள் உருவாக்கம் செய்யப்பட்ட ஆட்சிமுறையே அன்றி வேறல்ல என்ற கருத்தை ஜே.ஆர். ஜயவர்த்தன சிங்கள - பௌத்தர்களிடையே பரப்பினார். இக்கருத்தின் மூலம் ஒரு தூரநோக்கு இலட்சியம் (*Vision*) முன்வைக்கப்பட்டது. அவர் குடியரசின் (*Republic*) தலைவராகவே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும் அவர் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானதும் தாம் 'தர்மிஷ்ட சமாஜய' என்னும் பௌத்த சமயிகள் சமூகத்தை ஆட்சி செய்யும் 'தர்மராஜ' ஆக இருப்பதாகக் கூறினார். பண்டைய சிங்கள - பௌத்த மன்னர் வழி வந்த ஒரு முடிமன்னர் தாமென்ற பாவனை, அவர் பேச்சுகளிலும் நடத்தைகளிலும் வெளிப்பட்டன. மக்கள் குடியரசின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், ஒரு குறிப்பிட்ட மொழி, சமயப் பிரிவினரின் 'தர்மராஜ' எனக் கூறத் தொடங்கினார். இலங்கை மக்களுக்கு அவர் முன்வைத்த அரசியல் யாப்பு இலட்சியம் (*Constitutional Vision*) பற்றி அசங்க வெலிக்கல அவர்கள் பின்வருமாறு கருத்துரைக்கின்றார்:

*"This was an astute blend of tradition and modernity for the purpose of communication and 'selling' his constitutional vision to the electorate."*

அசங்க வெலிக்கல அவர்கள் கருத்துச் செறிவும் சொற்சிக்கனமும் கொண்டதாக ஆங்கிலத்தில் அழகாகச் சொல்லியிருப்பதைத் தமிழில் பின்வருமாறு விளக்கிக் கூறலாம்:

"முடிமன்னர் ஆட்சி என்ற மரபுவழிக் (*Tradition*) கருத்தையும் முடியாட்சி (*Republic*) என்ற நவீனத்துவம் (*Modenity*) சார்ந்த எண்ணக்கருவையும் ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் தந்திரமான முறையில் கலப்புச் செய்கிறார். இக்கலவை வாக்காளர்களுக்கு ஓர் அரசியல் யாப்பு இலட்சியத்தை (*Constitutional Vision*) வழங்குவதற்காக அவரால் தயாரிக்கப்பட்டது. வாக்காளர் மனதில் இக்கருத்தை அவர் கச்சிதமான முறையில் ஆழப்பதித்து விடுகிறார்."

**1972**இன் பாராளுமன்ற அரசியல் யாப்புக்கும் **1978**இன் ஜனாதிபதிமுறை அரசியல் யாப்புக்கும் இடையே சிங்கள - பௌத்தப் பண்பாட்டைப் பாதுகாத்தல் என்ற விடயத்தில் அதிக வேறுபாடு இல்லை என்பதையும், இரு அரசியல் யாப்புகளும் 'பௌத்த - சிங்களப் பண்பாட்டிற்கு முதன்மை' (*Primary of the Sinhala Buddhist Culture*) என்பதற்கு அங்கீகாரத்தை வழங்கின என்பதையும் அசங்க வெலிக்கல அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார். ஆகையால் பாராளுமன்ற முறையினால் மட்டுமே சிங்கள - பௌத்தப் பண்பாட்டைப் பாதுகாக்க முடியும் என்ற வாதம் பொருந்தாது என்பதை அவர் வலியுறுத்துகிறார்.

**13**ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பின்னர், **1972** யாப்புக்கும், **1978** அரசியல் யாப்புக்கும் இடையே குறிப்பிடத்தக்க இரண்டு வேறுபாடுகள் ஏற்பட்டதை அசங்க வெலிக்கல அவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. அவ்வேறுபாடுகளாவன:

1. **13**ஆவது திருத்தம் சிங்களத்தையும் தமிழையும் உத்தியோக மொழியாக்கியது. இதன்மூலம் பன்மைத்துவ உத்தியோக மொழிக்கொள்கை (*Pluralist Official Language Policy*) அரசியல் யாப்பில் புகுத்தப்பட்டது.
2. அதிகாரப் பரவலாக்கம் (*Devolution*) இலங்கையின் ஒற்றையாட்சி இயல்பை ஓரளவுக்கு மாற்றியது (*Diluted the Unitary with Devolution*).

**13**ஆவது திருத்தத்துடன், பாராளுமன்றமுறை இல்லாதுபோய், ஜனாதிபதிமுறை வந்திருந்தாலும், சிங்கள - பௌத்தப் பண்பாட்டு முதன்மை (*Sinhala Buddhist Cultural Primacy*) என்பதில் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஆகையால் சிங்கள - பௌத்தப் பெரும்பான்மையினருக்கு, தமது சிங்கள - பௌத்தப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதற்கு, ஜனாதிபதிமுறையைப் பாதுகாக்க வேண்டும் என்ற தேவை இல்லை என்பதை அசங்க வெலிக்கல அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்.

**ஜனாதிபதிமுறையை ஒழிக்க வேண்டிய அவசியம் இல்லை; அம்முறையின் சர்வாதிகார இயல்புகளை அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மூலம் நீக்கிவிடுதலே சாலச் சிறந்தது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதா?**

இலங்கையின் ஜனாதிபதி என்ற நிருவாகத்துறை நிறுவனத்திடம் உள்ள சர்வாதிகார அதிகாரங்களை அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மூலம் நீக்கிவிடலாம். அதுவே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழி; ஜனாதிபதிமுறையை ஒழிக்க வேண்டியதில்லை எனச் சிலர் வாதிடுகின்றனர். இவ்வாதத்தின் பொருத்தமுடைமை பற்றிப் பரிசீலித்துப் பார்ப்போம். யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட ஜனாதிபதிமுறை பின்வரும் இரு மாதிரிகளில் ஒன்றாகவே அமைதல் முடியும்.

அ) அமெரிக்காவின் மாதிரியிலான தூய ஜனாதிபதிமுறையாக (Pure Presidentialism of the American Model) இருத்தல் முடியும். இம்முறைக்கு மாறும்போது முழுமையான அதிகாரப் பிரிப்பு (Full Seperation of Power) இருக்கும். அதாவது சட்ட ஆக்கச் சபைக்கும் (பாராளுமன்றம்) நிர்வாகத்துறைக்கும் (ஜனாதிபதி) இடையே முழுமையான அதிகாரப் பிரிப்பு நடைமுறையில் இருக்கும்.

ஆ) பாதிஜனாதிபதிமுறையைத் (SemiPresidentialism) திருத்தம்செய்து, அதனை பிரதமர் ஜனாதிபதிமுறையாக (PremierPresidential) மாற்றுதல் இரண்டாவது வழியாகும்.

இவ்வாறு சீர்திருத்தம் மூலம் ஜனாதிபதி முறையைத் திருத்தியமைக்கலாம் என்று கூறுபவர்கள், இலங்கையின் அரசியல் முறைமையின் நோயியல் கூறுகளைச் சரியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றே கருதலாம்.

ஜனாதிபதிமுறை என்னும் அரசியல் நிறுவனம் ஊடாக நிருவாக அதிகாரம் (Executive Power) பிரயோகிக்கப்படுதல் இலங்கையில் எத்தகைய அரசியல் பண்பாட்டுப் (Political Culture) பின்புலத்தில் இடம்பெறுகிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இலங்கையின் அரசியல் பண்பாடு, தனிநபர் ஒருவரிடம் அரசியல் அதிகாரங்களைக் குவிக்கும் 'தனிநபர் வாதம்' (Personalism) என்னும் அரசியல் பண்பாட்டை ஊக்குவிப்பது; இலங்கையில் ஜனநாயக அரசியல் பண்பாடு மலர வேண்டும் என்று விரும்புபவர்களால் இத்தகைய 'தனிநபர் வாதத்தை' ஏற்க முடியாது. இது சர்வாதிகார ஜனாதிபதிமுறை தனிநபர் ஒருவரிடம் குவிவதற்கு ஆதரவான ஆட்சிமுறையாகும்.

அதிகாரத்தை மிகையாக மத்தியில் குவிக்கும் (Over Centralised) ஜனாதிபதிமுறை நல்லாளுகைக்கு மாறான ஜனநாயக விரோத நடைமுறைகளை நிருவாகத்துறையில் புகுத்திவிடும். முடிவுகளை எடுத்தலில் (Decision Making) வெளிப்படைத்தன்மையும், பொறுப்புக்கூறலும் (Transparency and Accountability) இருக்கமாட்டாது. தனி ஒருவரை மையமாகக்கொண்ட நிருவாகமுறை ஊழலுக்கு வழிவகுக்கும். ஊழலையும், நிருவாகச் சீர்கேடுகளையும் தடுப்பதற்கு, பல நிறுவனங்களிடமும், பல்வேறு மையங்களிடமும் அதிகாரத்தைப் பரவலாக்கி விடுதலே (Deconcentrate or Decentre Power) சிறந்த வழியாகும். அதன்மூலம் நிருவாகத்துறைக்குள் கட்டுப்பாடுகளும், சமன்படுத்தல்களும் (Checks and Balances) செயற்பட வழி ஏற்படும்.

ஜனாதிபதிமுறை இத்தகைய கட்டுப்பாடுகளை அனுமதிக்காது. ஜனாதிபதிமுறையோடு பாராளுமன்ற முறையை ஒப்படும்போது, அதிகாரச் சமநிலையுடைய (Balance of Power) நிறுவன ஒழுங்கமைப்பை உருவாக்குவதற்கு பாராளுமன்றமுறையே சிறந்த மாதிரி ஆகும். அம்முறையின் கீழ் சட்டசபையின் ஓர் அங்கமாக, கூட்டு நிர்வாக அதிகாரமுடைய (Collective Executive Power) மந்திரிசபை விளங்குகிறது. அம்மந்திரி சபை சட்டசபைக்குப் பொறுப்புக்கூற வேண்டியதாகவும் உள்ளது. நிருவாக அதிகாரத்தைச் செலுத்தும் மந்திரிசபை சட்ட ஆக்கத்துறையான பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழக்கும்போது, பதவியிழக்க வேண்டி ஏற்படும். இக்காரணங்களால் ஒப்பீட்டளவில் ஊழலற்ற, வினைத்திறனுடைய நிர்வாகத்தை உருவாக்குவதற்கு பாராளுமன்றமுறையே சிறந்தது.

அரசியல் யாப்புச் சட்ட நோக்கில் பாராளுமன்றமுறை, ஜனாதிபதிமுறை என்பனவற்றின் ஒப்பீடு இவ் உண்மையை எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

### 1. மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்பு

பாராளுமன்றமுறையில் மந்திரிசபை கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) என்னும் அடிப்படையில் செயற்படுகிறது. கூட்டுப் பொறுப்பு என்ற கருத்து உணர்த்துவது யாதெனில், நிருவாக அதிகாரம் பலரால் கூட்டாகச் செயற்படுத்தப்படுகிறது; அதனால் அவ்வதிகாரம்

பன்மை அதிகாரமாகும், என்பதே. அது ஒரு தனிநபரின் அதிகாரப் பிரயோகத்தைக் குறிப்பிடவில்லை (*The principle of collective responsibility means that the political executive is plural, collegiate and corporate entity and not the rule of one person*).

### 2. மந்திரி சபையின் தலைவரான பிரதமர்

மந்திரி சபையின் தலைவரான பிரதமர் பிறமந்திரிகளுக்குச் சமதையானவர்; அவர் அவர்களுள் முதன்மையானவர் (First Among Equals) ஆவார். அவர் ஜனாதிபதி என்ற தனிநபரின் நிலையில் இருந்து வித்தியாசமான அந்தஸ்தை உடையவர். ஜனாதிபதி, மந்திரிகளை தனக்குக் கீழ்ப்பட்டவர்களாக, சுதந்திரமாகச் செயற்பட முடியாதவர்களாக ஆக்கும் முறையில் நிருவாகத்தை நடத்த முடியும்.

### 3. அரசுத்தலைவர் வேறு, அரசாங்கத் தலைவர் வேறு

பாராளுமன்றமுறையில் அரசுத்தலைவர் சம்பிரதாயபூர்வமான கடமைகளை ஆற்றும் பெயரளவிலான அதிகாரமுடையவராக இருப்பார். அரசாங்கத் தலைவரான (Head of Government) பிரதமர், நிர்வாகத்துறைத் தலைவராக இருப்பார். ஜனாதிபதிமுறையில் அரசுத்தலைவர் (Head of Government), அரசாங்கத் தலைவர் என்ற இரு பதவிகளையும் ஒருவரே வகிக்கின்றார். இவ்விரு பதவிகளையும் ஒன்றிணைக்கும் ஜனாதிபதிப்பதவி, சர்வாதிகாரத்திற்குத் துணைபோவதாக அமையும் ஏற்பாடாகும். பாராளுமன்றமுறையில் அரசுத்தலைவர், அரசாங்கத் தலைவர் என்ற அதிகாரப் பிரிப்பு (Separation of Powers), நிர்வாகத்துறையின் அதி உயர் மட்டத்தில் (Apex Level) உள்ளவரின் மீதான கட்டுப்பாடாகும்.

### 4. நிர்வாக அதிகாரத்தின் பிரிப்பு

பாராளுமன்றமுறையில் நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட்டு பரவலாக்கப்பட்டு இருக்கும். உள்ளகப் பிரிப்பு என்ற வகையில் மந்திரிசபைக்குள் அதிகாரப் பிரிப்பு உள்ளது. செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் என்ற வகை அதிகாரிகளிடமும் அதிகாரம் பகுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிமுறை, தனிநபருக்கு முடிவுகளை எடுப்பதில் முதன்மை அளிப்பதால், நிருவாகத் துறைக்குள் உள்ளக அதிகாரப் பிரிப்புக்கு (Internal Separation of Powers) இடமளிப்பதில்லை. பாராளுமன்றமுறையில் எந்தவொரு தனிநபரும் தமக்கு மக்களின் நேரடி ஆணை (Direct Mandate) உள்ளதெனக் கோர முடியாது.

அரசியல் யாப்புச் சட்ட நோக்கிலான மேற்குறித்த ஒப்பீடு, பாராளுமன்றமுறை தனிநபர் சர்வாதிகாரத்தைத் தடுக்கக்கூடியது என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. ஆயினும் உலக நாடுகளின் வரலாற்று அனுபவத்தில் இருந்து 'சர்வாதிகாரப் பாராளுமன்ற முறைகளுக்கு' (Authoritarian Parliamentary Systems) உதாரணம் காட்டமுடியும் என அசங்க வெலிக்கல குறிப்பிடுகிறார். அரசியல் விஞ்ஞானிகளாலும், அரசியல் சட்டப் புலமையாளர்களாலும் எழுதப்பட்ட ஒப்பீட்டு ஆய்வுகள், ஜனாதிபதிமுறையானது பாராளுமன்றமுறையைவிடச் சர்வாதிகாரிகள் தோன்றுவதற்கு கூடியளவு வாய்ப்புகளை அளிக்கின்றது எனவே கூறுகின்றன.

பாராளுமன்றமுறை ஜனநாயக அரசியல்முறை மலர்ச்சி பெறுவதற்குச் சாதகமான அரசாங்க முறையாகும்:

அ) பாராளுமன்ற முறை அரசியல் பன்மைத்துவத்தின் (Political Pluralism) அடிப்படையில் கட்டமைக்கப்படுவது.

ஆ) இதற்கு மாறாக ஜனாதிபதிமுறை, நிர்வாக அதிகாரம் பிரிக்கப்படாமல் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருக்க வேண்டும்; அவ்வதிகாரம் தனிநபர் அதிகாரமாகவும் இருத்தல் வேண்டும் என்ற ஒருமைக் கோட்பாட்டின் (Monistic and Personalised Executive Power) அடிப்படையில் கட்டமைக்கப்படுவது.

இ) இக்காரணங்களால் பாராளுமன்றமுறை, ஜனநாயகத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும், ஜனாதிபதிமுறை கட்டுப்பாட்டுக்கு (Control) அழுத்தம் கொடுப்பதாகவும் அமைகிறது.

## முடிவுரை

இத்தமிழ்க்கட்டுரை 'Nonsense upon Stilts? Revisiting Justifications of Presidentialism in Sri Lanka' என்ற தலைப்பில் அசங்க வெலிக்கல அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் எளிமைப்படுத்திய தமிழாக்கமாகும். ஆங்கிலக் கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகள் தொகுத்தும் சுருக்கியும், வேண்டியவிடத்து விரித்து விளக்கியும், தமிழில் எழுதப்பட்டுள்ளன. ஆங்கிலக் கட்டுரை 2020ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி 'Ground Views' இணைய சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்
# வலிகாமம் – சங்கானை

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.


### இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

சென்ற கட்டுரையில் வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றுத் தொடர்பாக லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படம் தரும் தகவல்களையும், அவை சார்ந்த வரலாற்றுக் குறிப்புகளையும் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் சங்கானைக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படம் காட்டும் தகவல்களை ஆராயலாம். சங்கானைக் கோவிற்பற்றில் சங்கானை, சுழிபுரம், தொல்புரம், மூளாய் ஆகிய நான்கு துணைப் பிரிவுகள் அடங்குகின்றன. நிலப்படம் இந்நான்கு பிரிவுகளையும் எல்லை குறித்துக் காட்டுகிறது (படம்1).

இக்கோவிற்பற்று, தற்காலத்தில் சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகத்துக்கு உட்பட்டதாகவும், உள்ளூராட்சி முறைமையில் இது வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

### எல்லைகள்

நிலப்படத்தின்படி, சங்கானைக் கோவிற்பற்றின் எல்லைகளாக வடக்கில் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றும், கிழக்கில் மானிப்பாய்க் கோவிற்பற்றும், தெற்கில் வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றும், மேற்கில் யாழ்ப்பாணக் கடலேரியும் உள்ளன. இம்மேற்குக்கரை கடலேரிக்கு அடுத்த பக்கத்தில் உள்ள காரைநகர்த் தீவை நோக்கியபடி அமைந்துள்ளது. இந்த எல்லைகளுக்குள் கிழக்குப் பக்கத்தில் சங்கானைத் துணைப்பிரிவும், மேற்கே கடலேரிக் கரையோரமாக வடக்கிலிருந்து தெற்காக சுழிபுரம், தொல்புரம், மூளாய் ஆகிய பிரிவுகளும் வரிசையாக அமைந்துள்ளன.

### வீதிகள்

நிலப்படத்தின்படி மூன்று வீதிகள் சங்கானைக் கோவிற்பற்றினூடாகச் செல்கின்றன. மானிப்பாயிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் ஒரு வீதி சங்கானைப் பிரிவினூடாகச் செல்கிறது. சங்கானைக் கோவிற்பற்றுத் தேவாலயப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இன்னொரு வீதியும் சங்கானைப் பிரிவை ஊடறுத்துச் சென்று பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இறுதியாகக் குறிப்பிட்ட வீதி, முதலில் குறிப்பிட்ட மானிப்பாய் பண்டத்தரிப்பு வீதியைப் பண்டத்தரிப்புக் கோவிற்பற்று எல்லைக்குள், பண்டத்தரிப்புச் சந்திக்கு அண்மையில் சந்திப்பதாக நிலப்படம் காட்டுகிறது (படம்2). தற்காலத்தில் சங்கானைச் சந்தியிலிருந்து வடகிழக்காகச் செல்லும் வீதியையே நிலப்படம் இவ்வாறு காட்டுகிறது எனலாம். நிலப்படத்தில் இது பிழையாக வரையப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அத்துடன், இந்த வீதி, உண்மையில் இன்றைய மானிப்பாய் - பண்டத்தரிப்பு வீதியை சங்கானை, மானிப்பாய் ஆகிய கோவிற்பற்றுகளிடையேயான எல்லைப்பகுதியிலேயே சந்திக்கிறது, நிலப்படம் காட்டுவதுபோல் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் அல்ல.



படம்-1: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சங்கானைக் கோவிற்பற்றுப் பகுதி.

வட்டுக்கோட்டையிலிருந்து தொடங்கும் இன்னொரு வீதி மூளாய்ப் பிரிவை ஊடறுத்து, மூளாய், தொல்புரம் ஆகிய பிரிவுகளுக்கிடையேயான எல்லையை அண்டி கடலேரிக்கரையில் முடிவடைவதாக நிலப்படம் காட்டுகிறது. இந்த முடிவிடம் இன்றைய புன்னாலைப் பாலம் தொடங்கும் இடத்துடன் பொருந்தி வருவதையும், அவ்விடத்திலிருந்து காரைநகருக்கான கடல்வழிப்பாதை இருந்ததை லெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள வேறு நிலப்படங்கள் காட்டுவதாகவும் சென்ற கட்டுரையில் ஏற்கெனவே குறிப்பிட்டோம்.

நீண்ட காலமாகவே வலிகாமத்திலிருந்து காரைநகருக்கான போக்குவரத்துப் புன்னாலையூடாகவே இடம்பெற்று வந்தது.

அக்காலத்தில் ஏற்றுமதிக்காகக் காரைதீவிலிருந்த யானைத்துறைக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருந்த யானைகளையும் புன்னாலையூடாகவே எடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. ஆனால், லெயுசிக்காமின் நிலப்படத்தில் புன்னாலைத்துறை என்ற பெயர் மேலே குறிப்பிட்ட வீதி முடிவுறும் இடத்துக்கு வடக்கே கரையோரமாகச் சற்று தொலைவிலேயே குறிக்கப்பட்டுள்ளது. இதன் அருகே ஒரு மடத்தையும் நிலப்படம் காட்டுகிறது. இந்தத் துறை அக்காலத்தில் படகுத் துறையாகச் செயற்பட்டிருக்கக்கூடும். இத்துறையை அணுகுவதற்கான வீதியெதையும் நிலப்படம் காட்டவில்லை.

வட்டுக்கோட்டையிலிருந்து வரும் வீதி முடியும் இடத்திலிருந்து காரைநகர் வரையான ஆழம் குறைந்த கடலேரிப் பகுதி ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் அகலம் கொண்டது. முற்காலத்தில், வற்றுக் காலங்களில் இப்பகுதியூடாக மக்கள் கால்நடையாகக் கடலேரியைக் கடந்து காரைநகருக்குச் சென்றதாகத் தெரிகிறது.[1] ஏற்றுமதிக்காகக் காரைநகர் யானைத்துறைக்குக் கொண்டுபோக வேண்டிய யானைகளையும் இவ்வழியாகவே நடத்திச் சென்றிருக்கலாம். இந்த ஆழம் குறைந்த பகுதியூடாகவே 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானியர் புன்னாலைத் தாம்போதியை அமைத்துக் காரைநகரை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைத்தனர்.

சுழிபுரம், தொல்புரம் ஆகிய பிரிவுகளூடாக எந்தவொரு வீதியையும் நிலப்படம் காட்டவில்லை. தற்காலத்தில் சித்தங்கேணிச் சந்தியிலிருந்து தொல்புரம், மூளாய் ஆகிய பிரிவுகளை ஊடறுத்துப் புன்னாலைக்குச் செல்லும் வீதியும், புன்னாலையிலிருந்து தொல்புரம், சுழிபுரம் ஆகிய பிரிவுகளூடாகப் பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியும் நிலப்படத்தில் இல்லை. சித்தங்கேணிச் சந்தியிலிருந்து சங்கானைக் கோவிற்பற்றூடாகப் பண்டத்தரிப்புக்குச் செல்லும் தற்கால வீதியையும் நிலப்படம் காட்டவில்லை என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். இத்தொடரின் பல இடங்களில் குறிப்பிட்டதுபோல், இவை அக்காலத்தில் முறையான வீதிகளாக இல்லாமல் இருந்திருக்கலாம், அல்லது நிலப்படத்தில் நோக்கத்துக்கு அவற்றைக் காட்டவேண்டிய தேவை இல்லாதிருந்திருக்கலாம்.




படம்-2: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட சங்கானைக் கோவிற்பற்றின் படம்.

### கட்டடங்கள்

பெரும்பாலான ஏனைய கோவிற்பற்றுகளைப் போலவே சங்கானைக் கோவிற்பற்றிலும் ஒரு தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. இவற்றைத் தவிர, ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஒரு மடத்தையும் நிலப்படத்தில் காணமுடிகிறது.

#### தேவாலயமும் தேவாலய இல்லமும்

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத் தொடக்கத்திலேயே சங்கானைத் தேவாலயமும் அதன் இல்லமும் நிரந்தரமான கட்டடப் பொருட்களாலான கட்டடங்களாகவே இருந்துள்ளன. போல்தேயஸ் பாதிரியார், இவ்விரு கட்டடங்களும் முருகைக் கற்களால் கட்டப்பட்டவை என்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார். முன்புறம் நல்ல முற்றமும் எல்லாவற்றையும் சுற்றி மதிலும் இருந்ததாகவும் அவர் எழுதியுள்ளார்.[2] தேவாலயம், தேவாலய இல்லத்தளவு பெரியது என அவர் குறிப்பிட்டிருப்பது, தேவாலயம் பெரிய கட்டடமாக இருக்கவில்லை என்பதைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. சங்கானைத் தேவாலயத்தின் வரைபடம் ஒன்று போல்தேயசின் நூலில் உள்ளது (படம்3). அந்நூலிலுள்ள ஏனைய தேவாலயங்களின் வரைபடங்களைப் போலவே இதன் நம்பகத்தன்மையும் கேள்விக்குரியதே.

இன்றும் சங்கானையில் அழிபாடுகளாகக் காணப்படும் கட்டடமே போல்தேயஸ் பாதிரியார் விவரித்த தேவாலயத்தின் எச்சம் என்பதில் ஐயமில்லை (படம்4).




**படம்-3: போல்தேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள சங்கானைத் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் காட்டும் படம்.**

அழிபாடுகளிலிருந்து ஒல்லாந்தர்காலத் தேவாலயக் கட்டடத்தின் வழிபடுவோருக்கான மண்டபம் ஏறத்தாழ 110 அடி 6 அங்குல நீளத்தையும் 31 அடி 8 அங்குல அகலத்தையும் கொண்டிருந்தது.[3] இம்மண்டபத்தின் நடுவில் இரண்டு வரிசைகளில் 7 அடி 6 அங்குலம் சுற்றளவுள்ள தூண்கள் இருந்ததாக ஜே.பி. லூயிஸ் 1916 ஆம் ஆண்டில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.[4] தற்காலத்தில் அத்தூண்கள் தடயம் எதுவும் இன்றி அழிந்துவிட்டன. இத்தூண் வரிசைகள் மண்டபத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்தன. மண்டபத்தின் பக்கச் சுவர்களும் தூண் வரிசைகளும் மண்டபத்தை மூடியிருந்த கூரையைத் தாங்கின. கூரை, மண்டபத்தின் நீளப்பாட்டு அச்சுக்கு நேர் மேலே அமைந்த முகட்டையும், அதிலிருந்து பக்கச் சுவர்களை நோக்கி இருபக்கமும் சரிந்து செல்லும் அமைப்பையும் கொண்டிருந்தது. தேவாலயச் சுவர்கள் நான்கு அடி தடிப்புக் கொண்டவை. மண்டப வாயிலுக்கு எதிர்ப் பக்கத்தோடு இணைந்துள்ள குருமாருக்கும் பாடற்குழுவுக்குமான பகுதியின் (chancel) நீளம் 28 அடி, அகலம் 20 அடி. இப்பகுதி கல்லாலான வளைவுக் கூரையைக் (vault) கொண்டது.[5]

இத்தேவாலயம் போர்த்துக்கேயரால் முதலில் கட்டப்பட்டுப் பின்னர் ஒல்லாந்தரால் திருத்தி அமைக்கப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் முதற் சில ஆண்டுகள் யாழ்ப்பாணத்திலிருந்த போல்தேயஸ் பாதிரியார், அக்காலத்தில் தேவாலயம் நிரந்தரமான கட்டடப் பொருட்களால் ஆனதாகக் குறிப்பிட்டதாலும் அவரது நூலில் உள்ள சங்கானைத் தேவாலயத்தின் படமும் அவ்வாறே காட்டுவதாலும், போர்த்துக்கேயர் காலத்திலேயே இது உறுதியான நிரந்தரமான கட்டடமாக இருந்ததாகக் கருத முடியும்.

பிரித்தானியர் காலத்தில் சங்கானைக் கோவிற்பற்றுக்கு அண்மையிலிருந்த ஐந்து கோவிற்பற்றுகள் 19 ஆம் நூற்றாண்டின் முற்பாதியிலேயே அமெரிக்க மிசனின் முக்கிய நிலையங்களாக இருந்தன. இதனால், அக்கோவிற்பற்றுகளில் இருந்த ஒல்லாந்தர் காலத் தேவாலயங்களை அவர்கள் திருத்திப் பயன்படுத்தினர். ஆனால், சங்கானையில் அவர்கள் மதப்பணி செய்தபோதும், பழைய சங்கானைத் தேவாலயத்தை அவர்கள் கையேற்றுப் பயன்படுத்தவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க மிசனைச் சேர்ந்தவர்கள் சங்கானையில் தேவாலயமொன்றை நிறுவியபோதும் அது வேறிடத்திலேயே நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தரின் பழைய தேவாலயம் பிரித்தானியர் காலம் முழுவதிலும் அதன் பின்னரும் கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது. அண்மையில் அதன் அழிபாட்டை இலங்கைத் தொல்லியல் திணைக்களம் தொல்லியற் சின்னமாக அறிவித்துள்ளது.

பழைய சங்கானைத் தேவாலயத்தின் அழிபாடுகள் இன்றைய மானிப்பாய் - காரைநகர் வீதியை அண்டி, சங்கானைச் சந்திக்கும் சித்தங்கேணிச் சந்திக்கும் இடையில் வீதிக்குத் தெற்குப் பக்கத்தில் உள்ளது. ஆனால், நிலப்படம், தேவாலயமும் இல்லமும் மானிப்பாய் - காரைநகர் வீதிக்கு வடக்கே, சங்கானையிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் வீதியை அண்டி இருப்பதாகக் காட்டுகிறது. நிலப்படம், தேவாலயத்தைப் பிழையான இடத்தில் குறித்துள்ளதாகவே தோன்றுகிறது.

### மடம்

சங்கானைக் கோவிற்பற்றின் தொல்புரப் பிரிவின் கரையோரத்திலேயே மேலே குறிப்பிட்ட மடம் காணப்படுகிறது. அவ்விடத்தைப் புன்னாலைத்

துறை எனப் பெயர் குறித்துள்ளனர். இதை மடம் எனப் பெயர் குறித்துக் காட்டாவிட்டாலும், இதன் குறியீட்டையும் அமைவிடத்தையும் கருதிப் பார்க்கும்போது இது ஒரு மடமே என்பதில் ஐயம் இல்லை. மடத்தைக் குறிக்கச் சிறிய கட்டடம் போன்ற குறியீடும், நிலப்படத்தில் பல இடங்களில் காணப்படுவதுபோல் அதற்கு அருகில் நிழல் மரத்தைக் குறிக்கும் ஒரு குறியீடும் உள்ளன. பொதுவாக இவ்வாறான கரையோர மடங்கள் கடல்வழிப் பாதைகள் தொடங்கும் இடங்களில் அல்லது துறைகளை அண்டியே காணப்படுவது வழக்கம். நிலப்படமும் பெரும்பாலான பிற இடங்களில் இவ்வாறே காட்டுகிறது. இதுபற்றி இக்கட்டுரைத் தொடரில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். ஆனாலும், இங்கே துறை எனக் குறிப்பிட்டுள்ள இடத்திலிருந்து கடல்வழிப் பாதைகள் எதுவும் காட்டப்படவில்லை. இவ்விடத்துக்குத் தெற்கே சற்றுத் தொலைவில் வட்டுக்கோட்டையிலிருந்து வரும் வீதி முடியும் இடத்திலேயே காரைநகருக்கான கடல்வழிப் பாதை தொடங்குகிறது எனவும் அது வற்றுக்காலத்தில் நடந்து செல்வதற்கு ஏற்றது என்றும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். அவ்விடத்தில் மடம் எதுவும் இல்லை.

## குளங்கள்

நிலப்படத்தில் சங்கானைக் கோவிற்பற்றுக்குள் மொத்தம் 14 குளங்களைக் குறித்துள்ளனர். இவற்றுள் சங்கானைப் பிரிவுக்குள் ஐந்து குளங்களும் சுழிபுரம் பிரிவில் ஐந்து குளங்களும் தொல்புரம், மூளாய் ஆகிய பிரிவுகளுக்குள் ஒவ்வொன்றிலும் இரண்டு குளங்களும் காணப்படுகின்றன. சங்கானைப் பிரிவுக்குள் அமைந்தவற்றுள் சித்தன் குளம், கோவாம் குளம், சங்கானைக் குளம், மஞ்சள் ஓடை ஆகியவை சிறப்புப் பெயர்களைக் கொண்டவை. ஒரு குளம் வெறுமனே குளம் (*Tanck*) என்ற பொதுப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் பிரிவில் உள்ளவை, உடும்பு செத்த குழி, பிரளாய், நளவ கிராய், வெள்ளாள கிராய், நெடுங்குளம் ஆகிய பெயர்களைக் கொண்டவை. தொல்புரம் பிரிவில் புன்னாலைக் குளம், வரட்டைக் குளம் ஆகிய இரண்டு குளங்கள் உள்ளன. மூளாயில் பொக்கண்ண ஓடை என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஒரு குளமும் ஒரு கேணியும் காணப்படுகின்றன.

மேற்கண்டவற்றுள் புன்னாலைக் குளம், நளவ கிராய், வெள்ளாள கிராய், நெடுங்குளம் என்பன தற்காலப் பதிவிலுள்ள புன்னாலைப் பெரிய குளம், நளவராயன் குளம், வெள்ளவராயன் குளம், நெடுங்குளம் ஆகியவற்றுடன் பெயர் ஒப்புமை கொண்டவையாக உள்ளன.[6] அது மட்டுமன்றி, நிலப்படத்திலுள்ள மேற்படி குளங்களின் வடிவங்களும் அமைவிடங்களும்கூடத் தற்காலக் குளங்களுடன் பெருமளவுக்கு ஒத்துள்ளன. நிலப்படத்தில் சங்கானைப் பிரிவுக்குள் கோவாம் குளம் என்ற பெயரில் உள்ள குளமே தற்காலப் பதிவுகளில் அதே பகுதியில் காணப்படும் கொவ்வைக் குளமாக இருக்கக் கூடும். சுழிபுரம் பிரிவில் நிலப்படம் காட்டும் பிரளாய் (*Pralaay*) என்னும் குளம், அப்பிரிவில் அடங்கும் பறாளாய்ப் பகுதியில் இருந்த ஒரு குளமாக இருக்கக்கூடும். நிலப்படத்தில் அதன் அமைவிடத்தை நோக்கும்போது, அது இன்றைய பறாளாய் முருகன் கோவில், பறாளாய் ஈஸ்வர விநாயகர் கோவில் ஆகியவற்றுக்கு அண்மையில் இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது. தற்காலத்தில் அப்பகுதியில் குளங்கள் எதுவும் இல்லை. அது மூடப்பட்டிருக்கலாம்.

சங்கானைப் பிரிவுக்குள் குறித்துள்ள சித்தன் குளம் என்ற பெயருக்கும் இன்று அப்பகுதிக்கு அண்மையில் உள்ள சித்தன் கேணி அல்லது சித்தங்கேணி என்ற ஊர்ப் பெயருக்கும் இடையேயான ஒற்றுமையும் கவனத்துக்கு உரியது. இந்தச் சித்தன் குளம் சித்தங்கேணிப் பகுதியில் அமையவில்லை. அதனால், சித்தங்கேணி என்னும் பெயர் ஏற்படுவதற்குச் சித்தன் குளம் காரணமாக இருக்காது எனலாம். ஆனால், இரண்டுக்குமான பெயர் ஒற்றுமை ஆய்வுக்கு உரியது.

### குறிப்புகள்

1. கா. குகபாலன், தீவகம்தொன்மையும் மேன்மையும் (கொக்குவில்: 2017), 240.
2. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos.* 14 *(July* 1958*April* 1959*),* 311, 323.
3. *Sagara Jayasinghe, "The 'Remains of Faith': Portu guese - Influenced Ecclesiastical Art and Architecture in the Northern Province of Sri Lanka",* 56.
4. *Jayasinghe, The Remains of Faith,* 6. இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.
5. *Jayasinghe, The Remains of Faith,* 6.
6. விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பதிவுகளின்படி.

# முடிவுரை :
# இனி சில விதிகள் செய்வோம்

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம், மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல. சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.




### நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

பெரும் நம்பிக்கையுடன் வரவேற்கப்பட்ட புதிய அரசாங்கம் இயங்கத் தொடங்கி நான்கு மாதங்கள் கடந்துள்ளன. இந்த இடைவெளியில், முந்தைய 'புதிய அரசாங்கம்' ஒவ்வொன்றினதும் அரங்கேற்றங்களின் பின்னரும், இன்றும் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் கவனிப்புக்குரியன. இன்றைய கணிப்பில் அறுபது வீதத்துக்கு மேற்பட்டவர்கள் முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாகவும் வலுவான நம்பிக்கையுடன் மேலும் விருத்தியை எதிர்பார்ப்பதாகவும் கருத்துரைத்துள்ளனர். பழையதன் மீது வெறுப்புற்று ஏற்படுத்தப்படும் புதிய அரசாங்கங்கள் மீது, இதே கால இடைவெளியில், முன்னர் இந்தளவிலான நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை எனக் கருத்துக் கணிப்பாளர்கள் தமது ஆய்வு முடிவில் எடுத்துரைத்துள்ளனர்.

முன்னதாக 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றத்தின் போது, ராஜபக்ஷ குடும்பத்தின் கொள்ளை, ஜனநாயகமின்மை, ஊழல் நிர்வாகம் எனக் கூறி உருவாக்கிய 'நல்லாட்சி அரசாங்கம்' உருப்படியாக எதனையும் சாதிக்காத நிலையில் மிக வேகமாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தது. நான்கு வருடங்களில், அதனை வீழ்த்தி, மீண்டும் கொள்ளையடித்ததாக விரட்டப்பட்ட அதே குடும்பத்தைச் சேர்ந்த புதிய முகமொன்றிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க வேண்டி இருந்தது. அரசியலாளர்கள் மீதான நம்பிக்கையீனம் அப்போதும் முனைப்பாக இருந்ததில் முன்னாள் இராணுவத் தளபதியான கோத்தபாய ராஜபக்ஷ திறன்மிக்க நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கை பலரிடமும் இருந்தது. அவ்வாறு மக்கள் எதிர்பார்த்து 2019 இல் அந்தப் 'புதிய அரசாங்கம்' ஆட்சியில் அமர்த்தப்பட்ட போதிலும் இரண்டு வருடங்களில் நிர்வாகச் சீர்கேடுகளும் முன்னைய 'ஜனநாயக மறுப்புடன் கொள்ளையடிப்பதான' பழைய பல்லவி மீண்டெழுந்த உக்கிரம் காரணமாகவும் ராஜபக்ஷ குடும்பமே சில வருடங்களுக்கு அரசியல் வனவாசம் அனுப்பப்படும் நிலை ஏற்பட்டது.

கடந்த ஆண்டின் கடைக்கூறில் ஒட்டுமொத்த அரசியலாளர்கள் மீதான வெறுப்புணர்வு மீண்டும் முழு அளவில் வெளிப்படும் வகையில் முற்றிலும் புதியவர்களைக் கொண்ட ஆளும் கட்சி அரங்கேறி உள்ளது. மட்டக்களப்புத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் புதிய ஆளும்கட்சி ('தேசிய மக்கள் சக்தி' - தே.ம.ச.) கூடுதல் ஆசனங்களைப் பெற்ற சாதனை நிலைநாட்டப்பட்டது. நாடு முழுவதற்குமான இந்த மாற்றத்தை வட மாகாணமும் அங்கீகரித்து, தே.ம.ச. எனும் சிங்களத் தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூடுதலாக அனுப்பி இருப்பது பலரது புருவங்களை உயர்த்த வழிகோலியது. இது தமிழ்த் தேசிய அரசியல் தோற்றுப்போனதன் வெளிப்பாடு என ஒரு தரப்பினர் கூறுவர்; வடக்கு மக்கள் தமிழ்த் தேசியத்தைக் கைவிடவில்லை என்பதற்கு, சிதறிய தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர் தொகையைக் காட்டுவர் இன்னொரு தரப்பினர். 'பழையவர்கள் தமிழ்த் தேசியத்தைக் காட்டிக்கொடுப்பவர்களாக இருந்தமையால் அவர்களைத் தோற்கடித்து சிங்களத் தேசியக் கட்சிக்கு ஒரு பகுதி மக்கள் வாக்களித்ததன் வாயிலாகத் தமது கோபத்தை வெளிப்படுத்தி உள்ளனர்' எனக் கூறும் இவர்களது கணிப்புப் புறக்கணிக்கத்தக்கதல்ல.

'இணக்க அரசியல் துரோகிகளுக்கு' எதிராக மக்கள் இந்தத் தடவை தே.ம.ச. க்கு வாக்களித்ததாகச் சமாதானம் காணும் போக்கும் ஏற்கனவே நிலவுகிறது. இங்குள்ள பண்பு ரீதியான மாற்றத்தை இவர்கள் கவனங்கொள்ளாத போதிலும் ஏற்பட்டுவரும் மக்களது மனநிலைத் தெளிவை இந்த முடிவு பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி இருக்கிறது என்பதே மெய். முன்னர் வெவ்வேறு சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்கப்பட்டு உதிரிகளான 'இணக்க அரசியலாளர்கள்' தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். இத்தகைய உதிரிகளாக இம்முறை வெவ்வேறு தமிழ்த் தேசியக் கட்சியினர் பாராளுமன்றத்துக்குப் போக, ஒரே அமைப்பில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட பெறுபேற்றை தே.ம.ச. அடைந்துள்ளது!

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் அரசியலுக்குப் புதியவர்கள். இந்தப் புதிய முகங்கள் 'அரசியலே அறியாத கற்றுக் குட்டிகள்' என எல்லாமறிந்த மேதாவித் தனத்துடன் முரசறைகின்ற இன்னொரு புதிய முகம் சுயேட்சையாக வெல்லவைக்கப்பட்டுள்ளார் என்பதும் மிகுந்த முக்கியத்துவம் உடையது. தனது பொறுப்பிலுள்ள நிர்வாகத்தைச் சரியாக நடாத்த இயலாமல் மக்களிடம் 'அம்பலப்படுத்திக்' குறுக்கு வழிப் பிரபலம் பெற்றிருந்த ஒரு வைத்தியரை ஏன் மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்கள்?

**முன்னதாக 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றத்தின் போது, ராஜபக்ஷ குடும்பத்தின் கொள்ளை, ஜனநாயகமின்மை, ஊழல் நிர்வாகம் எனக் கூறி உருவாக்கிய 'நல்லாட்சி அரசாங்கம்' உருப்படியாக எதனையும் சாதிக்காத நிலையில் மிக வேகமாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தது. நான்கு வருடங்களில், அதனை வீழ்த்தி, மீண்டும் கொள்ளையடித்ததாக விரட்டப்பட்ட அதே குடும்பத்தைச் சேர்ந்த புதிய முகமொன்றிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க வேண்டி இருந்தது.**

பெரும்பான்மை மக்கள் தே.ம.ச. இன் புதிய உறுப்பினர்கள் அமைப்பாக்கப் பலத்துடன் சாதிப்பார்கள் என்று நம்பிக்கையைத் தெரிவித்த போதிலும் ஒரு கிலுகிலுப்பைப் பேர்வழியை அறிவாளியென்று கருதும் முட்டாள்தனமான நம்பிக்கைகொண்ட சிறுபான்மை உதிரிச் சிந்தனை உருவாக இயலுமானது ஏன்?

தேசம் பெற்ற தோல்விகளும் அதற்குக் காரணமாக அமைந்த அரசியல் பண்ணுவோரும் மக்களால் நிராகரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை இந்தச் செல்நெறி எடுத்துக்காட்டுகின்றது. இது தனியே இலங்கைக்கு உரியது மட்டுமல்ல. தொழில் தேர்ச்சிமிக்க அரசியல் பண்ணுவோரை நிராகரித்து வெவ்வேறு தளங்களில் இயங்கிப் புதிதாக அரசியலுக்கு வருகின்றவர்களை அரியாசனம் ஏற்றும் போக்கு அண்மைக் காலத்தில் பல நாடுகளிலும் அரங்கேறி உள்ளது. இதுவரை உலகை ஆண்டு வந்த முதல்நிலை வல்லரசான ஐக்கிய அமெரிக்கா இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. முதலாந்தர வல்லாதிக்க நாடெனும் அதிகாரத்தை இழந்து இரண்டாம் நிலைக்கு நாடு சரிவதனைத் தடுக்கவியலாத தேர்ச்சி பெற்ற தலைவர்களை விட வர்த்தகத் திறன் மிக்க ஒருவரை ஜனாதிபதி ஆக்கிப் பார்த்து அமைதி காண வேண்டிய நிலையில் ஐக்கிய அமெரிக்கா!

முன்னைய ஜனாதிபதியான பைடனின் குடும்பத்துக்கு உக்ரேனில் பொருளாதார நலன் இருந்ததா, இன்றைய ஜனாதிபதிக்கு ருஷ்யாவுடன் வர்த்தக ஆதாயம் கிடைக்குமா என்பதல்ல விவகாரம்; அன்று தொடங்கிய உக்ரேன் யுத்தம் எதிர்பார்த்த அரசியல் ஆதாயத்தைத் தரவில்லை என்பதை ஐக்கிய அமெரிக்க ஆளும் வர்க்கம் கண்டுணர்ந்ததால் 'அரசியல் பண்ணத் தெரியாத' ட்ரம்ப் அதிகாரத்தில் வைக்கப்பட்டுள்ளார் என்பதே பிரதானமானது. நட்பு நாடுகளின் மீது இவர் விதிக்கும் வரிகளும் திறந்த பொருளாதாரத்துக்கு நெருக்கடி கொடுப்பதும் வீழ்ந்து வரும் ஐக்கிய அமெரிக்க நிலவரத்தைக் காவாந்து பண்ணுமா எனப் பரீட்சிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் அதிமேதாவி போலவே ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியும் பல தடவைகளில் 'பைத்தியக்காரத் தனமாக உளறுவதாக' கருத்துரைக்கப்படுவதனைக் காண்கிறோம். கற்றறிந்த சமூகங்கள் இத்தகைய உரைகளுக்கு இடமளிப்பது ஏன்?

## சென்றதினி மீளாது

ஏற்கனவே பொருளாதாரச் சரிவை எட்டி, அந்தத் திசை மார்க்கத்தில் வேகங்கொண்டுள்ள ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் சரிவைத் தான் உக்ரேன் நிலவரம் எடுத்துக் காட்டுகிறது. இங்கு சந்திக்கும் பின்னடைவை மறைப்பதற்கு, 'நான் இன்னமும் சண்டியன் தான்' என்ற வீறாப்பை வேறிடங்களில் புதிய வடிவம் தாங்கி வெளிப்படுத்த வேண்டி உள்ளது. அத்தகைய தனியொரு வல்லாதிக்க நாட்டின் நலனுக்காகத் தத்தமது நாடுகளின் வளங்களைத் தாரை வார்க்க விரும்பாத ஏனைய நாடுகள் சுயபொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்தி விருத்தி செய்ய இயலாத நிலையைக் காப்பிரேட் மூலதனத்துக்கு விலைபோன ஊடகத்துறை கையாள்கிறது.

அரசியல், பொருளாதாரத் தளங்களில் ஏகாதிபத்திய அணி பின்னடைந்து வீழ்ச்சி கண்டு வந்தபோதிலும் பண்பாட்டுத் தளத்தில் காப்பிரேட் ஏகாதிபத்திய ஊடக ஊடறுப்பு அதனைத் தாங்கி நிற்கிறது. அதற்கு உதவும் வகையில் விஞ்ஞான, தொழில்நுட்ப விருத்தியின் புதிய பரிணாமமாக செயற்கை நுண்ணறிவுப் (AI) பிரயோகம் அமைந்திருந்தது. இப்போது அந்தத் தளத்திலும் மக்கள் சீனம் 'DeepSeek' எனும் மாற்றுச் செயற்கை நுண்ணறிவுப் பிரயோகம் வாயிலாக பலமான அடியை ஏகாதிபத்தியத் திணைக்கு

வழங்கியுள்ளது. விலை அதிகமான உற்பத்திப் பொருளைப் பயன்படுத்தி, அதற்குரிய நுட்பங்களை மறைத்து வைத்தவாறு ஏகபோக அதிகாரத்தைக் கொண்டிருந்த காப்பிரேட் நிறுவனத்துக்கு மாறாக மலிவான உற்பத்திப் பொருள்களை மக்கள் சீனா அறிமுகப்படுத்தி, செயற்கை நுண்ணறிவுக்குரிய தயாரிப்பு நுட்பங்களையும் பரவலாக்கி உள்ளது. ஒரு நாடு ஏகபோக மேலாதிக்கம் கொள்ள இயலாமல் பரவலாக்கப்படும் இத்தகைய அறிவுப் பிரயோகம் ஒவ்வொரு நாட்டையும் சொந்தக் கால்களில் தங்கி நிற்க வழிகோலும் (புதிய செயற்கை நுண்ணறிவுப் பரிமாணம் பற்றி, கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக வெளியீடான சிறுபொறி ஏழாவது இதழில் மு. மயூரனால் எழுதப்பட்ட 'மேற்குலகின் AI மேலாதிக்கத்தின் மேல் சீனாவின் DeepSeek எறிந்திருக்கும் கலகக் கல்' எனும் கட்டுரை தெளிவாக இதனை எடுத்துக்காட்டி உள்ளது. கட்டுரையின் நிறைவு வாசகம் 'எல்லோரும் வெல்வோம்!' என மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது).

இந்த அம்சம் மிகுந்த கவனிப்புக்கு உரியது. இப்போது ஏற்பட்டு வரும் மாறு நிலைக் காலத் தளம்பல்கள் தான் "நான் சண்டியன் தான்" என ஐக்கிய அமெரிக்காவைச் சொல்ல வைக்கிறது. இதன் பின்னர் இன்னொரு மேலாதிக்கச் சண்டியனாக மக்கள் சீனம் மேலெழுந்து வருவதான அச்சம் சிலரிடம் உள்ளது. ஐக்கிய அமெரிக்க ஊடகப் பரப்புரை அவ்வாறு தான் அமைந்துள்ளது. அதற்கு மாறாக மக்கள் சீனமோ, இரு தரப்பும் வெற்றிபெறும் "*win win theory*" ஐ முன்னிறுத்துவதான வர்த்தகப் பரிமாற்றத்தைக் கையாள்கிறது. பண்டங்களுக்கானதாக மட்டுமன்றி அறிவுப் பரவலிலும் அனைத்துத் தரப்பினரது வெற்றிக்கானதாக அதனைக் கையாள வழிகாட்டி நிற்கிறது மக்கள் சீனம்!

இது இலகுவில் நிறைவேறிவிடுகிற சங்கதி அல்ல. ஒடுக்கப்பட்டு இருந்த எமது தேசங்கள் சொந்தக் கால்களில் தங்கி நின்று மீண்டெழுந்து விட்டால், உலக வளங்களை வற்றடித்துத் தங்களை வளர்த்த ஏகாதிபத்தியத் திணையின் ஆளும் தரப்பு அனுபவிக்கும் பல சுகபோகங்கள் கைநழுவிப்போக இடமேற்படும். அவ்வாறு ஆகிவிடாமல் தடுக்கும் மேலாதிக்க அரசியல் முன்னெடுப்பு இன்னமும் தொடர்கிறது. ஏகாதிபத்தியத் திணைக்கு முண்டு கொடுக்கும் சக்தியாக இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தால் பல வடிவங்களில் பதியமிடப்பட்டு வளர்க்கப்படுகிறது.



**ஏ.கே. கோபாலன்**
**Image Source - timescontent.timesofindia.com**

சுதந்திரத்துக்குப் பிந்திய இந்தியா, முன்னதாக, சுயசார்புப் பொருளாதாரக் கொள்கையுடன் சொந்தக் கால்களில் முன்னேறி வந்தது. அணிசேராக் கொள்கையுடன் இயங்கிய இந்தியாவுக்கு சோசலிச முன்னெடுப்புடன் இருந்த சோவியத் யூனியன் ஆதரவுக் கரம் நீட்டி இருந்தது. வர்க்க வாத அரசியல் முன்னெடுப்பினால் சோவியத் யூனியன் வீழ்ந்த பின்னர் ஐக்கிய அமெரிக்காவால் இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படலாயிற்று. மக்கள் சீனா முன்னெடுக்கும் 'தேசங்களிடையே சமத்துவம்' என்ற நடைமுறைப் பிரயோகத்தைத் தகர்ப்பதற்கு இந்தியா உதவ இயலும் என்பது ஏகாதிபத்தியத் திணையின் எதிர்பார்ப்பு.

வர்க்க வாத அரசியலுடன் இயங்கிய மேலைத்தேச ஏகாதிபத்தியத்துக்கு, திணை அரசியலின் மேலாதிக்கப் பிரயோகம், இருநூறு வருடங்களுக்கு உட்பட்ட புதிய அனுபவம். இந்தியா இரண்டாயிரத்தைநூறு வருடங்களாக அதனைப் பிரயோகித்த அனுபவம் உடையது.

சீனாவை வீழ்த்த வேண்டும், சீனாவுக்கு நட்புக்கரம் நீட்டும் ருஷ்யாவைப் பகைக்க வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்கா வலியுறுத்திய போதிலும் இந்தியா அவ்விரு நாடுகளுடனும் நட்பைப்பேணிப் பொருளாதார ஊடாட்டத்தை முன்னெடுத்து வருகிறது. தனது முதல் பதவிக் காலத்தில் இதனைக் கண்டுகொள்ளாமல் இயங்கிய ட்ரம்ப் அவர்களால் இந்தப் பயணத்தில் இந்தியப் பிரதமரை அவமதிக்காமல் இருக்க இயலவில்லை. அடுத்த நகர்வில் ஏகாதிபத்தியத் திணைக்குத் தானே தலைமை ஏற்பதாயினும், முத்தரப்பு ஊடாட்டத்தின் வாயிலாகவே ஐக்கிய அமெரிக்காவையும் மேவிய மேலாதிக்க வல்லரசாக இந்தியாவால் வர இயலுமாக அமையும். தற்காலிகமாகச் சில விட்டுக்கொடுப்புகளைத் தனக்குரிய அணியான மேலாதிக்கத் திணைக்கு இந்தியா வழங்கும் என



கே.ஏ. சுப்பிரமணியம்
Image Source - www.namathumalayagam.com

எதிர்பார்க்கலாம்.

எவ்வாறெனினும், திணை அரசியல் அனுபவம்மிக்க சீனாவும் இந்தியாவும் புதிய உலக ஒழுங்கில் வர்க்க வாத அரசியலில் முட்டிமோதிய ஐக்கிய அமெரிக்க - சோவியத் யூனியன் இடையேயான பனிப் போர் போலச் செயற்பட அவசியமிருக்காது. மேலாதிக்கத் திணை அரசியலை முன்னெடுக்கும் இந்தியா, அதற்குரிய பண்பான "எதிரியுடன் கூடி உறவாடி அதிகாரத்தை வென்றெடுக்கும்" வழிமுறையைத் தேட வேண்டி இருக்கும். நடைமுறை அனுபவத்தின் வாயிலாகத் திணை அரசியல் செயலொழுங்குக்குரிய மார்க்சியப் பிரயோகத்தை மக்கள் சீனம் கையாளுவதனால் மாஓ சேதுங் சிந்தனை சோசலிச நிர்மாணத்துக்கும் நீடித்து வருகிறது. "எதிரியை அழித்தொழிப்பது" எனும் வர்க்க அடிப்படைக்குரிய அரசியல் வடிவமாக இயங்கிய மார்க்ஸ், லெனின் ஆகியோரது பிரயோகங்களில் இருந்து வேறுபட்ட வரலாற்றுச் செல்நெறிக்கு உரியது மாஓ சேதுங் சிந்தனை என்பதைத் தெளிவுற மக்கள் சீனத்தால் எடுத்துக்காட்ட இயலவில்லை. தேசிய விடுதலைக்குப் பின்னரான சோசலிச நிர்மாணத்துக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை மாஓ சேதுங் கையேற்க நேர்ந்த இடர்பாடு தொடர்கிறது; பூரண சமத்துவத்தை எட்டும் வரை வர்க்க அரசியலில் இருந்து வேறுபட்ட ஓர் அரசியல் வடிவம் அவசியப்படுவதனை உணர்ந்து மாஓ சேதுங் சிந்தனையைச் சோசலிச நிர்மாண விருத்திக்கு உரிய இன்றைய பிரயோகமாகக் கொள்வது, 'சீனாவுக்கான பிரத்தியேகப் பிரயோகம்' என்றுதான் மக்கள் சீனத்தால் சொல்ல இயலுமாகி உள்ளது; இதனைப் புத்தகவாத (வறட்டுவாத) மார்க்சியர்கள் திரிபுவாதம் என அடையாளப்படுத்துவதும் நடந்து வருகிறது.

தமிழகத்தில் உருவாக்கம் பெற்று நிலவியிருந்த திணை மேலாதிக்கத்தின் முந்தைய உறவை மாற்றுவதில் பக்திப் பேரியக்கம் காட்டியிருந்த வழிமுறை விடுதலைத் திணை அரசியலுக்குரிய கோட்பாட்டைக் கண்டடைய உதவியுள்ளது. பழைய பாணியில் இயங்கும் பழக்கதோசம் காரணமாகப் பின்னடைந்துள்ள மார்க்சிய அரசியலானது விடுதலைத் தேசியம் எனும் புதிய கோட்பாட்டு விருத்தியைக் கையேற்கும் போது மட்டுமே மார்க்சிஸ - லெனினிஸ - மாஓ சேதுங் சிந்தனையால் மீண்டும் வையத் தலைமை கொள்ள இயலும்!

## வர்க்கமும் திணையும்

'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுக்களும் ஓட்டங்களும்' எனும் இந்தத் தொடரில் இவை குறித்துப் பேசி வந்துள்ளோம். கிரேக்க - ரோம் தொடக்கிவைத்த

வர்க்க அரசியல் செல்நெறியிலிருந்து வேறுபட்டதான ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமை சாதி அமைப்பில் காணப்பட்டுள்ளது. வர்க்க ஒழிப்புக்கான கடமையைக் காண இடந்தராத தவறான வாழ்முறையாகச் சாதிகளின் இருப்புப் பார்க்கப்பட்டு வந்தமையால் எமக்கான மார்க்சியப் பிரயோகக் கோட்பாடு வகுக்கப்படாமல் போனது. முதலாளித்துவ நிலைப்பாட்டில் 'சாதி ஒழிப்புக்' கோட்பாட்டை முன்வைத்த பெரியாரியமும் அம்பேத்கரியமும், தொடர்ந்து சாதிகளிடையே மோதலைத் தவிர்க்கப் போதுமானதாக இல்லை. இந்திய மக்கள் விடுதலையைத் தூரப்படுத்தி இந்தியாவை ஏகாதிபத்தியமாக வளர்ப்பதில் முதலாளித்துவக் கருத்தியல்களான பெரியாரியமும் அம்பேத்கரியமும் பங்களிப்புச் செய்வதனைக் கண்டுகொள்ளாமல் இன்றைய எதிர்ப்பு அரசியல் வாதிகள் இயங்கி வருகின்றனர்.

அன்றைய மார்க்சியர்கள் சரியான கோட்பாட்டை வகுக்கத் தவறியமையால் பெரியாரும் அம்பேத்கரும் தத்தமது முதலாளித்துவச் சிந்தனை வரையறைக்கு ஆட்பட்டு 'சாதி ஒழிப்பை' முன்னிறுத்தினர். பிராமணிய மேலாதிக்கத்தைத் தகர்க்க வேண்டிய பணி காரணமாக அன்றைய அவர்களது அந்தத் தவறை மன்னிக்க இயலும். தாராளவாத அரைப் பிராமணியத் தலைமையை வழங்கிய காந்தியின் முதலாளித்துவ நிலைப்பாடு கூட சுதந்திரம் பெற உதவிய அளவில் ஏற்றாக வேண்டிய ஒன்றே. பெறப்பட்ட சுதந்திரத்தை மக்கள் விடுதலைக்கானதாக மாற்றி வளர்த்தெடுக்கும் சரியான கோட்பாட்டுடன் மார்க்சியர்கள் செயற்படத் தவறியிருந்தனர் என்பதனைச் சுயவிமரிசன ரீதியாக ஏற்பது அவசியம்.

இதனை வைத்துக் காந்தி, பெரியார், அம்பேத்கர் எனும் முப்பெரும் தலைவர்கள் மட்டுமே கூடுதல் சரியுடன் இருந்ததாகவும் அன்றைய மார்க்சியர்கள் முற்றிலும் தவறுகளுடன் செயற்பட்டனர் என்னும் கூறுகின்றவர்கள் இன்று மேற்கிளம்பி வருகின்றனர். பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் சாதியத்தைப் புரிந்து கொள்ளத் தவறிய குற்றச்சாட்டுக்கு அப்பால் மக்கள் விடுதலைக்கான பங்களிப்பில் மார்க்சியர்களே அன்று முக்கால்பங்கு சரியுடன் இயங்கியவர்களாகக் கணிக்கத்தக்கவர்கள். இன்றைய முதலாளித்துவச் சீர்கேடுகளுக்கு இடமளித்த காந்தி, பெரியார், அம்பேத்கர் போன்றோர் கால்பங்கு மட்டும் சரியாக அமையும் வண்ணம் எமக்கான பிரத்தியேக வரலாற்று இயங்குமுறையைப் பிரயோகித்திருந்தனர் எனக் கணிக்க இயலும்!

இந்திய மக்களின் விடுதலைப் போராட்ட அனுபவங்களையும் அதன் மீது இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்புகளையும் கற்றுணர்ந்த இலங்கைக் கொம்யூனிஸ்ட கட்சி எமக்கான மார்க்சியக் கோட்பாட்டை உருவாக்க வழிசமைத்தனர். ஏ.கே. கோபாலன், நம்பூதிரிபாட் போன்ற இந்திய மார்க்சியர்கள் சாதியத்துக்கு எதிரான போராட்டங்களை முனைப்புடன் முன்னெடுத்தவர்கள். முழுமையாக அவர்கள் மார்க்சிய அரசியல் செயற்பாட்டுப் பரிணமிப்பை எட்டிய பின்னர் அந்த முனைப்பைக் கைவிட்டிருந்தனர் (பலரையும்போல வர்க்கவாதமாக மார்க்சியம் கருதப்பட்டதன் பேறு இந்தப் பின்னடைவு). வர்க்க அரசியல் களம் அவர்கள் முன்னே பரந்திருந்தது.

சாதி அமைப்புக்கு எதிரான போராட்டம் முன்னுரிமைக்கு உரியதாக இருந்த யாழ்ப்பாணத்தில் இந்திய மார்க்சியர்கள் முன்னதாக கையேற்றிருந்த சாதியத்துக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து வளர்க்கப்பட்டது. பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டுடன் மாஓ சேதுங் சிந்தனைப் பிரயோகமான "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற பதாகையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட ஒக்ரோபர் 21 எழுச்சி மார்க்கம் எமக்கான மார்க்சியக் கோட்பாடுகளை வழங்கியது.

இலக்கியத் தளத்தில் க. கைலாசபதியின் மக்கள் இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்தார். அரசியல் தளத்தில் கே.ஏ. சுப்பிரமணியம் இனப் பிரச்சினைத் தீர்வில் நாலாம் கட்டப் போராட்டம் (சாதியத் தகர்ப்பில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்களை அணி திரட்டியதைப் போல, இன ஒடுக்குமுறையைத் தகர்ப்பதில் பேரினத்துக்குட்பட்ட உழைக்கும் மக்களை ஒன்றிணைப்பதான 'விடுதலைத் தேசிய' மார்க்கம்) என்பதனை முன்வைத்தார்!

### புதிய பாதை

இந்தத் தொடருக்கான விடயத்தை நிறைவு செய்தாலும் மற்றொரு ஆளுமை குறித்தும் பரிசீலனையை மேற்கொண்ட பின்னரே இனி அவசியப்படும் புதிய பாதை பற்றிய முடிவுக்கு வர இயலும். ஆறுமுக நாவலர் இன்று விவாதக் களத்துக்கு உரியவராக உள்ளார். அது குறித்த புதிய தொடர் ஒன்றில் சந்தித்துப் புதிய பாதையை வடிவப்படுத்த முயல்வோம்!

# கடலின் அக்கரை போனோரே: கேளாத குரல்களின் வலி

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் 'சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்' எனும் இத்தொடர் பேசமுனைகிறது.


மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.




## தொடக்கக் குறிப்புகள்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்கள் 2024 டிசம்பரில் 613.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாயகத்திற்கு அனுப்பியுள்ளனர். இது புதிய சாதனையாகும். இதற்கு முந்தைய பதிவு செய்யப்பட்ட அதிகபட்சமான தொகை 572.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது ஒரு மாதத்தில் இலங்கைக்கு தொழிலாளர்களினால் அனுப்பப்பட்ட அதிகபட்ச பணமாகும். அதேபோல் கடந்தாண்டு, வெளிநாட்டுத் தொழிலாளர்கள் 6.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். இது 2023ஆம் ஆண்டை விட 11% அதிகமாகும். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தரவுகளின்படி, 2024ஆம் ஆண்டில் மொத்தம் 312,836 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டைவிட்டு வெளியேறினர். இது நாட்டின் வரலாற்றில் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்த இலங்கையர்களின் அதிகபட்ச எண்ணிக்கையாகும். இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆனால் அவர்களின் நலன்கள் பேணப்படுகின்றதா? அவர்கள் மீதான கரிசனை இலங்கைச் சமூகத்திற்கு இருக்கின்றதா?

இக்கட்டுரை போரின் பின்னரான காலப்பகுதியில், இலங்கையின் வடக்கு - கிழக்கில் இருந்து, மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் சென்றோரில் கவனம் குவிக்கிறது. மத்திய கிழக்கிற்கு இலங்கையில் இருந்து பணிப்பெண்கள் வேலைக்குச் செல்வது ஒரு முக்கிய பேசுபொருள். அதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. வரலாற்று ரீதியாக வடக்கு - கிழக்கில் இருந்து அங்கு செல்வோர் மிகக் குறைவு. ஆனால் போரின் முடிவோடும் மீள்குடியேற்றத்தோடும் நாட்டின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள், இன்னமும் செல்கிறார்கள். அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு, அந்தஸ்து என்பன நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து செல்லும் பெண்களிடமிருந்து இவர்களைப் பல வழிகளில் வேறுபடுத்துகிறது. போருக்குப் பின்னரான வடக்கு - கிழக்கின் சமூக அசைவியக்கங்களில் கவனம் பெறாமல்போன இன்னொரு தொகுதியினர், இவ்வாறு மத்திய கிழக்கிற்குப் பணிப்பெண்களாகப் போனோரும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் ஆவர்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இத்தருணத்தில் இந்தத் தொழிலாளர் கூட்டத்தின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் அலசுவது முக்கியம். தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வு இலங்கையின் பொருளாதாரத்தின் மூலக்கல்லாக மாறியுள்ளது. இலங்கை பெரும்பாலும் தேயிலை, சுற்றுலா மற்றும் ஆடை உற்பத்தியுடன் தொடர்புடையதாக இருந்தாலும், 2017ஆம் ஆண்டில், அதன் மூன்று பெரிய தொழில்களின் ஒருங்கிணைந்த நிகர அந்நியச் செலாவணி வருவாய்க்கு நிகரான தொகை, வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களால் அனுப்பப்பட்டது. இலங்கையின் உழைக்கும் ஏழைகளைப் பொறுத்தவரை, இந்தப் புள்ளிவிவரம் மிகவும் நெருக்கமான சமூக - பொருளாதார யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது. தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வு, ஆதிக்கம் செலுத்தும் வாழ்வாதார மற்றும் உயிர்வாழும் உத்தியாக உள்ளது. 1977ஆம் ஆண்டில் பரந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் இலங்கையின் இடப்பெயர்வுக் கொள்கையைத் தாராளமயமாக்கியதிலிருந்து, மத்திய கிழக்கின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்ளூர் வேலைக்குப் பதிலாக வருமானம் ஈட்டுவதற்கான ஒரு பொதுவான வழிமுறையாக மாறியது.

1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்தது முதலான முதல் இரண்டு தசாப்தங்களில், மத்திய கிழக்கிற்கு இடம்பெயர்ந்த தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர்கள் வீட்டு வேலை செய்யும் பெண்களாகவே இருந்தனர். இவர்கள் பொதுவாக ஏழ்மையான சிங்களப் பின்னணியைக் கொண்டவர்கள். 1997ஆம் ஆண்டளவிலான தரவுகளை நோக்கின், இலங்கையின் அனைத்துத் தற்காலிகத் தொழிலாளர் இடப்பெயர்வுகளில் 75 சதவீதமாகப் பெண்கள் இருந்தனர். 1977ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இலங்கையின் ஏற்றுமதித் துறையின் பரந்த பெண்கள் மயமாக்கலுடன் இந்தப் போக்கு ஒத்துப்போகிறது. இதே காலப்பகுதியிலேயே இளம் சிங்களப் பெண்கள் அப்போதைய புதிய ஆடைத் தொழிலுக்கு மலிவு உழைப்பாளர்களாகப் பணியமர்த்தப்பட்டனர்.

விரைவான பணவீக்கம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புகளுக்கு மத்தியில் மீன்பிடி மற்றும் விவசாயத்தில் ஆண்களின் வாழ்வாதாரம் குறைந்து வருவதால், ஆடைத் தொழிலில் வேலை செய்வதற்கான உள்ளக இடப்பெயர்வு அல்லது வீட்டு வேலையாட்களாகச் சர்வதேச இடப்பெயர்வு மூலம் பெண்கள் கிராமப்புற பொருளாதாரத்தின் புதிய வருமானம் ஈட்டுபவர்களாக அதிகரித்து வந்துள்ளனர். இந்தப் புலம்பெயர்ந்த வீட்டு வேலையாட்கள் பெரும்பாலும் சிங்களவர்கள். இலங்கை முஸ்லிம் பெண்களும் பணியாட்களாகச் சென்றாலும் இவர்கள் ஒப்பீட்டளவில் சிறிய பிரிவினரே; இருப்பினும் விகிதாசார அடிப்படையில் அதிக ஈடுபாட்டைக் கொண்டிருந்தனர். இக்காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் தீவிரமாக வேறுபட்ட அரசியல் பொருளாதார நிலைமைகளை எதிர்கொண்டனர். உள்நாட்டுப் போர் நீடித்தமையால் அவர்களது முறையான பொருளதாரப் பங்கேற்புக் குறைவாகவே இருந்தது. 1994இல் புலம்பெயர்ந்தோரில் திறமையற்ற தொழிலாளர்கள், குறைந்த திறமையான தொழிலாளர்கள் மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் ஆகியோர் 95 சதவீதமாகக் காணப்பட்டனர். அடுத்த தசாப்தத்தில் இதில் பாரிய மாற்றங்கள் நிகழவில்லை. 2016 நிலவரப்படி இத்தொகையினர் 89 சதவீதமாக இருந்தனர். இப்போதும் இந்நிலை நீடிக்கிறது.



Image Source - economynext.com

இலங்கை 'வீட்டுப் பணிப்பெண்களின் நாடாக' மாறியுள்ளது என்ற பொதுவான உணர்வு நீடிக்கிறது. தற்காலிகத் தொழிலாளர் இடப்பெயர்வின் பொருளாதார முக்கியத்துவம் கொள்கைத் தளத்தில் அல்லது ஊடகங்களில் அரிதாகவே விவாதிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் நடத்தப்படும் விதம், பின்தங்கிய குடும்பங்களுக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து பொதுமக்களிடையே ஒரு தெளிவான அக்கறை இருக்கிறது என்பது போன்ற தோற்றம் காட்டப்படுகிறது. இந்தக் கவலை பெரும்பாலும் புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்கள் தங்கள் குழந்தைகளை 'கைவிடுவதன்' மூலம் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் குடும்பங்களை 'உடைப்பதன்' மூலம், தாய்வழிப் பொறுப்புகளைத் தவிர்ப்பது குறித்த ஆணாதிக்க அமைதியின்மையாக வெளிப்படுத்தப்படுகிறது. அதற்கப்பாலான பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதென்பது உரையாடலாக வெளிப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

## திறந்த பொருளாதாரமும் மலிவு உழைப்பாளர்களும்

1980களிலும் 90களிலும் ஏன் ஏராளமானோர் வேலைதேடி இலங்கையைவிட்டு இடம்பெயர்ந்தார்கள்? என்ற வினா முக்கியமானது. 1980 முதல் 2010 வரையான மூன்று தசாப்தகால இலங்கையின் கதையை போரும் இனமுரண்பாடும் தன்வயப்படுத்தியுள்ளன. இதனால் அதேகாலப்பகுதியில் நிகழ்ந்த முக்கியமான சமூகப் பொருளாதார அசைவியக்கங்கள் கண்டுகொள்ளப்படவில்லை. இக்காலப்பகுதியில் இலங்கையின் தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வின் மையத்தன்மையை சீரற்ற வளர்ச்சியினால் வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்ட அரசியல், பொருளாதார கட்டமைப்புகளின் விளைவாக சூழ்நிலைப்படுத்துவது அவசியம். இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பு ஏகாதிபத்தியத்தின் கட்டமைப்புகளால் மாற்றப்பட்டுள்ளது. அதற்குள்

உள்ளூர் வர்க்க அமைப்புகளும், கீழ்ப்படிதல் என்ற தர்க்கமும் வடிவம் பெற்றுள்ளன. தேசியவாதத்தின் பிந்தைய கொலனித்துவ வெளிப்பாடுகளின் கீழ் சாதி, இன மற்றும் பாலின உறவுகளின் பொருளாதார உட்கருத்து, ஒரு சகாப்தத்திலிருந்து மற்றொரு சகாப்தத்திற்கு, சீரற்ற வளர்ச்சிச் செயல்முறைகள் பாதுகாக்கப்படுவதை மேற்பார்வையிட்டுள்ளது. இது 1977இல் இயற்றப்பட்ட புதிய தாராளமய சீர்திருத்தங்களால் மோசமடைந்தது. திறந்த பொருளாதாரம் ஏற்கனவே உள்ள இன மற்றும் பாலினப் பாகுபாட்டை மூலதனக் குவிப்பின் குறிப்பிட்ட வழிகளில் வழிநடத்தியது. வளர்ச்சியின் சீரற்ற தன்மையையும், குறிப்பிட்ட மக்கள் தொகையைத் தொடர்ந்து விலக்கிவைப்பதையும் உறுதிப்படுத்தி நிலைநிறுத்தியது, அது பின்னர் நிலையாகிவிட்டது. இந்தப் புதிய தாராளமய மறுசீரமைப்பின் பின்னணியில்தான், புவியியல் ரீதியாகவும் மக்கள்தொகை ரீதியாகவும் வளர்ச்சியிலிருந்து விலக்கப்பட்ட மக்களுக்கான வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வாழ்வாதார உத்திகளில் ஒன்றாக தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வு வேரூன்றியது.

'திறந்த பொருளாதாரத்தில்', பொருளாதார வாழ்க்கையின் மறுசீரமைப்பு, மத்திய கிழக்கிற்கான தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வின் மூலமே சாத்தியப்பட்டது. தொழிலாளர் இடப்பெயர்வை தாராளமயமாக்குவதோடு மட்டுமல்லாமல், ஜெயவர்த்தன அரசாங்கம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் பங்கை (ஒரு வருடத்திற்கு முன்பு பண்டாரநாயக்கவால் நிறுவப்பட்டது) தனியார்மயமாக்கியது. இது ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களை, தளர்வாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடப்பெயர்வு நடைமுறைகளுக்குள் பெருக அனுமதித்தது. உள்ளூர் மற்றும் பிராந்தியச் சூழல்கள் ஆட்சேர்ப்பை ஓர் இலாபகரமான வணிகமாக மாற்றச் சதி செய்தன. பாரசீக வளைகுடாவில் எண்ணெய் வளம் மிகப்பெரிய உபரிகளை உருவாக்கியது. உட்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் பணக்கார மத்திய கிழக்குக் குடும்பங்களினது வீட்டு வேலைப்பணியாளர் தேவை என்பன புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேவையை அதிகரித்தன. அதே நேரத்தில், கிராமப்புற வாழ்வாதாரங்கள் குறைந்து வருவதும், புதிய தாராளமயக் குவிப்பு முறைகளின் கீழ் உருவாக்கப்பட்ட வேலையின்மையும் இலங்கை மக்கள்தொகையில் பெரும்பகுதியை அத்தகைய தேவையைப் பூர்த்திசெய்ய முன்வர வைத்தது. குறிப்பாக பெண் தொழிலாளர்களை அனுப்பும் பிற நாடுகளில், பெண்களின் இடப்பெயர்வுக்கு ஏற்படுத்தப்பட்ட தடையால் உருவாக்கப்பட்ட அதிகப்படியான தேவை காரணமாக, இலங்கையிலிருந்து பணிப்பெண்களாகச் செல்ல விரும்பியோருக்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தன.

இதேவேளை அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவோராக இந்தப் பணியாளர்கள் உள்ளமையால் அவர்களின் கட்டற்ற வெளியேற்றத்தை அரசாங்கம் அனுமதித்தது. அவர்களை ஒழுங்குமுறைப்படுத்தவோ, அவர்களுக்கான குறைந்தபட்சப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவோ அரசாங்கம் முனையவில்லை. மத்திய கிழக்கின் ஒப்பந்த வேலைவாய்ப்பினது நன்கு ஆவணப்படுத்தப்பட்ட உடல் மற்றும் உளவியல் கஷ்டங்களுடன் இணைந்து, தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வு என்பது விருப்பம் என்பதற்காக அல்லாமல், தேவையை மையமாகக் கொண்ட ஓர் உயிர்வாழும் உத்தியாக உருவெடுத்தது என்பதே உண்மை. அதே நேரத்தில், அதிகரித்து வரும் தொழிலாளர் இடப்பெயர்வால் அரசே பெரிதும் பயனடைந்தது. தற்காலிகத் தொழிலாளர் இடப்பெயர்வு, உள்ளூர் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான அழுத்தத்தைத் தவிர்த்து, அரசியல் மற்றும் பொருளாதாரப் பதற்றங்களைத் தடுக்கிறது. அதேநேரத்தில் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளும் இலகுவான வழியாகவும் இருக்கிறது. சீரற்ற வளர்ச்சியின் முரண்பாடுகளை திறம்பட ஒத்திவைப்பதன் மூலம், தற்காலிகத் தொழிலாளர் இடப்பெயர்வின் கட்டமைப்பு இயக்கவியல், பொருளாதாரத்தில் வேறு இடங்களில் கீழ்ப்படிதல் மூலம் குவிப்புகள் தொடர்வதைப் பாதுகாத்துள்ளது. அதே நேரத்தில் வணிகர்கள் செல்வத்தைக் குவிப்பதற்கான புதிய வாய்ப்புகளையும் உருவாக்கியது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையில் அதிகரித்து வரும் முக்கிய அம்சமாக தொழிலாளர் மற்றும் அரசியல் அகதிகள் ஆகிய இரண்டு பிரிவினரின் இடப்பெயர்வு இருந்து வருகிறது. குறிப்பாக, 1970களின் பிற்பகுதி மற்றும் 1980களின் முற்பகுதி ஆகிய இரண்டு காலப்பகுதிகளிலும், இலங்கையர்கள், மலிவு உழைப்புக்கான வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்திசெய்ய அல்லது மேற்கு நாடுகளில்

மீள்குடியேற்றம் செய்ய பாரசீக வளைகுடாவிற்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்தனர். இந்த இணையான இடப்பெயர்வுகள் தனித்துவமான இனப் பண்புகளையும் கொண்டுள்ளன. பெரும்பாலான அகதிகள் தீவின் தமிழ்ச் சிறுபான்மையினரிடமிருந்து வந்தவர்கள். அதேநேரத்தில் தொழிலாளராகப் புலம்பெயர்ந்தோர் வரலாற்று ரீதியாகச் சிங்களவர்கள் அல்லது - குறிப்பாக மக்கள்தொகை அளவு தொடர்பாக - முஸ்லிம் பின்னணியைக் கொண்டவர்கள். தற்காலிகத் தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறைகளில் - தமிழர்களின் சமீபத்திய வருகை உட்பட - இந்த இரண்டு வகைக் குடியேற்றங்களுக்குள்ளும் உள்ள மக்கள்தொகை மாற்றங்களை ஆய்வு செய்வது, இலங்கைக் குடியேற்றத்தின் மாறிவரும் சமூக மற்றும் பொருளாதார இயக்கவியலின் முக்கிய பிரதிபலிப்பை வழங்கும்.

1970களின் இறுதியில் இருந்து 1990கள் வரையான காலப்பகுதியில் மத்திய கிழக்கிற்குப் பணிக்குச் சென்றோரின் வாழ்வியலை, அவர்தம் துயரத்தை வரன்முறையாகப் பதிவுசெய்த புத்தகம் 'Labour Migration to the Middle East: From Sri Lanka to the Gulf' ஆகும். நெதர்லாந்தில் உள்ள லெயிடன் பல்கழைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தோடு 1980 முதல் 1988 வரையான எட்டு ஆண்டு காலத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் எழுதப்பட்டதே இப்புத்தகம். இது பின்வரும் குறிப்போடு நிறைவு செய்யப்படுகிறது:

"தொழிலாளர் இடப்பெயர்வு, குடும்பத்தில் பின்தங்கியவர்களின் மீது விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஆராய்ச்சித் தரவுகள் காட்டுவது போல், உறவினர் ஒருவர் வெளியேறுவது பெரும்பாலும் வீட்டு அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துகிறது. தொழிலாளர் இடப்பெயர்வின் நீண்டகால விளைவுகளில் வீட்டு அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு முக்கிய அம்சமாகும். ஒருபுறம், இடப்பெயர்வு என்பது பிரிவினை மற்றும் விவாகரத்திலிருந்து எழும் பிரச்சினைகளுக்கு ஒரு நிவாரணமாகவும் தீர்வாகவும் உள்ளது. மறுபுறம், இடப்பெயர்வுக்கான வாய்ப்பு, இடப்பெயர்வுக்குப்பின் ஏற்படும் விளைவுகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் இல்லாதது ஆகியவை திருமண நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது. இடப்பெயர்வின் வரையறுக்கப்பட்ட காலத்திலும், அதற்கு ஒரு வருடம் முன்பும் பின்பும், திருமண முறிவு ஏற்படும் அபாயம், இடப்பெயர்வுக்கு முந்தைய அல்லது அதற்குப் பிந்தைய வேறு எந்த ஆண்டையும்விட மிக அதிகமாக உள்ளது. அனைத்து விவாகரத்துகள் மற்றும் பிரிவுகளில் 34%க்கும் அதிகமானவை புலம்பெயர்ந்தோர் இல்லாத நான்கு ஆண்டுகளுக்கும் குறைவான இந்தக் காலகட்டத்தில் நிகழ்கின்றன. இது கிட்டத்தட்ட எப்போதும் பெண் புலம்பெயர்ந்தவர்களைப் பற்றியது. இது இலங்கைச் சமூகத்தில் பெண்களின் பலவீனமான சமூக மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்துகிறது.

தொழிலாளர் இடப்பெயர்வு, தொழிலாளர் ஏற்றுமதிச் சமூகங்களில் ஏற்படுத்தும் சமூக - கலாசார தாக்கம் குறித்த கேள்வியும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கையைப் பொறுத்தவரை, நாடு பிற தீவிரமான சமூக மற்றும் கலாசார மாற்றங்களுக்கு உள்ளாகி வந்தபோது இடப்பெயர்வு தொடங்கியது என்பதால், இடப்பெயர்வுச் செயல்முறையால் ஏற்படும் விளைவுகளை அம்பலப்படுத்துவது மிகவும் கடினம். இலங்கையில் தொழிலாளர் இடப்பெயர்வு ஒரு சமூக நிகழ்வாக மாறியுள்ளது என்பது உறுதி, அதை இனி புறக்கணிக்க முடியாது. இது தெருவில் உள்ள மனிதனின் அன்றாட உரையாடலில் வளர்கிறது, வானொலியில், தொலைக்காட்சியில் மற்றும் பத்திரிகைகளில் விவாதிக்கப்படுகிறது, சர்வதேச

1970களின் இறுதியில் இருந்து 1990கள் வரையான காலப்பகுதியில் மத்திய கிழக்கிற்குப் பணிக்குச் சென்றோரின் வாழ்வியலை, அவர்தம் துயரத்தை வரன்முறையாகப் பதிவுசெய்த புத்தகம் 'Labour Migration to the Middle East: From Sri Lanka to the Gulf' ஆகும். நெதர்லாந்தில் உள்ள லெயிடன் பல்கழைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தோடு 1980 முதல் 1988 வரையான எட்டு ஆண்டு காலத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் எழுதப்பட்டதே இப்புத்தகம்.



Image Source - www.mei.edu

விமான நிலையங்களில் காத்திருக்கும் பயணிகளின் அமைப்பைத் தீர்மானிக்கிறது, அன்றாட வாழ்க்கையின் வணிகமயமாக்கலை ஊக்குவிக்கிறது, இனக்குழுக்களுக்கு இடையிலான உறவுகளிலும் பாரம்பரியமாக அடுக்குப்படுத்தப்பட்ட கலாசார முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது, மேலும் கல்வி மற்றும் மதம் போன்ற நிறுவனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சுருக்கமாக, தொழிலாளர் இடப்பெயர்வு இலங்கைச் சமூகத்தில், நகரங்களில் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலும் சமூக மாற்றத்தின் செயல்முறையைப் பாதிக்கிறது. இது, தொழிலாளர் இடப்பெயர்வு இலங்கைச் சமூகத்தில் எந்தளவிற்கு நிரந்தரத் தடயங்களை விட்டுச் சென்றுள்ளது என்ற கேள்வியை எழுப்புகிறது."

சுருக்கமாக, 1977ஆம் ஆண்டின் புதிய தாராளமயத் திருப்பமும் 1983ஆம் ஆண்டின் முழு அளவிலான உள்நாட்டுப் போரின் தொடக்கமும், முறையே தொழிலாளர் மற்றும் அரசியல் இடப்பெயர்வுக்கு வினையூக்கிகளாகச் செயற்பட்டன. அன்றிலிருந்து, இடப்பெயர்வுக்கான இரண்டு வழிகளிலிருந்தும் உருவாகும் மூலதனப் பரிமாற்றங்கள், பிராந்திய மற்றும் தேசியச் சூழல்களில் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரங்களாக நீடித்து வருகின்றன. இறக்குமதிகள் ஏற்றுமதியைவிட மாறாமல் அதிகமாக இருப்பதால், பணம் அனுப்பும் வருமானம் வெளிநாட்டு இருப்புகளின் முக்கிய ஆதாரமாகவும், இலங்கையின் சாதகமற்ற செலுத்துமதிச் சமநிலைச் சூழ்நிலைக்கு, பரவலாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெரிய பொருளாதாரத் தீர்வாகவும் மாறியுள்ளது. பணம் அனுப்பும் தொகை எங்கும் நிறைந்திருந்தாலும், இடப்பெயர்வின் மக்கள்தொகை காலப்போக்கில் கணிசமாக மாறிவிட்டது. சந்தேகத்திற்கு இடமின்றி, புலம்பெயர்ந்த தமிழரின் பெருக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மூலதனப் பரிமாற்றம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும். மறுபுறம், தற்காலிகத் தொழிலாளராகப் புலம்பெயர்ந்தோர் வரலாற்று ரீதியாக உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே உள்ள சிங்கள - பௌத்த, முஸ்லிம் மற்றும் சிங்கள - கத்தோலிக்கச் சமூகங்களிலிருந்து தோன்றியவர்கள் ஆவர். மத்திய கிழக்கில் உள்ள முதலாளிகள் இணக்கமான மதச் சார்புடைய தொழிலாளர்களைக் கோருவதால், கொழும்பில் வசிக்கும் மற்றைய இலங்கையர்களைவிட முஸ்லிம்கள் நான்கு மடங்கு அதிகமாகக் குடியேற வாய்ப்புகள் அமைந்தன.

சமீபகாலமாக, உள்நாட்டுப் போரின் விளைவுகள் காரணமாக, வழக்கமான தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வுகளிலிருந்து விலக்கப்பட்டிருந்த தமிழர்களும், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அதிகரித்து வரும் எண்ணிக்கையில் இணையத் தொடங்கியுள்ளனர். போர் முடிவடைந்த உடனடி ஆண்டுகளில், வடக்கு மற்றும் கிழக்கு

மாகாணங்களில் உள்ள முக்கிய நகர்ப்புற மையங்களும் - இந்தச் சமூகங்களுக்கு அரசாங்கப் பயிற்சி மற்றும் நிர்வாக ரீதியான தொடர்பு இல்லாத போதிலும் - புலப்பெயர்வு வெளியேற்றத்தில் ஆண்டுக்கு ஆண்டு மிகப்பெரிய அதிகரிப்பைக் காட்டின.

## குரல்களின் வலி

இந்தப் பின்புலத்தில் நாட்டின் வடக்கு - கிழக்கில் இருந்து வீட்டுப் பணிப்பெண்களாக வெளியேறியவர்களின் குரல்கள் முக்கியமானவை. அக்குரல்களே இங்கு ஒலிக்கின்றன. இந்த நேர்காணல்கள் 2015 முதல் 2024 வரையான பத்தாண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் விளைவிலானவை. மத்திய கிழக்கிற்கு வேலைக்குப்போன பெண்களின் சமூகப் பொருளாதார நிலையை ஆராயும்போது அவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் கைவிடப்பட்ட குடும்பங்கள், சாதிய ரீதியான ஒடுக்குமுறைக்கு ஆளான குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகவே காணப்பட்டன. இவை ஒரு பொதுவான இழையாக பத்தாண்டுகால ஆய்வில் வெளிப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் இருந்து திரும்பியோரிடம் ஏன் மத்திய கிழக்கிற்குப் பணிப்பெண்ணாக வேலைக்குச் செல்ல முடிவெடுத்தீர்கள் என்று கேட்டபோது, பெரும்பாலானோரிடம் இருந்து வந்த பதில்கள் ஒரே மாதிரியானவையாக இருந்தன. சில உதாரணங்கள்:

“போரினால் இடம்பெயர்ந்து இறுதியாக எங்கள் சொந்த நிலங்களுக்குத் திரும்பியபோது எம்மிடம் எதுவும் இருக்கவில்லை. தொழில்வாய்ப்புகள் இல்லை, விவசாயம் செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருந்தன. இருந்த சிறுதுண்டு நிலத்தில் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. குழந்தைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. இதனாலேயே எனது அம்மாவிடம் பிள்ளைகளைக் கொடுத்துவிட்டு மத்திய கிழக்குக்குச் சென்றேன்.”

“கடைசிச் சண்டையில எங்கட ஆக்கள் நிறையப்பேர் செத்துப் போயிட்டினம். கனகாலத்துக்குப் பிறகுதான் சொந்த இடத்துக்கு வரவிட்டவ. கனகாலம் காம்பிலேயே போயிட்டுது. திரும்பி வந்த எங்களுக்கு ஒண்டும் இல்லை. நானும் அக்காவும் எங்கட பிள்ளையளோட வந்தனாங்கள். எங்கட கணவர்மார் சண்டையில இறந்திட்டினம். நான் என்ர பிள்ளையளை அக்காட்ட குடுத்திட்டு வெளிநாட்டுக்குப் போனனான்.”

“இந்தச் சமூகத்தில் அந்தஸ்து இல்லாத ஆக்கள் நாங்கள். எங்கட அந்தஸ்துக்காக நாங்கள் போராட வேண்டும். நாங்கள் எல்லாத்திலேயும் ஒதுக்கப்பட்டோம். காசு இருந்தா மரியாதை தானா வரும். நாங்கள் விடுதலைக்காகப் போராடின சமூகம் தான். ஆனாலும் நாங்கள் ஒருத்தரை ஒருத்தர் மதிக்கிறேல்ல. காசு இருந்தாத்தான் மரியாதை. என்ர பிள்ளையள் மரியாதையோட வாழவேணுமெண்டுதான் நான் போனனான்.”

இவ்வாறு தங்கள் தெரிவுக்கான கதைகளைக் கூறியவர்களிடம், இந்த முடிவு அவர்களுக்கான பொருளாதாரப் பலத்தைத் தருகின்றதா என்ற வினாவையும் கேட்டேன். அதற்கான அவர்களின் பதில்கள் கலவையாக இருந்தன. அனைவரும் தமது தெரிவு தமது பொருளாதார நிலையை மாற்றியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனாலும் தமது தெரிவின் பின்னால் இருந்த சிக்கல்களையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மகளை அனுப்பிவிட்டு பேரக்குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் அம்மாக்கள் சொல்லிய விடயங்கள் இங்கு முக்கியமானவை. “எங்களுக்குச் சரியான கஷ்டம், ஆம்பிளையள் யாரும் இல்லை. என்ர மகள் அனுப்புற காசில தான எங்கட சீவியம் போகுது. நாங்க பத்துப்பேர். இரண்டு பேருக்கு துப்பரவா ஏலாது. அவள் அனுப்புற காசு, மாதச் செலவுக்குத்தான் காணும். மிச்சம் பிடிக்க இயலாது.”

“பிள்ளையள நான்தான் பாக்கிறன். மகளுன்ர புருசன், வேற கலியாணம் கட்டிக்கொண்டு போயிட்டார். இது பெரிய இடியாய் விழுந்திட்டுது. மகள் போய் 5 வருசம், நாங்கள் இப்ப வீடு கட்டிறம். ஆனா துணை இல்லை. பொம்பிளப் பிள்ளையள் வளந்திட்டுதுகள். அம்மா இல்லாம வளக்கிறது கஷ்டம்.”

இதேவேளை மத்திய கிழக்கில் பணி முடித்துத் திரும்பிவந்த பெண்களிடம் அவர்கள் திரும்பி வந்தபோது, அவர்களின் மனநிலை எப்படி இருந்தது என்று கேட்டேன்:

“ஐந்து வருடங்கள் கஷ்டப்பட்டு திரும்பி வந்தபோது எங்களுக்கு ஒரு கல்வீடு இருந்திச்சு. அது எங்களுக்கு கனகாலக் கனவு. இண்டைக்கு அந்தக் கனவு நிறைவேறி இருக்கிறது. எங்களது

தலைக்கு மேலே ஒரு கூரை வேணுமெண்டுதான் வெளிநாட்டில கஷ்டப்பட்டனான். அந்தப் பலன் கிடைச்சிருக்கு. அது பெரிய ஆறுதல், சந்தோசம்."

"ஆறுவருசம் கழித்து வீட்டுக்கு வரேக்க, நிறைய எதிர்பார்ப்போட வந்தனான். பொருளாதார ரீதியா நாங்கள் முன்னேறியிருக்கிறம். வீட்டில, டிவி, பிரிச் எல்லாம் இருக்கு. ஆனா பிள்ளையள் படிக்கேல்ல. அவையளை வீட்டில சரியாப் பாக்கேல்ல. இப்ப அவையளின்ட எதிர்காலத்தை நினைச்சாத்தான் பயமாய் கிடக்கு. யுனிவர்சிட்டி கிடைக்காட்டி பிறைவேற்றா படிக்க நிறைய காசு வேணும். திரும்பி வேலைக்குப் போகலாம் எண்டு யோசிக்கிறன்."

"நாங்கள் பொருளாதார ரீதியாக நல்லா இருக்கிறம். எங்கள் அக்கம் பக்கத்தினரை விட நல்லா இருக்கிறம். ஆனாலும் சமூகத்தில மதிப்பு என்றது இன்னமும் வரேல்ல. பொருளாதார பலத்தை சாதி மேவுது. ஆனா, முந்தி மாதிரி இல்லை. எங்களது பொருளாதார பலத்தால நாங்கள் விரும்பியதை செய்யுறதுக்கு இயலுமாக் கிடக்கு."

இந்தக் குரல்கள் ஏராளமான விடயங்களைத் தங்கள் சுருக்கமான வசனங்களில் பிரதிபலிக்கின்றன. இந்தக் குரல்களில் தொனிக்கின்ற வலிகளுக்கு அப்பால் இவை சமூக ரீதியாக எழுப்புகின்ற வினாக்கள் முக்கியமானவை. குறிப்பாக விடுதலைக்காக மூன்று தசாப்தகாலம் போராடிய ஒரு சமூகம் தனது சக மனிதர்களை எவ்வாறு நடத்துகிறது என்பதை இக்குரல்கள் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இது எங்களது கவனிப்பைக் கோரி நிற்கிறது.

## நிறைவுக் குறிப்புகள்

இலங்கையின் தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வின் அளவைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக மத்திய கிழக்கில் காணப்படும் மோசமான வேலை நிலைமைகள் குறித்த பொதுவான விழிப்புணர்வைக் கருத்தில் கொண்டு, கவனிக்கப்பட வேண்டிய மிக உடனடிக் கேள்விகளில் ஒன்று, ஏன் இவ்வளவு மக்கள் இடம்பெயரத் தேர்வு செய்கிறார்கள்? என்பதுதான்.

நவதாராளவாத பொருளாதார மறுசீரமைப்பு பாரம்பரிய வாழ்வாதாரங்களை சீர்குலைத்துள்ளது. அதேநேரத்தில் குறிப்பிட்ட வகைத் தொழிலாளர்களை, ஏற்றுமதித் தொழில்களில், குறுகிய மற்றும் சீரழிந்த வேலை வாய்ப்புகளுக்குள் திருப்பிவிட்டுள்ளது. இதன் விளைவாக வேலையின்மை, குறிப்பாக கிராமப்புறப் பொருளாதாரத்தில், கட்டாய இடப்பெயர்வு நிலைமைகள் தூண்டப்படுகின்றன. புலம்பெயர்ந்தோரின் அபிலாஷைகள் இந்தப் பகுப்பாய்வை உறுதிப்படுத்துகின்றன. ஏனெனில் ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு புலம்பெயர்ந்த சமூகங்களிலும் தேடப்படும் 'நல்ல வாழ்க்கை' ஒரு நிலையான வாழ்வாதாரத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதைப் பிரதிபலித்தது. இருப்பினும், இடப்பெயர்வின் விளைவுகள், பொருளாதார வாழ்வாதாரத்தை வளர்க்கும் அதேவேளையில், பணம் அனுப்பும் ஓட்டங்களைத் தக்கவைக்க வெளிநாட்டு வேலையைச் சார்ந்திருப்பதையும் மையமாகக் கொண்டது. தாயகம் திரும்பி நல்லவாழ்க்கை வாழ்தல் என்ற இலட்சியத்தையும் நியாயமான ஏக்கத்தையும், நடைமுறையில் உள்ள வளர்ச்சியின்மை குறுக்கிட்டு, கிட்டத்தட்ட இல்லாமல் செய்துள்ளது. சீரற்ற வளர்ச்சியானது, கட்டாய இடப்பெயர்விற்கான ஒரு கட்டமைப்பு உந்துதலைக் குறிக்கும் அதேவேளையில், பல்வேறு புலம்பெயர்ந்த சமூகங்களில் இடப்பெயர்வு விளைவுகளில் உள்ள மாறுபாடுகள், இடப்பெயர்வு - வளர்ச்சியின் அனுபவங்கள் ஒரே மாதிரியானவை அல்ல என்பதையும், கட்டமைப்பு - நிலைப் பகுப்பாய்விலிருந்து மட்டும் போதுமான அளவு பகுப்பாய்வைச் செய்ய முடியாது என்பதையும் வலியுறுத்துகின்றது.

இலங்கையின் உழைக்கும் ஏழைகள் சமூகமயமாக்கப்பட்டதன் தனித்துவமான பாலின அடிப்படையிலான வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு, இடப்பெயர்வு எவ்வாறு தனிநபர்களுக்கு இந்தப் பாலின அளவுருக்களுக்குள் அந்தஸ்தை மீட்டெடுக்க வாய்ப்புகளை வழங்குகிறது என்பதை விரிவாக ஆய்வு செய்வது தேவையானது. இலங்கை முழுவதும், உழைப்பின் பரவலான மதிப்பிழப்பாக மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிகளில் பொதிந்துள்ள சுய மதிப்புக்கான பாலின அடிப்படையிலான கதையாடலாக சூழ்நிலைப்படுத்தப்படுகிறது. இது சமூக எதிர்பார்ப்புகளுடன், சீரமைப்பில் தனிப்பட்ட அனுபவங்களை நிர்வகிக்கும் திறனையும், 'வெற்றியின்' பொருள் குறிப்பான்களை வெளிப்படுத்த பணம் அனுப்புவதை வெளிப்படையாக நுகரும் சாத்தியத்தையும்

அடையாளம் காட்டுகிறது. வெளிப்படையான பணம் அனுப்பும் பயன்பாடு வீணானது அல்லது ‘உற்பத்தி செய்யாதது’ என்று விளக்கப்படுவதில்லை. இது, உழைப்பை மதிப்பிழக்கச் செய்யும் நுகர்வோர் வாதத்தை மதிக்கும் ஒரு சந்தைச் சமூகம், பொருள் மற்றும் தார்மீக மதிப்பை இழப்பதன் ஒரு தீவிரமான பிரதிபலிப்பாகும்.

இருப்பினும், இத்தகைய நுகர்வு பற்றிய பகட்டுத்தனம், தற்காலிக தொழிலாளர் இடப்பெயர்வின் அற்ப விளைவுகளையே பொய்யாக்கும் ‘வெற்றி’ என்ற தவறான பாசாங்குக்குச் சமமானது. இதுவே செழிப்பு என்ற முகத்திரையைப் பின்பற்ற விரும்பும் வருங்காலப் புலம்பெயர்ந்தோரை தவறாக வழிநடத்துகிறது. அவற்றின் சமூகப் பண்புகளைப் பொருட்படுத்தாமல், இந்த வெளிப்படையான நுகர்வு வடிவங்கள், பணம் அனுப்பும் மூலதனத்தின் பெரிய பொருளாதாரத் தாக்கங்களைப் பாதிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வீட்டுக்குப் பணம் அனுப்புதல் மற்றும் அந்நியச் செலாவணி வருவாய் ஆகியவற்றின் இரண்டு கூறுகளின் கூட்டுத்தொகையான பணம் அனுப்புதல் மூலதனம், சீரற்ற வளர்ச்சியின் செயல்முறையை அனுமதிக்கிறது. இல்லையெனில் அது நிலைத்திருக்க முடியாது. வீட்டுவசதி, கல்வி, கடன் திருப்பிச் செலுத்துதல் அல்லது நிலைப் பொருட்கள் எனச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க செலவுகள் ஆகியன வருமானத்தை வெளிநாடுகளுக்கு (இறக்குமதிகள் மூலம்) அல்லது உள்ளூர் மூலதனத்திற்கு மறுபகிர்வு செய்யும் போக்கைக் கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் தெற்காசியாவின் சிறந்த பொதுச் சேவைகளாக இருந்த இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்புத் துறையின் நிதி திரட்டுதல் மற்றும் அதைத் தொடர்ந்த தனியார்மயமாக்கல், இந்த மறுபகிர்வு விளைவை அதிகரிக்கின்றன. இது புலம்பெயர்ந்தோருக்கு மட்டுமே வாழ்வாதாரத்தை வழங்கும் அதேவேளையில், பணம் அனுப்புதல் பொருளாதாரத்திற்கான வெளிநாட்டு மூலதனத்தின் ஒரு அற்புதமான ஊஷியாகவும் திரட்டப்படுகிறது. முதன்மையாக நன்மை பயக்கும் என்பதற்குப் பதிலாக, பணம்



Image Source - www.sundaytimes.lk

அனுப்புதல் சார்ந்த நாணயத்தின் நுண் பொருளாதார விளைவுகளை மிகவும் நுணுக்கமாகக் கருத்தில் கொள்வது முக்கியம். இலங்கையின் போருக்குப் பிந்தைய வளர்ச்சிக் கொள்கையை ஆராய்வது இந்த முன்கணிப்பை மேலும்உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் பணம் அனுப்புதல் சார்ந்த செலவினம் நிலையானதாகத் தோன்றினாலும் ஆழமான முரண்பாடுகளைக் கொண்ட சீரற்ற மற்றும் உள்ளடக்காத வளர்ச்சியின் மீதான சார்பையும் வலுப்படுத்துகிறது. புலம்பெயர்ந்தோரில் திரும்பி வருபவர்கள், சில நேரங்களில் தங்களிடம் இல்லாத செல்வத்தை வெளிப்படுத்துவது போல, இலங்கையும் உண்மையில் இல்லாத ஒரு வளர்ச்சியை முன்வைக்கிறது.

தற்காலிகத் தொழிலாளர் இடப்பெயர்வு மற்றும் பணம் அனுப்பும் மூலதனத்தின் மீதான இலங்கையின் வளர்ந்து வரும் சார்பு, ஒரு பொருளாதார சஞ்சீவியை அளிக்கவில்லை; மாறாக இடப்பெயர்வு - வளர்ச்சியின்மை என்ற சிக்கலான செயல்முறையை வேரூன்றியுள்ளது என்பதை இது நிரூபிக்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்கு - கிழக்கில் வாழும் புறமொதுக்கப்பட்ட குழுக்களில், மத்திய கிழக்கில் பணிபுரிவோரும் அவர்தம் குடும்பங்களும் முக்கியமானவர்கள். ஆனால் அவர்கள் தொடர்ச்சியான ஒதுக்கலுக்கு ஆளாகிறார்கள். இந்தக் குடும்பங்களின் சிதைவு ஏற்படுத்தியுள்ள சமூகத் தாக்கமும் அதன் நீண்டகால சமூகவியல் நெருக்கடிகளும் விரிவான உரையாடலையும் ஆய்வையும் வேண்டி நிற்கின்றன.

# சிவில் சமூகமும் சிவில் சமூக அமைப்புகளும்

'அரசறிவியல் கலைக்களஞ்சியம்' (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Con cepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: பேராசிரியர் ஜயதேவ உயன்கொட*


**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.




சிவில் சமூகம் (*Civil Society*) என்னும் அரசியல் விஞ்ஞானக் கலைச்சொல் இன்று சாதாரண மக்கள் மத்தியிலும் அறிமுகமாகியுள்ள சொல்லாக உள்ளது. ஆனால் இச்சொல் பற்றிய கோட்பாட்டு விளக்கங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் தமிழில் போதியளவு இல்லை. 'சிவில் சமூகம்', 'சிவில் சமூக அமைப்புகள்', 'ஜனநாயக சமூகத்தில் சிவில் சமூக அமைப்புகளின் வகிபாகம்' என்பனவற்றை விளக்கும் முறையில் 'சிவில் சமூகம்' (*Civil Society*) என்னும் தலைப்பில் அரசியல் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் '*Politics and Political Science: A Contemporary Introduction* (2018)' என்னும் நூலில் (பக். 161 - 166) கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்துத் தருவதாக இத்தமிழ்க் கட்டுரை அமைந்துள்ளது.

## சிவில் சமூகம்: வரைவிலக்கணம்

சிவில் சமூகம் பற்றி அதன் விரிந்த அர்த்தத்தில் (*Wider Meaning*) அமையும் வரைவிலக்கணம் பின்வருமாறு:

"தமது பொதுவான தேவைகளை அடையும் இலக்கினை உடையதாய் பிரஜைகளின் சுயாதீனமான ஒன்றிணைந்த அமைப்பாக, சமூக வெளியில் அரசு என்ற நிறுவனத்திற்கு வெளியே இயங்குவதாக சிவில் சமூகம் உள்ளது."

மேற்படி வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள முக்கிய கூறுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. அரசு (*State*) என்ற நிறுவனத்திற்கு வெளியே சமூக வெளியில் (*Social Space*) இயங்குவது சிவில் சமூகம்.
2. சிவில் சமூகம் பிரஜைகளின் (*Citizens*) பொதுவான தேவைகள்/ இலக்குகளை (*Common Goals*) அடைவதற்காக ஒன்றிணைந்து செயற்படும் அமைப்புகளைக் (*Organisations*) கொண்டமைவது.
3. சிவில் சமூகம், அரசில் இருந்து வேறானது; சுயாதீனமாகவும் (*Autonomous*) அரசுக்கு வெளியே (*Outside the State*) சுதந்திரமாகவும் இயங்குவது.

சிவில் சமூகம் பற்றிய விரிந்த அர்த்தம், 'சிவில் சமூகம் x அரசு' என்ற இரண்டு கருத்துகளை வேறுபடுத்தியும், ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தியும் நோக்குவதற்கு உதவுகிறது.

சமுதாய மட்டத்திலும் (*Community Level*), பிரதேச, மாவட்ட, பிராந்திய மட்டங்களிலும் இயங்கும் பிரஜைகள் அமைப்புக்கள் (*Citizens Associations*) மக்களின் சமூக நலன்களை (*Social Welfare*) அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக உழைத்து வருகின்றன. அவை சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் செயற்படுகின்றன. வேறுசில அமைப்புகள் மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டல், அவர்களின் உரிமைகளுக்காக வாதாடல் செய்தல் (*Advocacy*) போன்ற பணிகளை ஆற்றுகின்றன. இத்தகைய பிரஜைகள் அமைப்புகளினைப் பற்றி விபரிக்கும் போது 'சிவில் சமூகம்' என்ற சொல் அதன் குறுகிய அர்த்தத்தில் (*Narrow Meaning*) உபயோகிக்கப்படுகிறது.

சமகாலத்து ஜனநாயகக் கோட்பாட்டில் (*Contemporary Democratic Theory*) சிவில் சமூகம் என்ற எண்ணக்கரு முக்கியம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டு, அதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. நவீன காலத்து ஜனநாயகக் கோட்பாட்டையும், சிவில் சமூகம் பற்றிய நவீன காலத்துக் கோட்பாட்டையும், அவற்றின் வரலாற்று வளர்ச்சி நோக்கில் பார்க்கும் போது, ஜனநாயகம் பலமானதாக நிலைபெறுவதற்கு, பலமான சிவில் சமூகம் கட்டி வளர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து அழுத்திக் கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

## சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் வளர்ச்சி வரலாறு

சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் வரலாற்றின் (*The Conceptual History of Civil Society*) ஊடாக அது பற்றிய நான்கு வகை அர்த்தங்கள் (*Meanings*) வெளிப்பட்டன.

1. **செவ்வியல் தாராண்மைவாத அர்த்தம் (Classical Liberal Meaning):** செவ்வியல் தாராண்மைவாதச் சிந்தனையின்படி அரசு (*State*), குடும்பம் (*Family*) என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் சிவில் சமூகம் இயங்குவதாகக் கொள்ளப்படுகிறது. தனிநபர்கள், குடும்பம் என்ற எல்லைக்கு வெளியே சிவில் சமூக நடவடிக்கைகளில் சுதந்திரமாக இயங்குகிறார்கள்; அச்சிவில் சமூகம் அரசில் இருந்து வேறானதாகவும் உள்ளது. இத்தாராண்மைவாத அனுமானத்தை ஏற்றுக்கொண்ட இம்மானுவல் கான்ட் (*Immanuel Kant*), பிரட்ரிக் ஹெகல் (*Fredrich Hegel*) என்னும் இரு ஜேர்மனிய தேசத்து

மெய்யியலாளர்கள் அரசு, குடும்பம் என்ற இரண்டிற்கும் வெளியே இருப்புக்கொண்டுள்ள சிவில் சமூகத்தில் முதலாளித்துவச் சந்தையும் (Capitalist Market) இயங்குகிறது எனக் கூறினர்.

2. **செவ்வியல் மார்க்சிய அர்த்தம் (Classical Marxist Meaning):** ஹெகல், முதலாளித்துவச் சந்தையின் இயக்கம் இருப்புக்கொண்டுள்ள இடமாக சிவில் சமூகம் உள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் தமது கருத்துகளை விளக்கினார். மார்க்ஸ், முதலாளித்துவச் சந்தை (Capitalist Market) என்பதற்கு ஒத்த கருத்துடைய சொல்லாக சிவில் சமூகம் என்பதைக் கருதினார். இவ்வாறு மார்க்ஸ் இச்சொல்லைப் பயன்படுத்தியதால், சந்தைச் சக்திகளால் நெறிப்படுத்தப்படும் முதலாளித்துவச் சமூகம் (Capitalist Society) என்பதன் மறுபெயர், சிவில் சமூகம் என்ற அர்த்தத்தைப் பெற்றது. மார்க்சின் இந்த அர்த்தத்தில், சிவில் சமூகத்தில் முதலாளித்துவச் சமூகத்தின் பொருளாதாரப் போட்டி இடம்பெறுகிறது; தனிமனிதர்கள் தமது சுயநல இலக்குகளை அடைவதற்கான போட்டியில் ஈடுபடும் களமாக சிவில் சமூகம் விளங்குகிறது எனப் பொருள் கொள்ளப்பட்டது. இக்காரணத்தினால் சிவில் சமூகத்தில் மனிதர்களின் கூட்டு நலன்களை (Collective Welfare) அடைவதற்கான சாத்தியப்பாடு இல்லை. ஏனெனில் மனிதர்கள் தனிநபர் நலன்களால் உந்தப்பட்டு சுயநல நோக்குடன் செயற்படுகிறார்கள்.

3. **ஜனநாயகக் கோட்பாட்டின்படியான அர்த்தம்:** மக்கள் பொதுவான நலன்களை (Common Interests) அடைவதற்காக, உழைக்கும் அமைப்புகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு மக்கள் ஒன்றுகூடி உருவாக்கும் அமைப்புகளை ஆங்கிலத்தில் 'அசோசியேஷன்ஸ்' என்று கூறுவர். தமிழில் இச்சொல்லின் பொருளை கழகம், சங்கம், கூட்டமைப்பு என்னும் ஒத்த கருத்துள்ள சொற்களால் விளக்கலாம். ஜனநாயகம் பற்றிய கழகக் கோட்பாடு (Theory of Associational Democracy), சிவில் சமூகம் என்னும் சமூக வெளியில் (Social Space) மக்களின் கழகங்கள் செயற்படுகின்றன எனவும், மக்களின் கூட்டு நலன்களை (Collective Interests) அடைவதற்காக இவை செயற்படுகின்றன என்றும் கூறுகின்றது. இவ்வாறு மக்களின் கழக ஜனநாயகத்திற்கான (Associational Democracy) இடமாக சிவில் சமூகத்தைக் குறிப்பிட்டவர் அலெக்ஸ் த ரொக்வில் (Alex De Tocqueville) என்னும் பிரஞ்சு தேசத்து அறிஞராவர். அவரின் 'Democracy in America' என்னும் நூலில் இக்கருத்து விளக்கிக் கூறப்பட்டது. ஆயினும் ரொக்வில், சிவில் சமூகம் என்ற சொல்லை தனது நூலில் உபயோகிக்கவில்லை. அவர் சிவில் வாழ்க்கை (Civil Life) என்னும் சொல்லை உபயோகித்தார். அவர் உண்மையில் சிவில் வாழ்க்கை என்ற சொல்லை சிவில் சமூகம் என்ற அர்த்தத்திலேயே உபயோகித்தார்.

4. **கிராம்சியின் நவமார்க்சிய அர்த்தம்:** அந்தோனியோ கிராம்சி இத்தாலிய தேசத்து மார்க்சியர் ஆவர். இவரது மார்க்சியத் தத்துவத்தில் சிவில் சமூகத்திற்கு கொடுத்த விளக்கம் சிவில் சமூகம் என்னும் எண்ணக்கரு பற்றிய நவமார்க்சிய அர்த்தம் (Neomarxist Meaning) எனக் கொள்ளப்படுகிறது. 1930களில் இவரால் இவ்விளக்கம் இவரது எழுத்துகள் ஊடாக முன்வைக்கப்பட்டது. கிராம்சியின் விளக்கத்தின்படி அரசுக்கும், பிரஜைகளுக்கும் இடைநடுவில் அமையும் வெளியில் இயங்குவதே சிவில் சமூகம் ஆகும். இச்சிவில் சமூக வெளியை சமூக பண்பாட்டுவெளி (Social and Cultural Space) என கிராம்சி குறிப்பிடுகிறார். இவ்வெளி சமயம், பண்பாடு, கல்விக்கழகங்கள் ஆகியன இயக்கம் கொண்டுள்ள வெளியெனவும் கிராம்சி குறிப்பிடுகிறார். சிவில் சமூக வெளியில் (இத்தாலியின்) கத்தோலிக்கத் திருச்சபைக்குழுக்கள் (Church Groups), தன்னார்வ அமைப்புகள், வெகுஜன ஊடகங்கள் (Mass Media) என்பனவும் செயற்படுகின்றன எனவும் கிராம்சி குறிப்பிட்டார். சிவில் சமூகத்தை இவ்வாறு வரையறை செய்யும் கிராம்சி, ஆளும் குழுக்கள் பிரஜைகள் மீது தம் அதிகாரத்தைச் செலுத்துவதற்குத் தேவையான கருத்தியல் மேலாண்மையைப் (Ideological Hegemony) பெறுவதற்காகத் தலையீடு செய்யும் களமாக சிவில் சமூகம் விளங்குகிறது எனக் குறிப்பிடுகிறார். சமூக வெளியிலும், பண்பாட்டு வெளியிலும் ஆளும் குழுக்கள் தமது தலையீடு மூலம் ஏற்படுத்திக்கொள்ளும் மேலாதிக்கத்தை கிராம்சி 'கெஜிமொனி' (Hegemony) என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். இதனைத் தமிழில் 'மேலாண்மை' என்ற சொல்லால் குறிப்பிடலாம். பிரஜைகள் மீது

ஆளும் குழுக்கள் செலுத்தும் அதிகாரம், மேலாண்மை அதிகாரம் (Hegemonic Power) ஆகும். இம்மேலாண்மை அதிகாரம் ஆட்சியாளர்களால் வன்முறை மூலம் திணிக்கப்படுவதல்ல; பண்பாடு, கருத்தியல் என்ற கருவிகள் மூலம் மக்கள் மனதை ஆட்கொண்டு அவர்களின் சம்மதத்தைப் (Consent) பெறுவதன் மூலம் நிறுவப்படும் மேலாண்மை அதிகாரம் ஆகும். கிராம்சியின் கோட்பாட்டின்படி, அடக்குமுறைக்கும் ஒடுக்குதலுக்கும் உள்ளாகும் சமூகக் குழுக்கள், ஆட்சியாளர்களுக்கு எதிரான எதிர்ப்பியக்கத்தை (Resistance) சிவில் சமூகம் என்ற வெளியில் பிரஜைகளை ஒன்றிணைப்பதன் மூலம் முன்னெடுக்கின்றனர். அதன்மூலம் ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்திற்கு (Hegemony of the Ruling Class) எதிர்ப்பு வலுவடைகிறது எனவும் கிராம்சி விளக்கினார்.

சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் வளர்ச்சி வரலாற்றை மேற்கண்ட நான்கு நோக்குமுறைகளின் ஊடாக விளக்கும் பேராசிரியர் உயன்கொட, 1970களிலும் 1980களிலும், சிவில் சமூகம் என்னும் எண்ணக்கரு பிறிதோர் அர்த்தத்தைப் பெற்றதையும், நவீன ஜனநாயக அரசியல் கோட்பாட்டில் இப்புதிய அர்த்தத்தின் முக்கியத்துவத்தையும் அடுத்து எடுத்துக் கூறுகிறார். சிவில் சமூகம் என்பது ஜனநாயக அரசியல் நடவடிக்கைக்கான வெளி (Civil Society as Space for Democratic Political Action). ஜனநாயக அரசியல் நடவடிக்கைக்கான வெளியாக சிவில் சமூகம் அமைந்த வரலாற்றுச்சூழல் இலத்தீன் அமெரிக்காவில் 1970களிலும், கிழக்கு ஐரோப்பாவில் 1980களிலும் காணப்பட்டது. இலத்தீன் அமெரிக்காவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் அக்காலத்தில் சர்வாதிகார அரசாங்கங்கள் ஆட்சி செலுத்தின. அந்நாடுகளில் ஜனநாயக நிறுவனங்களின் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டிருந்தன. 1970-1990 காலப்பகுதியில் ஆசிய நாடுகளான தென்கொரியா, பிலிப்பைன்ஸ், வடகொரியா போன்ற நாடுகளிலும் சர்வாதிகார அரசுகள் ஜனநாயக நிறுவனங்களின் செயற்பாடுகளை இரும்புக்கரம் கொண்டு நசுக்கின. இப்பின்புலத்தில் இலத்தீன் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா, ஆசியா ஆகிய பகுதிகளில் அரசியல் விடுதலையையும், ஜனநாயகத்தையும் இலக்காகக்கொண்ட மக்கள் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கு, அரசியல் கட்சிகள் இல்லாத சூழ்நிலையில், இப்போராட்டங்களை சிவில் சமூகக் குழுக்கள் (Civil Society Groups) முன்னெடுத்தன. தொழிற்சங்கங்கள், சமயக்குழுக்கள், எழுத்தாளர் கழகங்கள், நடிகர்கள், நடன, இசைக்கலைஞர்களின் அமைப்புகள் என்பன இச்சிவில் சமூக நடவடிக்கைகளில் முக்கிய வகிபாகத்தைப் பெற்றன. மாணவர் அமைப்புகளும், விவசாயிகள் அமைப்புகளும் சாதாரண மக்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்கி சிவில் சமூக நடவடிக்கைகளில் அவர்களை அணிதிரட்ட உதவின. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சிவில் சமூக இயக்கங்கள் (Civil Society Movements) என்னும் எண்ணக்கரு பிரபலம் பெற்றது. இன்று அரசியல் சொல்லாடலில் முக்கிய விடயப்பொருளாக அமையும் 'சிவில் சமூக இயக்கங்கள்' அரசியல் கோட்பாட்டில் (Political Theory) ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள விடயமாகும்.

சிவில் சமூக இயக்கங்கள் தோன்றிய வரலாற்றுப் பின்னணி யாது? என்பது இவ்விடத்தில் விடைகாண வேண்டிய முக்கிய வினாவாகும். இந்தியாவின் அரசியல் கோட்பாட்டாளரான ரஜ்னி கொதாரி (Rajni Kothari), சிவில் சமூக இயக்கங்களை கட்சி சாராத அரசியல் அமைப்புகள் (Nonparty Political Formations) என வரையறை செய்தார் (பார்க்க, Rajni Kothari; 1984, The Non Party Political Process, Economic and Political Weekly, 19:5, {February. 04. 1984} 216 - 224). அரசியல் கட்சிகள் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலில் ஜனநாயகம், மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களைச் சேர்த்துக் கொள்வதில் தயக்கத்தை வெளிப்படுத்துவதும், அலட்சியம் செய்வதுமான சூழ்நிலைகளில் மேற்குறித்த விடயங்களை முன்னிறுத்திப் போராட்டங்களை நடத்துவதற்கான சமூக இயக்கங்கள் தோன்றின. இச்சமூக இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு மாற்றாக அமைந்தன. இவற்றின் செயற்பாடுகளில் அரசியல் செயற்துடிப்பு (Political Activism) வெளிப்பட்டது. சிவில் சமூகம் என்றால் கட்சி சாராத அரசியல் அமைப்புகள் என்ற அர்த்தம் அண்மைக்காலத்தில் முக்கியம் பெற்றது.

## சமூக இயக்கங்களும் சமூகவெளியும்

மேலே குறிப்பிட்டவற்றில் இருந்து சிவில் சமூகம் என்றால் என்ன என்பதற்கான சமகால அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. சமூக

இயக்கங்கள் (Social Movements), அச்சமூக இயக்கங்கள் இயங்கும் சமூகவெளி (Social Space) என்ற இரண்டினதும் சேர்க்கையே சிவில் சமூகம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. தொழிலாளர் இயக்கங்கள், விவசாயிகளின் இயக்கங்கள் (Peasants Movements), சமய இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், ஊடக சுதந்திரத்திற்கான இயக்கங்கள், சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் ஆகியன சிவில் சமூக இயக்கங்களிற்கு உதாரணங்களாகும்.

### சிவில் சமூக இயக்கங்களும் அரசியல் கட்சிகளும்

சிவில் சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளைப் போன்றே அரசியல் பிரச்சினைகளைத் தமது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்டு செயற்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூக இயக்கங்களிற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன.

1. அரசியல் கட்சிகள், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்கவும் அதனை கட்டுப்படுத்தவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. ஆனால் சிவில் சமூக இயக்கங்களிற்கு அரசியல் அதிகாரத்தைக் (Political Power) கைப்பற்றும் நோக்கம் இருப்பதில்லை.
2. அரசியல் கட்சிகள், தேர்தல் அரசியலில் (Electoral Politics) பங்கேற்கின்றன. சிவில் சமூக இயக்கங்கள் தேர்தல் நடைபெறும் சமயங்களில் குறிப்பிட்ட ஒரு கட்சியை ஆதரிக்கலாம். ஆனால் அவை நேரடியாகத் தேர்தலில் பங்கேற்பதில்லை.
3. அரசியல் கட்சிகளுக்குத் தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியல் வேலைத்திட்டம் இருக்கும். அவ்வேலைத்திட்டம் பல்வேறு விடயங்கள் சார்ந்த கொள்கைப் பிரச்சினைகளை (Policy Issues) உள்ளடக்கியனவாக இருக்கும். சிவில் சமூக இயக்கங்களின் வேலைத்திட்டங்களின் நோக்கெல்லை (Scope) விரிந்ததாக இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சிவில் சமூக இயக்கம் குறிப்பிட்டதொரு பிரச்சினை அல்லது விடயம் சார்ந்து அக்கறை கொண்டிருப்பதால், அதன் வேலைத்திட்டமும் குறிப்பிட்ட அந்த விடயத்தைப் பற்றியதாகவே இருக்கும்.
4. அரசியல் கட்சிகள், கட்சியின் கருத்தியலை ஏற்றுக்கொண்டவர்களை மட்டுமே அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்வதுண்டு. மேலும், கட்சியில் அங்கத்தவர்களாகச் சேருவோர் கட்சியின் ஒழுக்கவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தலும் வேண்டும். சிவில் சமூக இயக்கங்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதில், நெகிழ்ச்சியான நடைமுறைகளைக் கொண்டிருக்கின்றன.



Image Source - slbooks.lk

### அரசியல் விஞ்ஞானம் 'சிவில் சமூகம்' என்பதை முக்கியமானதாகக் கருதுவதேன்?

அரசியல் விஞ்ஞானிகள் சிவில் சமூகம் பற்றிய கல்வியிலும், ஆய்விலும் ஆர்வம் உடையவர்களாய் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. சிவில் சமூக அமைப்புகளும் சிவில் சமூகக் குழுக்களும் அரசியலில் அக்கறை கொண்டுள்ளன. அவை கட்சி அரசியலுக்கு (Party Politics) அனுசரணையானவை. ஆகையால் அரசியல் பற்றிய கல்வியில் சிவில் சமூகம் என்பதைக் கவனத்தில் கொள்ளத் தவறக்கூடாது.

2. சிவில் சமூகம், அரசுக்கும் (State) அரசியல் கட்சிகளுக்கும் அப்பால், அவற்றில் இருந்து சுதந்திரமான (Autonomous) அரசியல் வெளியில் (Political Space) இருப்புக் கொண்டுள்ளன.

3. பிரஜைகளின் அரசியல் பங்கேற்புக்கு (Political Participation) சிவில் சமூகம் புதிய வாய்ப்புகளைத் திறந்து விடுகின்றது. அரசியல் கட்சிகளில் இத்தகைய வாய்ப்புகள் இருப்பதில்லை.

4. செயல்துடிப்புடைய சிவில்சமூகம் ஜனநாயகத்தை ஆழப்படுத்துகிறது (Deepen Democracy).

5. அரசியல் கட்சிகளால் பொதுவாக அலட்சியம் செய்யப்படும் முக்கியமான பொதுப் பிரச்சினைகளை (Important Public Issues) சிவில் சமூக அமைப்புகள் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அப்பிரச்சினைகளின் தீர்வு நடவடிக்கைகளுக்காக மக்களை அரசியல் அணிதிரட்டல் (Political Mobilisation) செய்கின்றன.

6. பொதுப்பிரச்சினைகள் தொடர்பாக மக்களை அணிதிரட்டும் சிவில் சமூக அமைப்புகள் மக்களை வலுவாக்கம் செய்கின்றன (Empower People).

**சுருக்கம்**

1. சிவில் சமூகம்' என்னும் அரசறிவியல் கலைச்சொல் பற்றிய வரைவிலக்கணமும் விளக்கமும் முதலில் கூறப்பட்டது.

2. சிவில் சமூகம் என்ற எண்ணக்கரு (Concept of Civil Society) வளர்ச்சியுற்ற வரலாற்றில் செவ்வியல் தாராண்மைவாதம், செவ்வியல் மார்க்சியம் என்பனவற்றின் பங்களிப்பு முக்கியமானது. இம்மானுவல் கான்ட், ஹெகல், மார்க்ஸ் ஆகியோரின் எழுத்துகள் சிவில் சமூகம் என்னும் எண்ணக்கருவின் உருவாக்கத்திற்கு உதவின.

3. சிவில் சமூகம் என்பது மக்களின் கழகங்கள் (Associations) செயற்படும் சமூகவெளி (Social Space). அது கழக ஜனநாயகம் (Associational Democracy) செயற்படும் களமாகும்.

4. இத்தாலியரான அந்தோனியோ கிராம்சி (Antonio Gramsci) 1930களில் சிவில் சமூகம் பற்றிய நவமார்க்சிய விளக்கத்தை முன்வைத்தார். அவரின் மேலாண்மை (Hegemony), மேலாண்மை அதிகாரம் (Hegemon ic Power) ஆகிய கருத்துகள் புதுமையான கருத்தாக்கங்களாகும்.

**சிவில் சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளைப் போன்றே அரசியல் பிரச்சினைகளைத் தமது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்டு செயற்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூக இயக்கங்களிற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன.**

5. சிவில் அமைப்புகளை கட்சிசாராத அரசியல் அமைப்புகள் (Nonparty Formations) என வரையறை செய்த ரஜ்னி கோதாரி (Rajni Kothari), அரசியல் கட்சிகள் முன்னெடுக்கத் தயங்கும் முக்கிய பிரச்சினைகளை முன்வைத்து மக்கள் போராட்டங்களை வழி நடத்தும் சிவில் அமைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினார். மூன்றாம் உலக நாடுகளில் 1970களிலும் 1980களிலும் சர்வாதிகார அரசுகளுக்கு எதிராக சிவில் அமைப்புகள் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன.

6. இறுதியாக,

அ) சிவில் சமூகமும், சிவில் சமூக இயக்கங்களும்

ஆ) சிவில் சமூகங்களும் அரசியல் கட்சிகளும்

இ) அரசியல் விஞ்ஞானக் கல்வியிலும், ஆய்விலும் சிவில் சமூகம் பெறும் முக்கியத்துவம் என்பன விளக்கப்பட்டன.

பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவின் 'Politics and Political Science: A Contemporary Introduction' என்ற நூலின் 161 முதல் 167 வரையான பக்கங்களில் கூறப்பட்ட கருத்துகளை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்ட இத்தமிழ்க் கட்டுரை எளிமைப்படுத்திய தமிழ்ப்பெயர்ப்பாக அமைந்துள்ளது.

# அறிமுகம்: சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்து விட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.



இன்று உருவாகியுள்ள புதிய உலக ஒழுங்கில் இந்தியா, சீனா, இலங்கை என்பன இணைந்து இயங்குவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது எனும் குரல் ஏற்கனவே வெளிவந்துள்ளது. இத்தகைய புதிய செல்நெறி துலக்கமாகத் தெரிகிறதா எனும் கேள்வி பலரிடமும் தோன்ற இடமுள்ளது. ஏற்கனவே நிலவி வந்த ஒற்றை மையமான ஐக்கிய அமெரிக்க மேலாதிக்கம் தளம்பல் நிலையை அடைந்து, பழைய நியமங்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கும் மாறுநிலைக் காலம் என்பதைக் கடந்து, உறுதியான புதிய உலக ஒழுங்கு ஒன்று ஏற்பட்டு விட்டதா? அத்தகைய புதிய உலக ஒழுங்கில் ஐக்கிய அமெரிக்கா - சோவியத் யூனியன் இடையே நிலவிய பனிப்போர் போல இந்தியா - சீனா எனும் எதிரெதிர் முகாம்கள் தோற்றம் பெறாதா? இந்தியாவும் சீனாவும் பரம வைரிகளாக இயங்குவன என்ற எண்ணமே பலரிடமும் நிலவுகின்றது. இத்தகைய பகை நாடுகள் எனும் தோற்றம் அரை நூற்றாண்டுக்கு உட்பட்ட வரலாற்றையே பெற்றிருந்தது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்தியத் தலைவர்கள் சீனாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி இருந்தனர். கனடாவில் இருந்து வந்த நோர்மன் பெத்யூன் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சீன விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, வைத்தியப் போராளியாகச் செயற்பட்டதைப் போல, கோட்னீஸ் எனும் இந்திய மருத்துவப் போராளி சீன வீரர்களுக்குச் சேவை புரிவதற்காக அங்கு சென்று போர்க்களச் செயல்வீரராக இயங்கியுள்ளார். இன்றுங்கூட இந்தியா வருகிற பல சீனப்பயணிகள் கோட்னீஸ் உடைய கிராமத்தைத் தேடிச் சென்று, அவர் பிறந்து வளர்ந்த இல்லத்தைத் தரிசித்துச் செல்லும் செய்திகளைச் செவிமடுக்க இயலும்.

சீன - இந்திய எல்லைப் போர் ஒன்று 1962ஆம் ஆண்டில் ஏற்பட்ட பின்னரே இரு நாடுகளும் எதிரும் புதிருமான நிலையை எடுத்தன. இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட எல்லையில் சீனா அமைத்த வீதி பிணக்கிற்கான காரணமாக அமைந்தது. அவ்வாறு அமைக்கப்படும் வீதி பிரிட்டிசாரால் வரையப்பட்ட எல்லைக்கூடாகச் செல்கிறது என்ற பிரச்சினை இந்தியப் பாராளுமன்றத்தில் ஒலித்ததுண்டு. பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கு முன்னரான நீண்டகால வரலாற்றில் சீனாவுக்கானதாக அமைந்த நிலப்பரப்பின் ஊடாகவே அந்த வீதி அமைக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் அதனைப் பிரச்சினை ஆக்குவதற்கு முயன்ற போது, அந்த எல்லை இந்தியாவின் கரிசனைக்குரிய தூரத்துக்கு அப்பாலானது; சீனாவுக்கான போக்குவரத்தில் அதனது நெருங்கிய பிராந்தியங்களை இணைப்பதற்கு அந்தச் சாலை அவர்களுக்கு அவசியமானது என்ற பதிலையே பிரதமர் நேரு முன்வைத்து வந்தார்.

சீனாவின் சோசலிச முன்னெடுப்பைச் சகிக்க இயலாதவராக இருந்த குருசேவ் எனும் சோவியத் ஒன்றியத்தின் அதிபர் சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையையும் சிதைக்கும் திரிபுவாதத்தை விதைத்தவர்; அவர் ஏற்படுத்திய சறுக்கலின் விளைவாகத் தான் 1992ஆம் ஆண்டில் அப்போதைய அதிபரான கோர்பச்சேவால் 'சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்' (U.S.S.R.) எனும் மகத்தான சோசலிச நாடு புவிப் பரப்பிலிருந்து காணாமல் போக நேர்ந்தது. ருஷ்ய தேசத்தில் பாட்டாளி வர்க்கம் கிளர்ந்தெழுந்து முன்னெடுத்த 1917 ஒக்ரோபர் புரட்சி வாயிலாக உருப்பெற்ற புதிய சோசலிச அரசுமுறை தமக்கான விடுதலைத் தேசிய நலனை உத்தரவாதப்படுத்தும் எனக் கண்ட பதினைந்துக்கும் மேற்பட்ட ஒடுக்கப்பட்ட தேசங்களும் கைகோர்த்து இயங்கியதாக ஒக்ரோபர் புரட்சியின் நீடிப்பு அமையலாயிற்று. ஜார் மன்னனின் ஆட்சியில் ருஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தேசங்களாக இருந்தவை, விடுதலை பெற்ற குடியரசுகளான போதிலும், சோவியத் சோசலிசக் குடியரசாகிவிட்ட ருஷ்யாவுடன் இணைந்து 'சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்' எனக் கூட்டரசை உருவாக்கிய புதிய வரலாறு அப்போது சாத்தியமாகி இருந்தது!

உலகின் ஆறிலொரு பங்கு நிலப்பரப்பு இவ்வகையில் சோசலிசப் பாதையை வரித்த பின்னர், அதுவரை முதலாளி வர்க்கம் - பாட்டாளி வர்க்கம் என்பவற்றுக்கு இடையே நிலவிய பிரதான முரண்பாட்டின் இடத்தை ஏகாதிபத்தியத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையேயான முரண்பாடு பிரதிபலிக்கும்; அதுவே இனிவரும் உலக ஒழுங்கை வடிவமைக்கும் என, ஒக்ரோபர் புரட்சியின் தலைவரான லெனின் எதிர்வு கூறியிருந்தார். ஏகாதிபத்தியத்தால் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட தேசங்கள் அபகரிப்புக்கு உள்ளாகி, அவற்றின் இடையிலான முரண்பாடு பிரதான இடத்தைப் பெற்றதான இயங்குநிலை நிலவரத்தின் புறநிலை நிதர்சனங்களை பின்னர் சோவியத் யூனியனுக்குத்



**சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்தியத் தலைவர்கள் சீனாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி இருந்தனர். கனடாவில் இருந்து வந்த நோர்மன் பெத்யூன் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சீன விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, வைத்தியப் போராளியாகச் செயற்பட்டதைப் போல, கோட்னீஸ் எனும் இந்திய மருத்துவப் போராளி சீன வீரர்களுக்குச் சேவை புரிவதற்காக அங்கு சென்று போர்க்களச் செயல்வீரராக இயங்கியுள்ளார். இன்றுங்கூட இந்தியா வருகிற பல சீனப்பயணிகள் கோட்னீஸ் உடைய கிராமத்தைத் தேடிச் சென்று, அவர் பிறந்து வளர்ந்த இல்லத்தைத் தரிசித்துச் செல்லும் செய்திகளைச் செவிமடுக்க இயலும்.**

தலைமை ஏற்றிருந்தவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. வெறும் வர்க்க வாதமாக மார்க்சிஸ - லெனினிஸத்தை விளங்கிக்கொண்டதன் பேறாக சோவியத் ஒன்றியம் தகர்ந்து ருஷ்யாவும் பதினைந்து நாடுகளும் எனச் சிதறிப் போயின.

அவ்வாறு பிரிந்து சென்ற நாடுகளை நேட்டோவில் இணைப்பதில்லை என்ற ஐக்கிய அமெரிக்காவின் வாக்குறுதியை அன்றைய சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கோர்பச்சேவ் நம்பியிருந்தார்; அப்போது தனது தலைமையில் இருந்த கொம்யூனிஸ்ட் கட்சியைக் கலைத்ததுடன் சோசலிச முன்னெடுப்பையும் கைவிட்டு, சோவியத் ஒன்றியத்தில் இணைந்திருந்த பதினைந்து நாடுகள் பிரிந்து தனி நாடுகளாகச் செல்வதையும் அனுமதித்தார். அதன் வாயிலாக ஏற்படவிருந்த யுத்தத்தைத் தவிர்த்ததாகவும் கோர்பச்சேவ் நியாயம் கற்பித்துக்கொண்டார்.

அரசியல் சூதாட்டத்தின் போதான வாக்குறுதிகள் கால - தேச நிலவரங்களுக்குக் கீழ்ப்பட்ட வெற்றுரைகள் என்பதனை ஏகாதிபத்தியத் திணை மிக விரைவில் எடுத்துக் காட்டியது. முன்னெடுத்து வந்த சோசலிசப் பலத்தையும் இழந்து புதிதாக வரித்துக்கொள்ள முற்பட்ட முதலாளித்துவப் பாதையையும் உறுதிப்படுத்த இயலாமல் ருஷ்யா பலவீனப்பட்டுத் திணறிய போது, சோசலிச முகாமாக சோவியத் யூனியனுடன் 'வார்சோ ஒப்பந்த நாடுகள்' என (ஏகாதிபத்திய அணியின் 'நேட்டோ ஒப்பந்தக்' கூட்டுக்கு எதிரான தற்காப்பு அணிச்சேர்க்கையில் ஒன்றுபட்ட அணி) இருந்த பழைய 'சோசலிச முன்னெடுப்புக்குரிய' கிழக்கு ஐரோப்பிய நாடுகளை மட்டுமன்றி, சோவியத் ஒன்றியத்துக்குள் இருந்து பிரிந்து சென்ற புதிய தேசங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக நேட்டோவில் இணைத்து வந்தது ஏகாதிபத்தியத் திணை. சோசலிச முகாமிலிருந்து 'பாதுகாக்கப்படுவதற்கு' என உருவாக்கப்பட்ட நேட்டோ ஒப்பந்தம், சோசலிச அச்சுறுத்தல் தமக்கருகில் இல்லை என்றானதும் காலாவதி ஆகியிருக்க வேண்டும். மாறாக, ருஷ்யாவைத் தொடர்ந்தும் சுற்றிவளைத்த நேட்டோ நெருங்கி வந்ததுடன், உக்ரேனையும் தனக்குள் இணைப்பதற்கு முனைந்த சூழலில் அதனது பாதுகாப்புக் கேள்விக் குறியாவதைத் தடுக்கும் உத்தேசம் காரணமாக உக்ரேன் மீதான தாக்குதலை முன்னெடுக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது ருஷ்யா!

மீண்டெழுந்து துரிதகதியில் விருத்தியடைந்தவாறு இருந்த ருஷ்யப் பலத்தைச் சிதைத்துவிட இயலும் என்ற எண்ணத்தில் ஐக்கிய அமெரிக்கா அந்த யுத்த வியூகத்தை அமைத்திருந்தது. ஐரோப்பிய ஒன்றியம், தமது தரப்புப் பலவீனப்படுவதை உணர்ந்ததால், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது என்றால், உக்ரேனைப் பங்குபோடுவதில் மிச்சம் மீதி தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு உள்ளது. தமது வீழ்ச்சி மென்மேலும் அதலபாதாளத்தை அடைந்துவிடாமல் இருக்க வேண்டுமாயின் மத்திய கிழக்கில் இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்குவது அவசியம் எனக் கருதி இன்று உக்ரேனைக் காவுகொடுத்துள்ளது. இஸ்ரேலின் உருவாக்கத்தில் ருஷ்யாவுக்கும் பங்கிருந்த காரணத்தால், ஈரானுடையதும் மத்திய கிழக்கு நாடுகளினதும் கோபக் கனலிலிருந்து இஸ்ரேல் பாதுகாக்கப்படுவதனை ருஷ்யாவால் மட்டுமே சாத்தியமாக்க இயலும் என்பதனை

*ஏகாதிபத்தியத் திணை நன்கு புரிந்து கொண்டுள்ளது.*

*அவ்வகையில் ருஷ்யாவுடன் தமது நெருக்கத்தை அதிகப்படுத்துவதன் பேறாக சீனாவுடன் நட்புறவைப் பலப்படுத்தி வருவதில் இருந்து அதனைத் தடுத்தாட்கொள்ள இயலும் என ஐக்கிய அமெரிக்கா எண்ணம் கொண்டு இருப்பதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஐக்கிய அமெரிக்காவின் சூத்திரப் பாவையாக இயங்குவதில் இருந்து விடுபட்டு ஐரோப்பிய நாடுகள் தனிவழி காண வேண்டும் எனவும், அதற்கு ஏற்ற வகையில் நேட்டோ அமைப்பில் தம்மையும் இணைக்குமாறும் ருஷ்யா முன்னர் கோரிக்கை விடுத்திருந்தது. அப்போது தன்னை நம்பி ருஷ்யாவைப் பகைத்த ஐரோப்பிய யூனியனைக் கைகழுவிவிடத் தயாராகும் ஐக்கிய அமெரிக்காவின் தந்திரோபாயத்தை ருஷ்யாவால் விளங்கிக்கொள்ள இயலாதா? இன்றைய இருப்பில் 'ஐரோப்பா' எதிர் 'ருஷ்யா' என ஆகுவதற்குக் காரணமான ஐக்கிய அமெரிக்காவின் இராஜதந்திர வலையில் சிக்கும் பலவீன நிலையில் தான் ருஷ்யா உள்ளதா?*

*இன்றைய பலமான இருப்பை ருஷ்யா பெறக் காரணமாக அமைந்த நட்புச் சக்திகளான சீனாவையும் ஈரானையும் தூரப்படுத்தும் எந்தத் தவறுக்கும் ருஷ்யத் தலைவர் புடின் இடமளிக்க மாட்டார் என்பதே நிதர்சனம். இனியும் உலகை ஆட்டிப்படைக்கும் வகையில் தான்தோன்றித்தனமாக ஐக்கிய அமெரிக்கா நடந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை எனும் நிலைமையை பிரேசில், ருஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா எனும் நாடுகளது ஒன்றிணைவில் உருவான 'BRICS' அமைப்பு ஏற்படுத்திவிட்டது. அந்த அமைப்பு அதனை உருவாக்கிய மேற்படி ஐந்து நாடுகளது முன்னொட்டு ஆங்கில எழுத்துகளால் 'BRICS' என அழைக்கப்பட்ட போதிலும், அவற்றைக் கடந்து ஈரான் உள்ளிட்ட பல நாடுகளும் இணைந்து செயற்படும் வண்ணம் விரிவுபட்ட பலத்துடன் விசுவரூபம் பெற்றுவிட்டது. அதனைச் சிதைப்பதற்கு, தான் காரணமாக அமைந்தால், அதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் செயலொழுங்குகள் எவ்வாறு அமையும் என்பதனை அறியாத நிலையில் ருஷ்யா இல்லை.*

*ஐக்கிய அமெரிக்கத் தலைமையில் ஏகாதிபத்தியத் திணையால் பதியம் போட்டு வளர்க்கப்பட்ட இந்தியப் பெருமுதலாளி வர்க்கம் கூட தனக்கான அணியாக 'BRICS' இருப்பதைக் கைவிடத் தயாராக இல்லை. இந்த அமைப்பில் இருந்தபடி ஏகாதிபத்தியத் திணைக்கு முண்டு கொடுக்க இசைவோமே அல்லாது முற்றுமுழுதாக உங்களது அணிக்குள் முடங்கிப் போய்விட இயலாது என்பதை எடுத்துக்காட்டும் திராணி இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த அளவில் ஏகாதிபத்தியத் திணை அதனது தீர்மானிக்கும் வலுவை இழந்துவிட்டுள்ளது!*

*ஆக, புதிய உலக ஒழுங்கு அரங்கேறிவிட்டது. சென்ற வருடக் கடைக்கூறில் இடதுசாரி அணி இலங்கை அரசாங்கத்தைக் கைப்பற்ற இயலுமாக இருந்ததும் கூட இத்தகைய மாற்றத்தின் முன்னடையாளம் தான். இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா எனும் மும்முனைகளை வெற்றிகரமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் கையாள இயலுமாக இருக்கிறது என்பது, சோவியத் ஒன்றியமும் ஐக்கிய அமெரிக்காவும் என்ற இருமுனைப்பட்ட 'உலகு - ஐக்கிய அமெரிக்கா இயக்கிய ஒற்றை மையம்' (1990கள் முதல் 2020 வரை) என்பன தகர்வடைந்து புதிய உலக ஒழுங்கொன்று மேற்கிளம்பி வந்துவிட்டது என்பதன் வெளிப்பாடு தான்.*

*இத்தகைய ஒரு காலப் பின்னணியில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை ஆகுதியாக்கிய தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்த கேள்வி எம்முன்னால் எழுகிறது. இனத் தேசியம் ஒன்றின் கோரிக்கையை மறுப்பதில் சிங்களத் தேசியமும் அதனது பல்லாயிரம் மக்களை அர்ப்பணம் செய்யவேண்டி இருந்தது. இன்று விடுதலைத் தேசிய உணர்வுடன் அரசாங்கத்தை அமைத்துள்ள சிங்களத் தேசியம் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளுடன் 'சிறுபான்மை இனமக்கள்' சமத்துவமாகப் பயணிக்க இயலுமே அல்லாது எந்தவொரு இனப் பிரிவினரும் 'தனியுரிமைத் தாயகம்' என்ற கோரிக்கையுடனோ, சமஷ்டி போன்ற அபிலாசையுடனோ இயங்க இயலாது எனக் கூறிவரக் காண்கிறோம். புரிந்துணர்வுடன் விடுதலையை நாடுகிறவர்களிடமும் இத்தகைய உணர்வுநிலை வெளிப்படக் காரணம் என்ன?*

*ஏகாதிபத்தியம் முழு அளவில் சரியத் தொடங்கும் இவ்வேளையில், அதற்கு முண்டு கொடுக்கும் தவறுகளுக்கு ஆட்படாமல், தேசங்களிடையே சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதன் வாயிலாகச் சோசலிச அமைப்பை வென்றெடுக்கும் இன்றைய சகாப்தத்தில் இலங்கையின் சுயநிர்ணய உரிமை,*

அதற்குள்ளே (இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்க மறுக்கும்) இனத்தேசியங்களின் சுயநிர்ணய உரிமை என்பவற்றை வரையறுக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதன் பொருட்டு ஏகாதிபத்தியம் வலுவுடன் இயங்க ஏற்றதாக முன்னெடுத்த நூற்றைம்பது வருடங்களுக்கு முந்திய செயலொழுங்குகளைக் கற்க வேண்டியவர்களாக உள்ளோம். பண்பாட்டுத் தேசிய எழுச்சியின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படும் ஆறுமுக நாவலர் (1823 - 1879), ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் பண்பாட்டுப் பாதுகாப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர் என ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளால் மதிக்கப்படுபவர். அவர் பற்றிய சரியான மதிப்பீட்டினூடாகப் பெறப்படும் புரிதல், நாம் கடந்து வந்த பாதையை விளங்கிக் கொள்ள உதவும் பயன்மிக்க முயற்சியாக அமையும்.

'சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர்' எனும் இந்தத் தொடர் காலனித்துவம் ஏற்படுத்திய பண்பாட்டு மேலாதிக்கத்துக்கு எதிராகப் போராடிய நாவலரின் செயற்பாடுகள், எமது வரலாற்றுத் திசை மார்க்கத்தை எவ்வகையில் வடிவப்படுத்தியது என்பதை ஆய்வுக்கு உட்படுத்தும். அன்றைய எமது சமூக அசைவியக்கத்தில் அவரது செயற்பாடுகள் ஏற்படுத்திய தாக்கத்தின் பலம் - பலவீனங்கள் முற்போக்குத் திசைமுகப்படுத்தலாக அமைந்ததா, இன்றைய விடுதலைத் தேசிய சக்திகள் அவரிடம் இருந்து கற்பதற்குரிய சாதக - பாதக அம்சங்கள் எவை என்பன குறித்த தேடலை இங்கு மேற்கொள்வோம். பத்து இயல்களைத் தம்முள் அடக்கிய நான்கு பகுதிகளாக இந்தத் தொடர் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## 1. சென்ற காலத்தின் மீதான நாட்டமும் தேடலும்

ஈழத் தமிழ்த் தேசியம் அர்ப்பணிப்புமிக்க போராட்டத்தை முன்னெடுத்த போதிலும் கழித்தல் பெறுமானத்தில் தனது இருப்பை வந்தடையும் பெறுபேற்றைத் தாயக மண்ணில் கண்டுள்ளது. அதற்காகத் ஈழத் தமிழினத் தேசியம் முற்றுமுழுதான தோல்வியை எட்டியுள்ளது என்றும் பொருளில்லை. இன்றைய உலகையாளும் ஏகாதிபத்திய நாடுகளில் புகலிட வாழ்வைப் பெற்ற 'புலம்பெயர் தமிழீழம்' எமது மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்துக்குக் கிடைத்திருக்கும் 'பெரு வெற்றி' ஆகும்!

மேலாதிக்க உலகின் ஊடாட்டமாக உயிர்த்துடிப்பை வைத்துக்கொள்ளும் அந்தத் தமிழீழம், தாயக மண்ணில் 'தமிழர் பூர்வீகப் பிரதேசம்' என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் ஆக்கிக்கொண்டு வருகிறது. புகலிடத் தமிழீழப் 'பிரசைகள்' "அடைந்தால் தமிழீழம், அதில்லாத குறைபட்ட எதுவும் வேண்டியதில்லை" என்ற முடிவோடே உள்ளனர். அவர்களது தூண்டுதலுடன் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்து, விடுதலைத் தமிழ்த் தேசியம் தக்க வைப்பதற்கு முனையும் அம்சங்களையும் பலவீனப்படுத்துகிற வேலைகளை இங்குள்ள மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் நாவலரை ஐந்தாம் குரவர் எனும் வழிபாட்டுக்கு உரியவராக காட்டுகின்றது. 'கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு எதிராகப் போராடிச் சைவத்தைக் காத்தவர்' எனும் நாவலரின் வகிபாகத்தை ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பௌத்தம் - சமணம் ஆகிய 'புறச் சமயங்களை' முறியடித்த நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் எனும் நான்கு சைவ சமயக் குரவர்களது பணியின் தொடர்ச்சி எனக்கூறுவர். அதற்கான அடிப்படைகள் அவரிடம் எப்படி வெளிப்பட்டது? நாவலரை மேலாதிக்கத் தேசியவாதத்துக்கு உரியவராக மதிப்பிட்டு 'சாதியின் காவலராக' அவர் இயங்கினார் எனக் கணிப்பதுடன் முற்றாகவே அவரை நிராகரிக்கும் தரப்பு ஒன்று புகலிடத் தளத்துக்குரிய மற்றொரு பிரிவினரிடம் உருவாகி உள்ளது; அந்தத் தரப்புக்கு உரிய ஒரு சிலர் தாயகத்திலும் உள்ளனர். இத்தகையோர் தலித்தியச் சிந்தனையின் அடிப்படையில் நாவலர் மீது வைக்கும் விமரிசனங்கள் அனைத்தும் ஏற்புடையனவா?

மேலாதிக்கவாதிகள் போல வழிபாட்டுக்கு உரியவராகவோ, தலித்தியவாதிகள் போல பிற்போக்கின் குவிமையமாகவோ நாவலரை அணுகமுற்படாமல், அவருக்குரிய வரலாற்றுப் பங்களிப்பின் தாற்பரியத்தை மனங்கொண்டு நிதானமான கணிப்பீட்டை முன்னிறுத்தும் மூன்றாவது அணியொன்று கனங்காத்திரத்துடன் இயங்கவந்துள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பை வலுவுடன் முன்னெடுத்து இயங்கிய 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' நாவலர் நினைவு நூற்றாண்டை எதிர்கொள்ளும் வகையில் ஆய்வரங்குகள் - மலர் வெளியீடுகள் வாயிலாக அவருக்குரிய வகிபாகம் துலக்கமுறுவதற்கான

முயற்சிகளை முன்னெடுத்திருந்தது!

இந்தத் தொடரின் முதல் பகுதி 'சென்ற காலத்தின் மீதான நாட்டமும் தேடலும்' எனும் தலைப்பின் கீழ், இவ்விடயங்களை அலசும். இதன் முதல் இயலாகிய 'மறுவாசிப்பில் நாவலர்' என்பதனூடாக மேற்படி மூன்று தரப்பினரும் நாவலரைக் கண்டுகாட்டும் பாங்கு வெளிப்படுத்தப்படும். 'மீள் பார்வைக்கான சமூக சக்திகள்' எனும் இரண்டாம் இயல், பழைய பொற்காலத்துக்காக ஏங்குவதோடு அதன் மீளுருவாக்கமாக வெளிப்பட்டவரே நாவலர் எனக் காணும் ஆண்ட பரம்பரையினர், ஒடுக்கப்பட்டோரது பார்வையில் கடந்தகாலம் முழுவதும் நிராகரிக்கப்பட வேண்டியன எனக் கங்கணம் கட்டும் எதிர்ப்பு அரசியலாளர்கள், பண்பாட்டுத் தேசிய விடுதலைக் கூறுகளை வெளிப்படுத்தியவராக நாவலரைக் காட்டிய இலங்கை முற்போக்கு இயக்கத்தினர் (விடுதலைத் தேசிய சக்திகள்) எனும் முத்தரப்பினர் பற்றிப் பேசும்.

### 2. இன்றைய இருப்பின் மீதான கடந்த காலத்தின் தாக்கம்

நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஐரோப்பியக் காலனியாக இயங்கிய இலங்கைத் தமிழ்ச் சிந்தனை முறைமையில் காலனித்துவப் பிடி வலுவாகக் காலூன்றி உள்ளது. நாவலருக்கு முன்னரும் அவர் காலத்திலும் நிலவிய வாழ்வியல் கோலம் எத்தகைய மனக்கட்டமைப்பை நாவலரிடம் ஏற்படுத்தி இருக்கும் என்பதைக் கவனங்கொள்வது அவசியம். 'இன்றைய இருப்பின் மீதான கடந்தகாலத் தாக்கம்' எனும் இரண்டாம் பகுதியின் முதல் இயல் 'காலனித்துவக் காலமும் கருத்து நிலைகளும்' என்பதாகும்!

நாவலர் இயக்கம் கொண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு, தமிழில் நவீனத்துவம் மேற்கிளம்பி வந்த காலமாகும். தமிழில் மட்டுமன்றி சிங்களச் சமூகமும், இந்தியாவின் தமிழுடன் ஏனைய இனத் தேசியங்களும்கூட அதே சமகாலத்தில் நவீனத்துவ மாற்றங்களுக்கு ஆட்பட்டன. அதன் புத்தூக்கம் காரணமாகச் சமூக - பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கங்கள் பல்வேறு இடங்களிலும் எழுச்சி பெறலாயின. 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக இயக்க எழுச்சிகள்' என்பது இரண்டாவது பகுதிக்குரிய மற்றொரு இயலாகும். அதன் மூன்றாவது இயலாகிய 'சைவசித்தாந்தம்: ஆறுமுக நாவலரும் வ.உ. சிதம்பரநாதனாரும்' என்பது ஒரே கருத்தியலை ஏற்ற இருவரது பண்புக் கூறுகளை



வ.உ.சி
Image Source - siliconshelf.wordpress.com

அலசும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் தீவிரமாகச் செயற்பட்ட நாவலரும், இருபதாம் நூற்றாண்டின் முற்கூறில் தீவிர தேசிய விடுதலைப் போராளியாக இருந்த வ.உ.சி. யும் தத்தமது கால - தேச வேறுபாடுகளுக்கு அமைய வெளிப்படுத்திய கருத்துகள் ஆய்வுக்குரியன.

### 3. தவறிப் போயிருந்த தடங்கள்

'நாவலர் பிறந்திருக்காது போனால்?' என்ற அச்சம் அவரது மறைவின் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் வரை நீடித்ததுண்டு. எண்பதாம் ஆண்டுகளின் பின்னர் அரச பயங்கரவாதம் மேலெழுந்து வன்முறை நாயகர்களுக்கான களமாக இலங்கை மாற்றப்பட்ட சூழலில், பண்பாட்டுப் போராளியின் இடத்தை போர்க்களத்தின் மாவீரர் பெற்றுக்கொண்டனர். முன்னதாக நாவலர் செயற்படுத்தி இருந்த பண்பாட்டுத் தள வேலை முறைகளில் ஏற்பட்ட மேலாதிக்கப் பண்பின் ஏதாயினும் கூறு வன்முறை நாயகருக்கு உரித்தான வெளியைக் கட்டமைத்து இருந்ததா? வேறுவகையில் சொல்வதாயின், இரு தரத்தாருக்கும் உரியதாகப் பொதுவான அடித்தளம் ஒன்று இருந்ததா? தமிழகத்தில் வ.உ.சி. யின் அரசியல் - இலக்கியச் சகாவாக

இருந்த பாரதியின் ஆன்மிக நாத்திக வெளிப்பாடு போல ஈழத் தமிழில் ஊற்றெடுக்க இயலாமல் போனது ஏன்? நாவலரால் சிவபூமியாகக் காப்பாற்றப்பட்டதாலே தான், பெரியார் நாத்திகவாதச் சமூக விழிப்புணர்வுடன் இயங்கியது போல இங்கு 'சாதி ஒழிப்பு' இயக்கம் எழுச்சி பெறாமல் போனதா?

மேலும், ஜனநாயகப் பண்புமிக்க செயற்களத்தை நாவலர் ஏற்படுத்தி இருக்க இயலாதா? அவரது சமகாலத்தில் (முன்பின்னாகவும்) இந்தியாவில் இயக்கம் கொண்ட வள்ளலார், தயானந்த சரஸ்வதி, ராஜா ராம் மோகன் ராய், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோருடன் பலவகை ஒத்த பண்புகளைக் கொண்டிருந்த போதிலும் மேலாதிக்கத் தேசிய முன்னோடிக்கு உரிய பண்புக் கூறுகளும் ஆறுமுக நாவலரிடம் வெளிப்பட்டு இருந்தன. இந்தியாவில் சாத்தியப்பட்ட வெகுஜனக் கிளர்ச்சி அலைக்குரிய வெளி அப்போது இலங்கையில் இல்லாமல் போனது ஏன்? இவை குறித்து 'ஆன்மிக நாத்திக வெளிப்பாட்டுத் தளம்', 'தீர்மானிக்கும் சக்தியாக இயற்கை வளத்தைச் சார்ந்த உற்பத்தி முறை', 'மாற்றத்தின் நேரியனும் புறநிலையும்' எனும் மூன்று இயல்கள் அலசும்!

### 4. இருப்பும் மாற்றச் செல்நெறியும்

ஏகாதிபத்தியத்தால் கட்டமைக்கப்பட்ட எமது தேசிய இருப்பில் உள்ளுறையாக அமைந்திருந்த பிரித்தாளும் சூழ்ச்சி காரணமாக, எண்பதாம் ஆண்டுகளில் இனத் தேசியங்கள் இடையே இரத்தம் சிந்தவைத்த மோதல் களமாக நாடு மாறிப் போயிருந்தது. ஏகாதிபத்தியம் தனது நலன் பேணும் வகையில் சிங்களத் தேசியத்துக்கு வழங்கியிருந்த அதீத அரசியல் வாய்ப்பை விடுதலைத் தேசிய எழுச்சி பெற்ற சிங்களத் தரப்பும் தவறான வகையிலேயே கையாண்டிருந்தது; ஏனைய இனத் தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து உரிய பங்குப் பரிமாற்றங்களை ஏனைய இனத் தேசியங்களுடன் ஏற்படுத்தியவாறு சிங்களத் தேச நலனை விருத்திசெய்ய முயன்றிருப்பின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க் குணத்துடன் இலங்கைத் தேச நலன் முன்னேற வாய்ப்பாக அமைந்திருக்கும்.

ஏனைய தேசிய இனங்களுக்கு அரசியல் - பொருளாதாரச் சம உரிமையை வழங்காமலே சிங்களத் தேசப் பிராந்தியத்தில் யாழ்ப்பாண உத்தியோக ஆக்கிரமிப்பை நீக்குவதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகள் பிரிவினைவாதப் போருக்கு இடமேற்படுத்தி இருந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் யாழ்ப்பாணத்துக்கு வழங்கி இருந்த உத்தியோக ஆக்கிரமிப்புக்கான வாய்ப்பின் பின்னணி குறித்த தேடலை மேற்கொள்ளாது, இலங்கை அரசு மேற்கொண்ட தரப்படுத்தலுக்கு எதிராக, மேலாதிக்கத் தேசிய நாட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட யுத்த முன்னெடுப்பு, தாயகத்தில் மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்தியதுடன், ஏகாதிபத்தியப் புகலிடத்தை நாடிச்சென்று தொடர்ந்தும் விடுதலை நாட்டத்துக்கு விரோதமான மனப்பாங்கை வளர்க்கவும் வித்திட்டுள்ளது.

இடம்பெற்ற யுத்தத்தின் பேறாக பொருளாதார, நிர்வாக, உட்கட்டமைப்புச் சீர்குலைவுகளுக்கு உள்ளாகிவிட்ட இலங்கையின் இறைமையும் சுயாதிபத்தியமும் ஏற்கனவே கைநழுவிப்போன சூழலில், தொடரும் செயலொழுங்குகள் கூட முழு அளவிலான நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இல்லை. பேரினவாத முன்னெடுப்பைக் கைவிட்டு, சம உரிமையுடன் ஏனைய அனைத்துத் தரப்பினருக்குமான வாய்ப்பு, வசதிகள் ஏற்படுத்தப்படும் என்ற உறுதிப்பாட்டுடன் இயங்கும் புதிய இடதுசாரி அரசாங்கத்தை வீழ்த்தும் முனைப்புடன் மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் செயற்பட்டவாறு உள்ளது.

ஏகாதிபத்தியத் திணையில் சங்கமித்துள்ள 'புலம்பெயர் தமிழீழம்' இங்குள்ள மேலாதிக்கத் தமிழ்த் தேசிய அரசியலாளர்களுக்கு ஊட்டமளிப்பதன் பேரில், வெளித் தெரியும் பேசு பொருளாக அவர்களது குரல் ஓங்கியொலிக்கிறது; காப்பிரேட் ஏகாதிபத்திய ஊடக ஊதுகுழல்களும் அதனைப் பரப்புரை செய்கின்றன. மிகப் பெரும்பான்மையான ஈழத் தமிழ் மக்கள் இலங்கைத் தேசத்தின் சுயநிர்ணய உரிமையைப் பேணிப் பாதுகாத்தவாறு தமிழினத் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு வடிவப்படுத்த இயலும் என்ற அக்கறையுடனேயே உள்ளனர். மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் ஆறுமுக நாவலரை விமரிசனங்களுக்கு அப்பாற்பட்டு வழிபாட்டுக்கு உரிய விம்பமாக்கிக் காட்டுவதைப் போல, விடுதலைத் தேசிய உணர்வுடனுள்ள மிகப் பெரும்பான்மையான மக்கள் இல்லை. அவருக்குரிய வரலாற்றுப் பின்புலத்தில் அவர் எத்தகைய வகிபாகத்தைக் கொண்டிருந்தார் என்பதைக் காணும் ஆர்வம் பலரிடம் உள்ளது.

இங்கு மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் விடுதலை நாட்டம்மிக்கோரைக் கொன்றும் காணாமலாக்கியும் வந்தபோது களச் செயற்பாட்டைக் கைவிட்டுப் புகலிட வாழ்வை

நாடியவர்களும் மேலைத் தேசங்களையே தஞ்சம் புக நேர்ந்தது. அத்தகையவர்களில் பெரும்பான்மையினர் தம்மளவில் விடுதலைத் தேசிய உணர்வைக் கொண்டிருந்த போதிலும் மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகக் காத்திரமான செயற்களத்தை உருவாக்க இயலாதவர்களாக இருந்தனர். அங்குள்ள மேலாதிக்கத் தமிழ்த் தேசியச் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக மற்றொரு பகுதியினர் தலித்தியவாத நிலைப்பாட்டை வரித்துக்கொண்டனர். இங்கு தலித்தியவாதப் பின்னணி எதுவும் இல்லாத போதிலும் புகலிடச் செயற்பாட்டாளர்களது அக்கறையின் பேரில் சில நடவடிக்கைகள் தோன்றி மறைகின்றன. இங்கே ஏகாதிபத்தியப் பயன்பாட்டுக்காக, இனவாத முரண்பாடு தான் 'வளமூட்டி விருத்தி செய்து' வியாபகம் அடைந்துள்ளது; இந்தியாவில் செழிப்பாகப் பயன்படுத்தப்பட்ட சாதியவாதம் இங்கே எதிர்பார்க்கும் அளவுக்கு வளர இயலாவிட்டாலும் தலித்தியவாதக் கருத்து நிலைகள் விடுதலைத் தேசியத்துக்குக் குந்தகம் விளைக்கும் வகையில் ஊடறுப்பை மேற்கொள்ள இடமேற்பட்டுள்ளது. குறிப்பாக நாவலர் பற்றிய தலித்தியக் கண்ணோட்டம் மிக மோசமான தாக்கத்தை விளைவிப்பதாய் உள்ளது. நாவலர் இயங்கிய வரலாற்றுச் சூழல் பற்றிய தேடல் இன்றிச் சாதி குறித்து அவர் வெளிப்படுத்திய சில கருத்துகளை முன்வைத்து அவரை முற்றாக நிராகரிக்கும் போக்கு தலித்தியர்களிடம் உள்ளது. நாவலருக்கு எதிராக இவர்கள் கர்ணகடூரமாகக் கொச்சைப்படுத்தி உதிர்க்கும் குற்றச்சாட்டுகள் பற்றிப் பெரும்பாலான மக்கள் அலட்டிக்கொள்ளாத போதிலும் விடுதலைச் செயற்பாட்டுக்கு உரிய சிலரது பார்வையைச் சிதைப்பதாகத் தலித்தியக் கருத்து நிலை இயக்கம் கொண்டுள்ளது.



ஆறுமுகநாவலர்
Image Source - tamilarivu.org

வெகுஜனத் தளத்தில் தலித்தியக் கருத்தாடல் தாக்கம் செலுத்தவில்லை என்பதனால் பாதகமான சூழல் இல்லையெனப் பொருளில்லை; அரசியல் தளத்தில் மேலாதிக்கத் தமிழ்த் தேசிய நாட்டத்தை நிராகரித்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் உரிமையுடன் வாழும் உத்தேசத்தை மக்கள் வந்தடைகிற இன்றைய சூழலில், பண்பாட்டுத் தளத்தைத் தமக்குச் சாதகமாக்குவதற்கு மேலாதிக்கவாதிகள் எத்தனிக்கின்றனர். அதற்கான கருவியாக 'ஐந்தாம் குரவர்' நாவலர் கையாளப்படுகிறார். கடின உழைப்புக்குப் பெயர்போன எமது சமூகத்தைக் கையேந்தும் நிலைக்கு ஆளாக்கிய புலம்பெயர் புரவலர்கள் 'நவீன நாவலர்களை' உருவாக்கி அத்தகைய கைங்கரியங்களை மேற்கொள்ள முனைகின்றனர். மேலாதிக்கத்தை எதிர்க்கும் பேரால் நாவலரைக் கொச்சைப்படுத்தும் போது, அவரைக் காப்பாற்றுவதாக எண்ணி விடுதலைக்கு விரோதமானவர்களின் கூடாரம் நோக்கி மக்கள் தள்ளப்படுவதைத் தவிர்ப்பது இன்றைய காலத்தின் தேவை!

இத்தொடர் பற்றிய முன்னுரைக் குறிப்பின் ஆரம்பத்தில் இன்று ஏற்பட்டுள்ள புதிய உலக ஒழுங்குப் பிரகாரம் தேசங்கள் இடையே சமத்துவத்தை ஏற்படுத்தும் அரசியல் சூழல் விருத்தி பெறவுள்ளது பற்றிக் குறிப்பிட்டு இருந்தோம். இந்தத் தொடரின் இறுதிப் பகுதியானது, விடுதலைத் தேசியச் சக்திகள் நாட்டினுள்ளே இனத் தேசியங்கள் சமத்துவத்தை வென்றெடுக்க முயற்சிக்கும் அதேவேளை, உலக அரங்கில் ஒடுக்கும் - ஒடுக்கப்படும் தேசங்கள் என்ற பேதங்களற்று, அனைத்துத் தேசங்களும் ஒரே நிறையுடையனவாக வருவதற்கு கடந்தகால அனுபவங்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான அம்சமாக அமையும் வகையில், நாவலர் குறித்த தெளிவான கணிப்பைப் பெற்று, அதன் வாயிலாக எதிர்கால மார்க்கத்தை வகுக்க முயல்வோம். அதற்கமைவாக 'புதிய நாவலர்கள்: பிரதிகளும் உயிர்ப்பான அமைப்புகளும்', 'தேசங்கள் இடையே சமத்துவம் நாடும் புதிய உலக ஒழுங்கு' எனும் இரு இயல்கள், இறுதியான இந்த நான்காம் பகுதியில் இடம்பெறும். பதினைந்தாவது இயலாக வரவுள்ள 'முடிவுரை'யுடன் இந்தத் தேடல் இங்கு நிறைவுபெறும்.

# சங்கரி சந்திரனின் ‘சூரியக்கடவுளின் பாடல்’ (Song of the Sun God)

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக ‘இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்’ அமைகின்றது.


**இளங்கோ**

யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, ‘டிசே தமிழன்’ என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.




இலக்கியம் கடந்த காலத்தை சாம்பல் புழுதிகளிலிருந்து வெளியே எடுத்துவரும் வல்லமை உடையது. ஆகவேதான் அதிகார வர்க்கம், எழுதுபவர்களை எப்போதும் அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஓர் இனத்தின் வரலாற்றை அழிக்க வேண்டுமென்றால், அவர்களை அடையாளப்படுத்தும் ஆவணங்களை அழிக்கவேண்டுமென, அன்றைய பேரரசுகளிலிருந்து இன்றைய நவீன அரசுகள் வரை முயல்கின்றன. காலனித்துவத்திலிருந்து விடுபட்ட இலங்கையில், தமிழர்கள் தாம் ஒடுக்கப்படுவதற்கு எதிராகச் செயற்படத் தொடங்கியதை சிங்கள அதிகார வர்க்கம் நன்கு விளங்கிக்கொண்டதால்தான், அரிய நூல்களையும், ஓலைச்சுவடிகளையும், ஆவணங்களையும் கொண்டிருந்த யாழ் நூலகத்தை எரித்தது. ஆனால் பௌதீகமான நூல்களைத்தான் அழிக்க முடியும், இனமொன்றின் வரலாற்றை அவ்வளவு எளிதில் அழிக்க முடியாது என்பதே உண்மை. அதற்கு ஆதாரமாகத்தான் இன்றைக்கும் ஈழப்போராட்ட வரலாற்றை நினைவுபடுத்தும் நிறைய நூல்கள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறு நமக்குப் பரிச்சயமான கதைகளைச் சொல்கின்ற ஓர் ஆவணமாக சங்கரி சந்திரனின் ‘சூரியக் கடவுளின் பாடல்’ (Song of the Sun God) எனும் நாவலைச் சொல்லலாம். சங்கரி, 70களின் மத்தியில் ஈழத்தமிழ்ப் பெற்றோருக்கு இங்கிலாந்தில் பிறந்தவர். நாவல், 1930களில், இலங்கையின் தெல்லிப்பளையிலிருந்தும் அளவெட்டியிலிருந்தும் தொடங்குகின்றது. கொழும்பில் பிரபலமான ஒரு வைத்தியரான ரஞ்சன், நளாவைத் திருமணம் செய்கின்றார். ரஞ்சன், நளா தம்பதிக்கு பிரியா, நந்தன் என்கின்ற இருபிள்ளைகள் பிறக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில் (1956) நடைபெறும் இனக்கலவரத்தில், கல்லோயா எனும் இடத்தில் நளாவின் உடன்பிறவாச் சகோதரனான மோகன் கொல்லப்படுகின்றார். அவரின் மனைவியான வாணி சிங்களக்காடையர்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றார். இந்நிகழ்வுகளின் சாட்சியமாக அவர்களின் எட்டுவயது மகள் தாரா இருக்கின்றார்.

மோகன் - வாணி தம்பதியினரின் பிள்ளையான தாரா, இக்கொடும் நிகழ்வின்பின், நளாவின் பிள்ளைகளில் ஒருவராக வளர்த்தெடுக்கப்படுகின்றார். இந்த மூன்று பிள்ளைகளும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்வதை நாவல் சொல்கின்றபோது, அவர்களோடு கூடவே நாட்டின் இனப்பிரச்சினை சிக்கலாவதையும் நாம் அவதானிக்கின்றோம். தமிழர்களின் தொடக்ககால அமைதிப் போராட்டங்கள் வன்முறையின் மூலம் குழப்பப்பட்டதால், தந்தை செல்வநாயகத்தின் கட்சியினர் எப்படி தனித் தமிழீழப் பிரகடனம் எனும் முடிவிற்கு வந்தார்கள் என்பதையும் இந்நாவல் கவனப்படுத்துகின்றது.

நெருக்கமான சகோதரிகளைப் போல வளரும் பிரியாவும், தாராவும் ஒருபொழுது பிரிகின்ற சந்தர்ப்பம் வருகின்றது. வைத்தியரான தாரா இலங்கையில் தங்கிவிட, பிரியா சிவாவைத் திருமணம் செய்து இங்கிலாந்துக்குப் போகின்றார். தாரா யாழ்ப்பாண வைத்தியசாலையில் வேலை செய்கின்ற 80களின் தொடக்கத்தில், ‘இயக்கப் பெடியங்களுக்கு’ வைத்திய உதவிகள் செய்கின்றார் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குள்ளாகிறார். பாலியல் வல்லுறவுக்கும் ஆளாகின்றார்.

அதன் நிமித்தம் தாராவுக்குப் பிறக்கின்ற குழந்தையே ஸ்மிருதி. ஆனால் அந்தக் குழந்தை தன்னோடு (இலங்கையில்) வளர்ந்தால், தனக்கும் தன் தாய்க்கும் நிகழ்ந்த பாலியல் வன்முறையே தன் குழந்தைக்கும் நிகழக்கூடுமென்று அஞ்சி, ஸ்மிருதி பிறந்தவுடனேயே அவரைப் பிரியாவிடம் வளர்க்கக் கொடுக்கின்றார் தாரா. அவர் தனது சொந்தப் பிள்ளையைக் கையளித்துவிட்டு, போராளிகளின் ஆயுதப்போராட்டத்திற்கு உதவி செய்கின்ற ஒரு வைத்தியராக தன்னை மாற்றிக் கொள்கின்றார்.

இந்த நாவலானது 1930களில் தொடங்கி, 2010வரை நீள்கின்ற, மூன்று தலைமுறைகளின் கதைகளைச் சொல்கின்ற ஒரு புதினமாகும். ஒருவகையில் குடும்பங்களின் கதைகளினூடாக இந்தக் காலகட்டத்தின் ஈழத்தின் நிலைமாறும் அரசியல்/ ஆயுத வரலாறும் சமாந்தரமாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கைப் பிரதமரினதும், ஜனாதிபதியினதும் வைத்தியராக இருக்கும் ரஞ்சனுக்கு இலங்கையில் இருந்து வெளியேறும் கனவு ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் எண்பதுகளில் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும், 83 ஜூலைக் கலவரமும் அவரை இலங்கைச் சூழலைவிட்டு வெளிநாட்டுக்குப்போக உந்தித்தள்ளுகின்றது. ரஞ்சனும், நளாவும் 83 இனப்படுகொலையில் இருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்புகின்றனர்.

காடையர் கூட்டம் நளாவை நெருப்பு மூட்டிக் கொல்ல முயற்சிக்கின்றது. அந்தக் கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர், ரஞ்சன் ஜனாதிபதியின் வைத்தியர் என்று கண்டுபிடிக்கிறார். அதனால் ரஞ்சனும் நளாவும் உயிர் தப்புகின்றனர்.

ரஞ்சன், நளா, அவர்களின் பிள்ளைகள் என எல்லோரும் வெளிநாட்டுக்கு அகதியாக அடைக்கலம் கேட்டுச் செல்கின்றபோது இலங்கையைவிட்டு வெளியேற தாரா மட்டும் மறுத்து விடுகின்றார். எக்காரணம் கொண்டும் இலங்கையைவிட்டு வெளியேற விரும்பாத ஒருவராக அவர் இருக்கின்றார். அதேவேளை பிரியா, தாராவை வெளிநாட்டுக்கு வந்துவிடும்படியும், அவரின் குழந்தையான ஸ்மிருதியை தன்னோடு சேர்ந்து வளர்க்கலாமென்றும் சொல்கின்றபோது, தாரா அந்த அழைப்பை உறுதியாக மறுத்துவிடுகின்றார். ஸ்மிருதி, உண்மையான தாய் யாரென்று அறியாது பிரியாவின் குழந்தையாக வளர்கின்றார். பின்னர் பெரியவளாகித் திருமணம் செய்கின்றார். குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றார். அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கிலாந்துக்குப் புலம்பெயர்ந்து, வாழவும் செய்கின்றார்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப்போராட்டம் முடிவடையும்போது, தாரா அங்கே கடமையாற்றும் ஒரு வைத்தியராக இருக்கின்றார். அவர் இறுதியுத்தத்தில் அதிர்ஷ்டவசமாகத் தப்பித்து, இலங்கை இராணுவமும், விடுதலைப்புலிகளும் யுத்தத்தின்போது செய்த மனிதவுரிமை மீறல்கள் குறித்துச் சாட்சியமளிக்கின்றார்.

ஒருகட்டத்தில் ஸ்மிருதிக்கு உண்மையைச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வருகின்றது. இறுதியில் தாராவின் மகளான ஸ்மிருதி, தான் யாருடைய குழந்தை என்று அறியும்போது அதை அவர் எவ்வாறு எடுத்துக்கொள்கின்றார் என்பதையும், அதன்பிறகு அவருக்கும், அவரை வளர்த்த 'தாயான' பிரியாவிற்குமான உறவு என்னமாதிரி ஆகின்றது என்பதையும், வாசிக்கும் போது எம்மைப் பாதிக்கச் செய்யும் அளவிற்கு மிக ஆழமாக எழுதிச் செல்கின்றார், சங்கரி.

2000களின் தொடக்கத்தில் எழுத்தாளர் எஸ்.




Image Source - www.goodreads.com

பொன்னுத்துரை அதிரடியாக 'இனி தமிழ் இலக்கியத்தை புலம்பெயர்ந்தோரே தலைமை தாங்குவார்கள்' என்று அறைகூவல் செய்தார். அதன் நிமித்தம் 'தமிழ் ஊழியமே என் சுவிஷேசமென' அவர் அவுஸ்திரேலியாவில் இருந்து ஐரோப்பா, கனடா எனப் பயணங்களைச் செய்து, புலம்பெயர்ந்து எழுதுபவர்களை அவரின் 'தமிழ்த்துவத்தின்' கீழ் ஒருங்கிணைக்கவும் முயன்றார். ஆயினும் அன்றிலிருந்து இன்றுவரை, அதற்கான சில விடிவெள்ளிகள் புலம்பெயர்ந்த தேசத்தில் தோன்றியிருக்கின்றதே தவிர, அவை தொடர்ச்சியாகவும், ஆழமாகவும் வேரூன்றவில்லை. ஒருவகையில் அது அவரது உதிர்ந்துபோன கனவெனச் சொல்லலாம். ஆனால் அதிர்ஷ்டவசமாக, புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் அடுத்ததலைமுறை அவரவர் வாழும் நாடுகளில் காத்திரமான எழுத்தாளர்களாக முகிழ்த்துவரத் தொடங்கியிருக்கின்றது. அவர்கள் தமிழில் எழுதாவிட்டாலும், அவர்களில்

பெரும்பாலானோரின் கதைக்களம் ஈழத்தைப் பின்புலமாக வைத்தே எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அனுக் அருட்பிரகாசம், வி.வி. (வாசுகி) கணேசானந்தன், ஷாரோன் பாலா, எஸ்ஜே சித்து, சங்கரி சந்திரன் என்று இதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானோருக்கு தமிழே வாசிக்கத் தெரியாது. வாசுகி, ஷாரோன், சங்கரி, சித்து போன்றோர் எழுபது/ எண்பதுகளில் புலம்பெயர்ந்த தேசங்களில் பிறந்தவர்கள். அவர்களுக்கு, தமிழில் எழுதப்பட்டவற்றையும்/ எழுதப்படுபவைகளையும் சரியாக வாசிக்கக்கூடத் தெரியாது. ஆனால் அவ்வளவு தத்ரூபமாக, யதார்த்தத்திலிருந்து விலகாமல் ஈழப்போராட்ட வரலாறு குறித்து எழுதுகின்றனர். அந்தளவுக்கு அவர்கள் தமிழ் வாழ்வு குறித்து தேடித்தேடி வாசிக்கின்றனர். தாங்கள் எழுதும் நாவல்களுக்காக பல்வேறு ஈழத்தமிழர்களைச் சந்தித்துப் பேசி தகவல்களைச் சேகரிக்கின்றனர்.

தனது உறவுகளை வெவ்வேறு நாடுகளில் சந்திக்கும்போது எழுதிய குறிப்புகளை வைத்திருந்தது இந்நாவலை எழுதுவதற்கு, மிகவும் உதவியது என சங்கரி சொல்கின்றார். அத்துடன் அவரின் அம்மம்மாவிடமிருந்து நிறையத் தகவல்களைப் பெற்றும் இருக்கின்றார். இதனை அவர் நாவலாக்க பத்து வருடங்களுக்கு மேலாகி இருக்கின்றது. இப்போது சங்கரி ஒரு கவனம் பெற்ற எழுத்தாளர். இந்நாவலுக்குப் பிறகு வெளியான 'கறுவாத்தோட்டத்தில் தேநீர் நேரம்' (*Chai Time at Cinnamon Garden*) என்ற நாவலுக்காக அவுஸ்திரேலியாவின் மதிப்பு வாய்ந்த '*Miles Franklin Award*' விருதையும், பணப்பரிசாக 60,000 அவுஸ்திரேலிய டொலர்களையும் பெற்றிருக்கின்றார்.

ஈழம் பற்றி ஷாரோன் பாலா, சங்கரி சந்திரன் போன்ற இலங்கையில் பிறக்காதவர்கள் எழுதும் புதினங்கள் உண்மைக்கு மிக நெருக்கமாக இருக்கின்றன. அவர்கள் ஈழத்தில் நடந்த முக்கிய சம்பவங்களை எவ்வித தயக்கமோ, சார்போ இல்லாது, உள்ளதை உள்ளபடி எழுதுகின்றனர்.



**சங்கரி சந்திரன்**
**Image Source - www.amazon.com.au**

தமிழர்களின் திசைமாறிய மொழிக்கான/ நிலத்துக்கான போராட்டத்தை எவ்வளவிற்கு வெளிப்படையாகச் சொல்கின்றார்களோ, அந்தளவிற்கு ஈழத்தமிழர்கள் ஏன் போராட வேண்டி வந்தது என்பதையும் நேர்மையாக எழுதுகின்றனர்.

இன்றைக்கு தமிழ்ச்சூழலில், பிற்காலத்தைய ஆயுதப்போராட்டம் திசைமாறிப்போனதை வைத்து, தமிழர்கள் போராடப்புறப்பட்ட ஆரம்பப் புள்ளிகளே பிழையானது என்று நிரூபிக்க பலர் கடுமையாக முயன்று கொண்டிருக்கின்றனர். 50களில் அகிம்சைப் போராட்டமாக வெளிப்பட்ட தமிழரின் குரல்களை, சிங்களப் பேரினவாதம் எப்படி வன்முறையால் நசுக்கியது என்பதை சங்கரி, ஷாரோன் போன்றோர் மிகச்சரியாகவே முன்வைக்கின்றனர்.

தமிழரசுக்கட்சியினர் காலி முகத்திடலில் தனிச் சிங்களமொழிச் சட்டத்துக்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்தபோது, சிங்கள அரசியல்வாதிகள் உள்ளிட்ட காடையர்களால் அது வன்முறைகொண்டு அடக்கப்பட்டது. இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு மட்டக்களப்பு/ அம்பாறை போன்ற கிழக்குத்

தமிழ் மக்களும் ஆதரவளித்திருந்தனர். அந்த ஆதரவைக் காணச்சகிக்காமலேயே, 1956இல் கல்லோயாக் குடியேற்றப் பகுதியில் தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரும் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள். இந்த நிகழ்வு அன்று நிறுத்தப்பட்டிருந்தாலோ அல்லது அதற்கான பதில் நடவடிக்கை அன்றைய அரசால் எடுக்கப்பட்டிருந்தாலோ, 1958இல் அது பெரும் இனக்கலவரமாக வெடித்திருக்க வாய்ப்பிருந்திருக்காது. அதன் பிறகும் எத்தனையோ படுகொலைகள் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டு, 1983இல் அது பெரும் வெறுப்பு அரசியலாக வெடித்து, 3000இற்கும் மேற்பட்ட தமிழர்கள் திட்டமிடப்பட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது வரலாறு நமக்குச் சொல்லும் கசப்பான உண்மையாகும். இதே சிங்களப் பெரும்பான்மை அரசு, இலங்கை சுதந்திரமடைய முன்னர், தமிழர்களுக்கு நிகழ்த்தியது போல, முஸ்லிம்கள் மீதும் கலவரங்களை நிகழ்த்தியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பேரினவாதிகள் தமது அரசியலைச் செய்வதற்காக, ஏதேனும் ஒரு சிறுபான்மை இனத்தின் மீது வெறுப்பை உமிழ்வது அவசியமான தேவையாக இருக்கின்றது போலும்.

எங்குமே அவ்வளவு எளிதில் கிடைக்கப்பெறாத அரிய நூல்கள் இருந்த யாழ் நூலகத்தை இவர்கள் தீவைத்து எரித்தனர். பின்னர் ஆயுதப்போராட்டமாக மாறிய தமிழர் போராட்டத்தையும் மிக மோசமான முறையில் தோற்கடித்தார்கள். ஆனாலும் உண்மைகள் ஒருபோதும் புதைவதில்லை என்பதற்கிணங்க, தாம் செய்த தவறுகளோடு சேர்த்து, சிங்களப் பேரினவாதத்தின் கோரமுகங்களையும் வெளிப்படுத்தும் புதினங்களை தமிழர்கள் எழுதிக்கொண்டிருக்கின்றனர். அதை தமிழ் நிலத்தில் பிறக்காத/ வாழாத புதிய தலைமுறையும் எழுத்தில் கொண்டுவருவதுதான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. தமிழில் எழுதாவிட்டாலும், தமிழ் தமது அடையாளம் என்கின்ற புரிதலோடு இருக்கின்ற இப்புதிய தலைமுறைகள், புலம்பெயர் தேசத்தில் இருந்தபடி, சிங்களப் பேரினவாதிகளின் மனச்சாட்சியை நிலைகுலையச் செய்கின்றன.

இந்த நாவலில் இடம்பெறும் அவுஸ்திரேலியாவின் மூன்றாம் தலைமுறை, தமது உண்மையான 'ஊர்' எதுவாக இருக்கும் என்று தங்களுக்குள் தேடியபடி இருப்பார்கள். ஏதோ ஓரிடத்தில் அவர்கள், நாம் 'இலங்கை அவுஸ்திரேலியர்கள்' என்று அழைக்கப்படுவதை எதிர்த்து, 'அவுஸ்திரேலிய தமிழர்கள்' என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றோம் எனச் சொல்வார்கள். கனடாவில்கூட இங்கு பிறந்த தலைமுறை தம்மை ஈழத்தமிழர்களாகவும், தமிழ்க் கனேடியர்களாகவுமே அடையாளப்படுத்த விரும்புகின்றார்கள். ஒருவகையில் தம்மை/ தமது பெற்றோரை சக குடிமக்களாக மதிக்காத நாடான இலங்கையை தமது அடையாளமாக முன்வைக்க இந்தத் தலைமுறையினர் விரும்புவதில்லை என்றுகூட இதனை எடுத்துக் கொள்ளலாம்.

'சூரியக் கடவுளின் பாடல்' என்கின்ற இந்த நாவலில் இராமாயணம்/ மகாபாரதம் போன்ற இதிகாசங்களின் கதைகள் பேசப்படுகின்றன. பாஞ்சாலியை அர்ஜுனன் திருமணம் செய்துவிட்டு வரும்போது, அர்ஜுனன் தனது தாய் குந்திதேவியிடம் 'நான் ஓர் அரிய பொருளைக் கொண்டுவந்திருக்கின்றேன்' எனச் சொல்லுகின்றான். குந்திதேவி 'நீ அதை ஐவரோடும் பகிர்ந்துகொள்ள வேண்டும்' எனச் சொல்லுகின்றார். இதனால் பாஞ்சாலி பஞ்சபாண்டவர் ஐவருக்கும் மனைவியாகின்றார். அந்தக் கதை இந்த நாவலில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நினைவூட்டப்படுகின்றது. இந்த நாவலில் வரும் நளா, பிரியா, தாரா என பெரும்பாலான பாத்திரங்கள் தம் வாழ்வை பிறருடன் பெருந்தன்மையுடன் பகிர்ந்துகொள்கின்றன.

பிறருக்காக வாழ விழைகின்றவர்களாகவே இந்தப் பெண் பாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. புலம்பெயர்தேசத்தில் வாழும் பிரியாவை விட, ஈழத்தில் வாழும் தாராவை, ஸ்மிருதியை எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவராகவும்/ முற்போக்கானவராகவும் படைத்திருப்பது குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று.

மூன்று தலைமுறை மனிதர்களின் வாழ்வை மட்டுமன்றி, அவர்களூடாக ஈழத்தின் 80 ஆண்டுகால தமிழர்களின் வரலாற்றையும் இந்நாவல் எடுத்துரைக்கின்றது. அலுப்பின்றி வாசிக்கக்கூடிய சுவாரசியமான மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நாவலைச் சமகாலத்தில் வெளிவந்த முக்கிய புதினங்களில் ஒன்றெனச் சொல்லலாம்.

# 2000 ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்கள் வாழ்ந்த ஆண்டியாகல மலைக் கல்வெட்டு

‘இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்’ எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.


## என். கே. எஸ். திருச்செல்வம்



கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் ‘தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்’, ‘புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்’, ‘இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்’, ‘யார் இந்த இராவணன்’, ‘பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை’, ‘பண்டைய தமிழ் நூல்களில் சிவன்’, ‘கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்’, ‘தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?’ போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஆண்டியாகல எனும் பெயரில் இலங்கையில் பல இடங்கள் அமைந்துள்ளன. குருநாகல் நகரின் மேற்குப் பக்கத்திலும், தம்புள்ளை நகரத்தின் வடமேற்குப் பக்கத்திலும், பியகம நகரின் வடக்குப் பக்கத்திலும், அனுராதபுரத்தின் வடமேற்குப் பக்கத்திலும் இப்பெயரில் ஊர்கள் காணப்படுகின்றன. இவற்றில் இங்கே குறிப்பிட்டுள்ள ஆண்டியாகல என்னுமிடம் அனுராதபுரம் நகரில் இருந்து வடமேற்கு நோக்கி அரிப்புக்குச் செல்லும் வீதியில் 30 ஆவது கி.மீ கல்லில் இருந்து வடக்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

ஆண்டியாகல என்பது பண்டைய காலத்தில் சித்தர்கள் அல்லது முனிவர்கள் வாழ்ந்த மலைகளாகும். பண்டைய காலத்தில், குறிப்பாக 2000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் பல இடங்களிலும் இவர்கள் வாசம் செய்துவந்த மலைகளும், காடுகளும், இடங்களும் இருந்தன. இவர்களை பொதுவாக ஆண்டி என்றே சிங்கள மக்கள் அழைப்பதுண்டு. இலங்கையில் ஆண்டிகல, ஆண்டியாகந்த, ஆண்டிகம, ஆண்டி அம்பலம எனும் இடங்கள் இன்றும் காணப்படுகின்றமை இதற்கு தக்கசான்றாகும்.

ஆண்டியாகலவில் காணப்படும் இயற்கையான கற்குகைகளில், இரண்டு முற்கால பிராமிக் கல்வெட்டுகளும், ஒரு பிற்கால பிராமிக் கல்வெட்டுமாக மொத்தம் 3 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் பிற்கால பிராமிக் கல்வெட்டு நாகர் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

“சித்தம், உபசக மகா நாகலஹ லேனே பிக்கு சகஹடய நியதே”

இதன் பொருள், *Hail, The cave of the lay devotee Maha Nakala has been dedicated to the community of Bhikkus* என்பதாகும். இது தமிழில் “வெற்றி, பாமர பக்தனான மகா நாகனின் கற்குகை பிக்கு சமூகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது” எனப் பொருள்படும்.

## பெருமகன் நாகன் பற்றிக் குறிப்பிடும் மானாகந்த மலைக் கல்வெட்டு

அனுராதபுரம் நகரில் இருந்து தென்கிழக்கு நோக்கி தம்புள்ளைக்குச் செல்லும் வீதியில் 34 கி.மீ தூரத்தில் மரதங்கடவல என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து தெற்குப்பக்கமாக ஒரு கி.மீ சென்றதும் தினிபிட்டிகம வெவ எனும் குளத்திற்குச் செல்லும் சந்தி காணப்படுகிறது. இச்சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதியில், குளத்தைக் கடந்து சுமார் 3 கி. மீ சென்றதும் ஒரு சிறிய குளமும், குளத்தின் அருகில் மலைகள் நிறைந்த அடர்ந்த காடும் காணப்படுகிறது. இம்மலைப் பகுதியே மானாகந்த என அழைக்கப்படுகிறது.

இங்கு சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் வாழ்ந்து வந்துள்ளமை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் நிரூபணமாகிறது. இக்காட்டுப் பகுதியில் பல இடங்களில் இயற்கையான மலைக் குகைகளும், புராதன கட்டட இடிபாடுகளும் காணப்படுகின்றன. இங்குள்ள மலைக் குகைகள் சிலவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டுள்ளன. இக் குகைகளில் மூன்று பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் இரண்டு குடும்பத்தலைவன் வம்சன் பற்றிக் கூறுகின்றன. ஒரு கல்வெட்டு நாகர் பற்றியதாகும். நாகர் பற்றிய கல்வெட்டில் மொத்தமாக 9 எழுத்துகள் மட்டுமே காணப்படுகின்றன. மேலும் இக்கல்வெட்டு



ஆண்டியாகல கல்வெட்டின் பிரதி

வழமைக்கு மாறாக வலமிருந்து இடமாக எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதியுள்ளமைக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அக்கல்வெட்டின் விவரங்கள் பின்வருமாறு:

“பருமக நாகக லேனே”

இது “பெருமகன் நாகனின் கற்குகை” எனப் பொருள்படும். இக்கல்வெட்டில் காணப்படும் வாசகங்கள் மூலம் நாகன் என்பவன் இப்பகுதியின் தலைவனாக இருந்து, இப்பகுதியைப் பரிபாலித்து வந்துள்ளான் எனத் தெரிகிறது. கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட படம் கிடைக்கவில்லை.

### சுவாமி நாகன் மற்றும் பகுல நாகன் பற்றிய மஹா அளகமுவ கல்வெட்டுகள்

தம்புள்ளையில் இருந்து வடமேற்கு நோக்கி அனுராதபுரத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள



மானாகந்த மலையும், குளமும்



மானாகந்த மலை



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகைகளில் ஒன்று



பெருமகன் நாகன் பற்றிய கல்வெட்டு



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கற்குகை



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கற்குகை

கைலபதான என்னுமிடத்தை அடுத்து மஹா அளகமுவ சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியின் வடகிழக்குப் பக்கம் மஹா அளகமுவ குளம் காணப்படுகிறது. இக்குளத்தின் வடக்குப் பக்கம் மஹா அளகமுவ விகாரையும், அடர்ந்த காடும், மலைப் பாறைகளும், குன்றுகளும் அமைந்துள்ளன. இங்கு ஏராளமான இயற்கையான கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்ட குகைகளில் மொத்தமாக 30 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 28 முற்கால பிராமிக் கல்வெட்டுகளும், இரண்டு பிற்கால பிராமிக் கல்வெட்டுகளும் உள்ளன.



மஹா அளகமுவ கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகையின் தோற்றம்



பகுல நாகன் பற்றிய கல்வெட்டின் பிரதி




கிராமத் தலைவன் நாகன் பற்றிய கல்வெட்டின் பிரதி

இவற்றில் 2 கல்வெட்டுகளில் நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மூன்று சொற்களைக் கொண்ட சிறிய கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் 7 எழுத்துகள் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் விவரங்கள் பின்வருமாறு:

“பத நாகஹ லேனே”

இதன் பொருள், “The cave of Lord Naga” என்பதாகும். தமிழில் இது “சுவாமி நாகனின் குகை” எனப் பொருள்படும். இக்கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி கிடைக்கவில்லை.

அடுத்த கல்வெட்டு பிற்கால பிராமிக் கல்வெட்டாகும். இதன் விவரங்கள் பின்வருமாறு:

“சித்தம் பகுல நாகஹ லேனே சக தின ஹி”

இதன் பொருள், பகுல நாகனின் குகை சங்கத்தார்க்கு வழங்கப்பட்டது என்பதாகும். ஆங்கிலத்தில் இது, *The cave of Bakula Naga is given to the Sangha* எனப் பொருள்படும்.

## கிராமத் தலைவன் நாகன் பற்றிய ரஸ்னகாவ கல்வெட்டு

மதவாச்சியில் இருந்து ஹொரவபொத்தானைக்குச் செல்லும் வீதியில் 26 கி.மீ தூரத்தில் உள்ள வலஹாவித்த வெவ சந்தியில் இருந்து வடகிழக்கு நோக்கி நிக்காவெவைக்கு செல்லும் வீதியில் 3 கி.மீ தூரத்தில் உள்ள ரஸ்னக வெவ குளத்தை அடுத்து உள்ள மலைப்பாறைகள் நிறைந்த சிறிய காட்டுப்பகுதியில் ரத்னகிரி ராஜமஹா விகாரை அமைந்துள்ளது. இவ்விகாரையைச் சுற்றிக் காணப்படும் காட்டில் சுமார் 10 இயற்கையான கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்ட குகைகளில் 5 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பொ.ஆ.மு 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முற்கால பிராமிக் கல்வெட்டுகளாகும்.

இவற்றில் ஒரு கல்வெட்டில் நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் விவரங்கள் பின்வருமாறு:

“பத மஹாதிசஹ க கமிக நாகச சடயச”

இதன் பொருள் “*Of lord Mahatissa and his partner Naga, the village councilor*” என்பதாகும். தமிழில் இது “பரத அல்லது சுவாமி மஹாதீசனினதும், அவனது பங்குதாரரான கிராமத் தலைவன் நாகனினதும்.. .. [குகை]” எனப் பொருள்படுகிறது.

# நாக குலத்தவர் பற்றிக் கூறும் ஹிபவுவ கல்வெட்டு



என். கே. எஸ். திருச்செல்வம்

குருநாகல் நகரில் இருந்து தம்புள்ளைக்குச் செல்லும் வீதியில் இப்பாகமுவ சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் இருந்து வடக்குப் பக்கமாக புல்னாவைக்குச் செல்லும் வீதியில் சுமார் 10 கி.மீ சென்றதும் பாதையின் இடது பக்கம் அதாவது மேற்குப் பக்கத்தில் ஒரு பெரிய மலைத்தொடரைக் காணலாம். இதுவே தொழுகந்த எனும் மலையாகும். இம்மலையின் கிழக்குப்பக்க அடிவாரத்தில் ஹிபவுவ எனும் காட்டுப்பகுதி அமைந்துள்ளது.

மலைப்பறைகள் நிறைந்த இக்காட்டுப்பகுதி நாகலேன என அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஓர் இயற்கையான மலைக்குகையில் கற்புருவம் வெட்டப்பட்டு, பிராமி எழுத்துகளில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

“உதியஹ அயக பருமக நாக குலஹ லேனே சகச”

இதன் பொருள் “*The cave of the family of the chief Naga, of prince Uthi, [is given] to the Sangha*” என்பதாகும். இது “இளவரசன் உதியவின், பெருமகன் நாகவின் குலத்தவரின் குகை சங்கத்தார்க்கு வழங்கப்பட்டது” என்பதாகும்.

இம்மலைக்குகை நாக குலத்தவர்களுக்குச் சொந்தமானது என்பது இக்கல்வெட்டின் மூலம் தெரியவரும் அரிய செய்தியாகும். இக்குகையைப் பயன்படுத்தி வந்த நாக குலத்தவர்கள் பின்பு இக்குகையை சங்கத்தார்க்கு தானமாக வழங்கியுள்ளனர்.

### நாகனின் குகை பற்றிக் குறிப்பிடும் கும்புறுலேன கல்வெட்டு

குருநாகல் நகரில் இருந்து வடகிழக்குப் பக்கமாக தொடங்கஸ் லந்தைக்குச் செல்லும் வீதியில் 17 கி.மீ தூரத்தில் கும்புறுலேன ரஜமகா விகாரை சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் இருந்து கிழக்குப்பக்கமாகச் செல்லும் வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் கோயிலைக் கடந்து, சுமார் 100 மீற்றர் தூரத்தில் கும்புறுலேன ரஜமகா விகாரை காணப்படுகிறது. இங்கிருந்து சுமார் ஒரு கி.மீ தூரத்தில் ரிதி விகாரை மலை அமைந்துள்ளது.

இவ்விகாரையின் அருகில் உள்ள மலைப் பாறைகளில் இயற்கையாக அமைந்துள்ள கற்குகைகள் சிலவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டுள்ளன. இக் கற்புருவங்களின் கீழே பிராமி எழுத்துகளில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கற்குகைகளில் மொத்தமாக 8 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டில் நாகர் பற்றி எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

“நாகஹ .. .. .. லேனே [உபச]க உதிய லேனே”

இதன் பொருள், *Of Naga, the cave .. .. .. the cave of the [lay worshipper] Uttiya* என்பதாகும். தமிழில் இது, “நாகவின் .. .. .. குகை பாமர பக்தன் உத்தியவின் குகை” எனப் பொருள்படும்.

### நாகதத்தன் பற்றிக் குறிப்பிடும் நுவரகந்த கல்வெட்டு

குருநாகல் மாவட்டத்தில் உள்ள வாரியப்பொல நகரிலிருந்து கிழக்கு நோக்கி ஹிரிபிடிய என்னுமிடத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள அமுணுகம எனும் ஊரின் வடக்கில் 5 கி.மீ தூரத்தில் நுவரகந்த மலைக் குகைகள் காணப்படுகின்றன.

இங்குள்ள கற்குகைகளில் மொத்தமாக 20 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டு நாகர் பற்றிக் கூறுகிறது. அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு:

“பருமக உதயஹ நாகததஹ லேனே சகச”

இதன் பொருள், *The cave of the chief Udaya [and] of Nagadatta [is given] to the Sangha*. தமிழில் இது “பெருமகன் உதயவினதும், நாக தத்தவினதும் குகை சங்கத்தார்க்கு வழங்கப்பட்டது” எனப் பொருள்படுகிறது. நாகதத்த எனும் சொல்லின் அர்த்தம் ‘நாகத்தால் அளிக்கப்பட்டவன்’ என்பதாகும்.

### பெருமகன் நாகன் பற்றிக் கூறும் பட்டஹமுல்லே விகாரைக் கல்வெட்டு

குருநாகல் மாவட்டத்தில் உள்ள வாரியப்பொல நகரில் இருந்து கிழக்கு நோக்கி ஹிரிபிடிய என்னுமிடத்துக்குச் செல்லும் வழியில் பிரதான வீதியில் இருந்து சற்றுத் தூரத்தில் காணப்படும் காடும், மலைப்பாறைகளும் நிறைந்த இடத்தில் பட்டஹமுல்லே விகாரை அமைந்துள்ளது.

இங்கு காணப்படும் இயற்கையான கற்குகைகளில் மொத்தமாக 4 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரு கல்வெட்டுகளில் நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகர் பற்றிய முதலாவது கல்வெட்டில் இரண்டு வரிகளில் பின்வருமாறு

எழுதப்பட்டுள்ளது.

“பருமக நாக புத பருமக அசலிய லேனே

அகட்ட அனகட்ட சட்டு திச சகச”

இதன் பொருள் “*The cave of the chief Asali, son of the chief Naga, [is given] to the Sangha of the four quarters, present and absent*” என்பதாகும். தமிழில் இது “பெருமகன் நாகவின் புதல்வனான பெருமகன் அசலியின் குகை நாலா திசைகளிலும் இருந்து வரும் சங்கத்தாருக்கு அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் வழங்கப்பட்டுள்ளது” எனப் பொருள்படும்.

நாகர் பற்றிய இரண்டாவது கல்வெட்டின் நடுப்பகுதியில் உள்ள எழுத்துகள் சில சிதைந்துள்ளன. அக்கல்வெட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

“பத நாக ரஜ .. .. .. .. ஹ லேனே”

இதன் பொருள் “*The cave of Lord Naga, King .. .. ..*” என்பதாகும். இது “சுவாமி நாகவின் குகை, மன்னன் .. ..” எனப் பொருள்படும். இக்கல்வெட்டுகள் இரண்டினதும் படியெடுக்கப்பட்ட படங்கள் கிடைக்கவில்லை.



கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஹிபவுவ நாகலேன கற்குகை




நாக குலத்தவர் பற்றிக் கூறும் ஹிபவுவ கல்வெட்டின் பிரதி



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள நாகனின் கற்குகை



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகையின் இன்னுமோர் தோற்றம்



இன்னுமோர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகை

# மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்: ஆலையடிவேம்பின் சமூக, பொருளாதார, கலாசார அடித்தளம்

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.




**வை. ஜெயமுருகன்**

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

அம்பாறை மாவட்டத்தில், குறிப்பாக போரின் இன்னல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், வறுமைநிலை தொடர்ந்தும் கவலைக்குரியதாக உள்ளது. விகிதாசார ரீதியாகப் பார்க்கும்போது, பல பகுதிகள் இன்னும் போர்க்கால நிலையிலிருந்து முன்னேற்றம் அடையவில்லை எனலாம். தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில், வாழ்வாதாரத்தின் மீதான தாக்கம் அதிகமாகியுள்ளது. தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள இந்தப் பகுதிகள் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவை மாவட்டத்தின் ஏழ்மையான பகுதிகளாகவும் காணப்படுகின்றன. பல குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போராடுகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடி, உள்நாட்டுப் போரின் விளைவுகளை மேலும் தீவிரமாக்கி வருகின்றது. இப்பகுதி மக்கள் ஒருவகையில் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளில், தமிழ் இளைஞர்களிடையேயான வறுமை விகிதம் மாவட்டச் சராசரியைவிட 13% அதிகமாக உள்ளது, மேலும் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். கல்விக்கான சவால்கள் அதிகரித்துள்ளதால், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையும் மேலோங்கியுள்ளது. வாழ்வாதாரத்திற்காக தமிழ் மீனவர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். இந்தப் பகுதிகளில், குறைந்த வாழ்க்கைத்தரம் வெளிப்படையாகக் காணப்படுகிறது. பல குடும்பங்கள் தினசரி வருமானத்திற்காகப் போராடுகின்றன. வளங்களுக்கான வாய்ப்பின்மை, மோசமான உட்கட்டமைப்பு, பொருளாதார வாய்ப்புகளின் பற்றாக்குறை ஆகியவை வறுமையைத் தீவிரப்படுத்துகின்றன. குறைந்த கல்வி அடைவு, வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் மேலும் கட்டுப்படுத்துகிறது. பெண்கள் மத்திய கிழக்கிற்குக் குடிபெயர்வது, இளைஞர்கள் அருகிலுள்ள நகரங்களில் தினக்கூலியாக வேலை செய்வது போன்றன கவலைக்குரிய போக்குகளாக மாறியுள்ளன.

விவசாயத்துறையும் கடும் தடைகளை எதிர்கொள்வதால், விவசாயிகளோடு உள்ளூர்ப் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது. இந்தச் சவால்களைச் சமாளிக்க, கிழக்கு மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் உடனடி முயற்சிகள் தேவையாகின்றன. குறிப்பாக, ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சமூகங்களின் பிரச்சினைகளில் மூலோபாய ரீதியாக கவனம் செலுத்தப்பட வேண்டும். கல்வி, உட்கட்டமைப்பு, மற்றும் பொருளாதார மேம்பாட்டை உள்ளடக்கிய ஒரு விரிவான உத்தி இன்றியமையாததாகின்றது. தமிழ்ப் பகுதிகளில் கூட்டுறவுகள் முக்கிய பங்கு வகிக்க முடியும்.

### உள்ளகக் காலனித்துவத்தின் முதல் நிலம்: அம்பாறை மாவட்டம்

அம்பாறை மாவட்டம், ஏப்ரல் 10, 1961 அன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்குப் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு அதிகாரபூர்வ மாவட்டமாக நிறுவப்பட்டது. இதற்கு முன்பு, இந்தப் பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஐரோப்பியக் காலனித்துவச் சக்திகளைப் போன்ற சுதந்திர இலங்கையின் உள்நாட்டுக் காலனித்துவச் சக்திகளின் அணுகுமுறையால் வளமான, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலமான கிழக்கு இலங்கை, பகுக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் இதற்கான திறந்த சாட்சியமாக உள்ளது.

1956 தேர்தலுக்குப் பிறகு, இங்கு அரசு ஆதரவுடன் சிங்களக் குடியேற்ற முயற்சிகள் தீவிரமடைந்து, சிங்கள மக்கள் தொகை கணிசமாக அதிகரித்தது. இதன் விளைவாக, உள்ளூர்த் தமிழ்ச் சமூகங்கள் இடம்பெயர்ந்து தங்கள் சொந்த மண்ணில் அகதிகளாக மாறினர். அம்பாறை மாவட்டத்தின் இன அமைப்பு மாறியது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, 'சிங்களம் மட்டும்' மொழிச்சட்டம் உள்ளிட்ட கொள்கைகளின் மூலம் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை வலுப்படுத்தியது. 1940களில் தொடங்கப்பட்ட கல்ஓயா திட்டம், சிங்களக் குடியேற்றத்துக்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, 1953இல் 31,107 ஆக இருந்த அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சிங்கள மக்கள்தொகை 1981இல் 157,017 ஆக உயர்ந்தது. இந்தக் குடியேற்றங்கள் இன மோதல்களை மேலும் தீவிரப்படுத்தின. இதன் விளைவாக, படுகொலைகளும் நீடித்த இடப்பெயர்வுகளும் இடம்பெற்று, அம்பாறை இன மோதல்களின் களமாக மாறியது. உள்நாட்டுப் போர் முடிவடைந்த நிலையிலும், உள்ளகக் காலனித்துவம் மற்றும் இன உறவுகளின் மரபான சவால்கள் அம்பாறையில் இன்னும் தொடர்கின்றன. தங்கள் இழப்புகளுக்கு முன், பணிந்து ஒடுங்காமல், மக்கள் தங்கள் இருப்பைத்

தக்கவைக்க தொடர்ந்து போராடினர். அமைப்புகளைக் கட்டியமைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தினர். இதன் அடையாளமாக அம்பாறை மாவட்டத்தில், குறிப்பாக ஆலையடிவேம்பு பிரதேசத்தில், ‘மகாசக்தி கூட்டுறவு’ உருவானது. அதன் கதையும் தொடர்ந்த வளர்ச்சியும் முக்கியத்துவமுடையவை. மகாசக்தி கூட்டுறவு, பலருக்குப் பாடமாக அமைகின்றது.



**மகாசக்தி தலைமை அலுவலகம்**

## மகாசக்தி கூட்டுறவு

மகாசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் 1992 அக்டோபர் 10, விஜயதசமி நாளில் தொடங்கப்பட்டு, 1993 பெப்ரவரி 20 அன்று அதிகாரபூர்வமாக கூட்டுறவு அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டது. கடந்த 32 ஆண்டுகளாக பெண்களின் தலைமையில் இயங்கும் ஒரு நிலையான கூட்டுறவாக இது செயற்படுகிறது.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் ஆயுத வன்முறை உச்சத்தில் இருந்தது. ஆலையடிவேம்பு பிரதேசம் காவுகொள்ளப்பட்ட பிரதேசமாக மாற்றப்பட்டது. நீடித்த மோதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள், கணவனை இழந்த இளம் பெண்களை உருவாக்கியது. நெருக்கடிகளின் மத்தியில், பலருக்கு நம்பிக்கையையும், வாழ்க்கையின் சுமைகளைக் குறைக்கும் வலிமையையும் தர உருவாக்கப்பட்ட அமைப்புதான் மகாசக்தி கூட்டுறவு.

கூட்டுறவு அமைப்பின் உருவாக்கத்திற்கு பலர் அர்ப்பணிப்புடன் உழைத்தனர். சமூகஜோதி திரு. எஸ். செந்துரராசா, அமரர் என். மணிவாசகம், அமரர் பி. வாரித்தம்பி, க. சோமசுந்தரம் , அமரர் எம். இலட்சுமணன் மற்றும் அமரர் இ. கனகசபை ஆகியோர் முன்னோடிகளாக இருந்தனர். அப்போது திரு. எஸ். செந்துரராசா யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து அக்கரைப்பற்றில் வசித்து வந்தார்.

பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகள் பல தீர்க்கப்படாமல் இருந்தன. உடனடித் தேவைகளைத் தீர்ப்பதில் பல இடர்கள் இருந்தன. மனிதாபிமான தேவைகளுக்கு அடுத்ததாக, நீண்டகால அமைப்பின் வழியிலான தீர்வு தேவை என்று உணரப்பட்டது. 22 சங்கங்கள் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உருவாக்கப்பட்டன. அவற்றின் பெயர்கள் அனைத்தும் சக்திகளையே குறிக்கின்றன: பராசக்தி, சிவசக்தி, ஓம்சக்தி, ஜெயசக்தி, யுகசக்தி, ஆதிசக்தி, தர்மசக்தி, அருள்சக்தி, ஜனாசக்தி, சிறிசக்தி, நவசக்தி, சர்வசக்தி, வீரசக்தி, சுடர்சக்தி, தேவசக்தி, துருவசக்தி, ஜீவசக்தி, யோகசக்தி, ஆத்மசக்தி, சாந்தசக்தி, கீதாசக்தி மற்றும் உதயசக்தி. இந்த அனைத்துச் சங்கங்களும் ஒன்றிணைந்து மகாசக்தி கூட்டுறவு சிக்கன கடனுதவுச் சங்கமாக உருவாக்கமடைந்தது.

மகாசக்தி என்பது பாதிக்கப்பட்டவர்களின் கூட்டுறவு அமைப்பாக அமைகிறது. எல்லாப் பெண்களும் ஒரு வலையமைப்பில் இணைந்து, நெருக்கடியான காலத்தின் தேவைகளை ஒன்றிணைத்து, அவற்றைத் தீர்க்க ஒன்றாக முன்னேறினார்கள். பலரின் வாழ்வுக்கு அடித்தளமாக இருந்துள்ள மகாசக்தி, சமூக - பொருளாதார மற்றும் கலாசார இணைவிற்கான தன்னிறைவுக் கட்டமைப்பை நோக்கிய ஒரு கூட்டு நிகழ்வாக வளர்ந்தது.

மகாசக்தியின் நிதிப்பலம் அதன் சிறந்த வளர்ச்சியைச் சுட்டுகிறது. நிரந்தர அலுவலகம், கடைத்தொகுதிகள் மற்றும் பயிற்சிநிலையம் ஆகியவற்றைக்கொண்ட வளமான சங்கமாக மகாசக்தி திகழ்கிறது. 17 நிரந்தரக் கூட்டுறவுப் பணியாளர்களின் குடும்பம் மகாசக்தி. பெண்கள் தலைமையிலான கூட்டுறவு முகாமைத்துவச்சபை மூலம் நிர்வகிக்கப்படும் நிர்வாக அமைப்பு, கூட்டுப் பங்காண்மையின் அடிப்படையில் தலைமைதாங்கும் பெண்களின் பொறுப்பில் உள்ளது.

*கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையின் படி (31.12.2023):*

| | 2022 | 2023 |
|---|---|---|
| மொத்த சொத்துகள் | 170,23,265.48 | 154,806,186.09 |
| மொத்த வைப்புகள் | 150,044,599.81 | 136,693,747.87 |
| மீதி இலாபம் | 1,298,725.54 | 1,175,709.64 |

கடந்தகாலப் போர்களின் அழுத்தங்களை எதிர்கொண்டு, COVID19 சவால்களைத் தாண்டி, பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து, பண வீக்கத்தின் உச்சத்திலும் கூட மக்களின் சேமிப்புகளைப் பேணிய மகாசக்தி கூட்டுறவு அமைப்பின் தொடர்ச்சியான இயக்கம் முக்கியமானதாகத் திகழ்கின்றது.

அம்பாறை மாவட்டம் தற்போது மூன்று தனித்தனியான நிலப்பரப்புகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட சமூகங்களைக் கொண்டுள்ளது. இனங்களின் நிலைகளில் பிரிந்தும், பிளவுபட்டும் வாழும் சமூகங்கள் கடந்தகால இனப்பிளவுகளின் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், கூட்டுறவு அமைப்புகள் மக்களை இணைக்கும் சக்தியாகச் செயற்படுகின்றன. கூட்டுறவு அமைப்புகளில் பிளவுகள் இடம்பெறுவதில்லை. ஆனாலும் சமூகத்தின் பிரதிபலிப்புகள் சமூக அமைப்புகளிலும் ஓரளவு வெளிப்படவே செய்கின்றன.

மகாசக்தி, கல்முனை - அம்பாறை சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாஜத்தில் ஒரு நிரந்தர அங்கமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. நிதிப் பலம், கூட்டுறவுச் சட்டவிதிகளுக்கு அமைவாக ஒழுகுதல், வெளிப்படைத்தன்மை மற்றும் முறையான முகாமைத்துவ அணுகுமுறை ஆகியவை மகாசக்தியை தனித்துவமாக உயர்த்துகின்றன.

கலாநிதி அகிலன் கதிர்காமர் அவர்களின் 'இலங்கையின் யாழ்ப்பாணத்தில் போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின் தோல்வி: கடன், சாதி விலக்கு மற்றும் மாற்று வழிகளுக்கான தேடல்' (*The Failure of PostWar Reconstruction in Jaffna, Sri Lanka: Indebtedness, Caste Exclusion and the Search for Alternatives Indebtedness, Caste Exclusion and the Search for Alternatives Ahilan Kadirgamar The Graduate Center, City University of New York*, 2017) என்ற ஆய்வின், ஐந்தாம் அத்தியாயமானது ('கூட்டுறவுகள் மற்றும் மறுகட்டமைப்பின் மாற்றுப் பார்வைகள்') கூட்டுறவு சார்ந்த மிக முக்கியமான விடயங்களைத் தெளிவுபடுத்துகிறது.

"உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூலதன முதலீடு மற்றும் தொழிற்படு மூலதனம் ஆகிய இரண்டும் இணைந்த மூலதனப் பற்றாக்குறையே போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்கொள்ளும் மைய சவால்களில் ஒன்றாக அமைகிறது. வளரக்கூடிய திறன்கொண்ட பல உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனங்கள், போரின்போது தங்கள் சேமிப்புகள் குறைந்து, சொத்துகளை இழந்ததால், பணப்புழக்கச் சிக்கல்களையும் எதிர்கொள்கின்றன. மேலும், வங்கிகள் கடன்களை வழங்குவதில்லை அல்லது அதிக வட்டி விகிதங்களை வசூலிக்கின்றன. இதனால் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை அதிகரிப்பதும், வாடிக்கையாளர்களிடமிருந்து ஆதரவுகளைப் பெறுவதும் கடினமாகி உள்ளது......இத்தகைய சிக்கல்கள் அரசு மற்றும் அதிகாரத்தின் பங்கால் அதிகரிக்கப்படுகின்றன. கூட்டுறவுகள் மாகாண அரசாங்கத்தால் அதிகமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. 1970களில் வரைவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சட்டங்கள் இன்றுவரை தொடர்கின்றன; துணைச்சட்டங்கள் கூட மாற்றப்படவில்லை. மாகாண கூட்டுறவு அமைச்சர் மற்றும் ஆணையர் ஆகியோரால் கூட்டுறவுகள் சவாலுக்கு உள்ளாகின்றன. கூட்டுறவுகள் புதிய முயற்சிகள் எடுப்பதை அவர்கள் தடுக்கிறார்கள்; சுயாட்சியை மறுக்கிறார்கள். அல்லது கூட்டுறவுகளுக்குப் பயனளிக்காத திட்டங்களை வலியுறுத்துகிறார்கள்" (பக். 273).

வடக்கின், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் நிலைதான் கிழக்கிலும் இருந்தது. அம்பாறை மாவட்டத்தில், போரின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவின் தேவையும் அவசியமும் இருந்தபோதும்,

அவற்றிற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாக இருந்தது. இருந்தபோதிலும், மகாசக்தி ஒரு விதிவிலக்கு ஆகும். மகாசக்தியின் தொடர்ந்த வளர்ச்சிக்கு அதன் ஆரம்ப உறுப்பினர்கள் மிகுந்த பங்களிப்புச் செய்தனர். அவர்கள் பலமான அடித்தளத்தை அமைத்து, கூட்டுறவுக் கல்வி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் பெரும் பங்காற்றினர். இந்தத் தொடர் பங்களிப்பினால் மகாசக்தி இன்றைய நிலைக்கு வளர்ந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதேசங்களில், போர் காரணமாக பலர் குடிபெயர்ந்ததால், கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் துடிப்பான நடுத்தர வர்க்கத் தலைமையை இழந்தன. இன வன்முறை, மிரட்டல் மிகுந்த சூழல் மற்றும் இயக்க மோதல்கள், சாத்தியமான தலைவர்களைச் சங்காரம் செய்தமையால், மனிதவளப் பிரச்சினை அதிகரித்தது. இதன் விளைவாக, தலைவர்கள் பொதுப்பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. கல்வியாளர்களுக்கும், கூட்டுறவுத் தலைமைக்கும் இடையிலான உறவு துண்டிக்கப்பட்டது. இது அதிகாரத்துடனான சமூகத் தொடர்புகளை பலவீனப்படுத்தியுள்ளது.

இதன் தாக்கம் காரணமாக, மனித மூலதனத்தின் அழிவோடு, குறிப்பிடத்தக்க பொருள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. ஒருகாலத்தில் கூட்டுறவுகளை ஆதரித்த சமூக வலைப்பின்னல்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன. போருக்குப் பிந்தைய காலத்தில், அம்பாறையின் விளிம்பு நிலைக்குள்ளான பகுதிகளில் பொருளாதாரத்திற்கான கூட்டுப்பங்களிப்பை மீட்டெடுக்க முடியுமா என்பது ஒரு முக்கிய கேள்வியாக உள்ளது. இந்நிலையில்தான், மகாசக்தியின் பெண்களின் தலைமையும், அதன் வகிபாகமும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அம்பாறையில், போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தைப் புத்துயிர்பெறச் செய்ய தற்போதுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் முடியுமா என்பது முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய கேள்வியாக உள்ளது. இதற்குத் தேவையான ஆரம்பநிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை ஆராய்வது அவசியமாகிறது. பயனுள்ள மறுகட்டமைப்புக்கு, வலுவான தலைமைத்துவமும், தெளிவான தொலைநோக்குப் பார்வையும் தேவையானவையாகும். மகாசக்தி கூட்டுறவுச் சங்கத்தின் வரலாற்று அனுபவம், பிளவுபட்ட மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீண்டும் ஒருங்கிணைக்கவும், உற்பத்திசார்ந்த முன்னெடுப்புகளைத் தொடங்கவும் உதவியாக இருக்கும்.

அம்பாறையின் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பின்தங்கிய பகுதிகளில் (GIDA areas), மீனவர்கள் மற்றும் கிராமப்புற விவசாயிகள் தங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும்போது, அவர்களுக்கு ஆதரவளிக்க கூட்டுறவு நிறுவனங்கள் மிகவும் அவசியமாகின்றன. இன்றைய சூழலில் பாரம்பரிய வங்கிகளின் உதவியைப் பெறுவது சவாலாக உள்ளது. அதிக வட்டி மற்றும் அறவீடுகள் போன்ற பிரச்சினைகள், வறிய விவசாயிகளுக்கு உதவுவதற்குத் தடையாகின்றன. முக்கியமான கடன்களை வழங்குவதிலும், சமூகப் பங்களிப்பை ஊக்குவிப்பதிலும் மகாசக்தி கூட்டுறவு அமைப்பின் மாதிரியைப் பின்பற்றுவது சிறப்பானதாக அமையலாம்.

உள்ளூர் மறுமுதலீட்டின் சுழற்சியை உருவாக்குவதும், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதும் மிகவும் முக்கியமானவை. கூட்டுறவு நிறுவனங்கள், தங்கள் இலாபத்தை உறுப்பினர்களிடையே விநியோகித்தல் அல்லது உள்ளூர்ப் பொருளாதாரத்தில் மீண்டும் முதலீடு செய்து, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை இயக்குதல் ஆகிய இரு வழிகளிலும் செயற்படமுடியும். மக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் அபிலாஷைகளை அடைய உதவும் ஆற்றலை மகாசக்தியின் கட்டமைப்புக் கொண்டுள்ளது.

### மகாசக்தியின் முன்பள்ளிகள்

வடமாகாணத்தில் மட்டும் 30,000 சிறுவர்கள் 1,600 முன்பள்ளிகளில் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் 3,200 ஆசிரியைகள் பணியாற்றுகின்றனர். பெரும்பாலும், இவர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியத்தகமை இல்லாதவர்கள். பலர் மாதம் ரூபா 6,000 மட்டுமே சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால், அதிக வருமானம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகள் பயின்று வரும் முன்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதம் ரூபா 20,000 வரை சம்பளம் வழங்கப்படுகிறது. சிலர் அதற்கு கூடுதலாகவும் பணம் பெறுகின்றனர். இந்த ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது.

அம்பாறையிலும் முன்பள்ளிகளின் நிலை மிகவும் பின்னடைவானதாக இருந்தாலும், மகாசக்தி 8 முன்பள்ளிகளைத் தொடங்கி, தன்னுடைய வருமானத்தில் அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிவருகிறது. இந்த 8 முன்பள்ளிகள், மகாசக்தி கூட்டுறவின் சமூகப் பணிக்கான முக்கிய முன்னோடிகளாகவும், எதிர்காலத் தலைமுறையின் கல்வி மேம்பாட்டுக்கான வளங்களாகவும் அமைகின்றன.

இவை:

1. மகாசக்தி கண்ணகி கிராமம் பாலர் பாடசாலை
2. மகாசக்தி புளியம்பத்தை பாலர் பாடசாலை
3. மகாசக்தி கிராமம் பாலர் பாடசாலை
4. மகாசக்தி கிராம எழுச்சி பாலர் பாடசாலை
5. மகாசக்தி கோளாவில் பாலர் பாடசாலை
6. மகாசக்தி நாவக்காடு பாலர் பாடசாலை
7. மகாசக்தி டயக் கோணியா பாலர் பாடசாலை
8. மகாசக்தி வாச்சிக்குடா பாலர் பாடசாலை

கிழக்கு மாகாணசபை, 4,500 ரூபா அளவில் ஒரு ஆசிரியருக்குரிய கொடுப்பனவை வழங்கும் நிலையில், இதனுடன் சேர்த்து மகாசக்தி 13,000 ரூபா கொடுப்பனவை ஆசிரியர்களுக்கு வழங்கிவருகிறது. இதன்மூலம், கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் உதவிக்கான புதிய நிலைமைகளை மகாசக்தி உருவாக்கியுள்ளது.

முன்பள்ளிகள் ஒரு கவனிக்கப்படாத கல்வித்துறையாகப் பின்னடைவு அடைந்துள்ளன. அம்பாறை போன்ற போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கல்வி வளர்ச்சி மிகவும் மந்தமானது. இப்பகுதிகளின் கல்வி முன்னேற்றத்திற்கு முன்பள்ளிப் பாடசாலைகள் அடிப்படையானவை எனவும், அவற்றின் விரிவாக்கம் அவசியம் எனவும் உணரப்பட வேண்டும். இந்நிலையிலேயே, கூட்டுறவுசார் உதவியும், மகாசக்தியின் அனுபவமும் முன்பள்ளி அமைப்புகளின் வளர்ச்சிக்கு அவசியமானவையாக அமைகின்றன.

## மகாசக்தியின் கூட்டுறவு மாதிரி

மகாசக்தியின் தற்போதைய கடன் கொடுப்பனவு 160 மில்லியன் ஆக உள்ளது. 2023 ஆம் ஆண்டின் கணக்கின்படி, இதற்கு 500 மில்லியன் வரையிலான கடனை முகாமைத்துவம் செய்யும் திறன் இருந்தாலும், நிதி ஒரு முக்கியத் தடையாக உள்ளது. தற்போது 300 விவசாயிகளுக்கு, இரு போகங்களுக்கும் வழங்கப்படும் கடன் தேவையின் 20% இனை மட்டுமே மகாசக்தி பூர்த்திசெய்கிறது. ஆனால் 1400 விவசாயிகளுக்கு சிறுதானியப் பயிர்களுக்கான கடன் தேவைப்படுகிறது. ஆலையடிவேம்பு, பரந்த விவசாய நிலம்; வளமான நீர்நிலைகள், கடல் வளம், மற்றும் சுற்றுலா வளத்துடன் கூடிய பகுதி. இருப்பினும், தேவையான உற்பத்திசார் கடன் வரையறை இதன் பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாகவே உள்ளது. மேலும் இது பால் உற்பத்தி, தயிர் தயாரிப்பு மற்றும் மீன்வளத்திற்கும் புகழ்பெற்ற வளமான நிலம்; சின்ன முகத்துவாரம் முதல் குமண வரை கடலோரமாக விரியும் பரந்த நிலக்காடு என்பவைகளுடன்கூடிய பொருளாதார மையமாக விளங்குகிறது. பெரியகளப்பு, பல மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்துக்கான முக்கியமான களமாக உள்ளது. இங்கு மீன் வியாபாரத்தில் ஈடுபட கூட்டுறவுக் கடன்கள் அவசியமானவை. இருப்பினும், நிதிப் பற்றாக்குறையானது மீனவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும் தடையாகவே இருந்துவருகிறது.

மகாசக்தி, ஒரு கூட்டுறவு வங்கி அமைப்பை நோக்கி நகரவேண்டிய அவசியத்துடன் இருக்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை, தொழில் நிபுணத்துவம் மற்றும் தொழில்திறன் ஆகியவை சவால்களாக உள்ளன. தற்போதைய நிறுவன உறுப்பினர்கள், நவீன தொழில்நுட்பத் தேவைகளுக்கு ஏற்ப தங்களைத் தயார்செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். பல வியாபார வாய்ப்புகள் மகாசக்தியின் கதவைத் தட்டினாலும், முதலீட்டில் உள்ள மனப்பயம் மற்றும் சேமிப்புக் கரைந்துபோகும் என்ற அச்சம் காரணமாக, முதலிடுவதில் விருப்பம் காட்டப்படுவதில்லை. கூட்டுறவுத் திணைக்கள ஆலோசனைகளும் திட்டங்களைத் தொடங்க நிதி கிடைக்க வேண்டும் என்ற பழைய அணுகுமுறையையே பரிந்துரைக்கின்றன. இது கூட்டுறவின் ஆன்மாவுக்கு ஒவ்வாத அணுகுமுறையாகும்.

‘நன்கொடை பெறும் மனப்பாங்கு’ (Donor Dependency) ஒரு வகையான ஆற்றல் தளர்வை உருவாக்கி, மகாசக்தியின் இயற்கையான வளர்ச்சிக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்கிறது. மகாசக்திக்கு உடனடித்தேவை வலுவான கூட்டாளிகள், நிதி ஆதரவு, தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் இணைந்து பயணிக்கத் தயாரான வளமான ஆதரவாளர்களே.

சமூகப் பொருளாதார மாற்றங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கிய கருவியாகச் செயற்படுகின்றன. இருப்பினும், இன அடிப்படையிலான மோதல்களைத் தீர்ப்பதில் அவற்றின் பங்கை பெரும்பாலும் மதிப்பிடுவதில்லை. உயிர்ப்புள்ள மனிதத் தொடர்புகளை வளர்ப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் குற்றம்சாட்டப்பட்ட சமூகங்களுக்கும் இடையிலான பிளவுகளைக் குறைக்க கூட்டுறவுகள் உதவலாம். கூட்டுறவு மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் வளர்க்கும் முயற்சிகளுக்கு மகாசக்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் உதாரணமாகத் திகழ்கின்றது.

பெப்ரவரி 11, 2025 அன்று ஆலையடிவேம்பு மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ‘கூட்டுறவு நுகர்வோர் விற்பனை நிலையம்’ அக்கரைப்பற்று, சாகம வீதியில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான பொ. தனேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்துவைத்தார். சிக்கனக் கடனுதவு கூட்டுறவு சங்கம் ‘நுகர்ச்சிப் பிரிவை’ ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

அம்பாறை மாவட்டத்தின் சந்தைகள் இன்னும் இனரீதியாகப் பிளவுபட்டுள்ளன. நீடித்த பொருளாதார வறுமையால், பலர் தினக்கூலிகளாகவும், மத்திய கிழக்கில் பணிபுரியும் பொருளாதார அடிமைகளாகவும் மாறிவிட்டனர். அதிலும் தமிழ்ப் பகுதிகளில் இது பாரிய பிரச்சினைகளை உண்டாக்கியுள்ளது. வளமான பொருளாதார உற்பத்தி மையங்கள் இருந்தும், பல கிராமங்களில் சந்தை வசதிகள் குறைவாகவே



**மகாசக்தியின் வயல் நிலம்**

உள்ளன. அக்கரைப்பற்று நகரின் வரலாறு அப்பகுதித் தமிழ் மக்களின் கசப்பான அனுபவங்களை உள்ளடக்கியது. அரசியல் ஆதிக்கத்துடன் இணைந்த இனப்பிளவுகள் இன்றும் தொடர்கின்றன. பாரம்பரிய இடங்களை இழந்த ஏக்க உணர்வு பலரின் சுவாசத்தில் நிறைந்துள்ளது. உள்ளூர் உற்பத்திக்கான ஒரு வலுவான சந்தை நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் முக்கியமான தேவையாக இருந்துவந்தது. உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து, சந்தைப் பெறுமதியை அதிகரிக்கும் ஒரு மையம் அமைவது கனவாக இருந்த நிலையில், தற்போது திறந்துள்ள நுகர்வு மையம் அந்தத் தேவையை நிரப்பக்கூடியதாய் செயற்பட்டு வருகிறது.

அம்பாறையில் நிகழ்ந்த வன்முறைகள் நான்கு முக்கிய தளங்களில் நிறைவேற்றப்பட்டன. முதலாவதாக, தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட இன அழிப்பு (Genocidal Moments) மற்றும் நிலப்பரம்பல் மாற்றம் மூலம், அம்பாறையில் சிங்கள மக்களின் ஆதிக்கம் உருவாக்கப்பட்டது. இரண்டாவது, பாரம்பரிய தமிழ்ப் பொருளாதார மையங்கள் நீக்கம் செய்யப்பட்டன. மூன்றாவது, தமிழர்களின் வாழ்வாதாரம் நீக்கப்பட்டு, அவர்கள் கூலிகளாக மாற்றப்பட்டனர். இறுதியாக, தமிழர்கள் சந்தைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தில் போரின் அதிர்வுகளையும் பின்னணியையும் தாண்டி, காலத்தில் நிலைத்திருக்கின்ற கூட்டுறவுகள் மிகச்சிலவே உள்ளன. பல்வேறு சவால்களைச் சமாளித்து, மக்களின் முழுப் பங்களிப்புடன் வளர்ந்த மகாசக்தி

சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம், இதற்கான ஒரு முக்கிய முன்னுதாரணம். அம்பாறையின் கூட்டுறவு அடையாளமாக, ஆலையடிவேம்பின் சமூக - பொருளாதார அடித்தளமாக, மகாசக்தி திகழ்கிறது.

## முடிவு

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகள் உதவியின்றித் தவிக்கின்றன; வறுமையின் மத்தியில், இன இருப்புப் பற்றிய கவலை அங்கு அதிகரித்துள்ளது. உள்ளூர்க் கட்டமைப்புகள் முற்றாக அழிந்துவிட்டன. வலுவான உள்ளூர் தலைமை இல்லை. அரசு, மாகாண மற்றும் மாவட்ட அதிகார அமைப்புகள் பல திட்டங்களை முன்னெடுத்தாலும், தமிழ்ப் பகுதிகளின் நிலை மாற்றப்படவில்லை என உள்ளூர் விவசாயிகள், பெண்கள் மற்றும் நன்னீர் மீன்பிடிச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கூறிவருகின்றனர். கடந்த காலங்களில், அரச ஆதரவில் குடிவந்தவர்களுக்கு அரச ஆதரவுக் கூட்டுறவு அமைப்புகள் உதவின. ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் பலமாக இருந்த கூட்டுறவு அமைப்புகள் படிப்படியாக வலுவிழந்து, காலப்போக்கில் மறைந்துவிட்டன. இப்போது, ஒரு வலுவான அரிசி ஆலையைக்கூட அமைக்க முடியாத நிலையே அங்கு காணப்படுகின்றது.

மகாசக்தியின் பல தொழில் முன்னெடுப்புகள் (தயிர் உற்பத்தி, நெசவு, பெறுமதிசேர் உற்பத்தி) நாளடைவில் பெரிதாக வளராததற்கு மூலதன மற்றும் திறன்சார் தடைகளே காரணம். உற்பத்தி இலக்குகளை அடைய மகாசக்திக்கு பக்கத்துணை தேவை. மகாசக்தியின் வலுவான பலத்துடனும், நவீன வசதிகளின் உதவியுடனும் உள்ளூர் வளத்தை அணுகி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆகவே, சமூகத்தின் மீதான அக்கறை, கரிசனை மற்றும் அறிவு ஆகியவைகளே விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியூட்டும் எனும் பிரக்ஞையை நாம் அனைவரும் உணர வேண்டியுள்ளது எனலாம்.

### உசாத்துணைப் பட்டியல்


1. *Bawa, Mohamed Ismail Mohideen. Community Economic Development in the Ampara Coastal District, 2013. Senior Lecturer in Management, Department of Management, Faculty of Management and Commerce, South Eastern University of Sri Lanka. Retrieved from ResearchGate.*
2. *Department of Cooperative Development, Eastern Provincial Council, Trincomalee. Retrieved from Eastern Provincial Council.*
3. *Aravindan, M., & Kumara, Sarath. Devastation on the East Coast of Sri Lanka, January 2005. Retrieved from WSWS.*
4. *Ismail, Mohamed. Postwar Socioeconomic Development in the Eastern Province: A Case Study of Ampara District, December 2, 2014. South Eastern University of Sri Lanka, Ampara, Sri Lanka.*
5. *Kadirgamar, Ahilan. The Failure of PostWar Recon struction in Jaffna, Sri Lanka: Indebtedness, Caste Exclusion and the Search for Alternatives, 2017. CUNY Academic Works. Retrieved from CUNY Academic Works.*
6. *Mahasakthi Coop Audited Report, 2023. Maha Sakthi Credit and Thrift Cooperative Society, Alayadivembu, March 10, 2025.*
7. *7. Withanawasam, Athula. Political Participation in MultiCultural Context: A Study of Ampara District in Sri Lanka. Senior Lecturer and Head, Department of Political Science, University of Peradeniya, Sri Lanka. Retrieved from Saudi Journals.*
8. *The FiveYear Ampara District Development Plan (2018-2022), April 24, 2018. Supported by the European Union under the EUSupport to District Development Programme (2013-2018). Accessed March 10, 2025. Retrieved from UNDP Sri Lanka.*
9. *The Scales of Rural Tourism and Regional Development: A Case Study of Selected Areas in the Ampara District. International Journal of Business, Technology, and Organizational Behavior (IJBTOB), Vol. 4 No. 3, December 2024. Retrieved from IJBTOB.*
10. *The List of Preschools in Ampara District, Sri Lanka. A field report showing the number of preschools/early child hood development centers by type of registration, province, and district in 2021. December 2024.*
11. *The War and Its Consequences in the Amparai District, University Teachers for Human Rights (Jaffna), October 16, 1990. Special Report No. 3. Retrieved from UTHR.*
12. *Withanawasam, Athula. Women, Civil War and Struggle for Survival: A Study of Tamil Women in Ampara District of Sri Lanka. International Journal of Social Science Research, Vol. 9, No. 2, 2021. Re trieved from Macrothink Journal.*

# மலையகத்தில் முத்துமாரியம்மன் எனும் பெண்தெய்வ வழிபாடு : நாவலப்பிட்டி பிரதேசத்தை முன்வைத்து


## அருணாசலம் லெட்சுமணன்

‘ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்’ அதிபரான அருணாசலம் லெட்சுமணன், ‘நிகர்’ சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.




## பெண் தெய்வ வழிபாட்டு மரபு

பெண்தெய்வ வழிபாட்டு மரபு புதிய கற்காலம் தொட்டே உலகளாவிய ரீதியல் நிலைபெற்றிருந்தமையை அறியலாம். அகழ்வாராய்வுகளில் பெண் தெய்வங்களின் உருவச்சிலைகள் கிடைக்கப்பெற்றமை தக்க சான்றுகளாகும். எகிப்தில் ‘இசிஸ்’, ‘சிபிஸ்’ போன்ற பெண் தெய்வ வழிபாடுகள், சிரியாவில் ‘அஸ்தாத்’ எனும் பெண் தெய்வ வழிபாடு போன்ற பாரம்பரியங்களும் குறிப்பிடத்தக்கவைகளாகும். “நதிக்கரை நாகரிகங்களில் நிலவிய தாய்வழிச் சமூக அமைப்பின் காரணமாகவே பெண் தெய்வ வழிபாட்டு மரபு தோன்றியிருக்கிறது” என்பர் ஆய்வாளர்கள். திராவிடர்களின் முக்கிய தடமான சிந்துவெளி நாகரிகத்தை ஆய்வு செய்த ஆய்வாளரான சேர் ஜோன் மார்சலின் “சிந்துவெளிக் கால மக்கள் தாய்த் தெய்வ வழிபாட்டு மரபினையே கொண்டிருந்தார்கள்” என்ற கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கீழடி ஆய்வுகள் தொடர்பான முடிவுகளும் இதற்கு வலிமை சேர்க்குமாற்றை அவதானிக்கலாம். வேதங்களில் உசை, இராத்திரி, அதிதி போன்ற பெண் தெய்வங்களும், பிற்பட்ட காலங்களில் உமா, அம்பிகா, ஹிமாபதி, பார்வதி, துர்க்கா, காளி போன்ற பெண் தெய்வங்களும் செல்வாக்குப் பெற்று விளங்கின. ஆரியப் பண்பாட்டிலுள்ள பெண் தெய்வங்களுக்கும், திராவிடப் பண்பாட்டிலுள்ள பெண் தெய்வங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. ஆயினும், வேத காலத்தின் பின்னர் இவை இரண்டிற்கும் இடையில் ஒற்றுமைகள் ஏற்பட்டன என்ற கருத்தும் கவனிக்கத்தக்கதாகும். சைவசமயத்துடன் தொடர்புபட்ட தொண்ணூறுக்கும் மேற்பட்ட பெண் தெய்வங்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் வரையறுப்பர்.

இயற்கையின் ஆற்றல்களையும் சீற்றங்களையும் அனுபவித்த மனிதகுலம் அதன் ஊடாக படிப்பினைகளைத் தனதாக்கிக் கொண்டது. அவர்கள் பெற்ற அனுபவங்கள் அச்சத்தை ஏற்படுத்தலாயின. பெற்றுக்கொண்ட அச்ச அனுபவத்தின் காரணமாக புதிய தெய்வங்களை உருவாக்கிக்கொண்டார்கள். சங்ககாலம் குறிப்பிடும் சூர், அணங்கு ஆகியவற்றின் உருவாக்கமும் இத்தகைய அனுபவத்தின் வாயிலானதாகும். காலப்போக்கில் சூரும் அணங்கும் மனித வடிவில் கொற்றவையாக உருப்பெறுகிறது. கொற்றவையே தமிழர்களின் புராதன வழிபாட்டிற்குறிய மூல பெண் தெய்வமாகிறது. ‘கொற்றவை’ பழையோள், பெருங்காட்டுக் கொற்றி, காடுகிழாள், காடுகொழு செல்வி, கானமர் செல்வி, சூலி, துணங்கையஞ் செல்வி என்ற பெயர்களாலும் படிம வளர்ச்சி காண்கிறாள். இப்படிம வளர்ச்சி உமை, துர்க்கை என்ற பெண் தெய்வங்களுடனும் இணைத்து நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அம்மன் என்பதை ‘சீமாட்டி’, ‘உயர்வான பெண்’ எனும் பொருள்களோடும் நோக்குவர். இதற்குச் சமானமாக ‘செல்வி’ என்ற பெயரும் அமைகிறது. கொற்றவையின் படிம வளர்ச்சியில் இப்பெயர் பல இடங்களில் பிரயோகத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. திராவிடப் பண்பாட்டு மரபுடன், ஆரியப் பண்பாட்டு மரபு கலந்த நிலையிலேயே தமிழும், தமிழர் சமயமும் கலப்புற்றமை கவனிக்கத்தக்கது.

## பெண் தெய்வங்களின் தோற்றத்திற்குப் பின்னணியாக அமைந்த காரணங்கள்

சமூகம் ஏற்றத்தாழ்வுகளுடனேயே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அவ் ஏற்றத்தாழ்வுகள் நிகழ்வதற்கு பல காரணிகள் ஏதுவாக அமைகின்றன. ‘நாகரிக விளக்கின் ஒளியைப்பெறும் மேல்நிலை மக்களை மேற்கத்திய சமூகவியலாளர்கள் மேலோர் என்று குறிப்பிடுகின்றனர்.’ அவர்கள் கருத்துப்படி இம்மேலோர்கள் சமுதாய மேலடுக்கில் இருந்துகொண்டு, சமுதாயத்தினை ஆள்வோர்களாக அமைகின்றனர். ‘இவர்கள் பரம்பரை பரம்பரையாக மேலோர்களாக இருக்கலாம், அல்லது அடிமட்டத்திலுள்ள ஒரு மனிதன் காலப்போக்கில் மேலோனாக மாறலாம்’ என்ற ஆ. சிவசுப்ரமணியத்தின் கூற்று கவனிக்கத்தக்கது. அவ்வாறே இந்தியச்சூழலில் அடித்தள மக்கள் பற்றிய அவரது பின்வரும் கருத்துநிலையும் குறிப்பிடத்தக்கதாகும். ‘சாதி, செய்யும் தொழில், அரசியலாதிக்கம், பாலியல்நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்களே அடித்தள மக்கள்.’

தமிழ்நாட்டில் பெரும்பாலும் மக்களால் வணக்கத்திற்குரிய தெய்வங்களாகப் போற்றப்படுபவர்கள் கொலையுண்ட மானிடர்களாகவே காணப்படுகின்றனர். பொதுநலனில் வேறுபாடுகளைக் களைய முற்பட்டவர்கள் கொலையுண்டதன் பின்னரே இந்நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.



நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய
கும்பாபிஷேக நிகழ்வு

அதனடிப்படையில் பெண்தெய்வங்கள், பாலியல் தொல்லைகளில் இருந்து தன்னை மீட்டுக்கொண்ட நிலையிலேயே உருப்பெறுகின்றனர்.

மேலோர், அடித்தள மக்களாகிய பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலை பிரயோகித்த வரலாற்றை தமிழ்ச் சமூகம் தொடர்ச்சியாகவே அனுபவித்து வந்துள்ளது. பெண் தெய்வங்களை தாய்த் தெய்வங்கள், கன்னித் தெய்வங்கள் என வரையறுப்பர். மேலாதிக்கத்தைச் செலுத்தும் தரப்பினர் அடித்தட்டு மக்களான பெண்களை பாலியல் இச்சைக்கான பொருளாகப் பிரயோகிக்கும் விடயத்தில் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்டுள்ளனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மூன்று வழிகளில் 'கற்புநிலை' பாதுகாக்கப்பட்டிருக்கிறது. பாதிப்பு நடக்கும் ஊரில் இருந்து வேறு ஊருக்குத் தப்பிச்செல்லும் முயற்சி இடம்பெற்றுள்ளது. அம்முயற்சி, வெற்றியளிப்பதுமுண்டு; தப்பிச்செல்லும் பெண்கள் கொலையாவதும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் அவ்வாறான பாதிப்பு நிலையை அறிந்து, உறவினர்களே பெண்களைக் கொலை செய்வதுமுண்டு. இல்லாவிட்டால் அப்பெண்களைத் தற்கொலை செய்வதற்குத் தூண்டுவதுமுண்டு. இதனால் தங்கள் குலப்பெருமை பாதுகாக்கப்பட்டதாக எண்ணித் திருப்தியடைந்து, மறைந்த பெண்களுக்கு நடுகல் வைத்து அடையாளப்படுத்தி, தெய்வங்களாக மாற்றிய வரலாற்றைச் தமிழ்ச்சமூகம் கொண்டுள்ளது. இதனை பொன்னு மாரியம்மன், போத்தி அம்மன், புதுப்பட்டி அம்மன் ஆலய வரலாறுகள் புலப்படுத்துவதைக் காணலாம்.

இலங்கையில் மலையகம் எனும் சமூக உருவாக்கம்

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்குப் புலம்பெயர்ந்து இருநூறு வருடங்கள் (1823-2023) நிறைவாகியுள்ளன. பிரித்தானியர்களதும், சுதந்திர இலங்கையினதும் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாய் இம்மக்களே திகழ்ந்துள்ளார்கள். 1823இற்கு முன்னரே புலப்பெயர்வுகள் இடம்பெற்றிருந்தாலும், இவ்வருடமே அவை முனைப்புப் பெறுவதாக அமைந்தன.

நீண்ட காலமாக, இந்த மக்கள் வெறும் உழைப்பிற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளனர். டொனமூர் மற்றும் சோல்பரி அரசியலமைப்புகள் அளித்த சில நிவாரணங்கள் ஓரளவு திருப்தியை ஏற்படுத்தினாலும், பின்னர் நடந்த வாக்குரிமைப் பறிப்பு, பிரஜாவுரிமைப் பறிப்பு, 1964 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் போன்ற கடுமையான அனுபவங்கள், இவர்களின் வாழ்வியல் மீது தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்தின. ஐக்கிய நாடுகள் சபை தோன்றி, உலகளவில் மனித உரிமை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்ட காலகட்டத்திலும், இந்த மக்களின் நிலைமை மோசமாகவே இருந்தது. பெரும்பான்மையினச் சமூகத்தின் ஆத்திரத்திற்கு இலக்காகி, பல்வேறு அநீதிகளுக்கும் உட்பட்ட சமூகமாக இவர்கள் இருந்து வந்துள்ளனர். அறுபதுகளுக்குப் பிறகு, எஞ்சியிருந்த மக்கள் கூட்டம் மீளெழுச்சிக்கான உந்துதலைப் பெற்றது. ஏக்கங்கள் ஒரு வகை உந்துதலாக மாறி, பாதிப்புகள் குறித்துப் பேசவும், எழுதவும் மக்கள் முனைந்தார்கள். அதன்

தொடர்ச்சியாக, 'மலையகம்' எனும் சமூக உருவாக்கம் நிலைபெற்றது. தொழிலாளர்கள் என்ற நிலையைத் தாண்டி, வர்த்தகத் துறை, நகர வளர்ச்சி, நகரம் நோக்கிய புலப்பெயர்வு, அரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்புகள் போன்ற தளங்களிலும் இவர்களின் சமூக அசைவியக்கம் விரிவடைந்தது. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' என்ற சட்டரீதியான பெயர் இருந்தபோதும், 'மலையக மக்கள்' என்ற அடையாளத்தை அவர்கள் தாமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர். சட்டரீதியான அடையாளத்தை விட, சமூகம் சார்ந்த அடையாளப் பெயருக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். 'மலையகம்' என்ற சொல்லின் அர்த்தம், புவியியல் வரையறையைத் தாண்டி, எண்ணக்கரு சார்ந்த அடையாளமாக மாறுகிறது. தோட்டங்களைத் தாண்டி, நகரங்களைத் தாண்டி, பிரதேசங்களைத் தாண்டி, தேசங்களைக் கடந்து, 'மலையகம்' ஒரு எண்ணரீதியான வலையமைப்பாக விரிவடைந்து வருகிறது.

## மலையக மக்களில் பெண் தெய்வ வழிபாடு தொடர்பான அவதானம்

சங்ககாலம் தொடக்கம் பெண் தெய்வங்கள் வழிபாட்டிற்குரியதாக அமையப்பெற்றதை அறிகிறோம். அது போலவே மலையக மக்களின் நீண்ட காலப் பயில்நிலைக்குரிய கூத்துகளாக விளங்கும் காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர் ஆகிய கூத்துகளிலும் பெண் பாத்திரங்கள் அங்கம் வகிப்பதையும், அவற்றுள் வழிபாட்டிற்குரிய பெண் தெய்வங்களும் உள்ளடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்திற்குரிய 'பொன்னர் - சங்கர்' வரலாற்றோடு 'செல்லாண்டி அம்மன்' வழிபாட்டிற்கும் தொடர்பு உள்ளதைக் காணலாம். பின்னாளில் இக்கூத்தின் பிரதான பாத்திரமான தங்காள், 'தங்காயி' (அருக்காணி) என்ற வழிபாட்டிற்குரியவராக உயர்த்தப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. காமன் கூத்தில் மாரியம்மன், காளியம்மன், ரதி, சீதை, வள்ளி, தெய்வானை, உமை போன்ற பெண்கள் பாத்திரங்களாக்கப்படுவதுடன் அப் பாத்திரங்களும் வழிபாட்டிற்குரிய அந்தஸ்தைப் பெற்று நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே அருச்சுனன் தபசில் திரௌபதி அம்மன், காளி, பார்வதி ஆகிய பெண் தெய்வங்கள் தொடர்புபடுகின்றமையும், 'பாஞ்சாலி' என்ற பாத்திரம் பின்னாளில் வழிபாட்டிற்குரிய பாத்திரமாக மாறுகின்ற நிலைமையும் குறிப்பிடத்தக்கது. இக்கூத்துகளோடு மோகினி, ஊர்வசி, ஏலக்கன்னி, குறத்தி, வேங்கை கன்னி, பேரண்டச்சி ஆகிய சிறு பெண் பாத்திரங்களும் தொடர்புபடுமாற்றைக் காணலாம். இவ்வாறான பாத்திரங்கள் கூத்துகளில் பிரதான பாத்திரங்களுக்கு உதவி செய்கின்ற அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் பங்கெடுக்கின்றமை கவனிக்கத்தக்கது.

## தொழிலாளர்களின் நகர்வும் வழிபாட்டு இடங்களின் அமைவும்

இருநூறு வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள், மன்னார் தொடக்கம் மாத்தளை ஊடாக கால்நடையாக மலையகப் பிரதேசங்களுக்கு வருகைத் தந்தார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் தப்பிப் பிழைத்தவர்கள் மாத்திரம் இலங்கையில் பெருந்தோட்டப் பொறிமுறைக்கு இரையாகி பிரித்தானியர்களுக்கும் சுதந்திர இலங்கைக்கும் செல்வத்தைப் பெற்றுக்கொடுத்தார்கள். இப்பிரயாணத்தில் பெற்ற கசப்பான அனுபவங்களை கண்டிச்சீமையிலே, பஞ்சம் பிழைக்க வந்த சீமை ஆகிய நாவல்கள் உட்பட கண்டிச் சீமை எனும் ஆய்வு நூலும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அடர்ந்த காடுகளுக்கு நடுவே கால்நடையாக வருகைதந்த மக்கள் அந்தியாகும் பொழுதுகளில் உறங்கிக் களைப்பைப் போக்கி வந்துள்ளார்கள். இவர்களது வரவில் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்தே காணப்பட்டன; தெய்வ நம்பிக்கையும் அவற்றோடு தொடர்புபட்ட சம்பிரதாயங்களும் காணப்பட்டன. தமது தாயக பூமியில் இருந்து நம்பிக்கையோடு வழிபட்ட சிலைகளையும், சிலைகளுக்கு ஒப்பான கற்களையும் எடுத்து வந்துள்ளார்கள். 'பிடிமண்' என்பது மலையக மக்களோடு சமகாலத்திலும் மிக நெருங்கிய தொடர்பினையும் நம்பிக்கையினையும் கொண்டுள்ளது. இப் பிடி மண்ணை பொட்டலமாக்கிய நிலையில் அதனையும் எடுத்துக் கொண்டே அவர்கள் பயணம் செய்துள்ளனர். சிலநேரங்களில், காலை வேளையில் பயணத்தைத் தொடங்கும் போது மேற்குறித்த நம்பிக்கை வடிவங்களை வைத்த இடத்திலிருந்து எடுக்க முடியாதநிலை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறான இடங்களில்,

‘அம்மன் இப்பிரதேசத்தில் தோட்டம் அமைப்பதற்கு ஆணை வழங்கிட்டாள்’ எனக் கருதி, தோட்டங்களை உருவாக்கியுள்ளனர். கல், சிலை அல்லது பிடிமண் இயல்பாகவே மண்ணோடு ஒட்டிக்கொண்ட இடங்களே அம்மன் ஆலயங்களாக உருப்பெற்றன. அவ்வாறு உருவான முதலாவது ஆலயமாக பண்ணாகாமம் முத்துமாரியம்மன் ஆலயம் கருதப்படுகிறது. பண்ணாகாமம் எனும் தோட்டமே பின்னாளில் மாத்தளை என அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இவ் ஆலயத்தைச் சூழ தேயிலைத் தோட்டங்களும் ஆலயங்களும் உருவாக்கப்பட்டன. இவ்வாறே மலையக மாவட்டங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிலைகொள்கிறார்கள்.

சமகாலத்திலேயே, மாத்தளை ஊடாக கண்டியைச் சூழவும், நாவலப்பிட்டி வழியாகவும் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. நாவலப்பிட்டிக்கு அண்மையிலுள்ள கம்பளை சிங்கப்பிட்டியில் கோப்பி பயிர்ச்செய்கை ஆரம்பம், லூல்கந்துரையைத் தொடர்ந்து தேயிலை பயிர்ச்செய்கையின் தீவிரம், இரயில் போக்குவரத்தின் கேந்திர நிலையமாக நாவலப்பிட்டி புகையிரத நிலையம் அமைந்தமை போன்றன இப்பிரதேசத்தில் மலையக மக்களது ஊடாட்டம் அதிகரிக்க முக்கிய காரணமாகின்றன. இப்பிரதேசங்களில் காணப்படும் அம்மன் ஆலயங்கள் பிரதான வீதிகளுக்கு அருகில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான ஆலயங்களில் நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், இம்புல்பிட்டி, கல்லாறு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், கடியன்லென கருமாரியம்மன் ஆலயம், கட்டபுலா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், கொலபத்தனை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும். கொலபத்தனை தோட்டத்தை அடுத்து அமைந்துள்ள குயின்ஸ்பெரி தோட்டம் மலையக மக்களின் வரலாற்றோடும் வாழ்வியலோடும், ஆன்மீக நம்பிக்கையோடும் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டமைந்துள்ளது. மலையகத்தோடு தொடர்பு கொண்ட ஆன்மீக அடையாளமாக ‘நவநாதர் சித்தர்’ எனும் பெயர் விளங்குகிறது. நவநாதர் சித்தரின் அற்புதங்கள் மலையக மக்களின் வரலாற்றோடு தனித்துவமாக நோக்கப்படுகிறது. மாரியம்மன் வழிபாட்டுடனும் நம்பிக்கையுடனும் தொடர்புபடுகின்ற தொன்மங்களோடும் இதற்கு நெருங்கியதன்மை உண்டு.





நாவலப்பிட்டி சொய்சாகலை மாரியம்மன் ஆயை
மஹா கும்பாபிஷேக நிகழ்வு
Image Source - tamil.adaderana.lk

## பெண் ஆளுமைகளை அடையாளப்படுத்தும் களம்

குயின்ஸ்பெரி தோட்டம் மலையகத்தின் முதலாவது பெண் பெரியகங்காணியைக் கொண்டிருந்த தோட்டமாக அடையாளப்படுத்தப்படுகிறது. அம்மன் வழிபாட்டில் கொண்டிருந்த நம்பிக்கைகள் குறித்த தொன்மக் கதைகளோடு இப்பிரதேசச் செயற்பாடுகள் தொடர்புறுவதைக் காணலாம். “தொன்மங்கள் பொய்மையின் புகலிடம் அன்று, அவை வாழ்க்கை அனுபவங்களின் குறியீடுகளாகும்.” என்ற சூசன்லாங்கரின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். நவநாதர் சித்தரின் அற்புதங்கள், மாரியம்மன் ஆலயத்தோடு தொடர்புபட்டதாகவும் அமைந்துள்ளன. ஆலய உற்சவங்களில் வருடாந்தம் வழங்கும் அன்னதானத்தில் மீதமாக உள்ளதைக் குழி தோண்டிப் புதைத்து, அடுத்த வருட உற்சவத்தில் புதைக்கப்பட்ட உணவை மீளவும் எடுக்கும் போது, புதைத்த நிலையிலேயே அவ் உணவு இருக்கும் என்ற நம்பிக்கை இங்கு காணப்படுகிறது. அது

நவநாதர் சித்தரின் சமாதியோடு தொடர்புபட்ட நடவடிக்கையாகவே பிரதானப்படுத்தப்படுகிறது. அம்மன் ஆலயங்களிலும் இவ்வாறு நடப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. பிரதான பாதைகள் ஊடாக அமைந்த குடியேற்றங்கள் காரணமாகக் கட்டமைக்கப்பட்ட தோட்டங்களில் பல உப பிரிவுகள் உள்ளன. அப் பிரிவுகளிலும் அம்மன் ஆலயங்களைப் பிரதானப்படுத்தியே பெண் தெய்வ வழிபாடுகள் இடம்பெறுகின்றன. நாவலப்பிட்டி பார்க்கேப்பல் தோட்டத்தில் மரண இறுதிச் சடங்கை கல்யாணி என்ற பெண்மணியே தற்போதும் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெண் தெய்வங்களில் பிரதானியாக முத்துமாரியம்மன்

மலையக சமூக உருவாக்கத்தில் வழிபாட்டு மரபுகளும் பெரிதும் துணைநின்றமை கவனிக்கத்தக்கது. தொழிற்களங்களைவிட மக்கள் ஒன்று கூடும் தலமாகவும், கலந்துரையாடும் களமாகவும் வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன. சமூக வேற்றுமைகள் வெளிப்பட்ட இடங்களாக வழிபாட்டுத் தலங்கள் இருந்தபோதிலும், சமூக ரீதியிலான தீர்மானங்களை நிறைவேற்றும் முக்கியத் தலங்களாகவும் அவை அமைகின்றன. தென்னிந்தியப் பெண்தெய்வ வழிபாடுகளில் முத்துமாரியம்மன் வழிபாடு முதன்மையானதாகும். இலங்கைக்குப் புலம்பெயர்ந்த மக்களும் அதையே முதன்மையாக்கி வழிபட்டனர். மலையகத்தில் கொற்றவை, காளி போன்ற தெய்வங்களுடன் தொடர்புடைய ஏனைய தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. ஆயினும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முத்துமாரியம்மன் ஆலயங்கள் உள்ளன என்பதால், இவ்வழிபாடு இங்கு மேலோங்கிக் காணப்படுகிறது எனலாம். கிராமியத் தெய்வமாகவே வழிபடப்படும் மாரியம்மன், கருமாரியம்மன், கங்கையம்மன் எனும் பெயர்களிலும் அடையாளப்படுத்தப்படுகிறார்.

‘மாரி’ என்பது மழை அல்லது அம்மை நோய் எனப் பொருள் பெறும். அம்மை நோயைப் போக்கும் அவதாரமாகவும், மழையைப் பெறும் சக்தியாகவும் மாரியம்மனை வழிபடுவது இவ்வழிபாட்டின் சிறப்பம்சமாகும். வெப்பு நோயை ஏற்படுத்தும் அம்மனின் கோபம் குறித்த இம்மக்களின் நம்பிக்கையும் கவனிக்கத்தக்கது. செல்வி, செல்லி, ஆத்தாள், செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், ஆயிரம் கண்ணுடையாள், ஆயி, மகமாயி போன்ற பல பெயர்களாலும் அவர் அழைக்கப்படுகிறார்.

## முத்துமாரியம்மன் பற்றிய தொன்மங்கள்

அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய பல தொன்மக்கதைகள் கூறப்படுகின்றன. அவற்றில் மாத்தளை வடிவேலன் குறிப்பிட்ட இரேணுகாதேவி பற்றிய கதை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. அபிதான சிந்தாமணி நூலில், இரேணுகாதேவி ஜமதக்னி மாமுனிவரின் துணையாகச் சித்திரிக்கப்படுகிறாள்.

இரேணுகையின் கணவன் மறைந்தபோது, அவள் உடன்கட்டை ஏறினாள். அந்த நேரத்தில், இந்திரன் வருணனை ஏவிப் பெருமழை பெய்வித்தான். இதனால் உடலிலிருந்த ஆடைகள் எரிந்து போயின; உடலெங்கும் தீக்கொப்பளங்கள் தோன்றின. உடையின்றிய நிலையில், அவள் அருகிலிருந்த வேப்பிலைகளைப் பறித்து உடையாக அணிந்துகொண்டாள். பின்னர், அருகிலுள்ள ‘புலையச் சேரி’ எனப்படும் ஒடுக்கப்பட்டோர் வாழும் இடத்திற்குச் சென்று உணவு கேட்டாள். அங்கேயுள்ள மக்கள் சமைத்த உணவை வழங்காமல், பச்சரிசி, வெல்லம், மா, இளநீர் போன்றவற்றைக் கொடுத்தனர். அவற்றை உண்டவுடன், ‘வண்ணார்’ வீதிக்குச்சென்று உடை பெற்றுக்கொண்டு, காலை வேளையில் கணவனை எரித்த இடத்திற்கு சென்றாள். அப்போது, சிவனின் அசரீரிக் குரல் கேட்டது: “நீ நம் சிவசக்தியின் அம்சமாக பூமியில் பிறந்தவள். கிராம தேவதையாகத் திகழ்ந்து மக்களின் துயரை நீக்கி, அவர்களுக்கு அருள் புரிக. நீ இனி ‘மாரி’ என அறியப்படுவாய். உன் உடலில் தோன்றிய தீப்புண் கொப்பளங்களே ‘அம்மை’ நோயாகப் பரவும். நீ தரித்த வேப்பிலை, அந்த நோய்க்கு மருந்தாக அமையும். பச்சரிசி, மா, வெல்லம், இளநீர், கூழ் ஆகியவையே உனக்கான நைவேத்தியமாக இருக்கும். உன்னைப் போற்றி வழிபடுபவர்கள் துயரமின்றி வாழ்வார்கள்.” இவ்வாறு, சிவனின் ஆசியினால் இரேணுகை ‘மாரி’ என்ற தெய்வீக நிலையை அடைந்தாள்.

ஜமதக்னி முனிவரின் கட்டளையின்படி, இரேணுகையின் தலையை பரசுராமர் வெட்டி, அதை புலையர் குலப் பெண்ணின் உடலோடு இணைத்ததாகவும், புலையர் குலப் பெண்ணின் தலையை இரேணுகையின் உடலோடு

பொருத்தியதாகவும் நம்பப்படுகிறது. இதன் விளைவாக, சில மாரியம்மன் கோயில்களின் கருவறையில், மாரியம்மனின் தலையை மட்டும் வைத்து வணங்கும் மரபு ஏற்பட்டுள்ளது. மாரியம்மன் பிராமணப் பெண்ணின் தலையையும், புலையர் குலப் பெண்ணின் உடலையும் கொண்டிருப்பதால், 'உயர்' சாதியினர் இரேணுகைதேவியாகிய மாரியம்மனை வழிபடலாம் என்பதோடு, புலையர் குலப் பெண்ணான மாதங்கி அல்லது கங்கம்மாவையும் வழிபடலாம் என முனிவர் அறிவித்ததாகத் கூறப்படுகிறது.



மாத்தளை முத்துமாரியம்மன் கோவில்
Image Source - malaiyagam.lk

மக்களிடையே நிலவும் சாதிய வேறுபாடுகளை நீக்கும் கைங்கரியமாகவும் இக்கதை விளங்குகிறது. மாரியம்மன் திருவிழாவில் எல்லா சாதியினரும் பங்கெடுக்கும் வகையில் கிரியைகள் கட்டமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரேணுகைக்கு உடை வழங்கி உதவிய 'வண்ணார்' குலத்தை அடையாளப்படுத்தும் வகையில், ஆலயங்களிலும் திருவிழாக்களிலும் மாத்துக் கட்டும் பொறுப்பை 'வண்ணார்' சமூகத்தினர் வகிக்கின்றனர். அதேவேளை, மாரியம்மன் மற்றும் மாதங்கி வழிபாடுகளில் வேறுபாடுகள் காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது.

நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டத்தில் நிலவும் முத்துமாரியம்மன் தொடர்பிலான ஒரு தொன்மக்கதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குயின்ஸ்பெரி பெரியங்கங்கானி, தென்னிந்தியாவிற்குச் சென்று பெண் தொழிலாளர்களை அழைத்து வந்தார். அந்தப் பெண்களில் ஒருத்தி மிகவும் அழகானவராக இருந்தாள். அவள் அழகில் மயங்கிய பெரியகங்காணி, அவள் மீது இச்சை கொண்டார். ஆனால், அவள் ஒத்துழைக்கவில்லை.

ஒரு நாள், கம்பளி மற்றும் கூடையை வழங்காமல் அவளை மலைக்கு அனுப்பிவைத்தார். அந்த நாளில், ஏனைய பெண்கள் ஆறு இறாத்தல் மாத்திரம் கொழுந்து பறித்தனர். ஆனால் அந்தப் பெண் அறுபது இறாத்தல் கொழுந்து பறித்தாள். பின்னர், அவள் மலை உச்சியை நோக்கி வேகமாக நடந்துசென்றாள். அவளை கங்காணியோடு மற்றும் சிலரும் பின்தொடர்ந்தனர். மலையின் உச்சியில், வேப்பமரத்தடியில் அமர்ந்துகொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவர்கள் அவளை அணுகிப் பேச முயற்சித்தனர். ஆனால், அருகில் சென்று பார்த்தபோது, அந்தப் பெண் சிலையாக மாறிவிட்டாள். இதன் பின்னர், அவள் மாரியம்மன் என்று அடையாளப்படுத்தப்பட்டாள். தனது தீச்செயலுக்காக மனம் வருந்திய பெரிய கங்காணி, தன் தவறை உணர்ந்து, மனம் திருந்தி, அம்மனுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டதாக நம்பப்படுகிறது.

மாரியம்மனின் சிறப்புகளை எடுத்துச்சொல்லும் பல தொன்மக்கதைகள் நிலவுகின்றன. சிவபெருமானுக்கே அம்மை நோயை ஏற்படுத்திய கதை, தலையில் ஆயிரம் கண்களையுடைய கதை, தன் பிள்ளைகளை சகோதரியான மாரியம்மனுக்குக் காட்டாமல் ஒழித்தமையால் சோதனைக்குள்ளான காளியின் கதை போன்றன சில உதாரணங்களாகும். காளியோடு கொண்ட சோதனையாலேயே முன்னடியான் என்ற வழிபாட்டு உருவம் கட்டமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாவலப்பிட்டி முத்துமாரியம்மன் ஆலயத்துடன் தொடர்புபடும் மாரியம்மன் குறித்த செவிவழிக்கதைகள்

1823ஆம் வருடத்தின்பின் ஏற்பட்ட மலையக மக்களின் புலப்பெயர்வு காலத்திலேயே நாவலப்பிட்டியில் முத்துமாரியம்மன் ஆலயம் அமைக்கப்பட்டதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. 1870 காலப்பகுதியில் கிழக்குப் பார்த்த நிலையில் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கொரக்காவத்தை தோட்டத்தின் தொழிலாளர்களும் நகர வர்த்தகர்களும் இணைந்து அமைத்த அவ் ஆலயத்திற்கு முன்னால்

ஒரு வைத்தியசாலையும் அமைக்கப்பட்டது.

குஷ்டரோக நோயினால் அவதியுற்ற நோயாளி ஒருவரைக் கண்ட நவநாதர் சித்தர் 'வைத்தியசாலைக்கு முன்பு இருக்கும் அம்மனின் அருளால் இது குணமாகும். என்னுடன் வாருங்கள்' என்றுகூறி, அவரை குயின்ஸ்பெரிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவரது பேச்சைக் கேட்டுச்சென்ற குறிப்பிட்ட நோயாளிக்கு குயின்ஸ்பெரி செல்லும் முன்பே நோய் குணமாகியது.

90களின் முற்பகுதியில் சன்னியாசி ஒருவர் நாவலப்பிட்டிக்கு வருகை தந்துள்ளார். அவர் இவ் ஆலயத்தின் செயற்பாடுகளில் பொறுப்பாக இருந்த அப்பாவு ஆச்சாரி, வேலு ஆச்சாரி ஆகியோரைச் சந்தித்து தான் சமயபுரத்தில் இருந்து வருவதாகக் கூறியுள்ளார். மேலும் அவர், ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதுடன் சமயபுரத்தில் இருந்து கொண்டுவந்த அம்மனின் திருமுகத்தை ஆலயத்தில் வைத்துவிட்டு, தான் சுகவீனமடைந்திருப்பதாகவும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறப்போவதாகவும் கூறிவிட்டுச் சென்றுள்ளார். அவர் கொடுத்த விக்கிரகத்திற்குரிய பூசைகளை உரியவாறுசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய அதனை வேலு ஆச்சாரியினுடைய வீட்டின் பூசை அறையில் வைத்துப் பூசித்துள்ளார்கள். பின்னர், ஆச்சாரிகள் இருவரும் குறித்த சன்னியாசியைத் தேடி வைத்தியசாலைக்குச் சென்றபோது, அவ்வாறு ஒருவர் வரவில்லை என வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஒரு நாளில் மீளவும் வருகைத்தந்த அச்சன்னியாசி வேலு ஆச்சாரியின் வீட்டில் அச்சிலை பூசிக்கப்பட்ட முறையை அவதானித்து மகிழ்ச்சியுற்று, அதனை ஆலயத்தில் வைத்துப் பூசை செய்யுமாறு ஆலோசனை வழங்கிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

சமயபுர அம்பாளின் அனுக்கிரகத்தால் அம்மனே இயல்பாக இங்கு அருள்பாலிக்க வந்துள்ளாள் என்ற நம்பிக்கை இப்பிரதேசத்தில் நிலவுகிறது. குறித்த அம்மனின் தலை உருவம் இன்னமும் இவ் ஆலயத்தில் பூசிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அதன் பின்னர் ஆச்சாரிகள் இருவர் உட்பட, பிரமுகர்கள் சிலர் இணைந்து அவ் ஆலயத்தை நிரந்தரக் கட்டடமாக அமைக்க முற்பட்டுள்ளார்கள்.

கோப்பிப் பயிர்ச்செய்கையில் பாதிப்பை ஏற்படுத்திய நோய், பிளேக் நோய் போன்றவற்றால் நாவலப்பிட்டி மலையக மக்கள் பாதிக்கப்பட்டனர். நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள கொத்மலை வீதியிலுள்ள கடைகள், வீடுகள் பிளேக் நோயினால் பாதிக்கப்பட்ட காரணத்தினால், அப்பகுதியில் வசித்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டவர்கள் ஐ.டீ.எச் பிரதேசத்தில் வைத்தே பராமரிக்கப்பட்டார்கள் (இப்பகுதிக்கு அக்காலத்தில் வைக்கப்பட்ட பெயரே இன்றுவரை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது). கொத்மலை வீதியில் அப்புறப்படுத்தவேண்டிய பட்டியலில் கோயில் கட்டடமும் உள்வாங்கப்பட்டிருந்தது. கோயிலை இடிக்க வேண்டும் என ஆங்கிலேய பொதுசுகாதார உத்தியோகத்தர் பணித்திருந்தார். மக்கள், கோயிலை இடிக்க வேண்டாம் என மன்றாடினர். வேலையாட்கள் ஒதுங்கிய நிலையில், அப்பணியை பொதுசுகாதார உத்தியோகத்தரே செய்வதற்குத் துணிந்துள்ளார். கதவு உடைக்கப்பட்ட போது, அதிசயிக்கும் வகையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இரண்டு மாதமளவில் மூடிவைக்கப்பட்டிருந்த கருவறையில், காலையில்தான் வைக்கப்பட்டது போன்றிருந்த பூவும், இரண்டு மாதத்திற்கு முன்னர் ஏற்றிவைத்த எரிந்துக்கொண்டிருந்த விளக்கும் பார்த்தவர்களை வியப்பிலாழ்த்தியது. குறித்த பொது சுகாதார உத்தியோகத்தரும் கோயிலை உடைக்க வேண்டாம் எனக்கூறி வழிபட்டுள்ளார்.

## வழிபாட்டு முறையும் நம்பிக்கை சார்ந்த விடயங்களும்

இயற்கையுடன் கூடிய நெறிமுறையுடனேயே மாரியம்மன் வழிபாட்டு மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி மற்றும் பஞ்ச நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அந்த நிலைமையைச் சமாளிக்கவும், புதிய வாழ்வியல் வழிகளை உருவாக்கவும், இலங்கைக்குப் புலம்பெயர்ந்த மக்கள் மாரியம்மனை வழிபட்டனர். இந்த வழிபாட்டின் மூலம் அவர்கள் இயற்கையின் அருளையும், மழையையும், அந்த நிலையை எதிர்கொள்வதற்கான ஆன்மிக வலிமையையும் பெற்றனர். 'மாரி' என்ற சொல், மழையை வழங்கும் அம்மனின் அடையாளமாக அமைந்துள்ளது. கடும் வெப்பநிலையை எதிர்கொள்ளுவதோடும், அதைச் சமாளிப்பதோடும் இவ்வழிபாட்டு மரபுகள் தொடர்புறுகின்றன. பஞ்சம் வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்திலும் மாரியம்மனை இவர்கள் வேண்டுவது குறிப்பிடத்தக்கது.

வருடம் முழுவதும் வெள்ளி, செவ்வாய் தினங்களிலும் மற்றும் விசேட தினங்களிலும் பூசைகள் இடம்பெற்று வருகின்றன. வருடாந்தம் இடம்பெறும் திருவிழா உற்சவம் மார்கழி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை இடம்பெறுகின்றது. இக்காலப்பகுதியின் வறட்சிநிலை, பெருந்தோட்ட உற்பத்தியில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. மேலும் இக்காலப்பகுதியில் தொழில் நடவடிக்கைகளுக்கும் ஓய்வு வழங்கப்படுவதால் தோட்ட நிர்வாகத்திற்குப் பாதிப்பு ஏற்படாது என்ற காரணத்தினால் தோட்டங்களில் மூன்று நாட்கள், ஐந்து நாட்கள் என்றவாறு திருவிழாக்கள் இடம்பெறுவதுண்டு. நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாசி மாதம் பத்து நாட்கள் ஆகம முறைப்படி திருவிழா இடம்பெறுகின்றது. இங்கு மரபு ரீதியிலான அணுகுமுறைகள் தவிர்க்கப்படாமல் பின்பற்றப்படுகின்ற போக்கும் காணப்படுகின்றது.

பொதுவாக தோட்டப்புறங்களில் திருவிழா தொடங்கும் தினத்தில் முகூர்த்தக்கால் ஊன்றுதல் கிரியையோடு ஊர் எல்லைகளுக்கு எல்லைக்காப்புக் கட்டப்படும் (காப்புக் கட்டியவுடன் ஊர் எல்லையைத் தாண்டுதல் கூடாது என்ற ஐதீகம் முக்கியமானது). பூசாரி அன்றிரவு குறி சொல்லுதல் (கிராமத்துக் கேள்வி), ஊரின் தொடக்க எல்லையிலுள்ள நீரூற்றில் கரகம் பாலித்தல், சக்தி கரகம் உட்பட காளி, மாரி தெய்வங்களை அடையாளப்படுத்தும் கரகங்களை அமைத்தல், கரகத்தைத் தூக்குபவர்களை மதிப்பெடுத்தல் அல்லது பூக்கள் கட்டிப்போட்டுத் தெரிவு செய்தல் அல்லது திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகள் இதன்போது முக்கியத்துவம் பெறுகின்றன. கூழ் ஊற்றுதல், அன்னதானம் வழங்குதல், சப்பரத்தில் அம்மனின் ஊர்ப்பவனி, அம்மன் ஊர்வலத்துடன் மலையக மக்களுக்கே உரித்தான கலைகளின் அரங்கேற்றம், அம்மன் குரவை இசைத்தல், அம்மன் தாலாட்டுப்பாடுதல், கும்மி அடித்தல், நாடகங்களின் அரங்கேற்றம், மாவிளக்குப் பூசை, தீ மிதித்தல், பரவைக் காவடி, மஞ்சள் நீர் உற்சவம், ஊர் எல்லையில் கரகம் குடி விடுதல், கட்டுச்சோறு (கருவாடு கலந்த புளிச்சோறு) கட்டுதல், கரகம் குடி விட்டதும் எட்டு நாட்கள் கோயிலை அடைத்தல், எட்டாம் நாள் பலிப் பூசை, தப்பிசை - உடுக்கை - பம்பை ஆகியவற்றை இசைத்தல் போன்ற செயற்பாடுகள் திருவிழாக்காலத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் இயற்கை நேசிப்பும் இயற்கைக்கு நன்றி செலுத்துவதும் கவனிக்கத்தக்கன. சமகாலத்தில் ஆகம முறையினால் இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கொடியேற்றம், சப்பரத்தில் அம்மன் பவனி, தேரோட்டம், உயிர்ப் பலிக்குப் பதிலாக பூசணிக்காய் பலியிடல் போன்ற மாற்றங்கள் அவதானிக்கத்தக்கன.

அம்மன் வழிபாட்டில் நம்பிக்கைக்குரிய அம்சங்களாக பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன:

1. அம்மை நோய் பல வகைகளில் அடையாளப்படுத்தப்படுகின்றது. பெரியம்மா, சடையம்மா, கொத்தமல்லி அம்மா, மணல் அம்மா, தொட்டியம்மா, கஞ்சியம்மா, சொரக்கா அம்மா, அரச இலை அம்மா, தவிட்டம்மா, மண்ணாங்கட்டி அம்மா என்றவாறு வகைப்படுத்தப்படும் அம்மை நோய்க்கு வேப்பிலையும் குளிர்ச்சியான உணவு வகைகளுமே மருந்தாகின்றன. நீர் ஊற்றுதல், எண்ணையும் நீரும் ஊற்றுதல், மாரியம்மன் தாலாட்டுப் படித்தல் போன்ற அணுகுமுறைகள் இந்நோயை குணப்படுத்துவதாக நம்பப்படுகின்றன.
2. மாரி என்றால் மழை எனப் பொருள்படும். கடுமையான வெயிலின் காரணமாக தேயிலைத் தொழிற்துறை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஊர்ப் பெண்கள் ஒன்று சேர்ந்து ஈரச்சேலையுடன் நிறைகுடமாக தண்ணீர் எடுத்து வந்து அம்மன் சிலையில் அல்லது கோயில் கூரையில் ஊற்றுவார்கள். இவ்வாறு செய்தால் மழை வரும் என்பது நம்பிக்கையாகும்.
3. பிள்ளைவரம் (மகப்பேற்று), பால் கட்டியாதலுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் குறித்த நேர்த்திக்கடன்களும் அம்மனில் சுமத்தப்படும்.
4. அம்மனை நினைத்துப் பூசாரிகள் நூல் மந்திரித்துக் கட்டினால் கெட்ட ஆவிகள் நெருங்காது என்பது நம்பிக்கையாகிறது.
5. ஒரு முடிவினை எடுப்பதற்கு அம்மனின் சிலை முன்னால் அல்லது ஆலய வளாகத்தில் பூக்கட்டிப் போடும் வழக்கம் காணப்படுகிறது.
6. தொழில் விருத்தி, பொருளாதார முன்னேற்றம், கல்வி முன்னேற்றம் குறித்த நேர்த்திக்கடன்களும் அம்மனில் சுமத்தப்படுகின்றன.

மாரியம்மனோடு ஊரிலுள்ள ஏனைய சிறுதெய்வங்களும் சகோதரி, சகோதரன் என்ற உறவுமுறைகளுடன் தொடர்புபடுகின்றன. உதாரணமாக காளி, மாடசாமி, மதுரை வீரன் ஆகிய சிறுதெய்வங்களைக் குறிப்பிடலாம். மலையகப் பகுதிகளில் நிலவும் இராமர் வழிபாடு, ஆரியவாதத்தின் ஊடுருவலாக உற்றுநோக்கப்பட வேண்டியுள்ளது. அதன் கட்டாயத்தன்மையில், அம்மனின் அண்ணனாக இராமர் சித்திரிக்கப்படுகின்றமை தொடர்பில் ஆராயவேண்டியது அவசியமாகிறது.

தாழ்த்தப்பட்டவர்களே மாரியம்மன் கோயில்களில் பூசகர்களாக இருந்துள்ளனர். காலப்போக்கில் பிராமணர்கள் பூசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அம்மை நோயுடன் தொடர்புறும் சீதளாதேவி, மகாமாரி, கருமாரி ஆகியனவும் மாரியம்மனின் வேறு பரிமாணங்களாகவே நோக்கப்படுகின்றன. ஆகம அடிப்படையில் அமைந்த கோயில்கள், சிறுதெய்வ வழிபாட்டு மரபின் அம்சங்களுக்கு முரணான அணுகுமுறைகளைக் கொண்டதாக அமைகின்றன. பிராமணர் அல்லது பிராமணத்தை தழுவிய பூசகர் இல்லாத நிலை, உயிர்ப்பலி நடைமுறை, கோயிலுக்குரிய அமைப்பின்மை, கொடூரமான உருவம், அருள்வாக்குக் கூறல் போன்ற சிறுதெய்வ வழிபாட்டு அம்சங்கள் மாரியம்மன் வழிபாட்டில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், நாவலப்பிட்டி முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்கள் உட்பட எல்லா மாரியம்மன் ஆலயங்களிலும் சிறுதெய்வ மரபிற்கு அமைவான அணுகுமுறைகளே பின்பற்றப்பட்டன. அண்மைக்காலத்தில், மேற்குறித்த கோயில்கள் உட்பட நகர்ப்புறங்களில் அமைந்துள்ள அம்மன் ஆலயங்களில், முழுமையான ஆகம விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்டங்கள் மற்றும் கிராமங்களில் (பெருந்தோட்டப் பொறிமுறை கைவிடப்பட்ட இடங்கள்) அமைந்துள்ள அம்மன் ஆலயங்களில் ஆகமமுறைகள் பின்பற்றப்பட்டாலும், அவை சிறுதெய்வ வழிபாட்டு மரபில் இருந்து



காமன் கூத்து
Image Source - globaltamilnews.net

முழுமையாக விலகமுடியாத நிலைக்கு உட்பட்டுள்ளன எனலாம்.

## குடிப்பரம்பல் சிதைவும் வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டமையும்

1987ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தோட்டப்பகுதித் தொழிலாளர்கள் சிறு குழுக்களாக வேறு தோட்டங்களுக்கு மாற்றப்பட்டனர். கொத்மலை நீர்த்தேக்கம் அமைப்பதற்காக, மல்லாந்தை, திஸ்பனை, மொச்சக்கொட்டை, கிளசக்லை, அலுகல்லை ஆகிய தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டன. தோட்டங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டதால் பாடசாலைகள் கைவிடப்பட்டன; வழிபாட்டிடங்கள் முற்றிலும் சிதைக்கப்பட்டன. இந்தப் பகுதியில் காணப்பட்ட மாரியம்மன் ஆலயங்களில் ஒன்று பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச்சாலையாக மாற்றப்பட்டது. இதேபோல், நாவலப்பிட்டியிலும் கனபதி, மாவிலை, மாவத்துரை, தெம்பிலிலை போன்ற தோட்டங்கள் பாதிக்கப்பட்டன. பெரும்பாலான தோட்டப் பிரிவுகளில் அம்மன், காளியம்மன், கங்கை அம்மன் ஆலயங்கள் இருந்தன.

ஊசியிலைக் காடுகள் வளர்ப்பும், சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான ஊக்குவிப்பும் மாறிமாறி ஆட்சிபுரிந்த அரசாங்கங்களின் பெருந்தோட்டங்களைச் சிதைக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளாக முன்னெடுக்கப்பட்டன. 1964ஆம் ஆண்டு ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தத்தின்படி கணிசமானோர் தாயகம்

திரும்பியதால், இந்தப் பகுதிகளில் மலையகத் தமிழர்களின் மக்கள் தொகை குறைந்தது. பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றத்திற்குப் பிறகு, முத்துமாரியம்மன் உள்ளிட்ட பெண் தெய்வ ஆலயங்கள் ‘பத்தினியம்மன்’ ஆலயங்களாக மாற்றப்பட்டன.

இப்பிரதேசத்தில் முனைப்புப்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீர தலைமையிலான கிளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் அதற்கு எதிரான பாதுகாப்புத் தரப்பினரின் செயற்பாடுகள் என்பன தமிழ் மக்களின் சிதைவிற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. பின்னாளில், கட்சி அரசியலைப் பலப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களும் அதில் முக்கிய பங்கை வகித்தன.

## மலையகத்தின் பாதுகாப்புக் கவசமாக அம்மன் வழிபாடு

அதிகாரச் சாதியினரான கங்காணிகள், கங்காணித்தனத்திற்கு ஆதரவானவர்கள் போன்றோரின் பாலியல் இச்சைகளால் மலையகப் பெண்கள் பாதிக்கப்பட்டனர். பிரித்தானியக் காலனித்துவ நிர்வாகிகளும் மலையகப் பெண்களை இக்கண்ணோட்டத்துடன் அணுகினர். துரைமார்களின் ஆதிக்கநிலை அதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது. இந்நிலையில் பெண்கள் பாதுகாப்பற்றவர்களாயினர். இதனால் இவ் அம்மன் வழிபாடு, பாதுகாப்புப் பொறிமுறையாகவும் கவசமாகவும் பிரயோகிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது. அம்மன் எந்தப் பெண் உருவத்திலும் இருப்பாள் என்ற பயம் ஆண்களிடத்தில் நிலைகொண்டது.

இம்மக்களால் நேசிக்கப்படுகின்ற காமன் கூத்து, எல்லாக் கூத்துகளிலும் தலைசிறந்ததாக விளங்குகிறது. அக்காலத்தில் நிகழ்ந்த பலதார மணம், பாலியல் ஒழுக்கமின்மை போன்றவை காரணமாக, காமன் கூத்து ஓர் ஒழுக்கக் கோவையாக, காமத்தை முறையாகக் கைக்கொள்ள வேண்டிய பாடத்திட்டமாக அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் மதிப்பிற்குரியவர்கள் என்பதை ஆண்கள் உணர்வதற்கும், ஆண்களுக்கு உணர்த்துவதற்கும், அம்மன் வழிபாடு பயன்பட்டது. மலையகத்தில் அவ்வப்போது நிகழ்ந்த இனக்கலவரங்களின் போதும், இவ் நம்பிக்கை மலையக மக்களுக்கு உளரீதியான பலத்தைக்கொடுத்தது. இவை மட்டுமல்லாது, சமூக - பொருளாதார - கல்வி - கலாசார அம்சங்களிலும் அம்மன் குறித்த நம்பிக்கைகள் பரவி நிலைபெற்றுள்ளன எனலாம்.

### உசாத்துணைப் பட்டியல்


1. வடிவேலன், பெ. (2007). மலையக நாட்டுப்புறவியலில் மாரியம்மன். மாத்தளை தமிழ் இலக்கிய வட்டம்.
2. ஆனந்தகுமார், பா. (2017). இலங்கை மலையக தமிழ் இலக்கியம். காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம்.
3. முரளிதரன், சு. (2002). வரவும் வாழ்வும் - மலையக நாட்டாரியல் சிந்தனைகள். சாரல் வெளியீட்டகம்.
4. சிவதம்பி, கா. (1993). இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம்.
5. சந்தரா, சு. (2013). தொண்மவியல் கட்டுரைகள். அறிவுப்பதிப்பகம்.
6. சண்முகலிங்கம், க. (1995). தமிழ் நாட்டார் வழக்காற்றியல். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.
7. ராஜப்பா, எம். (1985). மாரியம்மன் உற்பத்தி. நாவலப்பிட்டி, ராஜா அச்சகம்.
8. பொன்னுத்துரை, கே. (1996). சக்தி தத்துவ மலர். நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.
9. சாரல் நாடன் (2003). மலையகத் தமிழர் வரலாறு. இந்து கலாசார அமைச்சு, மத்திய மாகாணம்.
10. சிவலிங்கம், மு. (2010). ஒப்பாரிக் கோச்சி. நாவலப்பிட்டி தமிழ்ச் சங்கம்.
11. 11. சடகோபன், இரா. (2014). கண்டிச் சீமையிலே. எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் பிரைவட் லிமிடெட்.
12. புதிய தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் (2016). நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.
13. மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு (1997). இந்து கலாசார அமைச்சு, மத்திய மாகாணம்.

# வணிக வாழ்க்கையின் வெற்றியில் பெண்களின் பங்களிப்பு

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.


## கணபதிப்பிள்ளை ரூபன்



கந்தரூபன் (ரூபன்) கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

பெண்கள் எமது சமூகத்தின் அடிக்கல்லாகவும் தூண்களாகவும் இருந்ததைப் பற்றிப் பேசுவது அவசியமாகும். இது, இன்றைய இளம்பெண்கள், ஆண்களை மட்டுமின்றி பெண்களையும் வாழ்க்கையின் முன்மாதிரிகளாகக் கொண்டு, தொழில்முனைவோராக முன்னேற உதவுமென நான் நம்புகிறேன். உலகுதழுவிய நிலையில் பெண்களின் பங்களிப்புகளையும் அவர்களது மனப்பான்மைகளையும் பற்றி ஆராயமுன்னர், பெண்களின் பங்களிப்பால் எனது சொந்தவாழ்வில், எனது ஆரம்பத் தொழில்முனைவு வாழ்க்கையில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்தன எனக் கூறுவது முக்கியமாகும்.

எனது தாத்தா களுத்துறையில் வியாபாரம் செய்து வந்தார். பயணத்தில் இருந்த கடினத்தினால் அவர் யாழ்ப்பாணம் வருவது குறைவாக இருந்தது. அந்தச் சமயங்களில் எனது பாட்டியார், ஊரில் பிள்ளைகளுடன் இருந்து அவர்களது கல்வியில் கவனம் செலுத்தினார்; பேரப்பிள்ளைகளை வளர்க்கவும் உதவினார். அதுமட்டுமின்றி, வீட்டுச் செலவுகளைக் குறைப்பதற்காக சிறிய தோட்டங்களை அமைத்து உணவிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்தார். கூடுதலாகக் கிடைத்த பயிர்களை விற்றுப் பணம் சம்பாதித்தார். எனது மூத்த அண்ணன், பாட்டியின் முன்மாதிரியான சிந்தனையால்தான், தான் பல்கலைக்கழகம் சென்று பொறியாளராக வரமுடிந்தது என்று கூறுவார். அவர் தொடங்கிய சுவட்டில், அவருக்குப் பின்வந்தோர் பல்கலைக்கழகம் செல்லப் பாதை அமைந்தது. உண்மையில், எமது பாட்டியார் தான் அதற்கு அடிக்கல் போட்டார்.

அதன்பின் எனது தாயாரின் பங்களிப்பும் அவரது தாக்கங்களும் எனது பிற்கால வாழ்க்கையை வடிவமைத்தது. எனக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போது, எனது தந்தையார் இறந்து விட்டார். எனது தந்தையார் ஒரு மிகச்சிறந்த தொழில்முனைவர். பல தொழில்களை ஆரம்பித்து வெற்றிகரமாகச் செய்து கொண்டிருந்தவர். திடீரென்று மாரடைப்பால் மரணமடைந்தார். அவர் இறக்கும்போது, அம்மாவுக்கு அப்போது 52 வயது. எனது தாயார் திடீரென்று குடும்பத்தின் தலைமையை ஏற்கவேண்டி ஏற்பட்டது. அவரது மனப்பான்மையும் எளிய அணுகுமுறையும் நான் உட்பட எனது ஏழு சகோதரர்களையும், மேல்நிலைக்குக் கொண்டுவர அடிக்கற்களாக இருந்தன. அவர் இன்றும் தனது 95 வயதில் எனது குடும்பத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

எனது பாட்டியாரும் தாயாரும் எனது தொடக்ககால வாழ்க்கைப் பயணத்திற்கு அடிக்கல் வைத்தது போல், எனது பிற்கால வாழ்க்கையைச் சரியாகக் கொண்டுபோவதற்கு எனது மனைவியின் அறிவுரையும் அனுபவங்களும் எனக்கு மிகவும் உதவின. எனது துணைவி ஈழத்தில் போர்க்காலத்திலும் விடாமுயற்சியுடன் படித்து மருத்துவராகினார். அவரது அவ் அனுபவங்கள் இன்றும் எனது 'சிலிக்கன் வலி' வணிகத்திற்கு உதவியாக இருக்கிறது. அதேபோல் என்னை மேலும் சிந்திக்க வைப்பது அடுத்த தலைமுறையான எனது மகள்மார்கள் ஆவர். அவர்கள் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தாலும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பார்த்தால் எனது வாழ்க்கையின் பிரச்சினைகள் பெரிதல்ல எனத்தோன்றும்.



Image Source - startupsmagazine.co.uk

இப்படியான நாலு தலைமுறைகளின் பங்களிப்பால் எனது தொழில் வாழ்க்கையில் இன்று நான் ஒரு வெற்றிகரமான நிலையில் இருக்கிறேன். இவ்வாறு, அவர்களிடம் கற்ற சில விடயங்களை இங்கு பகிரலாமென்று இருக்கிறேன்.



Image Source - alliance-kw.com

- **முடிவெடுப்பவர்கள் (Decision Makers):** வாணிபத்தில் மிக முக்கியமானது, பல்வேறு தகவல்களை மதிப்பீடு செய்து, அதன் நல்ல மற்றும் எதிர்மறை விளைவுகளைப் பகுத்தறிந்து, தகுந்த நேரத்தில் முடிவுகளை எடுப்பதாகும். எனது அனுபவத்தில், பெண்கள் இந்தத் திறனில் சிறந்து விளங்குகிறார்கள் என்பேன். நேரத்திற்கேற்ப முடிவுகளை எடுப்பதன் மூலம், அவற்றின் விளைவுகளைக் கவனித்து தேவையான மாற்றங்களைச் செய்ய முடிகிறது. இன்றும், கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தால், நான் முதலில் எனது தாயாரிடமோ அல்லது மனைவியாரிடமோ தான் ஆலோசனை கேட்பேன்.
- **சூழ்நிலையை அறிந்தவர்கள்:** ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாழ்க்கையின் அனுபவம் மாறுபட்டதாக இருக்கும். அதேபோல் அவர்களது சிந்தனைமுறைகளும் வித்தியாசமானவை. சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப முடிவுகளை எடுப்பது இதில் முக்கியமானதாகும். பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டவர்கள். இது, அவர்களுக்கு சூழ்நிலையை உணர்ந்து, அதற்கேற்ப செயற்திட்டங்களை உருவாக்கும் திறனை வளர்த்துள்ளது.
- **பச்சாதாபம் கொண்டவர்கள் (Empathetic):** உலகளாவிய ரீதியில், தலைவர்களிடம் மனிதாபிமானம், அதாவது பச்சாதாபம் இருந்தால், தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் எனக்கூறப்பட்டு வருகிறது. குறிப்பாக, பெண்கள் தலைமையில் செயற்படும் நிறுவனங்கள், அதிகமான பச்சாதாபத்தைக் காட்டுவதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து வருகிறது என்று கூறப்படுகிறது.
- **மூலோபாய சிந்தனையாளர் (Strategic Thinker):** ஓர் ஆரம்பத் தொழில்நுட்ப நிறுவனத்தை உருவாக்க, பல்வேறு தகவல்களையும் அனுபவங்களையும் ஒருங்கிணைத்து, மூலோபாய அடிப்படையில் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும். பெண்களின் உலக அனுபவமும், அவர்களது தனித்துவமான சிந்தனை முறையும், முக்கியமான மூலோபாய முடிவுகளை எடுக்க பெரிதும் உதவக்கூடியவை.
- **கூடி யோசிப்போர் (Inclusive Thinkers):** உலகில் பெரிய மாற்றங்களை உருவாக்க, அதை நோக்கி முன்னேறுபவர்கள் தங்கள் அணியினரை ஒருங்கிணைத்து, அவர்களது யோசனைகளை வரவேற்றுப் பயனாக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். பெண்கள், ஆண்களை விட அதிகமாகவே, மற்றவர்களின் அறிவுரைகளைக் கேட்டு, அணியினருடன் இணைந்து முடிவுகளை எடுப்பார்கள். இதைச் சிலர் பலவீனம் எனக் கருதினாலும், பிறரது கருத்துகளை இணைத்துக் கொள்வதால், தேவையற்ற பிழைகளைத் தவிர்க்கவும், செயற்திட்டங்களை விரைவாக நிறைவேற்றவும் முடியும்.
- **பல்பணியாளர்கள் (MultiTaskers):** ஆரம்பத் தொழில்நிறுவனங்களை உருவாக்கும் போதும், அதை விரிவுபடுத்தும்போதும், பல்வேறு பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆரம்பத்தில், பொருட்களை உருவாக்குவது, வாடிக்கையாளர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வது, திறமையான அணியினரைச் சேர்ப்பது, சந்தைப்படுத்தலை மேற்கொள்வது, முதலீட்டாளர்களை ஈர்ப்பது போன்ற பல்வேறு பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, பெண்கள்

**எல்லோரது முன்னேற்றத்திற்கும், வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்கும், பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இருப்பினும், அவர்கள் இதை அடைவதற்கு எதிரான சிக்கல்கள், எமது சமூகத்தில் நீண்ட காலமாக நிலவுகின்றன. முன்னேறிய நாடுகளில் கூட, உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில், இன்றுவரை ஒரு பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை.**

ஒரு புதிய முயற்சியைத் தொடங்கும்போது, நேரம் எடுத்துச் சிந்தித்த பின்னரே தொடங்குவதால், தேவைக்கேற்ப திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். இதன் காரணமாக, பல பணிகளை ஒரே நேரத்தில் செவ்வனே நிர்வகிக்கக்கூடிய திறனை அவர்கள் பெறுகிறார்கள்.

- **வலுவான தொடர்பாளர்கள் (Strong Communicators):** மேலே கூறிய பச்சாதாபமும், ஏனைய குணங்களும் பெண்களில் உள்ளதால், அவர்கள் அதைப் பயன்படுத்தி தமது அணியினருடனும் வாடிக்கையாளர்களுடனும் பயனுள்ள முறையில் தொடர்புகொள்கின்றனர். இதன்மூலம், அணியினரை ஊக்குவிப்பதுடன், சிக்கல்கள் எழும்பும்போது தெளிவாகச் செயற்பட்டு நிறுவனங்களை முன்னேற்றவும் செய்கின்றனர்.
- **சவால்களால் தூண்டப்பட்டவர்கள் (Motivated by Challenges):** பெண்கள், சிறு வயதிலிருந்தே வாழ்க்கையில் பல சவால்களை சந்தித்து வந்தவர்களாக இருக்கிறார்கள். எனது இரண்டு பெண்பிள்ளைகள் கூட, அவர்களது பள்ளிப் பருவத்திலும், பல்கலைக்கழகக் கல்வியிலும், அதன்பின்னர் வேலை வாழ்க்கையிலும், ஆண்களைவிட மாறுபட்ட அனுபவங்களைச் சந்தித்திருக்கின்றனர். அவர்கள் இந்தச் சவால்களையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக முன்னேறியும் இருக்கின்றனர். இந்த அனுபவங்களின் மூலம், அவர்கள் தமது திறமைகளை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். பல்வேறு தடைகளை எதிர்கொள்ளும் சூழலில், பெண்கள் மேலும் உறுதி பெறுகின்றனர். சவால்களே அவர்களது முன்னேற்றத்தைத் தூண்டுகிறது.



Image Source - www.linkedin.com/chaitra-raj

எல்லோரது முன்னேற்றத்திற்கும், வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்கும், பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இருப்பினும், அவர்கள் இதை அடைவதற்கு எதிரான சிக்கல்கள், எமது சமூகத்தில் நீண்ட காலமாக நிலவுகின்றன. முன்னேறிய நாடுகளில் கூட, உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில், இன்றுவரை ஒரு பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை. பெண்களது இரக்ககுணம், குடும்ப - வேலை வாழ்க்கையின் சமநிலை, பிள்ளைபெறும் காலங்களில் விடுமுறை போன்ற காரணங்களைக்கூறி பல நிறுவனங்கள் பெண்களின் தலைமைத்துவத்தை நிராகரிக்கின்றன. ஆனால், எனது நம்பிக்கை, பெண்களின் பங்களிப்பு, வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, சமுதாயத்திற்கு பெரிதும் உதவும் என்பதுதான். பெண்களின் பங்களிப்புகளை மனதில் கொண்டு, எனது இரண்டு மகள்களுக்கும், எதிர்காலத்தில் ஆண்களுக்குச் சமமான வாய்ப்புகள் கிடைக்கும் என நம்புகிறேன்.

# வன வளப் பாதுகாப்பும் பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் வாழ்வாதாரத்திற்கான நில உரிமைகளும்: கிழக்கிலங்கையின் வாகரைப் பிரதேசத்தை முன்வைத்து

**வை. ஜெயமுருகன்**

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக ‘இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை’ என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் ‘M.A in Peace Study’ ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.



மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குக் கோறளைப்பற்றுப் பிரதேச செயலக (வாகரை) எல்லைக்குள் உள்ள புச்சாக்கேணி கிராம அலுவலர் பிரிவின் மூன்றாம் கட்டை, நான்காம் கட்டை மற்றும் கல்லரிப்பு ஆகிய பகுதிகளில் 25.02.2025 அன்று சேனைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு எதிராக நடந்த எரிப்பு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள், வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு கிடைத்த பெரும் அவமானமாகும். இந்தச் செயற்பாட்டில் 13 குடிசைகள், குடும்பங்களின் உடைமைகள், உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், நெல், பயறு உள்ளிட்ட தானியங்கள் எரிக்கப்பட்டன. பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்த மக்களுக்கு இது பேரிழப்பாகும். வாழ்வாதாரத்தையும் இருப்பிடத்தையும் இழந்த மக்களின் நிலை மிகுந்த துயரத்தை விளைவிக்கிறது. இந்தச் சம்பவம், உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் வன வளங்களைப் பாதுகாக்கும் முறையைச் சிக்கலாக்கி, வன வளத்திணைக்களத்தின் செயற்பாடுகள் மீதான நம்பிக்கையை மேலும் சீர்குலைத்திருக்கிறது.

வாழைச்சேனை - கருக்காமுனை வன எல்லைப் பிரிவு அலுவலக உத்தியோகத்தர்களே வாகரையில் தீ வைத்தனர்; சமைக்க வைத்திருந்த அரிசிச் சாக்கிலும் சேமித்திருந்த விதைகளிலும் தீ மூட்டினர்; தேனைக்கூட தங்கள் அலுவலகம் கொண்டுசென்றனர். விவசாயிகளும், அவர்களை ஆதரித்த சிவில் அமைப்புகளின் உறுப்பினர்களும் தாக்கப்பட்டனர். மக்கள் பொலிஸில் அளித்த புகார், முதலில் நிராகரிக்கப்பட்டு, பின்னர் அரசியல் அழுத்தத்தால் பதிவாக்கப்பட்டது. இது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. ஆனாலும் இதற்கான நீதி கிடைக்காமல் போகலாம்; காலம் கடந்து செல்லலாம்; ஆனால், நெல் மணிகளுக்குத் தீ மூட்டிய கைகளை காலம் மன்னிக்காது.

உள்நாட்டுப் போரின் போது பொதுமக்களின் சொத்துகளை எரிப்பதும் அழிப்பதும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின்படி கடுமையான குற்றமாகும். பொதுமக்களையும் அவர்களின் உடைமைகளையும் குறிவைப்பது போர்க் குற்றமாகவே கருதப்படுகிறது. இது பெரும்பாலும், எதிரணியை ஆதரிக்கும் மக்களைத் தண்டிக்கவும் மிரட்டவும் செய்யப்படுகிறது. இச்செயலில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், எங்கு இருந்தாலும், அவர்கள் தங்களது வன்முறைக்குப் பொறுப்பேற்றாக வேண்டும். வாகரை எரியூட்டலை போரின் பின்னாலான போர் எனலாம். வன வளத்திணைக்களம் பொதுமக்கள் மீது ஒரு மௌனமான போராட்டத்தைத் தொடருகிறது. பொதுமக்களின் சொத்துகளை எரிப்பது ஒரு திட்டமிட்ட பயங்கரவாதச் செயலே. இது மக்களுக்குப் பயத்தையும் நீண்டகால மனக்காயத்தையும் ஏற்படுத்தும்.

1977 ஜெனீவா உடன்படிக்கையின்படி, போராளிகள் அல்லாதவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. உணவு, விவசாயப் பகுதிகள், பயிர்கள், கால்நடைகள், குடிநீர் வழங்கும் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் உள்ளிட்ட பொதுமக்களின் உயிர்வாழ்விற்கு இன்றியமையாத உடைமைகளைத் தாக்குவது, அழிப்பது அல்லது மாற்றுவது அனுமதிக்கப்படாத செயல்களாகும். வாழ்வாதாரத்தை மறுக்கும் நோக்கில், பொதுமக்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் உள்ளூர் மற்றும் சர்வதேசச் சட்டத்தின் பாய்ச்சலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆனால், இலங்கையில் அது எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பது கேள்வியாகவே தொடர்கிறது.

### போரின் பின்னரான காலத்தில் முக்கூட்டு அரச கட்டமைப்புகளின் நெருக்கடிகள்

போரின் அதிர்வுகள் ஓய்ந்தபின்பு, இடம்பெயர்ந்தவர்களில் பலர் தங்கள் நிலங்களை, வயல்களை, கால்நடைக்கான புல்வெளிகளை மீண்டும் தேடிவந்தபோது, மறுபடியும் துரத்தப்பட்டார்கள், வன்முறையை எதிர்கொண்டார்கள். போர் பலரை நிலமற்ற மக்களாக மாற்றியது. இதில் அரச கட்டமைப்புகளின் பங்கு முக்கியமானது. இந்தவகையில், போரின் பின்னர், வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பான்மையின அடையாளங்களை வலுப்படுத்தி, நில உரிமையாளர்களை நிலமற்றவராக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்த மூன்று நிறுவனங்கள்:

1. தொல்பொருள் துறை
2. வனப் பாதுகாப்புத் துறை
3. வனவிலங்குப் பாதுகாப்புத் துறை

இவை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செயற்பட்டு, அரச அதிகாரத்தின் வலுவுடன் களமிறக்கப்பட்டன. பல பிரச்சினைகளை உருவாக்கி, பதற்றத்தையும் கொந்தளிப்பையும் விதைத்தன. இனஅழிப்பு ஆய்வுகளில், இறப்புகளின் எண்ணிக்கையை விட, அரசின் உள்நோக்கம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதில், அரசின் நிர்வாக அமைப்புகளின் செயற்பாடுகளும் ஆராயப்பட வேண்டும். இந்த மூன்று துறைகளின் செயற்பாடுகள், இன அழிப்புத் திட்டத்தின் முக்கிய அங்கங்களாக உள்ளன என்பதற்கான ஆவணவாக்கம் அவசியம்.

தொல்பொருள் துறை, வடக்கில் உள்ள பல தலங்களை பௌத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கூறுகிறது. இந்த இடங்கள் நீண்டகாலமாகச் சேதமடைந்துள்ளன. தற்போது, அவற்றை மீட்டெடுப்பதில் இத்துறை கவனம் செலுத்துகிறது. தொல்பொருள் அறிவியல் முக்கியமானது என்றாலும், அதன் செயல்முறைகள் மற்றும் அரசாங்கத் திட்டங்களுடன் அதற்கு உள்ள தொடர்புகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். போர் முடிந்ததிலிருந்து, இடம்பெயர்ந்த சமூகங்களின் நிலங்களை அபகரிப்பதற்கான கருவியாக தொல்பொருள் துறை மாறிவருகிறது.

வனப் பாதுகாப்புத் துறை (DFC) நிலத் தகராறுகளில் சிக்கியுள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்த மக்களின் நிலங்களை இது கைப்பற்ற முயல்கிறது. இது பல விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதன் அதிகாரத்தால் உள்ளூர்ச் சமூகங்கள் மற்றும் பழங்குடி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அதேநேரத்தில், இது சிங்களக் குடியேற்றத்திற்கும் இடமளிக்கிறது. வனவிலங்குப் பாதுகாப்புத் துறையும் (DWC) நிலத் தகராறுகளில் ஈடுபட்டுள்ளது. வடக்கில், பாதுகாக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிக்கும் நடவடிக்கையில், மக்களது வாழ்வாதார நிலங்களைக் கையகப்படுத்தும் செயற்பாடு அதிகரித்து வருகிறது.

அரச திணைக்களங்கள் நில அபகரிப்பில் ஈடுபடுவதோடு, இனங்களுக்கிடையே பதற்றத்தை உருவாக்கி, பல்தேசிய வர்த்தக




Image Source - www.dailymirror.lk

அமைப்புகளின் தேவைகளுக்காக நிலங்களை ஏற்பாடு செய்கின்றன என்ற சந்தேகம் அதிகரித்து வருகிறது. வாகரைச் சம்பவம், மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பின் மீதான நம்பிக்கையீனத்தையே மீண்டும் எடுத்துக்காட்டுகிறது. பொருளாதார நெருக்கடியில், விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டிய அரசே, சிறு விவசாயிகளின் நிலங்களை எரித்து அழிக்கிறது. மிகுந்த நெருக்கடியின் மத்தியில் வாழும் மக்களின் வாழ்வாதார உரிமையை, வன்முறையால் காவு கொள்வதற்கு அதிகாரிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது? என்று பாதிக்கப்பட்டோரும், சிவில் அமைப்புகளும் கேள்வி எழுப்புகின்றனர்.

### அரசின் வன மீளுருவாக்கம் மற்றும் வனப் பாதுகாப்புத் திட்டங்களும் பூர்விகப் பழங்குடி மக்களும்

2030க்குள் வனப்பகுதியை 32%ஆக அதிகரிக்க இலங்கை இலக்கு வைத்துள்ளது. இதற்காக:

1. மீள் காடு வளர்ப்பு - பொருத்தமான நிலங்களை அடையாளம் காணுதல்.
2. வன மேலாண்மைத் திட்டங்கள் - இயற்கை காடுகளின் நிலையான பாதுகாப்பு.
3. வன மீள் சீரமைப்பு - சதுப்புநிலங்கள் உட்பட 18,000 ஹெக்டயருக்கு மேல் காடு வளர்ப்பு.

போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

2021-2030 காலகட்டத்தில், வனவியல் துறையின் முயற்சிகள் மூலம், கார்பன் பிரித்தெடுக்கும் திறன் 7%ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2.36 மில்லியன் மெட்ரிக் தொன் கார்பன்டை ஆக்சைட்டிற்குச் சமமாகும். 2015 இல், இலங்கையின் வனப்பகுதி 29.15%ஆக இருந்தது. இதில் ஈரமான, வறண்ட மற்றும் இடைநிலை மண்டலங்களில் உள்ள அடர்ந்த காடுகள், சவன்னாக்கள், சதுப்பு நிலங்கள் ஆகியன அடங்கும். இலங்கை, உயர் பல்லுயிர் வளத்திற்காகவும், வாசனைத்திரவிய மரங்கள், இறப்பர், தேயிலை போன்ற வணிகத் தோட்டங்களுக்காகவும் அறியப்படுகிறது.

இருப்பினும் விவசாயம், தோட்டங்கள், மற்றும் உட்கட்டமைப்புக்காக நிலம் அழிக்கப்படுவதால் வனப்பகுதியின் அளவு குறைந்துள்ளது. சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், வனவிலங்கு வேட்டையாடுதல், காட்டுத் தீ போன்றவை சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. தீவின் 60% பரப்பளவைக்கொண்ட உலர் மண்டலத்தில், 84%ஆன பகுதி பாதுகாக்கப்பட்ட நிலையிலுள்ளது. ஆனால் குடியேற்ற விரிவாக்கம், தெளிவில்லாத எல்லைகள் காரணமாக 0.3% வன இழப்பு விகிதம் காணப்படுகிறது. காடழிப்பைத் தணிக்க தரை ஆய்வுகள், எல்லைப் புதுப்பிப்புகள், செயற்கைக்கோள் கண்காணிப்புகள் போன்ற நடவடிக்கைகள் அவசியமாகும்.

மீள்காட்டுருவாக்கமானது இலங்கை அரசால் மூன்று கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2024-2026 வரையான காடழிப்புத் தடுப்பு வரைபடம் உருவாக்கப்பட்டு, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 142,000 ஹெக்டயர் புதிய பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை உருவாக்கி, ஆண்டுதோறும் 370,000 தொன் ‘CO2’ உமிழ்வைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1992ஆம் ஆண்டு முதல் வன இழப்பைத் தடுக்க திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் போர் காரணமாக அவற்றை மேற்கொள்ள முடியவில்லை. 1992ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘An Environmental Profile of the Batticaloa District’ எனும் ஆவணத்தின்படி, மாவட்டத்தின் வனப்பகுதி கணிசமாகக் குறைந்துள்ளது. தற்போது 53,250 ஹெக்டயராக (மொத்தப் பரப்பளவில் 20.2%) உள்ள வனப்பகுதியை, 17,000 ஹெக்டயரால் அதிகரித்து, 70,000 ஹெக்டயராக உயர்த்துவதே அரசின் இலக்காக உள்ளது. இதற்கான மீள் காடு வளர்ப்பு முயற்சிகள் கோறளைப் பற்று வடக்கு, கோறளைப் பற்று, ஏறாவூர்ப் பற்று ஆகிய பகுதிகளில் தீவிரப்படுத்தப்பட வேண்டும்; மேலும், அனைத்துப் பிரதேசங்களிலும் வேளாண் காடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென ஆவணம் குறிப்பிடுகிறது.

வாகரைப் பிரதேசச் செயலகம், மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு 25,344 குடியிருப்பாளர்களும் 7,820 குடும்பங்களும் உள்ளன. இது மட்டக்களப்பிலிருந்து 65 கி.மீ தொலைவில் அமைந்து, கோறளைப்பற்று வடக்குப் பிரிவின் தலைமையகமாகச் செயற்படுகிறது. வாகரைப் பிரதேச செயலகம் 550 சதுர கி.மீ பரப்பளவில், மாவட்டத்தின் 20.89%ஆன பகுதியை உள்ளடக்கியுள்ளது. பெரும்பாலும் தமிழர்கள் வாழும் இப்பகுதியில் மீன்பிடித்தலும் விவசாயமும் முதன்மையான வாழ்வாதாரங்களாகும். இயற்கை வளங்கள் நிறைந்த வளமான பகுதியாகவும் வாகரை கருதப்படுகிறது.

வாகரை, போர் இடம்பெற்ற பிரதேசமாக இருந்தது; பலர் இடம்பெயர்ந்தனர், பலர் உயிரிழந்தனர். முழுப்பிரதேசமும் இராணுவ மோதல்களின் களமாக மாற்றப்பட்டது. போரின் பின்னர், மக்கள் மீண்டும் நிலங்களுக்குத் திரும்பி, வாழ்வாதாரங்களை மீளுருவாக்கம் செய்தனர். அவர்களின் நிலங்கள் சிறுகாடுகளால் மூடப்பட்டிருந்தன. படிப்படியாக குடியிருப்புகளை அமைத்து, சேனைப் பயிர்கள் மற்றும் கடற்கரையோர வளங்களை வாழ்வாதாரமாகப் பயன்படுத்தினர். இந்த வளங்கள் அவர்களுக்குரியது; அவர்களிடமிருந்து பிரிக்க முடியாதவை.

பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் வாழ்வாதாரமும் வனப்பாதுகாப்பும் ஒன்றிணைந்தவை. மீள்குடியேறிய மக்களின் நில உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியன வனங்களை மீளக் கண்டறியும் திட்டத்தில் முக்கியமாகக் கருதப்பட வேண்டியவை. அவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்ட, சமூக வன உருவாக்கமே தற்போதைய அவசியமான தீர்வாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் நிலஉரிமைகள் ஆகியன சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் ஆகும். இலங்கை ஏற்றுக்கொண்ட வழிகாட்டுதல் கொள்கையின்படி, இடம்பெயர்ந்தோர் (IDPs) தங்கள் வீடுகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்புவதற்கும், பாகுபாடின்றிப் பொதுச் சேவைகளை அணுகுவதற்கும் உரிமை பெற்றுள்ளார்கள். அவர்கள் சொத்துகளை மீட்டெடுக்கவும், இழப்பீடு பெறவும் அரசு அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களுக்கு உரிய நிலங்களை உறுதிப்படுத்தல் மாவட்ட நிர்வாகத்தின் முக்கியக் கடமையாகும். எனவே, வாகரையிலும் இலங்கையின் பிற பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் வன மீளுருவாக்கம் மற்றும் வனப் பாதுகாப்புத் திட்டங்கள், உள்ளூர் மக்களின் வாழ்வாதார உரிமைகளுடன் ஒருங்கிணைந்து அமைய வேண்டும்.

சமூக வனவியல், உள்ளூர்ச் சமூகங்களுக்கு காடுகளை நிர்வகிக்கவும் பாதுகாக்கவும் அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குவதோடு, வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நிலையான மேலாண்மையை உறுதி செய்யவும் உதவுகிறது. சிறிய அளவிலான வன முகாமைத்துவம் ஊக்குவிக்கப்படுவதால், பொருளாதார வாய்ப்புகள் உருவாகின்றன. பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க, சமூகப் பங்களிப்பு அவசியமானது. உள்ளூர்ச் சமூக உரிமைகளை அங்கீகரிப்பதே, இதற்கான முதல் கட்ட வேலையாக இருக்க வேண்டும்.

## கிழக்கிலங்கையின் பழங்குடியினர்

1972ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, பழங்குடி மக்களை, ஒரு பிரதேசத்திற்குப் பிற சமூகங்கள் வருவதற்கு முன்பு வாழ்ந்தவர்களின் சந்ததியினர் என வரையறை செய்தது. அவர்கள் தனித்துவமான சமூக, பொருளாதார, கலாசார பழக்கவழக்கங்களைப் பேணுகின்றனர். மேலும், அவர்கள் ஆதிக்க சமூகங்களிலிருந்து வேறுபடுகின்றனர்; புதிய குடியேற்றங்கள் இவர்களை இடம்பெயரச் செய்து விளிம்புநிலைக்குத் தள்ளி வருகிறது எனவும் ஐ.நா வரையறுக்கிறது.

பூர்வீக மக்களின் வாழ்க்கைமுறை வனச் சூழலுடன் பின்னிப் பிணைந்துள்ளது. நாடோடி வாழ்க்கை முறையாலும், வளங்களின் குறைபாடாலும், இவர்கள் சிறிய குடும்பக் குழுக்களாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொன்றும் ஒரு தனிக் குடும்பம் அல்லது சில நீட்டிக்கப்பட்ட குடும்பங்களைக் கொண்டுள்ளது. இந்தக் குழுக்கள் தெளிவாக வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்றன. ஒவ்வொரு குழுவும் தனித்துவமான வாழ்வியலைக் கொண்டிருக்கின்றது.

வேட்டையாடுதல், உணவு சேகரிப்பு, மாற்றுச் சாகுபடி ஆகியவற்றில் ஈடுபடும் இக்குழுக்கள், தனிப்பட்ட உடைமைகளை மிகக் குறைவாகவே கொண்டுள்ளன. இவர்கள் சுதந்திரமாகச் செல்லும் வாழ்க்கைமுறையுடன் இணைந்து, இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வாழ்கின்றனர். இருப்பினும், நிரந்தரமாகத் தங்கியுள்ள சில குழுக்கள், வளங்களுக்கான சிறந்த அணுகலுடன், வேட்டையாடவும் சாதகமான சூழ்நிலைகளைப் பெற்றுள்ளன.

பழங்குடியினர் சமுதாயத்தின் சடங்குகளும் நம்பிக்கைகளும் இயற்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அவர்கள் குலங்கள், உறவினர்கள், விலங்குகள், தாவரங்கள் என்பன ஆவியோடு தொடர்புடையன என நம்புகிறார்கள். குறிப்பிட்ட மரங்கள், பாறைகள் என்பன வழிபாடுக்கு உரியவை எனக் கருதப்படுகின்றன. இயற்கையின் மீதான வழிபாட்டு முறைகள், சாகுபடி நடவடிக்கைகளின் தொடக்கத்திலும் முடிவிலும் மேற்கொள்ளப்படுவது, அவர்களின் வனச் சூழலுடனான உறவைப் பிரதிபலிக்கிறது.

இலங்கையின் உள்ளகக் காலனித்துவம், பழங்குடியினர் சமுதாயத்தின் அழிவிற்கும், பிளவிற்கும் மற்றும் வெளியாருடனான கலப்பிற்கும் வித்திட்டுள்ளது. மீள்குடியேற்றம் மற்றும் வெளியாரின் வருகை ஆகியன பழங்குடியினரின் வாழ்க்கைமுறையையும் உரிமைகளையும் கேள்விக்கு உள்ளாக்கி, மனிதப் பாதுகாப்புச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழும் கிழக்கின் பழங்குடிச்

சமூகம் (வேடர் சமூகத்தினர்) 'முகுடு வேடர்கள்' அல்லது 'கடலோர வேடர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். அவர்கள், நிலத்தின் ஏனைய பூர்வீக மக்களுடன் முழுமையாகத் தொடர்பு கொண்டவர்களல்லர். பொதுவாகவே, 'வேடர்' என்றால் தோளில் ஆயுதம் ஏந்திய, தலைமுடியைப் பின்னால் கட்டிய, வெற்று மார்புடைய மனிதர் என்றே எண்ணப்படும். ஆனால், இந்தப் பாரம்பரியச் சித்திரம், சமகாலக் கிழக்கு வேடர்களை முழுமையாகப் பிரதிபலிக்காது.

அவர்கள் சில இடங்களில் தனித்துவமான சமூகமாகவும், சில இடங்களில் ஏனைய பழங்குடியினர்களுடன் கலந்த சமூகமாகவும் இருந்து வருகின்றனர். சமூகஅரசியல் மாற்றங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். கிழக்கில் பல பழங்குடியினர் தமிழ்க் குடும்பங்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பரந்த சமூக வாழ்க்கையில் ஒருங்கிணைந்துள்ளனர்.

செலிக்மேன் (Seligmann, The Veddas, 1911) அவர்கள், கடலோர வேடர் சமூகம் தொடர்பான சில விவரங்களைத் தருகிறார்: "அவர்கள் எப்போது அல்லது எப்படி வந்தார்கள் என்பது அவர்களுக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் அவர்களின் மூதாதையர்கள் மேற்கில் மலைகளுக்கு அப்பால் அமைந்துள்ள காலாவிலிருந்து வந்தவர்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். சிலர் அவர்கள் குகுலுகம்மேடாவில் இருந்து வந்து, பின்னர் கடற்கரைப் பிரதேசத்தில் பரவினர் என்று கூறுகின்றனர். குகுலுகத்தின் எனும் இடம் குறித்த கருத்துகள் வேறுபடுகின்றன. சிலர் இது வெருகல் அருகே இருப்பதாகக் கூறுகின்றனர். மற்றவர்கள் அது மிகத் தொலைவில் இருந்திருக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

பல கடலோர வேடர்கள் உள்ளூர்த் தமிழ்க் கிராமவாசிகளிடமிருந்து எளிதில் வேறுபடுத்திக்காட்டும் தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பதில்லை. அவர்கள் தமிழ் பேசுகிறார்கள்; பெரும்பாலும் வேடர் மொழியில் புலமை இல்லாதவர்கள். 'பூனம்மா' மற்றும் 'வசந்தி' போன்ற பெயர்கள் தமிழ்ச் சமூகத்துடனான அவர்களின் ஆழமான ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கின்றன. கடலோர வேடர்கள் பெரும்பாலும் பழங்குடிப் பூர்விகவாசிகள் என்று முத்திரை குத்தப்படுவதை விரும்புவதில்லை. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலவும் சாதிப் படிநிலை, இவர்களைத் 'தாழ்ந்தவர்களாகக்' கருதுவதால் இந்தத் தயக்கம் எழுகிறது. தமிழ்ச் சமூகத்திற்குள், ஒரு தனிநபரின் சாதிக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சாதியை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடு காட்டும் நடைமுறைகள் இன்றும் நீடிக்கின்றன. உள்ளூர்ச் சாதியினர் வேடர் சமூகத்தினரை மிகவும் தாழ்ந்தவர்களாகக் கருதுவதோடு, சமூக ஒடுக்குதலுக்கும் உள்ளாக்கியுள்ளனர்."

கடலோர வேடப் பழங்குடி மக்கள், தங்கள் பாரம்பரியத்தின் வேரைக் கணிசமானளவு இழந்துள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, தமிழில் 'வேடர்' என்று பொருள்படும் 'வேடன்' என்ற சொல், தற்போது பொதுவாக இழிவுபடுத்தும் அல்லது திட்டும் வார்த்தையாகவே பயன்படுத்தப்படுகிறது.

### ஒரு முன்னுதாரணம்: பழங்குடித் தலைவர் திஸ்ஸஹாமியின் போராட்டம்

1981ஆம் ஆண்டில், துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) சில நிபந்தனைகளை விதித்தது. யானைகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைவிடங்களைப் பாதுகாக்க, நீர்ப்பிடிப்புப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கவேண்டி, அவ்வறிக்கை பரிந்துரை செய்தது. விலங்கினங்கள் மற்றும் தாவரங்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்க, இந்தப் பகுதியை தேசிய பூங்காவாக அறிவிக்க அரசாங்கம் முடிவு செய்தது.

விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு ஆணையின் (FFPO) கீழ் உருவாக்கப்பட்ட தேசிய பூங்கா, தனியார் சொத்துகள் மற்றும் மனிதக் குடியிருப்புகளைத் தடை செய்ததால், அங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்த வேடுவர்களின் எதிர்காலம் குறித்துக் கவலை எழுந்தது. வனவிலங்கு 'EIA' குழுவில் சிலர், பூர்விக சமூகத்தினரை வனவிலங்குத்துறையின் கீழ் ஒருங்கிணைத்து, அவர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும்படி வலியுறுத்தினார்கள். ஆனால் அதிகாரிகள் அதை ஏற்கவில்லை. இறுதியில், பழங்குடி மக்கள் முழுமையாக இடம்பெயர வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

ஆனால், சமூகத் தலைவர் திஸ்ஸஹாமி, தனது குடும்பத்துடனும் மேலும் ஏழு குடும்பங்களுடனும் 'FFPO' விதிகளைப் புறக்கணித்து தொடர்ந்தும் அப்பகுதியில் வசித்து வந்தார். இதனால், அரசு அடிபணியும்நிலை வந்தது. இந்த வரலாற்றுச் சம்பவம் பழங்குடிச்

சமூகத்தின் இருப்பு, அடையாளம், தனித்துவம் ஆகியவற்றைக் வெளிக்கொணர்ந்தது. இலங்கையில், பழங்குடியினரின் உரிமைகள் குறித்த அரசியல் உணர்வு இதன்பின்னர் மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

திஸ்ஸஹாமியின் முன்னுதாரணத்தை பார்க்கும்போது, பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் வாழ்வாதாரத்திற்கும் வனத்திற்கும் உள்ள உறவு தெளிவாகப் புரிகிறது. இது கிழக்குப் பகுதியின் பழங்குடிச் சமூகத்திற்கும் பொருந்தும். உள்ளூர் மக்களின் நில உரிமையும், கூட்டு வாழ்வாதாரமும், வனப்பாதுகாப்பும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவை. பழங்குடி மக்களின் வாழ்விடங்களும் வாழ்வாதாரத்தளங்களும் பெரும்பாலும் வனங்களும் கடற்கரையோரப் பகுதிகளும் ஆகவே உள்ளன. வடக்குக் கோறளைப்பற்று வடக்கிலும், மூதூர் மற்றும் வெருகல் பகுதிகளிலும் வாழும் பழங்குடியினரின் வாழ்வாதாரத் தளங்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே, அதனுடன் இணைந்த வனப்பகுதிகளும் நிலைத்து இருக்கும்.

## பாதுகாக்கப்படாத ‘பிற’ காடுகளின் நிர்வாகம்

இலங்கையில் முறையாகப் பாதுகாக்கப்பட்ட காடுகள், மூன்று முக்கியச் சட்டங்களின் கீழ், வனப் பாதுகாப்புத் துறையாலும் வனவிலங்குப் பாதுகாப்புத் துறையாலுமே நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால், COVID19 நோய்த்தொற்றுக்குப் பிறகு, 2020ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம், ‘Other State Forests’ (OSF) என அழைக்கப்படும் பாதுகாக்கப்படாத காடுகளின் நிர்வாகத்தை, விவசாய வளர்ச்சிக்காக, உள்ளூர் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைத்தது. இந்த நடவடிக்கையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கமிருந்தாலும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், இதனால் இக்காடுகள் காடழிப்புக்கு உள்ளாகலாம் எனக் கவலைப்பட்டனர். உயர்நில பாதுகாக்கப்படாத பிற காடுகள், முக்கிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளாகவும், தாழ்நில பாதுகாக்கப்படாத பிற காடுகள், பல தனித்துவமான உயிரினங்களுக்குத் தாயகமாகவும் உள்ளன.

இக்காடுகள் மேகக் காடுகள் மற்றும் மழைக்காடுகள் போன்ற வளமான காடுகளை உள்ளடக்கியிருந்தாலும், ‘பிற காடுகள்’ என்ற அடையாளம் காரணமாக, அவை முக்கியத்துவம் இல்லாதவை எனும் தவறான எண்ணம் உருவாக்கப்படுகிறது. இலங்கையின் காட்டு யானைகளில் எழுபது சதவீதம் இக்காடுகளிலேயே வாழ்கின்றன. இதனால் இப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுவது மனித யானை மோதலை மேலும் தீவிரப்படுத்தக்கூடியது.

ஆயினும், நீதிமன்றத் தீர்ப்பின்படி, பிற காடுகளின் நிர்வாகம் மீண்டும் வனத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. இது 2020ஆம் ஆண்டின் அரசின் ஆணையை ரத்துச் செய்கிறது. பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்தக் காடுகளைத் திறப்பது, அவற்றின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று சூழலியலாளர்கள் அஞ்சியமையே இதற்கான காரணமாகும்.

இவ்வாறான காடுகளின் முகாமைத்துவ முறைமையில் உள்ளூர்ப் பழங்குடிச் சமூகங்களின் பங்களிப்பு அவசியமானதாகும். பாரம்பரியக் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அணுகுமுறை பயனற்றது; இது அழிவையே உருவாக்குகிறது. அரசாங்கம் மற்றும் சர்வதேச நிதியுடன், வனவளத் திணைக்களம் பல ஆண்டுகளாக திட்டங்களை அமுல்படுத்தியபோதிலும், உள்ளூர்ச் சமூகப் பங்கேற்பு இல்லாமையால், அத்திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. இது சமூக வனவியல் (CF) திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளில் காணப்படும் அறிவுத் தட்டுப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. சமூக வனவியல் துறையில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்த வேண்டுமாயின், அரசாங்கக் கொள்கைகள் அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அமையவேண்டும்.

## முடிவு

வனப் பாதுகாப்புக்கு பாதிப்பில்லாத வகையில், பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் நில உரிமைகளைப் பேணுவது வனப்பாதுகாப்புத் துறையின் முக்கிய பொறுப்பாகும். பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்கள் பொறுப்புடன், வெளிப்படையாக இணைந்து செயற்பட்டால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, வனப் பாதுகாப்பும் உள்ளூர் மக்களின் நலனும் ஒருங்கிணைந்த ஒரு சக வாழ்வை உருவாக்கலாம். அண்மையில் வாகரையில் நடந்த சம்பவம் இந்த நம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளது. கொழுத்தப்பட்ட குடிசைகள், எரிக்கப்பட்ட உடைமைகள், உணவுப் பொருட்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் ஆகியன திட்டமிடப்பட்ட தாக்குதல்களாகவே தோன்றுகின்றன.

மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மட்டக்களப்பு மாவட்ட நில உரிமையற்ற

மக்களின் அமைப்பு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. வலுவான குடிசார் அமைப்புகள், பழங்குடி மற்றும் பூர்விக மக்களின் உரிமைகளை முன்வைக்கும் இவ்வாறான பல இயக்கங்கள் உருவாக வேண்டும். இதற்கு, மக்கள் பங்கேற்பிற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். வரலாற்றின்வழி உருவான நம்பிக்கையீனம் இம்மக்களிடையிலும் ஆழமாக உள்ளது. ஆதலால், குடிசார் அமைப்புகளின் வளத்தையும் அர்ப்பணிப்பையும் அதிகமாக இங்கு குவிக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

வாகரைப் பிரதேசம் பல கனிம வளங்களைக் கொண்டுள்ளது. இதனால் பலரின் கவனம் அங்குள்ள வளங்களின் மீது திரும்பியுள்ளது. ஆனால், அங்குள்ள மக்களின் வாழ்வாதாரம், வனப் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கம் ஆகியவற்றின் மீதான இவர்களின் அக்கறை குறைவாகவே உள்ளது. வன வளப் பாதுகாப்புத்துறைக்கும் கனிம வளம் தொடர்பிலான விடயத்தில் பங்குள்ளது போலத் தெரிகிறது.

உள்ளூர் மக்களின் வன உரிமைகளும், வாழ்வாதார வளங்களும் ஒன்றிணைந்தவை; அவற்றைப் பிரிக்கவும் பறிக்கவும் முடியாது. உண்மையான வனப் பாதுகாப்பாளர்கள் அங்கு வாழும் மக்களே. அவர்களின் நலனில் அக்கறை காட்டுவதே, வனப்பாதுகாப்புத்துறையின் சமூக வனவியல் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் செயலாக அமையும்.

எரிப்பது, அழிப்பது, புறம் தள்ளுவது போன்ற செயல்களை இன்றைய சமூகம் ஏற்காது. நேர்மையான சூழ்நிலைகள் உருவாகும்போது, நேர்மையான எதிர்வினைகளும் உருவாகும். எதிர்மறையான சூழ்நிலைகள் தொடர்ந்தால், வனத்தைப் பாதுகாக்க வேண்டிய வனத்துறையே, தனது பாதுகாப்புக்காகப் போராட வேண்டிய நிலை ஏற்படலாம். உள்ளூர் மக்களுக்கும் பழங்குடியினருக்கும் கூட காட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. உள்ளூர் வளங்கள் வணிகப் பொருள்களாக மாற்றப்படக்கூடாது. வளமான காடுகளும் வனப்பான நிலங்களும் எமது உண்மையான சொத்துகள் எனக் கருதும்நிலை தோன்றவேண்டும்.

### உசாத்துணைகள்


1. வன வளத் திணைக்கள அதிகாரிகள் வாகரையில் வைத்த தீ, வீரகேசரி, மார்ச் 09, 2025. Retrieved from: https://www.virakesari.lk/article/208-715
2. வனவள மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை, தினகரன், மார்ச் 25, 2025. Retrieved from: https://thinakaran.com/2025/03/25/133262/
3. அபிவிருத்திக்கு இடையூறாக வனவள திணைக்களம், எஸ்.என்.நிபோஜன், தமிழ்மிரர், ஏப்ரல் 21, 2017. Retrieved from: https://www.tamilmirror.lk/195 148
4. வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு வடக்கு ஆளுநர் கோரிக்கை, வடக்கு மாகாண அரசு, Retrieved from: https://np.gov.lk
5. வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள், மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கனேடிய தூதுவருக்கு கௌரவ ஆளுநர் எடுத்துரைத்தார், வடக்கு மாகாண அரசு, Retrieved from: https://npgov.lk
6. குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பு - அறிக்கைகள், நூலகம் அறக்கட்டளை, Retrieved from: https://noolaham.org/wiki/index.php
7. The Central Environmental Authority, 1992. Retrieved from: https://core.ac.uk/reader/52179110
8. Seligmann, C.G. & Brenda Z., 1911. Retrieved from: https://vedda.org/adivasis/eastcoastveddas/
9. Global Forest Watch. Retrieved from: https://www.globalforestwatch.org/dashboards/country/LKA/4
10. Diana Bernaola R., August 2, 2023. Retrieved from: https://www.forestpeoples.org/en/guestarticle/2023/improveforestconservationrecogniseindigenouslocalrights
11. Kusters, K. & de Graaf, M., 2019. Tropenbos International: Wageningen, Netherlands.
12. Meera Srinivasan, The Hindu. Retrieved from: https://www.thehindu.com/news/international/ourlandsareunderthreatsaytamilsinsrilankaseasternprovince/article34346590.ece
13. Ministry of National Coexistence, Dialogue, and Official Languages, March 2017, pp. 237-245. Retrieved from: https://www.scribd.com/document/452027068/PeopleofSriLankaBook
14. The Centre for Policy Alternatives, August 2024. Retrieved from: https://www.cpalanka.org/wpcontent/uploads/2024/08/TheIntersectionalTrendsofLandConflictsinSriLanka.pdf

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வலுச்சக்தி மூலங்களுக்கான வாய்ப்புகளும் வளங்களும்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் ‘வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்’ என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.


## அமரசிங்கம் கேதீஸ்வரன்



பொருளியல் துறையில் சிரேஸ்ட வளவாளராகவும் பயிற்றுநராகவும் செயற்படும் அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் திட்டமிடலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் II அதிகாரியாக, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றும் இவர், தேசிய பெண்கள் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். 2012 இல் ‘திட்டமிடல் மூலதத்துவங்கள்’ என்ற நூலினையும் 2024 இல் ‘மண்’ என்ற கவிதை நூலினையும் வெளியீடு செய்துள்ளார். இவர் சிறந்த விமர்சகரும் ஆய்வாளருமாவார். வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் உப தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் செயற்பட்டு வரும் ஒரு மூத்த கூட்டுறவாளருமாவார்.

பொதுவசதிகள் துறையின் கீழ் உள்ளடங்கும் ஒரு பிரதான வசதிச் சேவையாக மின்சாரம் மற்றும் எரிபொருள் வழங்கல் என்பன இருந்து வருகின்றன. நாட்டின் அனைத்துப் பிரதான பொருளாதார உற்பத்தி மூலங்களையும் இயக்கும் சக்தி வளங்களாக மின்சாரம் மற்றும் எரிபொருள் வளங்கள் இருந்து வருகின்றன. நீர் மின்வலுவும் எரிபொருள் வலுவும் இணைந்து மின்சாரம் விநியோகிக்கப்படுவதுடன் மாற்றுச்சக்தி வளங்களான காற்றாலைகள் மற்றும் சூரியப்படல்கள் மூலமும் மின்சாரம் உற்பத்திசெய்யப்பட்டு வருகிறது. மின்சார வளங்களில் நீர்வலு மூலமான மின்னுற்பத்தி என்பது இலங்கையின் நிலைத்திருப்பிற்கான நீர் மூலமாக இருந்து வருவதுடன், செலவுச் சுருக்கமான முறையில் நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான உத்தமமான வள மூலமாகவும் இருந்து வருகிறது. எரிபொருள் மூலம் சக்தி பிறப்பிப்பதற்காக நிலக்கரி, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன.

எரிபொருளின் அடிப்படையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் நிதிச் செலவீனம் அதிகமாக இருப்பதால், பெருமளவு அந்நியச் செலாவணி நாட்டைவிட்டு வெளியேறுகின்றது. ஆகவே, இலங்கை 2030ஆம் ஆண்டிற்குள் தனது மின்சாரத் தேவையின் 70 சதவீதத்தை மாற்றுச் சக்திவளங்களில் இருந்து பெறவேண்டும் எனும் சக்தி தன்னிறைவுத் திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. மேலும், 2050க்குள் காபன் சமநிலையை அடையும் நோக்கத்துடன் முன்னேறி வருகிறது. இலங்கையின் பசுமைப் போர்வையை 32%ஆகப் பேணுவதன் மூலம் காற்று மாசடைதலை 14.5%இனால் குறைத்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் மொத்த மின்சார நுகர்வு வருடத்துக்கு 388.4GH ஆகவும், கிழக்கு மாகாணத்தின் மின்சார நுகர்வு வருடத்துக்கு 804.2GH ஆகவும் காணப்படுகின்றன. வடமாகாணத்தில் 11 சேவை வழங்கும் நிலையங்களுக்கூடாக 396,595 உள்ளூர்ப் பாவனையாளர்களும், கிழக்கு மாகாணத்தில் 27 சேவை வழங்கும் நிலையங்களுக்கூடாக 593,270 உள்ளூர்ப் பாவனையாளர்களும் மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனை வகைப்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்யும் போது, உள்ளூர்ப் பாவனையாளர்களுக்காக வடக்கு மாகாணத்தில் 267.5GH மின்சாரமும், கிழக்கு மாகாணத்தில் 519.3GH மின்சாரமும் பயன்படுத்தப்படுகின்றன. வடமாகாணத்தில் மத நிறுவனங்களின் பாவனைக்காக வருடாந்தம் 8GH மின்சாரமும், கிழக்கு மாகாணத்தில் 4.1GH மின்சாரமும் பயன்படுத்தப்படுகின்றன. வர்த்தக நிலையங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தில் 63GH மின்சாரமும், வடமாகாணத்தில் 97.6GH மின்சாரமும் வருடாந்தம் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களால் வடமாகாணத்தில் 1.9GH மின்சாரமும், கிழக்கு மாகாணத்தில் 1GH மின்சாரமும் பயன்படுத்தப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் 99.8 சதவீதமான மக்களும், மட்டக்களப்பில் 99.8 சதவீதமான மக்களும் மின்சார இணைப்பைப் பெற்றுள்ளனர். உள்ளூர் மின்சாரத் திட்டத்திலிருந்து ஒரு சதவீதமான மின்சாரத் தேவையும், மாற்றுச் சக்திவள மூலங்களான சூரிய மின்கலம், இயற்கைவாயு, காற்றாலைகள், சிறிய நீர்வீழ்ச்சிகள் என்பவற்றிலிருந்து 32 சதவீதமான மின்சாரத் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. மாற்றுச் சக்திவளப் பாவனையை அதிகரிக்கக்கூடிய வளங்களும் வாய்ப்புகளும் இம்மாகாணத்தில் அதிகளவில் காணப்படும்போதிலும், இம்மாகாணத்தில் மாற்றுச் சக்திவள மூலங்களிலிருந்து பத்து சதவீதமான மின்சாரமே பெறப்படுகிறது. எரிசக்தி வளங்களைப் பொறுத்தளவில், இலங்கையில் 57.7 சதவீதமானவர்கள் தங்கள் சமையல் தேவைகளுக்காக விறகினைப் பயன்படுத்துவதுடன், 40 சதவீதமானவர்கள் சமையல் எரிவாயுவையும், 1.4 சதவீதமானவர்கள் மண்ணெண்ணையையும், ஒரு சதவீதமானவர்கள் ஏனைய மாற்று வளங்களையும் பயன்படுத்துகின்றனர். வடக்கு மாகாணத்தில் 67.6 சதவீதமானவர்களும், கிழக்கு மாகாணத்தில் 49.2 சதவீதமானவர்களும் சமையல் தேவைகளுக்காக விறகைப் பயன்படுத்தி வருகின்றனர். சமையல் எரிவாயுவினை வடக்கு மாகாணத்தில் 28.6 சதவீதமானவர்களும், கிழக்கு மாகாணத்தில் 47.2 சதவீதமானவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். மண்ணெண்ணையை வடமாகாணத்தில் 2.9 சதவீதமானவர்களும், கிழக்கு மாகாணத்தில் 2.4 சதவீதமானவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

விறகுப் பாவனையை அதிகம் நம்பியுள்ள இவ்விரு மாகாணங்களிலும், கிழக்கு மாகாணத்தில் 56 சதவீதத்தினரும், வடமாகாணத்தில் 44 சதவீதத்தினரும் சேகரிக்கப்படாத விறகினைப் பயன்படுத்தி வருகின்றனர். சேகரித்து வைத்துப் பயன்படுத்தும் விறகுகள் என்ற முறைமையின் கீழ் வடக்கு மாகாணத்தில் 56 சதவீதமானவர்களும் கிழக்கு மாகாணத்தில் 44 சதவீதமானவர்களும் விறகினைப் பயன்படுத்தி வருகின்றனர். வடமாகாணத்தில் 27 சதவீதமானவர்களும், கிழக்கு மாகாணத்தில் 20 சதவீதமானவர்களும் தமது சொந்த வளவுகளில் பெற்றுக்கொள்ளும் விறகினைப் பயன்படுத்தி வருகின்றனர்.



Image Source - blogs.adb.org

இந்தவகையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சக்திவளப் பயன்பாட்டிற்கான பல்வேறு வாய்ப்புகளும் வளங்களும் பயன்படுத்தப்படாதிருப்பதை நாம் அடையாளப்படுத்திக் கொள்ளலாம். இலங்கையின் மொத்தப் பசுமைப் போர்வை 27 சதவீதம் ஆகும். இதில் 90 சதவீதமான காடுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவில் காணப்படுவதால், விறகின் பாவனையை அதிகரிப்பதன் மூலம் மின்சாரம் மற்றும் எரிவாயுவின் தேவையைக் குறைத்துக் கொள்வதுடன், நாட்டின் அந்நியச் செலாவணி வெளியேற்றத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தத்துக்குப் பிந்திய கால அபிவிருத்தித்திட்டங்களின் பயனாக, மரநடுகை மூலம் நீண்டகாலம் பயன்தரும் மரங்கள் நடப்பட்டு வருவதால், காடாக்கத்தின் செறிவு அதிகரித்து வருகின்றது. எனினும் இதிலிருந்து கிடைக்கும் விறகினை, 'கரி பிடிக்கிறது' என்ற காரணத்துக்காகப் பலரும் பயன்படுத்துவதில்லை. இதனால் எரிவாயுவிற்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. குறிப்பாக, சனச்செறிவுடன் கூடிய நகர்ப்புறக் குடியிருப்பாளருக்கு அவசியமாகவுள்ள எரிவாயுவினை, இப்போது தமது சூழலில் காடுகளைக் கொண்ட கிராம மக்களும் பயன்படுத்தத் தொடங்கியிருப்பது சாத்தியமான வள வீணடிப்பாக அமைகிறது.

இலங்கை மின்சார சபையினால் சூரிய மின்சக்தியைக் கொள்வனவு செய்யமுடியாதுள்ளதால், வருடத்தில் பத்து மாதங்கள் சூரிய மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூழல்கொண்ட இந்த இரு மாகாணங்களிலும், அதன் உற்பத்தி தடைப்படுவதாக பலரும் குறைகூறி வருகின்றனர். சிறியளவில் முதலீடு செய்வதற்கு பொதுமக்கள் பலர் தயாராகவிருக்கும் நிலையிலும், மின் கட்டமைப்புகளில் காணப்படும் தகமையின்மை காரணமாக, இத்துறைசார்ந்த ஊக்க முயற்சிகள் போதிய பலனைத் தரவில்லை எனலாம். சூரிய மின்கல உற்பத்தி மூலம் உருவாக்கப்படும் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய 3 அவத்தை மின்பிறப்பாக்கிகள் அவசியமாகவுள்ளது. புதிதாக இதனைச் செய்ய, மின்மாற்றிகளைப் பொருத்த முடியாத நிலை இப்போதைய மின் கட்டமைப்பில் காணப்படுகிறது. இணைப்புக் கேபிள்கள் இல்லையெனவும் மின்பிறப்பாக்கிகளை இறக்குமதி செய்யமுடியவில்லை எனவும் சிறுபிள்ளைத்தனமாகக் காரணம் கூறப்படுகின்றது. தேசிய கொள்கையில் கூறப்பட்டுள்ள 70 சதவீத மாற்றுவலு உருவாக்கத்துக்கேற்ப உள்ளகக் கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். ஆரம்பத்தில் வங்கிகளின் நிதியின் மூலம் சூரிய மின்படல்களை அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்த பலர், அப்போதிருந்த போட்டியற்ற சூழல் காரணமாக அதற்கான இணைப்பை இலகுவாகப்

பெற்றுக்கொண்டனர். ஆனால், முதலீட்டுத் தொழிலாக இதனைச் செய்வதற்கு பல்வேறு தனியார் முதலீட்டாளர்களும் புலம்பெயர்ந்தவர்களும் தயாராகியுள்ள இன்றைய நிலையில், வடக்கு - கிழக்கில் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை, அம் முன்னெடுப்புகளைச் சாத்தியமற்றதாக்கியுள்ளன.

காற்றாலைகள் மூலம் இலங்கையில் மேலதிகமாக மின்சாரத்தை உற்பத்திசெய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 3867 மெகாவாட் மின்சாரத்தினை உத்தரவாதப்படுத்தும் திட்டத்தின் கீழ் 100 மெகாவாட் திறன்கொண்ட 19 காற்றாலைகள் திட்டம், 134 மெகாவாட் திறன்கொண்ட 26 காற்றாலைகள் திட்டம், 35 கிலோமீற்றர் நீளமான மின்கடத்துப் பாதைகள், 220 கிலோவாட் துணைமின் நிலையத்திற்கான திட்டம் போன்றன பேண்தகு சக்திவள அதிகார சபையினால் தயார் செய்யப்பட்டன. பூநகரியில் காற்றாலைப் பூங்காத்திட்டம் உருவாக்கப்பட்டு, இந்தியாவின் அதானி குழுமத்துடன் ஒப்பந்தம் செய்திருந்த நிலையில், மாற்றுக்கொள்கைகளுடன் மீள்வடிவமைப்புச் செய்யப்படுவதற்காக அது தற்போது இடைநிறுத்தப்பட்டு, புதிய ஒப்பந்தம் தயார்செய்யப்பட்டு வருகின்றது. இதனால் இதற்கெனச் செய்யப்பட்ட அனைத்து முயற்சிகளும் கைவிடப்பட்டுள்ளன. இது தேசிய குறிக்கோளை அடைவதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனைத்தவிர, பூநகரி வேரவில் பகுதியில் முன்மொழியப்பட்டுள்ள 204 மெகாவாட் உற்பத்தி செய்யும் 35 காற்றாலைகள் திட்டமும், அனுமதிபெறும் கட்டத்தில், சாத்தியவள ஆய்வு என்ற அடிப்படையில் மட்டும் இன்னமும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இதுவரை நிதிமூலம் எதுவும் இனங்காணப்படாத நிலையில், இத்திட்டமானது நிறைவேற்றப்படுவதற்கு இன்னும் பல வருடங்கள் செல்லக்கூடும்.

### வலுச்சக்தி மூலமான பெற்றோலியம்

வலுசக்தி மூலங்களில் ஒன்றாகக் காணப்படும் பெற்றோலியம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உள்ளூரில் நுகரப்படும் ஒரு பிரதான வலுச்சக்தி வளமாகக் காணப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் மன்னார்க் கடல் பகுதியில் பெற்றோலிய வளம் இருப்பதாக ஆரம்பகட்ட ஆய்வுகள் தெரிவித்திருந்தாலும், அதனைப் பயன்படுத்தும்போது ஏற்படும் உற்பத்திச் செலவுகள் காரணமாக, அது பொருளாதார ரீதியாக குறைவான பயனுடையதாகவே இருக்குமெனக் கணிக்கப்படுகிறது. இதனால், இந்த ஆய்வுகள் தொடர்ச்சியாக கருத்திட்ட மட்டத்திலேயே இருக்கின்றன. பெற்றோலிய வளத்தினைக் கொள்வனவு செய்து வழங்கும் பிரதான பணியை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே மேற்கொண்டு வந்தது. இப்பணியை இப்போது இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனம் (IOC) மற்றும் சீனாவின் 'Sinopec' போன்ற நிறுவனங்களும் செய்துவருகின்றன. கொவிட் நெருக்கடியைத் தொடர்ந்து ஏற்பட்ட டொலர் தட்டுப்பாடு இந்த நிறுவனங்களின் நுழைவுக்கு வாய்ப்பளித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழே மட்டக்களப்பில் 37 எரிபொருள் முகவர்களும், அம்பாறையில் 52 எரிபொருள் முகவர்களும், திருகோணமலையில் 19 எரிபொருள் முகவர்களும் செயற்படுகின்றனர். இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் (IOC) அம்பாறையில் 4 முகவர்களும், மட்டக்களப்பில் ஒருவரும், திருகோணமலையில் 5 முகவர்களும் செயற்படுகின்றனர். வடக்கு மாகாணத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 36 முகவர்களும், கிளிநொச்சியில் 9 முகவர்களும், முல்லைத்தீவில் 9 முகவர்களும், வவுனியாவில் 10 முகவர்களும், மன்னாரில் 12 முகவர்களுமாக மொத்தமாக 76 முகவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் (IOC) யாழ்ப்பாணத்தில் 2 முகவர்களும், கிளிநொச்சியில் ஒருவரும், வவுனியாவில் 2 முகவர்களும், மன்னாரில் ஒருவரும், முல்லைத்தீவில் ஒருவருமாக மொத்தம் 7 முகவர்கள் செயற்படுகின்றனர். இவற்றினூடாக பெற்றோல், 92 Octane, 95 சிறப்புப்பெற்றோல், ஆட்டோ டீசல் என்பனவும் மண்ணெண்ணையும் விற்பனை செய்யப்படுகின்றன. வாகனங்களை இயக்குவதற்காக இவ்விரு மாகாணங்களிலும் பெற்றோலியப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் பிரதான துறைமுகத்திலிருந்து மிகத் தூரத்திலிருக்கும் இவ்விரு மாகாணங்களிலும் போக்குவரத்துச் செலவு காரணமாக பொருள்களின் விற்பனை விலையிலும் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. யுத்தத்துக்கு முந்தைய காலப்பகுதியில் கிளிநொச்சியில் எண்ணெய்க்குதம் செயற்பட்டது. அது இப்போது முழுமையாகக் கைவிடப்பட்டுவிட்டது. வடமாகாணத்துக்குரிய பிரதான வழங்கல் எண்ணெய்க்குதம் இப்போது அனுராதபுரத்திலேயே செயற்படுகிறது.

அங்கிருந்து பவுசர்கள் மூலம் மட்டுமே தரை வழியாக எரிபொருள்களை எடுத்து வருவதால், அடிக்கடி வீதிவிபத்துகள் ஏற்பட்டு எரிபொருள் இழப்பும் ஏற்படுகிறது. முன்னர் புகையிரதம் மூலம் எடுத்துவரப்பட்டபோது இருந்த பாதுகாப்பு, இப்போது இந்த விநியோகத்தில் இல்லாமல் போய்விட்டது. சிறிய எண்ணிக்கையில் அதிகளவிலான பவுசர்கள் மூலம் விநியோகம் இடம்பெறுவதால் விற்பனை விலையும் வேறுபட்டுக் காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் புகையிரதம் மூலம் எரிபொருள் எடுத்துச் செல்லப்படுவதுடன், திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதத்திலிருந்தும் விநியோகம் இடம்பெறுகிறது. எனினும் இதன் முழுநிலைப் பயன்பாடு இப்போது இடம்பெறுவதில்லை. நேரடியாக திருகோணமலைக்கு கப்பல்களில் எரிபொருள் எடுத்துவந்து சேமித்தால்தான் அதன் உத்தமப் பயன்பாடு உச்சமாக அமையும். மாறாக கொழும்புத் துறைமுகம் மூலமே இப்போது இந்த வழங்கற் சேவை இடம்பெறுவதனால், போக்குவரத்துப் பரிமாற்றச் செலவீனத்தை உள்ளடக்கிய விலையையே கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மன்னாரைத் தவிர வேறு பகுதிகளில் மீன்பிடித் துறைமுகங்கள் காணப்படாமையால் கடற்றொழில் சார்ந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் மேலதிக சிரமங்கள் ஏற்படுகின்றன. கிராமத்துக்கு மத்தியிலுள்ள விநியோக நிலையங்களிலிருந்தே கடற்கரைக்கு எரிபொருள்களை எடுத்துச்செல்ல வேண்டியுள்ளதால், மீனவர்களுக்கு இதுவொரு மேலதிகத் தொழிற் சுமையாக இருந்து வருகிறது.

இவ்விரு மாகாணங்களில், மாற்றுச் சக்தி வளங்களில் அதிக வாய்ப்பும் வளங்களுமுள்ள வலுச்சக்தி மூலமாக காற்றாலை மின் உற்பத்தி, சூரிய மின் உற்பத்தி ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. இந்தியாவின் பாண்டிச்சேரியிலிருக்கும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தில் பயன்படும் காற்றானது நேரடியாக வடமாகாணத்தின் மன்னார் - யாழ்ப்பாணம் வரை வீசுவதனால், இக்காற்றின் பயன்பாட்டைக்கொண்டு காற்றாலைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன. காற்றாலைகள் நிறுவப்படும் கரையோரப்பரப்புகள் அதிக சனச்செறிவைக் கொண்டிருக்காததும், காடுகளை அண்மித்ததாகக் காணப்படுவதும் இந்த முதலீட்டு முயற்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன. சமூகப் பாதிப்புகளைக் குறைத்துக்கொண்டு தேசிய நன்மை தரும் இவ்வாறான திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியது நாட்டின் நலன்கருதும் அவசரத் தேவையாகவுள்ளது.

இலங்கையின் மின் விநியோகக் கட்டமைப்புகள், ஆரம்பம் முதலே நீர் மின் சக்தி, பெற்றோலியம், நிலக்கரி என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்டுள்ளதால், சூரிய மின்கலம் மூலம் மின்சார உற்பத்தியைச் செய்வது இங்கு சிரமமானதாக உள்ளது எனலாம். ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகள் தேசிய கட்டமைப்பிலிருந்து வரக்கூடிய மின்சாரத்தை வழங்கல் செய்வதற்கேற்ற Kw செயற்றிறனைக் கொண்டவையாகவே இருக்கின்றன. இந்தக் கட்டமைப்புச் சூழலில், புதிதாக சூரிய மின்கலங்கள் மூலம் உற்பத்தியை மேற்கொள்ளும் செயற்பாட்டில், மின்சாரத்தைப் பரிமாற்றம் செய்யக்கூடிய உபமின் பரிமாற்று நிலையங்களின் (Grid Station) செயற்திறன் அளவு குறைவாக இருப்பது, பிரதான பிரச்சினையாக உள்ளது. மின்சாரத்தைச் சேமித்துவைத்துப் பயன்படுத்தமுடியாத நிலைமையில், அதனை பிறிதொரு வழங்கல் சேவைக்கு பரிமாற்றம் செய்தல் வேண்டும்.

சூரிய மின் உற்பத்தியானது பகல் பொழுதில்தான் உச்ச அளவில் இடம்பெறுகிறது. அதன் பயன்பாடு பகலைவிட இரவில்தான் அதிகளவில் நிகழ்கின்றது. இதனால் இந்த உள்ளீட்டு - வெளியீட்டுப் பொறிமுறையில் நினைத்த நேரத்தில் மாற்றங்களைச் செய்துகொள்ள முடியாதுள்ளது. இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கேற்ற வகையில் உபமின் பரிமாற்று நிலையம் ஒன்றை மேலதிகமாக அமைத்துக் கொள்வதன் மூலம்தான், மின்மாற்றிகளின் தொகையை அதிகரிக்கலாம் என்பதனால், சூரிய சக்தியின் வினைத்திறனை உயர்த்துவதில் இதன் தேவைப்பாடு அவசியமாகியுள்ளது. காற்றாலைகளும் தமது மின்னுற்பத்தியை, நேரடியாக அமைக்கப்படும் தனியான வழங்கல் கட்டமைப்பின் மூலம், அனுராதபுரத்திலுள்ள மின் பரிமாற்று நிலையத்துக்கு வழங்கித்தான் தமது செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இந்தவகையில், இவ்விரு உற்பத்தி முயற்சிகளிலும் அதிகளவான வாய்ப்புகள் காணப்படும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில், இவற்றை முழுமையாகச் செய்வதற்கு, சாத்தியமான கட்டமைப்பு விரிவாக்கமானது திட்டமிடப்பட்டு, வளங்கள் உத்தமமாக்கப்படல் வேண்டும்.

# வணிக முகாமைத்துவம், தகவல்தொழில்நுட்பம் ஆகிய பட்டப்படிப்புகளை வடக்கில் அறிமுகம் செய்யும் வடக்குப் பல்கலைக்கழகம்

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே ‘வளரும் வடக்கு’ எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

தமிழில்: த. சிவதாசன்




**ஜெகன் அருளையா**

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

எனது வீட்டிலிருந்து யாழ்ப்பாண நகரம் நோக்கி நான் போகும்போதெல்லாம் அரசடி/ பலாலி வீதிகளின் சந்தியில் இருக்கும் SLITT வடக்குப் பல்கலைக்கழகத்தின் (SLIIT Northern Uni - NU) கட்டடத்தைக் கடந்து போவதுண்டு. சென்ற வருடம் (2023), இக்கட்டடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டதிலிருந்து, தூண்கள் நிறுவப்பட்டு, கண்ணாடி யன்னல்கள் பொருத்தப்படுவது என அதன் உருவாக்கத்தை மிகவும் ஆர்வமாக அவதானித்து வந்தவன். எதிர்காலக் கனவுகளைச் சுமந்துகொண்டு நம்பிக்கையோடு வந்து போகும் இளைய தலைமுறையினர் ஊடாடும் இடமாக இக்கட்டடம் பிரமிக்கத்தக்க வகையில் இப்போது எழுந்து நிற்பது மகிழ்வைத் தருகிறது. இயல்பாகவும், நிதானத்துடனும், மகிழ்ச்சியாகவும் ஊடாடும் இளங்கலை மாணவர்கள் உலகின் எந்தவொரு நாட்டிலுமுள்ள பல்கலைக்கழகத்திற்கும் சென்றிருக்க முடியும். ஆனால் அவர்கள் இந்த புராதனமான யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும், துலங்கும் புதிய கட்டடத்தில் ஒளிரவே விரும்பியிருக்கிறார்கள். யாழ். பல்கலைக்கழகம் உட்பட மதிப்புள்ள பல மூன்றாம் நிலைக்கல்வி நிலையங்கள் (டிப்ளோமா, பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைகள்) யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. கனடாவைச் சேர்ந்த முதலீட்டாளரும் தமிழருமான இந்திரகுமார் (இந்தி) பத்மநாதன், இலங்கை SLIIT நிறுவனத்துடன் இணைந்து, வடக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளார் (Northern Uni - NU). எனக்குத் தெரிந்த வரையில், யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நிறுவப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் இதுவெனவே நான் கூறுவேன். பல ஏக்கர்கள் நிலத்தில் அவர்கள் நிறுவவிருக்கும் பல வளாகங்களிற்கான ஆரம்பமே இது.

இக்கட்டடத்தை நான் அடிக்கடி கடந்து போயிருந்துங்கூட, பீடாதிபதியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளும்படி அழைக்கப்படும்வரை, ஒரு நாளாவது உள்ளே எட்டிப் பார்த்திருக்கவில்லை. கலிஃபோர்னியா சிலிக்கன் பள்ளத்தாக்கில் தனது தொழிலை ஸ்தாபித்துக்கொண்டவரும், கனடாவைச் சேர்ந்தவரும், எனது நண்பருமான ராஜன் பாலா இந்நிகழ்விற்கு என்னை அழைத்திருந்தார். 40களில் உலவும் ராஜன் 45 வருடங்களை 'வடக்கிற்குத்' தானம் செய்யத் தீர்மானித்திருப்பவர். புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது பணத்தையும், முதலீடுகளையும் மட்டும்தான் நம் நாட்டிற்குத் தானம் செய்பவர்கள் என்றில்லை. தமது சொந்தநேரம், திறன்வளம், முக்கியமாகத் தமது தொடர்புகள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும் முதலீட்டாளர்களையும் வாடிக்கையாளர்களையும் பெற்றுக்கொடுக்க இவர்கள் ஏதுவாக இருக்கிறார்கள். தனது வடஅமெரிக்க வலையமைப்பின் மூலம் ராஜன் பல செயற்திட்டங்களை யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குப் பெற்றுத்தந்திருக்கிறார். கனடிய தமிழரான 'இந்தி', வடக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தனது மூலதனத்தையும் பட்டறிவையும் கொண்டுவருகிறார். இங்குதான் புலம்பெயர் தமிழர்களின் உண்மையான திறமையையும் வலுவையும் காணக்கூடியதாக இருக்கிறது. இருந்தும் வடமாகாணத்தில் திறமையும், வலுவும் போதாமலே இருக்கின்றன.

கட்டடத்தின் வெளிப்புறப் பிரமாண்டத்தைவிட அதன் உட்புறமும் அங்கு காணக்கூடிய மனிதநடமாட்டமும் மேலும் பிரமிப்பைத் தருகின்றன. பிரமாண்டமான கண்ணாடிக் கட்டடத்தை எழுப்புவதற்குப் பணம் தேவை; நிலம் தேவை; கட்டடக் கலைஞருக்கு கட்டணம் செலுத்த வேண்டும்; ஒப்பந்தக்காரரைத் தேடவேண்டும். ஒரு பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கு இதைவிட இன்னும் அதிகம் பணம் வேண்டும்.

ஓர் இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், அங்குள்ள கழிப்பறைகளைப் பார்க்கவேண்டும் என்று என் தாயார் தனது மூன்று பிள்ளைகளுக்கும் அறிவுறுத்துவார். எங்களை இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் தங்கிப் படிக்கவைப்பதற்கு முன், அவற்றையெல்லாம் எமது தாயார் தனது கண்களாலும் நாசியினாலும் முறையாகப் பரிசீலித்து விடுவார் (எவற்றையும் அவர் தொட்டுப் பார்ப்பதில்லை). அதிர்ஷ்டவசமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக, மத்தியகாலத்து ஆங்கிலேயப் பிரபுக்களால் கட்டப்பட்ட மதிப்பிற்குரிய கல்லூரிகள் எமது அன்னையாரின் சோதனைகளில் சித்திபெற்றுவிட்டன. எனது தாயாரை முன்னுதாரணமாக வைத்து வடக்குப் பல்கலைக்கழகத்தின் கழிப்பறைகளையும் நான் பார்த்தேன். அவை அனைத்தும் பரிசுத்தத்தின் அடையாளங்களாக இருந்தன. தீயணைப்புக் கருவிகளும் எச்சரிக்கை மணிகளும் கட்டடமெங்கும் பொருத்தப்பட்டிருந்தமையும், பொதுவிடங்கள் துப்புரவாக இருந்தமையும் ஆச்சரியமாக இருந்தது. வகுப்பறைகள் மிகவும்

அமைதியான ஒழுங்கைப் பின்பற்றியிருந்தன. எனது வரவு மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படாத ஒன்றாக இருந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டியது.




**Prof Nimalathasan (Head, Business Management); Rajan Bala (Head ICT); Jekhan Aruliah (article author)**

**Image Source - www.lankabusinessonline.com**

இந்திரகுமார் பத்மநாதனின் தொலைநோக்கு இலக்கின் சாத்தியமே வடக்குப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம், மானிப்பாயில் பிறந்த இந்தி தனது மூன்று சகோதரர்களுடன் 1983ஆம் ஆண்டுப் போரின் ஆரம்பத்தில் புலம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களுடன் கனடாவுக்குச் சென்றவர். தொழில்முனைப்புகளை, தேவைக்காகவும் சூழல் காரணமாகவும் அல்லாது, விருப்பத் தேர்வாகக் கொண்டவர்களே உண்மையான தொழில்முனைவோராவர். நிர்வாக, நிபுணத்துவ வேலைகளை மட்டுமே தேடிப்போகும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் வெகு அருமையாகக் காணப்படுவது இக்குணாதிசயம். இந்தி ஓர் உண்மையான தொழில்முகவர். 'மஜிக்வூட்ஸ்' (Magic Woods) என்னும் பெயரில் கனடாவில் ஒரு வெற்றிகரமான தளபாட உற்பத்தி நிலையத்தை நடத்திவருபவர். வடஅமெரிக்காவிலுள்ள பிரபல தளபாட விற்பனை நிறுவனங்களான 'ஹோம் டிப்போ' (Home Depot), 'மேனார்ட்ஸ்' (Menards), 'லோவ்ஸ்' (Lowes) போன்றவற்றிற்கு சமையலறை மற்றும் கழிப்பறைத் தளபாடங்களை விநியோகிக்கிறது ரொறொண்டோவைத் தளமாகக்கொண்ட 'மஜிக்வூட்ஸ்'. 'மஜிக்வூட்ஸ்' இப்போது அமெரிக்கா, இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல உலகநாடுகளிலும் தமது உற்பத்தி ஆலைகளைத் ஸ்தாபித்துள்ளது.

வடமாகாணத்தில் தனது முதலீடுகளையும் திறமைகளையும் வழங்குவதன் மூலம் தாய்மண்ணிற்கான தனது கடனைத் திருப்பியளிக்க வேண்டுமென்பதே இந்தியின் இலக்கு. இது இலங்கைக்கும் பலன்தரும். இலங்கையில் அதிகம் பேசப்படும் குறைபாடுகளில் ஒன்று கல்வியின் போதாமை. இடப்போதாமை காரணமாக, ஏற்கெனவே இயங்கும் மூன்றாம் நிலைக்கல்வி (பாடசாலைக் கல்வி நெறிகளுக்கப்பால்) நிறுவனங்களால் போதியளவு தகமைசார் மாணவர்களை உள்ளீர்க்க முடியாமல் இருக்கிறது. சமகால உலகின் காலத் தேவைகளை அனுசரித்துப் போவதில் தயக்கம் காட்டும் கல்வித்திட்டத்தினால் பொருளாதார மேம்பாட்டுக்கான தேவைகளையோ அல்லது மாணவர்களது எதிர்காலத் தேவைகளையோ பூர்த்தி செய்யவல்ல கற்கைநெறிகளை முன்வைக்க முடியாமலிருக்கிறது. உணவைச் சமிபாடடையவிடாது மீட்டெடுக்கும் நடைமுறைபோல் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை 'இரை மீட்கும்' கல்வியைத்தான் எமது கல்விநெறிகள் புகட்டுகின்றன. இது தொழில்நுட்பத்துறையினருக்கு மட்டுமானதல்ல. அதி வேகமாகக் குதித்துக்கொண்டிருக்கும் நவீனங்களைச் சுவைத்துச் செரித்து விரும்பியதைக் கைப்பற்றக்கூடிய கல்வியே மாணவர்களுக்குப் புகட்டப்படவேண்டும். பழையவற்றை நினைவில் இருத்தி இரைமீட்கும் நடைமுறையால் மின்னல் வேகத்தில் நடைபெறும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது. ஆயிரமாயிரம் பக்கங்களை வாசித்துக் கிரகிக்கவேண்டிய தேவை வழக்காடிகளுக்கு இனிமேல் தேவையில்லை. பொறியியலாளர்களும் கட்டடக்கலைஞர்களும் இனிமேல் செயற்கை விவேகப் பொறிமுறைகளையே தமது தேவைகளுக்குப்

பயன்படுத்துவார்கள். இரைமீட்கும் கல்விமுறைக்குப் பழகிப்போன மாணவர்களைப் புதிய தொழில்நுட்பங்கள் தேவையற்றவர்களாக்கிவிடும்.

வடக்குப் பல்கலை, இந்தியின் 'மஜிக்குரூப்' (Magick Group) நிறுவனமும் சிறீலங்கா தகவல் தொழில்நுட்ப நிறுவனமும் (Sri Lanka Institute of Information Technology - SLIIT) இணைந்து உருவாக்கிய ஒன்று. 1999 இல் உருவாக்கப்பட்ட SLIIT, இலங்கையில் பட்டங்களை வழங்கும் நிறுவனமாக இலங்கை அரசின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானிய ஆணையத்தினால் (University Grants Commission - UGC) அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இதனால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களுக்கு தொழில்நுட்பத் துறையினர் மத்தியில் மிகுந்த செல்வாக்குமுண்டு. என்னிடம் வேலைக்கு விண்ணப்பிக்கும் ஒருவரின் அறிமுகப்பத்திரத்தில் SLIIT இன் பெயர் இருந்தால் அதை நான் முனைப்புடன் கையாள்வேன்.

வடமாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் கல்வி கற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதியுச்ச புள்ளிகளைப்பெற்ற தலா மூன்று மாணவர்களுக்கு வடக்குப் பல்கலைக்கழகம் (NU) தனது 'YES Fund' (Yarl Education Fund) நிதியத்தின் மூலம் மொத்தம் 5 புலமைப் பரிசில்களை வழங்குகிறது. பழமை பேணும் யாழ்ப்பாணத்துப் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளைக் கொழும்பு போன்ற தூர நகரங்களுக்கு அனுப்பத் தயங்குகிறார்கள். வடக்குப் பல்கலை போன்ற பல்கலைக் கழகங்களிற்குச் செல்லும் இப்படியான மாணவர்கள் மாலையில் வீடு திரும்ப வசதியாகவிருக்கும். அம்மாவின் சமையலுக்கும் ஆடைச்சலவைக்கும் அம்மாவைச் சுற்றிவரும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆண் மாணவர்களுக்கும் NU மிகவும் வசதியானது.

யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் பல தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து பயிற்சிப் பணியாளர்களைப் (Interns) பெறுவதற்கென NU இந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. ராஜன் பாலாவின் தலைமையில் இயங்கும் புலம்பெயர் வலையமைப்பின் உதவியுடன் யாழ்ப்பாணத்து நிறுவனங்களுக்கு வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம், இருதரப்பும் பரஸ்பர பலன் பெறுநர்களாக இருக்க முடிகிறது.

SLIIT ஒரு நாடு தழுவிய நிறுவனமாக இருப்பதால் தொழில்துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவருகிறது. குறிப்பாக SLIIT இன் பழைய மாணவர்கள் மூலம் அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் வேலைகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிறுவனங்களில் எத்துறைகளில் பணியாளர் தேவை, அவற்றின் தற்கால, எதிர்காலத் தேவைகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதன் மூலம் NU தனது கல்வித்திட்டங்களை நெறிப்படுத்துகிறது. 2024 ஆம் ஆண்டின் முடிவில் NU செயற்கை விவேகம் (AI), றோபோட்டிக்ஸ் (Robotics) போன்ற துறைகளில் டிப்ளோமா பட்டங்களை வழங்கத் தயாராகிவிடும். SLIIT இன் கொழும்பு வளாகத்தில் இவற்றுக்கான கற்கைநெறி தற்போது செயற்பாட்டில் இருக்கிறது.

வடக்கில் இப்போது மிக முக்கிய தேவைகளில் ஒன்றாக இருப்பது வணிக முகாமைத்துவம் (Business Management - BM). வடக்குப் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் இத்துறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் பி. நிர்மலதாசன் இரண்டு வருட விடுப்பில் வந்து இத்துறையை ஸ்தாபிக்கவிருக்கிறார். விடுப்பிற்கு முன்னர் அவர் யாழ் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகக் கல்விப் பிரிவின் பீடாதிபதியாகப் பணியாற்றியிருந்தார்.

வடக்கிலிருக்கும் பல தொழில் ஸ்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு வகையில் அப்பாவிகள் என்றே கூறலாம். இங்கு பணியாற்றும் பலர் திறமைகளையும், தகமைகளையும் கொண்டிருந்தாலும், அனுபவம் குறைந்தவர்களாக உள்ளனர். சிறந்த உற்பத்திகளைத் தரும் இவர்களுக்கு அவற்றைத் திறமையாகச் சந்தைப்படுத்தவோ, பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் சரியான விலையை நிர்ணயம் செய்யவோ, விநியோகப் பாதைகளையும் நிதித் தேவைகளையும் நிர்வகிக்கவோ ஏற்ற நிபுணத்துவம் இல்லை. தமது முழுமையான திறன்களையும் வெளிப்படுத்துமளவிற்கு வளரவோ, விரியவோ, இசைவடைவதற்கோ ஏற்ற அனுபவம் அவர்களிடம் இருப்பதில்லை. இப்படியான திறன்களையுடையவர்கள் வடக்கிலிருப்பின் அவர்கள் வடக்கிற்கு வெளியே பணியாற்றிய அனுபவம் கொண்டவர்களாகவோ அல்லது புலம்பெயர் நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டவர்களாகவோதான் இருக்கிறார்கள். இவ்வகையான திறமைகளைக் கொண்டிராத நிறுவனங்களால் வடக்கிற்கு அத்தியாவசியமான வேலைகளையோ, செல்வத்தையோ, பொருளாதார

அபிவிருத்தியையோ கொண்டுவர முடியாது. போர்க்காலத்தில் வடக்கிலிருந்த நிறுவனங்கள் தமது எல்லைகளுக்கு அப்பால் எட்டியே பார்த்திருக்கவில்லை; வணிக முகாமைத்துவம் என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை. இப்போது, இந்த நாடும் உலகமுமே அவர்களது சந்தை. உலகம் முழுவதிலுமிருந்து வியாபாரிகள் அவர்களுக்கு எதிராக சந்தையில் போட்டிக்கு வருகிறார்கள். போர்க்காலத்தில் பொருளாதாரத் தடையினால் போட்டிகளின்றி ஏகபோக சந்தையை அனுபவித்த வடக்கின் நிறுவனங்கள் இப்போது தமது சுற்றங்களில்கூட வியாபாரம் செய்ய முடியாது நொருங்கிப்போய் விட்டன. நான் சென்று பார்வையிட்ட பல உணவு, பானம் மற்றும் ஆடையுற்பத்தி நிறுவனங்களில் சில மீண்டும் முகிழ்க்க முயன்றாலும் பல ஆபத்தான நிலையிலேயே உள்ளன.

யாழ்ப்பாணம், ஊவா வெல்லஸ, வவுனியா ஆகிய பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வடக்குப் பல்கலையில் பணியாற்றுகிறார்கள். அரைவாசிக்கு மேற்பட்டோர் SLIIT பட்டதாரிகள்; பலர் சில வருடத் தொழில்துறை அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட பிறகு கற்பிக்க வந்தவர்கள். மாணவர்கள் அனைவரும் தமிழ் பேசுபவர்களாக இருந்தாலும் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலமொழியில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் கவுன்சில் அங்கீகாரம் பெற்றவர்களால் ஆங்கிலக்கல்வி போதிக்கப்படுகிறது. ஒரு பட்டத்தால் திறக்கமுடியாத கதவுகளை ஆங்கில அறிவு மட்டுமே திறந்துவிடக்கூடியதாக இருக்கிறது.

பல ஏக்கர்கள் நிலப்பரப்பில் அமைந்த வளாகத்தை உருவாக்குவது முதல் பாடசாலை மாணவர்களுடன் கரம் கோர்க்கும் திட்டங்கள் வரை, நீண்ட, மத்திம, குறுகிய திட்டங்களை வடக்குப் பல்கலை வைத்திருக்கிறது. க.பொ.த. உயர்தரப் பீடங்களிலேயே வணிக முகாமைத்துவத்தைக் கற்பிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தும் எண்ணம் வடக்குப் பல்கலையிடமுண்டு. தமது எதிர்காலக் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் முன்னரே மாணவர்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய பட்டப்படிப்புக்கான

Image Source - www.lankabusinessonline.com

தேர்வுகள் பற்றி அவர்கள் அறிந்திருக்க வேண்டும். மருத்துவம், கணக்காண்மை, பொறியியல் துறைகளுக்கும் அப்பால் பெருமை தரும், வருமானத்தை அள்ளி இறைக்கும் வேறு துறைகளும் இருக்கின்றன என்பதை பெற்றோர்களும், உறவுகளும், வரப்போகும் சம்பந்திகளும் அறிந்திருக்க வேண்டும்.

இக்கட்டுரை நவம்பர் 27, 2024 லங்கா பிசினெஸ் ஒன்லைன் பத்திரிகையில் பிரசுரமானது.




த.சிவதாசன்

1983ஆம் ஆண்டு முதல் கனடாவில் வசித்துவரும் தொழில்முறை மின்பொறியாளரான த. சிவதாசன் அவர்கள் தனது கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டார். கனடாவின் ‘TVI’ எனும் தொலைக்காட்சியில் ‘வெளிச்சம்’ என்ற பெயரில் சமகால அரசியல் நிலைவரம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறார். விபுலானந்த அடிகளின் யாழ் நூல் மூன்றாம் பதிப்பு, மு. தளையசிங்கம் படைப்புகள் போன்ற நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். எழுத்து, ஆய்வு, விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்று வரும் இவர், கனடாவில் முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த ‘தமிழ் எழில்’, ‘நலம்’, ‘மறுமொழி’ ஆகிய சஞ்சிகைகளினதும் ‘வீடு’ எனும் பத்திரிகையினதும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ‘தாயகம்’ என்னும் பெயரில் கனடாவில் வெளிவரும் சஞ்சிகையில் ‘அசை’ என்னும் தலைப்பில் பத்திகளை எழுதியதால் ‘அசை சிவதாசன்’ என இலக்கிய வட்டத்தில் அறியப்படுகிறார். ‘மறுமொழி.கொம்’ என்னும் இணையத்தளத்தைக் கடந்த பதினைந்து வருடங்களாக நடத்தி வருகிறார்


SpotOn
Money
SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE*
Immediate Payment to Any Account
Partnership with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT
Cash Pickup at any
Cargills food city
get 5% Discount*
on Purchases
0207 341 7300
www.spoton.money
Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)
* T & C Apply


Protection For You
& Your Family
Our services
Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «
Are You Getting Million Dollar Advice?
Life 100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Sritharan Thurairajah CLU, CHS
Simple Solution in a Critical Situation


Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant
nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4
CPA
CHARTERED
PROFESSIONAL
ACCOUNTANT

maanudam foundation
மானுடம் நிறுவனம்

# நூல்சார் செயற்பாடுகள்

**குறைந்த விலைப் பதிப்பு நூல்களை வெளியிட நிதி உதவி**

யுகமுடிவும் பின்னரும் : கவிதைகள்
- நிலாந்தன்

நினைவுகளே எங்கள் கேடயம் :
நான்காவது அனைத்துலகத்
தமிழாராய்ச்சி மகா நாட்டுப் பதிவுகள்
- என். செல்வராஜா

பாலையும் சோலையும் : தன் வரலாறு
- சொக்கன்

ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும் :
தண்பதம் 2022 -
ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்


















**பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிப்பதன் மூலம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் புத்தகங்களைப் பரவலாக்குதல்**

விம்பம் : ஓவியர் ஆசை இராசையா
காலவரை கார்ட்டூன் : ஓவியர் செல்வன்

***வாசிப்போம் வளமாவோம்***



RE/MAX
யாழ் மண்ணில்
வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்
RE/MAX
ELITE
021 224 2855 | 0777 44 1113
இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)
BUY-SELL-RENT HOME AND LANDS
WWW.REMAXELITE.LK


We work with
35 financial
institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

| London | Colombo | Jaffna |
|---|---|---|
| #32 Spring Street,<br>Paddington W21JA.<br>Phone : +44 203 5001380<br>Email : contact@xebiro.com | #7 - 3/1, Galle Road,<br>Colombo 06.<br>Phone : +94 112 559854<br>Email : contact@xebiro.com | #63, Sir Pon Ramanathan Road,<br>Kallady, Thirunelvelly, Jaffna<br>Phone : +94 212 212797<br>Email : contact@xebiro.com |



Helping you harness the power around you
NEW DAWN ENERGY SOLUTIONS

**SOLAR POWER சூரிய சக்தி**

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2025 TOP SOLAR CONTRACTORS

**info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377**

Netwyn.Place

# Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**




**BOOK YOUR TOUR TODAY**





